# தாய்வீடு

## வானமே அழுதது

முள்ளிவாய்க்கால் சிறப்புப்பகுதி



THAIVEEDU | MAY 2018 மே | HOME & LIVING | One Dollar | www.thaiveedu.com | info@thaiveedu.com




NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
Heating & Air-conditioning contractors
www.ramanhomecomfort.com
Raman Home Comfort Inc
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

FREE REAL ESTATE CLASSES
INCOME TAX
• Personal • Corporate Returns • Corporation Registrations • GST/HST Filling
• Small Business • Business Registration • New house HST Rebate
Successful Real Estate Office With Over 300 Salespeople
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301 Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc.
Brokerage
*Independently Owned and Operated, REALTOR®

AEREN Thiyagarajah BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca, 7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...
Thana Yoganathan
Sales Representative
TOP 5%
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

BALACHANDRAN LAW
LITIGATION
எங்களுடன் தமிழிலும் தொடர்பு கொள்ளலாம்
Aghi Balachandran, B.A. (Hons.), J.D
Criminal Lawyer | குற்றவியல் வழக்கறிஞர்
Tel: 647-466-2444
Web: www.balalaw.ca
3852 Finch Ave. East, #302, Scarborough ON, M1T 3T9
151 City Centre Drive, #201, Mississauga ON, L5B 1M7

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
RE/MAX ROYAL PROPERTIES
RE/MAX Royal Properties Realty Ltd.,
Brokerage
Office: 905.471.0002
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH**
416.301.5555
SUGAN SIVARAJAH* 416.890.9999
RAJ SIVARAJAH** 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH*** 416.453.7777
ROYAL LEPAGE ignite Realty, Brokerage
Independently Owned and Operated
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
Broker of Record*** Broker** Sales Representative*
PYRAMID GROUP REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com

• வீடு • வாழ்வியல் • சமூகம் • இலக்கியம்



## Raj Ariyanayagam

Real Estate Broker

**416.930.4663**

rajhomes@hotmail.com

**www.rajhomes.ca**

**PLATINIUM AWARD WINNER 2012**
**GOLD AWARD WINNER 2009 TO 2014**

HOMELIFE HIGHER STANDARDS

Homelife Today Realty Ltd.
Brokerage*

**31 Progress Ave, Unit 210**
**Toronto, ON. M1P 4S6**

**416.298.3200**

# SERVING YOU IS MY PRIORITY, BECAUSE I CARE




**BRAMPTON** **$1,099,999**


Morningside / Sheppard, 5+2 bdrms, 4 wshrms. 41'' Lot Backs Onto Rouge Valley Ravine, Hardwood Floor & more!



**BRAMPTON**
**$1,259,000**
Mayfield Rd / Creditview Rd
4 bdrms, 4 wshrm.




**BOWMANVILLE**
**Lease $1,750**
Green Rd / Mcbride
3 bdrms, 3t wshrm.



**TORONTO**
**$599,900**
Meadowvale / Sheppard
3+1 bdrms, 2 wshrm.



**TORONTO**
**$689,000**
Port Union / Lawrence
3 bdrms, 3 wshrm, fin bsmnt




**OSHAWA**
**$699,900**
South of Hillcroft
3+1 bdrms, 1 wshrm, fin bsmnt



**MARKHAM**
**$949,900**
16th / Mccowan
4+1 bdrms, 4 wshrm, fin bsmnt



**TORONTO**
**$549,900**
Don Mills / York Mills
2 bdrms, 2 wshrm.



**MARKHAM**
**$380,000**
Leslie / Hwy 7
1 bdrms, 1 wshrm.



**TORONTO**
**$299,900**
Neilson / Mclevin
1 bdrms, 1 wshrm.



**BOWMANVILLE**
**$714,900**
Regional 57 / King St W
4 bdrms, 3 wshrm.

*INDEPENDENTLY OWNED & OPERATED. NOT INTENDED TO SOLICIT PROPERTIES CURRENTLY LISTED FOR SALE OR INDIVIDUALS CURRENTLY UNDER CONTRACT WITH BROKERAGE

## அச்சுறுத்தும் தாக்குதல்கள் - அமைதி சிதைகிறதா?

தரமான வாழ்வையும் உயர்ந்த மனிதாபிமானப் பண்புகளையும் கொண்ட கனடாவை ஓர் அமைதிப் பூங்கா எனறே பலரும் அழைத்து வந்துள்ளனர். இந்தக் கூற்றைக் கேள்விக்குறியாக்கியிருக்கின்றது அண்மைய Yonge Sreet வாகனத் தாக்குதல்.

நடைபாதையில் நடந்து சென்ற அப்பாவிப் பொதுமக்கள், திட்டமிட்ட கொலைவெறித் தாக்குதல் ஒன்றுக்கு உள்ளாகிய இந்தச் சம்பவம் அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கின்றது. பாதுகாப்பும் அமைதியும் மிக்க வாழ்க்கைச் சூழலைக் கேள்விக்குள்ளாகியிருக்கின்றது.

பயங்கரவாதச் சம்பவங்களுடன் தொடர்புடையதாக இருக்குமா? என்ற கோணத்தில் இது நோக்கப்பட்டாலும் பின்னர், உளவியல் தாக்கத்துள்ளான ஒரு தனி மனிதனின் கொடூர நடத்தையே என்று நம்பப்படுகின்றது.

சில ஆண்டுகளுக்கு முன் புறூஸ் மக்ஆர்தர் என்பவர் இரு தமிழர்கள் உட்பட எட்டுப் பேரைக் கொலை செய்ததாக அண்மையில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார்.

திட்டமிட்ட இக்கொலைகளும் தனிப்பட்ட விரோதங்களற்ற உளவியல் கொடூரத்தின் விளைவே என்று கூறப்படுகின்றது.

உயர்ந்த மானுட விழுமியங்களைக் கொண்ட கனடாவில், மானுடத்தைப் போற்றுவோம் என்ற வகையிலே நெறிப்படுத்தப்பட்டு வருகின்ற சமூக அமைப்புக்குள் இருந்து, சாதாரண மனிதர்கள் ஏன் இவ்வாறு கொலைவெறியோடு உருவாகின்றார்கள்? தமது வாழ்வோடு தொடர்பில்லாத அப்பாவிகளைக் கொல்லவேண்டும் என்ற கொடூர உந்துதலுக்கு ஏன் ஆளாகின்றார்கள்?

சிறந்த மனிதர்களை உருவாக்கும் கல்வியிலும் வளர்ப்பு முறைகளிலும் வாழ்வை நெறிப்படுத்தும் வழிமுறைகளிலும் தவறுகள் இருக்கின்றனவா? நல்ல வாழ்வியலை வார்த்தெடுக்கும் பொறிமுறையில் குறைகள் இருக்கின்றனவா?

இந்தக் கொலையாளிகளின் கொடூரமான நடத்தையின் தோற்றம் எமது வாழ்வியற் பொறிமுறைகளின் குறைபாடுகளிலிருந்தே தோன்றுகின்றது என்றே கருதவேண்டியிருகின்றது.

இந்த வினாக்களுக்கான அடித்தளங்களைக் கண்டறிந்து தீர்வுகளைத் தேடும் பொறுப்பு நம் அனைவருக்கும் இருக்கின்றது.

இந்தக் கொலையாளிகளைப் போன்ற உளவியல் தாக்கத்துக்குட்பட்டவர்கள் வேறு பலரும் அடையாளம் காணப்படாமல் இருக்கின்றனர் எனவும் கூறப்படுகின்றது. அவ்வாறானோருக்கு இந்தக் கொலைகள் முன்னுதாரணமாகி விடக்கூடாது.

இந்த நாட்டில் இவை போன்ற, பயங்கரவாதத்துக்கு ஒப்பான செயல்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அனைவரும் இணைந்து மேற்கொள்ளவேண்டும்.

இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டோருக்கு இறுதி வணக்கம் செலுத்துவதோடு, அவர்களை இழந்து நிற்கும் குடும்பத்தாரினதும் பாதிக்கப்பட்ட அனைவரினதும் துயரிலும் தாய்வீடு பங்குகொள்கின்றது.

■■■

## அழியா நெருப்பு - சிறப்புப் பகுதி : 86 - 91



இலட்சத்துக்கு மேற்பட்ட உயிர்களையும் உலகெங்கினுமுள்ள இலட்சக்கணக்கானோரின் உணர்வுகளையும் சிதைத்து ஓய்ந்த போர் முற்றுப் பெற்றிருக்கலாம். ஆனால், கோரமுகங்களோடு தொடரும் போரின் வலிகளும் வடுக்களும் தொடர்ந்து கொண்டு தானிருக்கின்றன.

போர் ஏற்படுத்திய உளவியல் தாக்கங்கள் மிக மோசமானவை. மருத்துவத்தால் முற்றாகக் குணமாக்க முடியாத நோய்களை அவை உருவாக்கியிருக்கின்றன. ஒரு தாயின் உளவியல் பாதிப்பு, கருவில் தோன்றும் சிசுவைக்கூட குறைபாட்டோடு பிறக்கச் செய்கின்றது.

அந்தத் துயரங்கள் இந்த வலிகளினூடாகப் புதுப்பிக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.



2

### இழப்பிலும் நிமிர்ந்தே நிற்கிறது ரொறன்ரோ!

**- கந்தசாமி கங்காதரன்**

நகரத்து மக்கள் மீது கொலைவெறித் தாக்குதல் நிகழ்த்தப்படும்போது கலங்காமல், தளராமல் அதை எதிர்கொண்டிருக்கிறது ரொறன்ரோ.



100

### தாய்வீட்டார் சந்திப்பு - 2018

தாய்வீட்டின் எழுத்தாளர்கள், பங்களிப்பாளர்களிடையேயான ஒரு சந்திப்பு நிகழ்வு.

முகப்பு ஓவியம்: ட்ராட்ஸ்கி மருது

Publisher & Editor : PJ. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜெ. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : அருண்மொழிவர்மன், சேரன், துஷி ஞானப்பிரகாசம், ஞானம் லெம்பட், கந்தசாமி கங்காதரன், கருணா, பொன்னையா விவேகானந்தன், ரவிச்சந்திரிகா.

ஓவியங்கள் : ஆசை இராசையா (இலங்கை)
ட்ராட்ஸ்கி மருது (இந்தியா), ஜீவா (இந்தியா)
கருணா (கனடா), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து)
ரமணி (இலங்கை), செந்தில் (இந்தியா),
சௌந்தர் (இங்கிலாந்து), றஷ்மி (இங்கிலாந்து).

புகைப்படங்கள் : கருணா, K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), துசியந்தன் துரைரத்தினம்.

தட்டச்சு : கௌரி, ஜீவா, சாம் டானியல்

ஒப்புநோக்கல் : கௌரி, கந்தசாமி கங்காதரன்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்).

பொது உறவுத் தொடர்பு : குமணன் தம்பிஐயா

ரொறன்ரோ விநியோகம் : இராமநாதன் ரூபன், சசி.

மொன்றியால் தொடர்பு : சுகுமாரன் சின்னையா.

ஒட்டாவா தொடர்பு : அலெக்ஸ் சிவசம்பு: 1-613 -276-7253

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel : 416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

Printed on recycled paper

**பாலா சுவாமிநாதனுடன் ஒரு நேர்காணல்** 67
அ.முத்துலிங்கம்

**தமிழரின் இனமரபு இசை - தொல்காப்பியத்தை மையப்படுத்திய ஒரு பார்வை** 73
கௌசல்யா சுப்பிரமணியன்

**ஜிம்மி வலன்ரைன் என்கிற ...** 77
- ஓ, ஹென்றி
மொழியாக்கம்: என். கே. மகாலிங்கம்

**நேரமும் நம்பகத் தன்மையும்** 83
P. விக்னேஸ்வரன்

**நினைவிலி** 86
சேரன்

**மே மாதம், 2009: துண்டிக்கப்பட்ட கால்** 87
துரைராஜா வரதராஜா

**விதைக்கப்பட்ட விடு'தலை'கள்** 89
முகமட் நவ்ஷாட்

**வன்னிமகள் கவிதைகள்** 89

**அம்மை சொன்னவை** 90
பிரியா தர்மசீலன்

**அரசாங்கம் பொறுப்புக் கூறும் வரை போராடியே ஆகவேண்டும்!** 91
விஸ்வா

**வளர்ந்திடுவாய் உயிர்ச்சுடராய்** 93
மு. புஷ்பராஜன்

**எழுத்துலகில் அ. முத்துலிங்கம் 60** 94
சோக்கல்லோ சண்முகநாதன்

**அ. முத்துலிங்கம் கதைகளில் பெண் பாத்திரவார்ப்பு** 96
மைதிலி தயாநிதி

**தெய்வீகக் கனவு அன்னது வாழ்வே...** 103
ஆனந்தப்ரசாத்

**இலக்கியத் திறனாய்வியலின் இயங்குநிலை** 107
நா. சுப்பிரமணியன்

**வாய்ப்பாணம்** 112
செல்வம் அருளானந்தம்

**கனடாவில் அடுத்த தலைமுறைத் தமிழரும் தமிழும்** 117
வல்லிபுரம் சுகந்தன்

*மேலும் ஆக்க விபரங்கள் 3ம் பக்கம்*

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

## வாகனத் தாக்குதல்...

# இழப்பிலும் நிமிர்ந்தே நிற்கிறது ரொறன்ரோ!

- கந்தசாமி கங்காதரன் -

ஏப்பிரல் 23 திங்கள் பிற்பகல் இரண்டு மணி. ரொறன்ரோவின் Yonge & Steeles பகுதியிலிருக்கும் Center Point அங்காடித் தொகுதியில் எல்லோரும் எல்லோரிடமும் கேட்ட கேள்வி "நடந்த துயரத்தைக் கேள்வியுற்றீர்களா?" என்பதே. அதில் பெரும்பான்மையானோர் "இது ஒரு தீவிரவாதத் தாக்குதலா?" என்று அச்சத்தோடு கேட்டனர். ஐரோப்பிய நாடுகளில் அடிக்கடி இது போன்ற சம்பவங்கள் நடப்பதால் அப்படி கேட்டிருக்கலாம். பலரின் முகங்களில் 'ரொறன்ரோவிலுமா?' என்ற திகைப்பும் பயமும் கவலையும் ஒருசேரக் குடிகொண்டிருந்ததையும் உணரமுடிந்தது.

ரொறன்ரோ நகரத்தைக் கிழக்கு, மேற்கு என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கும் Yonge Street ஐ, கிழக்கு -மேற்காகச் செல்லும் Finch Avenue சந்திக்கும் இடத்தில் தெற்கு நோக்கி நின்றுகொண்டிருந்த வெள்ளைவான், சமிக்ஞை விளக்கு பச்சையாகியதும் மிகவேகமாக இயங்கி, நேராக தெருவால் போகாமல் சற்று வலது புறம் திரும்பி சமிக்ஞை விளக்குக்கும் கட்டடத்துக்கும் இடையேயுள்ள, சனநடமாட்டம் எப்போதுமே அதிகமாக இருக்கும் நடைபாதையூடாக எதிரில் வருவோர் போவோரையெல்லாம் மோதி வீழ்த்தி, தீயணைப்பினருக்கான நீர்வழங்குகுழாய், பேருந்துத் தரிப்பிடம் எல்லாவற்றையும் அடித்து நொறுக்கிய வண்ணம் பேரழிவுப் பயணத்தைத் தொடர்ந்தது. நடப்பதைச் சற்றுத்தாமதித்தேனும் உணர்ந்துகொண்ட சில வாகன ஓட்டுநர்கள் தாங்கள் வாகனங்களின் Hornஐ உரத்து ஒலித்தும் சாளரத்தின் வழி மக்களை நோக்கி எச்சரிக்கைக் குரல் எழுப்பியும் வெறிகொண்டு ஓடும் வெள்ளைவானைத் தடுக்க முயன்றும் பார்த்தனர். தெற்கு நோக்கி ஓடிய வான் வளைந்து நெளிந்து, பெரும்பாலும் நடைபாதை வழியாகவே, நடைபாதையில் நடப்போரைக் குறிவைத்து அடித்து வீழ்த்தியபடி ஓடி Sheppard Avenue வைத் தாண்டிச் சற்றுத் தூரம் ஓடியபின் வழிமறிக்கப்பட்டது. இதற்குள் 2.2 கிலோ மீற்றரும் 27 நிமிடமும் கடந்துவிட்டிருந்தன. வெள்ளை வானின் ஓட்டுநர் கைது செய்யப்பட்டார். பேரழிவு தொடர்வது நிறுத்தப்பட்டது. ஆனால் வெள்ளைவான் கடந்துவந்த 2.2 கிலோ மீற்றர் தூரத்தில் 25 பேர் வரையிலானோர் மோதப்பட்டிருந்தனர். மருத்துமனையிலும் சம்பவ இடத்திலுமாக 10 பேர் உயிரிழந்திருக்கின்றனர். 14 பேர் கடும் காயங்களுக்குள்ளாயினர். 50 - 60 கி.மீ வேகத்தில் வந்த அந்த வாடகைக்கெடுக்கப்பட்ட வான் சற்றுப் பெரிதாயும் வழமையான 7 இருக்கை வாகனங்களை விட நிறை அதிகமாயும் இருந்ததனால் ஏற்பட்ட காயங்களும் மிக மோசமானவையாகவே இருக்கும்.

அன்று வசந்தகாலத்தின் ஒளி நிறைந்த, வெப்பநிலையும் வழமையைவிடச் சற்று அதிகமாக இருந்த இதமான வானிலையை அனுபவிக்க வந்தவர்களும் வேலைக்குப் போன அல்லது வேலை முடிந்து போனவர்களும் பணிநேர இடைவேளையில் இருந்தோரும் என்று பலரின் உயிர்கள் சடுதியாகக் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன. காயமடைந்த பலரின் இயல்பு வாழ்க்கை இனி வருங்காலத்தில் மறுக்கப்பட்டிருக்கிறது.

உயிரிழந்தோரின் விபரங்கள் மெதுமெதுவாகவே வெளிவந்திருக்கின்றன. தென் கொரியர்கள் இருவர் மரணமானதாக தென் கொரிய அரசு அறிவித்திருக்கின்றது.

சம்பவம் நடந்த இடத்துக்கு அருகிலே ஓர் அமெரிக்க முதலீட்டு முகாமைத்துவ நிறுவனத்தில் பணியாற்றிய Anne Marie D'Amico (30-பெண்) பெண், வங்கிக்குப் போய்க் கொண்டிருந்த, தன்னைப் போன்ற ஏனைய முதாளர்களுக்கு உதவும் தொண்டு மனப்பான்மை கொண்ட Darothy Sewell (80 -பெண்), நகர மத்தியில் ஓர் உணவகத்தின் திறமை மிக்க சமையல் வல்லுநரான Chul Min 'Eddie' Kang (45 -ஆண்), ரொறன்ரோவில் வாழும் தன் மகன் குடும்பத்தினரைப் பார்ப்பதற்காகத் தன் மனைவியோடு ஜோர்தானிலிருந்து வந்திருந்த Munir Najjar (85 –ஆண்), ஆடம்பரப் பொருட்களுக்கான கடையொன்றில் பணியாற்றிக்கொண்டே ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் கற்றுக்கொண்டிருந்த Sohe Chung (22 – பெண்), புறாக்களுக்கும் அணில்களுக்கும் உணவு கொடுப்பதில் தன்னை மறக்கும் Betty Forsyth (94 - பெண்), அழகுசாதனங்கள், வாசனைத்தைலங்கள், ஆடைகள் போன்றவற்றைச் சந்தைப்படுத்தும் Avon நிறுவனத்தின் முகவராகக் கடந்த 45 ஆண்டுகளாகச் செயற்பட்டுக்கொண்டிருந்த Geraldine Brady (83 –பெண்), வெளிநாட்டு மாணவராக, செனெகா கல்லூரியில் பயின்றுகொண்டிருந்த தென்கொரியாவைச் சேர்ந்த Ji Hun Kim (22 -பெண்), வணிக ஆய்வு, ஆலோசனை நிறுவனமொன்றில் பணியாற்றிய, இருக்கும் இடத்தை எப்போதுமே கலகலப்பாக்கும் Andrea Bradden, (33 -பெண்) என்று ஒவ்வொருவரைப் பற்றியும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.



இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட, கனடாவில் 17 ஆண்டுகளாக வாழ்ந்து வந்த ரேணுகா அமரசிங்க(48) அன்று பள்ளிக் கூடத்தில் வீடு செல்லக் காத்திருந்த மகனைக் கூட்டிச்செல்லப் போகவில்லை. அவருடைய ஏழே வயதான ஒரே மகனிடம் இருந்து இந்த அன்னை பறிக்கப்பட்டிருக்கிறார். தந்தையையும் பிரிந்து வாழ்ந்த நிலையில் மகனுக்கு இனி யார் உறுதுணை?

இந்த ரேணுகா SCAS இல் 2015/16ல் கல்வி கற்றிருக்கிறார். ரொறன்ரோ கல்விச்சபையின் சில பள்ளிக்கூடங்களில் சத்துணவுச் சேவைப்பிரிவில் பணியாற்றிக்கொண்டிருந்தார். ஏப்பிரல் 25புதன் காலை ரொறன்ரோ கல்விச்சபையே அதிகாரபூர்வமாக ரேணுகாவின் மறைவை முதலில் அறிவித்தது. ஆனால் முதல் நாளே முகநூலில் அவருடைய நண்பர்கள் அறிவித்திருந்ததையும் கவனிக்கக்கூடியதாக இருந்தது. ரொறன்ரோ கல்விச்சபையின் அனைத்துலக மொழிக் கற்கைப் பிரிவில் ஸ்காபரோவில் ஒரு பள்ளிக்கூடத்தில் தொண்டராகவும் இருந்திருக்கிறார் ரேணுகா.

இத்தனை பேரின் வாழ்க்கையிலும் வெறித்தனமாக விளையாடியவர் யார்?

Alek Minassian என்ற 25 வயது இளைஞர் அவர். 2014ல் கலிபோர்ணியாவில் Isla Vista எனுமிடத்தில் Elliot Rodger என்பவர் துப்பாக்கியால் சுட்டு 6 பேரைக்கொன்று 13 பேரைக்காயப்படுத்தியிருந்தார். ரொறன்ரோவில் ஏப்பிரல் 23ம் நாள், மக்களை வெள்ளைவானால் மோதுவதற்குக் கொஞ்ச நேரம் முன்பு, 'Incel rebellion has already begun. We will overthrow all the Chads and Staceys' என்றொரு பதிவை Alek தன் முகநூலில் பகிர்ந்திருந்தார். Elliot Rodger ஐயும் மகிமைப்படுத்திப் புகழ்ந்திருந்தார்.

Incel என்றால் ஆசை அல்லது விருப்பமிருந்தும் பாலுறவுக்குப் பெண்கள் கிடைக்காத (பெரும்பாலும்) ஆண். இத்தகைய ஆண்களின் புரட்சி தொடங்கிவிட்டது. இது முதல் வரி.

Chad என்றால் பாலுறவுக்குப் பெண்கள் கிடைக்கின்ற வெற்றிகரமான ஆண். Stacey என்றால் கவர்ச்சியான பெண். பாலுறவுக்குப் பெண்கள் கிடைக்காத ஆண்கள் தமக்கான 'இன்பம்' மறுக்கப்பட்டதாக எண்ணி Chad, Stacey மீது கோபம் கொள்கிறார்கள். (Incel ஆண்கள் மத்தியில் நிலவும் இந்தச் சொற்களுக்கான விளக்கத்தை theguardian.com தந்திருக்கிறது).

தகவற்றொழினுட்ப வளர்ச்சியால் இணையத்தளங்களும் சமூகவலைத்தளங்களும் எத்தகைய மனநிலையில் இருப்போரையும் ஒன்றுசேர்த்து வைப்பதால் அவர்களுக்கிடையே கருத்துப்பரிமாற்றமும் இத்தகைய கொடூரச்செயல்களுக்கான தூண்டலும் இலகுவில் நடைபெற வாய்ப்பிருப்பதை மறுக்கவியலாது.

ஆனால், Alek இன் பெண்கள் மீதான வெறுப்பு என்பது, அவரது நடத்தை சார்ந்து எழுந்திருக்கும் ஊகம் மட்டுமே. மெய்ப்பிக்கப்படவில்லை. அவர் இனவெறுப்புக்கொண்டவர் எனும் கருத்தையும் இப்போதைய சூழ்நிலையில் கேள்விக் குறியோடுதான் வைத்திருக்கவேண்டும்.

'தீவிரவாதத் தாக்குதல்' என்ற பயத்தை அல்லது கருத்தை காவற்றுறை எடுத்த எடுப்பிலேயே மறுத்துவிட்டது. ஆனால் இந்த Incel மனநிலை கொண்ட, எந்தவிதமான தீவிரவாதத் தொடர்புகளுமில்லாத ஒரு முஸ்லிம் ஆண் இப்படி மக்களை மோதியிருந்தாலும் மோத முன்னரே பிடிபட்டிருந்தாலும் 'தீவிரவாத' சிந்தனையிலிருந்து மற்றவர்களால் எளிதில் வெளியே வந்திருக்கமுடியாது. "அப்படி இல்லை" என்று காவற்றுறையோ அரசோ சொன்னாலும், "இவர்கள் பொய் சொல்லுகிறார்கள்" என்று உறுதியாகவும் சிலர் இருப்பர். இத்தாக்குதல் நடந்த இடத்திலும் மருத்துவமனைகளிலும் மானுடம் மீது நம்பிக்கையேற்படுத்திய பலரை இங்கு குறிப்பிடாமல் விடமுடியாது.

தாக்குதல் நடந்த தெருவெங்கும் காயமுற்றவர்களுக்கு முதலுதவி செய்வதிலும் அவர்களுக்கு ஆறுதல் சொல்லித் தேற்றுவதிலும் ஈடுபட்டிருந்தோர், வெள்ளை வானின் கொலைப்பயணத்தைத் தமது பாதுகாப்பையும் கருதாது தடுக்க முயன்றோர், முதலுதவிப் பிரிவினர் வந்தபின்னும் அவர்களோடு சேர்ந்து நின்று உதவியோர், இப்படித் தாமாகத்தொண்டு புரிந்தோருக்கும் முதலுதவி, மருத்துவப் பிரிவினருக்கும் தீயணைப்புப் படையினருக்கும் காவற்றுறையினருக்கும் உணவும் பானங்களும் வழங்கியோர், அந்தப் பகுதிகளில் தமது வணிக நிறுவனங்கள், வீடுகளின் கதவுகளைத்திறந்துவைத்து உதவி தேவைப்படுவோரை வரவேற்று உதவியோர்... என்று நகர மக்கள் ஒருவருக்கொருவர் உறுதுணையாக, ஒத்தாசையாக இருந்து, 'ரொறன்ரோ கலங்கவில்லை' என்று மெய்ப்பித்தனர்.

"என் அம்மா 78 வயதானவர். Yonge/ Madison - Shoppers Drug Mart க்கு முன்பாக வேகமாக வந்த வெள்ளை வானிடமிருந்து என் அம்மாவைக் காப்பாற்றிய அந்த நல்ல உள்ளத்துக்கு நன்றி!" என்று நெகிழ்ந்து ருவிற்றரில் தன் நன்றியைத் தெரிவித்திருத்தார் ஒரு மகள்.

இப்படி வெளியே தெரிந்த உதவிகள், அர்ப்பணிப்புகள் கொஞ்சமே. வெளிவராத எத்தனையோ சம்பவங்கள் இருக்கலாம். மானுடத்தின் மீதான நம்பிக்கையை வளர்க்கின்ற இத்தகைய நல்லுள்ளங்கள் அனைவருக்கும் தாய்வீட்டின் நன்றியும் பாராட்டும்.

Alek Minasian ஐக் கைது செய்த காவற்றுறை அதிகாரி நடந்துகொண்ட விதம் பலராலும் பாராட்டப்படுகிறது. ஒரு பொறுப்பான காவற்றுறை அதிகாரியாக அவர் நடந்துகொண்டிருக்கிறார். கைகளுள் ஏதோ ஒன்றை வைத்துக்கொண்டு துப்பாக்கி போன்று காட்டிக்கொள்பவரைச் சுட்டிருந்தாலும் காவற்றுறை அதிகாரி மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்க வாய்ப்பு அரிது. சுட்டிருக்கலாம். ஆயினும் அவர் பொறுமையாகவும் துணிவாகவும் நடந்துகொண்டு Alek ஐக் கைது செய்த காட்சி வலைத்தளங்களில் பரவி அவருக்குப் பாராட்டுகளை அள்ளிக்குவிக்கின்றது. Const. Ken Lamக்கும் தாய்வீட்டின் வாழ்த்தும் பாராட்டும்.

காவற்றுறையினர், தீயணைப்புப்படையினர், மருத்துவப்பிரிவினர், Sunnybrook, North York, St. Michaels மருத்துவமனைகளின் மருத்துவர்கள், தாதியர், பணியாளர்கள் அனைவரும் பாராட்டுக்குரியோர்.

காயமுற்றவர்கள் விரைந்து நலம் பெறட்டும்.

உயிரிழந்தோரின் உறவுகளுக்கும் நட்புகளுக்கும் தாய்வீடு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அவர்களின் துயரிலும் பங்குகொள்கிறது.



gangatharan.k@thaiveedu.com

# ஆட்சியைப் பிடிக்குமா அத்தனகல?

- அ. கணபதிப்பிள்ளை -

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்களாதரவினை இழந்து விடுமா என்பதும் அதனைக் காக்க எத்தகைய தலைமையின் வருகை அவசியம் என்பதும் இன்றைய நல்லிணக்க அரசியலுக்குத் தேவையானதொன்றாகும். பண்டாரநாயக்காவின் குடும்பத்திலிருந்து பறித்தெடுக்கப்பட்ட அரசியலை மீள நிலைநிறுத்துவதனூடாகத் தேசிய ஐக்கியத்தினையும் இலங்கையின் பொருளாதாரத் தனித்துவத்தினையும் பேணுநினைக்கும் சந்திரிகாவின் வியூகம் பலனளிக்குமா என நோக்குவது அவசியமாகிறது.

இலங்கை அரசியலில் ஏற்பட்ட ஆழிப்பேரலை ஒருவாறு அடங்கிப் போயிருக்கிறது. நல்லிணக்க அரசியற் சிந்தனை முற்றுப்பெறக்கூடும் என்ற ஊகங்களின் மத்தியில் அரசாங்கம் தனது இருப்பை நிலைநிறுத்தியிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க மீது கூட்டு எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 'ஆட்சிக்குள் குளப்பத்தை ஏற்படுத்தத்தான்' என்ற உண்மை வெளியே வந்துவிட்டது. இந்தச் சதியினை நம்பிக் கெட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர், அடுத்ததடவை ஆட்சியமைக்கப்போவது எதுவென ஊகித்துக் கொள்ள முடியாத வர்களாகியிருந்தார்கள். ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளக்கூடும் என்ற எதிர்பார்ப்பும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது. எல்லாத் தடைகளையும் மீறி இணக்க அரசியலை மீண்டும் அரங்கேற்றியதில் சந்திரிகா தரப்பின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குக் கூடிய பங்கிருக்கிறது.

கூட்டு எதிர்க்கட்சியினரின் முக்கிய நோக்கம் உடனடியாக மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் மூலம் ஆடசியைக் கைப்பற்றிக் கொள்வதாகும். இதற்கு நடந்து முடிந்த உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தல் வெற்றியினைப் அடிப்படையாக வைத்து ஐ.தே. கட்சியையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் பிரித்துவிடவேண்டுமென்பதும் அதன் முடிவில் மகிந்த யுகத்தினைக் கட்டி எழுப்பிவிடலாம் என்பதும் அவர்களது எண்ணக் கருத்தாகவிருந்தது.

இனக்கலவரம், நல்லாட்சிக்கான செயற்பாடுகளின் தடங்கல், மைத்திரியின் மாறுபட்ட பேச்சு எனத் திசைமாறிப் போய்க் கொண்டிருக்கும் அரசால் சுதந்திரக்கட்சியினைக் காப்பாற்றிவிடமுடியாது என்ற நிலை உருவாகியிருந்த வேளையில்தான் சந்திரிகாவின் அரசியல் பங்களிப்பு அத்தியாவசியமாகியிருக்கிறது.

சந்திரிகாவின் அரசியல் பாதை இருவேறுபட்ட முரண்பாடுகளைக் கொண்டிருந்தது. ஆட்சியைக் கைப்பற்றிய எந்தவொரு சிங்கள அரசியல்வாதியும் இருமுகங்களையும் காட்டவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். ஆயினும் முடிவில் அதற்கான விடை கிடைத்துவிடுகிறது.

> 2006ல் மாவிலாற்றில் போரைத்தொடங்கி தமிழர்களை அழித்துவிட்டு தமிழர்களின் பிணங்கள்மீது வெற்றி கொண்டாடியதை நாகரிகமற்ற செயற்பாடெனக் குறிப்பிட்டிருந்தமை கவனிக்கத்தக்கது.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரான விஜயகுமார ரணதுங்க இன ஒற்றுமை, சமாதானம் என்பவற்றுக்காகத் தன்னை அர்ப்பணித்து விடுதலைப்புலிகளுடன் சமாதானம் பேசி அரசியல் நடத்தும் முனைப்புடன் தொழிற்பட்டவர். அவரது துணைவியார் சந்திரிகா அம்மையார் அவரது கொள்கையுடன் அரசியலுக்கு வந்தார். இலங்கையில் இனப்பிரச்சினையினைத் தீர்ப்பதனால் இலங்கையின் பொருளாதாரத்தினைக் கட்டி எழுப்பமுடியும் என்தில் நம்பிக்கை கொண்டவர். அவரது அரசியல் வாரிசுக்கு அத்தகையதொரு இடத்தினைக் கொடுப்பதில் அவரது செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

பன்னிரண்டு ஆண்டுகால வெளியுலக வாசத்திலிருந்து 1993ல் மாகாண அரசியலில் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டு 1994ல் சனாதிபதியாகப் பதவியேற்றார். இனக்கலவரங்களினாலும் சர்வாதிகார ஆட்சியாலும் அவதிப்பட்டிருந்த மக்களுக்கு அமைதியும் சமாதானமும் வேண்டும், தமிழ் சிங்கள உறவு பேணப்பட வேண்டும் என்ற இவரது பேச்சானது மாற்றத்தை வேண்டி நின்ற மக்களுக்கு ஒரு விடையாக அமைந்திருந்தது. அதுவே அன்று அவரைத் தலைவராகவும் ஆக்கியிருந்தது.

இனவாதம் பேசாமல் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசியல்வாதி என்ற பெருமையும் அவருக்கிருக்கிறது.

இருகட்சியாட்சி சனநாயகமுறையில் சிறுபான்மை மக்களது ஆதரவுடன்தான் சனாதிபதியாக முடியும், சிலகட்சிக் கூட்டுடன்தான் பாராளுமன்ற ஆட்சியினை நடத்த முடியும் என்ற நிலை இலங்கையில் இருந்து வருகிறது. சிறுபான்மை மக்களது பேராதரவு அதற்குத் துணை நின்றது. இந்த அரசியற்பாடம் இனவாதம் பேசி ஆட்சியைப் பிடிக்காத எந்தவொரு தலைவருக்கும் நன்கு தெரிந்திருக்கிறது. ரணில், சந்திரிகா என்ற சமகாலத் தோழர்களுக்கும் நன்றாகத் தெரிந்த பாடமாகும்.

இவரது ஆட்சியில் இரண்டு செயற்பாடுகள் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தன. நாட்டை அபிவிருத்தி செய்வதில் தடையாகவிருக்கும் ஊழல், இலஞ்சம் இரண்டுக்கும் எதிராகச் செயற்படும் தன்மை காணப்பட்டது. இதுவே முதலில் இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தை விரும்பக் காரணமாகவிருந்தது.

இரண்டாவதான செயற்பாடாக இனஐக்கியத்தை ஏற்படுத்துவதென்பது முக்கியம் பெற்றிருந்தது. இதனை இவரது தாயாரும் தந்தையும் விட்ட தவறினைத் திருத்த முனைவது என்பதாகவும் நோக்கமுடியும். பண்டா-செல்வா ஒப்பந்தம் போன்று மாகாணசபைகளுக்குக் கூடிய அதிகாரங்களை வழங்குவதன் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்கமுடியும் என்பது இவரது நம்பிக்கையாக இருந்தது.

இவரது அரசியல்வாழ்வு 1982ல் சனாதிபதி வேட்பாளர் கோபேகடுவவுக்கான தேர்தல் பிரசாரத்தில் தொடங்கியிருந்தது. ஸ்ரீமாவோ பண்டாரநாயக ஆட்சிக்காலக் கசப்புக்களையும் மறந்து இவரது பிரச்சாரத்துக்கு வடபகுதி மக்கள் கொடுத்த வரவேற்பானது மிகப் பலமானதாகவிருந்தது.

இவர் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை நடைமுறைப் படுத்தத் தக்கதொன்றாக இருந்ததாக சில ஆய்வுகள் கோடிட்டுக் காட்டியிருந்தன. தீர்மானம் எடுக்கக்கூடிய தரத்தில் உள்ளவர்கள் பேச்சுவார்த்தையில் இல்லாமலிருந்தமை தீர்வுத்திட்டத்துக்குத் தடையாக இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டது. அத்துடன், இவருடன் இணைந்திருந்த ஜே.வி.பி ஹெல உறுமய போன்ற இனவாத இயக்கங்கள் இவரது சமாதான முயற்சிக்கான தடையாகவும் அமைந்தனர்.

விடுதலைப்புலிகள் காலத்தில் வடபிரதேசத்தின் சமூக பொருளாதாரக் கட்டமைப்புகள் சந்திரிகாவின் பொருளாதார வளர்ச்சித்திட்டத்தின் எண்ணக்கருவை ஒத்ததாக இருந்தது. சமாதான முயற்சி குளப்பப்பட்டமைக்குச் சில தமிழ்த் தலைவர்களது கொலை காரணமாகவும் சொல்லப்பட்டது. அதேவேளை புலிகளது பலம் அதிகமாக இருந்ததுமல்லாமல் இந்தியாவின் தலை

தொடர்தல் 4ம் பக்கம்

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...


| | |
|---|---|
| ஆட்சியைப் பிடிக்குமா அத்தனகல? — அ. கணபதிப்பிள்ளை | 3 |
| இறப்புக்கான தமிழரின் இருத்தல் — வினோதன் | 7 |
| நோய்களும் அவற்றின் குறி குணங்களும் — பால. சிவகடாட்சம் | 8 |
| அனைத்துலக ஊடகவியலாளர் நாள் — குமணன் தம்பிஜயா | 10 |
| உயிர்ச்சத்து டீ — ரவிச்சந்திரிகா | 11 |
| சகபாடிகள் அழுத்தம் — எஸ். பத்மநாதன் | 13 |
| கஞ்சாப் புகையைப் பகைக்காத சமூகம் — போல் யோசேப் | 14 |
| இலவச Wi-Fi — ஸ்ரீராகவன் | 17 |
| மோசடித் திருட்டுகள் — செந்தூரன் புனிதவேல் | 23 |
| தண்ணீரில் தொடங்குங்கள் — வேலா சுப்ரமணியம் | 24 |
| தேன்தமிழ்க் கலையமுது | 26 |
| கிழக்கு ஒளி இணையத்தின் 10வது சித்திரை நிலா கலாச்சாரப் பெருவிழா — எஸ்.கே. குமரகுரு | 28 |
| சங்கீதபூஷணம் என். ராஜு மாஸ்டர் — வே. விவேகானந்தன் | 30 |
| கைப்பை — மனுவல் யேசுதாசன் | 32 |
| பண்டிதர் ம.செ.அலெக்ஸ்சாந்தர் அவர்களின் நினைவேந்தல் — சோக்கல்லோ சண்முகநாதன் | 36 |
| சீனாவின் விண்கலத்துக்குப் பிரியாவிடை! — குரு அரவிந்தன் | 38 |
| பாற்பைப் பாய் — குமார் புனிதவேல் | 43 |
| செய்தி அறையில் வேகம் தரும் யோகா — வி.என். மதிஅழகன் | 44 |
| தனித்துவமான கலைஞன் கணபதி இரவீந்திரன் — பொன்னையா விவேகானந்தன் | 47 |
| 'கலைவேந்தன்' கணபதி ரவீந்திரன் எம் கலைச்சொத்து — எஸ். பத்மநாதன் | 48 |
| திருக்குடும்பக் கன்னியர் மடம் - யாழ்ப்பாணம் — முருகேசு பாக்கியநாதன் | 50 |
| உரையாடற் குறிப்புகள் — அருண்மொழிவர்மன் | 53 |
| 'ஒரு கலைஞனின் கதை இது' — சோக்கல்லோ சண்முகநாதன் | 57 |
| மதச்சார்பில்லா ஆன்மிகம் Secular spirituality — ப. தயாநிதி | 63 |
| இலக்கியத்தில் அறிவியல் — சு. பசுபதி | 64 |
| கலைஞர் பாலதாஸ் அவர்களுக்கு இறுதி வணக்கம் | 69 |
| மாற்றுத் திறனாளிகளின் சேவையில் அதிபர் ஜெயசிங் டேவிட் — சகாப்தன் | 71 |
| அ. முத்துலிங்கத்தின் படைப்பாளுமை — நா. சுப்பிரமணியன் | 97 |
| தமிழ்வலை-30 | 111 |

# ஆட்சியைப் பிடிக்குமா...

3ம் பக்கத் தொடர்ச்சி...

யீடும் இலங்கையில் அதிகம் காணப்பட்டது. பிரதமர் வாஜ்பாயின் அகண்ட இந்தியா என்ற இந்திய மேலாண்மைக்கொள்கைக்குள் இலங்கை கட்டுண்டிருந்தது. 1998ம் ஆண்டு இந்திய-இலங்கை இருதரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ILBFTA) கைச்சாத்தானது. இதன் மூலம் 1998ல் 40 இலட்சம் அமெரிக்க டொலராகவிருந்த இந்திய முதலீடு 2006ல் 1,500 லட்சம் அமெரிக்க டொலராக அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

2004 ஆழிப்பேரலை(சுனாமி) அனர்த்தங்களின் விளைவாக ஏற்பட்ட இழப்புகளுக்கான நிவாரணம் வழங்குவதிலும் ஆழிப்பேரலை நிதியைக் கையாள்வதிலும் விடுதலைப்புலிகளுடன் இவர் செய்துகொண்ட உடன்பாடானது உள்ளக அரசியல் எதிரிகளை உருவாக்கியதுடன் இவர் அரசியலிலிருந்து ஓரங்கட்டப்படவும் காரணமாக அமைந்தது.

சர்வதேசம் வழங்கியிருந்த சுனாமிக்கான பணத்தினைச் சூறையாடிவிட்டு உரியவரிடம் சேர்க்காது விட்டவர்களான கள்வருக்கு மக்கள் பாடம் புகட்டும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பது இவரது அசைக்க முடியாத நம்பிக்கை. ரேக்கியோ மகாநாட்டில் விடுதலைப் புலிகளைப் புறக்கணித்துவிட்டுப் பெறப்பட்ட 4,500 கோடி ரூபாக்களும் இனங்களின் தேவைக்காகப் பகிர்ந்தளிக்கப்படவில்லை. இவற்றையெல்லாம் மறைப்பதற்காக 2006ல் மாவிலாற்றில் போரைத்தொடங்கி தமிழர்களை அழித்துவிட்டு தமிழர்களின் பிணங்கள்மீது வெற்றி கொண்டாடியதை நாகரிகமற்ற செயற்பாடென்பதனைக் குறிப்பிட்டிருந்தமை கவனிக்கத்தக்கது.

தொடந்த இந்த அவலம் இலங்கையின் இனங்களுக்கிடையிலான உறவில் விரிசலை ஏற்படுத்திக் கொண்டே வந்தது. காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை, போர்க்குற்றம், மனித உரிமை மீறல்கள் போன்றன சர்வதேச அளவில் தீர்வுகாணப்படாத பேசுபொருளாகமட்டும் இருந்துவருகிறது.

சந்திரிகா 2017ல் பேசும்பொழுது அரசியல் அமைப்பின் மூலமே சிறுபான்மை மக்களின் உரிமை பாதுகாக்கப்படவேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தார். புதிய அரசியற்திட்ட வரைவுக்கெதிராகக் கூட்டு எதிர்க்கட்சியும் இனவாதக் கட்சிகளும் கூட்டாகச் சேர்ந்து குரலெழுப்பத் தொடங்கியிருந்தனர். அரசியற்திட்ட உருவாக்கம் கைவிடப்படுமா என்பது எல்லோரதும் வினாவாகவிருந்தது. ஆயினும், அரசாங்கம் உறுதியுடன் செயற்பட்டது. முடிவில் நடந்து முடிந்த தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாரிய தோல்வியைச் சந்தித்தது.

அரசியல்திட்ட வரைவு அடுத்த தேர்தல் வரை பின்போடப்படுமா என்ற ஊகம் எழத் தொடங்கியிருந்தது. தேர்தல் தோல்விக்கும் இனக்கலவரத்துக்கும் அரசியற்திட்ட உருவாக்கத்துக்கும் முடிச்சுப் போடமுடியுமா அரசியல்திட்டம் உருவாகும் வரையில் தமிழர்கள் பொறுமை காக்கவேண்டுமென தமிழர் கூட்டணித்தலைவர் கோரிக்கை விடுத்திருந்தார். இது சந்திரிகாவின் பிரவேசத்தின் விளைவால் ஏற்பட்ட நம்பிக்கையாகும்.

அரசியற்திட்டம் முன்னெடுக்கப்படாவிட்டால் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதிலிருந்து கூட்டணியினர் விலகவேண்டுமென்ற கோரிக்கையும் விடப்பட்டிருக்கிறது. அத்துடன் கூட்டணியினர் இந்தியத்தலையீட்டின் அவசியத்தை வலியுறுத்தியிருந்ததுடன் தமிழர்கள் தமக்கான வழியை ஏற்படுத்தவேண்டியிருக்கும் எனவும் எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது. இதனிடையேதான் மைத்தரிபால சிறிசேன சமூக நிலைமைகளைக் குளப்புகிறார் என்ற குற்றச்சாட்டு வலுவடைந்திருந்தது.

ரணிலின் மீதான நம்பிக்கையில்லாப்பிரேரணைக்கு எதிராக வாக்களித்த 16 சுதந்திரக்கட்சி உறுப்பினர்களை இழந்துவிட மைத்திரி தலைமை தயாராக இருக்கவில்லை. இந்நிலையில்தான் சந்திரிகாவுடனான பேச்சுவார்த்தை தொடங்கியிருந்தது. மே மாதம் எட்டாம் திகதி பொதுக்குழு கூடி முடிவெடுக்கும்வரையில் 16 பேரும் எதிர்கட்சி ஆசனங்களில் அமரும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கூட்டெதிர்க்கட்சியினருடன் இணையக்கூடும் என்ற ஊகத்துக்கும் தேவையில்லாமற் போய்விட்டது.

சுதந்திரக்கட்சி அரசாங்கத்துடன் இணைந்து இயங்கப்போகிறதா இல்லையா என்பதனைக் பொதுச்சபை திர்மானிக்கப் போகிறதென்றாலும் அது சந்திரிகாவின் தீர்மானமாகவே இருக்கப்போகிறது. ஒருகாலத்தில் மக்கள் ஐக்கிய முன்னணியைக் கலைத்துவிட்டு வெளிவாசம் சென்ற சந்திரிகாவுக்கு அரசியல் தலைமை பெறக் காரணமாயிருந்தது. அவரது மக்களை ஈர்க்கக் கூடிய தலைமைத்துவம் என்பதனை மறுக்கமுடியாது.

சந்திரிகாவின் மென்போக்குக் காரணம் அவர்மீதும் போர்க்குற்றம் தொடர்பான குற்றச்சாட்டுகள் எழக்கூடுமென்ற பயமாகவிருக்கலாம் என்ற கருத்தும் பரவலாகப் பேசப்பட்டது. இருப்பினும் கூட்டெதிர்க் கட்சியை நம்பிச் சென்ற பலர் சுதந்திரக் கட்சியுடன் மீளவும் இணையும் வாய்ப்பிருப்பதனால் அவரது செயற்பாடு மென்மையாகப் போய்க்கொண்டிருக்கிறது என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாகவும் இருந்துவருகிறது.

சுதந்திரக் கட்சியின் தேர்தல் வெற்றிக்கான காரணத்தில் அரசியற் திட்ட வரைவினை உள்ளடக்கமுடியாது. இது இருகட்சிகளும் இணைந்த செயற்பாட்டின் மூலம் செய்யப்படவேண்டிய காலத்தின் கட்டாயம். இதில் எத்தனைபேர் களையெடுக்கப்படப் போகிறார்கள். என்பதில்தான் சந்திரிகாவின் அரச அறிவியற் கல்வி துணைசெய்யப் போகிறது.



kanapathipillai.a@thaiveedu.com


**Thamil Poonka School**

POSITIONS: 12 – Administrative Assistant / Accounts Assistant / Website Designer

QUALIFICATIONS:
- Currently enrolled in an accredited university and returning to university following the completion of the work term
- Able to communicate by telephone, in person, and in writing
- Preparing documents, reports, and proposals
- Excellent communication and interpersonal skills
- Ability to work reliably under pressure, prioritize and complete, projects within deadline
- Excellent computer skills with proficiency in Microsoft Office
- Multimedia programming and technology
- Knowledge of Social / Psychological Studies background is preferable.
- Knowledge of Tamil language is a strong asset

DUTIES AND RESPONSIBILITIES:
- Expected to work with students and potentially special needs children
- Able to build trusting relationship with the managers, coworkers, students and fellow beneficiaries
- Required to prepare documents, send emails and conduct researches.
- Be adaptable and able to pick up new techniques
- Maintain and keep track of participants confidential records
- Expected to prepare progress reports for students based on outcomes
- Must be able to complete any other duties assigned by the management

FOR FURTHER INFORMATION REGARDING THE POSITIONS MENTIONED ABOVE
PLEASE VISIT www.thamilpoonka.org/vacancy

Please forward your resume and cover letter by May 10, 2018 to
thamilpoonka@gmail.com
Period: 9 weeks (240 hours)
Salary: $14.00 per hour
Closing date: May 10, 2018

Address: Thamil Poonka School
& Day Care Centre
#21- 3001 Markham Road
Scarborough, ON
M1X 1L6

Contact Information:
Office: 647 378 3006
Cell: 647 706 6123
Email: thamilpoonka@gmail.com
Website: www.thamilpoonka.org



**யோகசாலை**
வளமான சமுதாயத்தை நோக்கி

எங்கள் மையம் அனைத்துலக
சிவானந்தா யோகா மையத்துடன் இணைப்பு

ஒரு சமூக யோகப் பயிற்சி மையம்

இலவச சமூக யோகா
திங்கள் மற்றும் வெள்ளி மாலை 6 மணி

இலவச இளைஞர் யோகா
வியாழன் மாலை 6 மணி

இலவச குடும்ப யோகா
வெள்ளி மாலை 6 மணி

சிறுவர் யோகா
ஞாயிறு காலை 10.30 மணி

தினம் தினம் யோகா
திங்கள் – வெள்ளி மலை 7 மணி
சனி. ஞாயிறு காலை 9 மணி

உடலை உயிரை
வளர்த்தேன்

Yogasalai
the community
647-760-8156
210 Silver star blvd.,
Unit #850, Toronto, M1V 5J9





நூலகம்

இணையத்தில் ஒரு நூல் உலகம்

www.noolaham.org




# Lower rates. Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

797 Milner Avenue, Unit 200
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள் பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும் எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators®
A Better Place For You®


AC, FURNACE AND WATER SOFTNER க்கான
NEW INSTALLATION அழைப்பை மேற்கொள்ளும் போது
உடனடி INSTORE CREDIT $200 வழங்கப்படும்.
GREENFLAME™
MECHANICAL
24/7 Service Available
416 827 4111
greenfmechanical@gmail.com
WWW.GREENFLAME.CA
GFMechanical


AJAX மாநகரில் புத்தம் புதிய வீடுகள்!
Tribute Builder's
Luxury Homes
Westney &Taunton Road West
From $1,176,990
42' & 50' Lots
Incentive – 10,000 in free upgrades
Free
Tree Planting
Hydro Hook – up
Water Meter hook – up
Education Levies
Survey Fees
Driveway paving
கமல் நவரட்ணம்
Kamal Navaratnam
Sales Representative
Direct: 416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
RE/MAX
COMMUNITY
Realty Inc., Brokerage
RE MAX Community Realty Inc.
Brokerage
1265 Morningside Ave., Suite 203
Toronto, ON M1B 3V9
(Mortgage)
அடமான
ஒழுங்குகளும்
செய்து
கொடுக்கப்படும்
Office: 416-287-2222
Fax: 416-2824488
Independently Owned and Operated
KAMAL
NAVARATNAM
REAL ESTATE
Trusted and reliable services

# இறப்புக்கான தமிழரின் இருத்தல்

- வினோதன் -


1993 கோடை காலம், ரொறன்ரோ வாழ் தமிழ் மக்கள் அச்சமும், பீதியும் அடைந்தார்கள். ரொறன்ரோ டவுன் ரவுன் பகுதியில் வேலை முடிந்து வீட்டிற்கு திரும்பியவர்கள் மூவர் தாக்கப்பட்டனர். இருவர் இறந்து விட்டனர். ஒருவர் தப்பிவிட்டார். 'ஸ்கின் ஹெட்' என 'அன்புடன்' அழைக்கப்படும் ஒரு கூட்டத்தினரே இதனைச் செய்தனர் என ஊடகங்கள் தெரிவித்தன.

சிவராஜா றோஜர் விநாசித்தம்பி யூன் 6, 1993 அன்று, புளோர் வீதியில் உள்ள உணவகத்தில் வேலைக்குச் சென்றுவிட்டு திரும்பிய பொழுது தாக்கப்பட்டார். மூன்று பிள்ளைக்கு தந்தையான - அப்போது 41வயதான இவர், ஒரு முன்னால் விஞ்ஞான ஆசிரியர். நீண்ட காலமாக கை, கால்கள் அசைவின்றி வைத்தியசாலையில் இருந்தார். இதே காலகட்டத்தில் குணாளான் முத்துலிங்கம் என்ற 32 வயது இளைஞர் உட்பட மேலும் இரு தமிழர்கள் கொல்லப்பட்டனர். நாசி அமைப்பின், கனடாப் பிரிவினரே இக்கொலைகளை செய்ததாக நம்பப்பட்டது. இவர்களை 'ஸ்கின் ஹெட்' என்று அழைப்பார்கள். இதற்கு முன்பாக சத்தியபாலன் மாணிக்கவாசகர், 1985ம் ஆண்டு மார்க்கம்-எல்ஸ்மெயர் சந்திக்கருகாமையில் உள்ள பெற்றோர் கனடாவில் வேலை பார்த்த போது அங்கு கொள்ளையடிக்க வந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர்தான் கனடாவில் கொல்லப்பட்ட முதலாமவர். ஆனால், 1993ல் நடைபெற்ற கொலைகள், இனவாதத்தை மையமாகக் கொண்டவை என்பது தெளிவாகவே தெரிந்தது. இதனைத் தொடர்ந்து இனவாதத்துக்கு எதிரான அமைப்புக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தஞ்சம் புகுந்த இடத்திலும், வெஞ்சினம் உள்ளதை தமிழ் மக்கள் உணர்ந்தார்கள்.

வாழ்வா? சாவா? வாழ்வு காலத்தை விரைவாகவே அழைத்துச் சென்றது. 2010ம் ஆண்டு காணாமல் போன ஸ்கந்தராஜா நவரட்ணம், 2018ல் புறுஸ் மக்கார்த்தர் என்பவரால் கொலைசெய்யப்பட்டார் என நகர் காவலர்கள் தெரிவித்துள்ளனர். புறுஸ் மக்கார்த்தர் ஒரு பாலியலாளர். அதன் பின்னர் கிருஸ்ணகுமார் கனகரட்னம் என்ற மற்றொரு தமிழரும் இதே மக்காத்தரால் கொல்லப்பட்டார் என நகர் காவலர்கள் இப்போது - 2018 ஏப்பிரல் முற்பகுதியில் தெரிவித்தனர். கிருஸ்ணகுமார் 2010ம் ஆண்டு சன் சீ எம்.வி கப்பல் மூலம் கனடா வந்த 492 பேருள் ஒருவர். மக்காத்தர் கொலை செய்ததாக கூறப்படும் எட்டுப் பேருள் அறுவர் சிறுபான்மையினத்தவர்கள். கிருஸ்ணகுமார் தவிர்ந்த ஏனையவர்கள் ஓரினச் செயற்கையாளர்கள். ஓரினச் செயற்கையாளர்கள் மேல் உள்ள வெறுப்பால் தான் இக்கொலைகள் நடைபெற்றன என நம்பப்படுகின்றது. அப்படியாயின் கிருஸ்ணகுமார் ஏன் கொலை செய்யப்பட்டார்?

தோமஸ் டொனால்ட் புறாஸ் மக்காத்தர் 1951ல் கவ்தாரா லேக் பகுதியில் பிறந்தார். இவர் ஒரு நிலப்பராமரிப்பாளர். திருமணமாகி மனைவியுடன் ஒசாவா நகரத்தில் வாழ்ந்து வந்தார். இவருக்கு பேரப்பிள்ளைகளும் உண்டு. பின்னர் வங்குரோத்து நிலையை பிரகடனப்படுத்திவிட்டு, தொன்களிப் பார்க் பகுதியில் வாழ்ந்துவந்தார். ரொறன்ரோவின் சேர்ச் அன் வெலஸ்லி பகுதியில் அடிக்கடி காணப்படுவார். ஓரினச் செயற்கையாளர்களுடன் நெருங்கிப் பழகிவந்துள்ளார். 2001ல் ஒரு ஓரினச் செயற்கையாளரைத் தாக்கிய குற்றத்துக்காக நீதிமன்றம் சென்று பின்னர் மன்னிக்கப்பட்டார். படுகொலை செய்யப்பட்ட ஸ்கந்தராஜா நவரட்டணத்துடன் 1998லிருந்து நெருக்கமான நண்பராக இருந்ததாக கூறப்படுகின்றது. 2010ல் ஸ்கந்தராஜாவைக் காணவில்லை என புகார் கூறப்பட்டது.

2013ம் ஆண்டு, காணாமல் போன மூவர் பற்றி, மக்கார்த்தரிடம் நகர்காவலர்கள் விசாரணை மேற்கொண்டிருந்தனர். ஏன்



அவர் கைது செய்யப்படவில்லை? மக்கள் தங்களுக்கு இவரைப்பற்றி தகவல்கள் தரவில்லை என நகர்காவலர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். மக்கார்த்தா, சுமார் முப்பது வீடுகளின் பின் பகுதியிலுள்ள தோட்டங்களைப் பராமரித்து வந்தார். அவ்வாறான ஒரு வீட்டின் பின்புறமிருந்தே பல உடல்கள் மீட்கப்பட்டன. ஓரினச் செயற்கையாளர்கள் மீது, நகர்காவலர்களுக்கு இருந்த வெறுப்பின் காரணத்தால் நகர்காவலர்கள் தீவிரமாக விசாரணை செய்யவில்லை என்ற குற்றமும், நகர்காவலர்கள் மீது சுமத்தப்படுகின்றது.

கனடாவிற்கு இது புதிதல்ல. வன்கூவர் பகுதியில் றொபட் பிக்டன் 26 பெண்களை கொலை செய்துள்ளார். 1973-1985க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் Yves Trudeau முன்னால் மோர்ட்டர் சைக்கிள் குழு உறுப்பினர் 43 பேரைக் கொலை செய்துள்ளார். கிளிபோர்ட் ஓல்சன் 11 குழந்தைகளைக் கொன்றுள்ளார். இப் பட்டியல் நீளமானது. ரொரன்ரோ சிக் சில்ரன் வைத்தியசாலையில் 1980-1981 காலப்பகுதியில் 8 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர். இது வரை காரணங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. பிரிட்டிஸ் கொலம்பியாவில் உள்ள நெடுஞ்சாலை 16ல் சுமார் 40 பூர்விகக் குடிப் பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர். இது 1969-2011 காலப்பகுதியில் நடைபெற்றது. இன்று வரை இதனை யார் செய்தது என்பது தெரியாது.

பொதுவாகவே தொடர் கொலைகள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள், அல்லது சிறுபான்மையினத்தவரையே குறிவைத்து செய்யப்படுகின்றன. பாதிக்கப்





பட்ட சமூகங்கள் எழுச்சியடையாவிட்டால், அதிகாரிகளும் இவற்றை தீவிரமாக கவனத்திற் கொள்வதில்லை. அரசியல்வாதியாகவேண்டும், பாராளுமன்றத்துக்குச் செல்ல வேண்டும் என்று நினைப்பவர்களும் இவற்றை கண்டு கொள்வதில்லை.

ஸ்கந்தராஜா, கிருஸ்ணகுமார் காணாமல் போய் பல வருடங்களாகியும் எமது சமூக அமைப்புக்களால் ஏன் பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து பதிலைப் பெறமுடியவில்லை? எமது கவனமெல்லாம், திருவிழாக்களிலும், பதவிகளிலுமே தான் உள்ளது. இன்று ஊடகங்கள் நகர்காவலர்கள் மீது குற்றஞ்சாட்டுகின்றார்கள். ஏன் அவர்களால் இவற்றை தீவிரப்படுத்த முடியவில்லை? 1981ம் ஆண்டு ஒரு வைத்தியசாலையில் சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். இன்று வரை இதன் பிண்ணனி பற்றிய ஊகங்களே உள்ளன. தெளிவான காரணங்கள் தெரியாது.

தொடர்ச்சியான கொலைகளை நிறுத்த, சமூகம் விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும். எமது அமைப்புக்கள் மக்கள் நலன் உள்ளவையாக மாறவேண்டும். பெரும்பாலும் அமைப்புக்கள் நினைவுக் கூட்டம் நடத்துவதிலேயே கவனம் செலுத்துகின்றன. ஊடகங்கள் இறந்த செய்திகளையே பிரசுரிக்கின்றன. இது தொடர்ந்தால் தொடர் கொலைகள், தொடர்கதையாகவே இருக்கும்.

■ ■ ■



# நோய்களும் அவற்றின் குறி குணங்களும்

- பாலா. சிவகடாட்சம் -

ஆரண மறைக்கும் எட்டா
அருளொளியான மூர்த்தி
பூரண மறையாய் அந்நாட்
புகன்ற ஆயுறுவேதத்தின்
சீரணி வாதம் எண்பத் தைந்து
அதின் சிறப்பும் பேரும்
ஏரணி உலகின்மீது
அறிந்தவை இயம்பல் உற்றோம்

- செகராசசேகரம்: 572

‘வேதங்களாலும் எட்ட முடியாத அருள் ஒளியாக நிற்கும் சிவபெருமான் முழுமையான வேதமாக முன்னர் அருளிச்செய்த ஆயுள்வேதத்தில் உள்ளபடி எண்பத்தைந்து வாத நோய்களின் பெயரையும் அவற்றின் இயல்பையும் இவ்வுலகத்தவர் அறியும் வண்ணம் கூறுகின்றோம்’ என்பது மேற்படி பாடலின் பொருள்.

செகராசசேகரம் முதலான தமிழ் மருத்துவ நூல்களில் வாதநோய்களின் எண்ணிக்கை எண்பத்தைந்து என்று சொல்லப்பட்டுள்ளது. அந்நோய்களின் பெயரும் அவை ஒவ்வொன்றினதும் குறிகுணங்களும் சிகிச்சைமுறைகளும் மேற்படி நூல்களில் தரப்பட்டுள்ளன. எனினும் பொதுவாகப் பல

**தமிழர் மருத்துவம் - 6**

ருக்கும் ஏற்படக்கூடிய வாதநோய்கள் ஒரு சிலவற்றையே இங்கு எடுத்துரைக்க முற்படுகின்றேன்.

## முகவாத சன்னி(Facial Paralysis):

வட்டமா முகமும் கண்ணும்
வாய்ப்பற்கள் தானும் கோணும்
கட்டமாஞ் சிலேத்துமங்கள் காறியே
யுமிழொண்ணாது
இட்டமா முட்டநீர்கள் எடுத்துக் கொப்
புளிக்கொணாது
முட்டியே என்றும் சீறும் முகவாத
சன்னிதானே

- வைத்தியசிந்தாமணி: வாகடம் 91

‘வட்டமான முகத்துடன் கூடவே கண்ணும் வாயும் பற்களும் கோணும். சளியை வெளியே உமிழமுடியாது. தண்ணீரை வாயில் எடுத்துக் கொப்புளிக்க முடியாது, நோயாளி எப்போதும் கோபமுற்றவர் போல் காணப்படுவார். இத்தகைய குணங்கள் முகவாத சன்னியின் அறிகுறிகளாகும்’ என்று வைத்திய சிந்தாமணி கூறுகின்றது.

மேலைத்தேய மருத்துவமுறையில் இந்த நோயை முகத்தசைகள் செயலிழப்பு(Facial paralysis)என்று குறிப்பிடுவர். முகத்தசைகளை இயக்கும் நரம்புகள் செயல் இழந்து போவதே இந்த நிலைமை தோன்றக்காரணமாயுள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

முகநரம்புகளில்(facial nerves) ஏற்படக்கூடிய தொற்று அல்லது வீக்கம், தலையடிபடுதல், தலை அல்லது கழுத்தில் ஏற்படும் கட்டி, பாரிசவாதம் என்பவற்றுள் ஏதாவது ஒன்றால் முகவாதசன்னி ஏற்படலாம். பலமாதங்களாக மெல்ல மெல்லத் தோன்றும் முகவாதசன்னி தலையில் அல்லது கழுத்தில் ஏற்படும் கட்டியினால் ஏற்படுகின்றது.

முகவாதசன்னிகளுள் ஒருவகை சடுதியாக ஏற்படுவது. இதனை பெல்ஸ் போல்ஸி (Bell’s Palsy) என்று கூறுவர். இதனைத் தோற்றுவிக்கும் காரணிகள் இன்னமும் அறியப்படவில்லை. முகவாதசன்னிகளுள் பொதுவாகப் பலருக்கும் ஏற்படக்கூடியது இந்த முகவாதம் ஆகும். முகநரம்பொன்றின் வீக்கம் முகத்தில் ஒருபக்கத்தில் உள்ள தசைகளைத் தொங்கவைக்கின்றது. இந்த வகையான முகவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் ஆறு மாதங்களில் பூரணமாகக் குணமடைந்து விடுவார்கள்.



**Sylvester Stallone:**

மூக்கொரு புறத்தினுற்று முன்னெழு புரு
வத் தோடு
நாக்கொடு மெயிறுபூட்டி நயனமோர் புறத்து
வாங்கி
வாக்கொடு முகமுமாறி வலித்திடுந் தலை
நெளிக்கும்
தாக்கொடு விதனைநீயுந் தான் முகவாத
மென்னே

- செகராசசேகரம் 616

‘இழுபட்ட புருவத்துடன் மூக்கும் ஒரு புறமாக இழுபட்டிருக்கும். நாக்கும் பல்லும் விறைத்திருக்கும். கண்ணும் ஒருபக்கம் இழுபட்டுப் பேச்சும் முகமும் மாறுபட்டுக் காணப்படும். நோவு இருக்கும். தலை நெளிக்கும். இத்தகைய குணங்கள் ஒருவரிடம் காணப்பட்டால் அவருக்கு முகவாதம் வந்திருப்பதாக அறிந்துகொள்ளவேண்டும்’ என்று மேற்காணும் பாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல ஹாலிவுட் நடிகை அஞ்சலீனா ஜொலி (Angelina Jolie) 2016ம் ஆண்டில் தாம் Bell’s Palsy என்னும் முகவாதத்தால் பாதிக்கப்பட்டதாகக் கூறியுள்ளார். சில்வெஸ்டர் ஸ்டலோனும் (Sylvester Stallone) இந்நோயினால் பாதிக்கப்பட்ட ஹாலிவுட் பிரபலங்களுள் ஒருவர்.

முகவாத சன்னி (Facial Paralysis) பற்றிய மற்றுமொரு பாடல்:

கண்ணில் தலையில் புருவத்தில் காதில்
பல்லிற் குத்துண்டாய்
பண்ணிப்பதைக்க முகந்தன்னைப் பக்
கம்பற்றி யேதிருகி
நண்ணிப்பகர நாத்தடக்கி நாடும் குணங்
கள் இவைகண்டால்
எண்ணிச்சொல்லு முகவாத இடர்செய்
சன்னி இதுவென்றே.

‘கண்ணில், தலையில், புருவத்தில், காதில், பல்லில் குத்து ஏற்படும். முகத்தை ஒரு பக்கத்தில் திருகிவிடும். பேச முற்படும்போது நாக்கு தடக்கும். இத்தகைய குணங்கள் கண்டால் இது முகவாத சன்னி என்று அறிந்துகொள்’ என்பதே இப்பாடலின் பொருளாகும்.

அமுக்கிராய்த் தைலத்தைத் தேய்த்து உருவித் தலைமுழுகிவரும்படி பரராசசேகரத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆயுள்வேதியர்கள் மகாநாராயண தைலம் என்னும் தைலத்தைப் பாதிக்கப்பட்ட உடற்பாகங்களில் பூசித்தேய்த்து உருவும்படி கூறுகின்றார்கள். இந்த இரண்டு தைலங்களுமே அமுக்கிராவேர் (Withania somnifera) உட்படப் பல்வேறு மூலிகை வேர்களைக் காய்ச்சி வடித்தெடுத்த கஷாயத்துடன் மற்றும்பல மருந்துச் சரக்குகளும் சேர்த்து நல்லெண்ணெயில் கொதிக்கவைத்துத் தயாரிக்கப்படுகின்றன. செகராசசேகரத்தில் பாதிக்கப்பட்ட அவயவங்களில் பூசித்தேய்த்து உருவுதற்கும் தலைக்கு வைத்து முழுகுவதற்கும் பயன்படும் கொன்றை எண்ணெய் என்னும் தைலத்தின் செய்முறை விளக்கப்பட்டுள்ளது.

## கை நடுக்குவாதம் (Parkinson’s Disease):

கடுப்புடன் உளைந்து குத்திக் கையினை
நடுக்கி மேனி
துடிப்புடன் தலைநடுக்கித் துணிந்தொன்றை
யெடுக்கின் மிண்டும்
வடுப்பிள வனைய வுண்கண் வகிர்மதிப்
புருவமின்னே
அடுப்பிற் கை நடுக்குவாதம் அகலுதல்
அரிதென்றாரே

- செகராசசேகரம் 665

‘உடம்பில் கடுப்பும் உளைவும் குத்தும் ஏற்படும். கை நடுங்கும். மேனி துடிக்கும். தலை நடுங்கும். ஒன்றைத் துணிந்து எடுத்தவுடன் கைநடுக்கம் நிற்கும். இப்படியான குணங்கள் ஒருவரிடம் காணப்பட்டால் அதை நடுக்குவாதம் என்று அறிந்து கொள்ளலாம். இந்த நோய் மாற்றுதற்குக் கடினமாகும்’ என்று மேற்காணும் பாடலில் கூறப்பட்டுள்ளது.

மேலைத்தேய மருத்துவ உலகுக்கு முதன்முதலாக இந்நோய் பற்றி எடுத்துக்கூறியவர் டாக்டர் ஜேம்ஸ் பார்க்கின்ஸன் (Dr. James Parkinson) என்னும் மருத்துவராவர். இவர் பெயராலேயே இன்று இந்நோய் அழைக்கப்படுகின்றது. மூளையின் ஒருபகுதியில் உள்ள மூளைக்கலங்கள் இறப்பதால் டோபாமைன் (Dopamine) என்னும் இரசாயனம் குறைகின்றது. இந்தச் சுரப்பு 80% குறைந்தவுடன் வியாதியின் குணங்குறிகள் தெரியத்தொடங்கும். பொதுவாக 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே இந்தப் பார்க்கின்ஸன் என்னும் கைநடுக்குவாதம் ஏற்படுகின்றது. இந்நோயினால் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் ஆண்களாவர். மேலைத்தேய மருத்துவத்திலும் இந்நோய்க்கு மருந்து கிடையாது.

உலகக் குத்துச் சண்டை ஜாம்பவானாக விளங்கிய முகம்மது அலி இந்நோயினால் பாத்திப்புக்குள்ளாயிருந்தார் என்பது பலரும் அறிந்த விடயம். இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களும் இந்நோயால் பாதிப்புக்குள்ளாகியிருந்தார்.

## நெஞ்சுவாதம் (Angina Pectoris):

நெஞ்சினில் அடைத்துக் குத்தி நிலைத்து
நொந்துளைந்து வேர்த்துக்
கெஞ்சவே புறம்பும் உள்ளும் கிட்டியே
நெருக்கி மிண்டி
அஞ்சவே அடைத்து விம்மி அதிகமாய்
உவாதி செய்யும்
வஞ்ச நெஞ்சு உறு வாதத்தின் குணமென
வகுத்தார் அன்றே

- செகராசசேகரம் 681

‘நெஞ்சை அடைத்துக் குத்தும். மார்புப் பகுதியில் தொடர்ந்து நோவும் உளைவும் இருக்கும். உடல் வியர்க்கும். உடலின் உள்ளேயும் வெளியேயும் இறுக்கமும் நெருக்குதல் போன்ற உணர்வும் ஏற்படும். பயப்படும்படியான உபாதைகளை ஏற்படுத்தும். நெஞ்சடைவாதத்தின் குறிகுணங்கள் இவையாகும்’ என்பது மேற்காணும்

தொடர்தல் 9ம் பக்கம்

WALK-IN CLINIC
அனைத்துக் குடும்ப வைத்தியத் தேவைகளையும் தமிழில் உரையாடி
பூர்த்திசெய்துகொள்ள நீண்டகால அனுபவமுடைய குடும்ப வைத்தியர்
416.289.1212
Mon - Fri: 10am - 9pm
Sat - Sun: 10am - 3pm
OPEN 7 DAYS
no appointment required
MedCheck Clinic
1200 Markham Road, Unit 115
Toronto, ON M1H 3C3
(at Markham & Ellesmere)

# நோய்களும் அவற்...

8ம் பக்கத் தொடர்ச்சி...

பாடலின் பொருள்.

மேலைத்தேய மருத்துவத்தில் இன்று 'அஞ்சைனா பெக்ரோறிஸ்' (Angina Pectoris) என அறியப்படும் தற்காலிக இருதயவலியின் குறிகுணங்களே தமிழ் மருத்துவத்தில் நெஞ்சடைவாதத்துக்குக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். இது மாரடைப்பாக இல்லாவிடினும் எதிர்காலத்தில் மாரடைப்பு ஏற்படக்கூடும் என்பதற்கான அறிகுறியாக இருக்கலாம். குறிப்பாக நெஞ்சடைப்புடன் வியர்வை ஓங்காளம் என்பன காணப்பட்டால் உடனடியாக அவசர மருத்துவ உதவிக்கு அழைக்கவேண்டும்.


செகராசசேகரத்தில் மாவிலங்கைவேரும் (Crataeva magna) மற்றும்பல மூலிகைகளும் நல்லெண்ணெயுடன் சேர்த்துத் தயாரிக்கப்படும் இலிங்காதி தைலம் உடலில் தேய்த்து உருவுவதற்குப் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

### பாரிசவாதம் (Stroke):

ஒருபுசம் கைகால் நாரி உற்றிடு முகம்
வாய் நாக்கு
மருவுற உளைந்து குத்தி வசமற விறைத்
துச் சோர்ந்து
வெருவுற நடுக்கிக் காய்ந்து விழுத்தும்
ஓர் பாகநம் தன்னைப்
பொருவுபா ரிசத்தின் வாதம் செய்குணம்
புகலும் காலே

- செகராசசேகரம் 690

'ஒருபக்கத்துத் தோள், கை, கால், நாரி, முகம், வாய், நாக்கு என்பன உளைந்து குத்தி விறைப்பு ஏற்படும். சோர்வும் நடுக்கமும் காய்ச்சலும் உண்டாகும். உடலின் ஒருபக்கத்தை விழுத்திவிடும். இவையே பாரிசவாதம் எனப்படும் நோயின் குறிகுணங்களாகும்' என்பது மேற்கானும் பாடலின் பொருள்.




ஆங்கிலத்தில் 'ஸ்ரோக்' (stroke) எனப்படும் இந்த நோயின் குறிகுணங்கள் கண்டவுடன் நாலரை மணித்தியாலங்களுக்குள் நோயாளிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுவிடவேண்டும் இல்லையேல் நிலைமை மோசமாகிவிடும் என்பதை இன்றைய மருத்துவர்கள் வலியுறுத்துகின்றனர்.

பெரும்பாலும் மூளைக்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் இரத்தக்குழாயில் இரத்த உறைவு (blood clot) அல்லது அடைப்பு உண்டாவதால் ஸ்ரோக் எனப்படும் பாரிசவாதம் ஏற்படுகின்றது. பிறிதொரு இடத்தில் தோன்றும் இரத்த உறைவுகூட நாடிக்குழாய்களினூடாகப் பயணித்து மூளைக்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் குழாயில் அடைப்பை ஏற்படுத்தலாம்.

இரத்தக்குழாய் அடைப்பினால் மூளைக் கலங்களுக்கு இரத்தம் போவது தடைபட்டு அதன்விளைவாக ஏற்படும் ஒட்சிசன் பற்றாக்குறை காரணமாக மூளையின் குறிப்பிட்ட பகுதியில் உள்ள இழையங்கள் இறக்கநேரிடும். இதனால் பக்கவாதம் அல்லது பாரிசவாதம் ஏற்படுகின்றது.

நுண்ணிய இரத்தக் குழாய்கள் வெடிப்பதன் மூலம் மூளையில் இரத்தம் தேங்குவதாலும் பாரிசவாதம் ஏற்படலாம்.

செகராசசேகரத்தில் மாவிலங்கம் எண்ணெய் உள் மருந்தாகவும் வெளிப் பிரயோகமாகவும் பாரிசவாதத்துக்கு மருந்தாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

வார்த்துடன் பொருந்தி நன்றாய்
மத்தித்துப் பூசிக்காய்ச்சி
ஆர்த்துடன் அருந்தி மூழ்கில்
அடுத்த பாரிசத்தின்வாதம்
ஏர்த்திடு கிரந்திவாதம் ஏதமார்
முடக்கு வாதம்
சீர்த்திசெய் கதிர்முன் கண்ட
பனியெனச் சிதறிப் போமே

- செகராசசேகரம் 699

பாரிசவாதத்துக்கான சிகிச்சைகள் 10 மாதத்துக்குள் பலன்தராவிட்டால் நோயாளி பிழைத்திருப்பது கடினம் என்று ஆயுள்வேத நூலோர் கூறியுள்ளனர்.

காலுடன் கையும் வீங்கிக் கஞ்சியு மறந்து
நாவும்
மேலுடன் நடுங்கி மிண்டி மெத்தவே யதி
கமாகில்
சேலுடன் நிகருங்கண்ணாய் செலுத்து
நாட் செவ்வை வாரா
நாலுடன் ஆறுதிங்கள் நலக்கியே கொல்
லும் தானே.

- செகராசசேகரம்: 691

**உசாத்துணை:**
• செகராசசேகர வைத்தியம், பொன்னையாபிள்ளை (பதிப்பசிரியர்), மீள்பதிப்பு, மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், சுகாதார அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாணம் 2000
• செகராச வைத்தியத் திறவுகோல், நாகரத்தினம் கணேசலிங்கநாதன், ஆயுர்வேதத் திணைக்களம், நாவின்ன, மகரகம 2009
• தன்வந்தரி வைத்திய சிந்தாமணி 1200, பரசுராமமுதலியார், (பதிப்பாசிரியர்), 1883

குறிப்பு: செகராசசேகரப் பாடல்களின் இலக்கம் கணேசலிங்கநாதனின் செகராசசேகரத் திறவுகோலில் உள்ளபடி தரப்பட்டுள்ளது.



Sivakadadcham@thaiveedu.com



# பிரகதி சித்தா மூலிகைச் சிகிச்சை நிலையம்

OVER 10,000 YEARS OLD TRADITIONAL SYSTEM OF TAMIL MEDICINE.

வர்ம முறையிலும், மருந்தில்லா மருத்துவ முறையிலும் சிகிச்சை அளிக்கப்படும்.

அன்னையின் பிரகதி சித்தா மூலிகை சிகிச்சை நிலையம். இது ஒரு பாரம்பரிய பரம்பரை ராஜ வைத்தியசாலை. இந்தக் கால மருத்துவ விஞ்ஞானிகளைப் போல ஆதிகால மருத்துவ விஞ்ஞானிகளே நம் சித்தர் பெருமக்கள். தவம்,ஞானம் எனப் பல வழிகளைக் கண்டறிந்தார்கள். அதில் ஒரு பங்கு தான் வைத்தியம். வைத்தியமுறைகள் பலவகைகளாக இருந்தாலும், அவர்கள் மூலிகைகளைக் கொண்டு பல வியாதிகளைக் குணமாக்கியும், ஆராய்ச்சி செய்தும் சுவடிகளில் எழுதியும் வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் சீடர்களுக்கும், சில நல்ல உள்ளம் கொண்டவர்களுக்கும் கற்றுத் தந்தும் இருக்கிறார்கள் மக்களின் நலன் கருதியே சித்தர்கள் இவ்வாறு செய்திருக்கிறார்கள். பல மருத்துவ முறையில் வந்திருக்கும் வியாதிக்கு மருந்தில்லை. ஆனால் சித்த மூலிகை வைத்தியத்தில் அப்படியில்லை. பல வியாதிகளுக்கு மருந்து இருக்கிறது. இன்னமும் மருந்திருக்கும் அளவுக்கு வியாதிகள் உலகத்தில் உருவாகவில்லை. எப்படிச் சொல்கிறேன் என்றால் ஒரே ஒரு மூலிகை 30 விதமான வியாதிகளைக் குணப்படுத்தும் அளவுக்கு உள்ள மூலிகைகளும் உண்டு. அதைப் பரம்பரையாக கையாண்டு வந்து கொண்டிருந்த பரம்பரையில் வந்ததே அன்னையின் பிரகதி சித்தா மூலிகை சிகிச்சை நிலையம். நரம்புத் தளர்ச்சி, முடக்கு வாதம்,பக்கவாதம், சிறுநீரகம், சொரியாஸிஸ், கர்ப்பப்பைக் கட்டி, ஆண் பெண் மலட்டுத் தன்மை, குழந்தையின்மை, அல்சர், மூட்டுவலி, இருதயம் சம்பந்தமான நோய்கள், மூளைக் கட்டி, ரத்தசோகை,சர்க்கரை வியாதி, தலைமுடி கொட்டுதல், மாலைக் கண்நோய், காது, ரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால்,வெண் குஷ்டம், முள்ளந்தண்டுவட வலி, மூட்டு வலி, மூட்டுத்தேய்மானம், மஞ்சள் காமாலை, வெள்ளைப்படுதல், அனைத்து விதமான புற்று நோய்கள், முரசு கரைதல், தூக்கமின்மை, மூலம், பௌத்திரம், நரம்பு வாதம் (Varicose Vein) மாறாத படுக்கைப்புண், தீப்புண், ஒற்றைத் தலைவலி, முடி உதிர்தல், தைராய்டு, உடல் எடையை கூட்ட, அல்லது குறைக்க, உடலில் ஏற்படக் கூடிய அனைத்து வியாதிகளையும் அன்னையின் பிரகதி சித்தா மூலிகை சிகிச்சையில் பரிபூரணமாக குணப்படுத்திட முடியும். உணவே மருந்து, மருந்தே உணவாக கடைப்பிடிக்கப்படுகிறது.

வியாதிகளில்லாத உலகை உருவாக்க விரும்புகிறது

**புற்று நோயாளர்களுக்கு ஒரு அறிவிப்பு.**

எந்த வகையான புற்று நோயாக இருந்தாலும், நோயாளி வாயால் உணவு உட்கொள்ளக் கூடியதாக இருக்கும் போதும், உறுப்புகளை வெட்டி அகற்ற முன்னரும், நாம் உங்களுக்கு உதவ முடியும். உங்களுக்கு விதிக்கப் பட்ட வாழ்க்கையை முழுமையாக வாழ நாம் உங்களுக்கு உதவ முடியும்.

சித்தர்களின் பழங்கால முறையில்
ரசமணி, ரசலிங்கம் செய்து தரப்படும்.

**சித்தர்களின் பழங்கால முறையில்
ரசமணி, ரசலிங்கம் செய்து தரப்படும்.**


**PREMI.S**
பாரம்பரிய சித்த வைத்தியர் (ராஜவைத்தியம்), இரசவாதி
Hereditary Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Siddha System of Medicine (IND), DHMS (IND),
Natural Medicine Practitioner (CAN)
**Proudly Sponsored By:**
Yogic Health & Food Bank
www.sivarppanamfoundation.org

நிவாரணம் பெற அழையுங்கள்

**PHONE: +1 (647) 278 - 3100**

Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

1350 ELLESMERE RD. UNIT # 2, SCARBOROUGH, ON, M15E4.
(Brimley & Ellesmere)



# அனைத்துலக ஊடகவியலாளர் நாள்

- குமணன் தம்பிஐயா -

மே மாதம் 3ம் திகதி அனைத்துலக ஊடகவியலாளர் நாள்.

2018ம் ஆண்டில் உலக ஊடக சுதந்திரதினத்தின் 25வது ஆண்டு நிறைவை யுனெஸ்கோ கொண்டாடுகிறது. யுனெஸ்கோ அமைப்பும் கானா குடியரசும் இணைந்து ஏற்பாடு செய்யும் பிரதான நிகழ்ச்சிகள், இரண்டு நாள் நிகழ்வாக மே 3, 4ம் திகதிகளில் கானா நாட்டின் தலைநகர் அக்ராவில் நடக்கவிருக்கிறது. இது ஊடகங்களின் பிரச்சினைகள், அரசியல் செயல்முறை, சுதந்திரம், ஊடக முறைமை ஆகியவற்றின் வெளிப்படைத்தன்மையையும் பொதுமக்களுடன், ஊடக சுதந்திரம் பற்றியும் அவை எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியும் அன்றைய தினம் ஆராயும் மாநாடாக அமைய இருக்கிறது.

நான்காவது தடவையாக ஒரு ஆபிரிக்க நாடொன்றில் ஊடக சுதந்திரதினம் கொண்டாடப்படுகிறது. இம்முறை ஊடக சுதந்திர தின கொண்டாட்டம் உலகம் முழுவதும் சுமார் 100 தேசிய நிகழ்வுகளால் வலுவூட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 3ம் திகதி ஊடக சுதந்திரத்தின் அடிப்படைக்கொள்கைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், உலகெங்கிலும் உள்ள ஊடக சுதந்திரத்தை மதிப்பிடுவதற்காகவும், ஊடக சுதந்திரத்திற்கு எதிரான தாக்குதல்களிலிருந்து ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் பாதுகாப்பதற்காகவும், ஊடகங்களுக்காக அவர்களின் வாழ்வை இழந்துவிட்ட ஊடகவியலாளர்களை நினைவுகொள்வதற்காகவும், உலகெங்கிலும் ஊடக சுதந்திரத்தை நிலைப்படுத்துவதற்காகவும் இத் தினம் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது.

உலக ஊடக சுதந்திர தினம் (World Press Freedom Day) என்பது ஊடக சுதந்திரத்தைப் பரப்பும் நோக்கிலும், மனித உரிமைகள் சாசனம் பகுதி 19ல் இடம்பெற்றுள்ள பேச்சுரிமைக்கான சுதந்திரத்தை உலக நாடுகளின் அரசுகளுக்கு நினைவூட்டுவதற்காகவும் மே 3ம் நாளை ஊடக சுதந்திர தினமாக ஐக்கிய நாடுகள் அவையினால் 1993ல் பிரகடனப்படுத்தப்பட்டது.

1991ம் ஆண்டில் யுனெஸ்கோ பொது மாநாட்டில் இருபத்தி ஆறாவது அமர்வுக்கு ஒப்புதல் அளித்தபின், 1993ம் ஆண்டில் உலக ஊடக சுதந்திர தினம் ஐ.நா. பொதுச் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டது. இது 1991ல் வின்ட்ஹோக் பிரகடனத்தை (Declaration of Windhoek) ஒட்டி இந்த நாள் உருவாக்கப்பட்டது. இந்தப் பிரகடனம் ஆப்பிரிக்க ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களால் ஒன்றாக இணைந்த ஊடக சுதந்திரம் பற்றிய ஒரு அறிக்கையாகும். ஆப்பிரிக்கா முழுவதும் ஊடகங்களுக்கு இருக்கக்கூடிய ஊடக அச்சுறுத்தல், ஊடகவியலாளர்களால்களைச் சிறைப்பிடித்தல், ஊடக தணிக்கை ஆகியவற்றினை இது விவரிக்கிறது.

ஆண்டுதோறும் இந்நாளில் ஊடக சுதந்திரத்துக்காகப் பங்களிப்புச் செய்யும் நபர் அல்லது அமைப்பிற்கு யுனெஸ்கோ நிறுவனத்தினர் 'யுனெஸ்கோ கிலெர்மோ கானோ' (Guillermo Cano) எனும் உலக ஊடக சுதந்திர விருது வழங்கி கௌரவிக்கின்றனர். கொலம்பியாவின் பத்திரிகையாளரான கில்லர்மோ கனோ இஸ்ஸாஸ (Guillermo Cano Isaza) என்பவர் 1984 டிசம்பர் 17ம் தேதி தனது செய்தித்தாளான எல் எஸ்பேக்ரேடர்(El Espectador) அலுவலகத்திற்கு முன்னால் வைத்து படுகொலை செய்யப்பட்டார் இவரது ஞாபகார்த்தமாக ஆண்டுதோறும் உலக பத்திரிகை சுதந்திர விருது வழங்கப்பட்டு வருகிறது.

யுனெஸ்கோ அமைப்பானது. ஆண்டுதோறும் ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு ஊடகவியலாளர்கள், ஊடகச் சுதந்திர அமைப்புகள் மற்றும் ஐ.நா. முகவரகங்கள் பங்குபற்றும் மாநாட்டை ஒவ்வொரு தொனிப்பொருளில் நடத்தி வருவது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டின் தலைப்பாக ஊடகங்களின் நீதி மற்றும் வெளிப்படையான சுதந்திரத்துக்கான அடிப்படை உரிமையை பாதுகாப்பதும் பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தீர்வு காணுதலும் ஆகும்.

ஊடக சுதந்திர தினத்தின் 25வது ஆண்டு நிறைவை கொண்டாடும் அதே நேரத்தில், எமது நாட்டில் இதுவரை 100க்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 1000க்கு மேற்பட்டவர்கள் மீது வன்முறைகள் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. இது இன்றும் தொடர்கின்றது.

யுனெஸ்கோ அமைப்பு இலங்கையரான லசந்த விக்கிரமதுங்க இறந்ததன் பின் அவருக்கு 2009ம் ஆண்டு 'யுனெஸ்கோ கிலெர்மோ கானோ' (Guillermo Cano) எனும் உலக பத்திரிகை சுதந்திர விருது வழங்கியது. 2006ம் ஆண்டு சர்வதேச ஊடகவியலாளர் தினம் இலங்கையில் நடை-பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.


எல்லை கடந்த ஊடகவியலாளர் அமைப்பின் (Reporters Without Borders) அறிக்கையின்படி ஊடக சுதந்திரம் கொண்ட நாடுகளின் பட்டியலில் 2016, 2017ம் ஆண்டுகளில் இலங்கை 141வது இடத்தில் உள்ளது. சுவீடனும், நேர்வேயும் முதலாம் இரண் டாம் இடங்களில் உள்ளன, வட கொரியா இறுதியாக 180 வது இடத்தில் உள்ளது கவனத்தில் கொள்ளத்தக்கது.

| ஆண்டு | கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் |
|---|---|
| 1995 | 64 |
| 1996 | 36 |
| 1997 | 28 |
| 1998 | 23 |
| 1999 | 38 |
| 2000 | 32 |
| 2001 | 31 |
| 2002 | 25 |
| 2003 | 43 |
| 2004 | 63 |
| 2005 | 64 |
| 2006 | 85 |
| 2007 | 88 |
| 2008 | 60 |
| 2009 | 75 |
| 2010 | 58 |
| 2011 | 67 |
| 2012 | 87 |
| 2013 | 79 |
| 2014 | 73 |
| 2015 | 81 |
| 2016 | 62 |
| 2017 | 50 |

உலகளாவிய ரீதியில் 1995ல் இருந்து 2017 வரை கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை



kumanan.t@thaiveedu.com



# உயிர்ச்சத்து D

- ரவிச்சந்திரிகா -

Fat soluble vitamins என்னும் வகையைச் சேர்ந்த இரண்டாவது உயிர்ச்சத்து விற்றமின் D (Vitamin D) ஆகும். ஒரு சில உணவுப் பொருட்களில் மட்டும் காணப்படுகிறது. உடலின் உயிர்ச்சத்து D 80 - 90% தேவையைப் பூர்த்தி செய்வது சூரியஒளி ஆகும். இதனால் இந்த உயிர்ச்சத்து Sunshine Vitamin என அழைக்கப்படுகிறது.

சூரிய ஒளி தோலில் படும்போது உடல் உயிர்ச்சத்து D யை உற்பத்தி செய்கிறது. கொழுப்பில் கரையும் தன்மை கொண்டது என்பதால் உடலில் இலகுவில் சேமித்து வைக்கப்படுகிறது.

எவ்வாறு உயிர்ச்சத்து D பெறப்பட்டாலும் உடல் உடனடியாகப் பயன்படுத்தும் நிலையில் அது இருப்பதில்லை. அந்த இரசாயனப் பொருள் ஈரல், சிறுநீரகம் ஆகிய உறுப்புகளால் முறையே calcidiol, calcitriol

## உயிர்ச்சத்துகள் - 2

ஆக மாற்றப்பட்ட பின்பே உடல் அதைப் பயன்படுத்த முடியும்.

### உயிர்ச்சத்து Dயின் செயல்பாடுகள்:

- நாம் உண்ணும் உணவுப் பொருட்களில் உள்ள கல்சியம் குடலில் இருந்து உறிஞ்சப்பட்டுக் குருதியில் போதுமான அளவில் இருக்கும்படி செய்கிறது
- குருதியில் உள்ள பொஸ்பேற் அளவைக் கண்காணிக்கிறது. கல்சியம், பொஸ்பேற் இரண்டும் எலும்பின் உற்பத்திக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாதன.
- கலங்களின் வளர்ச்சி.
- நரம்பு, தசை ஆகியவற்றின் செயற்பாடு.
- நோய் எதிர்ப்புச் சக்தி.
- அழற்சியைக்(inflammation) குறைத்தல்.

உயிர்ச்சத்து D குறைபாட்டினால் சிறுவர்களில் rickets என்னும் நோய் ஏற்படுகிறது. வயது வந்தவர்களில் osteomalacia என்னும் நோய் ஏற்படுகிறது. கல்சியம், உயிர்ச்சத்து D இரண்டும் சேர்ந்து வயது வந்தவர்களில் osteoporosis ஏற்படுவதைத் தடுக்கிறது.


***Rickets:*** சிறுவர்களின் உடலில் போதுமான அளவு கல்சியம், பொஸ்பேற், உயிர்ச்சத்து D இல்லாதபோது எலும்புகள் உறுதியற்று இருக்கின்றன. 6-24 மாதங்கள் வயதுள்ள குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுகின்றன.

***Osteomalacia:*** வயது வந்தவர்களுக்கு ஏற்படுகிறது. எலும்பு உருவாவதில் சிக்கல்கள் ஏற்படுவதால், எலும்பு பலம் இழந்து காணப்படும்.

***Osteoporosis:*** ஏற்கெனவே உருவாகி முதிர்ச்சி அடைந்த எலும்புகளின் திண்மை குறைவதனால் எலும்புகள் பலம் இழக்கின்றன, இலகுவில் முறியும் தன்மை கொண்டிருக்கும்.

(Osteomalacia, Osteoporosis இரண்டும் வெவ்வேறு நோய்கள் ஆகும்.)

உயிர்ச்சத்து D கொழுப்புச் சத்து நிரம்பிய சிறிய மீன் வகைகளான மக்கேறல், ஹெர்ரிங், சாடின், டுனா ஆகியவற்றிலும் மீன் ஈரல் எண்ணெய் வகைகளிலும் உள்ளது. மிகச்சிறிய அளவில் மாட்டீரல், பாற்கட்டி, முட்டையின் மஞ்சட்கரு ஆகியவற்றில் உள்ளது. சில காளான் வகைகள் இவ்விற்றமினைக் கொண்டுள்ளன. பாற்பொருட்கள், பழச் சாறுகள், சீரியல்ஸ் என்னும் உடன் உண்ணக்கூடிய தானிய வகைகளில் உயிர்ச்சத்து D சேர்க்கப்படுகிறது. செயற்கையாகச் சேர்க்கப்படும் போது Fortified with Vitamin D என அழைக்கப்படும். கனடாவில் சட்டப்படி பால், மார்




ஜரின், குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் பால் மா ஆகியவற்றில் உயிர்ச்சத்து D சேர்க்கப்பட வேண்டும்.

எந்த உணவுப்பொருளில் எவ்வளவு உயிர்ச்சத்து D உள்ளது என்னும் விபரங்களை https://www.dietitians.ca/Your-Health/Nutrition-A-Z/Vitamins/Food-Sources-of-Vitamin-D.aspx இணையதளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அனைத்து மனிதர்களும் தமக்குத் தேவையான உயிர்ச்சத்து D யில் ஒரு பகுதியைச் சூரிய ஒளியில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். புற ஊதாக் கதிர்கள் தோலில் படும்போது தோலில் உள்ள 7 dihydrocholesterol என்னும் இரசாயனப் பொருள் previtamin D3 ஆக மாற்றப்படுகிறது. Previtamin D3 மேலும் மாற்றங்களுக்கு உள்ளாகும்போது உயிர்ச்சத்து D கிடைக்கிறது.

தோலில் சூரிய ஒளியின் புற ஊதக்கதிர்கள் விழுவதைப் பாதிப்பவை:

- காலநிலை.
- நாளின் எந்த நேரத்தில் சூரியஒளி படுகிறது.
- எவ்வளவு நேரம் சூரிய ஒளி படுகிறது.
- மேக மூட்டம்.
- Smog என்னும் புகார்.
- தோலில் உள்ள மெலனின் என்னும் நிறமிகள்.
- தோலை செயற்கையாகக் கருக்க வைக்கும் sunscreen என்னும் களிம்புகள்.

வாரத்தில் இரு நாட்கள், காலை பத்து மணிக்கும் பிற்பகல் மூன்று மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில், ஐந்து முதல் முப்பது நிமிடங்களுக்கு முகம், தோள், கால்கள், முதுகு ஆகிய பகுதிகளில் சூரிய ஒளி படும் வகையில் பார்த்துக்கொண்டால் உடல் தனக்குரிய உயிர்ச்சத்து Dயை உற்பத்தி செய்து கொள்கிறது. இந்த நேரங்களில் sunscreen பூசக் கூடாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அளவுக்கு அதிகமாகச் சூரிய ஒளி தோலில் படுவது பற்றிய ஆபத்துகளையும் குறிப்பிட வேண்டும். புற ஊதாக் கதிர்கள் தோலில் புற்றுநோய் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கின்றன. மேலும் அதிக அளவில் புற ஊதாக் கதிர்கள் தோலில் படும்போது தோலைக் காய வைக்கின்றன. இவ்வகையான அபாயங்களைத் தவிர்க்கவே தோலில் sunscreen பூசவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

உலகு முழுவதும் சூரிய ஒளி நிறைந்து காணப்பட்டாலும் மனிதர்களுக்கு உயிர்ச்சத்து D குறைபாடு காணப்படுகிறது. சூரிய ஒளி குறைவான நாடுகளான கனடா, ஐக்கிய அமெரிக்காவின் வடக்குப் பிரதேசங்களில் இக்குறைபாடு கவனிக்கத்தக்க அளவில் உள்ளது.

சூரிய ஒளி நிறைந்த நாடுகளில், மனிதர்கள் அதிக நேரம் வீட்டுக்குள் இருப்பது, தோல் புற்றுநோய் பற்றிய அச்சத்தால் வெளியே செல்லும்போது உடலின் பெரும் பகுதியை ஆடைகளால் மூடிக்கொள்வது, தோலில் sunscreen பூசிக் கொள்வது ஆகிய காரணங்களால் தோல் போதுமான அளவு உயிர்ச்சத்து D யை உற்பத்தி செய்ய முடிவதில்லை.

முதியவர்கள் உயிர்ச்சத்து D குறைபாட்டுக்கு அதிகம் ஆளாகக்கூடும். முதியவர்கள் வெளியே செல்வது குறைவாக இருக்கிறது. அவர்களுடைய தோலுக்கு உயிர்ச்சத்து D யை உற்பத்தி செய்யும் தன்மை குறைவாக உள்ளது. உணவில் இருந்து பெறப்படும் விற்றமினைக் குடல் உறிஞ்சுவது குறைகிறது. சிறுநீரகத்தின் செயல்பாடு குறைவதால் previtamin D, உயிர்ச்சத்து D யாக மாற்றப்படுவது குறைகிறது. 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு உயிர்ச்சத்து D குறைபாடு ஏற்படும் சாத்தியங்கள் கூடுகின்றன. இவற்றைக் கருத்தில்கொண்டு முதியவர்கள் தம் உணவில் உயிர்ச்சத்து D அதிகம் உள்ள உணவுப் பொருட்களை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**உசாத்துணை:**

- Vitamin D (2018) https://ods.od.nih.gov/factsheets/VitaminD-HealthProfessional/
- Vitamin D (2018) https://www.webmd.com/vitamins/ai/ingredientmono-929/vitamin-d
- Vitamin D (2018 ) https://osteoporosis.ca/bone-health-osteoporosis/calcium-and-vitamin-d/vitamin-d/
- Rickets (2018 ) https://www.medicinenet.com/rickets/article.htm#rickets_facts
- Osteomalacia (2018) https://www.healthline.com/health/osteomalacia
- Osteoporosis (2018)https://www.medicinenet.com/osteoporosis/article.htm#what_is_osteoporosis
- Image of sunshine vitamin retrieved on 11th April 2018 from http://thirdagehealth.blogspot.ca/2015/03/vitamin-d-and-sunlight-whats-big-deal.html



ravichandrika@thaiveedu.com

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

**Uthayan Alex Sivasambu** B.Sc. (Hons), M.B.A

Broker

**Ottawa: 613.276.SALE (7253)**

**Toronto: 416.659.SELL (7355)**

alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



# DEBT FREE CREDIT SOLUTION

## Seeking freedom from DEBT?

## We offer Total Debt FREE SOLUTIONS



## Elankeeran .T

*Certified Insolvency Counsellor*

By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.

  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.

- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.

  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

**Head Office:**
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

**Branch Office:**
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

**www.TotalDebtFree.ca**



# TBC Toronto Business College

கணக்கியில் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்

Learning Today Leading Tomorrow



## PC TECHNICIAN COURSE

*Weekend Classes*
*Duration - 40 hours*
*Ample practicals*
*Good for beginners*
*Certificate on completion*
*Commencement May 12th 2018*
*Free Toolkit*
*Fees $ 499*

SECOND CAREER
*Candidates Welcome*

### EARLY CHILDCARE ASSISTANT (ECA)
40 Weeks Diploma
Work as Childcare Assistant , Childcare Worker Etc.
Immediate Job Opportunities

### PERSONAL SUPPORT WORKER (PSW)
28 Weeks Certificate
Work as Support Worker , Care Giver , Personal Attendant , Etc.
Immediate Job Opportunities

### ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks Diploma
Work as Account Payable , Accounts Receivable , Book Keeper Etc.
Many Jobs are available

### COMPUTERIZED ACCOUNTING
26 Weeks Diploma
Work as Account Payable , Accounts Receivable , Book Keeper Etc.
Jobs available in plenty

### FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks Diploma
Work as Food Preparer,Kitchen Helper, Food Service Counter Attendant

## GOVERNMENT GRANT

யார் தகுதி உடையவர்கள் ?

- ★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- ★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
- ★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefit பெற்றவர்கள் அரசாங்க நன்கொடையாக $28000 or more பெறலாம் திருப்பி செலுத்தத் தேவையில்லை

* Certain conditions may apply

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Student Friendly Environment
- Ample Free Parking
- Placement Assistance
- TTC Accessible

☎ 416-291-5155 / 416-500-5300 ☎

4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com t.businesscollege@gmail.com

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# சகபாடிகள் அழுத்தம்

- எஸ். பத்மநாதன் -

இன்றைய உலகில் பலரும் தங்கள் சுயத்தை இழந்து, சொந்தமாக முடிவெடுக்க முடியாமல் தவிக்கிறார்கள். கடந்த காலங்களில் இருந்த தனித்துவம், தலைமைத்துவம் படிப்படியாகக் குறைந்து வருகிறது. அதிகரிக்கும் தொடர்புகள், நட்புகள் காரணமாக மற்றவர்களின் அபிப்பிராயத்தை கேட்டு முடிவெடுப்பதுதான் தற்கால நிதர்சனம். மற்றவர்களது செல்வாக்கு ஒருவரில் புகுந்து விடுவது 'சகபாடிகள் அழுத்தம்' (peer pressure) எனப்படுகிறது. ஒருவரது மனப்பான்மை, பெறுமதிகள், நடத்தைகள் (attitudes, values, behaviours) அனைத்தும் இன்னொருவருக்காக மாறுகின்றன. சகாக்களின் அழுத்தம் இன்றைய உளவியல் பிரச்சினையாகும்.

Peer என்ற லத்தீன் சொல்லானது சமானம் என்ற கருத்தில் வருகிறது. இச்சொல்லைத் தமிழில் சரியிணை, இணைநிலையினர், சமானன், சகா, சகபாடி எனப் பல வார்த்தைகளால் குறிப்படலாம். ஆங்கிலத்தில் same rank, equal, match, mate, comrade, companion எனப்பொருள்படுகிறது. இதனை மேலும் தெளிவுபடுத்தினால் ஒருவர் பத்தாவது வகுப்பில் படித்தார் என்றால் அந்த பாடசாலையில் மட்டுமன்றி வேறொரு பாடசாலையில் உள்ள பத்தாவது வகுப்பு மாணவர்களும் அவரது சகபாடிகள் ஆகின்றனர். பெற்றோர்களை விட இந்த சகபாடிகளே ஒருவர் மீது செல்வாக்குச் செலுத்துபவர்களாவர். மாணவர்கள், ஒன்றாக வேலை செய்பவர்கள், ஒரே வயதினர், ஒரே ஊதியம் பெறுபவர்கள், ஒரே கல்வித்தகைமை உள்ளவர்கள் எல்லோரும் மற்ற சகபாடிகள் போலச் செயல்பட ஆரம்பிக்கிறார்கள். அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள். நிறுவனங்கள் ஆகியவற்றிலும் சகபாடிகள் அழுத்தம் இருக்கிறது.

பாடசாலையில் ஆசிரியர்களுடன் பழகுவது, வகுப்புக்களைக் குழப்புவது, உடைகளணிவது, தலை அலங்காரம் செய்வது, வெளியே செல்வது எல்லாம் சகபாடிகளால் தீர்மானிக்கப்பட்டிருக்கும். சகபாடிகளின் அழுத்தம் பெற்றோர்களால் பிள்ளைகளை சரியாக நெறிப்படுத்த முடியாமைக்கும் காரணமாகிறது. சகாக்கள் குழுவாக இயங்கும்போது 'clique' என்று குறிப்பிடப்படுகிறார்கள்.

1951ல் Solomon Asch என்பவர் 'Asch conformity Experiments' என்னும் ஆய்வுகளை மேற்கொண்டார். இதுபற்றி பல கண்டுபிடிப்புக்களை வெளியிட்டுள்ளார். இது வயது, பால், கலாசார அடிப்படையில் செய்யப்பட்டது. இந்த ஆய்வு இப்போதும் பயன்படுகிறது. இதன்படி சிறுவர்களிடையே சகபாடிகளின் அழுத்தம் நிறையவே இருந்து வருகிறது.

வயது வந்தவர்கள் மத்தியில் தோற்றம், சுவை, உடை, நாகரிகம், எண்ணம், பெறுமானங்கள் (style, taste, appearence, ideology, values) என்பவற்றில் சகாக்களின் செல்வாக்கு நிறையவே உள்ளது. போதைப்பொருள் பாவனை, பாலியல் விடயங்கள் அனைத்திலும்கூட சாகாக்களின் அழுத்தங்களால் ஒரே எண்ணப்பாடுகள் ஏற்படுகின்றன.

நிக்கோடின், மது, போதைப் பொருள் பாவனையில் சகாக்களின் அழுத்தம் மிக அதிகம். 13-14 வயதினர் தொடக்கம் இப்பிரச்சினை எழுகிறது. பாலியல் செயல்பாடுகளிலும் சகாக்களின் அழுத்தம் காரணமாக மாணவர்கள் கூடுதலாக ஈடுபடுகின்றனர். குழுக்களாக சேர்ந்து பாலியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது கண்டறியப்பட்டுள்ளது. பொதுவாக இவ்வாறான நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபடும்போது கல்வியில் நாட்டம் இல்லாது போய் விடுகிறது. போதைப்பொருளுக்கு அடிமையாகும் போது நேர்மறையான எண்ணங்களுக்கு உட்படுகிறார்கள், பாலியல் அழுத்தமும் போதைப் பொருள் பாவனை அழுத்தமும் சேர்ந்து உளச்சோர்வுக்கு கொண்டு செல்கிறது. சகபாடிகள் அழுத்தம் களவு செய்யவும் தூண்டலாம். மிகவும் ஆபத்தான விடயங்களை கூடாது என்று தெரிந்தும்

> சமூக ஊடகங்களான Facebook Instagram, Twitter, Viber, Whatsapp, Youtube போன்ற தொடர்பு ஊடகங்கள் சகபாடிகள் அழுத்தத்தில் மிகுந்த செல்வாக்கு செலுத்துகின்றன. இவற்றின் மூலம் சகாக்களுடன் உடனுக்குடன் தொடர்பு கொள்ள முடியும், பொய்யான தகவல்களைப் பரிமாற முடியும். நம்பவைக்க முடியும், பலரை சம்மதிக்க வைக்க முடியும்.



செய்வார்கள்.

பாடசாலைகளில் மற்ற மாணவர்களை வம்புக்கு இழுத்தல், இம்சை செய்தல், அடாவடித்தனம் ஆகியவை 'bullying' எனப்படும். மாணவர்கள் குழுவாகச் சேர்ந்து மற்றவர்களை அடிப்பார்கள், உதைப்பார்கள், கெட்டவார்த்தைகளை உபயோகிப்பார்கள். பெருமளவு மாணவர்கள் தாங்கள் இவ்வாறான துன்புறுத்தல்களுக்கு உட்பட்டதாக கூறுகிறார்கள். பாதிக்கப்பட்ட மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல அச்சம் கொள்வார்கள், பாடசாலைகளை விட்டு வெளியேறுவார்கள், மனநிலை பாதிக்கப்படுவார்கள்.

உளவியல் ரீதியில் ஆளுமையும், நரம்பியல் கூறுகளும் இவ்விடயத்தில் செல்வாக்கு செலுத்துகின்றன. மூளையின் medial pre-frontal cortex பகுதி இந்த செயல்பாட்டில் முக்கியம் பெறுகிறது.

சமூக ஊடகங்களான Facebook, Instagram, Twitter, Viber, Whatsapp, Youtube போன்ற தொடர்பு ஊடகங்கள் சகபாடிகள் அழுத்தத்தில் மிகுந்த செல்வாக்கு செலுத்துகின்றன. இவற்றின் மூலம் சகாக்களுடன் உடனுக்குடன் தொடர்பு கொள்ள முடியும், பொய்யான தகவல்களைப் பரிமாற முடியும். நம்பவைக்க முடியும், பலரை சம்மதிக்க வைக்க முடியும். இப்பரந்த தொடர்பு மூலம் வீடியோ விளையாட்டுக்களில் சகபாடிகள் பங்கெடுக்கிறார்கள். இன்று, மூன்று பில்லியனுக்கு மேற்பட்டவர்கள் உலகில் இவ்வாறான தொடர்புகளில் உள்ளனர்.

உணவுகளை உட்கொள்வதில் கூட சகபாடிகளின் செல்வாக்கு அதிகமாகும். குழுவாக உணவு அருந்தச் செல்வது இதன் வெளிப்பாடே. மக்டொனால்ட், ரிம் ஹோட்டன்ஸ் போன்ற இடங்களிலும் பிட்சா கடைகளிலும் இவ்வாறான குழுக்களை காணமுடியும்.

தோழர்கள், கூட்டாளிகள், சகாக்கள் என்போர்கள் எல்லோரது வாழ்விலும் பல அழுத்தங்களை பிரயோகிக்கிறார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெற்றோர்களின் பங்களிப்பு மிக முக்கியமாகும். தங்கள் பிள்ளைகளிடம் அவர்களது தொடர்பாடல்கள் பற்றி விளக்க வேண்டும். ஆபத்தான விடயங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதனை கூறல் வேண்டும். பிள்ளைகளின் நண்பர்கள் பற்றியும் அவர்களது தொடர்புகள் பற்றியும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். பிள்ளைகளிடம் தங்கள் கரிசனங்களை கூறவேண்டும். பிள்ளைகள் சுயநம்பிக்கை கொள்ள ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

இதற்காக பல உளநல நிறுவனங்களும் உதவுகின்றன. ஆபத்தான அல்லது தவறான விடயங்களில் சிறுவர்கள் ஈடுபடாது விலகியிருக்கவும், அந்நிலைகளில் விருப்பமின்மையை வெளிப்படுத்தவும் இவர்கள் கற்பிக்கிறார்கள். அதேபோல மாணவர்களும் தங்களுக்கு சகாக்களால் பிரச்சினைகள் ஏற்பட்டால் பெற்றோர்கள் ஆசிரியர்கள் பாடசாலை ஆலோசகர்களிடம் அது பற்றிக் கூறும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கலைஞர் திவ்வியராஜன்(கனடா) 'சகா' என்ற பெயரில் ஒரு திரைப்படம் எடுத்து வெற்றிகரமாக வெளியிட்டார். பல இடங்களில் திரையிடப்பட்டது. இது மூன்று நண்பர்களின் கதையாகும். இவர்கள் ஏனைய மாணவர்களின் வழி நடத்தலால் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றனார். இளைஞர்களின் வன்முறையால் மரணங்கள் ஏற்படும் நிலையை இப்படம் சித்தரிக்கிறது. சகாக்களின் அழுத்தம் பற்றிய திரைப்படம் இதுவாகும்.

'முல்லைத்தீவு சகா' என்ற ஆவணப்படம் கேரளாவில் திரையிடப்பட்டது. சிறிலங்காவின் வடபகுதியை சேர்ந்த சோமீதரன் இதன் இயக்குனராவர். யுத்தத்தால் இழந்த நண்பர்கள் பற்றிய ஆவணப்படம் இதுவாகும்.

இப்போதுள்ள மாணவர்களுக்கு அழுத்தத்திலும் தைரியம் தேவையாகிறது. Ernest Hemingway என்னும் அமெரிக்க எழுத்தாளர் 'Courage is grace under pressure' என்று கூறுகிறார். பிரபல கோல்ப் ஆட்டக்காரர் Tiger Woods 'Under Pressure, you can win with mind' என்று குறிப்பிடுகிறார்.

**உசாத்துணை:**
- https://www.simplypsychology.org/asch-conformity.html
- https://en.wikipedia.org/wiki/Sagaa
- http://ponguthamil.com/shownewscontent.aspx?sectionid=1&contentid=f2850ca1-2e99-465f-9713-d13dd79e1504
- http://www.psypost.org/2013/07/teens-self-consciousness-linked-to-the-medial-prefrontal-cortex-18918
- https://ta.wikipedia.org/wiki/சகா_(திரைப்படம்)



*pathmanathan.s@thaiveedu.com*

# கஞ்சாப் புகையைப் பகைக்காத சமூகம்

- போல் யோசேப் -

## சமூகம் எதிர்கொள்ளவிருக்கும் விளைவுகள்:

முன்னைய இரண்டு கட்டுரைகளும் கடந்த இதழ்களில் வெளிவந்தபோது, வாசக நண்பர்களிடமிருந்து குறிப்பாக பெற்றோர் களிடமிருந்து வந்த கருத்தாடல்களைக் கொண்டு பார்க்கும் போது பேனாவின் கூர்முனைகளுக்கு சமூக வலைத்தளங்க ளையும் கடந்து இன்னும் வலிமை இருக் கிறது என்பதை உணரும்போது உற்சாகம் தான்.

## விழிக்கத்தொடங்கியுள்ள பாடசாலைச் சபை:

சில நாட்களுக்கு முன்பு தான் ரொறன்ரோ பாடசாலைச் சபை விழிக்கத் தொடங்கி யுள்ளது என்பது, அவர்கள் வெளியிட்ட அறிக்கைகளிலிருந்து தெரியவந்துள்ளது. ஆம் வரப்போகும் 150 கஞ்சா விற்பனை நிலையங்களில் பல பாடசாலைகளுக்கு அண்மித்த பகுதிகளில் அமையப் போகி றதாம். கஞ்சா தொடர்பான இவ்வளவு முக்கியமான விடயம் இன்னும் மக்களின் மனங்களில் எட்டவில்லை என்பதே எனது முக்கிய கேள்வி.

## கண்டுகொள்ளாத ஊடகங்கள்:

ஊடகங்களில் அவ்வப்போது ஊறுகாய் போல... ஏதோ குறுஞ்செய்திகள் தொட் டுச் செல்லப்படுகிறது. பத்தோடு பதனொன் றாக இதுவும் ஏதோ ஒரு தகவல்போல கருதப்படுவது மிகவும் வருத்தமளிப்பதாக ஊடக நண்பர் ஒருவர் என்னிடம் சொல் லியது நினைவுக்கு வருகிறது. பல விட யங்களுக்காக போராடும் முற்போக்குவா திகள், சமூக செயற்பாட்டாளர்கள், நலன் விரும்பிகள் இதற்கு எதிராக இன்னும் குரல் எழுப்பாமல் தங்கள் வார்த்தைகளை குரல்வளைப் பெட்டிக்குள்ளே அடைத்து ஆணிகளால் அறைந்துவிட்டது போல மௌனம் காப்பதுதான் இன்னும் விளங்க வில்லை.

## கள்ளச்சந்தையால் வரப்போகும் சிக்கல்:

கஞ்சாவின் கள்ளச்சந்தையை ஒழிப்பதற் காகத்தான் இதுபோன்ற சட்டபூர்வமாக்கல் என்பது முதன்மைக்காரணமாக இருந்தா லும் அதைவிட சில்லறையான கள்ளச் சந்தை வியாபாரம் இன்னும் சூடுபிடிக்கும் என்கிறார்கள் குற்றவியல் நிபுணர்கள், ஏற் கனவே சட்டபூர்வமாக்கப்பட்ட அமெரிக் காவில் இந்த சில்லறை கள்ளச்சந்தையை ஒழிக்கவே முடியவில்லையாம்.

அதென்னவென்றால் 19 வயதிற்கு மேற்பட் டவர்கள்தான் நேரடியாகவும் Online வர்த் தகம் மூலமாகவும் யார் வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ள முடியும். அப்படிப்பெற் றுக்கொண்டு 19 வயதிற்கு குறைந்த வள ரிளம் (Teenage) பருவத்தினருக்கு விற்பனை செய்வது இலகுவாகிவிடும். இதனால் பெரி தும் பாதிக்கப்படப்போவது நம் இளைய தலைமுறையே என்பது மட்டும் உறுதி.

## கஞ்சாப் பூந்தோட்டம்:

கஞ்சா சட்டம் Bill C-45ல் பல விடயங் கள் உள்ளடங்கியிருந்தாலும் தனி நபர் ஒருவர் 30கிராம் காய்ந்த கஞ்சாவை எப் போதும் தன்னுடன் வைத்துக்கொள்ள அனு மதிக்கப்படுகிறது. சில மாகாணங்களில் இன்னும் அதிகமாகவும் வீட்டில் வைத்துக் கொள்ளலாம் என்கிறது இந்த சட்டம். மேலும் தன்னுடைய வீட்டில் ஒவ்வொருவ ரும் நான்கு கஞ்சா செடிகளை வளர்க்க லாம்? என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது வீட்டிலுள்ள சிறுவர்களுக்கும் வளரிளம் பருவத்தாருக்கும் ஒரு பாதுகாப்பற்ற செய லாகும். அதுமட்டுமல்ல புகைக்கும் போது பொது இடங்களில் புகைக்க அனுமதி யில்லை. ஆனால், தங்களின் வீடுகளில் புகைக்கலாம் என்பது பல பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். ஏனென்றால் இதன் மணத்தை நுகரும் போது மற்றவர் களுக்கும் சிறுவர்களுக்கும் உண்டாகும் நேரடியான பாதிப்புகளையும் கடந்து ஆய் வுகள் என்ன சொல்கிறதென்றால் தொடர்ச் சியாக ஒருவர் இந்த மணத்தை நுகரும் போது மூளையில் உண்டாகும் இரசாயண மாற்றங்களால் விரைவில் அருகிலிருப்ப வரையும் அடிமையாகும் வாய்ப்புகள் அதி கம் என்பதுதான் அதிர்ச்சியான விடயம்.



## மருத்துவர்கள் எச்சரித்தும் வென்றது மருயுவானா?

University of Albertaல் மருத்துவக் கார ணங்களுக்காக பலரும் பாவிக்க அனும திக்கப்பட்ட பின்பு கடந்த பத்தாண்டுகளாக தொடர்ச்சியாக நடைபெற்ற ஆய்வுகளின் விபரம் பல பக்கக் குறிப்புகளாக CBC News இணையத்தளத்தில் வெளியிடப்பட் டுள்ளது. அதன்படி கஞ்சா புகைக்கும் பழக்கமுள்ளோரால் வீதி விபத்துக்கள் அத னால் இறப்புக்களும் உண்டாகும். வீட்டுக் குள்ளேயும் வாகனங்களுக்குள்ளேயும் புகைப்பதால் தீவிபத்துகளின் எண்ணிக் கையும் கூடும்.

கஞ்சா புகைப்போரின் குடும்பத்திலுள்ள சிறுவர்கள் 'Child Poisoning' அதாவது சிறு வர்கள் தவறுதலாகவோ அல்லது தெரிந்தோ பயன்படுத்தியதால் Over Dose ஆகி அந்த நச்சுத்தன்மையினால் பலர் மருத்துவம னைகளில் அனுமதிக்கப்பட்டதும், சிலர் இறப்புக்கானதும் அதிகரித்திருந்தாக மேற் படி பல்கலைக்கழக ஆய்வுகளை மேற் கோள்காட்டி CBC இணையத்தளம் வெளி யிட்டுள்ளது.

மேலும் Alberta College of Physicians - அல்பேட்டாவின் குடும்ப மருத்துவர் கழ கம் இது தொடர்பாக மருத்துவர்களுக்கான தனது இதழில் எதிர்மறையான தகவல் களைத் தான் வெளியிட்டுள்ளது. அதாவது மக்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு இது நல்லதல்லை. மருத்துவக் காரணங்களுக் காக கடந்த பல ஆண்டுகளாக பயன்ப டுத்தியோரில் மேற்கொண்ட ஆய்வு மற் றும் புள்ளிவிபரங்களின்படி கஞ்சாவினால் நல்லதைவிட கெடுதலே பலமடங்கு அதி கம் என்பது நிரூபணமாகியுள்ளது என்பதை தெளிவாகத் தெரியப்படுத்தியுள்ளனர்.

அல்பேட்டா பல்கலைக்கழகத்தில் மருத் துவப் பேராசிரியர் டாக்டர் மைக் அலன் கஞ்சாவைப் பற்றி CBCன் இணையத் தளத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 'We would kind of be putting the cart be- fore the Horse if we started to Legalized this without the research'. கஞ்சாவைப் பற்றிய முறையான, தெளிவான, நிறைவான ஆராய்ச்சிகளின்றி இதை சட்டபூர்வமாக் குவது குதிரைக்கு முன்புறமாக வண்டிலைக் கட்டி தள்ளுவது போல என்று குறிப்பிட் டுள்ளார். மேலும் நாட்பட்ட தீவிர வலிக ளில் ஆறுமணிநேரம் தான் வலி நிவார ணியாகச் செயற்படும். பிறகு மீண்டும் வலி பழையபடி தொடங்கிவிடும். இப்படி தொடர்ச்சியாக மருத்துவரீதியாக எடுக்கும் போது அதற்கு அடிமையாகி பின்பு இரத்த அழுத்தம் குறைவடைதல், இதயப்பட ப டப்பு, மூளைக்கு செல்லும் இரத்தோட்டம் குறைவடைவதால் ஓட்சிசன் தடைப்படுதல், தலைசுற்றல் மயக்கம், மேலும் மனரீதியான மாயத்தோற்றங்கள், பிரம்மை, தனிமைப் படுத்தப்படுவது வழக்கமான செயல்பாடு களில் வெறுப்பு ஏற்படுதல், தானாக சிரித் தல், யாரோ பேசுவது போன்ற உணர்வு, சமூகத்தைப் புரிந்து கொள்வதில் சிக்கல், கடைசியில் பிளவுபட்ட மனநோய் என்ற (Schizophrenia) மனப்பித்து நோய்க்கு ஆளாகும்போது குணப்படுத்துவதில் சிக் கல் ஏற்படலாம்.

மேலும் பல ஆய்வுளின் முடிவாக டாக்டர் அலன் குறிப்பிட்டது போல கஞ்சாவினால் நன்மைகளை விட தீமைகள் தான் அதிகம் என்பது அவரது வாதம்.

## வாய்ப் புற்று நோயும் வரலாம்:

வழக்கமாக சிகரெட் புகையிலை புகைப் பவர்களுக்கு வாயில் அல்லது உதடுக ளிலுண்டாகும் புற்றுநோய் போல கஞ்சா புகைப்பவர்களுக்கும் புகையினாலும் அதி லிருந்து சூடான தன்மை (Heat Radia- tion) வெளிவருவதால் புற்று நோய்க்கான வாய்ப்புகள் அதிகமாகும்.

கஞ்சாவை கர்ப்பிணித் தாய்மார்கள் புகைக் கும் போது, அல்லது அவர்களுக்கு அரு கிலுள்ளவர்கள் புகைக்கும் போதும் உண் டாகும் எதிர்வினைகளால் கருவிலுள்ள சிசு வும் அதன் மனவளர்ச்சியும் பாதிப்படை- கிறது என்பதுடன் கஞ்சாவின் இரசாயணம் தொப்புள் கொடியினூடே கடந்து செல்வ தும் ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப் பட்டுள்ளது.

## பாலுணர்வு பாதிக்குமா?

மனிதர்களில் மட்டுமல்ல விலங்குகளில் நேரடியாக மேற்கொண்ட ஆய்வுகளில் கஞ் சாவினால் அவைகளில் பாலியல் உணர் வுகள் குறைந்து காணப்பட்டதாகவும் அது தொடர்பான ஆர்வம் குறைந்துள்ளதாகவும் கண்டறியப்பட்டதோடு கலங்களிலுள்ள மரபணுக்களிலும் சிறுமாற்றங்கள் ஏற்படு வதும் சில ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

19 வயது நிறைந்தவர்கள் எவரும் பொழுது போக்கிற்காக இதைப் புகைக்கலாம் என் பது தான் யூலை 1 முதல் வரப்போகின்ற சுதந்திரம். இதற்கு பழக்கமான அல்லது அடிமையாகிப்போன ஒருவர் வெளிநாடு ஒன்றிற்கு பயணம் செய்யும் போது இதை எடுத்துச் செல்லமுடியாது. பெரும்பாலான நாடுகளில் இது போன்ற போதைப்பொருட் களை எடுத்துச் செல்வது பயங்கரமான குற்றச்செயலாகும். சில நாடுகளில் சிறைத் தண்டனை, ஆயுள்தண்டனை ஏன் மரண தண்டனை கூட உண்டு.

## உமிழ்நீர் பரிசோதனையில் நீங்களும் மாட்டிக்கொள்ள வாய்ப்புண்டு?

கடந்த ஆண்டு டிசம்பர் 26ல் CTV News செய்திக்குறிப்பில் வெளியான சில தக வல்களையும் வாசகர்களின் கவனத்திற் குத் தருகிறேன். (கஞ்சாவினை புகைத்து விட்டு வாகனம் செலுத்துவதால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றி கடந்த கட்டுரைக-

தொடர்தல் 18ம் பக்கம்


Monsoon Journal
Montage Awards
2018
A Celebration of Ontario's
South Asian Heritage Month
& The 12th Anniversary
of Monsoon Journal
Monsoon Journal
Presents
Montage Awards 2018
Sunday, May 6, 2018
from 2 p.m. to 6 p.m.
Venue:
Civic Centre, Scarborough
We welcome Sponsors & Volunteers
Thank you for the support by advertisers,
readers and well-wishers since 2006.
Please e-mail:
editor4mj@gmail.com
or call 416-358- 3235


COMMITTED TO EXCELLENCE
Call me now to get your HOME SOLD 416-725-7284
FOR SALE $448,888
Toronto - Neilson / Mclevin Ave
FOR SALE $615,324
Whitby
FOR SALE $638,000
Toronto
FOR SALE $675,800
Ajax - Church / Delaney
FOR SALE $698,888
Stouffville - Highway 48 / Millard
FOR SALE $749,900
Ajax - Rossland / Westney
FOR SALE $757,900
Oshawa - Rossland / Thornton
FOR SALE $764,900
Toronto - Bellamy / Lawrence
Century 21
Percy fulton Ltd. Borkerage
Hall of Fame
1999-2017
Ravi Kana
Broker
Cell 416.725.7284
ravikana@trebnet.com
www.ravikana.com
2911 Kennedy Rd. Toronto, ON M1V 1S8 Office 416.298.8200


விசேட சலுகை விலையில்
UNLIMITED
INTERNET
TV - HOME PHONE
SAVE UP TO $1350
SMART
HOME
MONITORING
தமிழில் உரையாட அழையுங்கள்
சுந்தர் சின்னத்தம்பி
Rogers Local Area Advisor
416.908.6845
puvanendran.sinnatha@rci.rogers.com
ROGERS™

# இலவச Wi-Fi

**- ஸ்ரீராகவன் -**

இவைஃபை(Wi-Fi) எனும் சொற்பதம் பற்றிப் பாமர மக்களும் இன்று உலகில் அறிந்துள்ளனர் என்பதே தற்போதைய உலகியல் உண்மை என்பதனை எவரும் மறுக்கார். Wi-Fi என்பது கம்பியில்லாத் தொடர்பு வசதிகொண்ட கருவியின் வணிகக் குறியீடாகும். குறிப்பாக, உள்ளிடத்துக்கான கம்பியில்லா மின்காந்தத்தொடர்பு வலைக்கான IEEE 802.11 எனும் சீர்தர அடிப்படையில் இயங்கும் கருவிகளுக்காக உலகளாவிய Wi-Fi Alliance எனும் நிறுவனம் வழங்கும் சான்றிதழும் அதற்கான வணிகக் குறியீடுமாகும். IEEE 802.11 (Institute of Electrical and Electronics Engineers) என்பது, அந்நிறுவனத்தின் சீர்தட அறுதியிடல் குழுவினரால் வரையறுக்கப்பட்ட கம்பியில்லா உள்ளிடத்தொடர்பு வலைப் பயன்பாட்டு முறையாகும். Wireless and Local Area Network - WLAN ஆனால் IEEE 802.11 எனும் சீர்தரத்துக்கு இணங்கச் செயற்படும் எல்லாக் கருவிகளும் Wi-Fi சான்றிதழ் பெற்றதல்ல எனும் பேருண்மையினை இச்சமயத்தில் நன்கு நினைவில் நிறுத்திக்கொள்ளுதல் வேண்டும். இங்கேதான் இவ் ஆக்கத்துக்கான காரணமும் ஒழிந்துள்ளது.

மிகப் பெரும்பாலான; தற்போது புழக்கத்திலுள்ள கணினிகளும், மடிக்கணினிகளும், அலைபேசிகளும், அச்சியந்திரங்களும் மற்றும் கணினித் துணைக்கருவிகளும் இவ் Wi-Fi திறன் பெற்றதாகவே வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ் Wi-Fi இணைப்பினூடாக, Wi-Fin அணுக்க எல்லைக்குள் இணையத்தினைப் பெற்றுக்கொள்ள முடிவதானது மிகச்சிறப்பானதொன்றே. சிலவேளைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட Wi-Fi இணைப்புகளைப் பெறக்கூடிய அணுக்க எல்லைகள் இனங்காணப்படலாம். இவ்வேளையில் இவ் எல்லையானது Hotspot என அழைக்கப்படலாம். இப்பரப்பு வீச்செல்லையானது ஒரு சிறிய அறையிலிருந்து ஒரு சில சதுரமைல்கள் வரை இருக்கக்கூடும். இக் Hotspot அடங்கலாக இலவச Wi-Fi வசதிகளை உலகெங்கும் தற்போது அரச, மற்றும் தனியார் நிறுவனங்கள் பொது மக்களின் நன்மை கருதி வழங்கி வருகின்றன. ஆனால் அபாயம் என்னவெனில் சரியான பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றாமல் இயங்கும் இவ்வகை இணைப்புக்களினூடாக இணையத்தினைப் பயன்படுத்துவோரின் வங்கிக் கணக்கு, கடவுச்சொல் (Password)மற்றும் தனிப்பட்ட / அந்தரங்கப் புகைப்படங்கள் போன்ற தனிப்பட்ட தகவல்கள் இலகுவாகத் திருடப்படலாமென்பதேயாகும். தற்போது அதிகரித்து வரும் இணையப் பயன்பாட்டின் காரணமாக இங்கு கனடாவினைப் பொறுத்தவரையில் ரயில் மற்றும் விமான, பொதுப் போக்குவரத்துப் பேருந்துகளிற்கூட இலவச Wi-Fi வசதி விரிவாக்கம் பெற்றுள்ளது. ஏனைய நாடுகளிலும் இதே நிலைமையே காணப்படுகின்றது. வளர்முக நாடுகளும் இந்நிலைமைக்கே தங்களை வேகமாகக்கட்டமைத்து வருகின்றன. இந்நிலையில் பெரும்பாலான Wi-Fi இணைப்புக்களை இயக்கப் பயன்படும் தொழிநுட்பமான WPAZ இலுள்ள குறைபாடுகளைப் பயன்படுத்தி, இணையத் திருடர்கள் அந்த இணைப்புக்களின் வாயிலாக, இணையத்தினை உயோகிப்போர் என்ன செய்கின்றார்கள்; அவர்களது தனிப்பட்ட தரவுகள், Debit / Credit அட்டை விபரங்கள் போன்ற இன்னோரன்ன விபரங்களைத் திருடக்கூடியதாயுள்ளது அதிர்ச்சிகரமான உண்மை.

முன்னதாக, பெல்ஜியத்தைச் சேர்ந்த கணினி மற்றும் இணையப் பாதுகாப்பு ஆராய்ச்சியாளர் மாத்திவன்ஹோப் என்பார் Wi-Fi இணைப்புள்ள அனைத்துக் கருவிகளுமே இப்பாதுகாப்புக் குறைபாட்டால் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளதாகத் தனது ஆய்வினூடாகக் கண்டறிந்து எச்சரிக்கை விடுத்ததன் பின்னராகவே தற்போது இது குறித்து அமெரிக்கா, இந்தியா உட்பட உலகின் சக்திமிகு நாடுகள் அனைத்தும் மக்களுக்கு உலகளாவிய ரீதியில் எச்சரிக்கை விடுக்கத் தொடங்கியுள்ளன. இது குறித்து மேலும் தகவல் அளித்துள்ள வன்ஹோப் அவர்கள், தனது ஆராய்ச்சி முடிவு Android, Linux, Apple, Windows உள்ளிட்ட பெரும்பாலான இயங்குதளங்கள் ஏதோ ஒரு வகையில் இவ் இணையத் தாக்குதலுக்கு உள்ளாவதனையும் கண்டறிந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். அதாவது ஒரு குறிப்பிட்ட Wi-Fi இணைப்பின் எல்லைக்குட்பட்ட பகுதியிலிருந்து அதைப் பயன்படுத்துபவரோ அல்லது பயன்படுத்தாதவரோ 4 Way-Hand Shake எனும் பாதுகபாப்பு வழிமுறையிலுள்ள குறைபாட்டினைப் பயன்படுத்தி, Crack எனும் முறையினூடாக அந்த Wi-Fi இணைப்பைப் பயன்படுத்தும் அனைவரின் தனிப்பட்ட தகவல்களையும் காண்பதோடு அதில் பதியப்பட்டுள்ள தகவல்களினை மாற்றம் செய்வதற்கான வாய்ப்பும் உள்ளதாகவும் கூறுகின்றார். இந்நடைமுறையானது 'Hotspot' எனும் அணுக்க எல்லையில் உச்சபட்ச சாத்தியமெனவும் கூறுகின்றார். ஏனெனில் Hotspotல் ஓர் கம்பியில்லா வலையமைப்பானது (Wireless Network)அவ் எல்லைக்குள் உள்ள எவருக்கும் இலவசமாகப் பெறக்கூடியதாகவுள்ளதனால் இவ்வலையமைப்பில் இணைந்துகொள்ள எவ்வித கடவுச் சொல்லையோ அல்லது வலையமைப்புத் திறவுகோலையோ (Network Key)கொடுக்க வேண்டியதில்லை. இந்நிலைமையில் இவ் Wi-Fi இணைப்பானது ஓர் பாதுகாப்பற்ற (Un secured) வலையமைப்பாக மாறுகின்றது. இவ்வாறான பாதுகாப்பற்ற வலையமைப்பினூடாக தகவல்கள் திருடப்படுதலையே




தொழிநுட்பவல்லுனர்கள் Main in the middle attacks என்பர். அதாவது எமது மின்னணுச் சாதனமான கணினித்திருடர்களுக்கும் நாம் அணுக எத்தனிக்கும் இணையத்துக்கும் இடையில் அகப்படலாகும்.

இதுதவிர Malware எனும் கணினித் தரவுதிருட்டு மென்பொருளூடாகவும் கணினித் திருடர்கள் எமது தகவல்களைப் பெறலாம். இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் இவ் Malware ஊடாக எமது மின்னணுச் சாதனத்திலுள்ள Cameraஇனையோ அல்லது Microphone இனையோ கூட நாமறியாது இயங்கச் செய்வதனூடாக எமது நடவடிக்கைகள் கண்காணிக்கப்படலாம் அல்லது ஒட்டுக்கேட்கப்படலாம். இதனையே கணினி மொழியில் 'Eavesdrop' என்பர். அதாவது வீட்டுத் தாழ்வாரத்தில் (Eaves) நின்று உள்ளே நடக்கும் உரையாடலை ஒட்டுக்கேட்பதற்கு ஒப்பானதாகையால் இப்பெயரால் அழைக்கப்படலாயிற்று. மேலும் Wi-Fi sniffing எனும் முறையூடாக எமது Wi-Fi network traffic ஆனது முற்றுமுழுதாக அலசி ஆராயப்பட்டு, தேவையான / உபயோகமான தகவல்கள் அதிலிருந்து கணினித் திருடர்களால் பின்னர் சாகவா சமாகப் பிரித்தெடுக்கப்பட்டு அவர்களுக்கேற்ற விதத்தில் பயன்படுத்தவும்படலாம்.

எனவே, மேற்போந்த சில சங்கடங்களுக்கும் சிக்கல்களுக்கும் தீர்வு காணும் ஒரு முன்மாதிரியாக அண்மையில் லைஃபை (Li-Fi-àLight Fidelity - ஒளிமெய்நிலை எனும் Wi-Fi போன்ற கைபேசி வலைப்பின்னல்களுக்கான ஒரு புதிய வணிகக்குறியீடானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது மனிதனின் கண்ணுக்குப்புலப்படும் ஒளியின் வீச்சைப் பயன்படுத்திச் செயற்படும் கம்பியில்லா வலைத் தொடர்புத் தொழிநுட்பமாகும். இம்முறையானது Wi-Fi முறையினை விட 100 மடங்கு வேகமாகச் செயற்படும் திறன் கொண்டதுடன் Wi-Fi இணைப்பிலுள்ள பல பாதுகாப்புத் தொடர்பிலுள்ள குறைபாடுகளை ஒரளவிற்கேனும் சீர்செய்யும் தொழிநுட்ப அம்சங்களையும் தன்னகத்தே கொண்டது. இக்கண்டுபிடிப்பினால் 2022ம் ஆண்டுக்குள் பல துறைகள் விரிவடைந்து 11,300 கோடி டாலர்கள் வணிகப்பொருளாதார முன்னேற்றம் உலகளாவிய ரீதியில் ஏற்படலாமென எதிர்வுகூறப்படுகின்றது. ஆனால் கூர்ந்து கவனிக்க வேண்டியது என்னவெனில் இவ் Li-Fi தொழினுட்பமும் ஒரு முன்மாதிரி முயற்சியேயன்றி இதனையும் 100% பாதுகாப்பானது என அடித்துச்சொல்ல எந்தவோர் உத்தரவாதமும் இதுவரை இல்லையென்பதே.

இது இவ்வாறிருக்க, அமெரிக்காவின் பிரபல மென்பொருள் மற்றும் இணையப் பாதுகாப்பு நிறுவனமான Symantec ஆனது வெளியிட்டுள்ள ஓர் ஆய்வின்படி இலவச Wi-Fiஇனைப் பயன்படுத்தும் மில்லியன் கணக்கான அமெரிக்கர்கள், தமது தனிப்பட்ட தகவல்கள் திருடப்படக்கூடிய ஆபத்திலிருப்பதனை உணரவில்லை என அறிய முடிகின்றது. 1025 பேரிடம் நடத்தப்பட்ட Online கணக்கெடுப்பின்பிரகாரம் 87% ஆனோர் விமானநிலையத்திலோ, ஹோட்

தொடர்தல் 18ம் பக்கம்



# இலவச Wi-Fi...

17ம் பக்கத் தொடர்ச்சி...

டலிலோ அல்லது தேனீர் மற்றும் உணவு விடுதிகளிலோ கிடைக்கக்கூடிய உடனடி இலவச Wi-Fi சேவையின் ஊடாக எவ்வித் தயக்கமுமின்றிப் பொது இணையப்பயன் பாட்டினை மேற்கொண்டுள்ளமை தெளிவா கியது. இது நிலைமையின் விபரீதத்தை வாசகர்களுக்கு இந்நிலையில் ஓரளவிற் கேனும் புரிய வைத்திருக்கக்கூடும். இதில் பரிதாபம் என்னவெனில் 60% க்கும் மேலா-னோர், பொது இணையத்தைப் பயன்ப டுத்தும் போது தமக்குப் பாதிப்பேதும் இல்லை என எண்ணுகின்றனராம். அத்துடன் இவ் ஆய்வு இலவச Wi-Fi இனைப் பயன் படுத்தி மேற்கொள்ளப்படும் உசாவல்க ளையும் பட்டியலிடத் தவறவில்லை. சுமார் 58% ஆனோர் இவ் இலவச இணைப்பி னூடாக Facebook போன்ற சமூக ஊட கங்களுக்குள் நுழைவதாகவும் 56%ஆனோர் தமது தனிப்பட்ட வங்கி / நிதி நிலவரங் களை இணையத்தில் அலசுவதாகவும் 22% ஆனோர் தமது மின்னஞ்சல்களைத் துளாவுவதாயும் மற்றுமொரு 13% ஆனோர் தமது ஆள் அடையாளத்தினை வெளிப்ப டுத்தும் விதமாக இணையத்தினூடாக நடந்து கொள்வதாகவும் கூறுகின்றது. பாவிக்கப்படும் Wi-Fi இணைப்பு பாது காப்பற்றதாயிருக்கும் போது மேற்கூறிய அனைத்துச் செயற்பாடுகளும் ஆபத்தினுள் அமிழ்ந்து கிடக்கக்கூடும் என்பதே இதில் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியது.

இது பற்றித் தொழிநுட்ப வல்லுனர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, "உலகம் முழுவதும் கோடிக்கணக்கானோர் பயன்படுத் தும் Wi-Fi தொழிநுட்பத்தின் அடிப்படை யிலேயே இத்தனை ஆண்டுகாலமாக குறை பாடு இருப்பது எங்கள் துறையிலுள்ள வர்களுக்கே அதிர்ச்சியளிப்பதாயுள்ளது. இயங்குதள சேவை நிறுவனங்கள் உட னடியாக இதற்கான மேம்படுத்தப்பட்ட மென்பொருட்களை விருத்தி செய்து உட னடியாக உலகிற்கு வெளியிட வேண்டியது அவசியம்'' எனக்கூறுகின்றனர்.

திறன்பேசி எனப்படும் Smart Phone பய னாளர்கள் மட்டுமன்றி Wi-Fiல் மட்டுமே செயற்படும் பல்வேறு IOT (Internet of Things)எனப்படும் இணையத்தால் இணைக் கப்பட்டு உபயோகிக்கப்படும் சாதனங்க ளின் பயன்பாடு வெகுவேகமாக அதிக ரித்து வரும் இக்காலத்தில் Wi-Fi இனை அவ்வளவு எளிதாகத் தவிர்த்து விடல் இயலாது என்பதே நடைமுறை யதார்த்தம்.

எனவே கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது Wi-Fi இனைப் பயன்படுத்தும் பயனாளர் கள் கவனத்திற் கொள்ள வேண்டிய 5 முக்கிய விடயங்களினைத் தொழிநுட்ப வல்லுனர்கள் கீழே பட்டியலிடுகின்றனர்:

- இக்குறைபாட்டின் தாக்கம் இலவச / பொது வெளி Wi-Fi மட்டுமன்றி வீடு கள் மற்றும் நிறுவனங்களிலுள்ள Wi-Fi இணைப்புக்களையும் தாக்கும் என் பதனை எப்போதும் நினைவிற் கொள் ளுதல் வேண்டும்.
- Virtual Private Network (VPN) எனும் மெய்நிகர் தனிப்பயன் பாதுகாப்பு இணை யத்தைப் பயன்படுத்துவதன் மூலம் உங் கள் தனிப்பட்ட தகவல்கள் பாதுகாப் பான முறையில் encrypt செய்யப்படுவ தால் அத்தகவல்கள் பாதுகாக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளது. Smart Phoneக ளில் இவ் VPN மென்பொருளைத் தர விறக்கம் செய்து Smart Phoneல் வழங் கப்படும் படிநிலைகளுக்கு அமைய ஒழுகுவதால் இந்நடைமுறை எவர்க்கும் இலகுவானதும் சாத்தியமானதுமாகும்.
- பணப்பரிவர்த்தனையினை online ஊடாக மேற்கொள்ளும் போது கண்டிப்பாக https (hypertext transfer protocol security) உடன் இயங்கும் இணையத்த ளங்களையே பயன்படுத்தவேண்டும்.
- விமான நிலையங்கள்/ பொதுப் போக் குவரத்து சேவைகள், உணவகங்கள், தேனீர்கடைகள் உள்ளிட்ட பொது வெளி யில் உள்ள Wi-Fi இணைப்புக்களினூ டாக இணையத்தினுள் நுழைவதனைக் கண்டிப்பாகத் தவிர்க்கவேண்டும்.
- இயன்றவரையிலும் கம்பியில்லா(wireless)இணைய இணைப்புக்களைப் பார்க் கிலும், கம்பிவழி (wired) இணைப்புக் களை உபயோகித்தல் உத்தமம்.

இலங்கை இந்தியா உட்பட உலகெங் கும் இணையத்தாக்குதல்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் புதுப்புது வழிகளில் அதிகரித்த வண்ணமேயுள்ளன. மேற்கூ றிய நடைமுறைகளைப் பின்பற்றுவது டன், இணைய இணைப்புடைய கருவிகளின் மென்பொருள் பதிப்புக்களினை அடிக் கடி சுய பரிசோதனை செய்து அவற்றின் அண்மைய (latest)பதிப்புக்களினைத் தர விறக்கம் செய்து தகுந்த பாதுகாப்பு வழி முறைகளைப் பின்பற்றுவதே, தற்போதைய நடைமுறையில், நாளுக்கு நாள் வளர்ந்து வரும் இணையத் தாக்குதல்களிலிருந்தும், இணைய மோசடிகளிலிருந்தும் ஓரளவுக் கேனும் தப்பிப்பதற்கான ஒரே வழி.

இத்தருணத்தில், பிரபல Antivirus மென் பொருள் தயாரிப்பு நிறுவனமான 'Norton' இனது தலைமை அதிகாரி David Lee அவர்கள் கூறியதுபோல் "Nothing is free in this World" எனும் வாசகத்தினை, இல வச Wi-Fiனது உபயத்தினை நாடி நிற் கும் இணையப் பயனாளர்கள் ஒருகணமே னும் சிந்திப்பார்களாயின் நன்மை அவர் களுக்கே!


**உசாத்துணை:**

• The risks of public Wi-Fi- https://us.norton.com/internetsecurity-privacy-risks-of-public-wi-fi.html

• Why You Really Need to Stop Using Public Wi-Fi- https://hbr.org/2017/05/why-you-really-need-to-stop-using-public-wi-fi

• Wi-Fi- https://en.wikipedia.org/wiki/Wi-Fi




sriragawan@thaiveedu.com

# கஞ்சாப் புகையை...

14ம் பக்கத் தொடர்ச்சி...

ளிலும் சிலவற்றை விளக்கியிருந்தோன்.)

சாரதிகளிடம் மதுபானத்தை பரிசோதிப்பது போல கஞ்சாவுக்கு இன்னும் அரசால் அங் கீகரிக்கப்பட்ட கருவிகள் இல்லை. அப்படி இருந்தாலும் கஞ்சாவிலுள்ள இரசாயண மான THC(Tetra Hydro Cannabinol)ஐ சரி யான அளவை கண்டு பிடிக்கமுடியாத நிலைதான் உள்ளது. சற்றுச் சரியாகக் கண்டறிய இரத்தப்பரிசோதனை மற்றும் சிறுநீர் பரிசோதனை போன்றவற்றை சாலை யோரங்களில் நின்றபடி செய்ய இயலாது. RCMP இனர் செய்த சில பரிசோதனைக-ளில் ஒரு நபரின் உமிழ்நீரை எடுத்து அவர் கஞ்சா புகைத்திருக்கிறாரா என்பதைக் கண்டறிய முடியும். ஆனால் எந்த அளவு எடுத்துள்ளார் என்பதை துல்லியமாக கண் டறிய முடியாது. வாகனம் செலுத்துவதற்கு தகுதியான நிலையிலுள்ளாரா என்பதைக் கண்டறிய முடியாது என்பதும் சிக்கலான விடயமாகும்.

மற்றும், ஒருவர் புகைக்கும் போது அவரது அருகில் நீங்கள் இருந்து அந்த மணம் உங்களுக்குள்ளே சென்றாலும் உமிழ்நீர் பரிசோனையில் நீங்கள் கஞ்சா எடுத்திள் ளவராகவே கருதப்படுவீர்கள். கியூபெக் மாகாணத்திலும் நீங்கள் வாகனம் செலுத் தும்போது இந்த பரிசோதனையில் தவ றும் பட்சத்தில் உங்களைக் கைது பண் ணுவதோடு மட்டுமல்ல 90 நாட்கள் சாரதி அனுமதிப்பத்திரத்தினை நிறுத்திவைக்க பொலிசாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள் ளது. இதை ஒன்ராறியோவிலும் சில வரை முறைகளோடு செயற்படுத்த ஆலோசனை நடைபெற்று வருகிறதாம்.

மேற்குறிப்பிட்ட இரத்தப்பரிசோதனையில் கஞ்சாவை பாவித்தபிறகு அடுத்த ஓரிரு நாட்களுக்கு பரிசோதனை 'பொசிற்றிவ்' ஆகத்தான் காட்டும் என்பதையும் கரு திக் கொள்ளவேண்டியுள்ளது. இப்படி பல நடை முறைச் சிக்கல்கள் இருப்பதாக CTV News செய்திக்குறிப்பில் காணப்படுகிறது.

செப்ரெம்பர் 2017ல் நடத்திய ஆய்வொன் றில் ஐம்பது வீதமான கனடியர்கள் யூலை 1, 2018க்கு பின்பு ஏதோ ஒருவகையில் கஞ்சாவை எடுத்துப் பார்க்க ஆவலாயுள் ளனராம். எங்கே போய் முடியப்போகிறதோ!

## இளவயது இறப்பு வீதம் அதிகரிக்கலாம்?

அல்பேட்டா மாகாணத்தில் அல்பேட்டா பல்கலைக்கழக காயத்தடுப்புப் பிரிவின் ஆய்வறிக்கையின்படி 2014ம் ஆண்டில் மட்டும் பொதுவான வீதி விபத்து மற்றும் காயங்களால் 2118 பேர் இறந்திருக்கிறார் கள். 63,913 பேர் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டார்கள், 572,653 பேர் விபத்து மற்றும் காயங்களுக்காக அவசர சிகிச்சை பிரிவுக்கு வந்து போயிருக்கிறார்கள். இதில் 85 சதவீதமானவர்கள் 20 முதல் 24 வய துக்குட்பட்டவர்கள் என்பது வேதனையான விடயம். ஆனால் கஞ்சாவினை இந்த ஆண்டு சட்டபூர்வமாக்கிய பின்பு இந்த புள்ளி விபரங்கள் பல மடங்கு அதிகரிக் கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

என்றாலும், ஜனவரி 2018 வெளியான இவர்களின் அறிக்கை அரசுக்கு சில பரிந் துரைகளை செய்துள்ளது. அது கஞ்சா சட்டபூர்வமாவதை தடுக்க அல்ல, மாறாக அதன்பின்பு மக்களுக்கு எவ்வாறான விழிப்புணர்வை ஏற்படுத்துவது, எதிர்மறை விளைவுகளை எப்படிக் குறைக்கலாம் என்று ஆலாசனைகளை சொல்லியிருக்கி றார்கள். அதோடுமட்டுமல்ல, அமெரிக் காவில் சட்டபூர்வமான பின்பு பல மாகா ணங்களில் நடந்த எதிர்மறையான புள்ளி விபரங்களையும் ஆதாரங்களாக முன்வைத் துள்ளனர்.

## மாற்றத்திற்கான அவசரத்தேவை!

கஞ்சா பாவனை தொடர்பான இந்த மூன்று கட்டுரைகளிலும் எத்தனை ஆய்வறிக்கை, ஆராய்ச்சிகளின் முடிவுகள், புள்ளிவிபரங் கள், மருத்துவ ரீதியான பாதிப்புகள், சட் டரீதியான சிக்கல் என்று பல கோணங்க ளில் என்னால் இயன்றவரை தகவல்களைத் தந்திருக்கின்றேன். கற்பனைகளின்றி, பல ரின் அனுபவங்களின் பகிர்தலாய்... பேனா முனைகளின் வெறும் கிறுக்கலாக இல் லாமல் கருப்பு மைகளால் உண்மையை வெண்மையாக்கி நம் வாழும் இளைய தலைமுறையும், வருங்கால சந்ததியும் சறுக்காமல் வழுக்காமல் வாழ கஞ்சாவுக்கு எதிரான முதல் தமிழ் எதிர்ப்புக்குரலாக தாய்வீட்டில் பதிவு செய்கிறேன். குரலை முழுக்கமாக மாற்றி மாற்றத்திற்கான வழி காண்பது இன்றைய அவசரத் தேவை யாகும்.



paul.joseph@thaiveedu.com


## தமிழ் வகுப்பு

வயது 4 முதல் 12 வயது வரையான சிறுவர்களுக்கு தமிழ் கற்றுக்கொடுக்கப்படும். வாரம் 2 வகுப்புகள் நடைபெறும் மாத கட்டணமாக $ 25 மட்டுமே அறவிடப்படும். இலகுவான சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்



அழைக்க வேண்டிய தொலைபேசி

416-347-5006

தமிழ் மக்கள் மத்தியில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனம்

வீடுகள் வியாபார நிலையங்களுக்குத் தேவையான கதவுகள் ஜன்னல்களை

தரமாகவும், மலிவாகவும் அனுபவம் வாய்ந்தவர்களின் கைவண்ணத்திலும் பெற்றுக்கொள்ள



View Tech WINDOWS & DOORS

Tel : 416-367-2721 Fax : 416-913-7176

2721 Markham Road, Unit 34, Scarborough, ON. M1X 1L5

சகல Mortgage தேவைகளுக்கும் தமிழில் உரையாட என்னை அழையுங்கள்



Call Me First and Say "YES" to Get Your Dream Home at a Dream Rate!

For all your Mortgage needs

Purchase, Pre-Approvals, Refinances, Renewals and Switch, Builder Purchase, Home Line Of Credit, Self Employed, New Immigrants, Multi Rental Properties.

**Peter Sober** *Manager, Mobile Mortgage Specialist*
Paragon Sales Award
**Dir: 416-275-3571**
Pager: 1-866-767-5446 | Fax: 905-240-3882
Email: peter.sober@td.com

- 2017 Paragon Sales Award "top 35 in the country"
- 2016 Gold Sales Award
- 2015 Platinum Sales Award
- 2014 Gold Sales Award

*Your Smile Is My Best Return!*



Four Branch Locations to serve you better
Scarborough: 85 Ellesmere Road, Scarborough, ON M1R 4B7
Markham: 5762 Highway 7, Markham, ON L3P 1A8
Pickering: 1822 Whites Road, Pickering, ON L1V 4M1
Brampton: 3978 Cottrelle Blvd, Brampton, ON L6P 2R1


TD Canada Trust

# உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிக் கொள்ளுங்கள்

## நகரின் மத்தியில் அழகிய கொண்டோக்கள்

$799,000

Front & Spadina

$419,900

Bloora & Bathurst

$799,000

Yonge & Sheppard

$649,000

Kings and Strachan

என்னை விற்பனை பிரதிநிதியாக தேர்வு செய்வதன் மூலம் உங்கள் வெள்ளிப்பணத்தை சேமியுங்கள்

**416.556.4881**

*Trusted Realtor between you and your home*



**Need more listings**

LIST NOW & SELL FAST

HOMELIFE
*Independently owned & operated

**HomeLife/Champions** Realty Inc, Brokerage*
Office :416-281-8090
E-mail: raveenvi@gmail.com

RAVEENDRAN VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


BUYING OR SELLING
Residential, Commercial, Land & Investment Properties
FOR SALE
Mccowan/Sheppard $458,000 For Sale Bedrooms:2 Washrooms:2
Mccowan/Ellesmere $498,000 For Sale Bedrooms:2+1 Washrooms:2
N. Ellesmere Rd/ W. Mccowan Rd $529,900 For Sale Bedrooms:2 Washrooms:2
Yonge/South Of Major Mackenzie $538,800 For Sale Bedrooms:2 Washrooms:2
Markham/ Sheppard $585,800 For Sale Bedrooms:3 Washrooms:3
Sheppard /Markham $539,900 For Sale Bedrooms:2 Washrooms:2
Markham / Major Mackenzie $650,000 For Sale Bedrooms:3+1 Washrooms:3
N. Taunton Rd E/ W. Harmony Rd $749,900 For Sale Bedrooms:4 Washrooms:3
Harmony / Taunton $769,900 For Sale Bedrooms:4 Washrooms:4
Church/Delaney $799,000 For Sale Bedrooms:4+2 Washrooms:4
Mccowan / 16th $875,000 For Sale Bedrooms:4 Washrooms:3
Markham Rd/16th Ave $875,000 For Sale Bedrooms:4 Washrooms:3
S.16th / W.Ninth Line $899,000 For Sale Bedrooms:3+1 Washrooms:2
Staines/S Of Steeles $899,900 For Sale Bedrooms:4+1 Washrooms:4
S.Winchester Rd / Simcoe St N $958,888 For Sale Bedrooms:4 Washrooms:4
E.Markham / N.Denison $899,900 For Sale Bedrooms:4+2 Washrooms:4
For Sellers:
Free Market Evaluation Available
Competitive Commission Packages Available
Will pay for Staging & Condition
Will pay the Professional Photographer
Virtual Tour
Color Brochure
Will do open house until house get sold
Will market your home with social medias
For Buyers:
Will find the home in any area within your budget
Get you the lowest mtg. rate
1 Year Home Warranty Available for Limited Time
Preferred pricing on Furniture, Appliance & Electronics through "The Brick" up to 35% off
RE/MAX
NITHY
SATHYAKUMAR
Sales Representative
Dir: 416.728.2454
Email: realtornithy@gmail.com
SATHY
SIVASUBRAMANIAM
Broker
Dir: 416.624.5044
Email: realtorsathy@gmail.com
RE/MAX
Remax Realtron Realty Inc., Brokerage
Independently Owned And Operated
Bus: 416 289-3333
Web: realtorsathy.com

# Marksteeles Medical Imaging

# X-RAY & ULTRASOUND

- Providing X-Ray & Ultrasound Services
- We service on-appointment basis as well as walk-in patients
- Our team consists of experienced radiologist who can interpret images accurately
- Our Cloud-based data storage system is accessible to referring physicians 24/7
- Our location is easily accessible by TTC. We also have plenty of FREE Parking available front of our office
- All service covered by Health Card
- We accept private insurance and refugee card






3341 Markham Road,
Unit B124
Scarborough, ON M1X 0V5
[Blue Building at Markham & Steeles]
Tel: 647-341-0183
Fax: 647-341-0184

## Office Hours:

| | |
|---|---|
| Monday - Wednesday: | 9:00am-6:00pm |
| Thursday and Friday: | 9:00am - 5:00PM |
| Saturday | 9:00am-2:00PM |
| Sunday: | Closed |


*We are part of* PREMIER DIAGNOSTIC NETWORK PDXN pdxn.ca • 1-888-988-7396

## Bellsmere Medical Diagnostic Center

**1920 Ellesmere Road, Suite 311,**
(Ellesmere & Bellamy)
Scarborough, ON. M1H 2V6
Tel: **416.289.2280**
Fax: 416.289.7321

*Our Services*

- X-Ray
- Ultrasound
- Bone Density
- 2D Echo
- Holtor Monitor
- Stress ECG



**OFFICE HOURS:**


| | |
|---|---|
| Mon. to Thurs. | 9am – 7pm |
| Fri . | 9am – 5pm |
| Sat. & Sun. | 9am – 2pm |

## Brimley Medical Diagnostic Center

**2020 Brimley Road,**
(Brimley & Sheppard)
Scarborough, ON. M1S 4R7
Tel: **416.299.7677**
Fax: 416.299.7948

*Our Services*

- X-Ray
- Ultrasound
- Bone Density
- 2D Echo
- Holtor Monitor
- Stress ECG



**OFFICE HOURS:**

| | |
|---|---|
| Mon to Wed: | 9am – 7pm |
| Thurs & Fri: | 9am – 5pm |
| Sat: | 9am – 3pm |





COLLINGWOOD PLACE
By
Bluesky Properties (Pvt.) Ltd. (Sri Lanka)
Div. of Engenius Group of Companies (Canada)



- 10 Stories
- 28 Apartments
- December 2018 Completion

*A stylish collection of 28 Modern two & three bedroom Hotel Style Apartments in COLOMBO 6*


Starting at 19.9 Million SLK
(Apx. $175,000)
Only 14 left

GUARANTEED RENTAL INCOME

For More Information Call
Sameem Mohamed 416 559 1880
Riyaz Rauf 647 283 1966

Be a part of the fastest growing Century 21 Brokerage...

Century 21 Innovative Realty Inc.
INDEPENDENTLY OWNED AND OPERATED Brokerage



Serve more... Earn more... and Keep more...

Many reasons to join Century 21 Innovative Realty?

- Experienced and dedicated Broker of Record
- Six Friendly Managers with many years of experience
- Grand Centurion Office, 4 years in a row
- Top 10 Office in Canada / Chairman's Circle Office
- Three Locations (Scarborough, Ajax and Mississauga)
- Over 250+ Agents and growing...
- Supportive Staff & Multi cultural Environment
- One on One and group training (3 times weekly)
- VIP access to pre-construction condos & new homes
- Land Development & custom home construction advice
- Investment Opportunities to agents
- and More and More...

*within Century21 system

#7 Office in Canada*
#9 Company in Canada*
#15 Office in the World*
3 Locations to Serve you

2250 Markham Road, Unit 3,
Toronto ON M1B 2W4
Tel: 416 298 8383

350 Burnhamthorpe Dr. W. Unit 127
Mississauga, ON L5B 3J1
Tel: 905 270 8100

1995 Salem Road, Unit 11 & 12
Ajax, ON L1T 0J9
Tel: 905 239 8383

REAL ESTATE CLASSES
STARTING FROM FEB 1ST WEEK
CALL 416 298 8383 TO REGISTER

Hiring New & Experienced Agents

# மோசடித் திருட்டுகள்

- செந்தூரன் புனிதவேல் -

திருட்டுகள் பல வகைப்படும். அவற்றில் மோசடித் திருட்டு அல்லது தில்லு முல்லுத் திருட்டு என்பது பொய்யை ஆதாரமாக கொண்டு செய்யும் திருட்டாகும். வருடா-வருடம் பல மில்லியன் டொலர்களைக் கனடியர்கள் இந்த மோசடி திருட்டுகளில் இழந்து வருகிறார்கள். மக்களின் சொத்துகளின் காப்பை உறுதி செய்பவன் என்ற நிலையில் இத்திருட்டுகள் எப்படி இடம் பெறுகின்றன? அவற்றை எப்படித் தவிர்க்கலாம்? என்பதை இங்கு கூறலாம் என எண்ணுகிறேன்.

மோசடித் திருட்டுகளில் ஈடுபடுபவர்கள் வயது வேறுபாடு, இன வேறுபாடு, வருவாய் வேறுபாடு என்ற எவ்வித வேறுபாடும் இல்லாமல் அனைவரையும் குறிவைக்கிறார்கள். பொய்யான அதிர்ஷ்டலாபச் சீட்டு, கணினிக் களவு, போலி மருந்துகள் எனத் திருடும் வழி முறைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள் இத்திருடர்கள். இவர்கள் மாயாசுரன் போல் பல்வேறு தோற்றங்களில் தோன்றியவண்ணமே இருக்கிறார்கள்.

அவர்கள் உங்களைக் குறிவைக்காமல் இருக்கவேண்டுமானால் நீங்கள்தான் அவதானமாக இருக்கவேண்டும்.

### உங்களைக் காப்பது எப்படி?

எப்படி இந்த மோசடிகள் நடைபெறுகிறன என்பதைப் பற்றிய தெளிவான விளக்கம் இருந்தால் அவற்றை தவிர்ப்பது எளிதாக இருக்கும்.

கனடிய மோசடி தவிர்ப்பு மையம் (Canadian Anti Fraud Centre) இயக்கிவரும் www.antifraudcentre.ca எனும் இணையத் தளம் இத்தகவல்களைக் கொண்டுள்ளது.

### பொய்யான அதிர்ஷ்டலாபச் சீட்டு மற்றும் போட்டிகள்:

பெருந் தொகையான கனடியர் ஆச்சரியத்தாலும் மகிழ்ச்சியாலும் ஊக்குவிக்கப் பட்டுப் பெரும் தொகையான பணத்தை அனுப்பி ஏமாறுகிறார்கள்.

### எதனைக் கவனிக்க வேண்டும்?

சீட்டிழுப்பில் சீட்டு வாங்காமல் வெல்ல முடியாது என்பதனை மறக்கலாகாது. நீங்களோ அல்லது உங்களுக்காக வேறு ஒருவரோ சீட்டு வாங்காமல் நீங்கள் வென்றுவிட்டதாக அறிவித்தால் யாரோ 'உங்கள் காதில் பூ வைக்கிறார்கள்' என்றுதானனே அர்த்தம்.

அனேகமான சீட்டிழுப்பு மோசடிகளில் ஈடுபடுவோர் உங்கள் வங்கிக் கணக்கையும் உங்களை அடையாளப்படுத்தும் தகவலையும் பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருப்பார்கள்.

அவர்கள் அரசாங்கத்தால் அனுமதிக்கப் பட்டுள்ள சீட்டிழுப்பு எனக் கூறுவதை நம்பி ஏமாறாதீர்கள். இறுதியில் பெரும் தொகை பெற ஆசைப்பட்டு உள்ளதையும் இழக்க நேரிடும். 'உங்கள் பரிசுத் தொகையை அனுப்புவதற்கான செலவு' என அனுப்பிய பணத்தையும் இழந்தவராவீர்கள்.

இத்தகைய பொய்யான சீட்டிழுப்பில் நீங்கள் வென்றுவிட்டதாகத் தொலைபேசியிலோ அல்லது கணினி மூலமாகவோ அல்லது கைத்தொலைபேசியில் text தகவலாகவோ ஒரு செய்தி வரும். அனேகமான வேளைகளில் இப்பெருந்தொகையை உங்களுக்கு அனுப்புவதற்குச் செலவுகள் உள்ளதாக அறிவிப்பர்.

மோசடிக்காரர்கள் கட்டணம் அல்லது வரிப் பணத்தை அனுப்பக் கேட்பதுடன் தங்களுடைய விசேட தொலைபேசியில் தொடர்புகொள்ள அழைப்பார்கள். இத்தொலைபேசி எண்ணை அழைத்தால் பெரும் தொகை கட்டணத்தை ஒவ்வொரு செக்கனுக்கும் அறவிடுவதுடன் உங்களைத் தொலைபேசியில் நீண்டநேரம் வைத்திருப்பார்கள். பின் வேறு ஒரு எண்ணிற்கு அழைக்கச் சொல்வார்கள்.

### பின்குறிப்பு:

**ஞாபத்தில் இருக்கவேண்டியது:** நீங்கள் சீட்டு வாங்காமல் வெல்லமுடியாது.

**கவனிக்க வேண்டியது:** நீங்கள் அறியாத ஒருவருக்குப் பணம் அனுப்ப வேண்டாம்.

**சிந்திக்க வேண்டியது:** அறியாத எவருக்கும் உங்கள் தகவலைக் கூறவேண்டாம்.

**ஆராய வேண்டியது:** நிபத்தனைகள், கட்டுப்பாடுகளை ஆராயுங்கள். இலவசமாகவோ, மலிவாகவோ வந்தால் மறைமுகச் செலவு இருக்கும் என்பதை உணருங்கள். சில தொலைபேசி இலக்கத்தை அழைத்தாலே பெரும் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும் என்பதை மனதிற் கொள்ளுங்கள்.

•

### கூம்பகத் திட்டம் (பிரமிட் திட்டம்):

பிரமிட் திட்டங்கள் 'சிறு முதலீட்டுடன் பெரும் வருவாயை பெறலாம்' எனக் குறிப்பிட்டே உங்களுக்கு அறிமுகப்படுத்தப்படும். பிரமிட் திட்டங்கள் சட்டத்திற்கு மாறானதும் இடர் நிறைந்தது மட்டுமல்லாமல் பெரும் செலவையும் ஏற்படுத்தலாம்.

### எதனைக் கவனிக்க வேண்டும்:

சராசரி பிரமிட் திட்டத்தில், சந்தேகப்படாத அப்பாவி முதலீட்டாளர்களைப் பெரும் தொகை அங்கத்துவர் கட்டணத்தை செலுத்திச் 'செல்வம் சேர்க்கும் திட்டத்தில்' ஈடுபட அறிவுறுத்துவார்கள். நீங்கள் உங்கள் முதலீட்டை மீளப் பெறுவதற்கு மற்றைய அப்பாவிகளை இணைக்க வேண்டும். பொதுவாகத் தமது உறவினர்களை, நண்பர்களை இதில் சேர்ப்பார்கள். ஆனால், முதலீட்டுப் பணம் மீள்கிடைக்கும் என்பதற்கு ஆதாரம் இருக்காது.

பிரமிட் திட்டங்களைத் திறமாகச் செயற்படுத்தினாலும் சட்டப்படி ஒரு பொருளை விற்று அல்லது சேவையைச் செய்து பணம் பெறுவதிலும், புது முதலீட்டாளர்களைச் சேர்ப்பதனாலேயேயும்தான் பணம் பெற முயல்வர். பிரமிட் திட்டங்கள் பலவும் நீண்டநாள் நிலைத்ததில்லை. பெரும் பாலும் வீழ்ச்சியடையும். கனடாவின் சட்டப்படி பிரமிட் திட்டங்கள் சட்டத்துக்குப் புறம்பானது மட்டுமல்லாமல் அதில் பங்கெடுப்பதும் குற்றமாகும்.

பிரமிட் திட்டத்தைப் போன்று பொன்சி திட்டம் (Ponzi Scheme) எனவும் ஒன்று உள்ளது. இது பிரமிட் திட்டத்தைப் போன்றே செயற்படுவதுடன், இங்கும் புது முதலீட்டாளர்களை ஆரம்பத்தில் அதிக வருமானத்தைக் காட்டி அனைத்தையும் மீள் முதலீடு செய்ய ஊக்குவிப்பார்கள். இதில் புது வாடிக்கையாளர்களைத் தேடத் தேவையிலலை. ஆனால் தமது வருவாயையும் முதலீடு செய்து முழுவதையும் இழப்பார்கள்.

முதலீடு செய்வது தவறல்ல. ஆனால், ஆழமாக ஆராய்ந்து பல நல்ல முதலீட்டு அமைப்புகளைக் கண்டறிந்து, அவற்றில் முதலீடு செய்து பயனடையுங்கள்.

### பின்குறிப்பு:

**ஞாபகத்தில் இருக்க வேண்டியது:** பிரமிட், பொன்சி திட்டங்கள் குடும்ப உறவினர்களால் அல்லது நீங்கள் நம்பும் நண்பர்களால் அறிமுகப்படுதப்பட்டால் அவதானமாக இருங்கள். அவை சட்ட விரோதமானவை என்பது அவர்களுக்கே தெரியாதிருக்கலாம்.

**கவனிக்க வேண்டியது:** கருத்தரங்கு, கூட்டங்கள் போன்றவற்றில் உங்கள் உடன்பாட்டை உடனேயே தெரிவிக்க வேண்டாம்.

**சிந்திக்க வேண்டியது:** என்ன விடயமானாலும் மறுபரிசீலனை செய்து, பலருடைய கருத்துகளைச் சீர்தூக்கிப் பார்த்து முடிவு எடுக்கவேண்டும்.

**ஆராய வேண்டியது:** இன்னும் பல திட்டங்களுடன் ஒப்பிட்டுப்பார்ப்பது.

•

### பணம் மாற்றுவதற்கு விண்ணப்ப மோசடி:

யாரவது தம்மிடமிருக்கும் பணத்தை உங்கள் வங்கிக் கணக்கிற்கு மாற்றி அப்பணத்தை நாட்டைவிட்டு வெளிக்கொண்டு வர முற்பட்டால் மிகவும் அவதானமாக இருங்கள். நீங்கள் அனுப்பிய பணம் ஒரு போதும் திரும்பவும் கைக்குவராது.

இத்தகைய மோசடியை நைஜீரிய மோசடி எனக் குறிப்பிடுவார்கள். 1990களில் இத்தகைய மோசடி பெரிதும் பிரபல்யமாய் இருந்தது. ஆனால் இத்தகைய மோசடி இப்போது உலகின் பல பாகங்களிலும் பரவலாகத் தோன்றியுள்ளது. குறிப்பாக மேற்கு ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் இது பெரிதும் ஊற்றெடுக்கிறது.

இந்த மோசடியில் தபால் மூலமாக அல்லது கணினி மூலமாக பெரும் தொகைப் பணத்தை வெளிநாடுகளுக்கு மாற்றுவதற்கு உதவுமாறு விண்ணப்பமிருக்கும். உங்கள் உதவிக்கு பிரதியுகாரமாக கனிசமான தொகை தருவதாகவும் உங்கள் வங்கிக் கணக்கு பற்றிய தகவல் பற்றியும் விண்ணப்பித்திருப்பார்கள். இதனைத் தொடர்ந்து பல வகையான வரிகள் கட்டணங்களைச் செலுத்துமாறும் உங்கள் தொகையை அனுப்புவதற்கு வேண்டுவார்கள்.

இந்த வலையில் விழுந்தால், நீங்கள் செலுத்திய பணத்தைக்கூட மீளப் பெறமாட்டீர்கள்.

தற்காலத்தில் இத்தகைய மோசடிகளை முற்பண மோசடி (Advance fee fraud) என குறிப்பிடுவார்கள்.

இந்த மோசடியின் இன்னுமொரு பரிமாணமானமாக, வழக்கறிஞர் அல்லது உங்களது காணாமற்போன ஒரு உறவினர் பெரும் சொத்தை உங்களுக்கு விட்டுச் சென்றுள்ளதாகத் தெரிப்பார்கள். இந்த மோசடிக்காரர்கள் நம்பத்தக்க விதத்தில் கதை புனைந்து அப்பணத்தை அனுப்புவதற்காக வங்கித் தகவல்களையும் உங்கள் அடையாள ஆவணங்களையும் கேட்பார்கள். இதை நம்பிய நீங்கள் வரிகள் மற்றும் செய்கூலியாக அவர்கள் கேட்கும் பணத்தை வழங்குவீர்கள். நீங்கள் அப்பணத்தை இழப்பதுடன் உங்கள் அடையாளமும் திருடப்பட்டு தவறாகப் பாவிக்கப்படலாம்.

நீங்கள் கணினி வழியாகப் பொருட்கள் விற்று வாங்குவதில் ஈடுபட்டால் மேலதிகமாக பணம் செலுத்தியுள்ளதாகக் கூறிப் பெருந்தொகைப் பணத்தைப் பெறுவீர்கள். பொருளை வாங்கியவர் தான் தவறுதலாகச் செலுத்திவிட்டதாகக் கூறி மேலதிகப் பணத்தை மீண்டும் தரச்சொல்வார், நீங்கள் அந்தப் பெருந்தொகைப் பணத்தை நாணயத்தவராகத் திருப்பி உடன் அனுப்பினால் அவர் அனுப்பிய பொய்யான காசோலை வங்கியால் ஏற்றுக்கொள்ளமுன் உங்கள் சொந்தப்பணம் சென்றுவிடும். நீங்கள் தலையில் துண்டைப் போட்டுக்கொண்டு இருக்கவேண்டியதுதான்.

### பிற்குறிப்பு:

**ஞாபகத்தில் இருக்கவேண்டியது:** யாராவது தனது பணத்தை அனுப்புவதற்கு உதவி கேட்டால் அது மோசடியாகத்தான் இருக்கும்.

**கவனிக்க வேண்டியது:** ஒரு போதும் பணம் அனுப்ப வேண்டாம் என்பதுடன் உங்கள் கடனட்டைத் தகவல்களை ஒருவருடனும் பகிர்ந்துகொள்ள வேண்டாம்.

**சிந்திக்க வேண்டியது:** நீங்கள் பெற வேண்டிய தொகைக்கும் அதிகமான தொகையில் காசோலை வந்தால் அதனைத் திருப்பி அனுப்பி சரியான தொகையை அனுப்புமாறு குறிப்பிடுங்கள்.

**ஆராய வேண்டியது:** Canadian Antifraud Centre இணைத்தளத்தல் எப்படிப் பண மாற்றத்தில் இழப்பை தவிர்க்கலாம் எனப் பாருங்கள்.

*(தமிழாக்கம்: குமார் புனிதவேல்)*

*தொடரும்...*



senthuran.p@thaiveedu.com

HELP WANTED

A-Z, D-Z சாரதிகள் தேவை

A-Z மற்றும் D-Z சாரதி அனுமதிப்பத்திரமுள்ள

சாரதிகள் தேவை.

தொடர்புகட்கு:

சுபாஷ்: 416 931 0670

# தண்ணீரில் தொடங்குங்கள்

## வீடும் விடியலும் - 143

- வேலா சுப்ரமணியம் -

பனிக்காலத்தில் பட்ட அவஸ்தைகள் முடிந்து மெதுவாக வசந்த காலத்தின் ஊடாக கோடை காலத்தை நோக்கி பயணிக்க ஆரம்பித்து விட்டோம். குறிப்பாக வீட்டுரிமையாளர்கள் இத்தகைய காலநிலையை எதிர்பார்த்துப் பெருத்த அங்கலாய்ப்புடன் காத்திருக்கிறார்கள் என்பதனை home depot, garden centre போன்ற இடங்களில் மக்கள் வெள்ளம் குவிந்திருப்பதில் இருந்து அறியமுடியும். அந்த வகையில் கோடைகாலத்தில் நாம் வீட்டிற்கு செய்யக்கூடிய அல்லது செய்யவேண்டிய பராமரிப்பு அம்சங்கள் பற்றி தொடர்ந்து வரும் சில கட்டுரைகளில் ஆராய்வோம்.

### வாகனத் தரிப்பிடப் பாதையை சுத்தம் செய்தலும் பராமரித்தலும்:
### (Driveway Cleaning & Maintenance)

பொதுவாகக் கூறுவதானால் சுமார் 75%ற்கு மேலானவர்கள் Driveway பராமரிப்பைப் பற்றிச் சிந்திப்பதில்லை. அதில் பலர் அதன் முக்கியத்துவத்தை அறியாமல் இருப்பதே இதற்குக் காரணமாகும். குறிப்பாக கனடாவில் உறைபனியின் கொடுமையில் இருந்து தப்பிக் கொள்வதற்காக எல்லோரும் மிகத் தாராளமாக உப்பு போடுகிறோம். இந்த உப்பு எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதனை நாம் பயணிக்கும் தெருக்களில் உள்ள கிடங்குகள் மூலம் அறிந்து கொள்ள முடியும். அத்தகைய பாதிப்புக்கள் தான் எமது வாகனத் தரிப்பிடப் பாதைகளிலும் போடப் பட்ட உப்பு மெதுவாக அரித்து அரித்து பாரிய பாதிப்புக்களைக் காலப்போக்கிலே ஏற்படுத்துகின்றது.

பொதுவாக 4 விதமான வாகன தரிப்பிடப் பாதைகளைக் காணக்கூடியதாக உள்ளது.

- Asphalt Driveway
- Interlock Driveway
- Concrete Driveway
- Stamped Concrete Driveway

இந்த வகையான ஊர்திப் பாதைகளில் Interlock, Concrete Drivewayகளுக்கு உப்பினைப் பாவிக்கவே கூடாது. அவற்றுக்கு உகந்த சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட Ice Melterஐப் பாவிப்பதுதான் பொருத்தமானது. Costco, Canadian Tire போன்ற இடங்களில் பனிக்காலங்களில் இவற்றினை வாங்கிப் பாவிக்க முடியும். சாதாரண உப்பைவிட சற்று விலை அதிகமாக இருந்தாலும் அதனால் ஏற்படும் பலன் அதிகம் என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

வசந்தகாலத்தினைக் கண்டவுடன் முதலாவதகச் செய்ய வேண்டிய வேலை வாகனத் தரிப்பிடப் பாதையை நன்றாகக் கழுவிவிடுதல். எமது கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் போடப் பட்ட உப்பு அல்லது Ice Melter போன்றவை மேற்பகுதியில் இருந்தும் வெடிப்புகளில் இருந்தும் அரிப்பதைத் தடுப்பதற்கு 'Power Washer' மூலம் நன்றாகக் கழுவுதல் நன்று. பெய்யும் மழைக்குக் கழுவுப்படும் என நினைப்பது தவறானது.

### வாகனத் தரிப்பிடப் பாதைகளை பாதிப்படையச் செய்யும் காரணிகள்:

- உப்பு.
- கூடிக்குறையும் காலநிலை மாற்றம்.
- வாகனங்களில் இருந்து ஒழுகும் Engine oil, Transmission oil, Gasoline etc…
- பராமரிப்பின்மை.







### பராமரிப்பு:

எத்தகைய தரிப்பிடப் பாதைகள்ஆக இருந்தாலும் 2 - 4 வருடங்களுக்கு ஒருமுறை அவற்றினை முறைப்படி புறப்பூச்சு (Seal Coating) செய்ய வேண்டியது மிக அவசியமானது. புதிய Asphalt Driveway ஆக இருந்தால் 3 மாதத்தில் புறப்பூச்சு செய்தல் வேண்டும். பொதுவாகக் காணப்படும் Asphalt Drivewayகளில் காணப்படும் சிறு பள்ளங்களையோ வெடிப்புகளையோ அடைத்துவிட்டு புறப்பூச்சுச் செய்தால் ஊர்திப் பாதைகள் பார்ப்பதற்கு அழகாக இருப்பது மட்டுமன்று அதற்குரிய வாழ்க்கைக்காலமும் அதிகரிக்கும். முதலீடு செய்வது மட்டுமல்ல செய்த முதலீட்டை முறையாக பாதுகாக்காதுவிட்டால் ஏற்படப்போவது 'முதல் நஷ்டம்' என்பதை பலரும் உணர்ந்து கொள்வதில்லை அல்லது அறிந்து கொள்ள முயற்சிப்பதில்லை என்பது துரதிஷ்டவசமானது. (Regular driveway maintenance is needed to prevent cracks, chuckholes, or any type of erosion that may occur. Instead of spending a ton of money on a driveway repair company, learn how to do-it-yourself.)

Asphalt Drivewayகளைப் புறப்பூச்சு செய்வதற்கான புறப்பூச்சுக்களை சாதாரண Home Depot போன்ற கட்டிட நிர்மாணக் கடைகளில் வாங்கி நாங்களே செய்து கொள்ளலாம். யூன் - ஆகஸ்ட் மாதங்களில் வெப்பம் கூடிய காலப்பகுதியில் இவற்றினைச் செய்வது பொருத்தமானது. Concrete, Interlock Drivewayகளை Seal செய்ய உரிய துறைசார் வல்லுனர்களை நாடுதல் சாலச் சிறந்தது. அல்லது அதற்கெனச் சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட மூலப்பொருட்களை உரிய இடங்களில் பெற்று நீங்களே செய்து கொள்ளலாம். குறிப்பாக இத்தகைய மூலப்பொருட்களை Spray பண்ணுவதுதான் சிறந்தது என்பதால் அதற்குரிய உபகரணங்களில் முதலீடு செய்வது சரியானதா என்பதை சிந்தித்துச் செயற்படவும்.

குறிப்பாக அளவுக்கதிகமாக வருடாவருடம் புறப்பூச்சு செய்ய முற்பட்டால் அதனாலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. அதாவது அளவுக்கு அதிகமான புறப்பூச்சில் வெடிப்புக்கள் ஏற்பட்டு வாகனத் தரிப்பிடப் பாதைகளின் அழகு கெட்டுவிடும் என்பதையும் நினைவில் வைத்திருக்கவும். பொதுவாக 2 - 4 வருடத்திற்கு ஒருமுறை புறப்பூச்சு செய்வது போதுமானது என்பதே அத்தகைய மூலப் பொருட்களை உற்பத்தி செய்பவர்களது சிபார்சு ஆகும்.

### புறப்பூச்சு செய்வதால் ஏற்படும் பலாபலன்கள்:

- ஆயுட்காலம் விரிவுபடுத்தப்படும்
- உண்மையான நிறம் பாதுகாக்கப்படும்
- எப்போதும் அழகாக இருக்கும்.
- வாகனத்திலிருந்து சிந்தும் ஒயில் ஒழுக்குகளில் இருந்து பாதுகாக்கும்.
- சுத்தமாக வைத்திருத்தல் மிகச் சுலபம்
- செலவிடும் சிறு தொகையால் நீண்ட காலத்தில் ஏற்படும் பலனின் அளவு மிக அதிகமானது.

Seal coating your asphalt will help ward off the elements and extend the Beauty and Longevity of your Asphalt Driveway!!!

A Smoother Driveway is easier to keep clean!!

Seal your Driveway when it is new , to keep it looking new!

Fill all cracks and holes to prevent water from getting into the foundation or base to prolong decay!

An ounce of prevention is worth a pound of cure...



velasubramaniam@thaiveedu.com

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 416-849-0594 Tel: 416-646-3422***




OUR FREE SERVICES
WHY? REALTOR KATHIR
For Home Owners
✓ Home Staging
✓ Newspaper & Flyer Advertisement
✓ High Resolution Picture & Virtual Tour
✓ Four Page Colour Feature Sheets
✓ Weekends Open House
✓ Guaranteed Weekly Feedback
✓ Social Media Marketing
✓ Full MLS Listing Service
✓ Sale Sign & Direction Signs
✓ Market Evaluation
✓ Radio & Web Tool Advertisement
✓ Professional & Friendly Service
LOW Commission
Over 10 yrs Experience Realtor
Multi Award Winner Since 2006
Excellent Negotiation Skill
Quick Sale with Low Commission
Professional & Friendly Services
Home Sellers' Programme
Home Buyers' Programme
Mortgage Brokers, Lawyers, Inspector Team.
Getting Low Rate Mortgage
SELL WITH KATHIR & GET MAX. PRICE
Buy with Kathir & Get Dream Home
HomeLife/Future Realty Inc., Brokerage *Independently Owned and Operated
O: (905)201-9977 F: (905)201-9229
205-7 Eastvale Dr., Markham,Ont, L3S 4N8
HOMELIFE HIGHER STANDARDS
Kathir Kathirgamanathan B.A,
Real Estate Broker
Dir: 416-230-6462


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
vasuki@vdlaw.ca
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
devadas@vdlaw.ca
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Next to RBC @ Kennedy & Ellesmere
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

# தேன்தமிழ்க் கலையமுது

சித்திரை 24ந் திகதி 2018ல் மொன்றியல் மண்ணில் புலம் பெயர் ஈழத்தமிழர் செறிந்து வாழும் பியர்வொண்ட் (Pierrefonds) பகுதியில் அமைந்திருக்கும் Pierrefonds Comprehensive High Schoolஇல் 9வது ஆண்டாக தேன்தமிழ்க் கலையமுது நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பிரதம விருந்தினராக அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகம் ரொறன்ரோ விரிவுரையாளர் திரு. சின்னையா சிவனேசன் அவர்களும் சிறப்பு விருந்தினராக முன்னாள் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி பாலசுந்தரம் இளையதம்பி அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

32 நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டாலும் பிற்பகல் 3:00 மணிக்குத் தொடங்கிய விழா இரவு 10:30 மணிக்கே இனிது நிறைவேறியது. சின்னஞ் சிறார்களுடன் வந்த பெற்றோரும் மகிழ்வாக வீட்டுக்குச் செல்வதற்கு ஏதுவாக இருந்தது. நிகழ்ச்சிகள் பிந்தித்தான் தொடங்கும், ஆறுதலாகப் போகலாம் என்ற பேச்சுக்கே இனி இடமில்லையென்பதை நிகழ்ச்சிகளைச் சரியான நேரத்தில் ஆரம்பித்ததன் மூலம் பாடசாலை பொறுப்பாளர் திருமதி. யோகவதி இரவீந்திரன் அவர்கள் தெள்ளத்தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்.

இளமழலை, முதுமழலை தொடக்கம் 10ம் வகுப்பு வரையுள்ள மாணவ மாணவியர் தமிழை விருப்புடன் கற்று வருவதைப் பார்த்ததில் 'மெல்லத் தமிழ் இனிவாழும், இந்த மேலையர் நிலத்திலும் தழைத்தினிதோங்கும்' என்று நாமும் இன்புறுவோமாக.

■ ■ ■










## Certificate Programs

- Electrical Exam Prep. Course
- Electrical AutoCAD

**Computer Programing**
C/C++/C#, Java, Python
MySQL & MS SQL
Android App Development

**Accounting**
- QuickBooks
- Sage 50 (Simply)

**Microsoft Office**
Word, Excel, PowerPoint
Outlook, Access

All certificate courses are taught individually and less than 40 hours in duration



## Diploma Programs

**CAD/CAM Technology**
- AutoCAD
- SolidWorks
- Inventor
- MasterCAM
- CNC Programing

Now Accepting International Students

**Automation Technology**
- PLC Programing
- HMI Programing
- VFD Control & Programing
- Industrial Control & Comm.

- Computerized Accounting
- Accounting and Payroll
- Office Administration
- Food Service Worker

Food Handler வகுப்புக்கள் ஒவ்வோர் வாரமும்... (One Day Course)

We provide Job Training/Placement

416-449-2382

**Second Career Program**
Covers tuition, living, transportation and child care expenses upto
**$28,000**

beta College
of Business & Technology
2347 Kennedy Road Suite 301, Toronto ON, M1T 3T8
info@betacollege.ca    www.betacollege.ca

# 20 Year Pay Insurance

# இருபது வருடக் கட்டுப்பணம்!
# வாழ்நாள் முழுவதும் காப்புறுதி!

**இருபது வருடங்களுக்கு மட்டும்
மாதாந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்துங்கள்.
அதன் பின்னர் உங்கள் வாழ்நாள் முழுவதும்
உங்களுக்கு காப்புறுதி இருக்கும்.**

இருபது வருடங்களின் பின். விரும்பினால் காசுப் பெறுமதியை (Cash Value) அல்லது Policy Loan ஐப் பெற்றுக் கொள்ளலாம்.

| Age | 20 | | 25 | | 30 | | 35 | | 40 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 72 | 60 | 82 | 68 | 92 | 84 | 112 | 98 | 131 | 116 |
| 200K | 126 | 108 | 147 | 126 | 172 | 158 | 211 | 185 | 248 | 223 |
| 300K | 188 | 162 | 220 | 188 | 258 | 236 | 317 | 278 | 372 | 334 |



**Thana Manickavasagar** Broker

Cell:416.728.5772 Office:416.519.3896

• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
• Non-Medical Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.8147 80 Nashdene Road, #D218, Scarborough, ON, M1V 5E4



## Dedicated & Trusted
## Real Estate Agent
## with 20 years of experience!

# BUYING
# SELLING
# LEASING

# RESIDENTIAL, COMMERCIAL
# & INVESTMENT PROPERTIES

HOMELIFE HIGHER STANDARDS

HOMELIFE
LANDMARK
Brokerage.
7240 Woodbine Ave, Suite 103
Markham, ON L3R 1A4
Bus: 905 305 1600
nanadarajah@trebnet.com

NADA G. NADARAJAH B.V.Sc
*Real Estate Sales Representative*
*Call me 416 - 616- 8751*

## கிழக்கு ஒளி இணையத்தின் 10வது சித்திரை நிலா

# கலாச்சாரப் பெருவிழா

- எஸ்.கே. குமரகுரு -

கிழக்கு ஒளி இணையம் நடத்திய பத்தாவது, 'சித்திரை நிலா' நிகழ்ச்சி ஏப்ரில் 21ம் நாள் 1685 Finch Ave West ல் உள்ள Wilfrid Catholic School மண்டபத்தில் பல்சுவை நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நடைபெற்றது.

பெண்கள் அகல்விளக்குடன் மேடையை அலங்கரிக்க, இருபதுக்கும் மேற்பட்டோர் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். தொடர்ந்து அக வணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து, கனடிய தேசிய கீதம் என்ற சம்பிரதாய நிகழ்வுகளுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

கலாநிதி க. மதிபாஸ்கர் அவர்கள் தமது தலைமையுரையில்: கேட்டைக்கல்லாற்றைச்



சேர்ந்த அமரர், ராஜேஸ்வரன், திரு. குகன் ஆகியோருடன் நானும் இணைந்து எமது அமைப்பை 2008ம் ஆண்டு உருவாக்கினோம். 2009ம் ஆண்டைத்தவிர தொடர்ச்சியாக சித்திரை நிலாவை நடத்தி வருகின்றோம்.

எமது பாரம்பரியக் கலைகளான நாட்டுக்கூத்து, கோலாட்டம், கும்மி, வசந்தன் போன்றவற்றை கனடிய மண்ணில் அறிமுகப்படுத்தி, அவற்றை எனது தலைமையில், என் வயதுக்கார்கள் பலருடன் இணைந்து மேடையேற்றினோம். கடந்த சில ஆண்டுகளாக இளைய தலை முறையினரை ஈடுபடுத்தி அவர்களது நடிப்புத் திறமையை வெளிக்கொணர்வதில் வெற்றியடைந்துள்ளோம். இதுவரை நாம் வெற்றிகரமாகப் பயணிப்பதற்கு உதவிய அனைவருக்கும் நன்றி என்று கூறி விழாவுக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று தலைமையுரையை நிறைவு செய்தார்.

தொடர்ந்து இணையத்தின் காப்பாளர் திரு தவா.இளையதம்பி அவர்கள் உரையாற்றினார். தாயகத்தில் நடைபெற்ற யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு அனைவரும் உதவவேண்டும். அதன் மூலம் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியும் என்றார். மேலும், முடிந்தவர்கள் சில கிராமங்களைக் கூட தத்தெடுத்து உதவி புரியலாம். ஏனையோர் வாரி வழங்குங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

தோடர்ந்து, நினைவுரை இடம் பெற்றது. திருமதி. த. தங்கமுத்து அவர்கள் கடந்த ஆண்டு இறைபதமடைந்த அமரர் இ. தங்கராஜா, அமரர் சோ.சுரேந்திரன் ஆகியோருக்கு இணையத்தின் சார்பாக நினைவுரையாற்றினார்.

அடுத்து கீர்த்தனை, நடனம், ஓரங்க நாடகம், வாத்திய இசை, நாட்டுக்கூத்து, சிவ தாண்டவம் என்று பல நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

தொடர்ந்து செல்வி அபியுகா தக்கன், செல்வி நிருசா புவனேசராசா, செலவன்கள் அபினாஸ் தக்கன், அபிதன் தக்கன் ஆகியோரின் நடனங்கள் நடைபெற்றன.

சகோதரர்களான செல்விகள் ரித்திக்கா ஜெரிஸ்ரஸ், மாயா ஜெரிஸ்ரஸ் ஆகியோர் 'சிவதாண்டவம்' நடனமாடினர். இந்த இரட்டையர்களின் நடனம் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. ஆவர்கள் தங்கள் திறமையை மீண்டும் நிரூபிக்கத் தவறவில்லை எனலாம்.

அடுத்து பார்வையாளர்களை மிகவம் கவர்ந்த 'புலம்பெயர்ந்த முருங்கைகாய்' ஓரங்க நாடகம் இடம் பெற்றது. நடிகர், கவிஞர், பாடகர் என்ற பன்முக ஆளுமைகளையுடைய மூத்த கலைஞர் 'களப்பூரான் தங்கா கோபாலசிங்கம் அவர்கள் தமது நடிப்பால் சபையோரைக் கட்டிப் போட்டார் என்றால் மிகையாகாது. பார்வையாளர்களின் பலத்த கரகோசத்தைப் பெற்றுக்கொண்ட களப்பூரான், மட்டக்களப்பு பிரதேசத்திலும் சாதி அடக்கு முறை உள்ளது என்பதை, முனியம்மா, யோகம்மா ஆகிய பாத்திரங்களினூடாக நடித்துக்காட்டினார். இந்த இருவது வீட்டு முற்றத்தில் வளரும் குறிப்பாக முனியம்மா வீட்டு முருங்கைகாய்யை பெறுவதற்கோ, செல்லப்பிராணியா முனியம்மா வீட்டு நாயும் போடியார்வீட்டு நாயும் விரும்பி இணைவதற்கு கூட முடியவில்லை ஆனல் புலம் பெயர் தேசங்களுக்காக அனுப்பப்படும் முருங்கைகாய்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து இங்கு வந்து குளிர்சாதனப்பெட்டியில் உறங்குகின்றன என்பதை தனது நடிப்பால் வெளிப்படுத்தினார். நேரக்கட்டுப்பாட்டை கடைப் கடைப்பிடித்திருந்தால் மேலும் சிறப்பாக அமைந்திருக்கும்.

அடுத்து நிகழ்ச்சியின் உச்சமாக 'மாரி', நாட்டுக்கூத்து இடம் பெற்றது. திரு. க. மதிபாஸ்கரன் அவர்கள் பரம்பரை நாட்டுக்கூத்துக் கலைஞர், கனடிய மண்ணில் பதின்மூன்று நாட்டுக்கூத்துக்களை எழுதி, இயக்கி நடித்த பெருமைக்குரியவர். மொத்தம் இருபத்தி மூன்று மேடைகளில் நாட்டுக்கூத்துக்களை மேடையேற்றியுள்ளார்.

இந்த அனுபவக் கலைஞரினால் 'மாரி' நாட்டுக்கூத்து தயாரித்து வழங்கப்பட்டது. ரேணு எனும் அரசன் நீண்டகாலமாக பிள்



ளைகள் கிடைக்காமையால், தன் முடி துறந்து வனாந்தரம் சென்று பிள்ளைவரம் வேண்டி சிவனை நினைத்து கடும்தவம் செய்தான் இதற்கு இரங்கிய சிவபெருமான் கங்கா தேவியையும், ஆதிபராசக்தியின் ஒன்பது சக்திகளில் ஒன்றையும் சேர்த்து, பெண் குழந்தை ஒன்றை ரேணு அரசன் முன் காட்சிப் படுத்தினார். அதே நேரம் அரசனின் மனைவியின் மார்பு இரண்டிலிருந்தும் பால் வழிந்தது பாலூட்டி வளர்த்த குழந்தைக்கு 'ஆதிரை' எனப் பெயர் சூட்டி வளர்த்து வந்தனர். இவளை மக்கள் 'மாரி' என்றும் 'முத்து மாரி' என்னும் தெய்வமாக வழிபடுகின்றனர். ஆதிரை எவ்வாறு மாரியானாள் என்பதை எட்டு பாடசாலை மாணவர்கள் தமது அற்புத நடிப்பாலும், பாட்டாலும் வெளிப்படுத்தினர். ஆவர்களே, செல்விகள் ஏய்லீன் அருள்ராஜ், அனோஜி சிவபாதம், வமித்திரா சிறிநகுலன், அஸ்ரிதா றூபன், அசானி யோசுவா, அபிகேசினி உத்தமன், செல்வன்கள் துஷாளன் மதன், அஜய் சிவபாதம் ஆகியோராவர்.

அவர்கள் வடமோடி, தென்மோடி ஆகிய ஆட்டங்களாலும் சிறந்த குரல் வளத்தாலும் அனைவரையும் மகிழ்வித்தனர். 'மாரி'யில் வில்லனாக வந்த 'காத்த வீரியன்' பாத்திரம் பிரமாதம். இவன் கிருந்தா முனிவரிடம் ஆயிரம் கைகள் இணையும்போது கிடைக்கும் பலத்தையும், விரும்பிய பெண்களை அடைவதற்குமான வரம் பெற்றவன் அவன் ஆதிரையைக் கண்டவுடன் காதல் கொண்டு அவளைத் தொட்டு அடைய முனைகின்றான். இதனைக்கண்ட ஆதிரையின் கணவர் சமதக்கினியார் காத்த வீரனின் இரண்டு கைகளையும் வெட்டியபோதும் இருவருக்கும் இடையே கடும் சண்டை நடைபெறுகின்றது. காத்த வீரியனாக செல்வன் துஷாளன் மதனின் நடிப்பு பிரமாதம். அவர் கண்கள் கோபக்கனலைக் கக்கின. ஆட்டம், பாட்டு யாவும் அற்புதம் பாராட்டுக்கள்.

மத்தளம்: திரு. சரவணபவன் கந்தசாமி, பிற்பாட்டு திரு. தங்கா கோபாலசிங்கம், திருமதி.பரமேஸ்வரி மதிபாஸ்கரன் திருமதி. சுதர்ஷிணி கலிங்கரெத்தினம், திருமதி. துளசி ஹரிப்பிரசாந் ஆகியோர் வழங்கினார். கூத்துக்கான மேடையமைப்பு பிரமாதம். சிறந்த காட்சிகளையுடைய திரைகள் பார்வையாளர்களை வனாந்திரத்துக்கே அழைத்துச் சென்றது. யாவும் ஒப்பனைக் கலைஞர் எஸ்.ஜே.மரியாம்பிள்ளை ஆனந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டது சிறப்பாகும்.

செல்வி.லதுசா சிறிதரன் அவர்கள் செந்தூரா பாடலை கீபோட் மூலம் இசைத்துக் காட்டினார். மேலும் திலக நர்த்தனாலயா ஆசிரியை திருமதி சுமித்திரா பத்மலிங்கம் அவர்களின் மாணவர்கள் செல்விகள் ஆர்த்தி வேணுகுமார், பிரிசா கணேசதாசன் ஆகியோர் 'ஆடலுடன் பாடலைக் கேட்டு' பாடலுக்கு பதம் பிடித்தனர்.

திருமதி ராஜி சண்முகநாதன் அவர்களின் கவிதா நிகழ்வும், கலைஞர் கௌரவமும் பொதி ஏல விற்பனையும் நடைபெற்றது. தொடர்ச்சியாக நிகழ்ச்சிகள் நடைபெற்ற வேளையில் மண்டபத்தின் பின் பகுதியில் ஆடவர்கள் உரையாடலும், மற்றுமொரு நிகழ்ச்சிக்காக ஆண்களை கலைத்துக் கலைத்து நுளைவுச்சீட்டு விற்பனை செய்தமையும் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

திரு. சஞ்ஜீவ் கனகரெட்ணம் அவர்கள் மிகச்சிறப்பாக நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். இரவு உணவைத் தொடர்ந்து செயலாளர். திருமதி. சுதர்ஷினி கலிங்க ரெட்ணம் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.



kumaraguru.sk@thaiveedu.com




FCIR
FRIENDS CANADA INTERNATIONAL RELIEF
altona
custom homes
Presents
MAY
5
@ 5:30pm
luksimi
sivaneswaralingam
pragathi
nivedha
ramalingam
Senthuran
Alagaiya
agni
Music Show
மதவடிக்
கலைஞர்களின்
நாடகம்
வர்ணம்
2018
நமக்காக நாம்
SIR JOHN A MACDONALD COLLEGIATE INSTITUTE
2300 PHARMACY AVE, SCARBOROUGH, ON M1W 1H8
Early Bird
Tickets
$25
www.friendscanada.org | info@friendscanada.org | Tel: 647-640-5570
747 AUTOPARTS
BonaFide
Mortgage Solutions Inc.
Cash Point
The Buck Starts Here!
RE/MAX
COMMUNITY
Realty Inc., Brokerage
IDEAL
DEVELOPMENTS
KAPITAL CARE
MORTGAGE INC.
Luxury Event Decor
416-292-3530
NAVA WILSON LLP
Chef
RAMANAA

# சங்கீதபூஷணம் என். ராஜு மாஸ்டர்

- வே. விவேகானந்தன் -

மலையகத்தில் ஊற்றெடுத்து மீன்பாடும் தேன்நாட்டில் சங்கமித்த இசைப் பேராறு.

கடந்த நூற்றாண்டின் மத்திய காலப் பகுதியில், மலையகத்தின் வடக்கு வாசல் என அழைக்கப்படும் மாத்தளை மாநகரின் மத்தியில், சிறந்தவொரு அறிவாலயமாக ஒளி வீசிக்கொண்டிருந்தது பாக்கிய வித்தியாலயம். அங்கு சங்கீத ஆசிரியராகப் பணியாற்றித் தனது இசை வாழ்க்கையை ஆரம்பித்தார் ராஜு மாஸ்டர்.

அக்காலகட்டத்தில் மாத்தளை நகரிலே சங்கீத மாஸ்டர் என்றல் ராஜு மாஸ்டரை மட்டும் குறிக்கும் பதமாக அது விளங்கியது. அக்காலப்பகுதியில் இலங்கை அரசாங்கம் இசை, நடனம், சித்திரம், ஓவியம் போன்ற நுண்கலைகளை ஒரு பாடமாக பாடசாலைகளில் அறிமுகம் செய்திருக்கவில்லை. அதனால் மேற்படி துறைகளில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் நிரந்தர ஆசிரியர் நியமனம் பெற முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்பட்டது.

வீடு வீடாகச் சென்று இசைஞானம் கொண்ட தனிப்பட்டவர்களின் பிள்ளைகளுக்கு சங்கீதம் படிப்பித்து, அவர்கள் கொடுக்கும் சன்மானத்தைப் பெற்று, வாழ்க்கையை நடத்தும் பரிதாபநிலை இருந்தது. போதிய வருமானம் இன்றி வறுமையில் சிக்கி அவர்களின் வாழ்க்கை அல்லாடிக் கொண்டிருந்தது. ராஜு மாஸ்டர் மாத்தளையில் வாழ்ந்த காலத்தில் பணக்காரனாகவோ, செல்வச் செழிப்பில் மிதந்தவராகவோ வாழவில்லை. ஆனாலும், கர்நாடக சங்கீத ஞானத்திலும் கணீர் என்ற குரல் வளத்திலும் இசைத் திறமையிலும் பெரும் செல்வந்தராக விளங்கினர். மாத்தளை மாவட்டத்தில் அவருக்கு நிகராக எவரும் இருந்ததில்லை.


பாடசாலைகளில் நுண்கலைகள் ஒரு பாடமாக இல்லாத காரணத்தால் மாணவர்களும் நாட்டம் கொள்ளவில்லை. பெற்றோரும் ஆர்வம் கொள்ளவில்லை. மேலும், ராஜு மாஸ்டர் போன்ற இசை ஞானம் மிக்க சங்கீத வித்துவான்களை நன்கு பயன்படுத்தும் அளவிற்கு இசை ஞானமோ, அல்லது அத்துறை பற்றிய போதுமான விளக்கமோ பெரும்பான்மையோர் மத்தியில் காணப்படாமையும் கசப்பான ஒரு உண்மையாகும்.

அதேவேளை, ராஜு மாஸ்டரின் இசை ஞானத்தினையும் திறமையினையும் அடையாளம் கண்ட பலர் அவர் மூலம் பெரும் பயன் பெற்றதோடு, அவரை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தனர். அப்படிப்பட்டவர்களுள் மாத்தளை பாக்கிய வித்தியாலயத்தினை(தற்போதைய பாக்கியம் தேசிய மகளிர் கல்லூரி) ஸ்தாபித்து, நிர்வகித்து வந்த ஸ்ரீமான் எஸ்.எஸ். கந்தசாமி குடும்பம் குறிப்பிடத்தக்கது. இச்சந்தர்ப்பத்தில் கந்தசாமி குடும்பம் பற்றி சிறு குறிப்பைத் தருவது அவசியம் எனத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்திலே சேர்.பொன்.இராமநாதன் ஆண்களுக்காக பரமேஸ்வராக் கல்லூரியையும் பெண்களுக்காக இராமநாதன் கல்லூரியையும் உருவாகியபோது அவருக்கு உறுதுணையாக செயற்பட்டவர் கந்தசாமி அவர்கள். சேர். பொன். இராமநாதன் அவர்களது கருத்துக்களால் கவரப்பட்ட கந்தசாமி, மாத்தளையில் ஆண்களுக்கென தனது பெயரில் கந்தசாமி வித்தியாலயத்தையும், பெண்களுக்கென தன் மனைவி பாக்கியம் பெயரில் பாக்கிய வித்தியாலயத்தையும் உருவாகினர். திருமதி பாக்கியம் கந்தசாமி இராமநாதன் கல்லூரியின் பழைய மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. மகாத்மாகாந்தி இலங்கைக்கு விஜயம் செய்தபோது அவரால் திறந்து வைக்கப்பட்ட பாடசாலை என்ற பெருமையும் இதற்குண்டு.

கர்நாடக இசையியல் ஆர்வம் கொண்ட கந்தசாமி குடும்பம் தன் சுய விருப்பின் பிரகாரம் ராஜு மாஸ்டரை சங்கீத ஆசிரியராக நியமித்து மாணவர்கள் இசை பயில வாய்ப்பளித்தது.

1960களின் ஆரம்பத்தில், மாத்தளை மாநகரம் ஒருபோதும் கண்டிராத மாபெரும் இசை விழா ஒன்றினை கந்தசாமி வித்தியாலய அதிபரின் அனுசரணையுடன் மாத்தளை இந்து மகாசபை வெகு சிறப்பாக நடத்தியது. இந்த இசை விழாவில் ராஜு மாஸ்டரிடம் பத்து வருடங்களுக்கு மேல் கர்நாடக இசை பயின்று அவரது ஆலோசனையின்படி சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று, எம்.எம் தண்டபாணி தேசிகர், வசிரவேலு முதலியார், கும்பகோணம் ராஜமணிகம் பிள்ளை போன்ற இசை மேதைகளிடம் கர்நாடக இசை பயின்று, சங்கீதபூஷணம் பட்டம் பெற்றுத் திரும்பிய, மாத்தளை மாவட்டத்தின் முதலாவது மாணவியாகிய மாதுசிரோன்மணி வேலாயுதர் அவர்களின் இசை அரங்கேற்றம் சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெற்றது.



இவ்விழாவின் போது ராஜு மாஸ்டர் கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டு, பொன்னாடை போர்த்தி, இசையரசு என்ற பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். மேலும், இந்த இசை விழாவினை மெருகூட்ட யாழ்ப்பாணத்திலிருந்து சங்கீதபூஷணம் திலகநாயகம் போல், வயலின் வித்துவான் சித்திவிநாயகம், கொழும்பிலிருந்து இலங்கை வானொலிப் புகழ் மிருதங்க வித்துவான் சண்முகம், முகவீணை வித்துவான் பி.எஸ். ஆறுமுகம்பிள்ளை போன்ற இசைக்கலைஞர்கள் வருகை தந்திருந்தனர். அப்போது தோட்டத்தொழில்துறை அமைச்சராக விளங்கிய கௌரவ சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினர். இந்த இசை விழா மாத்தளையில் ராஜு மாஸ்டரின் இசைப் பணியின் மகத்துவத்தை எடுத்துக்காட்டியது.

ராஜு மாஸ்டர் பணத்தையோ, வருமானத்தையோ எதிர்பார்த்து இசையைப் போதிக்கவில்லை. காலநேரத்தையும் வரையறை செய்வதில்லை. இசையோடு இசையாக வாழ்ந்தவர் ராஜு மாஸ்டர். இசையையே வாழ்வாகக் கொண்டவர். அதனால்தான் அவரிடம் படித்தவர்கள் பல்கலைக்கழகம் வரை காலடி எடுத்துவைக்க முடிந்தது.

மாத்தளையில் வாழ்ந்த காலகட்டத்தில் எங்கள் குடும்பத்தின் இசை ஆசிரியராக மட்டுமின்றி குடும்ப நண்பராகவும் நீண்ட காலம் வாழ்ந்தவர் ராஜு மாஸ்டர். தமிழக கர்நாடக இசைக் கலைஞர்களுள் மதுரை சோமுவின் இசைத் திறமையும், இசை ஆளுமையும் அவரை வெகுவாகக் கவர்ந்திருந்தது என்பதையும் அறிய முடிந்தது.

ராஜு மாஸ்டரின் திருமண வாழ்க்கையுடன் அவரது நிரந்தர வாழ்விடமும் மீன்பாடும் தேன்நாடாக மாறியது. மாத்தளை நகரை விட்டு அவர் நீங்கியபோது இசைப்பிரியர்கள் மத்தியில் பெருங்கவலை குடிகொண்டிருந்த போதிலும், அவரது எதிர்கால வளத்திற்குப் பொருத்தமான இடத்திற்கே போகிறார் என்ற திருப்தி அக்கவலையை சற்றுத் தணித்தது. அவர்கள் எதிர் பார்த்தது போலவே, மாத்தளையில் குடத்துள் விளக்காக இருந்த ராஜு மாஸ்டரின் வாழ்க்கை மலைமேல் வைத்த விளக்காக பிரகாசிக்கத் தொடங்கியது. மட்டக்களப்பு மாநகரில் தாமரைக்கேணி என்ற இடத்தில் வசித்து வந்த அவரை அவ்வூர் மக்களும், அன்போடு ராஜு மாஸ்டர் என்றே அழைத்தனர். கலைவிழா, இசைவிழா, தமிழ்விழா, நூல்வெளியீட்டுவிழா அனைத்திலும் இவரது பிரசன்னம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. உயர்ந்த தோற்றமும், சிவந்த நிறமும், கணீர் என்ற குரலும் சபைகளின் மத்தியில் இவரைத் தனித்துவமாக எடுத்துக்காட்டின.

தன்னலமற்ற இவரது இசைப்பணி மக்களை வெகுவாகக் கவர்ந்தது. மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியில் இசை ஆசிரியராகவும், கர்நாடக இசைக் கலையின் ஆசிரிய ஆலோசகராகக் கல்வித் திணைக்களத்திலும், இசைக்கலையின் பகுதிநேர விரிவுரையாளராக மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் பணியாற்றினார்.

இலங்கை வானொலி தேசியசேவை இசைப் பிரிவில் முதலாம் தரப் பாடகராகத் தெரிவு செய்யப்பட்டு, நீண்ட காலம் இசைக் கச்சேரி செய்து, மக்கள் மனதில் இடம் பெற்றவர். மட்டக்களப்பு தமிழ் வாலிபர் சங்க நிர்வாக உறுப்பினராக இருந்து ஆற்றிய சேவை அளப்பரியதாகும்.

ராஜு மாஸ்டரின் இசைப் பணியையும், சமூக சேவையையும் பாராட்டி பல்வேறு அமைப்புக்களும் சங்கங்களும் அவர் வாழும்போதே கௌரவித்தமையால் அவை பெருமை பெற்றன என்றே கூறமுடியும். மட்டக்களப்பு தமிழ்க் கலா மன்றம் தங்கப்பதக்கம் சூட்டிப் பெருமை கண்டது. கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரியில் நடைபெற்ற பாரதி விழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். 1993ம் ஆண்டு மட்டக்களப்பு பிரதேச தமிழ் சாகித்ய விழாவின் போது 'பிரதேச இசைக்கலைஞர்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது, அதேயாண்டு மட்டக்களப்பு மாவட்டக் கலாலயம் 'இசைக்கலைவாணர்' என்னும் பட்டத்தை வழங்கியது. யாழ்ப்பாணத்தில் இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் கௌரவத்தையும் பெற்றவர். தமிழகத்தில் மணிமேகலைப் பிரசுர நூல் வெளியீட்டு விழாவில் பிரபல பாடகர் கே.ஜே. ஜேசுதாஸ் அவர்களால் 'இசைப்பேரரசு' என்னும் பட்டம் வழங்கி பாராட்டைப் பெற்றார். இவை போன்ற மேலும் பட்டங்களையும் கௌரவங்களையும் பெற்று இசையின் உச்சங்களைத் தொட்டவர்.



ராஜு மாஸ்டரிடம் படித்த மாணவர்கள், அவரோடு இசைப்பயணத்தில் இணைந்து பயணித்தவர்கள், நண்பர்கள், உறவினர்கள் எனப் பலரும் இலங்கையில் மட்டுமின்றி உலகின் பல நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் அனைவரின் உள்ளங்களிலும் அவரது நினைவுகள் நீக்கமற நிறைந்துள்ளன என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.



vivekananthan.v@thaiveedu.com



சக்தி என்றால் காப்புறுதி
காப்புறுதி துறையில் 35 வருட முழுநேர, நெறியான, மகத்தான சேவை
35 வருட முழுநேர நேர்மையான சேவை
• சகல காப்புறுதி நிறுவனங்களின் முழுநேர சேவை
• 11,000 க்கும் மேலான திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
• இதுவரை 370 காப்புறுதி இழப்பீடுகள் ஆயுள் காப்புறுதி, தற்காலிக காப்புறுதி திட்டங்களில் உயிரோடு இருக்கும்போதோ நிரந்தர ஊனமுற்று இருக்கும்போதோ மீளப்பெறும் காப்புறுதி திட்டம் மற்றும் சகல புதிய திட்டங்கள் பற்றிய அறிவுரை பெற அழையுங்கள்.
Super Rates On Super Visa
சக்திவேல்
Email: george14@sympatico.ca
கைத்தொலைபேசி: 416-706-3530 | அலுவலகம்: 905-763-8912
Canada Life
Assumption Life
Manulife
RBC Insurance
BMO Insurance
Desjardins
Unity Life
Sun Life Financial
Industrial Alliance
Empire Life




HOMELIFE
HIGHER STANDARDS
Buy or Sell Your Home call me 24-7
Cell: 416 856 6900
Kathir Subramaniam Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090 kathirhomes@gmail.com




With best compliments from
ஞானம்ஸ் ஸ்ருடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987
Digital Prints from 16"x20" to 40"x60"
• Family Portraits
• Children Portraits
• Business Portraits
• Passport & Citizenship Photos
• Classic Weddings
• Arangetram
• Puberty Ceremony
New Location
Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2
( BRIMLEY & EGLINTON ERA PLAZA NEAR CIBC BANK)
Digitally Redefined




BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml

# கைப்பை

ரொறன்ரோவிலிருந்து கொழும்பு நோக்கிய பயணம். என்னைச் சுமந்து பறந்த ஏயர் கனடா டோஹாவில் தனது பயணத்தை முடித்துக் கொண்டது. ஏயர் லங்காவில் மிகுதிப் பயணத்தைத் தொடர்வதற்காக டோஹா நகரில் 8 மணித்தியாலங்கள் தரிப்பு. டோஹா ஹமாட் சர்வதேச விமான நிலையம் 2014, ஏப்ரல் மாதம் 30ல் திறந்து வைக்கப்பட்டது. மத்திய கிழக்கு நாடுகளில் துபாய் விமான நிலையத்திற்கு அடுத்தான மிகப்பிரமாண்டமான விமான நிலையம் இது. டோஹா நகரில் இந்த விமான நிலையத்தில் தரையிறங்கியது முதற் தடவையாகையால் அதன் நவீனத் தோற்றம் வியப்பை ஏற்படுத்தியது.

மத்திய கிழக்கு நாடுகளில் தங்க ஆபரணங்கள் மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம் என்பது எனது மனைவியின் கணிப்பு. ஆகவே ஊரிலுள்ள உறவினருக்கு ஒரு கைக்கடிகாரம் அங்கு வாங்கி அன்பளிப்புச் செய்யுமாறு அவரால் பணிக்கப்பட்டேன். விலைக்குத் தகுந்தால் போல் கைக்கடிகாரம் வாங்குவதற்காய் கண்கவர் கடைகளில் ஏறி இறங்கி, 150 டொலர்களுக்குக் குறைவான விலையில் தரமான கைக்கடிகாரம் உங்கள் கடைகளில் இருக்கிறதா? என்று கேட்டேன். ஒரு கடையில் அக்கேள்விக்கு எனக்குக் கிடைத்த பதில் "மன்னிக்கவும். இங்கு 1000 அமெரிக்க டொலர்களுக்கு குறைவான விலையில் கைக்கடிகாரங்கள் இல்லை. புலவாட் கடைகளில் தேடிப் பாருங்கள். சில சமயம் கிடைக்கலாம்" என்பது. தூரகிழக்கு நாட்டைச் சேர்ந்த பேரழகி தன் சுட்டுவிரலால் ஒரு திசையைக் காட்டினாள். அத்திசைகளில் அமைந்திருந்த பல கடைகளும் என்னை நிராகாரித்து விட்டன. மிகுந்த பிரயத்தனத்தின் பின் எனக்குப் பொருத்தமான விலையில் கைக்கடிகாரம் ஒன்றை வாங்கிகொண்டேன்.

கனடாவிலிருந்து புறப்படும் பொழுது அங்கு 'அதிவெப்ப எச்சரிக்கை' சுகாதார பிரிவினால் விடப்பட்டிருந்தது. இருப்பினும் விமானத்தில் குளிரூட்டம் அதிகமாக இருக்கும் என்ற காரணத்தால் நீளக்கை சேட் அணிந்திருந்தேன். டோஹா அதிவெப்ப நிலை கொண்ட மத்திய கிழக்கு நாடு என்பதால் விமான நிலையத்திலும் தேகத்திற்கு இதமான வெப்ப நிலை நிலவும் என்ற ஒரு கணிப்பும் இருந்தது. ஆனால் என் கணிப்புக்கு எதிர்மாறாக அங்கு செயற்கைக் குளிரூட்டம் கனடாவின் குளிர் காலநிலையை ஏற்படுத்தியிருந்தது. 14 மணி நேர பிரயாண களைப்பிலிருந்த உடலைக் குளிர் சீண்டியது. அந்தக்குளிரில் மெல்லிய சேட்டுடன் 6 மணி நேரக் காத்திருப்பு சகிக்க முடியாதது என்பதனால் மெல்லிய வசந்த காலத்துக்கான 'ஜக்கற்' ஒன்றை வாங்கலாம் என்ற முயற்சியைத் தொடங்கினேன். பல கடைகளில் பணம் படைத்தவர்களுக்காகத்தான் 'ஜக்கற்றுகள்' விற்கப்பட்டன.

ஹுகோ பொஸ் (Hugo Boss) கடை ஒன்று என் கண்ணில்பட்டது. நேர்த்தியாக வைக்கப்பட்டிருந்த கண்கவர் ஜக்கற் பகுதி என்னை அழைத்தது. ஒரு ஜக்கற்றை கையில் எடுத்து அதன் விலையை முதலில் அவதானிக்காது என் தோற்றத்திற்கு அமைப்பாகவுள்ளதா என்பதை அறிவதற்காக அதை அணிந்து முன்னாலிருந்த கண்ணாடியில் என்னை ரசித்துப் பார்த்தேன்.

'அட, இந்த ஜக்கற்றில் நான் இவ்வளவு கவர்ச்சியாக இருக்கிறேனே. பல வயது குறைந்து ஒரு இளைஞன் போல் தோன்றுகிறேனே' என என்னையே நான் வியந்து கொண்டிருந்த பொழுது என் கண்களில் பிரகாசித்த வியப்பூட்டும் ஒளியை அக்கடையில் விற்பனையாளனாகவிருந்த இலங்கையைச் சேர்ந்த சிங்கள இளைஞன் ஒருவன் கண்டுவிட்டான். உடனே என்னை அணுகி, 'ஆகா... என்ன அழகு, இந்த ஜக்கற்றில் உங்களை எங்கள் உயர் நிர்வாகிகள் பார்த்தால் உங்களையே இந்த ஜக்கற் விளம்பரத்துக்காக 'மொடலாக' அழைப்பார்கள்' என சம்பாசனையைத்தொடங்கினான். அதுவும் உண்மையாகவிருக்கலாம் என எனக்கும் தோன்றியது. ஜக்கற் என்னுடன் ஒட்டிக்கொண்டது. குளிரூட்டத்தால் ஏற்பட்ட குளிர் ஏமாற்றத்துடன் என்னை விட்டுவிட்டு ஒரு கணம் விலகியது. ஜக்கற்றை கழற்ற எனது கைகள் ஒத்துழைக்க மறுத்தன. பல நிமிடங்கள் பல கோணங்களிலும் என்னைப் பார்த்து ரசித்தேன். அவனும் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தான். 'சரி இந்த ஜக்கற்றை நான் வாங்குகிறேன் எனக் கூறி விற்பனை இளைஞனின் கையைக் குலுக்கி பண்டைக்கால மரபுப்படி விற்பனை ஒப்பந்தத்தை நிறைவு செய்தேன். அப்பொழுதுதான் அந்த ஜக்கற் என்னை விட்டு தற்காலிகமாக பிரிவதற்குச் சம்மதித்தது. காசாளரை அணுகி விற்பனையைப் பூர்த்தி செய்வதற்காகக் கடன் அட்டையை நீட்டும் பொழுதுதான் 'இந்த ஜக்கற்றின் விலையை கனடியன் டொலரில் கூறமுடியுமா?' எனக்கேட்டேன். மீண்டும் தூரகிழக்கு மஞ்சள் நிற அழகி, சுடர் விழியாள் முத்துப்பற்களைக் காட்டிக் காந்த சிரிப்புடன் விலை கணிப்பு இயந்திரத்தில் உள்ள பொத்தான்கள் சிலவற்றை பதம் பார்த்து பின் மெல்லிய புன்சிரிப்புடன் 925 கனடியன் டொலர்கள் எனக் கூறி எனது முகத்தில் ஏற்படக் கூடிய மாற்றத்தின் தன்மையை அறிவதற்காக தன் சுடர் விழிகளால் என்னை உற்றுப்பார்த்தாள். என் நிறமொத்த எடுப்பான சிங்கள இளைஞனும் பக்கம் நின்று என்னை நையாண்டியாகப் பார்ப்பதாக என் மனம் என்னைக் கிள்ளியது. இந்த ஜக்கற் தயாரிக்கப்பட்ட நூலில் தங்கம் கலந்துள்ளதோ என எண்ணத் தோன்றியது.




என்னையறியாது எனது கடன் அட்டை என் கையைவிட்டு அப்பெண்ணின் கைகளுக்குத் தாவியது. அவர்கள் இருவரின் பார்வையில் இந்தக் கடன் அட்டையில் இவ்வளவு பணம் பெறமுடியுமா என சந்தேகப்படுவது போல் தோன்றுவதாக எனது மனம் சீண்டியது. ஜக்கற் வாங்குவது ஒரு கௌரவ பிரச்சினையாக உருவெடுத்ததாக நான் நினைத்தேன். அவர்கள் மனதில் என்ன தோன்றியிருக்கும் என்பது எனக்கு தெரியாது. 'பரவாயில்லை... நீங்கள் விற்பனையை நிறைவு செய்யலாம்' எனப் பெருமையுடன் கூறினேன். அவர்கள் இருவர் நினைப்பிலும் என்னைப்பற்றிய கணிப்பு உயர்ந்தது என்பது அவர்களின் உற்சாகத்தில் தெரிந்தது. கடன் அட்டையில் பணமும் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. அதன் பின் அப்பெண், 'சார், வேறு ஏதாவது...?நல்ல சேட் இருக்கிறது பார்க்கிறீர்களா' என கேட்டாள். 'நன்றி' என்ற வார்த்தை மூலம் மறுப்புக் கூறி வெளியேறினேன். அப்பொழுது எனது வீட்டின் அண்மையிலுள்ள 'கொஸ்கோ'வில் 19 டொலர்களுக்கு வாங்கி எனது அறையில் தொங்கி நிற்கும் ஜக்கற்றின் நினைவு வந்தது.

கடையை விட்டு வெளியே வந்ததும் எனது உடமைகள் யாவும் என்னிடம் உள்ளனவா எனச்சரிபார்த்த பொழுது கைக்கடிகாரமும் ஜக்கற்றும் வாங்கிய பரபரப்பில் எனது கைப்பை ஒன்றைத் தவற விட்டு விட்டேன் என்பது தெரிய வந்தது. அந்தக் கைப்பை 2010ம் ஆண்டு டுபாயில் ஒரு கடையில் வீடியோ கமரா வாங்கியதற்காக அன்பளிப்பாக கொடுக்கப்பட்டது. ஒரு வகை நூலால் அதன் வாயை இழுத்து மூடி தோளில் காவிச் செல்லக் கூடிய சௌகரியமான பை. அன்றைய தினம் பெறுமதி வாய்ந்த பொருட்கள் எதுவும் அதில் வைக்கப்படவில்லை. வழமையாக கப்பிரயாணம் செய்யும் பொழுது வசதிக்காக பாஸ்போட், கமரா போன்றவற்றை அதனுள் வைத்திருப்பேன். ஆனால் இன்று அதனுள் இருந்த பிரதான பொருள் எனது பிரயாணப் பொதியின் பூட்டின் சாவி மட்டும்தான். இப்பையை தேடும் முயற்சி தொடங்கியதும் சென்ற கடைகளில் பையின் விபரத்தைக் கூறி, அதை நான் தொலைத்து விட்டேன் யாரும் உங்களிடம் கொடுத்தார்களா? எனக் கேட்டேன். ஒவ்வொரு கடைகளிலும் என்னை மறித்து வைத்து விட்டு பாதுகாப்பு கமரா மூலம் நான் ஒவ்வொரு கடைக்குள்ளும் புகுந்த நேரம் தொட்டு வெளியே வரும் வரையிலான எனது நடவடிக்கைகளை அவதானிப்பதாக கூறினார்கள். நான் அக்கடைகளுக்குள் புகுமுன் அவ்வித பை என்னுடன் இருக்கவில்லை என நான் சென்ற எல்லாக் கடைகளிலும் தீர்மானிக்கப்பட்டது. ஈற்றில் தகவல் நிலையத்தில் முறையிடும்படி அறிவுறுத்தப்பட்டேன். அதன் பிரகாரம் நான் தகவல் நிலையத்தை நோக்கி செல்லும் வழியில் தேடுவாரற்ற நிலையில் எனது கைப்பை வழியில் கிடந்தது. அதைக் கண்டதும் சிறிய நெகிழ்ச்சியுடன் எடுப்பதற்காகக் குனிந்தேன். எங்கிருந்தோ நிறுத்து! என அதிகார தோரணையில் ஒரு குரல் எழும்பியதைக் கேட்டு தலையை நிமிர்த்தி அக்குரல் வந்த திசை நோக்கிப் பார்த்தேன். 5 அடி 10 அங்குலம் உயரம், 180 இறாத்தால் நிறையுடைய ஏதோ ஒரு மத்திய கிழக்கு நாட்டைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் என்னை அணுகினான். அவனது கையில் கைத்துப்பாக்கி போல் தோன்றியது. அதை என்ன நோக்கிப் பிடித்த வண்ணம் வந்தான். ஒரு கணம் என் இதயம் 'போல்ட்டை (Bolt)' ஒலிம்பிக் 100 மீட்டர் போட்டியில் சுலபமாக வெல்லக்கூடிய வேகத்தில் பறந்தது. அவன் என் அண்மையில் வந்ததும் அது ஒரு கைபேசி எனத் தெரிந்தது. அப்பொழுது போல்ட்டுடன் போட்டியில் வெற்றி பெற்றுவிட்டேன் போன்ற மகிழ்ச்சியில் என் இதயத்துடிப்பு அமைதியடைந்தது. அவன் அதிகார தோரணையில், 'யாருடைய கைப்பை?' என வினவினான். சற்றுப் பதற்றத்துடன் என்னுடையது என்றேன். உடனே எனது அடையாளத்தை தீர்மானிப்பதற்காக, 'உனது பாஸ்போட் எங்கே?' எனக் கேட்டான். அதை அவனிடம் கொடுத்தேன். துருவித் துருவி அதன் பக்கங்களைப் பார்வையிட்டான். வேறு சில தனிப்பட்ட கேள்விகளின் பின் பைக்குள் என்ன பொருட்கள் இருக்கின்றன என வினவினான். நான் விபரமாகக் கூறினேன். அவை சரியாக இருக்கின்றனவா எனத் தீர்மானித்தபின் எனது பாஸ்போட்டில் புகைப்படம் அமைந்துள்ள பக்கத்தை தனது கை தொலைப்பேசியில் படம் பிடித்து பதிவு செய்தபின் அக்கைப்பையை என்னிடம் கொடுத்து என்னை விடுவித்தான்.

பெறுமதியற்ற சிறிய கைப்பை தொடர்பாக இவ்வளவு சோதனையா என எண்ணத் தோன்றிய பொழுதும் இக்கால கட்டத்தில் விமான நிலையங்களில் பாதுகாப்பு எவ்வளவு அவசியமானது என உணர்ந்து எனது கைப்பை தொடர்பான விசாரணையின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்டேன்.

- மனுவல் ஜேசுதாசன் -



jesudasan.m@thaiveedu.com

**SP Electronics**

TV, VCR, DVD, Players, Telephone-Computers அனைத்துத் தமிழ் வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்

**416 264 6400**

**2641 Eglinton Avenue East**

**( Brimley & Eglinton)**



3+2 Bedrooms, 2 W Room
Separate Entrance & Walk-Out Basement With 2 Rooms



4 Bedrooms, 2 W Room
Large Rooftop Deck With Stunning Views Of The Ravine And Stream



4+2 Bedrooms, 2 W Room
New Air Condition,New Deck, New Gazebo,New Garden Shed



3+1 Bedrooms, 2 W Room
Hardwood Floors Throughout, Large Upgraded Windows,



3 Bedrooms, 2 W Room
Great Location, Family Friendly Neighbourhood



3+2 Bedrooms, 4 W Room
Dark Wood Cabinet Island & Freshly Painted Throughout



3 Bedrooms, 2 W Room
Overlooks Greenspace And Located On A Quiet Tree



3+1 Bedrooms, 2 W Room
Fantastic Functional Layout With Walk Out From Kitchen



4 Bedrooms, 3 W Room
Bsmt Has A Kitchen W/ Pantry, 3 Pc Bath



3+3 Bedrooms, 2 W Room
Large Backyard With Brand New Two Tiered Deck

**I Pay Your Lawyer Fees!**

For Further Information, Call:

**Direct 416 - 276-1225**





3+2 Bedrooms, 2 W Room
Beautifully Finished Basement Apartment



3+1 Bedrooms, 3 W Room
Property In Excellent Condition W/ Separate Ent. To Finished Bsmnt



3+2 Bedrooms, 2 W Room
Seperate Entrance To Finished Basement




4+3 Bedrooms, 2 W Room
Dream Bsmt Apartment W/ Raised Flrs & B/I Closet Organizers



3+1 Bedrooms, 2 W Room
New Roof ( 2014) & Has Been Freshly Painted Professionally



3 Bedrooms, 2 W Room
Completely Renovated. Quality Finishes, Immaculate Hardwood Floors.




Sell your home

**faster and more money**



# All Your Condo Needs

Platinum Club Award



Elaguppillai Srinathan (Mike) B.Sc

Sales Representative

Email: esrinathan@trebnet.com

**Direct 416 - 276-1225**

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

# நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா

உரம் சேர்க்க கரம் கோத்த ஊரும் உறவும் நிகழ்வு April 21, 2018 மாலை New Jasmine Banqut Hall வில் நடை பெற்றது. இவ் நிகழ்வில் பிரதம விருந்தினராக மார்க்கம் நகரசபை உறுப்பினர் திரு. லோகன் கணபதி ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் திரு. நீதன் சாண் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

உரம் சேர்த்த உறவுகளுக்கும் கரம் கோர்த்த கலைஞர்களுக்கும் நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.






















எதிர்வரும் June 24, 2018 சனிக்கிழமை Morningside Park Lot:4&5 கோடைகால ஒன்று கூடலும் விளையாட்டு போட்டியும் நடைபெற உள்ளது. அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.





CELEBRATING
1993
25
2018
Years

நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் - கனடா
THE DELFT PEOPLE CULTURAL ORGANIZATION OF CANADA
CELEBRATING
1993
25
2018
Years



















# பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் அவர்களின் நினைவேந்தல்

கனடாத் தமிழ்க் கவிஞர் கழக ஏற்பாட்டில் இந்நினைவேந்தல் கூட்டம் ஏப்பிரல் 7ம் நாள் ஸ்கார்பரோ, சிவிக்சென்ரர் மண்டபத்தில், கவிஞர் கழகத்தலைவர் ஞான கணேசன் தலைமையில் மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

ஆசிரியத் தொழிலுக்கே முன்னுதாரண மாகத் திகழ்ந்த பண்டிதர் அலெக்ஸ்சாந் தர் அவர்களின் மாணவர்கள், உறவினர் கள், நண்பர்கள், அவர் உருவாக்கிய கவி ஞர்கள், கவிதை படித்துக்கொண்டிருக்கின்ற மாணவர்கள் எனப் பலரும் மண்டபத்தை நிரப்பியிருந்தனர்.

செருக்கில்லா சிறந்த மாமனிதர் பண்டிதர் ம.செ.அலெக்ஸ் அவர்களின் நினைவேந் தல் கூட்டம், தமிழ் வாழ்த்து, கனடிய கீதம், மௌனாஞ்சலி, வரவேற்புரை என்று தொடங்கி கவிதைகள் வாசிப்பிலும், உரை களிலும் ஓசை நயத்தோடு பாடுவதிலுமாக களைகட்டியிருந்தது. ஒரு மௌனமான சோக உணர்வும், அதே நேரம் பண்டிதரின் புகழைச் சொல்லுவதற்கு கவிதையா? உரைநடையா?சந்தத்தோடு கூடிய பாடலா? என்று போட்டி போட்டுச் சொல்லிக் கொண் டிருந்தார்கள்.

மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா வர வேற்புரை நிகழ்த்தினார். அடுத்து தொழு கின்ற தனது குரு பற்றிய கவிதையை யும் படித்தார். மாவிலி மைந்தன் எப்போ தும் 'அலெக்ஸ்சாந்தர்' என்ற பெயரை எடுத்தவுடனே கண்கலங்கி நிற்பவர். தனது குரு விட்டுச்சென்ற, நிரப்பமுடியாத வெற் றிடத்தை, தன்னால் முடிந்தவரை நிரப்ப முயல்கின்றவர். அவரின் கவிதையில் சில வரிகள்.

*பண்டிதர் அலெக்ஸ்சாந்தர் பண்பிலோர்*
*- சிகரமாய்*
*பாராட்டும் வகை வாழ்ந்தவர்!*
*தொண்டொன்று கற்பிக்கும் தொழிலையே*
*- கொண்டவர்*
*தொழுகின்ற குருவானவர்!*
*மண்விட்டு நீங்கினும் மனம்விட்டு*
*- நீங்கிலார்*
*மாணக்கர் வழியாகவே!*
*எண்திக்கும் ஆளுவார் எம்மோடு*
*- வாழுவார்*
*என்றென்றும் தமிழாகவே!*

புண்டிதர் அலெக்ஸ்சாந்தர் அவர்கள் பங் கேற்ற கவிஞர் கழக நிகழ்வுகள் அடங்கிய தொகுப்பு வீடியோவும் விழாவில் காண் பிக்கப்பட்டது.

அருட்கவி ஞானகணேசன் தனது தலை மையுரையில் தனது கவிதைக் குரு பண் டிதர் அலெக்ஸ்சாந்தர் ஒரு சர்வ மதப்பிரி யர் என புகழாரம் சூட்டினார். 'இயேசுவே இரக்கமாய் இரும்' என்று மூச்சுக்கு மூச்சு வேண்டும் அலெக்ஸ்சாந்தர் மாஸ்டர், திருவாசகத்திலேயிருந்தும் உதாரணங் கள் காட்டுவார். ஆறுகள் பெரும் சமுத்தி ரத்தில் விழுந்து ஒன்றாகிப்போகும். வெவ் வேறு வழிகளில் செல்லும் சமயங்களுக் கெல்லாம் தெய்வம் ஒன்றே என்பார். அது போல் ஆயிரமாயிரம் நெஞ்சங்களை அணைத்த அன்பின் சிகரமாவார். கற்பிக் கும் திறனறிந்த விவேகி, தான் கற்றவை அனைத்தையும் தனது மாணவருக்கு புகட்டிவிடவேண்டுமென்ற அவாவுடைய பெருந்தகை என்று தொடர்ந்து பேசினார்.

கவிஞர் கந்தவனம் அவர்கள் கவிதையு லகிலே ஒரு ஜாம்பவான். இலக்கணத்தில் ஒரு வேங்கை அலெக்ஸ்சாந்தர். இவர் இருவரும் இணைந்தால் எப்படியிருக்கும். இணைந்தால் என்ன? இணைந்தே கவிதை வகுப்பை நடத்தினார்கள். நடத்திக்கொண் டேயிருக்கிறார்கள். கவிஞர் கந்தவனம் தனது நண்பர் பற்றி அங்கு பேசுகையில், ஒரு பிள்ளை சான்றோனாக வரவேண்டு மென்பதுதான், தாயின் விருப்பம். அந்த வழியில் சான்றோனாக வாழ்ந்தவர் நண் பர் அலெக்ஸ்சாந்தர். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைத்துப் பேருக்கும் உத வினார். இந்தச் சபையே அதற்குச் சாட்சி. தனக்குத் தெரிந்த தமிழை தனது மாண வருக்கு முடிந்தவரை போதித்தார். இலக் கணத்தை இடைவிடாது போதித்தார் என்று பேசிய கவிஞர் கந்தவனம் அவர்கள், அலெக்ஸ்சாந்தர் மாஸ்டரோடு சேர்ந்து கவிதை வகுப்பு ஆரம்பித்ததையும், கரு கந்தையா போன்றவர்கள் இடம் இலவ



சமாகத் தந்து உதவியதையும் நன்றியுடன் நினைவுகூர்ந்தார்.

செந்தமிழ்ச்சிற்பி பண்டிதர் ம.செ.அலெக்ஸ் சாந்தர் என்று மகுடமிட்டு அழகிய மல ரொன்று கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத் தினரால் வெளியிடப்பட்டது. பண்டிதர் அலெக்ஸ்சாந்தர் அவர்களது உறவினர் களும், நண்பர்களும் கவிஞர் கழக அங் கத்தவர்களும் எழுதியிருந்தார்கள். இம்ம லரை கலாநிதி பாலசுந்தரம் அவர்கள் வெளியிட்டு வைத்தார்கள். முதற் பிரதியை பண்டிதர் அலெக்ஸ்சாந்தர் அவர்களின் துணைவியார் மெற்றெலா அம்மையார் பெற்றுக்கொண்டார். பேராசிரியர் பாலசுந் தரம் அவர்கள் தனது நூல் வெளியீட்டு ரையில், ஒருவரது வாழ்க்கையின் மேன் மையை அவரது குடும்ப உறுப்பினர்க ளாலும், உறவினர்களாலும், நண்பர்களா லும் கண்டுகொள்ளமுடியும். கல்வியில் தன்னால் கொடுக்க முடிந்தது அனைத் தையும் கொடுத்தவர். அவர் இந்த நாட் டிற்கு வரமுன்பிருந்தே மறையும் வரை கவிதைகளாலும், எழுத்தாலும், பொதுப் பணிகளாலும் தமிழ் சமூகத்திற்கு பெரும் தொண்டாற்றியவர் என்று சொன்னார்.

பவானி தர்மகுலசிங்கம் அவர்கள்... எங் கள் உள்ளங்களில் என்றும் நிலைத்துள்ள பண்டிதர், ஐயா அவர்கள் பெரும்பாலும் என்னிடமிருந்து 'கட்டளைக் கலித்துறை' எனும் செய்யுள் வடிவத்தை விரும்பி எதிர் பார்த்திருப்பவர். அவ்வண்ணமே இப்பா டலைப் படைத்து அவரது திருவடி நிழ லில் சமர்ப்பணம் செய்கிறேன் என்று தனது கவிதையைச் சமர்ப்பித்தார்.

*உயர்ந்தநற் சிந்தனை, ஊருக் குதவும் உளவியல்பு*
*வியத்தகு ஆளுமை வீறுகொள் நிர்வாக விற்பனமும்*
*'முயற்சி திருவினை யே' எனும் வார்த்தை மொழிந்துலகில்*
*செயல்வீர னாகத் திடமுற வாழ்ந்தநற் றிண்ணியரே!*

பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் அவர் கள் முன்னாள் விரிவுரையாளர். பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை இயக்கு னர். வடபிராந்திய போக்குவரத்துச் சபைப் பணிப்பாளர், பனம் பொருள் அபிவிருத் திச் சபை பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், தொலைக்கல்வி தமிழ் மொழி முதன்மை ஆசிரியர், அத்தோடு 'அன்பு மக்களே'என்ற தமிழ் கத்தோலிக்க மாதாந்த வெளியீட்டின் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றியவர்... என்று பல பக்கங்க ளைப் பிடிக்கும் ஒரு பட்டியலையும் கவி ஞர் கழக மலரில் காணலாம்.

யாழினி திருக்குமரன் அலெக்ஸ்சாந்தர் மாஸ்டரின் இளைய மகள். தந்தையின் இறுதி நேரத்தில் படுக்கையருகலிருந்து காலை வருடிக்கொடுத்துக் கொண்டிருந் தவர். தான் படித்த இக் கட்டுரையை எழுத

## கண்டதும் கேட்டதும்

### - சோக்கல்லோ சண்முகநாதன் -

பலமுறை முயன்றும் முடியவில்லையென் றும், பெரும் சிரமத்தின் மத்தியிலேயே முடித்ததாகவும் அதேவேளை, அம்மாவை கவலைப்படாமல் வைத்திருக்க தான் பல முறை முயன்றதாகவும், ஆனால் தான் தான் கூடக் கவலைப்பட்டதாகவும் பேசி னார். அப்பாவுக்கு கோபம் வராது என்று எப்படிச் சொன்னார்கள்? அப்பாவுக்கு கோபம் வரும். தன்னோடு கோபித்த கதை யைச்சொன்னார். பின்பு, அப்பாவே பாடிக் கொண்டு வந்த கதைத்த கதையையும் சொன்னார்.

உதயன் பத்திரிகை ஆசிரியர் திரு.யோகேந் திரலிங்கம் அவர்கள் பேசுகையில் கற் பது, கற்பிப்பது என்பது தொடர்ச்சியான விடயமென்றும், கவிதை ஊடகத்தின் மூலமே தான் பத்திரிகைத்துறைக்கு வந் ததாகவும் சொன்னார்.

தீவகம் வே. இராசலிங்கம் என்ற மூத்த கவிஞர், அலெக்ஸ்சாந்த மாஸ்டரிடம் கவிதை படித்தவர் என்று கூறி நல்லதோர் கவிதையைத் தந்தார். 'உலுப்பியதால் என்பாடல் இனிக்குதென்ற ஒரு கருத்தைச் சொல்லியவன் எங்கே போனான்' என்று கவிதையில்க் கேட்டார்.

நான்கு வருடங்கள் கவிதை படித்து, நான்கு வரிகளில் கவிதை எழுதி, திருத்

தொடர்தல் 37ம் பக்கம்

நிலையான சொத்துக்களை வாங்க, விற்க அழைக்க வேண்டிய
உங்கள் வீடு விற்பனை முகவர் சுகுமாரன் சின்னையா (சுகு)



ROYAL DE MONTRÉAL 2013 INC
4372, Papineau, Montréal, Qc, H2H1T5
Sugumaran Sinniah
Chartered Real Estate Broker
திருப்தியான இல்லம்
ஆனந்தமான வாழ்க்கையின் அடிப்படை !
Direct : 514.299.3186
email: seranvib@hotmail.com Office : 514.529.0454 Fax : 514.525.4557

# பண்டிதர் ம.செ...

36 பக்கத் தொடர்ச்சி...

தங்களோடு கவிஞர் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நேரிசை வெண்பா இது என்று தனது கவிதையை தா. சண்முகநாதன் அவர்கள் ‘மண்ணின் மரகதம்’ என்று மகுடமிட்டு வாசித்தார்.

திருமதி சு. ஜெயகௌரி ‘ஓயாத அலை’ மனித தெய்வத்தின் பசுமை நினைவுகள் சில... என்று தனது ஆசிரியர் பண்டிதர் ம.செ.அலெக்ஸ்சாந்தர் பற்றிய நினைவுகளைக் கட்டுரையாக வாசித்தார்.

ஈடு இணையிலா ஆசான். எல்லையில்லா ஆசான். மாணவரை வகுப்புக்கு வெளியே நண்பனாகக் கொள்வோர், அவரது வகுப்பில் யார் மாணவன்? யார் ஆசிரியர்? என்பதை அறிய முடியாதிருக்கும். இந்தப் பெருமகனாரின் இழப்பின் துன்பத்தை அவரின் பிள்ளைகளைப் பார்த்து, அவரின் சீரிய குணம் அவர்களில்க் கண்டு நாம் ஆறுதல் அடைகின்றோம் என்றார் கவிஞரும் எழுத்தாளருமாகிய அகணி சுரேஸ்.

திருமதி மீரா விமலநாதன் ‘அகத்தில் உறைந்துள, அன்பு ஆசிரியர்’ என்று மகுடமிட்டு தனது ஆசிரியரின் அன்பைப் போற்றி கவிதை படித்தார்.

‘அறிவுச் சூரியன் பண்டிதர் அலெக்ஸ்சாண்டர்’ என்ற தனது கவிதையை சிம்மக் குரலில் சந்தத்தோடு படித்தார் கந்த. ஸ்ரீபஞ்சநாதன்.

கல்வியாளர் சுப்பிரமணியம் இராசரத்தினம் தனது நண்பர் பண்டிதர் அலெக்ஸ்சாந்தரின் கல்விப்பணிகள் பற்றி விபரமாகப் பேசினார்.

வயிரமுத்து திவ்வியராஜன் அவர்கள் அங்கு பேசுகையில் ‘எங்கிருந்தோ வந்தான்’ என்ற பாரதி பாடலைப்பாடி அதற்கும் அலெக்ஸ்சாந்தருக்கும் பொருந்தும் உவமைகளைச் சுட்டிக்காட்டிப் பேசினார். கவிஞர் கழகத்திற்கு இப்படியான ஒரு ஏற்பாட்டைச் செய்ததற்காக நன்றியும் சொன்னார்.

நெஞ்சம் நிறைந்த நினைவு, வாழ்க்கையே கல்வி, கல்வியே வாழ்க்கை - இப்படி வாழ்ந்தவர் அலெக்சாந்த மாஸ்டர். அவர் ஒரு அதிசயமான ஆசிரியர். சாதாரண நிலையிலிருந்து மேல் நிலைக்கு வந்தவர். இறக்கும் தறுவாயில் கூட கவிஞர் கழக நினைவோடு இருந்தவர். ‘ஞானகணேசனை ஒருக்கா ‘கோல் எடுக்கச் சொல்லுங்கோ’ என்று சொன்னவர். ஒரு காலத்தில் இலங்கை முழுவதும் அவரது குரல் கேட்டது. யாராலும் செய்யமுடியாததை அவர் செய்தார். இவ்வாறு ‘சிந்தனைப் பூக்கள்’ எஸ். பத்மநாதன் பேசினார்.

*கற்க கசடறக் கற்பவை கற்றபி*
*னிற்க வதற்குத் தக*

இந்தக்குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் அலெக்ஸ்சாந்த மாஸ்டர். எனது தந்தை அலெக்ஸ்சாந்த மாஸ்டரின் கவிதை வகுப்பு மாணவர். மாஸ்டரின் இழப்பினால் கவலையடைந்தார். அவரின் இழப்பின் சோகம் எம் குடும்பத்திலும் படர்ந்தது. அவரின் இழப்பு கனடா முழுவதும் உணரப்பட்டது. அவரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து மாநகரசபையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அனைத்து உறுப்பினர்களும் ஆதரித்துப் பேசினார்கள். இளைய தலைமுறை இவரது சிறப்பை உணரவேண்டும். அலெக்ஸ்சாந்த மாஸ்டர் எங்களுக்கெல்லாம் முன் உதாரணமாகத் திகழ்ந்தார். எளிமையும் தன்னொடுக்கமும் உடையவராகவும் இருந்தார். ஆசிரியத்தொழில் அவரால் புனிதம் பெற்றது. இவ்வாறு, கவுன்சிலர் நீதன் சண் அவர்கள் பேசினார்கள். அவருடைய ஆன்மா சாந்தி அடைவதாக, ‘றெஸ்ட் இன் பீஸ்’ என்ற வாக்கியத்தோடு தனது உரையை முடித்துக்கொண்டார்.

தொல்காப்பிய மன்றம் சார்பில் பேசிய க. குமரகுரு அவர்கள் பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் எமக்கு கவிதை வகுப்பில் குரு மட்டுமல்ல நான் அவரை தந்தையாகவும் வழிகாட்டியாகவும் கொள்கின்றேன். கல்விமான்கள் பலர் வித்துவச் செருக்கோடு வாழ்கின்றார்கள். ஆனால், அனைத்தையும் கடந்து வாழ்ந்தவர் பண்டிதர் ஐயா. அவர் ஒரு உளவியல் அறிஞர். தத்துவங்களையும் கற்று மற்றவருக்கும் போதித்தவர். தமிழ் உள்ளவரை அவரை வாழ்த்தும்.

கவிஞர் கழகத்தை ஆரம்பிக்க உறுதுணையாக இருந்த முன்னோடிகளில் ஒருவர் த.சிவபாலு ஆசிரியர். அவர் அங்கு உரையாற்றுகையில் அலெக்ஸ்சாந்த மாஸ்டர் கவிஞர் கந்தவனம் அவர்களோடு சேர்ந்து இந்தக் கனடா கவிஞர் கழகத்தை ஆரம்பிப்பதற்கு பல வழிகளாலும் பாடுபட்டார். இதுபற்றி என்னோடும் பலமுறை பேசியுள்ளார். பண்டிதர் பலாலியில் பணியாற்றியபோதும் மட்டக்களப்பில் பணியாற்றிய போதும் இதே தமிழ் உணர்வோடு தான் பணியாற்றினார்.

எழுத்தாளர் இணையத்தைச்சேர்ந்த ஆசிரியர் சின்னையா சிவனேசன் அவர்கள் கனடிய மண்ணில் எல்லோருக்கும் அலெக்ஸ்சாந்த மாஸ்டரின் அன்பைத் தெரியும். அவரது புன்சிரிப்பு அவரது உள்ளத்தைக் காட்டி நிற்கும். தனது நோயையும் பொருட்படுத்தாது பொதுப்போக்குவரத்தில் வந்து படிப்பிப்பார். இவ்வாறு நேரம் கருதி சுருக் கமாகப் பேசினார்.

மனிதர்கள் தங்கள் நல்ல நடத்தைகளாலும், செயல்களாலும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியான ஒருவர் தான் அலெக்ஸ்சாந்த மாஸ்டர். மேலும் வேத நூலிலிருந்தும் ஒரு கதையை எடுத்துக்காட்டாகச் சொன்னார் ‘காலம்’ செல்வம் அவர்கள்.


பெரும்புலவர் முஹமத் ஹன்சீர் ‘இதயத்தில் வாழ்கின்றார்’ பண்டிதர் ம.செ.அலெக்சாண்டர் என்று கவிதை படித்தார்.

பண்டிதர் ம.செ.அலெக்ஸ்சார்ந்தர் அவர்களின் நண்பரும் அவரோடு சில இடங்களில் பணியாற்றியவருமான சிவநாயகமூர்த்தி அவர்கள் பேசுகையில், பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் ஒரு நல்ல சமூகசேவகர். அவரிடமிருந்து பெற்ற அறிவை பலரும் பாராட்டி இருக்கிறார்கள். பலாலி, ஆசிரியர் கலாசாலையிலும், யாழ். பல்கலைக்கழகத்திலும் ம.செ.அலெக்ஸ்சாந்தரோடு சேர்ந்து பணியாற்றுகின்ற, படிக்கின்ற வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இறக்கும் தறுவாயில் கூட அவர் கவிதைக் கழக நினைவோடு தான் இறந்தார். அங்குபடித்த பலர் எனது நண்பர்கள். அவர்கள் பண்டிதரை மறக்காது இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது பெரிதும் பாராட்டுக்குரியது.

பண்டிதர் ம.செ.அலெக்ஸ்சாந்தர் அவர்களது மகன்களில் ஒருவராகிய மதனராஜ் அலெக்ஸ்சாந்தர் அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசினார். எம் தந்தை எம்மோடு முற்றத்து மல்லிகையாய் வாழ்ந்தவர். தான் கற்றறிந்ததை எமக்கு ஊட்டி, வழிகாட்டி, எமக்கு ஒரு பெரும் நண்பர் கூட்டத்தையும் பெற்றுத் தந்திருக்கிறார். தந்தையார் தான் படித்த தமிழை எல்லோருக்கும் பொதுவாக்கினார். கனடா கவிஞர் கழகத்துக்கு எமது குடும்ப சார்பில் நன்றி கலந்த வணக்கம்.



sanmuganathan@thaiveedu.com



# சீனாவின் விண்கலத்துக்குப் பிரியாவிடை!

- குரு அரவிந்தன் -

சீனா நாட்டின் சுமார் 8.5 தொன் எடையுள்ள ரியாங்கொங்-1 (Tiangong-1) என்ற விண்கலம் ஒன்று வான்வெளியில் இருந்து கீழே விழப்போகிறது என்ற திடீர் அறிவிப்பு சென்ற மாதம் வெளிவந்தது. ஆனாலும் இந்த விண்கலம் எங்கே, எப்போது விழப்போகிறது என்பதை அவர்கள் உடனே அறிவிக்கவில்லை. இந்த விண்கலம் தமது கட்டுப்பாட்டை இழந்து விட்டதாக சீன விண்வெளி அதிகாரிகள் 2016ம் ஆண்டே பகிரங்கமாக அறிவித்திருந்தனர். எனவே இந்த விடயம் சர்வதேசத்தின் பார்வைக்குள் கொண்டுவரப்பட்டது. அவர்களின் முயற்சியால் அந்த விண்கலம் அடையாளம் காணப்பட்டு விண்ணில் வைத்துக் கண்காணிக்கப்பட்டது. இது சுமார் 300 தொடக்கம் 390 கிலோ மீட்டர் உயரத்தில் கடந்த இரண்டு வருடங்களாகத் தரையுடன் எந்தவித தொடர்பும் இல்லாமல் உலகை வலம் வந்து கொண்டிருந்தது. 34 அடி நீளம் கொண்ட இந்த விண்கலம், சீனாவின் விண்வெளி ஆய்வுத்திட்டத்தில் முக்கியமானதாக இருந்தது. விண்கலம் பூமியை நோக்கி மெல்ல மொல்ல நகர்ந்தாலும் இடையிடையே அது தனது பாதையில் தடுமாறுவதையும் ஆய்வாளர்களால் அவதானிக்க முடிந்தது. எனவேதான் எப்பொழுது இந்த விண்கலம் பூமியை நோக்கி வந்து விழும் என்று இவர்களால் சரியாகக் கணிக்க முடியாமல் போயிருந்தது. 2018ம் ஆண்டு ஜனவரி மாதம் பூமியில் விழலாம் என்று முதலில் ஆய்வாளர்களால் கணிக்கப்பட்டது. விண்கலத்தின் வேகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக இந்தத் திகதி பின்தள்ளுப்பட்டது. எனவே ஏப்ரல் மாதத்தின் தொடக்கத்தில் பூமியை நோக்கி வரலாம் என்று கணித்திருந்தார்கள்.

2011ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் விண்வெளிக்கு ரியாங்கொங்-1 என்ற இவ்விண்கலம் அனுப்பப்பட்டது. ரியாங்கொங் என்றால் சீன மொழியில் சொர்க்கமாளிகை என்று பொருள்படுமாம். கிட்டத்தட்ட ஒரு பேருந்தின் அளவைக் கொண்ட, கைவிடப்பட்ட இந்த விண்கலம் பூமிக்குள் நுழையும் போது எரிந்து போகலாம் என்றும், ஏதாவது பாகங்கள் எஞ்சியிருந்தால் அவை பெரும்பாலும் கடலில் விழலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இதன் பாகங்கள் மனிதர் வாழும் பகுதியில் விழுவதற்குப் பெரும்பாலும் வாய்ப்புக்கள் இல்லை என்றும் ஆய்வாளர் குறிப்பிட்டிருந்தனர். தங்கள் கணிப்பின்படி ஏப்ரல் மாதம் 1ம் திகதி பூமியில் விழப்போவதாக சில இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. எல்லோரும் ஆவலோடு என்ன நடக்கப்போகிறது என்று எதிர்பார்த்திருந்தார்கள். அது உண்மையல்ல 'ஏப்ரல் பூல்' செய்தி என்பது பின்னால் தெரிய வந்தது. ஆனாலும் பூமியின் ஈர்ப்புக்குள் வந்து விட்டதால் எந்த நேரமும் எங்கே யாவது இந்த விண்கலம் விழலாம் என்ற அறிவிப்பு வந்தது. இப்படியாக வதந்திகள் பரவியதால் அது விழுந்தால் என்ன விட்டால் என்ன என்று ஒரு கட்டத்தில் விண்வெளி ஆர்வலர்கள் ஓய்ந்து போயிருந்தனர். அப்பொழுதுதான் மீண்டும் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த தொடர்புசாதனங்கள் தென்பசுபிக் கடலில் இதன் பாகங்கள் விழுந்ததாகத் தெரிவித்திருந்தன. அதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. ஆக தென் பசுபிக் ஆழ்கடலில், மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட சீனாவின் சொர்க்கமாளிகையான ரியாங்கொங்-1 என்ற விண்கலத்தின் இறுதி யாத்திரை சென்ற ஏப்ரல் மாதம் 2ம் திகதியுடன் முற்றுப்பெற்றது. பசிபிக் கடலில் வந்து விழுந்த சீனநாட்டு விண்கலத்திற்கு 'குட் பை ரியாங்கொங், யூ ஆர் ஏ ஹீரோ' என்று பிரியாவிடைச் செய்தியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதுபோன்ற சில நிகழ்வுகள் ஏற்கனவே கடந்த காலங்களில் நடந்திருக்கின்றன.

1979ம் ஆண்டு அமெரிக்காவின் ஸ்கைலாப் என்ற விண்கலம் ஒன்றும், 2001ம் ஆண்டு 135 தொன் எடையுள்ள ரஷ்யாவின் மிர் விண்வெளி நிலையம் ஒன்றும் இப்படியாக கட்டுப்பாட்டை இழந்த நிலையில் பூமியை நோக்கி வந்து விழுந்திருந்தன.

இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட வலுவிழந்த விண்கலங்கள் விழுந்திருக்கின்றன. பொதுவாக இப்படியான விண்கலங்களின் வேகம் குறையும் போது பூமியின் ஈர்ப்பு சக்திக்குள் கவரப்படுகின்றன. எனவேதான் இவற்றின் வேகம் குறையாமல் இருக்க, தேவையான போது அவற்றில் இருக்கும் எரிசக்திகள் அவற்றுக்கு உதவி செய்கின்றன. அவற்றின் மூலம் தேவையான வேகத்தை விண்கலங்கள் பெற்றுக் கொண்டு புவி ஈர்ப்புக்குள் அகப்படாமல் தப்பிக் கொண்டு உலகை வலம் வருகின்றன. கட்டுப்பாட்டு நிலையத்தின் கட்டுப்பாட்டை இழந்த, அல்லது குறிப்பிட்ட காலத்தைக் கடந்த விண்கலங்கள்தான் புவிக் கவர்ச்சிக்குள் அகப்பட்டு புவியில் வந்து விழுந்து விடுகின்றன.

விண்வெளிப் பயணத்திற்குப் பயன்படும் வாகனத்தைப் பொதுவாக விண்கலம் என்பார்கள். தொடக்கத்தில் இதைச் செயற்கைக்கோள் என்றும் அழைத்தார்கள். முதன் முதலாக அக்டோபர் 4ம் திகதி 1957ம் ஆண்டு சோவியத் யூனியன் ஸ்புட்னிக் என்ற செயற்கைக் கோள் ஒன்றை அனுப்பி விண்வெளி யுகத்தை ஆரம்பித்து வைத்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். இதைத் தொடர்ந்து 1961ம் ஆண்டு ரஷ்யா அனுப்பிய மனிதன் பயணித்த முதல் விண்கலமான வொஸ்ரோக்-1ல் யூரி ககாரின் பூமியை சுற்றி வந்து சாதனை படைத்தார். இத்தகைய விண்கலங்கள் குறிப்பாக தொலைத்தொடர்பு, புவி அவதானிப்பு, இராணுவ தேவைகள், வானிலை ஆய்வு, கோள்கள் பற்றிய ஆய்வுகள் போன்ற வைக்காகத் தற்சமயம் பாவிக்கப்படுகின்றன. இதைவிட விண்வெளி வீரர்களையும், அவர்களின் தேவைகளுக்கான பொருட்களையும் விண்வெளிக்கு அனுப்பவும் திரும்ப எடுக்கவும் இத்தகைய விண்கலங்கள் பயன்படுகின்றன. பல வடிவமைப்புகளில் இப்படியான விண்கலங்கள் இருக்கின்றன. சில விண்கலங்கள் பாதுகாப்பாகப் பூமியில் வந்து இறங்கக்கூடிய வசதிகளைக் கொண்ட விண்ணூர்திகளாக இருக்கின்றன.

பொதுவாக கடல் மட்டத்தில் இருந்து 100 கிலோமீட்டர் (62 மைல்) உயரத்தைத் தாண்டிய விண்கலங்கள் தான் விண்வெளியில் பயணித்தது என்று எடுத்துக்கொள்ளப்படும். இந்த 100 கிலோமீட்டர் எல்லையை கார்மன் எல்லை (Karman Line) என்று அழைக்கிறார்கள். இந்த எல்லையைக் கடந்ததும் ஒரு விநாடிக்கு ஏழு மைல்கள் என்ற வேகத்திலாவது விண்கலங்கள் இயங்க வேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் புவிக்கவர்சிக்குள் அகப்பட்டு விடும். நவீன தொழில் நுட்பத்திற்கமைய இப்பொழுதெல்லாம் விண்கலங்கள் தாங்கள் இயங்குவதற்குத் தேவையான சக்தியை சூரிய வெளிச்சத்தில்(Solar) இருந்து பெற்றுக் கொள்கின்றன.

சீனா நாடு அமெரிக்கா, ரஷ்யா போல தானும் விண்வெளி நிலையம் ஒன்றை விண்வெளியில் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றது. ஏற்கனவே சில நாடுகள் இது போன்ற விண்பறப்புச் செயல் திறனைப் பெற்றிருக்கின்றன. ரஷ்யா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், சீன மக்கள் குடியரசு, யப்பான், இந்தியா போன்ற நாடுகள் தங்களுக்குச் சொந்தமான விண்கலங்களை ஏற்கனவே விண்வெளிக்கு அனுப்பி இருக்கின்றன.

2003ம் ஆண்டு ஒக்டோபர் 15ம் திகதி சீனா நாடு விண்வெளி வீரர் ஒருவரை விண்வெளிக்கு வெற்றிகரமாக அனுப்பி இருந்தது. இதன் மூலம் ரஷ்யா, அமெரிக்காவிற்கு அடுத்ததாக மூன்றாவது இடத்தை சீனா பெற்றுக் கொண்டது. 2005ம் ஆண்டு இருவரையும், 2008ம் ஆண்டு மூவரையும் வெற்றிகரமாக விண்வெளிக்கு அனுப்பியிருந்தது. இதைவிட விண்ணில் நடந்தும் காட்டியது. 2012ம் ஆண்டு சீனா அனுப்பிய மூன்று விண்வெளி வீரர்களில் ஒரு பெண்மணியும் இடம் பெற்றிருந்தார். ரியாங்கொங்-2 என்ற விண்கலத்தை 2016 ஆண்டு செப்ரெம்பர் 16ம் திகதி விண்வெளிக்கு அனுப்பி வைத்தது. 9.5 தொன் நிறையும், 34 அடி நீளமும் கொண்ட ரியாங்கொங்-2 விண்கலம் 244 மைல் உயரத்தில் பூமியை வலம் வந்து கொண்டு இருக்கின்றது. ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் பொருட்கள் கொண்டு செல்லும் விண்கலம் இரு தடவைகள் இங்கு சென்று வந்தது. 440 தொன் நிறையுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தோடு ஒப்பிடும் போது சீனாவின் ரியாங்கொங்-2 சிறிதாக இருந்தாலும், விண்வெளியில் சுயமாகச் செயற்படும் மூன்றாவது நாடாக சீனா இப்போது மாறியிருக்கின்றது.

எதிர்கால நடவடிக்கைகளுக்கு இந்த விண்வெளி முயற்சிகள் மிகவும் உதவியாக இருக்கும் என்பதால், விண்வெளித் திட்டத்தில் மிக வேகமாக முன்னேறி வரும் சீனா நாடு வருகிற 2022ம் ஆண்டுக்குள் விண்வெளியில் நிரந்தர விண்வெளி நிலையம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. எதிர்காலத்தில் 'சுப்பபவர்' என்று சொல்லப்படுகின்ற அதியுயர்ந்த தொழில் நுட்பத்தைக் கொண்டிருக்கும் நாடுகளால் தான் அந்த தரத்தை எட்டிப் பிடிக்க முடியும். ஆசியாவில் அதிக சனத்தொகையைக் கொண்டு இருக்கும் சீனா நாடும் தன்னையும் அதில் ஒன்றாக, 'சுப்பபவர்' நாடாக இனம் காட்ட முனைகின்றது. இனி வரும் காலங்களில் அதைச் செய்து காட்டவும் சீனா நாடு தயங்கப்பேவதில்லை.

**உசாத்துணை:**
- *https://www.space.com/34432-china-space-docking-tiangong-2.html*
- *https://www.space.com/27320-tiangong-1*



*kuruaravindan@thaiveedu.com*


# கோலங்கள்

அரங்கேற்றம், கலைநிகழ்ச்சி, திருமணம், பூப்புனித நீராட்டு போன்ற வைபவங்களுக்கு கோலம் போட்டு அலங்கரிக்க, Floor Decoration for Arangetram Wedding and other Cultural Functions.

**Bhamini:**
**647 294 0736,**
**416 491 6057.**


Our sincere gratitude to
OUR CLIENTS,
ADVISORS, PARTNERS,
FRIENDS AND
FAMILIES.
BEST
MARKETING
ENTREPRENEUR
AWARD 2018
Thank you CTCC for honouring this special Award.
iNFORCE LIFe
Financial Services Inc.
Delivering Promises. Building Trust.
CTCC
Canadian Tamils'
Chamber of Commerce.


PATRICK BROWN
& ASSOCIATES
Residential and commercial purchase and sale
Refinancing
Corporate Law
Business Law
Wills & Estate
Civil Litigation
பல வருடங்களாக
தமிழ் மக்கள் மத்தியில்
சேவை ஆற்றிவரும்
Credit Solution Centre இன்
மற்றும் ஓர் பரிமாணம்...
SRI VALLIPURANTHAR
ASSOCIATE
Dir : 1.416.450.5011
sri@patrickbrownlaw.com
Off : 416-864-3869
Fax : 416-439-0226
80 Corporate Drive Suite 309
Toronto, ON M1H 3G5
patrickbrownlaw.com

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




Just Relax & leave the rest with the Best !
We Manage All Residential & Commercial Properties...
RE/ON
PROPERTY MANAGEMENT INC.
Tel: 1 800.290.1943
• Property Marketing • Tenant Screening
• Rent Collections • Property Maintenance
And Much More
25 Karachi Drive, Suite 16
Markham, ON L3S 0B5


Move On With RE/ON
www.reongtahomes.com
www.reongtacondos.com
$3,900,000
4 Yrs Old "Race Trac" With Daisy Mart C-Store
7 Million litres Gas and Diesel
1 Million Sale Convenience store
35% Diesel & 65% Gas
Call Us...
Javis & Dundas
grid CONDOS
CENTRECOURT DEVELOPMENTS
. Assignment Sale
. 2 Bedroom 1 W/R
. 640 Square feet
. Now Selling Over $900/SQFT
. Asking $812/SQFT
. 57 Storey Building
. Over 500 Units
. 24 Conncierge
. State Of Art Fitness Studio
. Tentative Occupancy Sept 18
$520,000
V'Park & Shepp.
TRIO AT ATRIA
TRIDEL
. Assignment Sale
. 2 Bedroom 2 W/R
. 754 Square feet
. Now Selling Over $700/SQFT
. Asking $660/SQFT
. 210 SQFT Terrace
. 9 Feet Ceiling
. 24 Concierge
. State Of Art Fitness Studio
. Occupancy Sept 18
. Close to 401 404
$499,000
Judy Gnanendran B.Com (Hons)
Sales representative/Owner
416-629-9797
Gnanendran Narasingham
Sales representative/Owner
416-937-8090
RE/ON
Homes Realty Inc.
Brokerage
www.reongtacondos.com www.reongtahomes.com
25 Karachi Dr # 15
Markham On. L3S 0B5
905-209-8080

# பாற்பைப் பாய்

- குமார் புனிதவேல் -

எல்லாவற்றிற்குமே ஒரு கதை யுண்டு. நான் கனடா வந்த போதும் எனது 'கோரிக்கை'யின் கதையைக் கேட்டார்கள். அது போல் இப்போது 'பால் பை' கொண்டு தயாரிக்கப் படும் பாயின் கதையைக் கவனிப்போம்.

1960களில் கூட பால், கண்ணாடிப் போத் தல்களில் கனடாவில் வினியோகிக்கப்பட் டது. கண்ணாடியின் எடையும் இலகுவில் உடைந்து விடும் தன்மையும் மாற்று வழி யைத் தேட உந்தியது. கண்ணாடிப்போத் தல்களைத் தொடர்ந்து cardboard எனும் அட்டைப்பெட்டியை உயோகித்தார்கள். ஆனால் காகித அட்டைகள் செய்வதற்குக் காடுகள் அழிகின்றது என்பதை உணரும் காலத்தில்...பொலிதீன் பைகளின் வருகை வேகங்கொள்கின்றது. 1930களில் பொலிதீன் கண்டுபிடிக்கப்பட்டாலும் அதன் பரவலான பாவிப்பு 1960களில் தான் ஏற்பட்டது. பொலி தீன் பைகளைப் பாவிக்கத்தொடங்கினார் கள்.

1967ம் ஆண்டில் Dupont எனும் நிறுவனம் பால் சேகரித்து வினியோகிப்பதுக்குகந்த பொலிதீனை அறிமுகப்படுத்தியது. பொலி தீன் பைகள் விலையும் எடையும் குறைந்தது. வலிமையானது. இன்று பொலிதீன் ஆர் ஜென்டினா, உருகுவே, தென் ஆபிரிக்கா, சீனா போன்ற நாடுகளில் பாவிக்கப்பட் டாலும் எமது அண்டை நாடான ஐக்கிய அமெரிக்காவின் சில மாநிலங்களில் பாவிக் கப்படுவதில்லை.

காடுகள் அழிவதைத் தவிர்ப்பதற்கு வரப் பிரசாதமாக வந்த பொலிதீன் உலகையே அழிக்கும் விஷமாக உருவெடுத்தது. பொலி தீன் சிதைவுறுவதற்கு நெடும் காலம் எடுப்பதுடன் அப்படிச் சிதைவுறும் வேளை யிலும் நுண்-ஆக்கக்கூறுகளாக மாறி ஆரோக் கியத்திற்கு ஊறு விளைவிக்கிறது. பொலி தீனை எரித்தால் அது பசுங்குடில் வாயு வாக மாறி பூமியின் வெப்ப உயர்வுக்கு காரணமாகின்றது.

எனினும் 'ஒருவருடைய குப்பை இன்னொ ருவருக்கு புதையல்' எனும் ஆங்கில பழ மொழிக்கமைய, பாவித்த பால் பைகளுக்கு புத்துயிர் கொடுப்பதற்கு ஒரு வழிமுறை கண்டுபிடிக்கப்பட்டது. 1990களில் தெற்கு ஒன்ராறியோவில் பெண்கள் பழைய பால் பைகளை மெல்லிய கீற்றாக வெட்டி வலைப் பின்னல்களாக்கி பாய்களாகச் செய்து பல கருணை அமைப்புகளுக்கு அன்பளிப்புச் செய்தார்கள். இப்பாய்கள் அங்கோலா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் வறியவர் கள் படுப்பதற்கு கட்டில்களாகவும் பாவிக் கப்பட்டன. ஒரு பாய் செய்வதற்கு 500 முதல் 600 பால்பைகள் உபயோகப்படுத்தப்பட் டன. அதில் மிஞ்சும் துகள்கள் தலையணை அடைவதற்கு உபயோகித்தார்கள். இப் பாய்கள் இலகுவாகத் துவைத்துப் பாவிக் கக்கூடியதாய் இருந்தன.

அஞ்சலா கெஸ்த்லி (Anjela Kesthely) எனும் பெண்மணியின் வருகை பால் பைகள் மீள்பாவிப்பில் பெரும் தாக்கத்தை ஏற்ப டுத்தியது. அவர் பொழுதுபோக்காக குளிர்த் தொப்பிகளையும் கழுத்துப்பட்டிகளையும் (scarves) செய்து தர்ம ஸ்தாபனங்களுக்கு கொடுத்து வந்தார். ஒருமுறை தனது மக னின் கூடைப்பந்து விளையாட்டை பார்த் துக் கொண்டு இடைவேளையில் பின்னிக் கொண்டிருந்திருக்கிறார். அருகில் இருந்த ஒரு பெண்மணி 'பால் பைகள் பாவித்து செய்யும் பாய்கள் பற்றி அறிந்ததுண்டா?' எனக் கேட்டுள்ளார். அஞ்சலா அன்று வீடு திரும்பியவுடன் கணினியில் அது பற்றிக் கற்று, அயலவர்களிடம் பழைய பால் பைகளை சேகரித்து பாய் செய்யத் தலைப் பட்டார். காலப்போக்கில் அவருக்குப் 'பால் பைப்பெண்மணி' எனும் பெயர் நிலைத்து விட்டது.

'காகம் அமர பனம்பழம் விழுந்தது போல்' நிகழ்வுகள் இடம்பெற்றன. 2010ம் ஆண்டில் ஹெயித்தி (Haiti) நாட்டில் ஏற்பட்ட பெரும் நிலநடுக்க அதிர்வின் விளைவாக பல்லாயி ரம் மக்கள் வீடுகள் உடைமைகளை இழந் தனர். அவர்களுக்கு நாமும் ஏதாவது செய்ய வேண்டும் என மக்கள் ஆர்வம் கொண் டார்கள். அஞ்சலாவிடம் ஏற்கெனவே செய்த பால்பைப் பாய்கள் வீட்டு அடித்தள அறையில் நிறையவே இருந்தன. அதனை எடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கக் கூடிய தர்ம அமைப்பு அகப்படுமா? எனத் தேடியபோது, பூகம்பத்தினால் பாதிக்கப் பட்ட பெண் ஒருவரை பேட்டி கண்டவேளை அவருக்குப் பின்னால் ஒரு பால்பைப் பாய் இருப்பதை அவதானித்தார். தனது வீட்டின் அடித்தள அறையில் உள்ள ஆறு பாய்களும் எங்கு செல்லவேண்டும் என்பதை உணர்ந்தபோது MilkBagsun-limited அமைப்பு உருவாகியது.



அஞ்சலாவுக்குத் தேவையான பால்பை களை பெறுவதற்கு வேண்டிய விளம்பரமும் ஒரு வினோதமான முறையில் ஏற்பட்டது. ஒரு பெண் அவரது சமூகத்திலிருந்து பால் பைகள் சேர்த்துத் தருவதாகவும் அதற்கு முன் அவர் பாய் செய்யும் இடத்தை பார்க்க விரும்புவதாகவும் அஞ்சலாவிடம் தொடர்பு கொண்டுகேட்டார். அஞ்சலாவின் அடித்தள அறைக்கு வந்த அப்பெண்மணி குவிந்திருந்த பாய்களுடன் தான் நின்று ஒரு படம் எடுக்கலாமா என்று கேட்டார். அவர் விருப் பம் வினோதமாக இருப்பினும் அஞ்சலா சம்மதித்து படமும் எடுத்துக் கொடுத்தார். அந்தப்பெண்மணி அந்த சமூக பத்திரிகை யில் ஒரு பெரிய படத்துடன் அப்பால்பை களைத் தானே செய்ததாக எழுதியிருந்தார். இலவச பத்திரிகை பலருக்கும் கிடைத்தது. ஒரு சிலர் அஞ்சலாவை அழைத்து இது பற்றிக் கேட்டார்கள். இந்த செயற்பாடு அஞ்சலாவிற்கு பெரும் வேதனையை தந் தது. தனது கஷ்டத்தையும் சிரமத்தையும் தனதாக்கிய அந்த பெண் மீது சலிப்பு ஏற் பட்டது. இந்த நிகழ்வு அஞ்சலாவின் மன திலிருந்து ஒரு மாதமாகியும் விலகவில்லை.

இறுதியில் அஞ்சலா அப்பத்திரிகை காரி யாலயத்தை அழைத்து அந்தத் தவறான செய்தி பற்றி விமர்சித்துள்ளார். பத்திரிகை ஆசிரியருக்கு ஆள்மாறாட்டம் பற்றி தெரிந்த போது பெரும் விசனப்பட்டு மன்னிப்புக் கேட்டுள்ளார். அவர் அஞ்சலாவிடம் தாங் கள் அக்கட்டுரையைப் பிரசுரிக்கு முன் அந்த பெண்மணியை அழைத்த போதும் தான் வேலையாக இருப்பதாகவும் பின் அழைப்பதாகவும் தெரிவித்து விட்டு அழைக்கவேயில்லை என்று கூறினார். ஒரு பாய் பின்னுவதற்கு எத்தனை பால் பைகள் வேண்டும்? எவ்வளவு நேரம் எடுக் கிறது என்ற கேள்விகளுக்கெல்லாம் தற் போது வேலையாய் இருக்கிறேன், பின்னால் சொல்வேன் என்று தவிர்த்ததன் காரணம் இப்போதுதான் புரிகிறது என்றார். அதை அவரே செய்தால் தானே அறிந்திருப்பதற்கு! பத்திரிகை ஆசிரியர் மன்னிப்புக் கோரி, தான் இன்னுமொரு கட்டுரை தெளிவாக எழுதுவதாக உறுதி தந்தார். இலவசமாக எல்லா வீடுகளுக்கும் செல்லும் செய்தித் தாள் என்பதனால் பலரும் செய்தியை வாசித்து பாய் செய்யும் குழுவுடன் இணைந்து கொண்டு இன்று இயங்கி வருவதாக அறி வித்தார்.

டாக்டர் ஆன்ரூ சைமன் என்பவரால் வழி நடத்தப்படும் Canadian food for Children எனும் அமைப்பினூடாக அவர்கள் அனுப் பும் உணவு உடை, மருந்து வகைகளுடன், அஞ்சலா பாய்களையும் அனுப்பக்கூடிய தாக இருந்தது. பால்பை பாய்கள் பொருட் கள் பழுதுபடாது இருப்பதற்கு பாவிக்கப் பட்டு, சென்றடைந்த இடங்களில் வசதி யற்றவர்களுக்கு இலவசமாக வழங்கப்ப டுகிறது. ஆரம்பத்தில் குறிப்பிட்ட ஹயித்தி (Haiti)யுடன் ஒன்டுராஸ், எல் சல்வடோர், கௌதமாலா, நிக்கராகுவா, டொமினிகன் குடியரசு, டொமினிகா, ஜமேய்க்கா, பெரு, சீராலியோன், கானா, லைபீரியா, மாலி, மலாவி, தன்சானியா, கென்யா, கமரூன், புர்க்கினா பாசோ, ஸாம்பியா, ஸிம்பாப்வே, இராக், பிலிப்பைன்ஸ், வடக்குக் கனடா, மற்றும் ரொறன்ரோ கிச்சினர் மொங்க்டன், நியூபிரன்ஸ்விக் ஆகிய நகரங்களில் வசிக் கும் வீடில்லாதவர்களுக்கும் இப்பாய்கள் சென்றடைகின்றன. சில வருடங்களுக்கு முன் Milk Bag Sunlimited தனது பாய்களை கிறீஸ் நாட்டில் வதியும் சிரிய அகதிக ளுக்கு அனுப்பியது.

MilkBag Sunlimited கனடாவிலும் வெளி நாடுகளிலும் தேவையுள்ள அனைவருக்கும் உதவத் தயாராயுள்ளது. இந்நாள் வரை இவ்வமைப்பு இருநூற்று இருபதாயிரம் இறாத்தல் எடையில் இருபத்திரண்டாயிரம் பாய்கள் செய்துள்ளது. இதன் விளைவாக குப்பை மேட்டை நச்சுப்படுத்தும் 11.5 மில் லியன் பால்பைகள் மீள்பாவனை செய்யப் படுவது ஒரு சிறப்பம்சமாகும். சிலர் எமது குப்பையை வேறு நாட்டிற்கு அனுப்புகி-றோம் என்று குறிப்பிடக்கூடும். ஒரு பொரு ளின் பெறுமதி அதனைப் பெற்றுக்கொள் பவரின் மன நிலையில் தங்கியுள்ளது.

கனடியத் தமிழர்கள் மத்தியில் கடந்த முப்பந்தைந்து வருடங்களாக இயங்கிவரும் 'சேக்கம்' எனும் தன்னார்வத் தொண்டு இயக்கம் தமது பங்களிப்பாக மூவாயிரம் இறாத்தல் எடையுள்ள முன்னூறு பாய்களை நூற்றி ஐம்பதாயிரம் பழைய பால் பைக ளைக் கொண்டு செய்து வழங்கியுள்ளார் கள். இப்பாய் செய்யும் முயற்சியானது பாட சாலைகள், வழிபாட்டுத்தலங்கள், முதிய வர் மன்றங்கள் எனப் பல அமைப்புகள் ஊடாக ஆயிரக்கணக்கானவர்களை ஈடுப டுத்தியுள்ளது.

இது அனைவரும் வெற்றிபெறும் ஒரு விட யமாகும். நமது சுற்றாடலுக்கு நன்மை செய்வதுடன் வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு உதவும் மகிழ்ச்சியைத் தருகிறது.

அஞ்செலா ஒரு ஆலம் விதையாக தொடங் கிய முயற்சி பெரும் மரமாக வளர்ந்து விழுதுகள் விட்டு உள்ளது. இதுவே ஆலங் காடாக வளர்ந்து நன்மை பயக்கட்டும்.

**உசாத்துணை:**

- https://www.thestar.com/life/2016/03/26/turning-milk-bags-into-sleeping-mats-for-developing-countries.html
- http://milkbagsunlimited.ca/how-to/
- http://www.canadianfoodforchildren.net/



kumar.punithavel@thaiveedu.com

திருமணம், பூப்புனிதநீராட்டுவிழா, பிறந்தநாள் அழைப்பிதழ்கள்
அச்சிட தொரன்ரோவில் புதிய காட்சியறையுடன்
MENAKA CARD
மேனகா அழைப்பிதழ்
Invitations for all occasions
80 Nashdene Road, Suite 113, (E Block), Toronto, Ontario, M1V 5E4. Tel : 416.335.1155

# செய்தி அறையில் வேகம் தரும் யோகா

- வி.என். மதிஅழகன் -

ஒலிபரப்பு நிலையத்துக்கும் அதன் நேயர்களுக்கும் இடையில் ஒரு இணைப்பாளராக இருப்பவர் கலையகத்திலிருந்து செய்தி சொல்பவரே. அவர் செய்தியறைப் பணிகளின் வெற்றிக்கோ அல்லது தோல்விக்கோ முழுப்பொறுப்பையும் கொண்டிருக்கிறார்.

'ஒலிபரப்புக்காக பேசுவது (Broadcast Speech) என்றால், நேயர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக நோக்கிச் செய்யப்படும் ஒருவகையான உரையாடல் தான்' என்பதை செய்தி சொல்பவர் மனதில் பதிந்தாக வேண்டும். அதாவது கேட்போர் ஒருவரே என்ற கோட்பாடு, உரையாடல் முறையில் சொல்வது போல் எழுதப்பட்டாலும் அதிகார தோரணையில் அதை எடுத்துச் சொல்வதே வரவேற்கத்தக்கது.

சாதாரணமாக உரையாடுவது போலான குரல் மட்டம் வானொலி - தொலைக்காட்சி செய்தி வாசிப்புக்கு பொருந்தி வராது. இரண்டு மீற்றர்களுக்கு அப்பால் உள்ள ஒருவருக்கு சொல்லுகின்ற சொல்வீச்சு மட்டம் மிக உசிதமானது.

வார்த்தைகளை வீசுகின்ற விதம் ஒருவருக்கொருவர் மாறுபடும். மொழிக்கு மொழியும் வேறுபடும். செய்தி சொல்பவர்கள் பொதுவாக ஒரு நிமிடத்துக்கு 110 தொடக்கம் 120 வார்த்தைகளை வெளியிடத்தக்கவர்களாக இருப்பர். ஒரு நிமிட நேர செய்தி சொல்லலுக்கு கணினியில் பொறிக்கப்பட்ட இருபது வரிசைகள் சமனாய் வரும். செய்தியறிக்கையை சுத்தமாக வாசித்து ஒத்திகை பார்த்தாலே அது எவ்வளவு நேரத்தை எடுக்கும் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். செய்தி சொல்பவர் ஒருபோதும் மனதுக்குள் வாசித்துப் பார்ப்பதில்லை.

வார்த்தைகளால் மட்டும் செய்தி அறிவிக்கப்படுவதில்லை. குரல் மூலமாகவும் அது கூறப்படுகிறது. குரலின் தொனி, ஏற்ற இறக்கம், நின்று நிறுத்திக் கூறுதல், அறுத்து உறுத்துச் சொல்லல், தெளிவுபட வாசித்தல், சரியாக உச்சரித்தல், வித்தியாசமான வார்த்தைக்கு அல்லது முக்கியமான வார்த்தைக்கு விசேட அழுத்தங்கொடுத்தல் என்பன செய்தி சொல்லும் பாங்குக்கு மெருகூட்டும்.

செய்தியறிக்கையை நுனிப்புல் மேய்வது போல் இல்லாமல் முற்று முழுதாக ஆய்ந்து தெளிவடைய, செய்தி சொல்பவர் நேரகாலத்துடன் செய்தியறைக்கு சென்றிட வேண்டும். அங்கிருந்து செய்திக் கலையகத்துக்கு ஆகக் குறைந்தது பத்து நிமிடங்களுக்கு முன்னராவது சென்று, ஒலி வாங்கிக்கு முன்னால் உட்கார்ந்து கொள்ளல் அவசியம். செய்தி வாசிப்பு தொடங்கு முன்னரும், இடை நடுவிலும் மேலதிக செய்திப் பிரதிகள் தரப்படலாம் என்ற எதிர்பார்ப்பினையும் மனதில் இருத்தியாக வேண்டும்.

> “ வார்த்தைகளால் மட்டும் செய்தி அறிவிக்கப்படுவதில்லை. குரல் மூலமாகவும் அது கூறப்படுகிறது. குரலின் தொனி, ஏற்ற இறக்கம், நின்று நிறுத்திக் கூறுதல், அறுத்து உறுத்துச் சொல்லல், தெளிவுபட வாசித்தல், சரியாக உச்சரித்தல், வித்தியாசமான வார்த்தைக்கு அல்லது முக்கியமான வார்த்தைக்கு விசேட அழுத்தங்கொடுத்தல் என்பன செய்தி சொல்லும் பாங்குக்கு மெருகூட்டும். ”

ஒரு சில விநாடிகள் தான் இன்னும் உள்ளன என்ற அவசர நிலையில் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க செய்தி சொல்பவர் கலையகம் ஓடிச்சென்றால்... செய்தியறிக்கையை அவரால் எவ்வாறு நேயர்களுக்கு பக்குவமாக சமர்ப்பிக்க முடியும்? செய்தியறிக்கையை முதற் தடவையாக வாசித்துப் பார்க்கையில், பின்னர் வானொலியில் தெளிவுபடச் சொல்வதை சுலபமாக்க குறியீடுகளை அவர் போட்டிருத்தல் கைகொடுக்கும்.

செய்தி சொல்லிக் கொண்டிருக்கையில் மனவோட்டம் தடுமாறினாலும் குறியீடுகள் அவரைக் காப்பாற்றிவிடும். கோடுகள், குறியீடுகள் போடாமல் எந்தக் 'கொம்பனாலும்' செய்தியை சிறப்புறச் சொல்லிவிட முடியாது. செய்தி சொல்பவரைப் பொறுத்தமட்டில் நேரம் தவறாமை, நேரமுகாமைத்துவம் மிகவும் முக்கியமானது. தொழில்நுட்ப உதவியாளர் அவரது குரலின் சமநிலையை அளவிட... கலையகக் கடிகாரம் சரியாக ஓடுகிறதா என் பதை நிச்சயப்படுத்த... ஒலிவாங்கியை அண்மித்து சிற்றூழியரால் முன்கூட்டியே வைக்கப்பட்ட ஒரு கிளாஸ் தண்ணீரில் ஒரு சில மிடறுகளையாவது குடித்திட... கலையகத்துக்கு பிந்திச் சென்றால் எவ்வாறு முடிந்திடும்?

தமிழ் வர்த்தக சேவைக் கட்டுப்பாட்டாளராய் கடமையாற்றிய விவியன் நமசிவாயம் கூறியிருந்த மந்திரம் ஒன்றை நான் கலையகங்களில் இடைவிடாது கடைப்பிடித்து வந்துள்ளேன்.

### மந்திரம்:

செய்தி வாசிக்க கலையகம் சென்று கதிரையில் அமர்ந்தவுடன் யோகப் பயிற்சி செய்திடுவீர்.

கலையகத்தில் யோகப்பயிற்சியா? அது சாத்தியமானதா? என்று உங்களில் யாரோ யோசிப்பது மானசீகமாகப் புரிகிறது.

அதிகமாக யோசனை செய்யாதீர்கள். யோகப்பயிற்சியின் ஒரு அம்சத்தை மட்டுமே செய்து கொள்ளுமாறு அவர் செய்தி சொல்பவர்களுக்கு ஆலோசனை தந்திருந்தார். அது மூச்சுப் பயிற்சி. மூச்சினை ஆறுதலாக ஆழமாக உள்ளிழுத்து மெதுவாக வெளிவிடுவது. அதுவும் சில தடவைகள்தான்.

என்ன நடக்கும்? ஆயாசம் கிட்டும். அழுத்தம் விலகும். மனம் இலேசாகி விசாலமாகும். கூடுதலான அளவில் ஒட்சிசன் வாயு உள்வாங்கப்படுவதனால் உள்ளம் இனம்புரியாமல் துள்ளும். உற்சாகம் பீறிடும். கிடைப்பது புத்துணர்வு. இந்தப் புத்துணர்வு, சொல்லும் சொற்களில் பரிமளிக்கும். கேட்பவர்களும் ஊக்கம் பெறுவார்கள். அழுது வடிபவர்களை ஆட்களுக்கு பிடிக்காது.

செய்தி வழங்கல் உயிரோட்டமாக, உற்சாகமூட்டுவதாக அமையுமே தவிர பலாத்காரமாக நேயர் காதுகளில் வலிந்து திணிப்பது போலல்ல. செய்தி சொல்பவர் தன்னம்பிக்கையுடன், நிச்சயமான முறையில், நம்பும்படியாக வாசித்தால் அதுவே போதும். செய்தி சொல்பவர் தான் பக்கச் சார்பற்றவன் என்ற தோரணையை புலப்படுத்த வேண்டியவர். எனது சொந்த விருப்பு வெறுப்புகளை எடுத்துக்காட்டும் களமல்ல செய்தியறிக்கை என்பதை செய்தி சொல்பவர் ஒவ்வொருவரும் மனதில் நிலைநிறுத்திக் கொள்வார்களாக.

கடுமையை தளர்த்தி சுலபமாக,
முக்காமல் - முனகாமல்,
திக்காமல் - திணறாமல்,
கதறாமல் - குதறாமல்,
கொஞ்சாமல் - குழையாமல்,
விழுங்காமல் - தளம்பாமல்,
தயங்காமல் - மயங்காமல்.

ஆடவன் என்றால் ஆண் தன்மையோடும், பெண்ணவள் என்றால் பெண் தன்மையோடும் எடுப்பாக மிடுக்காக குரல் எடுத்துச் சொன்னால் சாதாரண பரபரப்பற்ற செய்தியைக்கூட நேயர்கள் சொல்பவரின் ஆளுமையை மனதுக்குள் பாராட்டி செவிமடுத்தவாறு வானொலியை - தொலைக் காட்சியை விட்டு அகலாதிருப்பார்கள்.

செய்தி சொல்பவர் புத்திசாலியானால், செய்தியாசிரியருடன் சினேகபூர்வமாகப் பழகிக்கொள்வார்.

குரல் பழுதடையாமல் பார்த்துக்கொள்வார். மது, புகையிலை, குரலுக்கு தீங்கு தருவன.


பொறுப்பு மிக்க அறிவிப்பாளர் தடுமல், இருமல், தொண்டைக் கரகரப்பு என்று உபாதைகள் வந்துவிட்டால் கலையகம் செல்வதை தவிர்த்து விடுவார். மனோநிலை பாதிப்படையாமல் சீராக அதை வைத்திருக்கும் பாங்கினை வளர்க்கும் மார்க்கங்களை கண்டறிவார். வீட்டுப் பிரச்சினைகளை, அலுவலகத் தொந்தரவுகளை செய்தியறிக்கையுடன் சேர்த்து கலையகம் எடுத்துச் செல்லமாட்டார்.


சகபாடிகள், செய்தி சொல்லுகையில் அதை விமர்சனக் கண்ணோட்டத்துடன் கேட்டிடுவார். அதேவேலையில் தன்னை நோக்கி தொடுக்கப்படும் விமர்சனங்களை பகுத்தாராய்ந்து, ஏற்பதை ஏற்றுத் தவிர்ப்பதைத் தவிர்த்து தன்னைத்தானே புடம் போட்டுக் கொள்ள தயங்க மாட்டார்.

பாராட்டுக்கள் என்ற மலர் அழகான போதிலும் அதை அப்படியே லபக் என விழுங்கி விடமாட்டார். அதன் வாசனையை மட்டும் இலேசாக முகர்ந்து கொள்வார்.



mathialagan@thaiveedu.com




#1 RE/MAX
Outstanding Agent
for Outstanding Results.
FOR SALE
Birchmount/Highway 7
FOR LEASE
Bedrooms:1+1/ Washrooms:1
Markham
Rossland / Salem
FOR LEASE
Bedrooms:4 / Washrooms:3
Ajax
Simcoe St/Conlin Rd
FOR LEASE
Bedrooms:4/ Washrooms:4
Oshawa
Hwy 7 / Ninth Line
FOR LEASE
Bedrooms:3+1/ Washrooms:2
Toronto
Park Lawn/Lakeshore
FOR SALE
Bedrooms:1/ Washrooms:1
Toronto
Burnhamthorpe Rd / Living Arts
FOR SALE
Bedrooms:2+1/ Washrooms:2
Mississauga
Eglinton Ave/Leslie St
FOR SALE
Bedrooms:2+1/ Washrooms:2
Toronto
Yonge St/King Rd
FOR SALE
Bedrooms:3/ Washrooms:3
Richmond Hill
Morningside/Sheppard
FOR SALE
Bedrooms:3/ Washrooms:4
Toronto
Markham/14th Ave
FOR SALE
Bedrooms:4/ Washrooms:2
Markham
Box Grove/14th Ave
FOR SALE
Bedrooms:4+2/ Washrooms:5
Markham
Leslie / Elgin Mills
FOR SALE
Bedrooms:4/ Washrooms:4
Richmond Hill
Bayview/Bloomington
FOR SALE
Bedrooms:4/ Washrooms:5
Aurora
Taunton Rd W/Country Ln
FOR SALE
Bedrooms:3/ Washrooms:3
Whitby
RE/MAX Excel Realty Ltd., Brokerage*
Bus: 905.475.4750 Fax: 905.475.4770
50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
*Independently Owned And Operated
Not intended to solicit Sellers or Buyers currently under written contract with another Realtor.
Raj Nadarajah
Sales Representative
Dir: 416.333.6115
nanohomes@gmail.com

# Mortgage



## THE NEXT CHAPTER OF LIFE STARTS WITH A DREAM YOU CAN CALL HOME

BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216

TD Canada Trust
Scotiabank
Street Capital Financial Corporation
First National Financial LP
MCAP
National Bank of Canada
MERIX

**Suren Nathan** AMP
Mortgage Broker
License# M08004479

Dir. **416-436-1111**

Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8



-digi Media Creations-

# தனித்துவமான கலைஞன் கணபதி இரவீந்திரன்

- பொன்னையா விவேகானந்தன் -

தனித்துவ அடையாளங்களைக் கொண்ட சமூகத்தின் இருப்பிலும் எழுச்சியிலும் அச்சமூகம் சார்ந்த கலைகளுக்குப் பெரும் பங்கு உண்டு. தலைமுறைதோறும் இனத்தின் மரபுகளையும் விழுமியங்களையும் பண்பாட்டு நடத்தைகளையும் பேணிச்செல்வதில் கலைகளே சிறப்பிடம் பெறுகின்றன.

தாயகத்துக்கு வெளியே பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் பல்லினச் சூழலில் வாழும் நாம், இனம், மொழி, பண்பாடு சார்ந்து எமது அடையாளங்களைப் பேணிச் செல்வதில் பெரும் சவால்களை எதிர்கொண்டு வருகின்றோம். எமது வாழ்புலத்தில் இந்த சவால்களை எதிர்கொள்வதில் எமக்குத் பெருந்துணையாகத் திகழ்வன கலைகளே. கலைகளின் வழியே இப்புலத்தில் எம்மை நாம் இணைத்துக் கொள்வதிலும் இருப்பை வலுவாக்குவது தொடர்பிலும் பல முயற்சிகளைச் செய்து வருகின்றோம்.

ஒரு சமூகம் சார்ந்து, அதன் பண்பாட்டுத் தளத்தில் பயணித்து ஆற்றப்படும் கலை வடிவங்கள் அந்த மக்களை ஆற்றுப்படுத்துகின்றன. எதிர்ப்படும் சமூகச் சிக்கல்களுக்கும் சவால்களும் தீர்வைத் தர வல்லனவாக அமைகின்றன. அதனால்தான் கலைப் படைப்புகள் மானுட வாழ்வில் பெரிதும் போற்றப்படுகின்றன.

இந்த கலை முயற்சிகளின் வழியேதான் கணபதி இரவீந்திரன் என்ற கலைஞர் கனடா தமிழ்ச்சமூகத்துக்கு நெருக்கமாகின்றார்.

கலை வெளிப்பாடுகளில் அரங்க ஆற்றுகை எனப்படுகின்ற நாடகச் செயற்பாடுகள் முதன்மையானவை. வாழும் சமூகத்தின் பல்வேறு உணர்வுகளையும் இயல்பான நடத்தைகளையும் ஆற்றுகை வழியாக வெளிப்படுத்தி, சமூகத்தை, இனம் சார்ந்த வாழ்வியலோடு இணைக்கும் தன்மை அரங்க நிகழ்த்துகைகளுக்கு உண்டு.

இவ்வாறன கனடாத் தமிழரின் கலைப் பணிகளில் குறிப்பிடத்தக்க தனித்துவமான அரங்க ஆளுமையாகக் கலைஞர் கணபதி இரவீந்திரன் அவர்களைக் குறிப்பிடலாம்.

இந்த விசித்திரமான புலவாழ்விலும் பலருடைய நினைவுகளில் ஆழமாகப் படிந்து கிடக்கின்றன தாயக வாழ்வியலின் ஞாபகங்கள். அந்த மண்ணை இழந்த வலியும் இந்த மண்ணில் எதிர்கொண்ட வலிகளும் எமக்குள் எண்ணிலடங்காதவை. எமக்குள்ளேயே புதைந்து கிடக்கும் இந்த வலிகளைப் பல வடிவங்களில் அரங்க ஆற்றுகையாக வெளிப்படுத்தியவர் கணபதி இரவீந்திரன்.

அரங்க உத்திகளுக்கு அப்பால், வெகு இயல்பாக அன்றாடம் நாம் காணும் மானுடப் பண்புகளை வெளிப்படுத்திச் செல்லும் நாடக வெளிப்பாட்டில் கை தேர்ந்தவர் கணபதி இரவீந்திரன். யாதார்த்த வாழ்வை வெளிப்படுத்தும் வசனங்களும் சமூகச்சீர்கேடுகளை நையாண்டி செய்யும் உடல்மொழியும் இவரிடத்தில் நிறையவே உண்டு.

நடித்துக் காட்டுதல் அற்புதமான கலை வடிவம். சுவைஞர்களின் ஆழ உணர்வுகளுக்குள் ஊடுருவி, அவர்களின் ஆசாபாசங்களை வருடிச் செல்லும் மகத்துவம் இக்கலைக்கு உண்டு. மாந்தரின் கனவுகளும் ஆசைகளும் ஏக்கங்களும் தேவைகளும் தற்காலிகமாக நிறைவேற்றி வைக்கப்படும் இடம் கலையரங்குகளே. இதனால்தான் கலைஞர்கள் சிலவேளைகளில் தெய்வத்துக்கு நிகராக நோக்கப்படுகின்றார்கள்.

இவருடைய பல ஆற்றுகைகள் தாயக வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுவனவாக அமைந்திருந்தன. நாம் எதை இழந்து வந்தோமோ அதை அரங்க ஆற்றுகை வழியே கண்டுணர இவை வழி செய்தன.

நிகழ்வைக்காண வருகின்ற சிறுவர், பெரியோர், முதியவர் எனப்பல தரப்பட்டோரையும் ஈர்த்துச் செல்லும் தனித்துவத்தைக் கொண்டவர் கணபதி இரவீந்திரன்.

'நாடகக் கோபுரம்' என்ற நாடக அரங்கு பற்றி பலரும் அறிந்திருப்பீர்கள். அங்கு ஆண்டு தோறும் கணபதி இரவீந்திரன் அவர்களின் நாடகங்கள் அரங்கேறும். தாயக மண்வாசனையைச் சுமந்து வரும் அந்த அரங்கில் இவருடைய மாறுபட்ட நடிப்பு தனித்துவமாகவே தெரிந்தது.

நகைச்சுவையை எந்தளவுக்கு வழங்க வல்லவரோ அதேயளவு துயர உணர்வை வெளிப்படுத்தும் கதாபாத்திரங்களிலும் தான் வல்லவர் என்பதை ஒன்றாறியோ முது தமிழர் மன்றம் நடத்திய நிகழ்வொன்றில் வெளிப்படுத்தினார்.

நடிப்பில் உரையாடலுக்குத் தனித்துவமான சிறப்பு உண்டு. அரங்க ஆற்றுகையில் உடல்மொழியை விட உரையாடலுக்கே முதன்மை வழங்குவர். பார்வையாளர் எல்லோரையும் முகபாவங்களும் உடல்மொழியும் சென்றடையாது. ஆனால் உரையாடல் சென்றடையும்.

ஏற்கும் பாத்திரம் அறிந்து, அதன் உணர்வை புரிந்து, தேர்ந்த வசனத்தை உயிர்ப்போடு பேசவேண்டும். இதில் வல்லவர் கணபதி இரவீந்திரன். மண்ணின் மணம் சிறிதும் குறையாத அவருடைய உச்சரிப்பும் தேவைக்கேற்பத் தொனியைப் பயன்படுத்தும் திறனும் நிறையவே இவருக்கு உண்டு.

இவருடைய நாடகங்கள் பெரும்பாலும் இவரால் எழுதப்பட்டவையே. நடிப்பு என்பது வேறு, நாடகப் பிரதியை உருவாக்குவது என்பது வேறு. இவருடைய பல நாடகப் பிரதிகள் சமூக அக்கறையுடன் பல்சுவை கலந்து படைக்கப்பட்டனவாக இருந்தன.

இவர் எழுதி நடிக்கும் நாடகங்களை இவரே பெரிதும் இயக்கியிருக்கின்றார். அதுவே அவருக்கு இலகுவாகவும் இருந்தது.

அரங்குகளில் சூழ்நிலைக்கேற்ப, பொருத்தமான வசனங்களை மாற்றிப் பேசுவதில் இவர் வல்லவர். அவசியப்படும் போது பார்வையாளர்களையே கதாபாத்திரங்களாக்கி விடுவார்.

நடிப்பைப் போலவே ஒலிபரப்புத்துறையிலும் தனி முத்திரை பதித்திருக்கின்றார் கணபதி இரவீந்திரன். இருபது ஆண்டுகளுக்கு மேலாகக் கீதவாணி ஒலிபரப்பில் தன்னை இணைத்துக்கொண்டிருக்கும் இவர் தனக்கென ஒரு நேயர் வட்டத்தைத் தக்கவைத்திருக்கின்றார்.

நடிப்பு, எழுத்து என்பவற்றைக் கடந்து எழுத்துத்துறையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் இவர். கவித்துவ நடையோடு கூடிய எழுத்துகள் வாசிப்போரை ஈர்க்க வல்லவை.

கனடாத் தமிழரின் கலை நிகழ்த்துகை தொடர்பான வரலாற்றில் கணபதி இரவீந்திரனுக்கு நிரந்தர இடம் உண்டு. போராட்டங்கள் நிறைந்த புல வாழ்வியலில், சமூகத்தை ஆற்றுப்படுத்தும் நோக்கில் கலைஞர்களாகத் தம்மை வெளிப்படுத்தி நிற்பவர்களும் ஒருவகையில் போராளிகளே.




பொருளாதார இருப்புகளோடு போராடியபடியே, சமூகத் தேவைகளுக்காகவும் ஆன்ம நிறைவுக்காகவும் கலைப்பணி செய்பவர்கள் வரலாற்றில் பதியப்பட வேண்டியவர்கள்.

இவ்வகையில் கனடாத் தமிழச் சமூகத்தவரிடையே முக்கியத்துவம் பெற்றவராகத் திகழ்கின்றார் கலைஞர் கணபதி இரவீந்திரன் அவர்கள்.

தன்னுடைய கலைவாழ்வில் ஐம்பது ஆண்டுகளை எட்டியிருக்கும் கலைஞர் கணபதி இரவீந்திரன் சமூகம் சார்ந்து ஆழமான படைப்புகளை உருவாக்க வேண்டும். சிறந்த படைப்புகள் வரலாற்றில் ஓர் அங்கமாகும் என்பதை நன்கு உணர்ந்திருப்பவர் இவர்.

தொடரட்டும் அன்புச்சகோதரரின் கலைப் பணி.

*vivekanandan.p@thaiveedu.com*



www.inayam.net
தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்
inayam.net
முற்றிலும் இலவசம்
inayam

# 'கலைவேந்தன்' கணபதி ரவீந்திரன் எம் கலைச்சொத்து

புலம் பெயர்ந்து வாழ்கின்ற எம்மை தனது கலைத்திறனால் மகிழ வைத்துக்கொண்டிருக்கின்ற கணபதி ரவீந்திரன் இந்த மண்ணுக்குக் கிடைத்த ஒரு கலைச்சொத்து. என்றும், எப்போதும் ஏதோவொரு வடிவத்தில் எம்மை மகிழவைக்கின்ற அவரின் அளவற்ற ஆற்றல் மிகப் பெரியது 'என் வாழ்க்கையே என் செய்தி' (My Life is My Message) என்பதற்கு இணங்க வாழ்ந்து வரும் அவர் பன்முக ஆற்றல் கொண்டவர். தனது 50 வருட கலைப் பயணத்தைத் தொட்டிருக்கும் அவர், நகைச்சுவை உலகில் அழுத்தமான முத்திரை பதித்தவர்.

கணபதிப்பிள்ளை - நல்லம்மா தம்பதிகளுக்கு மகனாக 1953ம் ஆண்டு பிறந்த இவர், நல்லூர் கச்சேரி வீதியில் தனது இலமைக்காலத்தைக் கழித்தார். விளையும் பயிரை முளையில் தெரியும் என்பதற்கிணங்க படிக்கின்ற போதே படிப்பாற்றலும் நடிப்பாற்றலும் அவருடன் கூடவே வந்தது. யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த வேளையில் ஆசிரியர்களையே அசத்திவிடும் ஒரு கலைஞனாக உருவானார்.

தொழில் ரீதியாக ஈழநாடு பத்திரிகையில் தனது பதினைந்தாவது வயதில் நல்லூர் பகுதி நிருபராக இணைந்து, உதவி ஆசிரியராக உயர்ந்து, மொத்தம் பதினைந்து ஆண்டுகள் ஈழநாடு பத்திரிகையில் பணி செய்திருக்கிறார். இதனால் பல எழுத்தாளர்களது அறிமுகம் இவருக்கு கிடைத்தது. அவர்களில் முக்கியமானவர்கள் மகாகவி உருத்திரமூர்த்தி, கீழ்க்கரவை பொன்னையா, காவலூர் ஜெகநாதன், சொக்கன், செங்கை-யாழியான், நா. கந்தசாமி, சில்லையூர்ச் செல்வன், மகாதேவன் மாஸ்ரர், கே.எஸ். பாலச்சந்திரன் போன்றவர்களைக் குறிப்பிடலாம். இதனால் அவரது எழுத்துத்துறை மட்டுமன்றி பல மேடைகளில் நடிப்பு ஆற்றலும் மிளிர்ந்தன. இவரது முதலாவது நாடகமான 'சாம்பிராட் அசோகன்' இல் தொடக்கி 'உயிர் கொடுத்த உத்தமன்' வரை பல நாடகங்களில் பிரதான பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளார். பெண் வேடங்களைப் போடுவதிலும் இவர் பின்நிற்கவில்லை. கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் முத்தமிழ் விழாவில் இவர் எழுதிய 'தூது' என்ற கவிதைக்கும் 'அலை கடல்' என்ற சிறுகதைக்கும் முதலிடம் கிடைத்தது. அரியாலையில் 60வது சுதேசிய திருநாள் கொண்டாடத்தின் போது நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்றுக்கொண்டார். சிறந்த நடிகராக, எழுத்தாளராக, ஆசிரியராக, இயக்குநராக, ஓவியராக என்று பல்வேறு பரிமானங்களுடனேயே கனடாவுக்கு புலம் பெயர்ந்தார். இடையில் சில ஆண்டுகள் இவர் மத்திய கிழக்கு நாடொன்றில் வாழ்ந்திருந்தாலும் அவரது முழுமையான கலைப்பணி கனடிய மண்ணிலேயே இடம்பெற்றது.

கனடாவுக்கு வந்த இவருக்கு டாக்டர் பிகராடோவினால் தயாரிக்கப்பட்ட 'ஓட்டை' என்ற நாடகத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. பின்னர் உதயன் பத்திரிகையின் இரண்டாவது ஆண்டுவிழாவில் சுந்தரேஸ்வரன் என்ற கலைஞரின் இயக்கத்தில் உருவான 'சிதம்பரசக்கரம்' என்ற நாடகத்தில் மேடையேறினார். மது போதையுடன் சபையில் இருந்து 'எக்ஸ்க்யூஸ்மி உங்களுக்கு ஏதும் பிரச்சினையோ' என்ற கேள்வியோடு மேடையேறினால் போதும்... எல்லோரும் மகிழ்சிக் கடலில் மிதப்பார்கள். எந்தப் பிரச்சினையும் இன்றி தீவிர ஆற்றலுடன் நகைச்சுவைகளைத் தந்துகொண்டிருப்பார். இடமறிந்து, அங்க அசைவுகள் மூலம் பார்வையாளர்களைத் தன் கட்டுக்குள் வெத்திருப்பார். இதுவரை கிட்டத்தட்ட 1000 நாடகங்களுக்கு மேல் இவர் ரொறன்ரோ, மார்க்கம் போன்ற நகரங்களைச் சுற்றி உள்ள நகரப் பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்கள், ஊர்ச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் என்பனவற்றிலும் மிசிஸ்சாகா, பிரம்டன், ஒட்டாவா, கோன்வால், மொன்றியால் போன்ற நகரங்களிலும் இவரது நாடகங்கள் இடம் பெற்றுள்ளன. இவரது கலையுலக தாரகையாக 'நவரசத்தாரகை' ரூபி. யோகதாசனும் இணைந்த வேளையில் மேலும் வளர்ச்சி பெற்ற கலைஞராகத் திகழ்ந்தார்.

இவரது நாடகப் பங்களிப்புக்கு அப்பால் திரைப்படத்துறையிலும் காலடி படைத்தார். 'கனவுகள்', 'மனசு', 'உறவுகள்', 'அதிகாலை 26' போன்ற படங்களில் நடித்துள்ளார். முறையே 2002, 2004ம் ஆண்டுகளில் ரூபி. யோகதாசனின் தயாரிப்பில் உருவான 'கதிரொளி', 'கனடியன்' ஆகிய படங்களிலும் நடித்துள்ளதுடன் உதவி இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

இவரது கவிதையாற்றலும் மிகவும் சிறந்ததொன்று. பல பத்திரிகைகளிலும் வானொலிகளிலும் தனது படைப்புக்களை காலத்திற்குக் காலம் தந்துள்ளார். இந்த வேளையில் தனது தமிழ் அறிவினை மேலும் வளர்க்கவேண்டி பாரிய வேலைப்பளுக்களுக்கு இடையேயும் கனடாவில் இயங்கிவரும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பட்டதாரி வகுப்பில் சேர்ந்தார்.

SS Creations மூலமாக பல கலைப்படைப்புக்களையும் உருவாக்கிய இவருடன் ரூபி. யோகதாசனும் இணைந்து 2005ம் ஆண்டில் 'கனடியத் தமிழ் கலைஞர்கள் சங்கம்' என்ற ஒரு சங்கத்தை உருவாக்கினார்கள். அதன் மூலம் ஆண்டுதோறும் 'நாடகப் பெருவிழா' என்னும் நாடக விழாவை கடந்த பதின்நான்கு ஆண்டுகளாக நடத்தி வருகிறார்கள். இந்நாடக மேடைக்கு எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர்களின் பெயரையே சூட்டி மகிழ்வது இதில் சிறப்பான அம்சம்.

இவரது வானொலியூடான சேவை மிகப் பெரியது. கனடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம் (CTBC), கனடியத்தமிழ் வானொலி (CTR), கீதவாணி, உலகத் தமிழ் வானொலி (GTR) போன்றவற்றில் பலவிதமான பணிகளை ஆற்றியுள்ளார். கீதவாணியில் இவரது 'தமிழ்க்குடில்', ரூபி. யோகதசனின் 'குங்குமச்சிமிழ்', 'அகரம் தமிழுக்கு சிகரம்' போன்ற தலைப்புக்களில் இங்குள்ள பாடசாலைகளின் பிள்ளைகளையும் எழுச்சி பெறச் செய்தனர். இங்குள்ள பல இசைக் கலைஞர்களை உருவாக்கிய பெருமை இவர்களுக்கு உண்டு. நீண்டகாலமாக இவர்களது வானொலியில் பாடல்களைப் பாடிவந்த வராகி விஜயராஜ், மயூரன் தனஞ்செயன், சுபவீன் பவானந்தன், அபிநயா பவானந்தன், அஸ்விகா குமரேஸ்வரன், குபேரகா குமரேஸ்வரன் போன்ற கலைஞரகளை ஊக்கம்கொடுத்து, அவர்கள் உயர்வில் பெருமைகண்டவர். கீதவானொலி வானொலியில் 'ஒரு ஓவியம் காவியமாகிறது' என்ற நாடகத்தை 16 வாரங்களாக தொடர்ந்து நடத்தியவர். கீதவாணி வானொலி மூலம் 'கதிரொளி' சேவையை தனித்துவமாக நடத்திவருகிறார்கள்.



நிகழ்ச்சித் தொகுப்பாளராக இவர் செய்த சேவையும் குறிப்பிடப்பட வேண்டியதொன்று. கணீர் என்ற குரலால் தொடர்ந்து பேசக்கூடிய ஆற்றல் அவருக்கு இருந்தமையால் பலரும் விரும்பி அழைப்பதுண்டு. இங்குள்ள பழைய மாணவர்கள் சங்கங்கள் பலவற்றில் பல கலை நிகழ்வுகளைத் தொகுத்து நடத்திய வேளையில் உரும்பிராய் இந்துக் கல்லூரி பொங்கல் விழா குழுவும் கௌரவிக்க விரும்பியது. மெகா பாட்டி ஹால் (Mega Party Hall) உரிமையாளர் ஜெகன்

- எஸ். பத்மநாதன் -

அவர்கள் என்னை அழைத்து இவருக்குப் பொருத்தமான ஒரு பட்டம் சூட்டுவது பற்றி ஆலோசித்தார். அப்பொழுது எனது எண்ணத்தில் தோன்றியதே 'கலைவேந்தன்' என்பதாகும். உண்மையான உழைப்பும் திறனும் கொண்ட இவருக்கு இப்பட்டம் மிகவும் பொருந்திவிட்டது. இதே போன்று 'கலைக்குரிசில்' என்ற பட்டமும் வழங்கப்பட்டது. நேர்மையான கருமமே உண்மையான கடவுள் என்பதனை நம்பினார். தனது தாயை பணிந்தே ஒவ்வொன்றையும் தொடங்குவார். இன்றும் அவர் பணிதொடர்கிறது.

தொலைக்காட்சியில் தோன்றுவது இவரது அடுத்த பரிமாணம். TVI யினரின் கே.எஸ். பாலச்சந்திரன் நடத்திய 'வைத்திலிங்கம் சோ' நிகழ்வில் நடித்துள்ளார். தொடர்ந்து தமிழ் வன் (Tamil One) தொலைக் காட்சி மூலம் 'இது தாண்டா இம்சை' என்ற நகைச்சுவை நாடகத்தை சில ஆண்டுகளாக நடத்திவந்துள்ளார்.

கணபதி ரவீந்திரனின் சகல முன்னேற்றத்திற்கும் ரூபி. யோகதாசன் உதவி வருகிறார். இவர்கள் இணைந்த நகைச்சுவைக் காட்சிகளில் தற்போதைய எங்கள் பிரச்சினைகள், குடும்ப நிலவரங்கள், இளையோர் படும் இன்னல்கள், முதியோர்களின் அவலங்கள் எல்லாமே வரும். அற்புதமான இம்முயற்சி மூலம் இவர்களது நடிப்புத்திறன் பலரது உள்ளத்தினையும் மாற்றிவருகிறது. இந்த மண்ணில் இருந்து சென்று ஐரோப்பிய நாடுகளிலும் தமது கலையாற்றல்களை வெளிப்படுத்திவருகின்றனர். கொழும்பில் தமிழ்ச் சங்கத்திலும் இவர்களது நகைச்சுவை நாடகமும் இடம்பெற்றது. ஐரோப்பிய பயணத்தை ஒரு பயணக்கட்டுரையாக உதயன் பத்திரிகையில் வெளியிட்டார். நாமும் ஐரோப்பாவுக்கு சென்று திரும்பிய உணர்வே அதில் மேலோங்கி நின்றது.

'தமிழுக்கு தொண்டு செய்வோர் சாவதில்லை' என்ற பாவேந்தரின் வரிகளுக்கும் 'திறமைக்கு வணக்கம் செய்தல் வேண்டும்' என்ற பாரதியின் வரிகளுக்கும் மிகவும் பொருத்தமாகி நிற்பவர் கணபதி ரவீந்திரனாவார். நாட்டுப்பற்று, மொழிப்பற்று, கலைப்பற்று என்பவற்றுடன் கூடிய அவரது சிந்தனை இந்த அளவுக்கு அவரை உயர்த்தியுள்ளது என்றே கூறவேண்டும். ஆங்கிலம் பேசும் நாடொன்றில் தொடர்ந்தும் எமது நாக்கு தமிழ் பேச, ஆங்கில உச்சரிப்புக்கொள்ளும் மழலைக்கு வணக்கம் சொல்ல, வாய்திறந்து இசைக்காத இளையோர்க்கு இசைக்கவைக்க, சிரிக்கவே தெரியாத பலரைச் சிரிக்கவைக்க இவர்போன்றோர் பட்டபாடுகள் பல. அவரது வாழ்வுக்காலம் 50 வருட சேவைக்காலம். தொடர்ந்து வளம் பெற வாழ்த்துவோம்.



*pathmanathan.s@thaiveedu.com*



# Insurance to Meet Your Needs

*Call me for a no obligation quote today!*

**RAJI LINGHAN**
Ajax Agency
15 Westney Road N.
Cell: 416 817 5060
905-427-2827 Ext. 5020



Allstate®
You're in good hands.

*Inclusive of all other discounts applied to Allstate's base rates. Terms and conditions apply and may vary by region. Rates and discounts subject to change. ®Trademark used under licence by Allstate Insurance Company



வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

# Excellent plaza for Sale



## தரம் மிக்க நிறுவனங்கள் சிறந்த முதலீடு!

முதன்மை வாய்ந்த இடம்,
பெருமளவு வாடிக்கையாளர்களை
உள்ளடக்கிய வணிகச் சுற்றாடல், அனைத்துப்
பொருட்களையும் கொண்ட உயர்வான
பராமரிப்பில் பேணப்பட்ட நிலையம்,
போதிய வாகனத் தரிப்பிட வசதி,
றொறன்ரோவில் இருந்து
30 நிமிடத் தூரம் மட்டுமே.

**Cell: 416 880 8585**

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE INDEPENDENTLY OWNED AND OPERATED
#3-1286 Kennedy Rd, Scarborough, ON M1P 2L5

416 270 1111



BASKARAN SINNADURAI
BROKER
Cell:416.880.8585
baskaran.toronto@hotmail.com

# திருக்குடும்பக் கன்னியர் மடம் - யாழ்ப்பாணம்

- முருகேசு பாக்கியநாதன் -

## அறிமுகம்:

இப்பாடசாலையின் தொடக்கமானது 1845ம் ஆண்டு பிஷப் பெற்றாசினி (Bishop Bettachini) அவர்களால் தொடக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஆண்களுக்குத் தனியான ஒரு பகுதியும் பெண்களுக்கான ஒரு பகுதியியும் தொடங்கப்பட்டது. முதலில் ஆங்கிலக்கல்வியே வழங்கப்பட்டது. பெண் கள் பாடசாலை அமைதியான சூழலில் சில காலத்திற்கு முன்பு வாடி வீடு (Rest House) அமைந்திருந்த மூன்றாம் குறுக்குத்தெருவில் அமைக்கப்பட்டது. பாடசாலையை மேற்பார்வை செய்ய திருமதி மேரி ஆன் ஓ'பிளங்னகன் (Mrs Mary Anne O'Flanagan)அமர்த்தப்பட்டார். இவர் ஐரிஸ் இராணுவ அதிகாரியாகக் கடமையாற்றியவராவர்.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பத்தில் பிரான்சைச் சேர்ந்த றோமன் கத்தோலிக்க சபையினரே இங்கு வந்து கத்தோலிக்க மதசேவை புரிந்தனர். இவர்களே பாடசாலைகள் அமைப்பதிலும் ஏனைய கிறிஸ்தவ சபையினர் ஈடுபட்டது போன்று ஈடுபட்டனர். முதலில் மெதடிஸ்ட் சபையினருக்கும் அமெரிக்க - சிலோன் சபையினருக்கு மட்டுமே பாடசாலைகளை அமைக்க அரசு அனுமதி அளித்திருந்தது. ஏனைய மதப்பிரிவுக ளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதன் காரணமாக Bishop Bettachini அவர்களது தலைமையில் ஒரு குழுவினர் பிரித்தானிய அரசாங்கத்தைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதன் காரணமாக கத்தோலிக்க மதம், சைவ சமயம் போன்ற சமயங்களுக்கும் பாடசாலை அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. இதன் பின்பே யாழ்ப்பாணத்தின் முதல் கத்தோலிக்க கல்லூரியான புனித சம்பத்தரிசியார் கல்லூரி 1850ல் நிறுவப்பட்டது. அதன் பின்பு 1862ல் இப்பாடசாலை யாழ்ப்பாணம், திருக்குடும்பக் கன்னியர் மடம் என்ற பெயரைப் பெற்று இயங்கியது. இதன் பின்பே கீழே தரப்பட்ட அட்டவணைகளின்படி கத்தோலிக்க பாடசாலைகளை அமைந்தன.

- புனித சம்பத்தரிசியார் கல்லூரி 1850
- யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம். - 1862
- புனித ஜோசப் கல்லூரி, திருகோணமலை 1867
- புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை 1872
- புனித சிசிலியா பெண்கள் உயர்தர பாடசாலை, மட்டக்களப்பு 1876
- புனித மைக்கல் கல்லூரி, மட்டக்களப்பு 1873
- புனித ஹென்றீஸ் கல்லூரி, இளவாலை 1877
- இரம்பைக்குளம், புனித கன்னியர் மடம், வவுனியா 1890
- வதிரி திரு இருதையக் கல்லூரி -(வருடம் சரியாகத் தெரியவில்லை)

## திருக்குடும்ப கன்னியர் மடம் நிறுவுதலும் அவர்களின் யாழ்ப்பாண வருகையும்:

பிரஞ்சுப் புரட்சிக்குப் பின்னர் பிரான்சில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. திருக்குடும்ப நிறுவனம் (Holy Family Association) வணக்கத்திற்குரிய பீறி நொய்லீஸ் (Venerable Pierre Noailles) என்பவரால் பிரான்சில் நிறுவப்பட்டது. அதனைத் தொடர்ந்து அதன் கிளைகள் ஐரோப்பா முழுவதும் அமைக்கப்பட்டன. இதனை அறிந்த யாழ்ப்பாணம் பிஷப் அதி.வண. டாக்டர் ஜே.எஸ். சிமேரியா இங்கும் கொன்வன்ட் பாடசாலைகளின் கல்வியைப் பெறும் பொருட்டு அவர்களை அணுகி இலங்கையிலும் அதன் கிளையை அமைத்தார். ஆனால், அவரது மரணம் அதனைச் சிறிது பின்போட்டது.

1862 செப்ரெம்பர் 6ம் திகதி ஆறு கன்னியாஸ்திரிகள் பிஷப் சிமேறியா அவர்களின் உதவியால் பிரான்சில் இருந்து கப்பல் ஏறி காலி துறைமுகத்தை வந்தடைந்தார்கள். இலங்கைக்கு வந்த முதல் கன்னியாஸ்திரிகள் என்ற வகையில் பலர் கூடி வரவேற்றார்கள். அவர்கள் காலியில் இருந்து புறப்பட்டு நவம்பர் 2ம் திகதி 1862ல் யாழ்ப்பாணம் வந்தடைந்தார்கள். அன்றே திருமதி பிளன்நகன் அவர்கள் அந்தச்சிறிய பாடசாலையைக் கன்னியாஸ்திரிகளிடம் கையளித்தார். வந்தவர்களுள் அன்னை ஹெலன் வின்ரர் அவர்கள் முதல் அதிபராக நியமிக்கப்பட்டார். முதலில் 100 தமிழ் சிறார்களுடன் அங்கு வேலை செய்த ஐரோப்பியர்களின் பிள்ளைகளான 12 ஐரோப்பிய சிறார்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அவர்களுக்கு ஆங்கிலக்கல்வியே போதிக்கப்பட்டது.



முதல் அதிபர்
அன்னை ஹெலன் வின்ரர்




## நோக்கம் (Vision):

'நிலைத்திருக்கும் அபிவிருத்தியில் பெண்களின் பங்கை இயைபுபடுத்துதல்' என்பதற்கமைய எமது பாடசாலையில் அன்றாட மனித விழுமியங்களைப் பேணிக் கலாசார இணைப்பாடு, சமூக இசைவாக்கத்துடன் முன்னெடுத்துச் செல்லக்கூடிய நேர்திறன் கொண்ட பெண்ணிய சமுதாயத்தை முன்மாதிரியாக உருவாக்கி, மாறிவரும் உலக விரைவிற்கேற்ப, அறிவு, சிந்தனை, ஆற்றல், செயற்றிறன், சேர்ந்து வாழ்தல் பண்பு கொண்ட பொருத்தமான மனித வளமாக மாற்றுவதில் இறைவனின் மகிமையைக் காணல்.

## இலக்குகள் (Mission):

- கட்டாயமான அடிப்படைக் கல்வியைப் பெறுவோர் தொகையை அதிகரித்தல்.
- மாணவர் கல்வி அடைவு மட்டத்தை எல்லா நிலைகளிலும் உயர்த்துதல்.
- நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான மூலதனத்தை உருவாக்குதல்.
- நாட்டிற்குரிய சிறந்த ஆளுமை, ஆன்மீகம் நிறைந்த குடிமக்களை உருவாக்குதல்.
- பாடசாலையில் ஆரோக்கியமான கவின் நிலையை உருவாக்குதல்.
- தொழில் விருத்தியையும் தலைமைத்துவ ஆற்றலையும் வளர்த்தல்.
- பாடசாலையின் முகாமைத்துவத்தை வினைத்திறன் உடையதாகவுள்ள பணிகளைப் பரவலாக்கல்.

## தேசிய பாடசாலை:

கொன்வன்ற் பாடசாலை இரண்டு பிரிவுகளாக இயங்கிக் கொண்டிருந்தது. ஒன்று 'தமிழ் கொன்வன்ற் மகாவித்தியாலயம்' என்ற தமிழ்ப் பிரிவுப் பாடசாலையாகவும், மற்றது 'திருக்குடும்பக் கல்னியர் மடம்' பாடசாலை ஆங்கில மொழி மூலமாகவும் தமிழ் மூலமாகவும் கல்வி போதித்துக் கொண்டிருந்தது. பாடசாலையின் நிர்வாக வசதிக்காகவும் ஒருமுகக்கல்வியை வழங்கும் முகமாகவும் 2002ம் ஆண்டு இரண்டு பாடசாலைகளும் ஒருங்கிணைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2010ம் ஆண்டு பாடசாலையானது 'தேசியப் பாட சாலையாக' தரம் உயர்த்தப்பட்டது. இது 1AB தரம் கொண்ட தேசிய பாடசாலையாகும்.

## அதிபர்கள்:

1862-1891 அன்னை ஹெலன் வின்ரர்
1891-1916 அன்னை டியு கார்மேல் பிளன்நகன்
1916-1926 அன்னை செபஸ்ரியன் ஓ' பிறைன்
1926-1937 அன்னை லோயலா ஓ' டொனோகூ
1937-1951 அன்னை இவாஞ்சலிஸ்ட் மக்வோய்
1951-1969 அன்னை ஜோசபின் ரைனன்



அதிபர்
அன்னை ஜோசபின் ரைனன்

1970-1975 சகோ மாட்டினா வேலுப் பிள்ளை
1975-1988 சகோ அன்ரனி ஜோசப் பிரகாசம்
1988-2004 சகோ ஜோலண்டி மத்தியாஸ்
2004-2011 சகோ மேரி தாஸ்நவிஸ் லடிஸ்லோஸ்
2011-2015 சகோ தயாநாயகி செபமாலை
2015 முதல் வண சகோ அன்ரோனியா மார்க்

அதிபர் அன்னை இவாஞ்சலிஸ்ட் மக்இவோய் காலத்தில் 1938ம் ஆண்டு லண்டன் மெற்றிக்குலேஷன் வகுப்புக்களைத் தொடக்கி வைத்தார். அப்பரீட்சை எழுதியோர்களில் பலர் திறமைச் சித்தியுடன் பல்கலைக்கழகத் தேர்சியில் கலைப்பாடத்திலும் விஞ்ஞானப் பாடத்திலும் சித்தியெய்தினர். பாடசாலை விளையாட்டிலும் சிறந்து விளங்கியது. 1937ல் ரெனிஸ், பாட்மின்ரன், மற்றும் ரொனிக்கோயிற் ஆகிய விளையாட்டுக்களில் முதல் இடத்தினைப் பெற்றார்கள்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் அதிபர் அன்னை ஜோசபின் ரைனன் அவர்கள் பாடசாலை நிர்வாகத்தில் முன்னிலை பெற்றார். 1951ல் இருந்து பாடசாலையின்

தொடர்தல் 54ம் பக்கம்

நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

LIFEPLAN INVESTMENTS

PLAN. BUILD. PROTECT

# Your Financial Planing Firm.

**Led by Experience, Driven by Relationships.**

**Build a career with purpose and make a difference.**

- Professional planning approach with full transparency to clients.
- We focus on advisor development, training, education and growth.
- Cutting-edge technology to help clients and advisors to build your business.
- Mentoring, coaching, case support by experienced managers, experts and planners.

**Join Our Professional Financial Planning Team**
**careers@lifeplaninvestments.ca**



Ahilan (Akil) Balachandran. CFP, CLU, CHS, EPC
Founder and CEO
610-3601 Highway 7 East, Markham, ON. L3R 0M3
Dir: 416.894.2009
Office: 905.924.PLAN (7526)
ahilan@lifeplaninvestments.ca

www.lifeplaninvestments.ca

CFP





# JM ACCOUNTING AND FINANCIAL SOLUTION INC.

*"We provide reliable year around Tax and Accounting services."*

**Our Services included:**

* E- file
* Personal Tax Returns (T1)
* Self-Employed Tax Returns
* Business, HST and Payroll Registrations & Bookkeeping
* Corporate Tax Returns (T2)
* Canada Revenue Agency's Audit assistance

**Starting from $24.90 Plus tax**

Phone: (647)- 351- 5622 / (416)- 722-5338 Fax: (647)- 351- 5620
1193A, Brimley Road, Suite 5, Scarborough, ON, M1P 3G5
jmaccfinancial@gmail.com

## சொல்லத்தான் நினைக்கிறேன்

அருண்மொழிவர்மன்

24

### பாலியல், காமம் காதல், பெண் பெண்ணியம் - ஓர் ஆண் நிலை நோக்கு:

# உரையாடற் குறிப்புகள்

## குறிப்பு:

மீராபாரதி எழுதிய ‘பால் பாலியல், காமம் காதல், பெண் பெண்ணியம் - ஓர் ஆண் நிலைநோக்கு’ என்கிற நூலின் வெளியீட்டு விழா ரொறன்ரோவில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தபோது அந்நிகழ்வில் பால் பாலியல் என்பதை மையமாகக் கொண்டு கட்டுரை ஒன்றினை வாசிக்கும்படி நூலாசிரியர் மீராபாரதி கேட்டிருந்தார். இந்நூல் பேசுகின்ற விடயமும் அது பற்றி மீராபாரதி அவர்கள் கொண்டிருக்கின்ற அக்கறையும் முக்கியமானது. அந்த வகையில் இந்நூலையும் அதில் உள்ள கட்டுரைகளையும் தன் அக்கறையின் பாற்பட்டும், தான் கொண்ட கருத்தியலின் மீதிருக்கும் நம்பிக்கையின் பாற்பட்டும் மீராபாரதி தன்னோடும் சமூகத்தோடும் தொடர்ச்சியாக நடத்திய உரையாடல்களின் தொகுப்பாகவே நான் இனங்காணுகின்றேன். நான் உரையாடல்களில் நம்பிக்கைகொண்டவன். காத்திரமான உரையாடல் ஒன்று நிகழும்போது அது இரு தரப்பினரையும் தம்மை சுயவிமர்சனம் செய்யவும் தாம் கொண்டிருக்கும் கருத்தியல்கள் பற்றி மறுபரிசீலனை செய்யவும் உதவும் என்றும் நம்புகின்றேன். அந்த நம்பிக்கையின் பாற்பட்டு, பெண்விடுதலை மீதும், சமத்துவம் பற்றியும் அக்கறை கொண்டவன், அதை இயன்றவை தனிப்பட்ட வாழ்விலும் பயில முனைபவன் என்றவகையில் இந்நூலுடன் தொடர்புடைய என் தேடல்கள், தெளிவுகள், அவதானங்களை இங்கே பகிர்ந்துகொள்கின்றேன். குறிப்பாக பெண் விடுதலை, ஆணாதிக்கம் மற்றும் இவை சமூக அளவில் ஏற்படுத்தியிருக்கின்ற தாக்கங்களைப் புரிந்துகொள்கின்ற முயற்சியாக இந்தக்கட்டுரை அமையும். அத்துடன்

இந்தக் கட்டுரையானது இந்த நூலின் உள்ளடக்கத்தினைக் குறித்த மதிப்பீடாகவோ அல்லது விமர்சனமாகவோ இல்லாமல், இந்த நூல் பேசுகின்ற விடயப்பரப்பினைக் குறித்த ஓர் உரையாடலை உருவாக்கவும், பங்கேற்கவும் செய்கின்ற முயற்சியாகவே அமையும். மிக ஆழமாகப் பேசவேண்டிய இந்த விடயங்கள் குறித்து கட்டுரையின் அளவு கருதி மிக சுருக்கமாகவே இந்தக்கட்டுரையில் பேசமுடிகின்றது.

இந்நூல் வெளியீட்டுவிழா ரொறன்றோவில் 2015ம் ஆண்டு மார்ச் மாதம் இடம் பெற்ற போதும் நூல் அச்சாகி வெளிவருவதில் சில தடங்கல்கள் ஏற்பட்டு, 2017ம் ஆண்டிலேயே நூல் வெளிவந்தது. அதன் காரணமாக இந்தக் கட்டுரையை நான் பகிர்ந்து கொள்வதும் தாமதமாகியது.

பெண்ணியம் என்று பேச முனையும் போது தவிர்க்கவேமுடியாமல் ஆணாதிக்கம் என்பது பற்றியும் பேச வேண்டியதாகின்றது. ஆண்களாலும் ஆண்களை முதன்மைப்படுத்தியும் பெண்கள் மீதும் ஆண்கள் உள்ளிட்ட சமூகத்தின் மீதும் நிகழ்த்தப்படுகின்ற ஒடுக்குமுறை என்று ஆணாதிக்கத்திற்கு அர்த்தம் கொள்ளலாம் என்றாலும், ஆணாதிக்கம் எப்படி செயற்படுகின்றது எவ்விதம் தாக்கம் செலுத்துகின்றது என்பதை ஆழமாகப் புரிந்துகொள்ள ஆணாதிக்கத்துக்குக் காப்பாக இருக்கின்ற ‘தந்தைமை’ (Patriarchy) பற்றிப் புரிந்துகொள்ளவேண்டும்.

பால்நிலை சார்ந்த உரிமைகளும், அவர்களுக்கான சமூக நிலையும் வரலாற்றின் எந்தக் காலப்பகுதியிலும் ‘நியாயத்தின்படியாக’ அமைந்ததாகக் கொள்ளமுடியாது. அந்த அந்தக் காலப்பகுதியில் நிலவிய நம்பிக்கைகள் /மூட நம்பிக்கைகள் சார்ந்தும், வழமைகள் சார்ந்தும், மருத்துவ வசதிகள், பொருளாதார முறைகள் உள்ளிட்ட காரணிகள் செலுத்திய தாக்கம் என்பவற்றின் அடிப்படையிலேயே பால்நிலைகளுக்கான உரிமைகளும் சமூக நிலைமைகளும் நிலவின. எனவே அந்த அந்த சமூக ஒழுங்குகளையும் சமூக உறவுகளையும் காக்கும் நோக்குடன் அவற்றைப்பேணவும், அவ்வாறு பேணும்விதத்திலான பெரும்பான்மையினரை முன்னிலைப்படுத்தியும் அவர்களது நலன்களை உறுதிப்படுத்தியும் வழமைகள் உருவாகின. காலத்துக்கு காலம் அவ்வாறு உருவாகிய முறைமைகள் நீண்ட கால ஓட்டத்தில் சமூக பொருளாதார உறவுகளிலும் உற்பத்தி முறைகளிலும், மொழி மற்றும் பண்பாட்டு நிறுவனங்களூடாகவும் எம்மால் இன்று உணர்ந்து கொள்ளக்கூட முடியாத அளவு நுணுக்கமாகத் தாக்கம் செலுத்துபவனவாகவும், சமூக அசமத்துவத்தைப் பேணுவதாயும், தொடர்ச்சியான ஒடுக்குமுறைகளுக்கு ஆதாரமாயும் மாறிப்போயின.

மனிதன் சேர்ந்து வாழத்தொடங்கிய காலங்களில் தொல்குடிகளின் மரபாக தாய்வழிச் சமூகங்களையும், தந்தைமை சமூகங்களையும் இனங்காண முடியும். ஒப்பீட்டளவில் தந்தைமை சமூகங்கள் தாய் வழி சமூகங்களைவிட சிக்கலான உறவுமுறைகளையும், இறுக்கத்தையும் கொண்டவை. இன்றுவரை தாய்வழிச் சமூக அமைப்பின் செல்வாக்கை கேரளாவிலும் மட்டக்களப்பிலும் காணமுடியும்.

தொல்குடிகளிடம் மனிதக்கருவுறுதல் அதிகரிப்பது பயிர்களின் விளைச்சலையும் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை காணப்பட்டது. எனவே மனித கருவுறுதலை தூண்டும் அல்லது அதிகரிக்கும் நோக்குடன் பல்வேறு சமயச்சடங்குகளும் நம்பிக்கைகளும் நிலவின. அக்காலப்பகுதிகளில் கருவுறுதலில் ஆணின் பங்கு / உடற்சேர்க்கை பற்றிய அறிதல் மக்களிடம் இருக்கவில்லை. எனவே அன்றைய வாழ்வியலைப் பொறுத்து பெண் செல்வத்தைத் தருபவளாகவும், செல்வமாகவும் பார்க்கப்பட்டாள். தொல்குடிகளில் ஆண்குறி அல்லது லிங்க வழிபாடு காணப்பட்ட காலப்பகுதிக்கு முன்னராக பெண்குறியே சமயச் சடங்குகளிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது. மிகப்பழைய நாகரிகங்களில் ஒன்றான எகிப்தில் பெண்குறி வடிவினதான ‘சங்கு’ மாயத்தன்மை கொண்டதாகவும், பணமாகவும் கருதப்பட்டது. அன்றைய மனிதன் பெண்ணை செல்வத்தைத் தருபவளாகவும், மாயத்தன்மை கொண்டவளாயும் பார்த்தான். பின்னர், ஆணை மையப்படுத்திய சமூக உறவுகள் தோன்றியபோது அவன் பெண்ணை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அல்லது தனது உடமையாக வைத்திருப்பதே தன்னை பலம்மிக்கவன் ஆக்கும் என்று கருதினான். மெல்ல மெல்ல நவீன சமூகங்கள் தந்தைமை சமூகங்கள் ஆனபோது, அவற்றின் தாக்கம் அதிகரித்தபோதும் தந்தைமை சமூகத்தைப் பேணுவதும் கட்டிக்காப்பதுமே பெண்களை ‘புனிதமாக்குவதாக’ மாறியது.

மேலும் கிறீத்தவ மதத்தின் செல்வாக்கும் பெண்களுக்கான ஒழுக்கவிதிகளைத் தீர்மானித்தன. தொடக்ககால கிறீத்தவ மதத்தில் சென்ற். போல் திருமணம் தொடார்பாக கூறிய கருத்துகளைத் தொகுத்து ‘மரீஜ் அன்ட் மோரல்ஸ் என்ற நூலில் பட்டியலிடும் பேர்ட்ராண்ட் ரஸ்ஸல், சென்ற் போலினது திருமணம் தொடர்பான கருத்துகள் பெண்ணின் பாலியல் ஒழுக்கத்தை வரையறை செய்யும்பொருட்டே என்றும், அது இனவிருத்தி தொடர்பான அக்கறை யின் பாற்பட்டது அல்ல என்றும் சுட்டிக் காட்டுகின்றார். அத்துடன் அக்காலத்தில், ஒரு பெண் திருமணத்துக்கு வெளியே எவருடன் உறவு கொண்டாலும் அது குற்றமாகக் கருதப்பட்டது என்றும், ஆணைப் பொறுத்தவரை அவன் இன்னொரு ஆணின் மனைவியுடன் உறவு கொண்டால் மாத்திரமே, அதுவும் இன்னொருவரின் சொத்துகளை அபகரித்தான் என்ற வகையிலான குற்றமாகவே கருதப்பட்டது என்றும் சுட்டிக்காட்டுகின்றார்.

தாய் சமூகங்களில் எல்லாக் குழந்தைகளும் சந்திரனின் குழந்தைகள் என்கிற நம்பிக்கையும் மக்களிடத்தே காணப்பட்டது. தமிழர்களின் பழைய பண்டிகைகளும், சடங்குகளும் நிலவை மையமாகக்கொண்டு கணிக்கப்பட்டன என்பதை இதனுடன் தொடர்புபடுத்திப் பார்க்கலாம். தவிர பழந்தமிழர்களின் ஆதித் தெய்வங்களாகத் தாய் தெய்வ வழிபாடும் மகன் தெய்வ வழிபாடும் இருந்ததையும் காணலாம். காடு கெழு செல்வி, கடல் கெழு செல்வி என்று ஆரம்பத்தில் அழைக்கப்பட்டது அந்தத் தாய்த் தெய்வம். சங்க இலக்கியங்களில் செல்வி என்பது குழந்தை பெற்ற தாயினையே குறிப்பிடுவதாக உள்ளது என்பதை இங்கே குறிப்பிடவேண்டியுள்ளது. அதேபோல, இத்தாய் தெய்வத்தின் மகன் தெய்வமாக முருகன் குறிப்பிடப்படுகின்றான். இந்த முருகன் பாலகனாகவே இருக்கின்றான். வீரமும் இளமையும் பொருந்திய முருகனாக அவனைக் குறிப்பிடும் வழக்கம் பக்தி இலக்கிய காலத்திலேயே உருவானது. அதுபோல வைதீக சமயங்களின் எழுச்சியிலேயே தாய்த் தெய்வம் சிவனின் மனைவியாகவும், திருமாலின் சகோதரியாகவும் ஆக்கப்பட்டாள். அதன் பின் தாய்த்தெய்வக் கோயில்களிலும் அவள் ஆண் தெய்வம் ஒன்றை சார்ந்தவளாக ஆக்கப்பட்டாள். ஒன்பதாம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் ‘காமக் கோட்டம் அழித்தார் பட்ட பாவம்’ என்று தாய்த்தெய்வக் கோயில்கள் அழிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுவதாயும், அவை அனேகம் தந்தை தெய்வக் கோயில்களாக மாற்றப்படுவதற்காக வைதீக சமயத்தவரால் அழிக்கப்பட்டிருக்கலாம் என்றும் ‘தெய்வம் என்பதார் நூலில்’ தொ.பரமசிவன் அவர்கள் குறிப்பிடுகின்றார். வைதீக சமயங்களில் இருந்த ஆணாதிக்க அல்லது ஆண் முதன்மைவாத போக்கு இவ்விதம் பழந்தமிழர்களின் வழிபாட்டு முறைகளுடன் கலந்தது. தொடர்ந்து சோழர்காலத்தில் பரவிய பார்ப்பனச் செல்வாக்கும் வைதிக சமயங்களின் எழுச்சியும், இதனை மக்களிடையே ஊடுபுகச்செய்தன என்று அறிய முடிகின்றது. இன்றுவரை ஈழத்தில் மட்டக்களப்பில் தாய் வழி சமூகச் செல்வாக்கும், வடபகுதியில் தந்தைமை சமூக செல்வாக்குகளும் அதிகம் காணப்பட வடபகுதியில் பிற் காலத்தில் ஏற்பட்ட சோழர்களின் செல்வாக்கு காரணமாக அமையக்கூடும். ஆயினும் இன்றும் கிராமங்களில் சிறு கோயில்களில் தாய்த் தெய்வ வழிபாட்டிலும், சடங்குகளிலும் தாய்ச்சமூகத்தின் எச்சங்களைக் காணலாம்.

அதேநேரம் கிரேக்கத்திலும் பெண்களுக்கான சமூக வகிபாகம் பற்றிய உரையாடல்கள் நிகழ்ந்திருப்பதை காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக பிளேட்டோவின் குடியரசின் 5வது நூலில் இது பற்றிய உரையாடல்கள் நடந்திருக்கின்றன. இந்த உரையாடல்களை இன்றைய பெண்ணிய சிந்தனைகளுடன் ஒப்பிடுவது பொருத்தம் அற்றது என்றாலும் அது நிகழ்ந்த காலத்தில் முக்கியமானதாகவே கருத முடிகின்றது. ஆயினும் அரிஸ்ரோட்டில் தனது அரசியல் என்ற நூலில் கூறும் கருத்துகள் இன்று ஆணாதிக்கம் என்று கூறப்படும் கருத்துநிலைக்கு ஆதரவுத் தளத்தினை வழங்குவனவாக அமைகின்றன. நாடு அல்லது அரசு என்பதன் முக்கியத்துவத்தைக் கூறும் அரிஸ்டோட்டில், குடும்பங்களை அடிப்படை அலகுகளாகவும், குடும்பங்கள் சேர்ந்து கிராமங்களையும் கிராமங்கள் சேர்ந்து அரசுகளையும் உருவாக்குவதாகக் கூறுகின்றார். எனவே அரசு பற்றிய உரையாடல் குடும்பங்களில் இருந்து தொடங்கப்படவேண்டும் என்று கூறி குடும்பம் என்பது ஆண்டான் (மாஸ்ரர்) ஐயும் அடிமைகளையையும் கொண்டதாக அமையும் என்றும் அங்கே பெண் ஆண்டானுக்கும் அடிமைகளுக்கும் இடைப்பட்டவள் என்றும் கூறுகின்றார். அத்துடன் பெண்களின் இயல்புகள் பற்றி அரிஸ்ரோற்றில் கூறுகின்ற கருத்துகளும் இன்றுவரை ஆணாதிக்க சிந்தனையில் பெண்கள் பற்றி இருக்கின்ற கண்ணோட்டமாகவே இருக்கின்றது என்பதையும் அவதானிக்க முடிகின்றது. தவிர குடும்பதில் ஒருவரின் நிலை அல்லது மதிப்பு அவரில் எவ்வளவு அந்த குடும்பம் தங்கியிருக்கின்றது என்பதைக் கொண்டே இருக்கின்றது என்றும், அந்த வகையில் குடும்பத்தில் தலைவன் அல்லது தந்தையே முதன்மையானவன் என்கிற கருத்துகளும் இவ்வகையானவையே. கிட்டத்தட்ட இத்தகைய செல்வாக்குகளே 19ம் நூற்றாண்டின் இறுதிவரை வரை குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எதிர்ப்புகள் இன்றி நிலவின.

ஆயினும் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் செல்வாக்கு செலுத்திய இரண்டு முக்கிய சிந்தனைப் பள்ளிகளான மார்க்ஸிய சிந்தனைப் பள்ளி மற்றும் ஃப்ராய்டிய சிந்தனைப் பள்ளிகளில் ஃப்ராய்டிய சிந்தனைப் பள்ளி பால்/பாலியலை வைத்து சமூக உறவுகளை ஆய்வுசெய்ய ஆரம்பித்தது, பெண்ணிய சிந்தனைகளும் தத்துவவாதிகளும் பெருகக் காரணமானது எனலாம். இந்த வகையில் பெண்களின் ஒடுக்குமுறைக்கெதிராகவும், பெண்விடுதலை நோக்கியும் சிந்தனை முறைகள் தோன்றின. அவ்வாறு தோன்றிய சிந்தனை முறைகளை நடைமுறை, கோட்பாடு சார்ந்து காலத்துக்குக் காலம் மாறுதலுற்றும் வந்தன. ஆய்வாளார்கள் பெண்ணியம் என்பதை முதலாம் அலை பெண்ணியம், இரண்டாம் அலை பெண்ணியம், மூன்றாம் அலை பெண்ணியம் என மூன்றாக வகைப் படுத்துவர்.

முதல் அலை பெண்ணியம் என்பது பொது வெளியில் பெண்களுக்கு எதிரானதாக பெண் என்கிற பால்நிலை காரணமாக பாகுபடுத்தப்பட்டதாகக் கருதப்பட்ட வாக்குரிமை, சொத்துரிமை, விவாகரத்துக் கோரும் உரிமை, கலை பண்பாட்டுத் தளங்களிலும், உயர் கல்வியிலும், அறிவியல் தேடல்களிலும் ஈடுபடும் உரிமை என்பன பற்றிய போராட்டங்களை முன்னெடுத்ததாகும். குறிப்பாக சமூக பொரு

தொடர்தல் 54ம் பக்கம்

# உரையாடற் குறிப்பு...


53ம் பக்கத் தொடர்ச்சி...

ளாதாரத் தளங்களில் பெண்களுக்கான சம உரிமையை முன்னெடுத்தது முதல் அலை பெண்ணியம்.

இரண்டாம் அலை பெண்ணியம் என்பது, பொது வெளியில் தெரியாத பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு எதிரான The Personal is political என்ற கோஷத்தை முன்வைத்து எழுப்பப்பட்டதாகும். குடும்ப வன்முறை, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்கள், போர்னோகிராபியை எதிர்த்தல், பாலியல் தொழிலை எதிர்த்தல், உடலுறவின் பெயரால் பெண்ணுடல் மீது நிகழ்த்தப்படும் வன்முறை மற்றும் அவை தொடர்பான கற்பிதங்கள், குடும்பம் என்கிற நிறுவனத்தில் பால் நிலை காரணமாக பெண்மீது நிகழ்த்தப்படுகின்ற வன்முறை, குழந்தை பெறுவது தொடர்பாக பெண்ணுக்குள்ள உரிமை, கருக்கலைப்புச் செய்யும் உரிமை, பண்பாட்டின் பெயரால் பெண் மீது நிகழ்த்தப்படும் வன்முறை என்பன தொடர்பான உரிமைகளைப் பெறவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் போராடியது இரண்டாம் அலை பெண்ணியம்.

மூன்றாம் அலை பெண்ணியம் என்பது ஒப்பீட்டளவில் 'தற்காலத்தில்' எழுந்த கோட்பாட்டு வடிவம். குறிப்பாக 90களின் பின்னரே இது செழுமையாக்கப்பட்டது. இரண்டாம் அலை பெண்ணியம் தோல்வியடைந்தமைக்கான/ சரியான தாக்கத்தை ஏற்படுத்தமைக்கான காரணத்தை மீளாய்வு செய்து அதன் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட கோட்பாட்டு வடிவமே இதுவாகும். பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை பொதுமைப்படுத்தாமல், அவற்றுள் இருக்கின்ற நுண்ணரசியலை பன்மைத்துவமாக செயலாற்றல் என்பது மூன்றாம் அலையின் விசேட பண்பாகும். பால் நிலையில் பெண்கள் என்றாலும் இனத்தாலும், மதத்தாலும், நிறத்தாலும், பண்பாட்டாலும், மொழியாலும், வர்க்கங்களாலும், நம்பிக்கைகளாலும் வேறுபட்டவர்கள் இவர்கள் என்கிற கரிசனத்துடன் பெண்ணியத்தை அணுகுவது மூன்றாம் அலை பெண்ணியம். ரொறன்ரோவில் முதன்முதலில் நடந்த ஸ்லற் வோக் என்பது மூன்றாம் அலை பெண்ணியத்தின் வெளிப்பாடுகளில் ஒன்றாகவே மதிப்பிடப்படுகின்றது. ஹிஜாப் அணியும் உரிமை, பாலியல்தொழில் பற்றிய விவாதம், பாலியல் தொழிலாளிகளுக்கான உரிமைகளும் கூட இதன் வழியானவையே.

இந்தப்பிரதான வகைப்படுத்தல்கள் தவிர்ந்த வேறு வகைப்படுத்தல்களையும் நடைமுறையில் காணமுடியும். இந்த கோட்பாடுகள் பற்றிய பிரக்ஞையுடனும் இல்லாமலும் பெண்ணியம், பெண்விடுதலை பற்றிய முன்னெடுப்புகளும் உரையாடல்களும்




தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. அத்தகைய முன்னெடுப்புகளில் ஒன்றாகவே பெண்ணியம் குறித்துத்தொடர்ந்து செயற்படுகின்ற மீராபாரதியின் 'பால் பாலியல், காமம் காதல், பெண் பெண்ணியம் - ஓர் ஆண்நிலை நோக்கு' என்கிற இந்த நூலும் அமைகின்றது.

மீராபாரதி எழுதிய இந்த நூலில் ஆணாதிக்கம் குறித்த உரையாடல்கள் அதிகம் இடம்பெற்றிருக்கின்றன. ஆயினும், ஆணாதிக்கம் குறித்து இந்த நூலில் குறிக்கப்படுகின்ற கருத்துகளுக்குச் சற்று மாறுபட்ட பார்வை ஒன்றினையும் குறிப்பிடவேண்டி இருக்கின்றது. ஆணாதிக்க சமூகம் ஒன்று பேணப்படுவதால் கிடைக்கப்பெறுகின்ற சலுகைகளை அதிகம் அனுபவிப்பவர்களாக ஆண்களும் தந்தைமை சமூகத்தின் மூலமான சலுகைகளை அனுபவிப்பவர்களும் இருக்கின்றார்கள் என்பது உண்மையே. ஆனால் ஆணாதிக்கம் என்பது ஆண்களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டதாக இருக்கமுடியாது. அது அக்காலத்தில் சமூக ஒழுங்கு தந்தைமை சமூகமாக மாறிய போதும் அதன் வழியான குடும்பங்களைப் பேணவும் உருவானது. அதே நேரம் பெண்கள் மீது ஒடுக்குமுறையை பிரயோகிப்பதும் அவர்கள் மீது தொடர்ச்சியாக சுரண்டல்களை மேற்கொள்வது என்பதும் உண்மையே. ஆயினும் நடைமுறையில் ஆணாதிக்க சமூக ஒழுங்கினை மீற முற்படும் ஆண்களுக்கும் ஆணாதிக்கம் எதிரானதாகவே இருக்கின்றது. இன்றும் பெரும்பாலான கீழைத்தேய சமூகங்கள் குடும்பங்களையே சமூகத்தின் அடிப்படை அலகாகக் கொண்டவை. எனவே அத்தகைய சமூகங்களில் ஆணாதிக்கத்துக்கு எதிராக செயற்படும் ஆணும் அவனுக்கு ஆண் என்பதால் கிடைக்கும் சமூக சலுகைகள் இருந்தாலும் அந்நியமாகவே உணரப்படுகின்றான். தவிர, பெரும்பாலான ஆண்களிடம் இருப்பது போல ஆணாதிக்க சிந்தனைகள் பெரும்பாலான பெண்களிடமுமே இருக்கின்றது. ஆணாதிக்கம் என்பது எவ்வளவு நுட்பமாகத் தொழிற்பட்டு ஒடுக்குமுறையைப் பிரயோகிக்கின்றது என்பதைப் பெண்களும் கூட இன்னும் சரியாக உணரவில்லை என்றே கருதமுடிகின்றது. சாதியம், தேசியம், வர்க்கம் என்கிற எல்லாவிதமான ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகும் தரப்பினரும் கூட தாம் ஒடுக்கப்படுகின்றோம் என்பதையும் தமது உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்பதையும் உணர்வதில்லை என்பதே உண்மை.

இந்த நிலையில் ஆணாதிக்க சிந்தனையில் இருந்து வெளிப்படும் முனைப்புள்ள ஆண்/பெண், அதே முனைப்புள்ள ஆண்/பெண்ணிடம் சமூக உறவுகளை மேற்கொள்வது ஒப்பீட்டளவில் இலகுவானது. அதேநேரம், அவ்விதம் இல்லாமல் ஆணாதிக்க சிந்தனையில் இருந்து வெளிப்படும் முனைப்புள்ள ஆண் அவ்விதம் இல்லாமல் ஆணாதிக்க சிந்தனையின் தாக்கம் உள்ள ஒரு ஆண்/பெண்ணிடம் சமூக உறவுகளை மேற்கொள்ளுவது மிகச் சிரமமானதாகும். குறிப்பாக அவ்வாறான சூழ்நிலையில் ஆண் தன் பொறுப்புகளை ஏற்காதவனாகவே அடையாளம் காணப்படுவான் என்பதையும் அவதானிக்க வேண்டி உள்ளது. அதுபோல மரபான குடும்பம் என்பது ஆணாதிக்க வடிவம் என்றாலும் அதனை உடைப்பதும் சட்ட ரீதியாக மணம் முடிக்காமல் சேர்ந்து வாழல் என்பவற்றை மேற்கொள்ளுவது ஈழம், இந்தியா போன்ற நாடுகளில் பெண்கள் பெறக்கூடிய சட்ட ரீதியான பாதுகாப்பையும், சொத்துரிமையையும் கூட இல்லாது செய்துவிடும் என்பதையும் கவனிக்க வேண்டும். எனவே சட்டரீதியான பாதுகாப்பு உறுதிசெய்யப்படும் வரை இத்தகைய மண உறவுகள் பெண்களுக்கெதிராக இன்னும் சுரண்டல்களுக்கு களம் அமைப்பதாகவும் அமைந்துவிடக்கூடும் என்பதையும் குறிப்பிடவேண்டும். இந்த நூலில் குறிப்பிடப்படுகின்ற இதுபோன்ற விடயங்கள் குறித்து நாம் தொடர்ச்சியாக உரையாடவேண்டி இருக்கின்றது.

'பால் பாலியல், காமம் காதல், பெண் பெண்ணியம் - ஓர் ஆண் நிலை நோக்கு' நூலானது தனது நோக்கத்தினைத் தெளிவாகக் வரையறுத்து இருக்கின்றது. ஒரு செயற்பாட்டாளராகத் தொடர்ந்து இயங்கி வருகின்ற மீராபாரதி இந்த நூலினையும் தனது கருத்து நிலைக்கான ஒரு கருவியாகவே உபயோகப்படுத்துகின்றார். இதனை ஒரு முக்கியமான அம்சமாகக் கருதுகின்றேன். ஆயினும் நாம் இதுபோன்ற உரையாடல்களை எவருடன் செய்யவேண்டும் என்பதும் சிந்திக்கவேண்டியது. பொதுவாக இது போன்ற நூல்களும் நூல் வெளியீட்டு நிகழ்வுகளும் அவை பேசும் கருத்து நிலைகளை அறிந்தவர்களால் வாசிக்கப்பட்டும் பேசப்பட்டும் வருவதோடு அவற்றுக்கு எதிர்நிலையில் நிற்பவர்களைச் சென்றடைவதும் குறைவாகவே இருக்கின்றது. சோக்ரடீஸ் சொல்லுவார், உரையாடல்களை எதிர்தரப்பின் வாதங்களை எடுத்துக்கொண்டு எமக்கெதிராகவே வாதம் புரிவதோடு தொடங்குவோம் என்று. அதையே நாமும் செய்யவேண்டும். ஆணாதிக்க சிந்தனை நிரம்பிய, இன்றுவரை அதையே போற்றுகின்ற பெரும்பான்மை சமூகத்தினரோடும் நாம் தொடர்ச்சியாக உரையாடவேண்டும். அதுவே ஆக்கபூர்வமான செயற்பாடாக மாறும்.



arunmozhivarman@thaiveedu.com

# திருக்குடும்பக்...

50ம் பக்கத் தொடர்ச்சி...

கடிவாளம் அவரின் கையிலேயே இருந்தது. இவர் ஒரு தலைசிறந்த ஆங்கிலம், ஆங்கில இலக்கியம், வரலாறு ஆகிய பாடங்களைப்போதிக்கும் ஆசிரியராகவும் திகழ்ந்தார். இவரே பாடசாலையில் விளையாட்டை ஊக்குவிக்க இல்லங்களை உருவாக்கி விளையாட்டுப் போட்டிகளை நடத்தினார். பழைய மாணவிகள் சங்கத்தை முதலில் தோற்றுவித்தார். அத்தோடு பாடசாலைக்கு ஒரு சங்கீத பாண்டு வாத்தியக் குழுவை உருவாக்கினார். அவரே பாடசாலைக் கீதத்தை இயற்றி அதற்கு இசையமைத்து அதனை அறிமுகப்படுத்தினார் அப்பாடலே இன்று வரை பாடப்படுகின்றது.

### 150வது வருட நிறைவுக் கொண்டாட்டங்கள்:

2012ம் ஆண்டு 150வது வருட நிறைவு விழாவை உலகம் பூராவும் உள்ள பழைய மாணவிகள் கொண்டாடினார்கள். இதன் நிமித்தம் பழைய மாணவிகள் ஒரு இரவு விருந்தினை 2012ம் ஆண்டு ஒக்டோபர் 21ல் கொண்டாடினார்கள். பாடசாலையின் பழைய மாணவிகள் யாவரும் யாழ்ப்பாணத்தில் ஒக்டோபர் மாதம் 25ம் திகதி அன்று கூடி, 150வது வருட பூர்த்தியை வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். பாடசாலை 1845ல் தொடங்கப்பட்டாலும் புனித கன்னியர்மட கன்னியாஸ்திரிகள் பாடசாலையைப் பொறுப்பெடுத்த ஆண்டாகிய 1862ம் ஆண்டையே தொடக்க ஆண்டாகக் கொண்டு 150 வருடம் கணக்கிடப்பட்டது. இக்கொண்டாட்டம் அவுஸ்திரேலியா, கனடா மற்றும் ஐக்கிய இராச்சியத்திலும் பழைய மாணவிகள் சங்கங்களால் கொண்டாடப்பட்டது.

இப்பாடசாலை நூற்றைம்பதாவது கொண்டாட்டத்தில் 1945ல் தூரநோக்கோடு தொடங்கப்பட்ட முன்னோர்கள் பற்றியும் அவர்கள் செய்த நன்மைகள் பற்றியும் நினைவு கூர்ந்தனர். அந்த நிறுவனமே இன்று பாரிய விருட்ஷமாக வளர்ந்துள்ள முன்னணிப் பாடசாலையை முதல் தர பாடசாலையாக வளர்த்தெடுத்ததுடன் தேசிய பாடசாலையாகவும் ஆக்கியுள்ளது. பாடசாலை பல விதமான இடையூறுகளுக்கு மத்தியில் பல கல்விச் சாதனைகளைப் புரிந்துள்ளது. பல்கலைக் கழகத்திற்கு வைத்தியத் துறை, மிருகவைத்தியம், பல்வைத்தியம், விவசாயபீடம், உயிரியல் விஞ்ஞானம், பௌதிகவியல் விஞ்ஞானம், சட்டத்துறை. கலைத்துறை மற்றும் கவின்கலை ஆகிய துறைகளுக்கு அந்தந்தத் துறைகளுக்கு விற்பன்னர்களைத் தந்து கொண்டே இருந்தது. இவர்கள் இலங்கையில் மட்டுமல்ல உலகம் பூராவும் தமது சேவைகளை வழங்கினார்கள், வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

2011 தொடக்கம் சகோ. தயாநாயகி செபமாலை அவர்கள் அதிபராக இருந்த காலம் ஒரு பொற்காலம் எனப்பட்டது. அவர் பாடசாலை தாபிக்கப்பட்டதன் நோக்கத்தையும் விழுமியங்களையும் புதுமையாக்கிக் கடைப்பித்தார். மாணவிகளைப் புதிய உலகத்தின் சவால்களுக்குத் தயார்படுத்தினார். இவரது காலத்தில் பாடசாலை மாணவிகளின் எண்ணிக்கை 2,000ற்கு உயர்ந்தது. அத்தோடு ஆசிரியர்களின் எண்ணிக்கையும் 76ஐத் தொட்டது.

### நாணயமான சமூக ஈடுபாடு:

இப்பாடசாலை பொது நிதியால் உருவாக்கப்பட்டாலும் பாடசாலையைச் சூழவுள்ள சமூகம் பாடசாலையுடன் ஒரு நீண்ட ஈடுபாடு கொண்ட 'எமது பாடசாலை' என்று உரிமையோடு கொண்டாடுமளவிற்கு பரம்பரை பரம்பரையாக உரிமையோடும் வாஞ்சையோடும் பாடசாலையோடு பின்னிப் பிணைந்து இருந்தார்கள். இப்பகுதியிலிருந்து பெருந்தொகையான கல்வியாளர்களை பாடசாலை தந்துள்ளது. பாடசாலைக்கு பணம் தேவையானபோது இவர்கள் வலிந்து கொடுத்துள்ளார்கள். பொருளாகவும் உடலுழைப்பாகவும் கொடுத்துள்ளார்கள். அவர்கள் பாடசாலையின் ஒரு வகை வளமாக இருந்துள்ளார்கள்.

உலகப் புகழ்பெற்ற பிரித்தனிய ஆங்கிலப் பாடகி மாதங்கி அருள்பிரகாசம் (மாதங்கி) MIA இப்பாடசாலையின் ஒரு பழைய மாணவியாவார்.

### யுத்தப் பாதிப்பு:

1987ம் ஆண்டு பெரிய வெள்ளியன்று, ஸ்ரீலங்கா விமானப் படை மிகவும் மோசமாகக் குண்டு வீசியதால் பாடசாலை சாலையின் பல கட்டடங்கள் அழிந்தன. 1995ம் ஆண்டு சூரியக்கதிர் நடவடிக்கையின் போது வடமராட்சி, தென்மராட்சி தவர்ந்த முழு யாழ் மாவட்டமுமே இடம் பெயர்ந்தது. அப்போது ஒவ்வொரு பாடசாலையும் இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி போன்ற இடங்களுக்கு இடம் பெயர்ந்து. அங்குள்ள பாடசாலைகளில், வாசிகசாலைகளில், தனியார் வீடுகளில் தஞ்சம் அடைந்து ஒரு வருட வாழ்கையை அகதி வாழ்க்கையாகக் கழித்தார்கள். இதற்கு யாழ்.கொன்வன்ரும் விதிவிலக்கல்ல. அவர்களது பாடசாலை தற்காலிகமான எங்கு நடைபெற்றது என்ற தகவல் கிடைக்கவில்லை. 1996ல் திரும்ப வந்து புனருத்தாரணம் செய்தே பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

**உசாத்துணை:**

- http://www.srilankaguardian.org/2011_02_04_archive.html
- http://dbsjeyaraj.com/dbsj/archives/1956
- http://www.jaffnahfc.com
- https://en.wikipedia.org/wiki/Holy_Family_Convent,_Jaffna
- http://www.sundaytimes.lk/120923/plus/jaffna-holy-family-convent-old-girls-to-converge-for-150th



packiyanathan.m@thaiveedu.com

# சகலவிதமான மோட்கேஜ் தேவைகளுக்கும்...

## என்னை முதலில் அழையுங்கள்

வருமான உத்தரவாதம் இல்லாமலே பெற்றுக் கொடுக்கப்படும்

# 416.873.5780

## உங்கள் தேவை இவற்றில் ஒன்றா?

- வீட்டு விலை உயர்வை சாதகமாக்கி உங்களின் கடன்களில் இருந்து விடுபடவேண்டுமா?
- வீட்டின் Equity யைப் பயன்படுத்தி உயர் வட்டியில் உள்ள கடனில் இருந்து விடுபட வேண்டுமா?
- வீட்டுத்திருத்த வேலைக்கு தேவையான பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- சொந்த தேவைக்காக (Proposal Payment, பிள்ளைகளின் படிப்பு, அரங்கேற்றம், சுற்றுலா) பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- பிறிதொரு வீட்டை வாங்க தேவையான முற்பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- உயர் வட்டியில் உள்ள மோட்கேஜ்ஜை குறைந்தவட்டியிலுள்ள மோட்கேஜ்ஜாக மாற்ற வேண்டுமா?
- சொந்த தொழில் செய்பவர்கள் வீடுவாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- புதிதாக கனடாவுக்கு வந்தவர்கள் மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- வெளிநாட்டில் உள்ளவர்கள் கனடாவில் வீடுவாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- பெற்றோர் பிள்ளைகளுக்கு வீட்டை மாற்றி மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- கிறடிற் பிரச்சினை (Consumer Proposal, Late payments, previous bankruptcy) ஆனால் வீடு வாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- அவசர தேவைக்கு 2nd Mortgage எடுக்க வேண்டுமா?

* some conditions apply



KAPITAL CARE MORTGAGE INC. Lic-12623

**Kethes**
**Sivasubramaniyam** AMP
*Mortgage Agent - (Lic # M08006105)*

5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


More Than 20 Years Mattress Manufacturing Experience
RelaxWell
MANUFACTURE OF QUALITY MATTRESS
& FURNITURE SALES
Dream Sweetly
Sleep Peacefully
Wake Happily
மெத்தை உற்பத்தி துறையில் 20
வருடங்களுக்கு மேல்அனுபவமுள்ள
உங்களுக்கு அறிமுகமான உதயனின் நிர்வாகத்தில்
SELECTION OF FURNITURE
DIRECT FROM
MANUFACTURER
Relaxwell
manufacturerofqualitymattresses
Tel: 416-759-2600
1600 Midland Ave.,#2,
Scarborough, ON M1P 3C2
support@relaxwell.ca
relaxwell.ca
Ellesmere Rd.
Midland Ave.
Lawrence Ave.

# ஒரு கலைஞனின் கதை இது

- சோக்கல்லோ சண்முகநாதன் -

இசை நாடகத்திற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்த நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களுடைய கதையை வில்லிசையாக செய்ய விரும்பினேன். 'நந்தாப்புகழ் நாயகன்' என்ற வி.என். மதியழகனின் நூல் வெளியீடு இதற்கு ஒரு காரணமாகவிருந்தது. இளைய தலை முறையில் நான் நம்புகின்ற வளர்ந்துவ ரும் ஒரு கலைஞர் 'மெலிஞ்சிமுத்தனி'டம் இந்த எனது விருப்பத்தைச் சொன்னேன். அவரும் இதே நினைவோடு இருந்தவர் போல் உடனேயே 'ஓம்' என்று சொன்னார். 'சுடலையில் உயிர்த்த சுருதி' என்ற வில் லிசை பிறந்தது.

2018, மார்ச் 11ம் திகதி 'நடிகமணி'யின் 94வது பிறந்த தினம். அவரின் பிறந்த தினத்தையும் கொண்டாடி, இந்த வில்லிசை நிகழ்ச்சியையும் அரங்கேற்றுவதற்கு திட்ட மிட்டு, குறிப்பிட்ட சில நண்பர்களிடம் அனுசரணை கேட்டோம். 'ஓம்' என்று சொன்னார்கள். பின்பு மெதுமெதுவாக கதை வேறு திசையை நோக்கிச் சென்றது, திக தியும் மாறியது.

அந்த நண்பர் கூட்டம் என்னை சந்திக்க நேரம் கேட்டது. எல்லா நேரமும் நான் 'பிறி'. 'பிஸி' என்ற சொல்லே என்னிடம் இல்லை என்று சொன்னேன். தலைக்கனம் என்று நினைத்தார்களோ என்னவோ? ஒரு நேரத்தில் என்னைச் சந்தித்தார்கள். திசை மாறியது கதை. ஒரு மணித்தியாலம் வில்லுப்பாட்டைச் செய்யுங்கோ! மிகுதி 1½ மணித்தியாலமும் எங்களுக்கு வேண் டும். 'சோக்கெல்லோபொழுது' நிகழ்ச்சி மூலம் உங்களைப் பாராட்டப் போகின் றோம் என்றார்கள்.

வாசகர்களே! மனம் திறந்து உங்களோடு நான் பேசுகிறேன். 82 வயதுவரை எந்த விதமான பாராட்டுக்களும் இல்லாமல் நான் என்னுடைய தொழிலைச் செய்துவந்தவன். இப்போது இவர்களுடைய இந்தத் திட் டத்துள் மாட்டுப்பட்டேன். அவர்களுக்கோர் விருப்பம் இருந்திருக்கலாம். ஆனால், எனக்கொரு பயம் இருந்தது. இவன் 'என்ன கலையுலகுக்குச் செய்தான்', 'ஏன் இவ னுக்குப் பாராட்டு' என்று யாராவது ஒரு வர் தானும் கேட்டுவிடக் கூடாதே என்ற பயம்தான் அது. செயற்கரிய சாதனைகள் புரிந்த ஒரு மனிதருக்கு 'சிலை' வைப்ப தாக இருந்தால் கூட பலமுறை யோசிக்க வேண்டும். ஏன் குறிப்பிட்ட அந்த மனித ருக்கு 'சிலை' வைக்கவில்லை என்று சில ராவது கேட்பார்கள், அது அந்த மனித ருக்குப் பெருமை. 'இவனுக்கு யார் சிலை வைத்தார்கள்' என்று யாராவது ஒருவர் தானும் கேள்வி எழுப்பினால்! என்னாவது? பறவைகள் ஆறி இருந்து எச்சமிடுவதற்கு அவரது சிலைமுகம் உதவியதே என்று ஆறுதலடையலாம்.

'சோக்கெல்லோபொழுது'க்கு யாரும் அப் படி ஒரு கேள்வியை இதுவரை கேட்க வில்லை. மிகவும் சந்தோசமாக உதவிகள் செய்தார்கள், என்று ஏற்பாட்டாளர்கள் சொன்னார்கள். விழா ஏற்பாட்டாளர்கள் தங்களுடைய பெயர்களை பெரிதாக விளம்பரப்படுத்த விரும்பவில்லை. அது சரி, அதனால் எனக்குத்தான் சங்கடம். 'தன் காசினிலே தனக்கு விழாச் செய்யுது! செய்யுது!' என்று மெலிஞ்சி முத்தன் போன் றவர்கள் பாட்டெழுதிப் பாடுவர்கள். நான் மிகுந்த சிரமப்பட்டு உருவாக்கிய வில்ல டிப்பாட்டுக் குழுவே என்னைப் பார்த்துப் பாடும்.


கலைஞர் வட்டம், எனது கலைச் சேவை யைப் பாராட்டி எனக்கு விருது அளித்த போது, சபை எழுந்து நின்று கைதட்டி வரவேற்றது. நான் நெகிழ்ந்து போனேன். இன்னும் நான் நிறையவே நிகழ்ச்சிகள் செய்திருக்கவேண்டும் என எண்ணினேன். என்னுடைய உள்மனம் ஏற்பாட்டு நண்பர் களை வாழ்த்தியது.

நான் பொன்னாடைகளையும், மாலை மரி யாதைகளையும் ஏற்றுக்கொள்ள விரும்ப வில்லை. அதற்கு காரணங்கள் உண்டு. எனது நண்பர், நாடகக் கலைஞர், இலங் கைத் திரைப்படங்களில் கூட நடித்தவர். நல்ல வானொலிமேடை நாடகக் கலைஞர். ஐவகர் என்பது அவரது பெயர். அவரது மரணச் சடங்கிற்குச் சென்றிருந்தேன். அவருக்கு போர்க்கப்பட்ட பொன்னாடை கள் 50 வரையில் அவரது அலுமாரியில் இருந்தது. மரணச் சடங்கிற்குச் சென்றவர் களிடம், நிதி சேர்த்தே அவரது இறுதிக் கிரிகைகளை முடிக்க வேண்டியிருந்தது. இப்படிப் பல கலைஞர்களை எனக்குத் தெரியும். இப்படி ஒரு நிலை எனக்கும் வேண்டாம் என்பதாலேயே, நான் பொன் னாடைகளையும் மரியாதைகளையும் வெறுக் கிறேன்.

'வாழும்போது வாழ்த்துவோம்' என்ற கோஷம் இப்பொழுது எங்கும் மேலோங்கி நிற்கிறது. பொன்னாடைகளும், மாலைக ளும் ஒழிக! கலைஞர்களுக்கு 'பொற்கி ளிகள்' வழங்குவோம். அவர்களை மகிழ் விப்போம். முற்றத்து மல்லிகைகளை நேசிப்போம்! மண்ணின் மைந்தர்களை மறவோம்! என்ற கோஷங்களும் மேலோங்க வேண்டும்.

நான் கனடாவுக்கு 2008ல் தான் வந்தேன். 72 வருடங்களை என்னுடைய தாய் மண் ணில் செலவழித்தேன். அங்கு சுமார் 62 வருடங்கள் கலையோடு வாழ்ந்தவன் நான். கலைக்காக நான் வாழ்ந்தேன் என்பதை விட, 'கலை' என்னை வாழவைத்தது என் பதுதான் சரி. 10 வயதில் அனாதை ஆக் கப்பட்ட எனக்குக் கலை தான் தாயுமாகி, தந்தையுமாகி, சுற்றமுமாகியது. கலை யால் எனது சோகங்கள் அனைத்தையும் மறந்தேன். நான் கனடா வந்ததுகூட ஒரு சோக நிகழ்வுக்காகத்தான்.

கனடாவில் 'அண்ணைரயிட்' பாலச்சந்திரன் என்னை தேடி வந்து சந்தித்து, ஆறுதல் சொன்னார். அவர்தான் நான் மீண்டும் கலைமுயற்சிகளில் ஈடுபட வழிகாட்டினார். வில்லைச் செய்வித்துத் தந்து, வில்லுப் பாட்டை மீண்டும் தொடங்குவதற்கு வழி செய்தார். மனவெளி நாடகக் குழுவிற்கு அறிமுகப்படுத்தினார். இலக்கிய நண்பர் களோடு தொடர்புகளை ஏற்படுத்தித் தந் தார். தான் சார்ந்த கூட்டங்களில் பேச வைத்தார். தாயகத்தில் தன்னோடு நடித்த கலைஞர்களில் பழகிய உடனடியாக உதவி தேவைப்படுபவரைக் கேட்டறிந்து, அவர் களுக்கு பண உதவி செய்தார். மொன் றியால் நடராஜா அவர்கள் பாலச் சந்திரன் அவர்களுக்கு எடுத்த விழாவில் அடியே னும் பங்குபற்றக் கிடைத்தது, எனக்கு ஒரு பெரிய வாய்ப்பாகும். 'வாழும் பொழுதே வாழ்த்துவோம்'என்று பெரியார் மொன்றியால் நடராஜா செய்த சேவை மறக்க முடியா தது. பொன் எழுத்துக்களால் பொறிக்கப் பட வேண்டியது.



மனவெளி குழுவினர் தயாரித்த இரண்டு நாடகங்கள் 'மோகப் பறவை', 'காலசர்ப் பங்கள்'. இரண்டுமே நவீன கூத்து வடி வங்கள். இது இரண்டுமே மெலிஞ்சிமுத் தனின் நெறியாள்கையில் அரங்கேறியவை. நவீன தொழில்நுட்ப வசதிகள் கொண்ட மார்க்கம் திரை அரங்கில், பிரமாண்ட மான ஏற்பாட்டில் மேடையேறின. சக நடி கர்களின் சந்திப்பு, சிறந்த பயிற்சி, நல்ல உபசரிப்பு மிகுந்த மனநிறைவைத் தந்த நாடகங்கள்.

'சோக்கெல்லோ சண்முகம் வில்லடிப்பாட் டுக்குழு' என்ற பழைய பேரிலேயே வில் லிசைக் குழு ஒன்று அமைத்தேன். பல வில்லிசை நிகழச்சிகளை, தொழில் ரீதி யாக நடத்தி கனடாவில் வெற்றிகண்ட குழு இக்குழு.

கனடாவில் நடந்த முக்கியமான நிகழ்வு களில் இக்குழுவினது வில்லிசை நிகழ்ச்சி கள் இடம்பெற்றது மகிழ்ச்சிக்குரியது. கன டாவில் நடந்த தமிழர் தெரு விழாக்கள் மூன்றிலும், சோனி மண்டபத்தில் நடந்த 'பெட்னா' தமிழ் விழாவிலும் மற்றும் முதி யோர் அமைப்புகள், ஊர்ச்சங்கங்கள் இன் னும் பல்வேறு இடங்களில் எங்கள் குழு வின் நிகழ்வுகள் நடைபெற்றன. 'கவிரா ஜன் கதை', 'இராஜ இராஜ சோழன்', 'கண்மணியாள்காதை', 'விழுந்தான் வீரசிங் கம்', 'காத்தான் கயிலாயம் போகிறார்', 'இயேசு காவியம்', 'சுடலையில் உயிர்த்த சுருதி' இப்படிப் பல கதைகளை வில்லி சையிலே வழங்கினோம்.

அத்தோடு எனது தனி நடிப்பாக 'பாரதி வந்தார்', 'ஔவை வந்தார்', 'கம்பர் வந் தார்', 'மாணிக்கவாசகர் வந்தார்', 'சோம சுந்தரப்புலவர் வந்தார்', 'திருவள்ளுவர் வந்தார்'...இப்படிப் பல. எமது அறிஞர் கள் பலரை புதிய சமுதாயத்திற்கு அறி முகப்படுத்தவேண்டி இருக்கிறது. இவற் றில் சில பாராட்டும்படியாகவும், சில சுமா ராகவும், இன்னும் சில திருத்தவேண்டிய தாகவும் அமைந்தன. (இங்கே பலர் தங் களுடைய நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைந் தன என்ற மாமூலான வசனத்தையே விம ரிசனத்தில் விரும்பி நிற்கிறார்கள். இது உண்மையான விமரிசனமாகாது).

குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களு டைய 'எந்தையும் தாயும்', எமது குழு வினரால் கனடாவில் கார்மோனி மண்ட பத்தில் மூத்தோருக்காக நடித்துக் காட் டப்பட்ட, சோகமும் இயற்கையான நகைச் சுவையும் கொண்ட நாடகம். நான் இதில் சிறாப்பர் சங்கரப்பிள்ளையாக நடித்தேன். ஏற்கனவே இதில் நடித்து கலைக்கழகத் தால் 'சிறந்த நடிகருக்கான விருது'டன் மேலும் நான்கு விருதுகளும் எந்தையும் தாயும் நாடகத்திற்காகப் பெற்றேன். இந்த இடத்தில் இன்னுமொரு சம்பவத்தையும் சொல்ல வேண்டும். ஒருவர் சொன்னார், கிழவன் கிழவனாக நடித்துப் பரிசு வாங் குவது ஒன்றும் கெட்டித்தனம் அல்ல என்று (எந்தையும் தாயும்). கனடாவில் என்னோடு வில்லிசைக் குழுவைச் சேர்ந்த திருவா ளர்கள் வி.ரி.இராஜேந்திரன், ஆர். உருக் குமணிகாந்தன், யாழினி, நளினி குகசீலன், மாஸ்டர் முகிலன் ஆகியோர் நடித்திருந் தார்கள். சில திருத்தங்களோடு கூடிய நல்ல விமரிசனமும், பாராட்டுக்களும் குவிந் தன. இது எங்கள் குழுவினருக்கு இன்னும் பல நல்ல நிகழ்ச்சிகளைச் செய்வதற்கு உற்சாகத்தைக் கொடுத்தது.

கனடாவில் நான் நாடகங்கள் பற்றிப் பேசும்போதும், இலக்கியக் கூட்டக்களிலும் அவர்களோடு சம்பந்தப்பட்ட நாடகங்க ளிலிருந்து நான் நடித்த காட்சிகளை தனி நடிப்பாகச் செய்து காட்டியுள்ளேன். பேச் சையே கேட்டுச் சலிக்கின்ற கூட்டத்திற்கு இது உற்சாகமாக இருக்கும். சிறிது கல கலப்பையும் ஏற்படுத்தும்.

'தாய்வீடு' பத்திரிகையில் ஆரம்பத்தில் கே.எஸ். பாலச்சந்திரனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட 'ஆழத்துமுத்து' பகுதியில் கலைஞர்கள் பற்றி எழுதிய நான் பின்பு இலக்கியக் கூட்டங்கள் பற்றிய கண் னோட்டங்களும், நாடக விமரிசனங்களும் எழுதினேன். நண்பர்களும், எதிராளர்களும் கிடைத்தார்கள். பத்திரிகைத் தர்மத்தின் படி எழுதுவது எனது பணி. அதை நான் தொடர்ந்து செய்வேன்.

நாட்டின் காலநிலை, போக்குவரத்துச் சிர

தொடர்தல் 58ம் பக்கம்

# ஒரு கலைஞனின்...

57ம் பக்கத் தொடர்ச்சி...

மங்கள் இவற்றின் மத்தியில் கூட்டங்களில் பேசுவோரின் பேச்சுக்களைக் குறிப்பெடுத்து அதைப் பதிவில் கொண்டுவருவதும் நாடகங்களை ஊன்றிக் கவனித்து அதற்கு விமரிசனம் எழுதுவதும் கலைஞர்களை உற்சாகப்படுத்தும். அதனால் அதை நான் விரும்பிச் செய்கின்றேன்.

நான் அறிந்தவரையில் ஐரோப்பிய நாடுகளில் கனடா நாடகத்திலும் பாரம்பரிய கூத்துக்களிலும் மறைந்து வருகின்ற வில்லிசையிலும் நூல் வெளியீடுகளிலும் செய்தித்தாள்களிலும் தொலைக்காட்சி, வானொலி போன்ற அனைத்துத் துறைகளிலும் முன்னணியில் நிற்கின்றது.

கனடாவில் கவிஞர் கழகத்தில் சேர்ந்தேன். என்னுடைய 78வது வயதில் அங்கு சேர்ந்தேன். ஆசிரியர்கள் ம.செ.அலெக்ஸ்சாந்தர், கவிஞர் கந்தவனம் ஆகியோர் ஆசிரியர்களாகப் பணியாற்றினர். அநேகமாக பிரசங்கங்களைக் கேட்பதிலும், பின்பு அதற்கு பதில் சொல்வதுமாக எனது பொழுது கழிந்தது, ஆனால் கற்றவர்களோடு உரையாடுவதும், மேலும் அறிவைப்பெறுவதற்கு உதவியாகவிருந்தது.

அலெக்ஸ்சாந்தர் மாஸ்டர் கவிதைக்கான யாப்பு இலக்கணத்தை எத்தனையோ விதமாகச் சொல்லித்தந்தார். விசேட வகுப்புக்களும் வைத்தார். நான் பாடசாலையிலேயே இலக்கண வகுப்புக்கு கள்ளம் படுத்தியவன். ஆசிரியர் கவிஞர் கந்தவனம் நீ இந்த யுகத்தில் கவிதை எழுதமாட்டாய் என்று திட்டினார். பெரியவர்களிடம் திட்டு வாங்குவதும் இன்பம்தான்.

இப்பொழுது மாவிலிமைந்தன் சண்முகராஜா வகுப்பெடுக்கிறார். கவிதை இப்பொழுது லேசாகப் புரிகிறது. நான்கு வருடங்களுக்குப்பின் கவிதை எட்டிப் பார்க்கின்றது என்னோடு கவிதை வகுப்புக்கு வந்த சிலர் ஓடியே விட்டார்கள். நான் இன்னும் நின்று படிக்கின்றேன்... கெட்டித்தனம்தானே?

நான் காலையிலிருந்து இரவுவரை ஒரு நிகழ்ச்சி நிரல் வைத்திருக்கின்றேன். அதன் படியே செயற்படுத்துகின்றேன். உறைபனி மழைகூட எனது நிகழ்ச்சி நிரலை பாதிப்பதில்லை.

அதிகாலை 6.30 மணிக்கு கிங்ஸ்ரன் வீதி அருகாமையில் அமைந்திருக்கும் எனது ஜாகையிலிருந்து புறப்பட்டு, 7.00 மணிக்கு எனது இரண்டு பேரக்குழந்தைகளை பாடசாலை அழைத்துச் செல்வதற்கு வருவேன். அவர்களோடு 8.45 வரை செலவிடுவேன்.

அதன் பிறகு, இரவு 8.00 மணி வரை தங்கும் பேச்மன்ட் றோட் பாடசாலைக்கு வருவேன். அங்கு இரவு வரை எழுத்து, படிப்பு, நாடக ஒத்திக்கை, வில்லுப்பாட்டு ஒத்திகை ஆகியவை நடக்கும். இது ஐந்து நாட்களுக்கு நடக்கும். சனி, ஞாயிறு, வேறுவிதமான நிகழ்ச்சி நிரல். ஏழுநாளும், 18 மணித்தியாலமும் வேலை.

இப்படித் தொடர்ந்து இயங்குவதால் மன அழுத்தம் இல்லை. கவலை இல்லை. ஏதோ சாதிக்க வேண்டுமென்ற ஆவல் என்னைத் தொடர்ந்து வேலை செய்ய வைக்கின்றது. இந்தத்தொடர் மூலம் உங்களுக்கு பல நல்ல செய்திகளைச் சொல்ல விரும்புகிறேன். உங்களுக்கு இது பலவிதத்திலும் நன்மை பயக்கும் என நம்புகிறேன். இதை எழுதுவதற்கு எனக்கு அனுமதி தந்த 'தாய்வீடு' குழுமத்தினர்க்கு எனது நன்றி.

(தொடரும்...)



sanmuganathan@thaiveedu.com


## JRS College
of Business and Health Care Inc.

"Committed to providing quality training"

**Food Handling Training**
(Starting in June 2018)

**Food Service Worker**
(Starting in May 2018)

**Personal Support Worker**
(Starting on April 23, 2018)

**Accounting and Payroll Administration**
(Starting on April 23, 2018)

**Health Office Administrator**
(Starting on May 21, 2018)

**STUDENT TESTIMONIALS**

"I have chosen Early Childcare Assistant diploma program which is 36 weeks in length at JRS College of Business and Health Care Inc. To do this diploma program at JRS College, I received over $34, 000 from government."

**Mathu**

"I have chosen 40 weeks of Health Office Administrator diploma program at JRS College of Business and Health Care Inc. Due to long duration program I received $44, 000 through Second Career to cover my studies, day care, living allowance and transportation."

**Thiny**

"With the help of JRS College of Business and Health Care Inc., I am able to take Accounting and Payroll Administration diploma program with the government funding of $36, 000. The main reason for me to get high amount is since the program duration is 45 weeks."

**Suba**

## 15 Programs

**Business**

| | |
|---|---|
| -Accounting & Payroll Admin-PT | (50 Weeks) |
| -Accounting & Payroll Admin 2017 | (44 Weeks) |
| -Computerized Accounting | (30 Weeks) |
| -Office Assistant | (16 Weeks) |

**Health Care**

| | |
|---|---|
| -Community Service Worker | (52 Weeks) |
| -Early Childcare Assistant | (36 Weeks) |
| -Health Office Administrator 2017 | (39 Weeks) |
| -NACC PSW 2015-PT (Certificate) | (35 Weeks) |
| -NACC PSW 2015 (Certificate) | (35 Weeks) |
| -Pharmacy Assistant | (46 Weeks) |

**Technology**

| | |
|---|---|
| -3D Animation for Video Games | (72 Weeks) |
| -Graphic Design | (34 Weeks) |
| -Web Development | (43 Weeks) |
| -Computer Network & Security | (40 Weeks) |
| -Engineering Design and Drafting Technologist | (28 Weeks) |

## Contact info

**(Midland & Finch)**
**330-4168 Finch Ave East**
**Scarborough, ON M1S 5H6**
**416-292-2455**

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005.)



# SELS Inc.

## CARRIER & RIDE SERVICES

**OTTAWA ➡ KINGSTON ➡ TORONTO ➡ HAMILTON**

**Ottawa Greenboro பஸ் தரிப்பிடத்திலிருந்து புறப்படும் நேரம்:**

திங்கள் - வெள்ளி காலை 10:00 மணிக்கும் மாலை 6:30 மணிக்கும்
ஞாயிறு மாலை 4:00 மணிக்கும் புறப்படும்.

**Toronto வில் இருந்து புறப்படும் நேரம்:**


திங்கள் - வெள்ளி காலை 10:00 மணிக்கும் மாலை 6:30 மணிக்கும்
ஞாயிறு மாலை 4:00 மணி

**Parcels + Courier** எதுவாயினும் உரிய இடத்துக்குப் பாதுகாப்பாகக் கொண்டு போய்ச் சேர்க்கப்படும்.

நீண்ட விடுமுறை மற்றும் வார இறுதி நாட்களில் சிறப்புச்சேவை உண்டு!
**We also do small Moving and Parcel delivery all over Ontario!**

## உங்கள் மனநிறைவே எங்கள் தரம்!

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்:
குமரன் (செல்வா) 613.889.8733 / 647.648.0166
மின்னஞ்சல்: **sels4ride@gmail.com**


Detached homes
Double Garage
5 Bedroom
4 washroom
2750 to 4100 Square Feet
2 More Lots Available.
BOOK NOW !
TARION
BILD
Coming soon near Meadowvale & 401 - Scarborough
Custom Design your "DREAM HOME".
We Build More Than Homes, We Build Communities.
GALAXY
Communities
www.galaxycommunities.com
416-899-0500
647-829-7979

# மோட்கேஜ்

புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்



# MORTGAGE NESAN
**416-908-5656**

## Residential / Commercial / Industrial / Investment Properties

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment, Pre-approval
- Home Equity Loan

### 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |
| 546,000 | 515.98 | 1031.96 | 1117.96 | 2235.92 |

### 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |
| 546,000 | 598.44 | 1196.88 | 1296.62 | 2593.24 |

### Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

### 2nd Mortgage ('D' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

### 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

### Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |

MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099

# HOUSES FOR SALE




Needs Tlc But Best Priced Two Bedroom Condo Of The Area ** Some Of The Furniture Is Included ** Tenant Paying $1650 And Willing To Stay ** Excellent, Well Managed Corporation With Good Reserves ** Walk To Subway, Ttc, Shopping, School, Golf Course, Parks** Day Care And Medical Centre In The Complex **




Newly Renovated Kitchen, Washrooms, Floor(Laminate And Ceramic) &Doors, "Woodland On The Park" Nicely Kept 2+1 Bedroom, Move In Condition. All Rooms With Closets & Windows Large En Suite Storage And Laundry Room. Very Convenient Location. Steps To Park, TTC, Hospital, Shops, Min To 401 & 404. Full Recreation, Indoor Pool, Gym Etc.




Newly Renovated 3 Bedroom Plus Den Suite At Lee Centre Dr. This Unit Is Bright & Spacious With An Amazing Layout. Enclosed Kitchen In Separate Area. Laminate Flooring For Easy Cleaning. Enclosed Den Can Be Used As A 4th Bedroom. Hydro Included In Maintenance Fees. Great Location, Close To TTC, LRT, Scarborough Town Centre, Hwy 401, Shops, Restaurants & Much Much More!




Tridel Built! In Immaculate Condition! Professionally Renovated! Rare 3 Bedrooms With 2 Full Washrooms. Master Bedroom Has An Ensuite & Walk In Closet, Also Walk Out To Large Balcony. Huge Living Area, Brand New Kitchen With Quartz Countertop And Pantry, With Extended Size Cabinets And Stainless Steel Appliances. And Has 2 Parking Spots. Move In Ready. Close To All Amenities: Shopping, Transit, Place Of Worship, School, Hospital.




Live, Work, And Play In Popular Downtown Markham! 745 Sqft, 1 Bed + Den Unit With 2 Full Baths. 10-Ft Ceiling, Engineered Hardwood Floors Throughout, Custom Closet Organizer In Master, Granite Counter In Kitchen And Stainless Steel Appliances. Custom Built Tv Wall, Rotates Between Living Room And Bedroom. Convenient Location, Close To Restaurants, Shopping, Cinema, Go, Viva, Highways 404 & 407, And Future York U Markham Campus.




Luxurious Condo With 902 Sq Ft, Spacious & Bright Unit, Conveniently Located At The Upscale Cathedral Town, Minutes To Hwy 404, Costco, Canadian Tire, T & T Supermarket And Close To All Amenities. Walk To Park & Public Transit. Laminated Floorings Thru Out And Upgraded Kitchen Back Splash & Granite Counter Top. Huge Laundry Area With Storage Space, Extra Large Closet In 2nd Bedroom.




Luxury Condo Rare Corner Bright Unit 1590 Sf, 3 Bedrm +Den+Huge Balcony+Two Parkings+One Huge Locker (#107), New Kitchen W/Granite Countrtop/New Upgde Wood Cabinet Doors W/ "Auto Smooth Close" Drawers, Ceramic Floor ,Upg Backsplash & Faucet, Newer Laminated Floor Thru-Out. Steps To TTC/All Amenities/Shops/Plaza/Restaurants/401/Stc, 24Hrs Security, Ample Visitor Parking




Absolutely Stunning $$Upgrade. All Renovated Top To Bottom Brand New Exquisite Kitchen, Quartz Counter Top, 3 Wash Rooms, New Professionally Finished Basement Apartment With Separate Entrance *New "Move-In Condition" New Driveway "Sought After Location, Quick Access To 401 Walking Distance To Shopping Mall ,Costco, W.Mart, Transportation, Schools & Parks Must See! Gorgeous Family Room W Large Windows & Fireplace.




Client Remks: Well Kept **Clean ** Updated **Freshly Painted** Detached Back Split ** Corner** Bright House ** Excellent Location- Close To U OFT ,Ttc, Shopping, Hwy, Schools, Park And All Amenities ** Newer Roof, Furnace, Windows, Hardwood/Laminate Floors, Tiles ** Nothing To Do But Just Move In !! Great "Single Family Home". Shows Pride Of Ownership!! Lots Of Storage Space In The Crawl Space** Excellent Price For A Detached House





Well Maintained 3 Bedroom Bungalow With Finished Basement On A Very Large Deep Lot In This All Brick Home. TBasement Apartment With Separate Entrance For Extra Income Or Personal Use. Enjoy This Mature Neighbourhood Within The Prime Wexford-Maryvale Community. On The Border Of North York! Great Location, Close To The Dvp, TTC, Shops At Don Mills, Hwy 401, Eglinton Sq, And Much Much More!




Offers The "Best Value" In The Area! High Quality Upgrades With Professionally Finished Basement And 3Pc Washroom. Having A 50' Frontage Across From Greenbelt With Covered Veranda. A Light And Airy Floor Plan Showing 10+




3 Bedroom, Finished Basement, 2 Storey, End Unit Excellent Freehold Town House In Demand Area. Location, Location, Location. Hardwood Floor From Top To Bottom. Double Door Entrance, Fenced Back Yard. Basement 2 Bedrooms, Rec Room, Bathrooms. Tankless Water Heater, Close To Shopping, Transportation, 407 And Hwy 401




Wow! Awesome, "Must See!" Newly Renovated 1500Sq.Ft. (As Per Mpac), Double Garage Bungalow With Spacious Finished Basement. Potential In-Law Suite With Sep/ Entrance, Or Possible Rental Income, New Windows Throughout, New Doors & Hardwood On Main Level, Upgraded Kitchen With Quartz Countertop & Backsplash, New S/S Fridge & Stove, Newly Upgraded Bathrooms Throughout, All Reno's Completed January 2018,




Solid Built 4 Bedrms + Loft "Tribute" Home In Sought After Windfields Farm Community. Prem Wide Corner Lot Location With E.Z Access To 407/401 Walking Dist. To Uoit, Durham College, New Elementary School (2018), Planned Shopping Mall...All Amenities. 3,144 Sf Of Luxury, Sun-Filled Layout, Upgraded Windows, Loft Easily Convert To 5th Bdrm, Main Floor Laundry, $$$ Spent On Upgrades, 9'Ceiling, Gleaming Hardwood Floor, Open 2 Below Stairwell, Stone Countertops




Updated, Spacious 4 Bedroom, Well Maintained With 2 Bachelor Apartment, Walk Out Bsmt To Ravine, Hardwood Floor, A Prestigious West Hill Community, Private Large Amazing Ravide Lot (Only One Side Neighbour). New Oversized Cedar Deck Overlooking Professionally Lanscaped Yard, Large Stone, Finished Bsmnt, With 2Bachlore Units One Tenant Pay $700, Newer Interlock Sidewalk To Backyard, Close To Schools, Parks, Shopping, Library, Sport Centre, Uot And College, Hwy 401




Meadowvale/Hwy #401 - Toronto

A Beautiful Masterpiece In Prestigious Highland Creek, Detached House W/A Double Garage & Spacious 4 Bedrooms, 3 Bathrooms + 1 Washroom, Prof Finshed Basmt W/A Bedroom-Kit-Bath-Lv-Din Rm, Lots Of Upgrades, Newer: Hardwood Flr In Lv-Din-Fam Rm/All Vinyl Windows Patio Sldg Door/Marble Floor & Vanity In Bath In 2nd Fl/Porcelain Tiles In Foyer-Hallway-Kit/Counter Top/Hallway Lites




Too Many Upgrades To List!! Magnificent Open Concept With Custom Floor Plan On Premium Ravine Lot! Nearly $150K In Upgrades Throughout! Family Room With Modern Fireplace On Handscraped Hardwood Floors. Chefs Kitchen W/ Extra Large Centre Island, Quartz Counters, Modern Stainless Appliances & Floor Tiles. Spacious Mud Room With Built-Ins. Stunning Master Closet With Built Ins. Spa Like Master Ensuite With Frameless Glass Shower.




Gorgeous 3 Bdrs Detached Home W/ Double Car Garage Located High Demand Area. Top Ranked Kennedy Public School And Norman Bethune Ci. 4-Car Driveway & No Sidewalk. Freshly Painted, Newly Installed Wood Floor On Main, New Roof (2017), Furnace (2014), Cross Street From Pacific Mall, Walking Distance To Supermarket, 24 Hrs Ttc And More.




Bright & Spacious. Open Concept Layout, 9Ft Ceiling On Main. Stained Hardwood Floor & Oak Staircase. Extended Uppers, Valance & Under Cabinet Lighting. Fully Fenced Backyard. Skylight. Glass Insert Front Door, Crown Molding, Pot Lights. Kitchen Granite Counter Top. No Side Walk. Half Stone Front. Just Move In & Enjoy.

RE/MAX Hall of Fame

RE/MAX

RE/MAX CROSSROADS REALTY INC., BROKERAGE
1055 McNicoll Ave. Scarborough, ON M1W 3W6

YS

## YATHAVANN SELVARAJAH

**Dir: 416.992.4474**

Office: 416.491.4002



selva@topremax.ca • www.houzzvalue.ca • www.gtanewcondo.com


பிராணஜீவ
சர்வ ரோக நிவாரணி
200 வருடங்களுக்கு மேலான மரபார்ந்த மூலிகை மருந்து. இதய வியாதிகள், சலரோகம், உயர் இரத்த அழுத்தம், புற்றுநோய் போன்ற வியாதிகளுக்கான நிவாரணியாகவுள்ளது.
Pranajeewa is a traditional herbal medicine that has passed down from generation to generation. It is over 200 years old and is a proven cure for many kinds of diseases including Heart disease, Diabetes, hypertension, Cholesterol and Cancer. Sethsuwa Pranajeewa's miraculous properties has made it the ideal cure for a multitude of other ailments and conditions, known among them are paralysis, Asthma, Catarrh, Skin diseases.
Pranajeewa
100% Natural Herbal
எலும்பு, மூட்டு
ஆரோக்கியத்திற்கு!!
NanoCal is a supplement that has been approved by the US FDA as a CURE for osteoporosis and osteoarthritis.
NanoCal can actually reverse and cure these conditions!
NANOCAL
Ervamatin
Hair Lotion
The ERVAMATIN™
முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது. கபாலத்தில் பொடுகைப் போக்குவதுடன் முடியை செழிப்பாக வைத்திருக்க எவமாட்டின் மூலிகைக் கலவை உதவுகிறது.
SHAMPOO
Amazon Organic Shampoo is for all hair types is rich yet mild, cleans well and leaves hair full bodied lustrous and manageable. முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட தலைமுடி மை.
Dreamron Semi-Permanent Eco Hair Color is the newest innovation that is specially formulated for the people who are allergic to normal oxidative hair colorants which contain PPD & Ammonia. This is a gentle blend of unique herbal powders with HC colorants.
Dreamron
ECO
Hair Color
Specially for
Turmeric & Sandalwood Day Cream
Turmeric & Sandalwood Day Cream Whiter and Beautiful Skin. Protects the skin year round from the elements Prevents pimples and acne Removes blemishes and evens skin tone. Brightens skin Works as an antiseptic.
Kasturi
கஸ்தூரி மஞ்சள் கொண்டு தயாரிக்கப்பட்ட முக சரும பராமரிப்பு!
SABONA & Gift
2466, Eglinton Ave East Unit 12A (@ Midland) Scarborough, ON. www.sabona.ca 416•264•8787
Jayacs • 416-275-0070


Finding Homes to fit your Lifestyle
HOMELIFE
HomeLife Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave., Suite 210
Toronto, ON, M1P 4S6
அழகான
இல்லம்
ஆனந்தமான
வாழ்க்கையின்
ஆரம்பம்
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
Professional, Reliable & Experience Services
MORTGAGE EMPIRE (LIC# 12660)
MORTGAGE ALLIANCE
MORTGAGE EMPIRE
அனைத்து
மோட்கேஜ்
தேவைகளுக்கும்
அழையுங்கள்
We have mortgage solutions for everyone.
* 1st & 2nd Mortgages
* Private Motgages
* Refinance
WIN UP TO $100,000* ONE LUCKY MORTGAGE ALLIANCE CUSTOMER
RAVI PARAMU AMP
Mortgage Agent
Lic # M11000420
Dir: 416-262-4176
rparamu@mortgagealliance.com
rparamu1558@gmail.com
5-1801 HARWOOD AVE. N., AJAX ON L1T 0K8 TEL:416-321-0110 FAX:416-321-0150
``THANK YOU ALL FOR YOUR TRUST, SUPPORT & REFERRAL``
RAVI INCOME TAX SERVICES "INCLUDING EFILE"

# மதச்சார்பில்லா ஆன்மிகம்

## Secular spirituality

- ப. தயாநிதி -

நிம்மதியையும் நிரந்தர இன்பத்தையும் தேடி சமயங்களை நாடுகிறார்கள் ஒரு சாரார். அதே சமயம், மேலைத்தேய நாடுகளில் இளந்தலைமுறையினரில் பலர் சமயங்களிலிருந்து விலகி ஓடுகின்றனர். சமயங்கள் பகுத்தறிவுடன் ஒத்துப் போவதில்லை என்றும், உலகில் சண்டை, சச்சரவு, பிணக்கு, போர் என்பவற்றுக்கு சமயங்கள் அவ்வப்போது காலாக இருந்தன என்றும் அவர்கள் கருதுவதே இதற்குக் காரணங்களாகும். பொருளைத்தேடி பொருள் சார் வாழ்க்கையிலேயே (materialistic life) இன்பத்தை முற்றாக அடையலாம் என அவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால், பொருள்சார் வாழ்க்கையின் ஊடாக நிரந்தர இன்பத்தை அடைய முடியாது என்பது நிதர்சனம். ஆனால் சமயங்கள் தம்மைப் பின்பற்றுவோருக்கு வழங்கும் நிம்மதி, திருப்தி, மகிழ்ச்சி என்பவற்றை, சமய நம்பிக்கை இல்லாதோர் அடையமுடியுமா? அப்படியானால் எப்படி அடைவது? என்ற வினாக்களுக்கு விடையாக அமைவதே மதச்சார்பில்லா ஆன்மிகம் ஆகும்.

ஆன்மிகம் என்றாலே பலருக்குச் சமயங்களே நினைவுக்கு வரும். எனவே மதச்சார்பில்லா ஆன்மிகம் என்னும் சொற்பிரயோகம் அவர்களுக்குப் புதுமையாக இருக்கலாம். ஏனெனில், ஆன்மிகம் என்ற சொல்லின் ஆங்கில வடிவான(spirituality) என்பது 1960கள் வரை கத்தோலிக்க சமயத்தில் மாத்திரமே உபயோகிக்கிப்பட்டு வந்தது. இதன் பின்னர்தான் இதனை ஏனைய சமயங்களும் பயன்படுத்தத் தொடங்கின.

ஆன்மிகம் என்ற சொல்லின் பொருள் காலத்துடன் பரிணாம வளர்ச்சி அடைந்ததுடன், தற்பொழுது பல்வேறு அர்த்தங்களுடன் வெவ்வேறு சமயக் குழுவினராலும் சமயஞ் சாராக் குழுவினராலும் பயன்படுத்தப்படுகின்றது. ஆரம்பத்தில் ஆன்மிகமும் சமயமும் பிரித்துப்பார்க்க முடியாதவையாக இருந்தன. ஆனால், தற்பொழுது மதச்சார்பில்லா ஆன்மிகத்தைப் பற்றி சமூகவியலாளர்கள், உளவியலாளர்கள், விளையாட்டுத் துறையினர் எனப் பலரும் பேசத் தொடங்கிவிட்டார்கள். உலகப் புகழ் பெற்ற பௌத்தத் துறவி தலைலாமா ஒருமுறை பேசும் பொழுது "நான் ஆன்மிகத்தைப் பற்றி குறிப்பிடும் பொழுது சமய நம்பிக்கையைக் கருதவில்லை" (when I say spirituality, I am not thinking in terms of religious beliefs) என்று கூறியுள்ளமையும் கவனித்தற்குரியது.

**மதச்சார்பில்லா ஆன்மிகம் என்றால் என்ன?**

மதச்சார்பில்லா ஆன்மிகம் என்பது பொருள் சார் பார்வைக்கு அப்பால் பின்வரும் நான்கு விஷயங்களைக் குறிக்கலாம்

- சில வியத்தகு அழகிய இயற்கைக் காட்சி அல்லது உன்னதமான நடனம், சித்திரம், சங்கீதம் போன்ற கலைகளைப் பார்க்கும் பொழுது, கேட்கும் பொழுது எமக்கு உண்டாகும் பரவச நிலையை நிரந்தரமாகவோ கூடிய நேரத்துக்கோ தக்க வைத்திருப்பது.
- மேலே சொல்லப்பட்ட பரவச நிலையை தியானம், யோகக்கலை, எப்பொழுதும் பிரக்ஞையுடன் இருத்தல் (mindfulness) போன்றவற்றில் ஈடுபடுவதன் மூலம் பெறுதல்.
- இப் பிரபஞ்சத்துடனும், உலகத்துடனும், மனித சமுதாயத்துடனும் எமக்குள்ள தொடர்பை மேலே சொல்லப்பட்ட தியானம் போன்றவற்றால் புரிந்துகொள்தல்.
- மேலே சொல்லப்பட்ட புரிந்து கொள்ளலாலும், வேறுவழிகளாலும் அன்பு, இரக்கம், பொறுமை, மன்னிக்கும் தன்மை, சுயநலமற்ற தன்மை எனும் குணங்களை முழுமையாகப் பெற்று நிரந்தர இன்பத்தை இவ் வாழ்க்கையில் பெற்றுக் கொள்ளுதல்.

நரம்பியலில் (Neuroscience) கலாநிதி பட்டம் பெற்ற பகுத்தறிவுவாதியும் தத்துவவாதியும் நரம்பியல் விஞ்ஞானியுமான சாம் ஹரிஸ் (Sam Harris) என்பவர் தான் எழுதிய 'Waking Up - A guide to spirituality without religion' என்னும் நூலில் தன்னுடைய தியான அனுபவத்தைப் பற்றி விளக்கமாக எழுதியுள்ளார். இந்தியா உட்பட பல கீழைத் தேசங்களுக்கும் சென்று தியானத்தைக் கற்றுக் கொண்ட இவர் வேதாந்தம் கூறும் 'நானும் இப்பிரபஞ்சமும் (பிரமமும்)ஒன்றே' என்னும் ஒருவித ஆனந்தமான மனநிலையை தியானத்தின் மூலம் அடையக் கூடியதாக உள்ளதெனக் கூறுகிறார். இந்த நிலையையே ஞானிகளான இராமகிருஷ்ணர், புத்தர் போன்றவர்களும் அடைந்திருக்கவேண்டும். சாம் ஹரிஸ் கூறுவதன் விளக்கத்தை மேலும் ஆராயலாம்.

எமது மனம் (mind) வெவ்வேறு நிலைகளான (state) விழிப்பு, உறக்கம், மயக்கம், கனவு, தூண்டப்பட்ட அறிதுயில் (hypnosis) என்பவற்றில் இருப்பதை நாம் அறிவோம். இவற்றைப் போன்ற இன்னொரு மனநிலைதான் தியான நிலை.

ஓட்டோஸ்ரிறியோகிறாம் (autosterogram) என்பது எமக்குத் தெரிந்ததொன்றே. இரு பரிமாணங்களிலுள்ள தாளிலுள்ள வடிவமைப்பை ஒருவிதமாக சிறிது நேரத்திற்கு உற்றுப் பார்க்கும் பொழுது முப்பரிமாணங்களில் நாம் எதிர்பார்க்காத ஒரு உருவம் தெரிவதைப் பலரும் ஓட்டோஸ்ரிறியோகிறாமில் கண்டிருப்பீர்கள். இவ் எதிர்பாராத உருவத்தைக் காண்பதற்கு ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு அளவான நேரம் தேவைப்படும். எவ்வளவு நேரம் உற்றுப் பார்த்தும் அவ்வுருவம் தெரியவில்லை எனக் கூறுபவர்களும் இருக்கிறார்கள். இதே போலத் தியானநிலையை அடைவதற்கும் ஒவ்வொரு மனிதரும் வெவ்வேறு அளவில் முயற்சிக்க வேண்டி வரலாம். சிலருக்குத் தியான நிலையை அடைவது சாத்தியமற்றதாகக் கூட இருக்கலாம்.

எப்படி விளையாட்டு வீரர்கள் தமது துறையில் வெற்றி அடைவதற்கு சாதகமான உடல் மரபணுக்களும், தொடர்ந்த நீண்ட பயிற்சியும் தேவையோ அதே போல இந்த சந்தோஷமான பரவச மனநிலையை அடைவதற்கு தொடர்ச்சியான நீண்ட காலத் தியானப் பயிற்சி தேவை. சில வகையான உடல், மன அமைப்புள்ளவர்களுக்குக் குறைந்த பயிற்சியுடனேயே இந்நிலை கைவரக்கூடும். ஏனையவர்களுக்குக் கூடிய கால தியானப் பயிற்சி தேவைப்படும். இவ்வித ஆனந்தமான பரவச மனநிலையை அடைந்தவர்களுக்கு எல்லாத்துறைகளிலும் அறிவு கிடைத்து விடும் என்று எண்ணுவது பகுத்தறிவுக்கு ஒவ்வாததாகும்.

தியான நிலையில் இருந்து விடுபடும் பொழுது அந்நிலையில் இருக்கும் பொழுது கிடைத்த தன்னையும் உலகையும் ஒன்றாகப் பார்த்த சந்தோஷமான மன அமைதி தொடர்ந்து இருக்குமென கூறமுடியாது. இம் மன அமைதி நிரந்தரமாக இல்லாவிடினும், தியானம் முடிந்த பிறகும் குறைந்த அளவிலாவது தொடர்ந்து இருக்கும். எப்படி நல்ல உறக்கம், அதன்பின்னரும் எமது மனநிலையை நல்ல வகையில் வைத்திருக்கின்றதோ, அதேபோல் தியான நிலையின் பின்னரும் எமது மனதில் அதன் நல்ல தாக்கம் தொடரும்.

தியான நிலையை அடைவது பலருக்குச் சுலபமான விஷயமாக இருப்பதில்லை என்பதால், இத்தியான நிலையை அடைவதற்குச் சில போதைப் பொருள்களும் பயன் படுத்தப்படுகின்றன என்று சாம் ஹரிஸ் கூறுகின்றார். தான் MDLA, LSD போன்ற சிலவகையான போதைப் பொருள்களை உட்கொண்ட பொழுதும் தன்னுடன் இருந்தவர்களிடம் எல்லையற்ற அன்பு கொள்வதாக உணர்ந்ததாகவும் அவர்களுக்காக எதுவும் செய்யத் தயாராக உணர்ந்ததாகவும் எல்லையற்ற மகிழ்ச்சியை உணர்ந்ததாகவும் கூறுகிறார். என்றாலும் வேறுசில தருணங்களில் அப் போதைப் பொருட்களை உண்ட பொழுது துன்பத்தின் உச்சிக்குச் சென்று நரக வேதனையை அனுபவித்ததாகவும் குறிப்பிடுகின்றார். கஞ்சா போன்ற போதைப் பொருட்களை சாமியார் சிலரும் உபயோகிப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்போதைப் பொருட்களை உபயோகிப்பதன் மூலம் இவற்றிற்கு அடிமையாக (addiction) மாறுவதற்குச் சாத்தியக்கூறுகள் இருப்பதாலும், உடல் நலத்திற்குக் கெடுதியைக் விளைவிப்பதாலும், சட்டப்படி குற்றமாக இருப்பதாலும் இவற்றை உபயோகிக்கக் கூடாது என்பது யாவரும் அறிந்ததே.

எனவே குறுக்குவழியான சிலவகைப் போதைப் பொருட்களை உபயோகிப்பதைத் தவிர்த்து கடின முயற்சி மூலம் தியான நிலையை அடைய வேண்டுமென்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

சமய நம்பிக்கை அற்றவர்களுக்கு மதச்சார்பில்லா ஆன்மிகம் ஈர்ப்பினை அளிக்கக்கூடும். எல்லாச் சமயங்களிலும் பொருள் சாரா இன்பத்தை அடைவதற்குரிய வழிமுறைகள் இருக்கின்றன. அதே சமயத்தில் பகுத்தறிவினால் ஏற்றுக்கொள்ள முடியாத பல நம்பிக்கைகளையும் சமயங்கள் தம்மகத்தே கொண்டுள்ளன. கடவுள், இறந்ததன் பின்னர் கிட்டும் சொர்க்கம், நரகம், முத்தி என்பவற்றைப் பற்றி மதச்சார்பற்ற ஆன்மிகம் அலட்டிக் கொள்வது இல்லை. அத்தகைய பகுத்தறிவுக்கு ஒவ்வாத நம்பிக்கைகளையும், கிரியைகளையும் விடுத்து, சமயங்கள் கூறும் தியானம், நல்லொழுக்கம் என்பவற்றைக் கைக்கொண்டு பொருள் சார் பார்வைக்கு அப்பால் உள்ள இன்பத்தை இவ்வுலகில் நிரந்தரமாக அடைவதே மதச்சார்பில்லா ஆன்மிகத்தின் இலக்காகும்.

மேலும், மதச்சார்பில்லா ஆன்மிகம் என்பது கீழைத்தேயச் சமயங்களிலிருந்து பெருமளவான விஷயங்களை உள்வாங்கியுள்ளது. தியானம், யோகக்கலை, எப்பொழுதும் பிரக்ஞையுடன் இருத்தல் (mindfulness) என்பன கீழைத்தேய சமயங்களிலிருந்து பெறப்பட்டவையே. ஆபிரஹாம் சமயங்களான கிறிஸ்தவ, இஸ்லாமிய, யூத சமயங்கள் மனித நன்மையை மையமாகக் கொண்டவை. விலங்குகள், பறவைகள் போன்ற எல்லா உயிரினங்களுமே, மனிதன் அனுபவிப்பதற்காகவே படைக்கப்பட்டன என்று கூறுகின்றன. இந்திய சமயங்களான சமண, புத்த, இந்து சமயங்கள் உயிரின மையம் (bio centric) அல்லது சூழல் மையம்(eco centric) கொண்டவை. அதாவது பிரபஞ்சத்திலுள்ள எல்லா உயிரினங்களின் நன்மையை தனித்தும் ஒன்றாகவும் பார்க்கின்றன. இப்படியான பரந்துபட்ட பார்வை ஆன்மிகத்தின் உன்னத நிலைக்குத் தேவையானது எனக்கருதுகிறேன்.

*செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்*
*சேர்ந்திடலாமென்றே எண்ணியிருப்பார்*
*பித்தமனிதர் அவர்சொலுஞ்சாத்திரம்*
*பேயுரை யாமென்றிங்கூதேடாசங்கம்*

என்கிறார் மஹாகவி சுப்பிரமணிய பாரதியார்.

இறந்த பிறகு சொர்க்கம், முத்தி அல்லது அடுத்த பிறப்பு என்று எண்ணுவதை விட்டு, இப்பிறப்பிலேயே நிரந்தர இன்பத்தை குறிக்கோளாகக் கொண்டே ஜீவன் முத்தி அல்லது பரிநிர்வாணம் என்று கூறலாம். அதுவே மதச்சார்பில்லா ஆன்மிகத்தின் குறிக்கோள் என்று கருதுகிறேன்.

thayanithy@thaiveedu.com



தமிழ்ப் பூங்காவிற்

# 'பாடுங்குயில்'

சிறுவர் பாடலரங்கம் - 2018

2014, 2013, 2012, 2011, 2010இல் பிறந்தவர்கள்
பங்குபற்றலாம்

விண்ணப்பங்களைத் தமிழ்ப்பூங்காவிலும்
www.thamilpoonka.org
இணையத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப இறுதி நாள்: மே 31, 2018
பாடல் ஒப்புவிக்கும் நாள்: யூன் 30, 2018
பாடல்கள் விண்ணப்பங்களோடு தரப்படும்

விபரங்களுக்கு: 647 378 3006, 647 706 6123, 905 479 5375

**3001, Markham Road # 21 Scarborough. ON**
**(Markham & McNicoll)**

# இலக்கியத்தில் அறிவியல்

- சு. பசுபதி -

## அறிமுகம்:

'அறிவியல்' என்ற சொல் அறிவு(Knowledge) என்ற சொல்லில் பிறந்தது.

பண்டைய காலத்தில் மொழி, இலக்கியம் தொடர்பில் மட்டுமே 'அறிவு' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இன்றோ, அறிவியலுக்கும் தொழில் நுட்பத்திற்கும் அச்சொல் பொருந்துகிறது. மொழியைக் கையாளுவதிலும் அறிவியல் அறிவைச் சுட்டுகிறது இலக்கியம். சான்று கடலைக் 'கார்கோள்' என்கிறது திருமுருகாற்றுப்படை. கார் என்ற மேகம் கடலிலிருந்து தான் நீரைக் கொள்கிறது என்ற அறிவியல் உண்மையை அன்றே தமிழர் அறிந்திருந்தனர் என்பதை இது காட்டுகிறது.

அறிவியல் என்றால் 'விஞ்ஞானம்' (Science); 'தொழில்நுட்பம்' என்றால் Techno logy. அறிவியலுக்கும் தொழில் நுட்பத்திற்கும் இடையே ஒரு நெருங்கிய தொடர்பு உள்ளது. இந்தக் கட்டுரையில் தமிழ் இலக்கியத்தில் உள்ள அறிவியல், தொழில் நுட்பம் சார்ந்த சில தகவல்களைப் பார்க்கலாம். கூடவே, நம் இலக்கியத்தில் 'வலவன் ஏவா வானூர்தி' (புறம் 27-8) போன்ற அறிவியல்சார் கனவுகளும் இருக்கும். அவற்றையும் நம் கண்ணோட்டத்தில் சேர்த்துக்கொள்ளலாம்.

## முற்காலம்:

புறநானூற்றில் ஒரு பாடலில் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்ற புலவர் வானியல் அறிஞர்கள் இருந்தனர் என்று சொல்கிறார். தொல்காப்பியம் உலகத்தின் அடிப்படை 'நிலம் நீர் தீ வளி விசும்பு' என்ற ஐம்பூதங்கள் என்கிறது. பதிற்றுப் பத்து கரும்பு பிழியும் எந்திரங்களைப் பற்றியும், பெருங்கதை ஆழ்துளைக் கிணற்றையும், மணிமேகலை எந்திரவாவி (நீர்சல் குளம்) யையும், பெருங்கதை எந்திர யானையையும் குறிப்பதைப் படிக்கிறோம். மேலும், நேரத்தைக் கணக்கிட தரையில் நடப்பட்ட கம்பின் நிழல் உதவியதைப் பற்றிக் குறிக்கிறது இலக்கியம். நீரைக் கொண்டு நாழிகை அறியும் 'நாழிகை வட்டில்' என்ற கருவியும் அக்காலத்தில் இருந்தது.

கபிலர் ஒரு பாடலில் எப்படி ஏரிகள் எட்டாம் பிறை வடிவில் ஒரு சிக்கன அமைப்பில் இருக்கவேண்டும் என்ற சுற்றுச் சூழல் அறிவைப் புகட்டுகிறார். குளத்தைத் தோண்டியும், மரங்களை நட்டும், மக்கள் நடமாட்டத்திற்கான வழிகளை ஏற்படுத்தியும், மேடுகளைத் தோண்டி உழும் வயலாக்கியும், கிணற்றைத் தோண்டியும் இவ்வைந்து அறச் செயல்களை எவர் செய்கிறாரோ அவர் சுவர்க்கம் புகுவார் என்கிறது சிறுபஞ்ச மூலத்தில் உள்ள ஒரு பாடல்.

கணக்கதிகாரம் என்று நூலில் 'வட்டத்தின் பரப்பளவு' என்ன என்று சொல்லும் ஒரு குறள் வெண்பா.

*வட்டத் தரைகொண்டு விட்டத்தரை தாக்க*
*சட்டெனத் தோன்றுங் குழி.*

(பொருள்: வட்டப்பகுதியின் அரைப்பங்கு நீளத்தை விட்டத்தின் அரைப்பங்கு நீளத்தால் பெருக்கினால் வட்டமப்பரப்பு பெறப்படும்.)

இக்கணக்கில் மறைந்திருக்கும் 'பை' (Pi) பற்றிய ஒரு வெண்பா:

*மூவரில் முன்னவன் நான்முகனே,*
*- பைங்கணிதப்*
*பாவை அழகுகண்டு 'பை'யென்று*
*- சொன்னானோ?*
*வட்டத்தின் சுற்றளவை விட்டம்*
*- வகுத்திடின்*
*பட்டென்று பம்பிடுவாள் பை.*

- பசுபதி

(மார்ச் 14 (3/14)'பை' தினம். *முதல் மூன்று சீர்கள் பையின் தோராய மதிப்பாம் 3.14-ஐக் குறிக்கிறது. பை = அழகு)

கணக்கதிகாரம் என்ற நூலில் பலாப்பழத்தைப் பிளக்காமல் அதன் உள்ளிருக்கும் சுளையின் எண்ணிக்கையை அறிந்து கொள்ளும் வழிமுறை மிக எளிமையாகக் கூறப்பட்டுள்ளது.

போதையனாரின் சூத்திரம் ஒன்று (3,4,5), (5,12,13) என்ற இரண்டு எண்கூட்டங்களில் (அல்லது அவற்றின் மடங்குகளில்) மட்டும் இருக்கும் செங்கோணங்களில் வர்க்கமூலம் இல்லாமல் 'கர்ணங்களைக் கண்டுபிடிக்க உதவுகிறது.

காளமேகத்தின் 'எட்டொரு மா' என்று தொடங்கும் பாடலால் தமிழர் பின்னங்களை வாழ்க்கையில் சகஜமாய்ப் பயன்படுத்தினர் என்பது தெரிகிறது. அதுபோலவே நெய்தல் குவளை ஆம்பல் சங்கம் வெள்ளம் போன்ற பேரெண்களையும் பாடல்களில் நாம் பார்க்கிறோம்.

'புல்லாகி பூடாய் ...' என்ற மணிவாசகரின் பாடலுக்கும் டார்வினின் பரிணாமக் கொள்கைக்கும், விஷ்ணுவின் தசாவதாரங்களுக்கும் உள்ள ஆச்சரியமான ஒற்றுமையைப் பார்த்து நாம் வியக்கிறோம்.

16-17 நூற்றாண்டில் வாழ்ந்த போகர் என்ற சித்தரின் பாடல்கள் மூலம் அவருடைய தொழில் நுட்ப அறிவு, பொறியியல் அறிவு வெளிப்படுகிறது. சீனாவிற்குச் சென்று சாதனைகள் செய்ததாய்ப் பாடியிருக்கிறார். நீராவிக்கப்பல், புகையிரதம், 'பலூன்' போன்றவற்றைப் பற்றிப் பாடியுள்ளார். போகர் சீனாவில் கல்வி பயின்றபோது யாவரும் வியக்கும் வண்ணம் பாரசூட் செய்ததை, 'குடைவித்தை' என்று 9 பாடல்களால் விளக்கியுள்ளார்.

திருக்குறளில் 'மருந்து' என்று ஒரு அதிகாரமே இருக்கிறது.

கைகேயி தன் இதயத்தில் பாய்ச்சின வரம் எனும் கூர்வேல், இன்று இராமனைத் தழுவியதனால், அவன் மார்பாகிய காந்தம் அதனை வாங்கிவிட்டது என்று தசரதர் கம்பம் காதையில் கூறுவதைப் படிக்கிறோம்.

திருப்புகழில் பல பாடல்களில் அருணகிரிநாதர் அக்காலத்தில் இருந்த நோய்களைப் பட்டியலிடுகிறார். ஒரு சான்று:

*இருமலு ரோக முயலகன் வாத*
*மெரிகுண நாசி ... விடமேநீ*
*ரிழிவுவி டாத தலைவலி சோகை*
*யெழுகள மாலை ...யிவையோடே*
*பெருவயி றீளை யெரிகுலை சூலை*
*பெருவலி வேறு ... முளநோய்கள்*

அகத்தியரின் ஐந்து சாஸ்திரம் என்ற நூலில் 18 வித மனநோய்களைப் பற்றியும், அதற்குரிய மருத்துவம் பற்றியும் சொல்லியிருக்கிறது என்று படிக்கிறோம்.

## நிகழ்காலம்:

கவிதைகள் மூலமாய்ப் பல அறிவியல் உண்மைகளைச் சுட்டும் வழக்கம் காணப்படுகிறது. முக்கியமாய், பல அறிவியல் உணமைகளைப் படித்தறிந்த பாரதியின் கட்டுரைகளிலும், பல கவிதைகளிலும் அறிவியலைப் பற்றிய சிந்தனையைக் காண்கிறோம்.

நகைச்சுவை கலந்த சில கவிதைகள் சில அறிவியல் கருத்துகளைச் சொல்வதையும் பார்க்கிறோம்.

உதாரணம்: ஐன்ஸ்டீனின் சார்புநிலைக் கோட்பாடு (Special Theory of Relativity) மிக விரைவாகச் செல்லும் ஊர்தியினுள் காலம் தாமதமாக (Time Dilation) நடக்கும். இதைச் சொல்லும் ஒரு குறும்பா:

*ஐன்ஸ்டீனின் பெரும்விசிறி ஆண்டாள்*
*மின்வேகம் மிஞ்சுகலை தேர்ந்தாள்*
*. பார்த்தொருநாள் புறப்பட்டு,*
*. சார்புவழி பறந்துவிட்டு,*
*முன்னிரவு வீடுவந்து சேர்ந்தாள்!*

- பசுபதி

நோபல் பரிசு பெற்ற சி.வி.ராமன் கண்டுபிடித்த 'ராமன் விளைவு' பற்றி அவரே சொன்ன ஒரு நகைச்சுவைத் துணுக்கு இங்கே ஒரு கவிதையாய் மாறுகிறது.

**ராமன் விளைவு (Raman Effect):**

*பார்புகழ் நோபல் பரிசுவென்று*
*- பாரதத்தில்*
*பேர்பெற்ற ராமனது பேச்சில்*
*- நகையிழையும்.*

*விருந்துக்குச் சென்றிருந்தார் விஞ்ஞானி*
*- ஓர்நாள்.*
*அருந்தவோர் அரியமது அளித்தனர்*
*- யாவர்க்கும்.*

*மதுக்கிண்ணம் பார்த்ததுமே மறுத்து*
*- விட்டார் ராமன்.*
*இதற்கென்ன காரணம் என்றவர்க்(கு)*
*- உரைத்தார்:*

*'ராமன்விளை வைஸோம ரசத்தில்*
*- ஆயலாம்*
*ஸோமரசம் செய்விளைவை ராமனிடம்*
*- அன்று!'*

- பசுபதி

திரைப்படப் பாடல்களில் அதிகமாக அறிவியல் சார்ந்த பாடல்களை நாம் பார்ப்பதில்லை. இருப்பினும், 'நல்ல தம்பி' (1949) படத்தில் என்.எஸ். கிருஷ்ணன் - டி.ஏ. மதுரம் பாடிய அறிவியல்-நகைச்சுவை கலந்த 'விஞ்ஞானத்தை வளர்க்கப் போறேண்டி' போன்ற பாடல்கள் பிரபலமானவை.

## அறிவியல் நூல்கள்:

அறிவியல் தமிழ் ஆக்க முயற்சியில் முதல் கட்டம்: அறிவியல் நூல்கள் எழுதப்பட்டது. இரண்டாம் கட்டம்: கலைச் சொல்லாக்கப்பணி 19-ம் நூற்றாண்டின் முதற் பாதிப்பகுதியில், 1-8 வகுப்பு வரை தாய்மொழியில் பல இடங்களில் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அதனால் பல அறிவியல் நூல்கள் எழுதப்பட்டன.


நூற்றொகை விளக்கம் என்பது 1888ம் ஆண்டில் பேராசிரியர் 'மனோன்மணியம்' பெ.சுந்தரனார் எழுதினார். இந்த நூலில் 'இவ்வுலக வாழ்க்கைக்கு மனிதனின் அறிவு வளர கணிதம், இரசாயனம், உயிரியல் உளநூல், வானவியல், சோதிடம், புவியியல், இலக்கணம், அறம், சிற்பம், கடற் பயணம், போர்க்கலை, மருத்துவம் என்று பல்வேறு துறைகளை அக்காலத்தில் வழங்கிய சொற்களைக் கொண்டு விளக்குகிறார்.

கலைச்சொல்லாக்கப் பணிகள் முறையாக 20ம் நூற்றாண்டில் தான் தொடங்கியது எனலாம். ராஜாஜி, வெங்கடசுப்பையருடன் சேர்ந்து 1916-ல் 'தமிழ் சாஸ்திர பரிபாஷைச் சங்கத்தாரின் பத்திரிகை' என்ற இதழைத் தொடங்கினார். 'கலைச்சொல்லாக்கப் பணியில் இது முதல் கூட்டு முயற்சி' என்கிறார் வே.செ. குழந்தைசாமி. ராஜாஜி 'திண்ணை ரசாயனம்', 'தாவரங்களின் இல்லறம்' என்ற நூல்களை(46/47-ல்) எழுதியது நினைவுக்கு வருகிறது. அறிவியல் வளர்ச்சியில் 'கலைக்கதிர்', 'விஞ்ஞானச் சுடர்', 'வளரும் வேளாண்மை' போன்ற இதழ்களின் பணி குறிப்பிடத்தக்கது.

அண்மையில் வா.செ. குழந்தைசாமி, சுப்பு ரெட்டியார், மணவை முஸ்தபா போன்றோர் பல நூல்களையும், பெ.நா. அப்புசாமி, பொ. திருகூடசுந்தரம் பிள்ளை போன்றோர் பல அறிவியற் கட்டுரைகளையும் எழுதியுள்ளனர்.



pasupathy.s@thaiveedu.com





Finding Homes to Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
E-mail: suba_ay@hotmail.com
1265 Morningside Ave, Suite 203
Toronto, ON M1B 3V9
Tel: 416-287-2222
Fax: 416-282-4488
Each Office Independently Owned and Operated.
RE/MAX
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage




Mortgage? Call Mahesan 416-816-0141
Home Equity Refinance Call Mahesan 416-816-0141
Residential Mortgages
2nd Mortgages upto $500,000
Private Funds Available
Debt Consolidation
Home Equity - Refinance
No Income Qualifier - No Credit
Call me for more details...
5200 Finch Ave. E. Unit 306,
Scarborough, ON. M1S 4Z5
KAPITAL CARE
MORTGAGE INC.
Mahesan Subramaniam AMP
Principal Broker Lic #12623
Office : 416-335-5264 / Direct : 416-816-0141

# விஜய் தணிகாசலம் அவர்களின் தேர்தல் பணிமனை திறந்து வைக்கப்பட்டது

எதிர்வரும் ஜூன் மாதம் ஒன்ராறியோ மாநில அரசுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலின்போது ஒன்ராறியோ புரோகிரசிவ் கொன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பில் ஸ்காபரோ ரூஜ்பார்க் தொகுதியின் மாநில அரசுக்கான பிரதிநிதியாக விஜய் தணிகாசலம் அவர்கள் போட்டியிடுகின்றார். இவரது தேர்தல் பணிமனை கடந்த ஞாயிற்றுக்கிழமை, ஏப்ரல் **22, 2018** அன்று திறந்து வைக்கப்பட்டது. இதில் பல அரசியல் பிரமுகர்கள், சமுக ஆர்வலர்கள், உறவினர்கள், நண்பர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

வேட்பாளராகப் போட்டியிடும் விஜய் தணிகாசலம் அவர்கள் தமிழர் சமுகத்தின் மத்தியில் மட்டுமல்ல, பல இன மக்கள் மத்தியிலும் நன்கு அறியப்பட்டவர் என்பதுடன் வளர்ந்து வரும் ஒரு சிறந்த அரசியலாளரும் கூட. சிறு வயது முதல் தான் போட்டியிடும் இத்தொகுதியிலேயே வளர்ந்து தனது பள்ளிக்கல்வி, மற்றும் பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடிந்த இவர், இப்பகுதியில் வாழும் இளைய சமுதாயத்துக்கு சிறந்த முன்மாதிரியாகவும் விளங்கி வருகிறார்.

இந்த பணிமனை திறப்பு நிகழ்வின்போது ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் கரி கிற:ஃபோர்ட் **(Toronto Councillor Gary Crawford)**, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான மதிப்புக்குரிய போலின் பிரவ்ஸ் **(Former MP and cabinet minister in the Brian Mulroney Government, Honourable Pauline Browes)**, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோர்னிலு சிசு **(Corneliu Chisu Former MP in the Harper government)**, மாநிலமன்ற உறுப்பினர் ரேமன்ட் சோ **(MPP Raymond Cho)** ஆகியோருடன் ஒன்ராறியோ புரோகிரசிவ் கட்சியின் சார்பில் மற்றைய தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களாகிய ரொட் பிலிப்ஸ் **(Rod Phillips - Ajax)**, பீட்டர் பெத்லென்ஃபல்வி **(Peter Bethlenfalvy – Pickering - Uxbridge)**, அரிஸ் பபிகியன் **(Aris Babikian, Scarborough Agincourt)**, லோகன் கணபதி **(Logan Kanapathi - Markham city Councillor and PC candidate)**, கரோலின் மல்ரோனி **(York-Simcoe Candidate and former leadership candidate)**, கிறிஸ்டின் எலியட் **(Newmarket Aurora candidate and former leadership candidate and former MPP)** ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இவர்கள் அனைவரதும் வருகை விஜய் தணிகாசலத்துக்கு கட்சியினுள் காணப்படும் பெரும் எதிர்பார்ப்பையும் இவரை வெல்லவைக்க வேண்டும் என்பதில் புரோகிரசிவ் கட்சி உறுதியாக உள்ளது என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. வளர்ந்துவரும் இளைய தலைமுறை அரசியலாளராகிய விஜய் எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெற்று இத்தொகுதிவாழ் மக்களுக்கும் அனைத்து சமுகத்தினருக்கும் சிறந்த சேவையாற்ற வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு.










**VIJAY THANIGASALAM**

364 Old Kingston Rd, Scarborough ON M1C 1B6 (647) 367-9179 VijayThani.ca

# முதலில் கட்டுங்கள், அவர்கள் வருவார்கள்!

## பாலா சுவாமிநாதனுடன் ஒரு நேர்காணல்

**- அ.முத்துலிங்கம்**

**மதுரையை சேர்ந்த திரு. பாலா சுவாமிநாதன் அமெரிக்காவின் வாசிங்டன் பல்கலைக்கழகத்தில் கணினித்துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். நியூயோர்க் Long Islandல் பிரபல நிதி நிறுவனம் ஒன்றில் ஆய்வாளராக பணியாற்றுகிறார்.**
**டிசம்பர் 2017ல் பல்லாயிரம் டொலர்கள் வைப்புக் கொடை அமைப்பதன் மூலம் நியூயோர்க் ஸ்டோனி புரூக் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவுவதற்கு ஒப்புதல் பெற்றுவிட்டார்.**
**அவருடனான நேர்காணல்.**

**▸ சமீபத்தில் தமிழ் பேசும் உலகத்தை ஆச்சரியப்படுத்தியிருக்கிறீர்கள். நியூயோர்க் ஸ்டோனி புரூக் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை ஏற்படுத்துவதற்கான ஒப்புதலை பெற்றிருக்கிறீர்கள். இது எப்படி சாத்தியமானது?**

2001ல் எங்கள் மூத்த மகன் இசை மாறன் பிறந்ததிலிருந்து தமிழ் மொழியை இல்லத்தில் எழுதவும் பேசவும் கற்றுக்கொடுத்து வந்தோம். நாளடைவில் சில நண்பர்களின் குழந்தைகளும் எமது புதல்வர்களோடு சேர்ந்து தமிழ் படிக்கத் தொடங்கினர். இதை முறைப்படுத்த வேண்டி, 2011ம் ஆண்டில் குழந்தைகளுக்குத் தமிழ் பயிற்றுவிக்க 'நியூயோர்க் தமிழ்க் கல்விக்கழகம்' என்ற ஒன்றை நண்பர் ஒருவரோடு சேர்ந்து நிர்மாணித்தோம். குழந்தைகள் தமிழ் படிப்பது முக்கியமானது, அதேநேரத்தில் தமிழை ஆழ்ந்து ஆராய்ந்து ஒவ்வொரு இலக்கியத்தின் காலகட்டங்களையும் குறித்து பதிவு செய்யவேண்டும் என்று என் தந்தை அடிக்கடி கூறிவந்தார். இதைப் பற்றி பல தமிழ் ஆர்வலர்களிடம் பேசியதில் தரம் வாய்ந்த பல்கலைக்கழகத்தில் ஒரு பேராசிரியரால் மட்டுமே நடுவுநிலைமையான ஆய்வுகளை செய்யமுடியும் என்று தெரிந்துகொண்டேன். 2014ம் ஆண்டின் தொடக்கத்திலேயே ஸ்டோனி புரூக் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்த ஆரம்பித்து விட்டோம்.

**▸ இந்த இருக்கை ஆனந்தவல்லி என்று உங்கள் அம்மா பெயரிலும், மருத்துவர் ஜி. சுவாமிநாதன் என்று உங்கள் அப்பா பெயரிலும் நிறுவப்படுகிறது. அதன் பின்னணி என்ன?**

எனக்கு தமிழ் தாய்மொழி என்ற மட்டோடு விட்டுவிடாமல் தமிழைப் பாடமாக எடுத்தும், கோடை விடுமுறையில் தமிழின் நயத்தை வளத்தை தொன்மையை சிறுவயதிலேயே உணர்ந்திட என் பெற்றோர் மதுரை தியாகராயர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியரான தங்களது நண்பரிடம் எங்களை கூட்டிச்சென்றனர். அங்கு பாடங்களில் வராத செய்யுள்களையும் பாடல்களையும் கற்று வரும்போது தமிழ் மீதும் தமிழ்ப் புலவர்கள் மீதும் பெருமளவு மதிப்பும் மரியாதையும் வளர்ந்து வந்தது. என் தமிழ் பித்திற்குக் காரணமான, எனக்கு தெய்வமாக வழிநடத்திய பெற்றோர்களின் பெயரில் தமிழ் இருக்கையை அமைப்பது எனக்குக் கிடைத்த நற்பேறு என்றே நம்புகிறேன்.

**▸ நீங்கள் மதுரையில் பிறந்து வளர்ந்ததாக அறிகிறேன். மறக்கமுடியாத சிறுவயது ஞாபகம் ஏதாவது?**

பல ஞாபகங்கள் வந்து போகின்றன. ஒரு முறை எனது தாயுடன் சதுரங்கம் விளையாடிக்கொண்டிருந்தேன், அப்போது எனது தந்தை வீடு திரும்பும் ஒலி (வாகனத்தின் சத்தம்) கேட்கவே வழக்கம்போல் விரைவாக விளையாட்டை ஒதுக்கி வைத்துவிட்டோம். தந்தை வீட்டிற்குள் வந்தவுடன் விட்டுப்போயிருந்த தேர் ஒன்றைப் பார்த்துவிட்டு சதுரங்கத்தை ஏன் பாதியில் நிறுத்தினீர்கள் என்று கனிவோடு கேட்டதும், ஓ அப்படியானால் என்னால் அந்த விளையாட்டின் இறுதி நிலையை மீண்டும் அப்படியே எடுத்து வைக்கமுடியும் என்று நான் சொன்னதும், அப்படியே செய்ததும் இன்றும் நினைவில் இருக்கிறது.



**▸ தமிழ் மொழியில் ஈடுபாடு சிறுவயதிலேயே ஏற்பட்டதா? என்னென்ன படித்தீர்கள்?**

கோடையில் தமிழ் படித்தாலும், சிலப்பதிகாரக் கதையிலும் அதில் கூறப்பட்டிருக்கும் இசை பற்றிய செய்திகளும் சிறுவயதிலேயே என்னை மிகவும் கவர்ந்தன. திங்களைப் போற்றுதும் என்னும் வாழ்த்தும் முதன்முதலில் கேட்டவுடனேயே வியப்பைத் தந்தது அந்தக்காலத்திலேயே சமயச் சார்பின்றி இயற்கை வாழ்த்தா! வடவரையை மத்தாக்கி என்ற வணவத் துதியும், ஆனைத்தோல் போர்த்து புலியின் உரி உடுத்து என்ற சிவன் பாட்டும், வேலன் ஆட்டமும் ஒரே இலக்கியத்தில் கண்டு இளங்கோவின் பரந்த மனம் பழங்காலத் தமிழர் மீது பெருமதிப்பை உறுதிசெய்தது. ஆண்டாளின் திருப்பாவையில் வரும் சங்க இலக்கியத்தாக்கமும், வாதவூராரின் திருவாசகத்தில் கண்ட இசை நயமும் மேலும் தமிழ் இசையில் யாரேனும் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற ஏக்கத்தை ஏற்படுத்தியது. எனது அம்மாவும் அப்பாவும் திருக்குறளை அடிக்கடி மேற்கோள் காட்டுவதால் குறள் படிக்காத வாரமே இல்லை எனலாம். மிகவும் வறுமையான நிலையிலிருந்து கடின உழைப்பால் ஒரு மருத்துவராக வந்த அப்பா, உதவி கேட்டு வரும் தகுதி உடைய எவருக்கும் இல்லை என்று சொல்லாமல் உதவி வந்திருக்கிறார். இன்றும் சிலம்பொலி அறக்கட்டளை என ஒன்றினை அமைத்து அதன் மூலம் மாணவர்களின் படிப்புக்கு பணம் கொடுத்து வருகிறார். அடிக்கடி 212ம் குறளை சொல்வார். யார் தகுதியானவர் என்றால் அதற்கும் ஒரு குறளைச் சொல்லி சரிக்கட்டுவார், 114ல் அவரவர் செய்கையினால் விளையும் தாக்கத்தை வைத்து அவரவர் தகுதியை கண்டுகொள்ளலாம் என்று சொல்வார்.

**▸ ஸ்டோனி புரூக் பல்கலைக்கழகத்தை தேர்வுசெய்த காரணம் என்ன?**

அங்குள்ள இசைக் கல்லூரி உயர்தரமானது. என்னுடன் பணிபுரியும் அன்பர்கள் சிலர் அறிவியல் மற்றும் மருத்துவத்துறையில் இருக்கைகளை அமைத்து அவை நல்ல முறையில் நடந்துகொண்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. நான் பயின்ற செயின்ட் லூயிசில் உள்ள வாசிங்டன் பல்கலையா இல்லை ஸ்டோனி புரூக் பல்கலையா என்று நானும் என் மனைவி பிரபாவும் எண்ணிக்கொண்டிருந்தோமே அல்லாது, இருக்கை அமைக்க வேண்டும் என்பதில் தடுமாற்றமே இல்லை. நான் வேலை செய்யும் இடத்தின் நிறுவனர் முனைவர். ஜிம் சைமன்சு அவர்கள் தானும் மேற்கொண்டு ஸ்டோனி புரூக் பல்கலைக்கழகத்தில் உள்ள இவ்விருக்கைகள் வளர பல வழிகளிலும் உதவுவதாகக் கூறினார். மேலும் அண்மையில் இருப்பதால் வரும் பேராசிரியர் நமது நியூயார்க் தமிழ்க் கல்விக்கழகத்திலும் ஈடுபாட்டோடு செயல்பட்டால் குழந்தைகளுக்கும் தமிழ்க் கல்வி கற்க மேலும் உற்சாகம் வரலாம்.

**▸ ரொறன்ரோ மற்றும் ஹார்வர்ட் பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகள் அமைக்கப்படுவதற்கும் ஸ்டோனி புரூக் இருக்கைக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா?**

ஸ்டோனி புரூக் பல்கலைக்கழகத்தில் இருக்கை அமைப்பது பற்றி 2014ல் இருந்து பேச்சுவார்த்தை நடந்தது. பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின் இந்தியக் கல்வியியல் மையத்தின் (Center for India Studies) கீழ் இருக்கை அமைக்க ஒப்புதல் கிடைத்தது. ஆனால், இந்தியக் கல்வியியல் மையத்தில் தமிழ் இருக்கை அமைத்தால் தமிழ் மொழியினை இந்திய வரலாறு மற்றும் இந்திய சமய வரையறைக்குள் சுருக்கிவிடுவார்கள் என்ற ஐயம் எனக்கு இருந்தது. கலை, தொல்லியல், இசை, வரலாறு, கவிநயம், இலக்கணத் தொன்மை, கட்டடக்கலை, மொழி வளம் என்று பன்முகம் உடைத்த தமிழ் 'கலை மற்றும் அறிவியல் துறை'யின் கீழ் வரவேண்டும் என்று கோரிக்கை விடுத்தோம். இதன் காரணியாக பல ஆய்வுக் குறிப்புகளையும் விளக்கங்களையும் ஸ்டோனி புரூக் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பித்தோம். இதற்கிடையில் ஜுலைத் திங்களில் பேரவை மாநாட்டில் ஹார்வர்டில் இருக்கை அமைக்க விதை போட்டிருப்பதாக அறிவிப்பு வந்தது. நான் அங்கிருந்து நியூயார்க் திரும்பியதும் கலை மற்றும் அறிவியல் துறையின் மேலாளர் (டீன்) சாசா கோப்பு (Sacha Kopp) என்னை அழைத்து ஹார்வர்டு செய்தி கேட்டு மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்தார். சில நாட்களிலேயே, ஸ்டோனி புரூக் தமிழ் இருக்கைக்கும் ஒப்புதல் வந்துவிட்டது.

**▸ எதற்காக இத்தனை இருக்கைகள் என்று கேள்விகள் எழுகின்றன?இவற்றிலே படிப்பதற்கு மாணவ மாணவிகள் வருவார்களா?**

எனக்குப் பிடித்து ஒரு திரைப்படம் கெவின் கோஸ்ட்னர் நடித்த Field of Dreams. 'If you build it, they will come,' (நீங்கள் கட்டினால், அவர்கள் வருவார்கள்) என்று அதில் வரும் கருத்து இங்கு பொருந்தும். மாணவர்கள் படிப்பதற்கு மட்டுமின்றி ஆராய்ச்சி செய்வதற்கும் வருவது மிக முக்கியம். பல இருக்கைகள் இருப்பின், வட அமெரிக்காவில் தமிழுக்கென்று ஓர் ஆராய்ச்சி மாநாடு நடத்த முடியும், தமிழ் இசை உள்ளிட்ட தமிழ்க்கலைகள், பழங்காலத்தில் பயன்பாட்டில் இருந்த இசைக் கருவிகள், அரங்கத்தின் அளவுகள் பற்றியும் ஆய்வுகள் என செய்யலாம். ஆசிய கண்டத்தின் மூத்த மொழிகள் எவை என்பன பற்றி வெறும் வாய்வீச்சு இல்லாமல் தகுந்த ஆதாரங்களுடன் விவாதிக்க வழி வகுக்கும்.

**▸ இது வீண் செலவு. பல்கலைக்கழகங்களால் தமிழை வளர்க்க முடியாது என்று சொல்கிறார்களே?**

என்னால் இதைப் புரிந்துகொள்ள முடிகிறது. நேரடியாக தமிழ் வளர்ச்சிக்கு இவை செயல்படுமா என்பது நல்ல கேள்விதான். தமிழ்க்கலைகள், பண்டைத் தமிழ் இலக்கியத்தின் பொது நோக்கு, சிலம்பின் சமயச்சார்பற்ற தன்மை, வள்ளுவனின் நெறி முதலிய உள்ளிட்ட பலவற்றை ஆராயும் போது நாம் கற்றுக் கொள்ளவேண்டிய விதயங்கள் பல வெளிவரும். பல தேர்ந்த அறிஞர்கள் இதைப்பற்றிப் பேசும்போது தமிழ் கற்கும் ஆவல் பலருக்கும் வருவதைத் தடுக்க முடியாது.

**▸ இன்னும் சிலர் இந்தப் பணத்தை தமிழ்நாட்டு பல்கலைக் கழகங்களை மேம்படுத்த உதவியிருக்கலாம் என்று சொல்கிறார்கள். இதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?**

மன்னிக்கவேண்டும். ஆராய்ச்சி என்பது இந்தியாவில் இன்று இருப்பதாகத் தெரியவில்லை. இந்தியத் தொழில் நுட்பக் கல்லூரிகளிலேயே சகஅறிவியலர் மதிப்பாய்

தொடர்தல் 68ம் பக்கம்

# முதலில் கட்டுங்கள்...

67ம் பக்கத் தொடர்ச்சி...

வுரை செய்யக்கூடிய(peer reviewed) ஆய்வுகள் வருவது அத்தி பூத்தாற் போல் தானே. அறிவியலிலேயே இப்படி என்றால் பிற துறைகளில்? தமிழ் பயிற்றுவிப்பது இந்த இருக்கையின் ஒரு சிறு அங்கம் மட்டுமே. தமிழ் மொழி, தமிழ் கலைகள், வரலாறு முதலியவற்றில் ஆராய்ச்சி செய்திடவே இருக்கை ஏற்படுத்த வேண்டும் என்பது எனது தாழ்மையான கருத்து.

ஆயினும், தமிழ்நாட்டு பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களுக்கு ஆய்வுப் பணிக்கு பரிமாற்ற முறையில் கோடையிலோ அல்லது ஓரிரு ஆண்டுகளோ வந்து இணைந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டு, நுணுக்கமான தரமான ஆய்வுமுறைகளை தாய் நாட்டிற்கு கடத்திச் சென்றால் அதுவே ஒரு வெற்றிதான்.

**▸ தமிழ் இருக்கையை உருவாக்குவது ஒன்று. இதை உருவாக்கிய பின்னர் உங்களால் அதை கண்காணிக்க முடியுமா?**

முடியும் என்ற நம்பிக்கை இருப்பதால்தான் நானும் பிரபாவும் இதில் இறங்கியுள்ளோம்.

**▸ தமிழை வளர்ப்பதற்கு தமிழ் இருக்கை அமைப்பது ஒன்றா சிறந்த வழி?**

தமிழ் இருக்கை தமிழ் ஆராய்ச்சிக்கு சிறந்தது. தமிழ் வளர்ச்சிக்கு தமிழ் கற்றால் வேலைவாய்ப்பு பெருகும் என்ற எண்ணம் மக்களிடையே வரவேண்டும். இதற்கு தமிழ் அரசுகள் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**▸ அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் மக்கள் தமிழ் பேசுவதில்லையே. அங்கே தமிழ் எப்படி வளரும்?**

ஹார்வர்டு, ரொறன்ரோ, பெர்க்கிலி, ஸ்டோனி புருக் பல்கலைக்கழகங்களில் இருக்கை இருப்பது தமிழின் தனித்தன்மையை உலகுக்குப் பறைசாற்றும். புலம்பெயர்ந்த தமிழர்களிடையும் அவர்தம் அடுத்த சந்ததியினரிடையும் தமிழ் மீதும் தமிழரின் வரலாறு மீதும் பெரு மதிப்பையும் மரியாதையையும் ஏற்படுத்தும். அது அவர்கள் தமிழை அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் இரண்டாம் மொழியாக எடுத்து படிக்கத் தூண்டும். அதுவும் தமிழ் வளர்ச்சிதான்.

**▸ உங்கள் மாணவ வாழ்க்கை எப்படி அமைந்தது? எதிர்காலத்திட்டங்களை அப்பொழுதே வகுத்துக் கொண்டீர்களா?**

மதுரையில் தூய மரியன்னை மேல்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு படிக்கும் போது என் தமிழ் ஐயா கதிரவன் அவர்கள் பல செய்யுள்களை பாட்டாகவே படித்துக்காட்டுவார், ஆகையால் உடனே மனதில் பதிந்துவிடும். மேலும் கேள்வி பதில் பாணியில் யாரோ திருவள்ளுவரிடம் கேள்வி கேட்பதாகவும் அதற்கு வள்ளுவன் இரண்டடி கொடுத்து அனுப்பியதாகவும் குறள்களை அவர் கற்றுக்கொடுத்தது இன்றும் நினைவில் இருக்கிறது. திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரியில் 1985ல் கணினியியல் படிப்பில் சேர்ந்தேன். அங்கு ஐம்பது விழுக்காடு மாணவர்கள் தமிழகத்திலிருந்தும் ஒரு சிலர் அண்டை நாடுகளிலிருந்தும் ஏனையவர் வெளிமாநிலங்களிலிருந்தும் வருவர். பிறமொழி பேசுவோர் அனைவரும் கூடி இந்தியிலேயே அளவளாவிக் கொண்டிருப்பதும், ஆங்கிலத்தில் உரையாடினாலும் தமிழ் மாணவர் யாரேனும் வரும் வேளையில் இந்திக்கு மாற்றிப் பேசுவதும் ஒரு பிளவினை இயற்கையாகவே ஏற்படுத்தியது. தமிழர் அனைவரும் இணைந்தாரா இதனால் என்றால் அதுவும் இல்லை – சாதி ஒரு மிகப்பெரிய நச்சுப்பாம்பு. படிப்பில் முழுக்கவனம் செலுத்தி கல்லூரியில் மட்டுமல்ல பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் முதல் மாணவனாக ஒவ்வொரு ஆண்டும் தேர்ச்சி பெற்றேன். இறுதி ஆண்டில் இதற்காக விருது பெற்றபோது தமிழில்

*"தமிழே, அமுதே தமிழ்த் தாயே!..*
*பல்லுயிரும் பலவுலகும்*
*படைத்தளித்துத் துடைக்கினுமோர்*
*எல்லையறு பரம்பொருள்முன்*
*இருந்தபடி இருப்பதுபோல்*
*கன்னடமுங் களிதெலுங்கும்*
*கவின்மலையாளமும் துளுவும்*
*உன்னுதரத்தே உதித்தே*
*ஒன்றுபல வாகிடினும்*
*ஆரியம்போல் உலகவழக்கு*
*அழிந்தொழிந்து சிதையா உன்*
*சீரிளமைத் திறம்வியந்து*
*செயல் மறந்து வாழ்த்துதுமே!"*

என்று தமிழ்த்தாய் வாழ்த்திலிருந்து நீக்கப்பட்ட வரிகளைக் கூறிவிட்டே எனது ஒப்புதல் உரையை ஆங்கிலத்தில் வைத்தேன். பல நல்ல தமிழ் உள்ளங்களையும் உட்பகைவர்களையும் அறிய நல்லதொரு நிகழ்வாக அது அமைந்தது. படிப்பு முடிந்ததும் பெங்களூரில் உள்ள நடுவண் அரசு நிறுவிய மேன்மை-கணினி-வளர்ச்சி மையத்தில் பணியமர்ந்தேன். அப்போது அவ்வூரில் நிறைய தமிழ்பேசும் மக்கள் இருப்பது கண்டு பெருமிதம் அடைந்தேன். ஆனால், பணியில் பலரும் இந்தி பேசவும், மெத்தப் படித்த கன்னடர்களே இந்தியில் அளவளாவுவதையும் கண்டு வேதனை அடைந்தேன். தமிழின் சேய் மொழி என்பதாலோ என்னவோ எனக்கு கன்னடம் சில மாதங்களில் பேச வந்துவிட்டது. நம் தமிழன்னையின் கிளை மொழியையும் இந்தியின் திணிப்பினால் மெதுவாக இழந்து வருவதாக உணர்ந்தேன்.

**▸ அமெரிக்கா செல்லும் எண்ணம் எப்படி தோன்றியது. அமெரிக்காவில் படித்தது மற்றும் வேலை தேடிக்கொண்ட அனுபவங்கள்.**

எனது அண்ணன் ஞானசேகரன் அவர்கள் எனக்கு ஒரு வழிகாட்டி. அவரின் ஆலோசனையின் படி அமெரிக்காவில் செயின்ட் லூயிசு மாநகருக்கு வாசிங்டன் பல்கலைக் கழகத்தில் மேற்படிப்புக்கு வந்தேன். 1992ல் மிசௌரி தமிழ்ச் சங்கம் தொடங்கிய போது அதன் இணைச் செயலாளராகப் பொறுப் பேற்று, 'பார்வையாளராக இருந்த எம்மை பங்கேற்பாளராகச் செய்த சங்கம்' என்று பறைசாற்றியது ஞாபகம் இருக்கிறது. 1995ல் ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டு முனைவர் பட்டம் பெற்றேன். பல நிதி நிறுவனங்களில் வேலை பார்த்து தற்சமயம் நியூயோர்க் Long Island பிரபல நிதி நிறுவனம் ஒன்றில் ஆய்வாளராக பணியாற்றுகிறேன்.

**▸ உங்கள் குடும்ப வாழ்க்கை பற்றி கொஞ்சம் சொல்லமுடியுமா?**

சிறு வயதிலிருந்தே தாய் தந்தையருக்கு மிக்க மரியாதை செலுத்திப் பழகியவன் நான். எனது தந்தைக்கு சத்திரப்பட்டியில் ஒரு நண்பர் இருந்தார். என்னுடைய நல்ல காலம், அவருடைய பேத்தி பிரபாவை எனக்கு மணம் பேசினார்கள். 1997ல் அவரை திருமணம் செய்து கொண்டேன். மூன்று ஆண்டுகளுக்கு பின் எங்கள் முதல் மகன் பிறந்தான். அவனை இசை மாறன் என்று அழைத்தோம். இரண்டாம் மகனுக்கு கவின் மதி என பெயர் சூட்டினோம். எமது குழந்தைகளுக்கு வீட்டில் தமிழ் எழுதவும் பேசவும் சொல்லிக் கொடுத்ததுடன் அவர்கள் முறையாக தமிழ் கற்பதற்காக இரண்டு பேர் சேர்ந்து நியூயார்க் தமிழ்க் கல்விக்கழகம் நிறுவினோம். கடந்த ஈராண்டுகளாக தமிழ்நாடு அறக்கட்டளையின் நியூயார்க் கிளையின் துணைத் தலைவராகவும் பணியாற்றி வருகிறேன். தமிழுக்கும் தமிழ் நிறுவனங்களுக்கும் என்னால் பணிசெய்யமுடிகிறது என்றால் அதற்கு முதன்மையான காரணம் எனது துணைவி பிரபா தான்.

**▸ தமிழ் ஆர்வம் எப்படி வந்தது?**

தாய் தந்தையர் தான் முதற்காரணம். எனது அக்கா அறிவழகி, அண்ணன் ஞானசேகரன், தம்பி கண்ணன் ஆகியோர் இன்றும் குறள்மனம் என்னும் புலனக் குழுவில் (வாட்சப்பு) இருக்கிறார்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

தமிழ் இலக்கியம் கடல் போன்றது. நிறையப் படிக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். குறுந்தொகை, திருக்குறள், சிலம்பு, கம்பன், திருவாசகம், திருப்பாவை, பாரதிதாசன், பாரதி என்று அங்கங்கு கொஞ்சம் படித்திருக்கிறேன். தினமும் ஒரு குறள் தவறாமல் படித்துவிடுவேன். பேரவையில் ஆண்டுதோறும் நடக்கும் இலக்கிய வினாடிவினா நிகழ்ச்சியின் பாடப் பகுதிகளை கூடுமானவரையில் படித்துவிடுவேன். இலக்கியச் சுவை காண்பது ஒரு பக்கம். பாடங்களை படித்ததனால் நிகழ்ச்சியும் மிகவும் அனுபவிக்கத்தக்கதாக இருக்கும்.

**▸ தமிழ் நாட்டில் தமிழ் படிக்காமலே ஒருவர் பட்டப்படிப்பு வரை முடித்து வேலையும் தேடிக்கொள்ளலாம். இந்த நிலையில் தமிழ்நாட்டில் தமிழின் எதிர்காலம் என்ன?**

உண்மை. தமிழ்நாட்டில் தமிழ் கட்டாயப் பாடமாக இருக்க வேண்டியது மிக அவசியம். பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம் பயிலுவோரும், தாங்கள் கற்கும் கல்வி மக்களுக்குப் பயன்படவேண்டும், மக்களோடு புழங்கவும் வேண்டும் என்னும் நோக்கில் தமிழ்க்கல்வி வலியுறுத்தப் பட வேண்டும்.

ஓர் எளிய யோசனை. 12ம் வகுப்பு முடிந்து பொறியியல் / மருத்துவக் கல்லூரிகளில் நுழையும் தருணத்தில், தமிழ்வழி கற்ற மாணவர்க்கு கூடுதலாக 2 புள்ளிகளும், தமிழைப் பாடமாகப் பயின்றோருக்கு (அதிகபட்சமாக) 2 புள்ளிகளும் அளிக்க வேண்டும். ஒரே ஆண்டில் தமிழைப் பாடமாகப் பயில்வோரின் எண்ணிக்கை நூறு விழுக்காடு ஆகிவிடும், தமிழ்வழிக் கல்வி என்பது 'சர்வைவல்' (or, competitive edge) என்று காரணம் காட்டி பரவலாகிவிடும். எனது நண்பர், மறைந்த கனடியப் பேராசிரியர் செல்வா கனகநாயகம், 'பள்ளிகளில் ஆங்கிலவழி கல்வி கற்போர் பள்ளி நாட்களிலேயே குறைந்தது 3 பாடங்களாவது தமிழில் எடுத்திருந்தால் தான் தமிழ்நாட்டில் பல்கலைக்கழகத்தில் படிக்க வாய்ப்பு கிடைக்கும் என்றெல்லாம் விதிமுறைகளை மிக நேர்மையாகக் கொண்டுவர இயலும்' என்று சொல்வார்.

பேராசிரியர் பொன்னவைக்கோ பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக இருந்த பொழுது தமிழ்க்கல்வியை வலியுறுத்தி செயற்படுத்தவும் செய்தார். தமிழ்மக்கள் இவற்றை ஆதரிக்க வேண்டும்.

**▸ நாடு இல்லாமல் ஒரு மொழி வாழமுடியுமா?**

நீட் என்று ஒரு தேர்வைக் கொண்டுவந்து தமிழ் மக்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்ட மருத்துவக் கல்லூரிகளில் வெளிமாநிலத் தவருக்காக இடங்களை கட்டாயமாக ஒதுக்கச் சொல்வது ஒரு வகைப் பொருளாதாரத் திருட்டு. இதை எதிர்கொள்ள, தமிழ் நாட்டு மருத்துவக் கல்லூரிகளில் ஓராண்டு கட்டாயமாக தமிழ் படிக்க வேண்டும் என்று விதிமுறைகளை கொண்டுவரலாம். ஆனால் நடுவண் அரசின் அனுமதிக்காக காத்திருக்க வேண்டும். தமிழ் மக்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்ட மருத்துவக் கல்லூரிகளில் தானே நாம் இந்த விதிமுறைகளை கொண்டுவருகிறோம், ஆனாலும் விடமாட்டார்கள்.

நாடு இல்லாமல், உண்மையான மாநில சுயாட்சி இல்லாமல், ஒரு மொழி வாழமுடியுமா என்றால், மிகக் கடினம் என்றுதான் சொல்வேன். தமிழ் போன்ற தொன்மையான மொழி எப்படியும் வாழும். நல்ல ஆட்சியர் அடுத்து வரத்தான் போகிறார்கள், அவர்களின் தமிழ் ஆர்வம், தமிழ் உணர்வு தமிழை செழிக்கச் செய்யும். அதுவரை, தமிழ் உணர்வுள்ளவர்கள் பல நாடுகளிலும் பல பல்கலைக்கழகங்களிலும் தமிழ்ப்பேராசிரியர்களை, இருக்கைகளை, துறைகளை உருவாக்க முன் வரவேண்டும்.

**▸ தமிழ்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தமிழர்கள் தமிழ் பேசுவது குறைந்து வருகிறது. லத்தீன், சமஸ்கிருதம் போல தமிழும் எழுத்து மொழியாக மாறிவிடும் அபாயம் உள்ளதா?**

ஆம். தமிழ் மட்டுமல்ல, இந்த ஆபத்து உலகில் உள்ள அனைத்து மொழிகளுக்கும் உண்டு. இதை நாம் ஏற்றுக்கொண்டால் தான், அதைத் தவிர்க்க தகுந்த நடவடிக்கைகளை எடுக்க முடியும். தமிழக அரசு தமிழைக் கட்டாயப் பாடமாக அறிவித்து, தமிழ் படித்தோர்க்கு மட்டுமே அரசு வேலை என்றும் அனைத்து தமிழக அரசுத் தேர்வுகளையும் தமிழில் மட்டுமே நடத்தவும் முன்வரவேண்டும்.


**▸ தமிழ் இருக்கை சரி. அது அமைந்த பின்னர் உங்கள் முயற்சி வேறு எதில் தொடரும்?**

முதலில் செயின்ட் லூயிசில் உள்ள வாசிங்டன் பல்கலைக்கழகத்தில் தமிழுக்கு ஓர் இருக்கை அமைக்க வேண்டும் என்பது எனது அவா. சென்ற ஆண்டின் ஆரம்பத்தில் அந்தப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரைத் தொடர் நடத்தினோம். மூன்று அறிஞர்கள் தமிழ் சார்ந்த உரிப்பொருளில் சொற்பொழிவாற்றினார்கள். அங்குள்ள மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களின் ஆர்வம், மிசௌரி தமிழ்ச்சமூகத்தின் ஈடுபாடு அனைத்தும் எங்களை மிகவும் ஈர்த்துவிட்டது. அங்கு இருக்கை அல்லது துறை அமைக்க பலர் கூடித்தேர் இழுக்க வேண்டும்.

தமிழ் ஞாயிறு என ஒரு மையத்தை தமிழ் அரசுகள்(தமிழ்நாடு, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, மொரீசியசு, ...) துணையுடன் நிறுவி தமிழ்ப் படிப்பைப் பரப்பும் முயற்சியில் இறங்கலாம் என்றும் எண்ணுகிறேன். இது Alliance Francaise போல, மொழியை விருப்பமுள்ளோர்க்குக் கற்றுக்கொடுத்து, தேர்வுகள் நடத்தி, அவர்களின் நிலைக்கு ஏற்றவாறு சான்றிதழ்களை வழங்கி தமிழ் பரப்புரை செய்யும் முயற்சி.

**▸ 50 வருடங்களுக்குப் பிறகு உலகில் தமிழின் நிலை என்னவாக இருக்கும்.?**

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கியம் படைத்த மொழி தமிழ். உலகம் இதை உணரும் நாள் வெகு தொலைவில் இல்லை. தமிழில் இருக்கும் பொதுப்பார்வை இன்றைய மதம் பிடித்த உலகிற்கு மிகவும் தேவையான ஒன்று. உலகம் சுருங்கிக் கொண்டிருக்கிறது. மக்களை சமயம், நிறம், சாதி என்று பிரிப்பவர்களைப் பதடி என்று எள்ளி நகையாடுவார்கள். இன்னும் ஐம்பது ஆண்டுகளில் வள்ளுவனின் பொதுமறை உலகத்தின் நீதி நூலாக ஏற்கப்படும். நல்ல ஒழுக்க நெறியை அதன் மூலத்தில் படிக்க, பெரும்பாலானவர்கள் தமிழ் கற்பார்கள்
என்றும் நம்புகிறேன்.



muththulingam.a@thaiveedu.com

# கலைஞர் பாலதாஸ் அவர்களுக்கு இறுதி வணக்கம்

*அகிலமும் புகழும் மொய்கார உத்தமன்*
*முகிலமும் அடர்கொடையான தத்துவன்*
*சிகிவற பரனடி யான சித்தசன்*
*எகிநட மாதர்கள் பார்வை பெற்றவன்*
*எங்கும் தொனி பெருகும்*
*பம்பை கொடி கவிய*
*சங்கை பொங்கு கீர்த்தி சிங்கனும் நானே*

சொல் பிசகாமல், தாளம் முறியாமல், ராச நடையோடு, ‘கண்டி அரசன்’ கூத்தில் அரசனாக பாடி ஆடி நடித்த இந்த அற்புதமான கூத்துக்காரனை நாம் இழந்து விட்டோம்.

பாலதாஸ் - கடந்த பல சகாப்தங்களாய் நூற்றுக்கணக்கான மேடைகளில் பாடியும் ஆடியும் கூத்தையும் இசை நாடகத்தையும் வளர்த்த உயர்ந்த கலைஞர்.

பாலதாஸ் பாடுவதாக இருக்கட்டும், ஆடுவதாக இருக்கட்டும் அல்லது ஆர்மோனியம் வாசிப்பதாக இருக்கட்டும், எதிலும் அற்புதங்கள் புரியவல்ல அதிசயக் கலைஞர்.

பாசையூர் வளர்பிறை நாடக மன்றம் நடத்திய ‘சத்தியவான் சாவித்திரி’ இசை நாடகத்தை பார்தவர்கள் இவர் எமனாக வந்து பாடியதை வாழ்நாளில் மறக்க மாட்டார்கள். யாழ். திருமறை கலாமன்றத்தின் இன்றைய வளர்ச்சிக்கு அன்று அடித்தளமிட்ட கலைஞர்களில் பாலதாஸ் முக்கியமானவர்.



எங்கள் மரபுவழிக் கலைச்சொத்தான கூத்து மரபின் வரலாற்றில் கடைக்கொழுந்தாக, முக்கியமானவராகத் திகழ்ந்த பாலதாஸ், யாழ்ப்பாணத் தென்மோடிக் கூத்துமரபின் தொடர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பை செய்தவர். தனது எட்டாவது வயதில் ‘கண்டி அரசன்’ கூத்தில் குமாரி காமினியின் பிள்ளைகளில் ஒருவராக நடிக்கத் தொடங்கியவர் இறுதிக்காலம் வரை கூத்துக்கலையோடு ஒன்றி வாழ்ந்தவராக இருந்தார்.

தனது கூத்துக் கலையின் குருக்களான அண்ணாவியார் லியாதியோ இராசேந்திரத்தையும் ஆர்மோனியம் பழக்கிய சுதி மரியானையும் எல்லா வேளைகளிலும் நினைவு கொள்வார் பாலதாஸ்.

குறிப்பாகச் சுதி மரியான் என்ற கலைஞனை ‘சுருதி மரியாம்பிள்ளை’யென குரு பக்தியுடன் மாற்றிச் சொல்லி மகிழ்வார்.

பின்னாளில் அண்ணாவியாராக வளர்ச்சி பெற்று, கூத்துக் கலையை ஏனையோருக்குப் பழக்கித் தலைமுறைக் கலைஞர்களை உருவாக்கி, கூத்தை அழிந்து போகாமல் காப்பாற்றியவர்களில் மிக முக்கியமானவர் பாலதாஸ்.

“திருமறைக் கலாமன்றத்தில் கூத்தரங்கில் என்னை ஈடுபட வைத்தவரும், தென்மோடிக் கூத்தின் நுட்பங்களை நான் அறியப் போதித்தவரும், என்னை தனது மாணவனென மகிழ்வு கொண்டு பாராட்டியவருமான என் அன்புக்குரிய ஆசான் எங்களை விட்டு பிரிந்தார்” என, இன்றைய கூத்து கலைஞர்களில் முக்கியமானவரான யோன்சன் ராஜ்குமார், பாலதாஸ் குறித்துக் கூறுகின்றார்.

பாரம்பரிய கூத்துக்கலையின் மரபுகளைப் பேணியபடி, பல கலைஞர்களை உருவாக்கி, கூத்தையும் இசை நாடகங்களையும் வாழவைத்த, ஈழத்தின் மூத்த பெரும் கலைஞராகத் திகழ்ந்த, பாலதாஸ் அவர்களுக்குத் தாய்வீடு தன் இறுதி வணக்கத்தைத் தெரிவிக்கின்றது.

■ ■ ■





Real Estate
✓ Residential
✓ Commercial
✓ Investment
✓ Property Management
✓ Custom Houses
HomeLife Today Realty Ltd., Brokerage
Office: 416-298-3200
Insurance
✓ Life & Health
✓ Travel
✓ Key Person
✓ Buy & Sell
✓ RESP
iNFORCE LIFe
Financial Services Inc.
Office: 416 880 6051
Tax
✓ Personal
✓ Self Employed
✓ Corporate
✓ Estate
✓ Company Registration
MVK TAX Consultants
Office: 647-947-8449
FOR ALL YOUR
REAL ESTATE | INSURANCE | TAX
NEEDS...!
Vallikkannan (MVK) Maruthappan
Direct : 416 880 6051 | www.mvkhome.ca
25 Years of Experience | Qualified and Well-Known | Award Winning Businessman
HONESTY
RELIABILITY
INTEGRITY

# மாற்றுத் திறனாளிகளின் சேவையில் அதிபர் ஜெயசிங் டேவிட்

- சகாப்தன் -


ஆசிரியத் தொழில் என்பது எதிர்காலச் சமூகத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மாற்றுத்தி-றனாளிகளுக்கு அறிவூட்டல் என்பது மிகமிகச் சவாலான ஒன்று. அவர்களது தேவையை உணர்ந்து அர்ப்பணிப்போடு கற்பித்தல் மிகவும் முக் கியமானது. எமது சமூகத்தில் மாற்றுத் திறனாளிக-ளிற்குரிய பாடசாலை வசதிகள் மிகவும் குறைவு. யாழ் குடாநாட்டில் இயங்கி வந்த 'கைதடி நவீல்ட் விழிப்புலன் செவிப் புலன் இழந்தோர் பாடசாலை' நூற்றுக் கணக்கான விழிப்புலன் செவிப்புலன் இழந் தவர்களுக்கு கல்வியறிவூட்டி உள்ளது. அவர்களில் பலர் பல்கலைக்கழக பட்டப் படிப்பை முடித்து தற்போது நல்ல நிலையில் உள்ளார்கள். அங்கு 20 வருடங்களாக அதிபராக பதவி வகித்து பாடசாலையின் தரத்தை உயர்த்திய திரு.ஜெயசிங் டேவிட் இன் பங்களிப்பு மிகவும் மதிக்கப்பட வேண்டியதாகும்.

கனடிய தமிழர் வலுவளர் அமைப்பை ஆரம்பித்தவர்களில் ஒருவரான திரு.ஜெயசிங் டேவிட் அவர்கள் கடந்த வருடம் இடம்பெற்ற தாய் வீடு அரங்கியல் விழாவிலும் வலுவளர் வார்ப்புகள் நிகழ்வில், பங்குபற்றி தன் திறமையை வெளிப்படுத்தியிருந்தார். இவருடைய காலத்தில் கல்வி கற்று பட்டதாரியான ஜோதி பிரபாகரன் இவர் அதிபராக பதவி வகித்த காலம் 'நவீல்ட் பாடசாலையின் பொற்காலம்' என குறிப்பிட்டார்.

ஜெயசிங் டேவிட் அவர்களின் தந்தையார் மஸ்கெலியா நகரத்தில் உள்ள தேயிலை தோட்டமொன்றில் பிரதம லிகிதராக கடமையாற்றினார். இவரது மூதாதையர்கள் இந்தியாவில் பிறந்து தொழில் நிமித்தமாக மலையகத்தில் குடியேறினார்கள். இவரது பெற்றோருக்கு பிறந்த ஒன்பது பிள்ளைகளில் மூத்த மகனாக இவர் பிறந்ததினால் பெற்றோர் இவரை மத போதகராக்க வேண்டும் என்ற விருப்புடன் வளர்த்து வந்தனர்.

டேவிட் தேவாலயத்தில் ஆன்மீகப் பாடல்கள் பாடுவதையும் ஆர்மோனியம், வயலின் ஆகிய இசைக் கருவிகளை வாசிக்கும் திறமையையும் இளம் வயதியிலேயே சொந்த முயற்சியால் பெற்றிருந்தார். உயர்தர வகுப்பை யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்க ஆரம்பித்து வெளி மாணவர் பிரிவில் பல்கலைக்கழக கற்கை நெறியை கற்று பட்டதாரியானார். அங்கு கல்வி கற்கும் போது மதபோதகர் ஆவதற்கான கல்வி கற்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்த போதும், தனது சேவை ஒரு குறிப்பிட்ட பிரிவிற்குள் அமைந்து விடக்கூடாது என்றெண்ணி, மதம் கடந்த சேவையில் தன்னை ஈடுபடுத்த பொருளாதார புள்ளிவிபர ஆராச்சியாளராக தனது பணியை அம்பாறையில் ஆரம்பித்து அவர் 1967ம் ஆண்டு யாழ்ப் பாணம் பரி. யோவான் பாடசாலையிலும் பின்பு குருத்தலாவ பரிதோமா கல்லூரி-யிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

அப்போது கைதடியில் இயங்கி வந்த நவீல்ட் பாடசாலையில் அதிபருக்கான தொழில் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. மாற்றுத்திறனாளிகளிற்கு சேவை செய்யும் விருப்போடு அதிபர் தேர்விற்கு விண்ணப்பித்து நவீல்ட் பாடசாலையின் அதிபராக 1974ம் ஆண்டு பதவியேற்றார். இவர் அதிபராக பதவியேற்ற வேளை நவீல்ட் பாடசாலையின் தராதரம் குறைவாகவேயிருப்பதை உணர்ந்தார். அத்துடன் பாடசாலையின் பெயரும் 'நவீல்ட் குருடர் செவிடர் பாடசாலை' என்றே அழைக்கப் பட்டது.



செவிடர் குருடர் எனும் பெயர் ஒருவரது அங்கவீனத்தை முழுமையாக தெரியப்படுத்தி அவர்களது மனதில் ஆழமான வலிகளை உருவாக்கும் என்ற காரணத்தால் 'நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு தற்போதும் அதே பெயரோடு பாடசாலை இயங்கி வருகின்றது.

இவர் பதவியேற்ற வேளை 90 மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். காலப்போக்கில் மாணவர்களின் வருகை அதிகரிக்க வகுப்பறைகளின் தேவை அதிகரித்தது. எனவே கனடிய பெண்மணியின் நடன நிகழ்ச்சியொன்றை ஒழுங்கு செய்து பொது மக்களின் ஒத்துழைப்போடு நிதி திரட்டினார். அந்த நிதி போதாமையால் இங்கிலாந்து நாட்டில் இயங்கி வரும், Oxfam சமூகசேவை நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு உதவி பெற்று ஒரு புதியதொரு கட்டடத்தையும் உருவாக்கினார்.

கைதடி நவீல்ட் பாடசாலை அங்கிலிக்கன் சபையின் அனுசரணையுடன் அரசாங்கத்தில் உதவி பெற்று வந்த ஒரு பாடசாலையாக இயங்கினாலும், பாடசாலை நிர்வாகம் பாடசாலை கட்டடங்கள் உருவாக்குவதற்கு நிதி ஒதுக்கீடு இல்லாமையால் இவர் பல வெளிநாட்டு சமூக சேவை நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு நிதியுதவி பெற்று எட்டு கட்டடங்களையும், விடுதிகளையும் உருவாக்கினார்.

விழிப்புலன், செவிப்புலன் இழந்த மாணவர்களுக்கு கற்பிக்கப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால், அவர்களின் தேவை உணர்ந்து கல்வி கற்பிப்பதில் உள்ள சிரமங்களை இவர் உணரத் தொடங்கினார்.

நவீல்ட் பாடசாலைக்கு அதிபராக வருவதற்கு முன் நீதிமன்றத்தில் ஒரு கொலை வழக்கிற்கு யூரியாக அவர் நியமிக்கப் பட்டிருந்தார். இந்த வழக்கில் முக்கியமான சாட்சி செவிப்புலனை இழந்தவர் ஆவார். எதிர்தரப்பு வக்கீல் பலவிதமான கேள்விகளால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்து சாட்சியை அறிவற்றவர் என நிரூபிக்க முயன்றார். சாட்சியின் பதில்களை நீதவானுக்கு தெரியப்படுத்தவும், வக்கீலின் கேள்விகளை சாட்சிக்கு கூறவும் சைகை மொழி மூலம் நடைபெற்ற விசாரணையை டேவிட் மிகவும் உன்னிப்பாக அவதானித்தார். சாட்சி கொலையைக் கண்டவுடன், சத்தம் போட்டு மக்களை அழைத்ததாக கூறினார். எதிர்த்தரப்பு வக்கீல், 'ஊமை எப்படி சத்தம் போடலாம்' என்று வினவ சாட்சி தன்னால் எப்படி ஒலி எழுப்ப முடிந்தது என்பதைச்செய்து காட்டினார். யூரியாக பங்கேற்ற அனுபவம் செவிப்புலன் இழந்தவர்கள் அறிவு குறைந் தவர்கள் அல்ல என்ற பார்வையையும் அவர்களாலும் ஒலி எழுப்பமுடியும் என்பதையும் இவருக்கு உணர்த்தியது. அவர் அதிபராக பதவியேற்ற பின் செவிப்புலன் இழந்தவர்களை மேலும் புரிந்து கொள்ள இச்சம்பவம் உதவியது.

விழிப்புலன் இழந்தவர்களிலும் பார்க்க செவிப்புலன் இழந்தவர்களுக்கு கல்வி கற்பிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருந்தது. செவிப்புலன் இழந்தவர்கள் ஓர் ஒலியை எழுப்பினால் அவர்களால் அவ்வொலியைக் கேட்க முடியாது. ஒலியைக் காணும் விதமே எழுத்து வடிவம் ஆகும். ஒலியைக் கேட்காதவர்கள், எழுத்து வடிவத்திலும் ஒலியைப் புரிந்து கொள்ள முடியாது.

எனவே செவிப்புலன், விழிப்புலன் இழந்தவர்களுக்கு சிறப்பான முறையில் கல்வி கற்பிப்பதற்கு, விசேட மேற்படிப்பிற்காக 1976ம் ஆண்டு அமெரிக்கா சென்றார். செவிப்புலனிழந்தோர் கல்வி முறையை நோர்தம்ரன் சிமித் கல்லூரி-கிளாக் (Northampton Smith College - Clarke School for the Deaf and Boston College – Perkins School for the Blind) செவிப் புல-னிழந்தோர் பாடசாலையிலும், விழிப் புலன் இழந்தோர் கல்வி முறையை பொஸ்டன் கல்லூரி-பர்க்கின்ஸ் விழிப்புலனிழந்தோர் பாடசாலையிலும் பயின்று முதுமாணிப் பட்டமும் பெற்றார்.

இதற்கான நிதியுதவியை யாழ்ப்பாணக் கல்லூரியுடன் தொடர்பு கொண்ட அமெ-ரிக்காவிலுள்ள UCBWM என்ற கிறிஸ்தவ உலகசேவைகள் அமைப்பும் அங்கிலிக்கன் திருச்சபைகள் அமைப்பும் வழங்கியது. அமெரிக்காவில் இவருக்குக் கற்பித்த விரிவுரையாளர்கள் இவரது திறமையை கண்டு கலாநிதிப்பட்டம் பெறுவதற்காக அதற்கான உதவிகளையும் வழி முறை-

தொடர்தல் 72ம் பக்கம்

ARTLINK MULTIMEDIA INC
Your Designing Solutions
Printing SERVICES
▶ Catalogue
▶ Brochure
▶ Flyer
▶ Banner
▶ Folders
▶ Labels
▶ Annual Reports
▶ Posters
▶ Real Estate Signs
REAL ESTATE PHOTOS WITH RETOUCH
Innovative, highly creative, good at thinking
"OUT OF THE BOX"
Dir: 416 317 2693
www.artlinkmultimedia.ca

# மாற்றுத் திறனாளி...

71ம் பக்கத் தொடர்ச்சி...

களையும் வழங்குவதாக கூறியிருந் தார்கள். எனினும் மேலதிகமாக இங்கு தங்கிக் கற்பதற்கு எடுத்துக் கொள்ளும் காலத்தில் தாம் பெற்ற அறிவை நவீல்ட் பாடசாலை மாணவர்களுக்குப் பயன்ப டுத்துவதே சிறந்தது என முடிவெடுத்து, கலாநிதிப்பட்டப் படிப்பை இடைநிறுத்தி, நாடு திரும்பினார்.

அமெரிக்காவில் விசேட தேவையுடைய வர்களுக்கான தாம் பெற்ற கல்வியறிவை நவீல்ட் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வழங்கினார். அங்கு கற்பித்த பல ஆசிரியர்களை மேலதிக பயிற்சிகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பி பாடசாலையின் கல்வித்தரத்தை உயர்த்தினார். 290க்கு மேற்பட்ட மாண வர்களுடன் நவீல்ட் பாடசாலை சிறப்பாக இயங்கியது.

பாடசாலை சிறப்பாக செயற்பட்டு வரும் வேளையில் ஈழத்தில் ஏற்பட்ட யுத்தத் தின் காரணமாக பல இடர்களை சந்திக்க நேரிட் டது. இலங்கை -இந்திய இராணுவ முகாம் கள் பாடசாலைக்கு அருகில் அமைந்தி ருந்ததால் அச்சமான சூழ்நிலையில் வகுப் புக்களை நடத்த வேண்டியிருந்தது. மாணவ மாணவிகளை பாதுகாக்க, சிறந்த பாது காப்பு முன்னேற்பாடுகளையும், அறிவு ரைகளையும் வழங்கியதோடு விடுதியின் உணவு தேவைகளுக்கு தகுந்த ஏற்பா டுகளை செய்து பாடசாலையை நடத்தி வந்தார்.

இலங்கை ராணுவத்தின் உலங்கு வானூர்தி பாடசாலை விடுதியில் மாணவர்கள் தங் கியிருந்த நேரத்தில் மேலிருந்து தாக்கு தல் நடத்தியது. மாணவர்கள் தெய்வாதீ னமாக காப்பாற்றப்பட்டனர். அந்த தாக் குதலில் விடுதிக்குள்ளிருந்து 70 துப்பாக்கி சன்னங்களை எடுத்ததன் மூலம் தாக்கு தலின் வீரியத்தை உணரக் கூடியதாயி ருந்தது.

குடாநாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்ற போரினால் மக்களின் இடம் பெயர்வும் அழிவுகளும் தொடர்ந்ததால் 1990ம் ஆண்டு பாடசாலையை தற்காலிகமாக மூடிவிடத் தீர்மானித்தார். விடுதியில் தங்கிப் படித்த குடாநாட்டு மாணவர்களை பெற்றோரிடம் ஒப்படைத்தார். வெளி மாவட்டங்களிலிருந்து வந்து படித்த மாணவர்களை பூனகரி கடற் கரை, மன்னார் காட்டு வழியாக மிகுந்த சிரமத்தின் மத்தியில் கொழும்புக்கு அழைத்து வந்து அவர்களின் பெற்றோர்களுக்கு தக வல் அனுப்பி, பாதுகாப்பாக அனைத்து மாணவர்களையும் பெற்றோரிடம் ஒப்ப டைத்தார்.

மீண்டும் பாடசாலை திறக்கப்பட்டபோது யாழ். குடாநாட்டைத் தவிர ஏனைய பகுதி மாணவர்கள், குறிப்பாக மலையக, முஸ் லிம் மாணவர்கள் அங்கு வந்து தங்கி படிப்பதற்கான சூழ்நிலைகள் ஏற்பட வில்லை. இவருடைய பரந்த சேவை எல் லோருக்கும் கிடைக்க முடியாத நிலையில் பாடசாலை அதிபர் பதவியை மீண்டும் பொறுப்பெடுக்க விரும்பவில்லை.

அதன் பின்பு Kindernothilfe எனும் ஜேர்மன் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் இலங்கை இணைப்பாளராகக் கடமையாற்றினார். இந்நிதியம் கிறிஸ்தவ சபைகள் கூட்ட மைப்பின் மூலம் இலங்கையிலுள்ள பல சிறுவர் பகல் பராமரிப்பு நிலையங்களுக் கும், வறுமைக்குட்பட்ட பிள்ளைகளுக்கான விடுதிகளுக்கும் நிதியுதவி வழங்கி வந்தது. இவை அனைத்தையும் மேற்பார்வை செய் வதும் நிதியை பகிர்ந்தளிப்பதும் இவரது பொறுப்பாகவிருந்தது.

அத்துடன் தேசிய கிறிஸ்தவ சபைகள் அமைப்பின் மூலம் நிவாரண புனருத்தாரண பகுதியின் இணைப்பாளராகக் கடமையாற் றினார். போர் அனர்த்தங்களால் இலங் கையின் அனைத்துப் பகுதிகளிலும் பாதிக் கப்பட்டோருக்கு நிவாரணம் அளிப்பதிலும் அவர்கள் வாழ்க்கை வளம் பெற புனருத் தாரண சேவைகளிலும் ஈடுபட்டார்.

திரு.ஜெயசிங் டேவிட் அவர்களின் குடும் பத்தினர் 1992ல் கனடாவிற்கு இடம் பெயர்ந் தனர். தொடர்ந்து, இவரும் 1996ம் ஆண்டு கனடாவிற்கு இடம் பெயர்ந்தார்.

கனடாவில் இயங்கி வந்த பல்லின மாற் றுத்திறனாளிகள் அமைப்பில் (ERTCO) இணைப்பாளராக தனது சேவையை ஆரம் பித்தார். பல்லின மாற்றுத்திறனாளிகள் அமைப்பில் சேவையாற்றிய போது தமிழ் மக்களுக்கென தனியே ஒரு மாற்றுத்தி- றனாளிகள் அமைப்பு உருவாக வேண்டும் என்ற விருப்புடன், இங்கு வாழ்ந்து வந்த மாற்றுத்திறனாளிகளான பல நண்பர்கள், அன்பர்கள் இணைந்து 'கனடிய தமிழர் வலுவளரமைப்பு'(OCTD)எனும் அமைப்பை 1997ம் ஆண்டு ஆரம்பித்தார்கள். 20வரு டங்களாக 'கனடிய தமிழர் வலுவளர் அமைப்பு' கனடிய தமிழர் வலுவளர் சமூகத்திற்கு சேவையாற்றுகின்றது. இவ் வமைப்பில் சிலஆண்டுகள் நிர்வாக அங் கத்தவராக பதவி வகித்ததுடன் தற்போ தும் அமைப்பின் வளர்ச்சிக்கு ஆலோச னைகள் வழங்கி, அதன் முன்னேற்றத்திற்கு தனது பங்களிப்பை வழங்கி வருகின்றார்.

2002ம் ஆண்டு முதல் 2011ம் ஆண்டு வரை Providence Health Care அனுசரணையில் தமிழ் பராமரிப்பாளர் திட்டத்தில் இணைப் பாளராகக் கடமையாற்றினார். இதன் மூலம் கனடிய சுகாதார சேவை அணுகுமுறை பற்றி பலருக்கு அறிவுறுத்தி வழி நடத் தினார். அத்துடன் சுகாதாரக்கல்வி அளிப் பதிலும், விசேடமாக dementia என்ற மறதி நோய் உள்ளோரின் குடும்பத்தினருக்கு ஒத்தாசை வழங்குவதிலும் ஈடுபட்டார். நகர, மாகாண, நாடு ரீதியில் நடைபெறும் பல மாநாடுகளில் தமிழ்க்கலாச்சாரம், வாழ்க் கைமுறை பற்றி எடுத்துரைத்துள்ளார்.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக நீண்ட கால பராமரிப்பு நிலையங்களில் வதியும் சைவ சமயத்தவருக்கு, மற்றைய சமயத்தவர் போன்று ஆன்மிகசேவை கிடைக்காமையை இத்திட்ட செயற்குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்தார். திரு. சந்திரகாந்தன் அடிகளார் அனுசரணையுடன் 'மருத்துவ பராமரிப்பில் சைவசமய ஆதரவுச் சபை கனடா' (Canada Saivite Council For Spritual Support in Health care) எனும் அமைப்பை உருவாக்கி ஆன்மிக சேவை வழங்கும் முறையில் சிலரை பயிற்றுவித்தார். இச் சேவை மூன்று நீண்ட கால பராமரிப்பு நிலையங்களில் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. இதில் Extendicare எனும் நீண்ட கால பராமரிப்பு நிலையங்களில் நிரந்தரமாக சைவ வழிபாட்டு நிலையம் வைக்கப்பட்டுள்ளது.

கைதடி நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோருக்கான பாடசாலை தற்போதும் நல்லமுறையில் இயங்கி வருகின்றது. இவர் பதவி வகித்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பலதிட்டங்கள் இன்றும் தொடர்ந்து நடை பெற்று வருகின்றது. 1983ம் ஆண்டு வெளி வந்த என்சைக்ளோபீடியாவில் இவர் எழு திய 'இலங்கையின் செவிப்புலனற்றோர் கல்வி வாழ்க்கை நிலை' எனும் ஆய்வுக் கட்டுரை வெளிவந்துள்ளது. கனடாவில் இவரது சேவை மேன்மேலும் தொடர 'தாய்வீடு' மனதார வாழ்த்துகின்றது.

***உசாத்துணை:***
- *http://www.octd.ca/*
- *https://www.charitydir.com/charities/843992926RR0001*
- *https://www.kindernothilfe.org/*



sagapthan@thaiveedu.com









# தமிழரின் இனமரபு இசை - தொல்காப்பியத்தை மையப்படுத்திய ஒரு பார்வை

- கௌசல்யா சுப்பிரமணியன் -

தமிழரின் இனமரபு சார் இசையின் வேர்களை இனங்காணும் நோக்கிலான தேடல் முயற்சியில் தொல்காப்பியம் கூறும் இசை தொடர்பாக செய்திகள் முன்னைய கட்டுரையில் தோற்றுவாய் செய்யப்பட்டன. முதற்கண் தொல்காப்பிய காலகட்ட இசை இலக்கணமரபு தொடர்பான எழுத்திலக்கணப் பகுதியிலமைந்த நூற்பா விளக்கியுரைக்கப்பட்டது. அதனையடுத்து அதன் பொருளதிகாரத்தின் செய்யுளியல் பகுதியின் முதல்நூற்பா தரும் பாக்களின் உறுப்புகள் தொடர்பான செய்திகள் நோக்கப்பட்டன. இந்நூற்பா விளக்கியுரைப்பவற்றில் 'பா' மற்றும் கலிப்பா, பரிபாட்டு ஆகிய பாடல் வகைகளினது இசைசார்ந்த அம்சங்களை நோக்கினோம். இக்கட்டுரை கலிப்பா மற்றும் பரிபாட்டு பற்றிய மேலதிக செய்திகளுடன் தொடர்கிறது. அவ்வகையில் மூன்று விடயங்கள் இக்கட்டுரையில் நோக்கப்படவுள்ளன. அவை செந்துறை, வெண்துறை மற்றும் தேவபாணி ஆகிய பெயர்களிலமைந்த இசைப்பாடல் முறைமைகளாகும். இவற்றில் செந்துறை, வெண்துறை சார்ந்த பாடல் முறைமைகள் பற்றி

## - பார்வை: 2

முதற்கண் நோக்குவோம்.

பாக்களின் இருபத்தாறு உறுப்புகள் பற்றிக் கூறும் தொல்காப்பியச் செய்யுளியல் பாடலுக்கு அழகு சேர்க்கும் மேலதிகமான எட்டு உறுப்புகளை 'வனப்பு' எனச்சுட்டி வகைப்படுத்தி விளக்குகிறது. அவ்வாறான எட்டு உறுப்புகளிலொன்றான 'இழைபு' என்பதைக் கூறுவதான 242வது நூற்பாவுக்குப் பேராசிரியர் கூறும் உரையிலேயே செந்துறை மற்றும் வெண்டுறை ஆகியவை பற்றிய விளக்கங்களை நாம் பெற்றுக் கொள்கிறோம். அவ்விளக்கமானது கலிப்பா மற்றும் பரிபாட்டு பற்றி ஆகியன பற்றிய மேலதிக தெளிவிற்கும் எமக்குத் துணை நிற்கின்றதெனலாம்.

அடுத்து, அச்செய்யுளியலின் 153வது நூற்பாவும் எமது கவனத்துக்குரியதாகிறது. கலிவெண்பாட்டு தொடர்பான இந்நூற்பாவுக்கு பேராசிரியர் தரும் உரைவிளக்கமானது செந்துறை மற்றும் வெண்டுறை பற்றிய மேலதிக தெளிவிற்குத் துணை புரிகின்றது. இவற்றை இங்கு விரிவாக நோக்குவோம்.

இழைபுக்குரிய இலக்கணம் தரும் நூற்பா வருமாறு:

*'ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்தடங்காது*
*குறளடி முதலா வைந்தடி யொப்பித்*
*தோங்கிய மொழியா னாங்கன மொழுகி*
*இழைபி னிலக்கண மியைந்த தாகும்'*

- தொல்: செய்.பேரா: 242

**மேற்படி நூற்பாவிற்கு பேராசிரியர் தரும் விளக்கம் வருமாறு:**

'வல்லெழுத்துக்கள் பயிலாது இரு சீரடி முதலாக எழுசீரடியளவும் வந்த பெரும்பான்மையான் நாற்சீரடி கொண்டு நெட்டெழுத்தும் அந்நெட்டெழுத்து போல் ஓசைஎழும் மெல்லெழுத்தும் லகாரளகாரங்களும் உடைய சொல்லால் பொருள் புலப்படும் பாடல், அவையாவன, கலியும் பரிபாடலும் போலும் இசைப்பாட்டாகிய செந்துறை மார்க்கத்தன வென்பது...அவிநயத்துக்கு உரியவாதல் நோக்கியென்பது, மற்றிதனை வெண்டுறைச் செய்யுட்குமுன் வைப்பினெனின்...'

மேற்படி நூற்பாவானது இசை மற்றும் ஆடலுக்குரிய பாடல்களின் சீர்கள், அடிகள் மற்றும் எழுத்துக்கள் பற்றிக் கூறுவதாகும். இவ்வகைப் பாடல்களின் அடிகள் இரண்டு முதல் ஐந்து வரை அமைந்திருக்கும். அடிகளில் சீர்கள் இரண்டு முதல் ஏழு வரையும் இருக்கலாம். ஆயினும் பொதுவாக அடிகள் நான்கு சீர்கள் கொண்டனவாக அமைவதே பெருவழக்காகும். இப்பாடல்களில் க,ச,ட,த,ப,ற ஆகிய வல்லெழுத்துக்கள் பயில்வதில்லை. இசைக்குச்சிறப்புச்சேர்க்கும் ஓசைகொண்டனவாகிய நெட்டெழுத்துக்களும் மெல்லின எழுத்துகளும் ய,ர,ல,வ,ழ,ள ஆகிய இடையின எழுத்துகளும் பயில்வதன் மூலம் இவை ஓசைச் சிறப்புடையனவாகின்றன. இவ்வகையிலமைந்த பாடல்களே கலியும் பரிபாடலும் எனச்சுட்டப்பட்ட இசைப்பாட்டாகிய 'செந்துறை மார்க்கம்' சார்ந்தவையாகக் கொள்ளப்படுவன. அவிநயத்துக்குரியவை 'வெண்டுறை" சார்ந்தவையாக அமைவனவாகும். அவிநயத்துக்குரியன எனப்படுவன ஆடல் மரபு சார்ந்தவையாகும். பேராசிரியர் தந்துள்ள உரையின் தெளிபொருள் இவையே. தொல்காப்பியர் காலத்து இசை மற்றும் நடன மரபுகளை உய்த்துணர்வதற்கு இவ்வுரை துணைநிற்கிறது.

செந்துறை மற்றும் வெண்டுறை தொடர்பாக தொல்காப்பியச் செய்யுளியலின் 153ம் நூற்பாவினையும் அதன் உரைவிளக்கத்தினையும் அடுத்து நோக்குவோம்.

*'ஒருபொரு ளுதலிய வெள்ளடி யியலாற்*
*றிரிபின்றி வருவது கலிவெண் பாட்டே'*

- தொல்:செய்.பேரா:153

> **"தமிழ்மரபில் இறைவழிபாட்டை மையப்படுத்திப் பயின்றுவந்துள்ள ஒரு இசைப்பாடல் மரபே ஒருகாலத்தில் 'தேவர்பராஅய' என்ற அடைமொழியாலும் பின்னனொருகாலத்தில் தேவபாணி என்ற பெயராலும் வழங்கிவந்துள்ளமையைத் தொல்காப்பியக் குறிப்பாலும் அதன் பேராசிரியருரையாலும் அறிகிறோம்."**

மேற்படி நூற்பாவிற்கு பேராசிரியர் தரும் விளக்கம் வருமாறு:
'கந்திருவ மார்க்கத்து வரியுஞ் சிற்றிசையும் பேரிசையும் முதலாயின
போலச்செந்துறைப் பகுதிக்கே உரியவாகி வருவனவும் கூத்தநூலுள்
வெண்டுறையும் அராகத்திற்கேயுரியவாகி வருவனவும்... இக்கருத்தானே
அவற்றை இப்பொழுதும் இசைப்பாவென வேறுபெயர்கொடுத்து வழங்குப'

இங்கு முதற்கண், செந்துறைப்பகுதிக்குரிய இசைவகைகளாக வரி, சிற்றிசை, பேரிசை என்பன சுட்டப்படுகின்றன. அடுத்து, மறைந்த ஆடல்சார்ந்த இலக்கண நூலான கூத்த நூல் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. அராகத்திற்குரிய விரைவுநடையுடைய பாடல் ஆடலுக்குரியதான வெண்டுறை எனக் கூறப்படுகிறது. அத்துடன் செந்துறை மற்றும் வெண்துறை ஆகிய இரண்டையும் இசைப்பா என்ற வேறுபெயரில் சுட்டும் வழக்கும் நிலவுகிறது என்ற குறிப்பும் மேற்படி உரைக்குறிப்பிலுள்ளது.

இவ்வாறு செந்துறை மற்றும் வெண்டுறை என்பனபற்றி தொல்காப்பியத்தின் பேராசிரியருரை மட்டுமன்றி பஞ்சமரபு என்ற இசைஇலக்கணநூலும் யாப்பருங்கலம், யாப்பருங்கலவிருத்தியுரை என்பனவும் சிலப்பதிகார உரைகளும் கூட எடுத்துரைக்கின்றன. இவையிரண்டும் இசைக்கும் ஆடலுக்கும் உரியன என்பதை இவ்விலக்கண நூலாக்கங்கள் உறுதிசெய்கின்றன. (இவைபற்றி எனது எனது கலாநிதிப்பட்ட ஆய்வில் விரிவாகவே எடுத்துரைத்துள்ளேன்.)


அடுத்து தேவபாணி பற்றி நோக்குவோம். தேவபாணி என்ற அச்சொல்லே தெய்வத்தைப் பாடுகின்ற முறைமைசார்ந்த இசைப்பாமரபொன்றைச் சுட்டிநிற்பது என்பது தெளிவு. இந்த மரபுதொடர்பாக தொல்காப்பியம் கூறும் சான்றுகளை அடுத்து நோக்குவோம். தொல்காப்பியத்திலே கலிப்பாவின் வகைகள் பற்றிய பகுதியிலே 'தேவர்ப்பராஅய முன்னிலைசார் ஒத்தாழிசைக்கலிப்பா' என்ற ஒரு வகைமை சுட்டப்படுகிறது. இப் பாடல்வகைக்கு 13ம் நூற்றாண்டைச் சார்ந்தவரான பேராசிரியர் உரைகூறுமிடத்து 'தேவபாணி' என்ற பெயரை வழங்கியுள்ளார். தமிழ்மரபில் இறைவழிபாட்டை மையப்படுத்திப் பயின்றுவந்துள்ள ஒரு இசைப்பாடல் மரபே ஒருகாலத்தில் 'தேவர் பராஅய' என்ற அடைமொழியாலும் பின்னொருகாலத்தில் தேவபாணி என்ற பெயராலும் வழங்கி வந்துள்ளமையை மேற்படி தொல்காப்பியக் குறிப்பாலும் அதன் பேராசிரியருரையாலும் அறிகிறோம்.

அடுத்து, மேலே சுட்டிய செந்துறை மற்றும் வெண்டுறை தொடர்பாக தொல்காப்பியச் செய்யுளியலின் 153ம் நூற்பாவின் பேராசிரியர் உரைவிளக்கத்தில் கலிவெண்பாட்டின் இலக்கணமானது இசைப்பாடல் சார்ந்ததாயமைந்ததென்பதை அறிகிறோம். மேலும் அவ்வுரை விளக்கத்தில் தேவர்பராஅய ஒத்தாழிசைக் கலிப்பாவின் ஒரு பகுதியான 'அம்போதரங்கவொருபோகிற்கு இடையின்றிக் கலிவெண்பாட்டு வைத்தமையான் தேவபாணியும் கலிவெண்பாட்டேயாம், ஒருபொரு ளுதலிவரி னென்பது" என்ற விளக்கம் தேவபாணியினையும் இங்கு இசைப் பாடலாகக் கருதுவது புலனாகின்றது.

தேவபாணி என்ற சொல்லிலே 'பாணி'

*தொடர்தல் 74ம் பக்கம்*



**வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?**



அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

MOTOR VEHICLE ACCIDENT

SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A
MOTOR VEHICLE ACCIDENT
Fractures | Spinal Cord Injury | Brain or Head Injury | Internal Injuries | Scarring or Disfigurement | Catastraphic Injuries

FOR CASH SETTLEMENT KNOW YOUR RIGHTS AGAINST THE INSURANCE COMPANY.

MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

Over 30 Years Combined Experience

Even if you are at fault:
Unemployed . Employed
Passenger . Pedestrian
Cyclist . Travelling in public transit . Student
Housewife.




DON'T BE MISLEAD INTO TAKING A POOR OR SMALL
CASH SETTLEMENT
IF YOU ARE INJURED PHYSICALLY AND/ OR PSYCHOLOGICALLY
CALL US NOW!

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்.

தீபன்
(416) 505-9804
(416) 831-4444
24 Direct Line

2190 Warden Ave., Suite 202,
Toronto, ON M1T 1V6

# தமிழரின் இனமரபு...

73ம் பக்கத் தொடர்ச்சி...

என்பது இறைவனைப் பாடும் பாடலைச் சுட்டிநிற்கும் காரணப் பெயராகப் பயின்றுள்ளமை தெரிகின்றது. சங்க இலக்கிய காலத்தில் தேவபாணியென்ற முன்னிலைப் பரவலுக்குப் பொருத்தமாக அமைந்த பாடல்கள் பரிபாடல் நூலிலே காணப்படுகின்றன. பரிபாடல் தொகுப்பின் பாடல்களில் ஒருபெரும்பகுதி செவ்வேள், திருமால் ஆகிய தெய்வங்களைப் போற்றி நிற்பனவாகும். இதன் முதலாம் பாடலான ‘ஆயிரம் விரித்த அணங்குடை...’ என்ற பாடல் இதற்குச் சான்றாகக் கொள்ளத்தக்கதொன்றாகும். இப்பாடல் பரிபாட்டு என்ற வேறொரு தனியானதொரு பாடல் வகைமையிலேயே தொல்காப்பியரால் இலக்கணம் கூறப்பட்டு வந்துளது என்பதை வரலாற்றால் அறிகிறோம்.

கலிப்பாவின் செம்மையான வடிவநிலையான ஒத்தாழிசைக் கலிப்பாவின் வகைகளிலொன்றாகத் தொல்காப்பியத்திற் சுட்டப்படும் தேவர்ப்பராய முன்னிலை சார் ஒத்தாழிசைக்கலிப் பாவானது இறைபுகழ்பாடும் இசைமரபொன்றின் தொன்மைக்குச் சான்றாக அமைவது என்பது முன்னைய கட்டுரையில் சுட்டப்பட்டதாகும்.

தெய்வத்தைப்பாடும் பாடல் மரபு ‘பாணி’ என்ற பெயருடன் தொடர்புடையதாக வழங்கப்பட்டமைக்கு நமக்குக்கிடைக்கும் காலமுதன்மையுடைய சான்றுகள் சிலப்பதிகாரம் தரும் செய்திகளாகும். அந்நூலின் ‘கடலாடுகாதை’யில், ‘மாயோன் பாணி’, ‘வருணப்பூதர் நால்வகைப் பாணி’ என்னும் தொடர்கள் பயில்கின்றன(சிலப்: 6:35-6). இவ்வாறு அமைந்த தொடர்களுக்கு உரை கூறிய அரும்பதவுரைகாரரும் அடியார்க்குநல்லாரும் இவற்றைத் தேவ-பாணி என்றே பொருள் கொண்டுள்ளனர். மேலும் அடியார்க்கு நல்லார் தரும் செய்திகளைக் கவனத்திற்கொள்ளும்பொழுது தேவாபாணி என்பது இசைசார்ந்ததாக மட்டுமல்லாமல் இயல் மற்றும் நாடகம் ஆகியவற்றோடும் தொடர்புபட்ட ஒன்றாகவும் சிந்திக்கப்பட்டமை தெரியவருகிறது. குறிப்பாக இயற்றமிழில் வரும் போது அவ்வகைப்பாடல்கள் ‘கொச்சகஒரு போகு’ எனப்பெயர்பெறும் என்பது அடியார்க்கு நல்லார் தரும் செய்தியாகும். கொச்சகஒரு போகு என்ற கலிப்பாவின் அமைப்பிலே தரவு என்ற தொடக்கப்பகுதியானது ‘முகநிலை’ என்றும் இடைப்பகுதியானது ‘இடைநிலை’ என்றும் இறுதிப்பகுதினது ‘முரிநிலை’ என்றும் வழங்குகின்றமையை அடியார்க்கு நல்லாருரை சுட்டியமைகிறது. மேலும் இசைத்தமிழில் இந்தஅமைப்பு ‘முகநிலை’ என்றும் ‘கொச்சகம்’ என்றும் ‘முரி’ என்றும் வழங்கிவந்துள்ளதென்பதையும் மேற்படி உரைக்குறிப்பால் அறிகிறோம்.(கீர்த்தனையின் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்பவற்றுக்கு இவ் அமைப்பு முறைமை ஒப்பானது)

‘நாடகத்தமிழில் தேவபாணி அமையும் பொழுது பெருந்தேவபாணி பலதேவரையும் சிறுதேவபாணி வருணபூதரையும் மூவடி முக்கால் வெண்பாவால் வாழ்த்தும்’ என்பது போன்ற சில செய்திகளை மதிவாணர் நாடகத்தமிழ்நூற் சான்றுகளைத் தந்து அடியார்க்குநல்லார் விளக்குகிறார்.

அடியார்க்குநல்லார், மாயோன்பாணி என்பதுபற்றி மேலும் விளக்குமிடத்து அது பதினொரு வகையாடலுக்கும் முகநிலையாகிய தேவபாணி எனச்சுட்டி அதற்குச் சான்றாக எண்சீரானமைந்த பாடல் ஒன்றைத்தருகிறார். அப்பாடல் வருமாறு.

*‘மலர்மிசைத் திருவினை*
*- வலத்தினிலமைத்தவன்*
*மறிதிரைக் கடலினை மதித்திட*
*- வடைத்தவ*
*இலகொளித் தடவரை கரத்தினி*
*- லெடுத்தவன்*
*னினநிரைத் தொகை கழை*
*- யிசைத்தலி லழைத்தவன்*
*முலையுணத் தருமவ ணலத்தினை*
*- முடித்தவன்*
*முடிகள்பத் துடையவ னுரத்தினை*
*- யறுத்தவன்*
*உலகனைத்தையுமொரு*
*- பதத்தினிலொடுக்கின*
*னொளிமலர்க் கழறருவதற்கினி*
*- யழைத்துமே’*

பின்னர் இதனைத்தொடர்ந்து சிறுதேவ-பாணி என்பதற்குச் சான்றாக பின்வரும் கலிவிருத்தப்பாடலைத் தருகிறார்.

*‘வண்ணமலர்ச் சரங் கோத்து மதனவேண்*
*- மிகவெய்யக்*
*கண்ணளவோர் புலனல்லாக் கனல்விழியா*
*- லெரித்தமையால்*
*எண்ணிறந்த தேவர்களு மிருடிகளுமெழுந்*
*- தொட*
*ஒண்ணுதலாள் பாகங்கொண் டொருத*
*- னியே யிருந்தனையே.’*

மேற்கூறிய இருபாடல்களைத் தவிர சந்திரனைப்பாடும் தேவபாணி எனச்சுட்டி மேலும் ஒரு அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தப்பாடலைச் சான்றுகாட்டுகிறார் அடியார்க்குநல்லார்.

*‘குரைகடன் மதிக்கு மதலையை*
*குறுமுய லொளிக்கு மரணிவை*
*இரவிருளகற்றுநிலவினை*

*யிறையவன் முடித்த வணியினை*
*கரியவன் மனத்தி னுதிதனை*
*கயிரவ மலர்த்து மவுணனை*
*பரவுனர் தமக்கு நினதிரு*
*பதமலர் தபுக்க வினையையே’*

மேலே சான்றாகத் தரப்பட்ட பாடல்கள் முறையே எண்சீர், நாற்சீர் மற்றும் அறுசீர் கொண்ட நான்கடிப்பாடல்களாகவும் விருத்தவகை சார்ந்தனவாகவும் உள்ளன. திருமுறை மற்றும் திவ்வியப் பிரபந்த மரபுசார்ந்த பாடல்கள் பலவும் மேற்படி விருத்த வகைகளே என்பது இங்கு நம் கவனத்துக்குரியது. இதனை நோக்கும் போது, அடியார்க்குநல்லாரின் மேற்படி சான்றுகள் திருமுறை - திவ்வியப்பிரபந்த மரபுசார் பிற்காலப் பாடற் பரப்புகளிலிருந்து எடுத்தாளப்பட்டவை என ஊகிக்க இடமுண்டாகிறது.

தேவாபாணியின் சான்றுகளைச் சுட்டுவதில் அடியார்க்குநல்லாரும் தொல்காப்பிய உரைகாரரான பேராசிரியரும் வேறுபடுகின்றமையைக் காண்கின்றோம். கி.பி: 12ம் நூற்றாண்டைச் சேர்ந்த அடியார்க்கு நல்லார் மேலே காட்டியவாறாக விருத்த வகைகள் சார்ந்த சான்றுகளையே முன்வைத்துள்ளார். ஆனால் 13ம் நூற்றாண்டைச் சார்ந்தவரான பேராசிரியருரையிலே தரப்படும் சான்றுகள் ஒத்தாழிசைக் கலிப்பாவின் கட்டமைப்பு சார்ந்தனவாகும். இதனை நோக்கும் போது தேவபாணிக்குச்சான்று காட்டுவதில் வேறுபட்ட மரபுகள் நிலவிவந்துள்ளமை உய்த்துணர முடிகிறது.

(தொடரும்)

*(உலகத் தொல்காப்பியமன்றக் கனடாக் கிளை 20-01-2018 அன்று நிகழ்த்திய 16வது கருத்தரங்கில் ஆற்றிய ஆய்வுரையின் இரண்டாம் பகுதியின் கட்டுரை வடிவம்.)*

kawsalya.s@thaiveedu.com





# வீடு வாங்க விற்க...

10 வருட வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்

## வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

**வாங்கப் போகிறீர்களா?**

- தரமான வீடு தவறிப்போகாது
- பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- வாங்கியபின் ஏமாற்றங்கள் இல்லை
- பெருவருவாய் தரும் முதலீடு

**விற்கப் போகிறீர்களா?**

- இலவச வீட்டுப் பரிசோதனையும் ஆலோசனைகளும்
- விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்

**For Sellers**




Free Home Inspection!
Free Market Evaluation!
Free Home staging Cosultation!




**For Buyers**

Free 1 Year Home Warranty!
* Cashback incentives!

★ Cash incentive for referrals

**Please Call for more details**

**www.vela4homes.com**

| Detached | Detached | Detached | Semi Detached |
|---|---|---|---|
| 3Br + 1<br>3WR, 1+1 Kitc<br>Fully upgraded<br>Best Value | 4BR+2<br>5WR<br>1+1 Kitch<br>Sep.Entrance<br>Luxury Home | 3+1 Br<br>4WR<br>Fin. Bsmnt<br>Newly Renovated | Best Location<br>1+1 Kitc<br>3BR+2<br>Fully Renovated<br>Sep. Entrance |
| Scarborough | Ajax | Whitby | Scarborough |













Chairman's Club Award Winner 2015

HOMELIFE HIGHER STANDARDS

Chairman's Club Award Winner 2016

Chairman's Club Award Winner 2017


## Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com

Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8




# Attic Insulation
## Approved Contractor

**Book your appointment now before it's too late**

**Ontario government is offering rebate up to 90 %.**

**Step 1.** Call 416.556.6115 to verify your eligibility.

**Step 2.** Professional certified team will insulate your house.

**Step 3.** You will pay the contractor up on completion of the project.

**Step 4.** Representative will submit your rebate application on your behalf.

**Step 5.** Your cheque of up to 90% of the cost will arrive in 10 to 12 weeks.

**No Energy Audit Required**

**Attic Insulation is the smart investment** that pays for it self over time

**UP TO $7,200 in total rebates**


Attic $1,500 | Wall $3,800 | Basement $ 1,900



PRABHA SINNA
Government certified Energy Advisor

Call/Text
**416.556.6115**





Atticare
CARE AS IF IT'S OUR OWN
atticare.com

Insulating your attic is the number one way to make your home energy efficient

Reduce heat loss through attic | Save on heating & cooling costs | Prevent roof rot and mould

info@atticare.com | atticare.com

# ஜிம்மி வலன்ரைன் என்கிற...

## - ஓ, ஹென்றி

### மொழியாக்கம்: என்.கே. மகாலிங்கம்



ஓ, ஹென்றியின் இயற்பெயர் வில்லியம் சிட்னி போட்டர். (1862-1910) புகழ் பெற்ற அமெரிக்க சிறுகதை எழுத்தாளர். இவரை அமெரிக்க மாபாசான் என்றும் சொல்வார்கள். நகைச்சுவை, ஆச்சரியமான திடீர் திருப்பமும் முடிவும், குறும்புத்தனம், சொல் விளையாட்டுக்கள், இதமான கதாபாத்திர வார்ப்பு, சுருக்கமான, நளினமான மொழி ஆகியவற்றுக்குப் பெயர் போனவை இவரின் கதைகள். எழுத்தர்கள், பொலிஸ்காரர்கள், பரிசாரகர்கள் போன்ற சாதாரண மக்களே இவரின் கதாபாத்திரங்கள். நியுயோர்க்கே பெரும்பாலான கதைகளின் பின்னணி. இவர் வங்கியில் வேலை பார்த்தபோது பணத்தைக் களவாடியதற்காக சிறை சென்றவர். இவருடைய சிறுகதைகளான The Gift of Magi, The Ransom of Red Chief, A Retrieved Reformation, The Cop and the Anthem போன்றவை சிறந்த சிறுகதைகளாக இன்றும் பேசப்படுபவை. இவரின் பெயரில் வருடாந்தம் சிறந்த சிறுகதைகளுக்கான விருது அளிக்கப்படுகிறது. அமெரிக்காவில் மிக மதிப்புள்ள விருதுகளில் அதுவும்

ஜிம்மி வலன்ரைன் பத்து மாதமாக வேலை செய்துகொண்டிருந்த சிறையின் கடைக்கு சிறைக்காவலாளி வந்து, ஜிம்மின் கையைப் பிடித்துக் கொண்டு, 'சிறை அதிகாரி முன் அலுவலகத்தில் உன்னைச் சந்திக்குமாறு சொன்னார்,' என்றான். 'உனக்கு ஆளுநர் மன்னிப்பு அளித்துள்ளார் போலும்,' என்றான் மீண்டும்.

'ஓ அதற்கு நேரம் வந்து விட்டது,' என்றான் ஜிம்.

வெளியே ஜிம்மிக்குப் பல நண்பர்கள் இருந்தனர். அதனால் அவன் பல காலம் சிறைக்குள்ளே அடைத்து வைக்கப்படுவதில்லை. பத்து மாதங்கள் தான் அவன் சிறைக்குள்ளிருந்த நீண்ட காலம்.

ஆனால் சிறை அதிகாரி உடனடியாக அவனுக்கு மன்னிப்பைக் கொடுத்து விடவில்லை. எப்பொழுதும் சொல்வது போல அவனுக்கு வலுவான சில அறிவுரைகளை முதலில் சொன்னான்.

'காலையில் நீ போகலாம், வலன்ரைன். இந்த முறை நீ நேர்மையான மனிதனாக இருக்க வேண்டும். நீ மனதில் கெட்டவன் அல்ல. இனிமேல் பாதுகாப்புப் பணப் பெட்டிகளை உடைப்பதை நிறுத்து. நேர்மையான வழியில் நட,' என்றான்.

'நானா?' என்றான் ஜிம் ஆச்சரியத்துடன். 'நான் என் வாழ்க்கையில் ஒரு போதுமே பாதுகாப்புப் பெட்டியை உடைக்கவே இல்லையே,' என்றான்.

சிறை அதிகாரி சிரித்தான்.

'ஓ, இல்லவே இல்லை. அப்படியானால் எப்படி அந்த ஸ்பிறிங்ஃபீல்ட் வேலைக்கு நீ அனுப்பப்பட்டாய்? அந்த இழிவான முதிய யூரிகளா உனக்கெதிராகத் தீர்ப்பளித்து உன்னை இங்கே அனுப்பியது?' என்றான் அதிகாரி.

'நானா?' ஜிம்மி ஆச்சரியப்பட்டுப் போனது போல அதிகாரியைப் பார்த்தான். 'ஏன் அதிகாரியே. என்னுடைய வாழ்க்கையில் நான் என்றுமே ஸ்பிறிங்பீல்டிங்குக்குப் போனது இல்லையே!' என்றான்.

'இவனைத் திருப்பி அழைத்துச் செல், காவலனே,' என்றான் அதிகாரி. 'போய் இவனுக்கு புதிய சப்பாத்தும் உடுப்பும் கொடு. காலையில் ஏழு மணிக்கு இவனை என் அலுவலுகத்திற்கு அழைத்து வா.' வலன்ரைனைப் பார்த்து, 'வலன்ரைன் நான் சொன்ன அறிவுரையைப் பற்றிக் கொஞ்சம் யோசி,' என்றான்.

அடுத்த நாட்காலை ஏழே காலுக்கு ஜிம்மி சிறை அதிகாரியின் அலுவலகத்தில் நின்றான். மலிவான, பளபளக்கும், சரியாகப் பொருந்தாத, ஆடைகளும், கால்களில் விறைப்பான, சத்தமிடும் சப்பாத்துக்களும் அணிந்திருந்தான்.

அதிகாரி, வலன்ரையினிடம் ஒரு றெயில் றோட் ரிக்கற்றும், ஐந்து டொலர் தாளும், மலிவான ஒரு சுருட்டும் கொடுத்து விட்டுக் கைகுலுக்கினான். முதல் நாள் சொன்ன அறிவுரையையே திரும்பவும் சொல்லிவிட்டு, நற்பேறு உண்டாகட்டும் என்று வாழ்த்தினான்.

திரு ஜேம்ஸ் வலன்ரைனை சிறைக் கைதி இலக்கம் 9762 என்று இனி அழைக்க முடியாது. அவன் காலை ஒளியில் வெளியே நடந்தான். மரங்களையோ பறவைகளையோ மலர்களையோ சற்றேனும் பார்க்காமல் நேராக அருகில் இருந்த உணவகத்துக்குச் சென்றான். பத்து மாதத்திற்குப் பிறகு மிகப் பெரிய காலை உணவை உண்டான். சிறை அதிகாரி கொடுத்த சுருட்டிலும் பார்க்கச் சிறந்த சுருட்டொன்றை குடித்து தன் உணவை முடித்துக் கொண்டான்.

பின் புகையிரத நிலையத்திற்கு நடந்து சென்று புகையிரதத்தில் ஏறினான். மூன்று மணி நேரத்திற்குள் மாநிலத்தின் அருகிலிருந்த சிறியதொரு நகரத்தை அடைந்தான். மைக் டொலான் என்ற பழைய நண்பன் ஒருத்தன் வைத்திருந்த மதுவகத்திற்குச் சென்றான். இருவரும் கை குலுக்கிக் கொண்டனர். 'மன்னிக்க வேணும், ஜிம்மி, எங்களால் இன்னும் விரைவாக உன்னை வெளியே எடுக்க முடியவில்லை. இப்பொழுதுள்ள ஆளுநர் மிகவும் கடுமையானவர். நீ எப்படி இருக்கிறாய்?' என்றான் மைக். 'நல்லாக இருக்கிறேன். என்னுடைய திறப்பு எங்கே?' என்றான் ஜிம்மி.

தன் திறப்பை எடுத்துக் கொண்டு மேல் தளத்திற்குப் போய் பின்புறத்தில் இருந்த படிந்து போய்க்கிடந்த தன் பழைய பெட்டியை எடுத்தான். அதைத் திறந்து உற்றுப் பார்த்தான். மேற்கு மத்திய மாநிலத்தில் எங்குமே பாதுகாப்புப் பெட்டிகளைத் திறக்கக் கூடிய அப்படியான அருமையான கருவிகள் இல்லை. அவற்றை அவன் மகிழ்ச்சியுடன் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அதற்குள் துளைக்கும் கருவிகள், கவ்விகள், அவனே உருவாக்கிய சில சிறப்பான கருவிகள் என்று பல இருந்தன. கருவிகள் முழுவதுமே ஓர் ஆயிரம் டொலர் பெறுமதி இருக்கும்.

இருக்கிறது?' என்றான், மைக்.

'நானா? நேர்மையான வேலை ஏதையாவது செய்ய விரும்புகிறேன், மைக். மத்திய மேற்கில் உள்ள திறமான பிஸ்கற் கொம்பனியின் புதிய விற்பனை மேலாளர் நான் தான்.'

தன் கையில் வைத்துத் துடைத்து உலர்த்திக் கொண்டிருந்த கிளாசைக் கீழே போடும் அளவுக்கு மைக் சிரித்தான்.

சிறைக் கைதி இலக்கம் 9762 சிறையிலிருந்து விடுவித்து ஒரு கிழமைக்குப் பிறகு மூன்று பாதுகாப்பு பெட்டிகளை



உடைத்த களவுகள் பொலிசுக்கு அறிவிக்கப்பட்டன. அவை பற்றிய எந்தத் துப்பும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அவை ஒவ்வொன்றும் ஒரே மாதிரி உடைக்கப்பட்டிருந்தன.

'அதை ஜிம்மி வலன்ரைன் தான் செய்திருக்கிறான்,' என்றான் இன்ஸ்பெக்ரர் பென்

அறைக் கதவைத் திறந்தான். எல்லாமே அவன் விட்டுச் சென்ற மாதிரியே இருந்தன. அவனைக் கைது செய்ய வந்த துப்பறிவாளன் பென் பிறைஸின் சட்டையை இழுத்தபோது கையுடன் வந்த கொலர் பொத்தான் கூட அப்படியே நிலத்தில் கிடந்தது.

அலுமாரிக்குப் பின்னால் இருந்து தூசி

அவன் திரும்பவும் கீழ் தளத்திற்குப் போனபோது அழகான, பொருத்தமான உடை உடுத்திருந்தான். நன்றாகத் துடைத்துத் தூசி தட்டிய தனது பெட்டியையும் கையில் வைத்திருந்தான்.

'இப்போது என்ன செய்ய நினைத்திருக்கிறாய், ஜிம்மி? உன் மனதில் என்ன தான்

தொடர்தல் 78ம் பக்கம்

# ஜிம்மி வலன்ரைன்...

77ம் பக்கத் தொடர்ச்சி...

பிறைஸ்.

ஜிம்மியின் பழக்கங்கள் அவனுக்குத் தெரியும். அவனுடைய வேலை சுத்தமாக, சீராக, எளிதாகச் செய்யப்பட்டிருக்கும். உடைத்தவனின் சுவடுகள் எதுவும் அங்கே விடப்பட்டிருக்காது.

'இந்த முறை அவனுக்குக் கிடைக்கப் போகும் தண்டனை அவனுக்குத் தெரியும். இனிமேல் ஜிம்மி வலன்ரினுக்கு மன்னிப்பே கிடைக்காது,' என்று சபதம் செய்தான், பென்.

ஒரு நாள் பின் மதியம். ஜிம்மி, எல்மோர் என்ற சிறிய நகரத்தில் புகையிரத்தில் கீழே இருந்து இறங்கினான். அவன் கையில் பாரமான அந்தப் பெட்டி இருந்தது. அவன் புதிய அழகான உடையில், பார்க்க மிக அழகாகவும் இருந்தான். ஒரு கல்லூரி மாணவன் வீட்டுக்குப் போவது போல.

அப்போது, ஓர் அழகான இளம் பெண் வீதியின் குறுக்காக அவனைக் கடந்து சென்று எல்மூர் வங்கிப் படிகளில் ஏறினாள்.

ஜிம்மி வலன்ரைன் அவளை ஒரு தரம் பார்த்தான். தான் யார் என்பதை மறந்தான். புதிய மனிதனாக ஆனான்.

அந்த இளம் பெண்ணின் கண்களும் கூச்சத்துடன் அவன் கண்களை சந்தித்தன. ஜிம்மியைப் போன்ற இளைஞர்களின் அழகான பாணியும் நல்ல தோற்றமும் எல்மோரில் மிகவும் குறைவு. பின்னர் விரைவாக அவள் திரும்பி வேறொரு பக்கம் பார்த்துக்கொண்டு வங்கிக்குக்குள் விரைந்து சென்று விட்டாள்.

அங்கே ஒரு சிறுவன் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தான். ஜிம்மி அவனுக்கு ஒரு பத்துச் சதத்தை எறிந்து, 'மன்னித்துக் கொள். இப்போ வங்கிக்குப் போனது செல்வி பொலி சிம்சன் அல்லவா?' என்று சிறுவனைக் கேட்டான், வலன்ரைன்.

'இல்லவே இல்லை. அவள் யாரென எனக்குத் தெரியும். இன்னொரு பத்து சதம் தந்தால் சொல்லுவேன்,' என்றான் அந்தச் சிறுவன்.

மூன்று பத்துச் சதங்களை அவனுக்குக் கொடுத்தான், ஜிம்மி. அந்தச் சிறுவன், அந்தப்பெண்ணின் பெயர் செல்வி அனபெல் அடம்ஸ் என்றும், அவள் அந்த வங்கி உரிமையாளின் மகள் என்றும் சொன்னான்.

ஜிம்மி வலன்ரைன் என்ற புதிய மனிதனுக்கு இப்போது புதிய பெயர் ஒன்று தேவைப்பட்டது. அங்கே உள்ள ஹோட்டல் பதிவேட்டில் திரு ரால்ப் டி.ஸ்பென்சர் என்று எழுதி விட்டு அங்கே தங்கினான்.

அத்துடன் தன் வாழ்க்கையை நடத்துவதற்கு அவனுக்குப் புதிய தொழில் ஒன்றும் தேவைப்பட்டது. பாதுகாப்புப் பெட்டிகளை உடைப்பதைத் தவிர வேறு ஒரு தொழிலும் அவனுக்குத் தெரியாது.

'நான் எல்மோரில் தங்கிவிடத் திட்டமிட்டிருக்கிறேன். இங்கே புதிய சப்பாத்துக் கடை ஒன்றை திறக்கலாம் என்றும் நினைக்கிறேன். இந்த நகரத்தில் வேறு யாராவது அப்படி ஒரு கடை வைத்திருக்கிறார்களா?' என்று கேட்டான் ஜிம்மி அந்த ஹோட்டல் எழுத்தரிடம்.



**அந்த இளம் பெண்ணின் கண்களும் கூச்சத்துடன் அவன் கண்களை சந்தித்தன. ஜிம்மியைப் போன்ற இளைஞர்களின் அழகான பாணியும் நல்ல தோற்றமும் எல்மோரில் மிகவும் குறைவு. பின்னர், விரைவாக அவள் திரும்பி...**

'ஒருவருமில்லை. உண்மையாக ஒரு சப்பாத்துக் கடை இங்கே இருந்தால் எங்களுக்கு நல்லது. திரு ஸ்பென்சர், நீங்கள் வெற்றிகரமாக அதைச் செய்வீர்கள்,' என்றான் அந்த எழுத்தர்.

திரு ஸ்பென்சர் வெற்றிகரமாக வியாபாரம் செய்தார். சப்பாத்துக் கடை ஆரம்பத்திலிருந்தே வெற்றிகரமாக ஓடியது. அதைப் போலவே அழகான, ஆட்களைக் கவரும் உரிமையாளரும் வெற்றிகரமாக அதை நடத்தினார். அவருக்கு எல்மோரில் பல நண்பர்கள் கிடைத்தனர். அவர்களில் ஒருத்தி செல்வி அனபெல் அடம்ஸ். ஆண்டு இறுதியில் அவர்கள் இருவரும் திருமணம் செய்ய நிச்சயதார்த்தம் செய்திருந்தனர். திரு ரால்ப் டி ஸ்பென்சரை அடம்ஸ் குடும்பத்தினர் தம் குடும்பத்தில் ஒருவராக ஏற்றுக்கொண்டு விட்டனர். ஒரு நாள் ஜிம்மி சென்ற் லூயியில் உள்ள பழைய நண்பன் ஒருத்தனுக்கு கடிதம் ஒன்றை எழுதுவதற்கு உட்கார்ந்தான்.

'அன்பான பில்லி, உனக்குத் தருவதற்கு என்னிடம் ஒரு பரிசுப் பொருள் இருக்கிறது. அதுவே என்னுடைய கருவி. அதை உனக்குத் தருவதற்கு நான் விரும்புகிறேன். இப்பொழுது எனக்கு அது தேவையில்லை. இரண்டு கிழமைகளில் உலகத்திலே உள்ள மிக அழகான ஒரு பெண்ணைத் திருமணம் முடிக்க இருக்கிறேன். அவள் என்னை நம்புகிறாள், பில்லி. இனிமேல் நான் ஒருபோதுமே நேர்மையற்ற வேலைகள் எதையும் செய்யப் போவதில்லை. என்னை செவ்வாய்க்கிழமை இரவு சல்லி உணவகத்தில் சந்திக்கவும். அப்போது நான் கருவிப் பெட்டியைத் தருவேன். உன் பழைய நண்பன், ஜிம்மி.'

கடிதம் எழுதிய அதே நாள் இன்ஸ்பெக்ரர் பென் பிறைஸ் எல்மோருக்கு வந்தான். ஸ்பென்சரின் சப்பாத்துக் கடைக்கு எதிரில் இருந்த மருந்துக் கடையிலிருந்து சப்பாத்துக் கடை உரிமையாளரான திரு ரால்ஃப் டி. ஸ்பென்சரை நன்றாகக் கவனித்துப் பார்த்தான்.

'ஆகா! வங்கி உரிமையாளரின் மகளையா நீ திருமணம் முடிக்கப் போகிறாய், ஜிம்மி வலென்ரைன்? அதைப் பார்த்துக் கொள்கிறேன்,' என்றான் பென் தனக்குள்ளே.

செவ்வாய்க்கிழமை காலை ஜிம்மி சென்ற் லூயிக்குப் போக வெளிக்கிடும் போது அனபெலின் தகப்பன் ஒரு நிமிடம் அடமின் குடும்பத்துடன் சேர்ந்து அவனையும் வங்கிக்கு வரச் சொல்லியிருந்தார். அவர்களுக்கு தான் புதிதாக வாங்கிய வங்கியின் பத்திரப் பாதுகாப்புப் பெட்டியைக் காட்ட விரும்பினார்.

அவ்விடத்திற்குப் பலரும் வந்திருந்தார்கள்: அனபெலும், திருமணமான அவளின் சகோதரியும் இரண்டு சிறிய பெண் குழந்தைகளும், திரு ரால்ஃப் டி. ஸ்பென்சர், திரு அடம்ஸ் ஆகியோர். அவர்கள் அனைவரும் பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் வங்கிக்குள்ளே சென்றனர். அவர்கள் அங்கிருந்த பென் பிறைஸைக் கவனிக்கவில்லை. அவன் மறு பக்கம் திரும்பி தன் முதுகைக் காட்டிக் கொண்டு அவர்கள் நுழைந்த அறைக்கு மறுபக்கத்திலிருந்த சுவரில் சாய்ந்து கொண்டு நின்றான்.

மினுமினுத்துக் கொண்டிருந்த புதிய பாதுகாப்புப் பெட்டி பார்வைக்கு அற்புதமாகக் காணப்பட்டது. அதன் கதவில் நேரப் பூட்டு பொருத்தப்பட்டிருந்தது. அதை அப்படியும் இப்படியும் திருப்பினால் தான் பாரமான அந்தக் கதவு சாத்தப்படும்.

இன்னும் பாதுகாப்புப் பெட்டி பாவனைக்கு வராததால் கதவு திறந்தே இருந்தது. இரண்டு சிறிய குழந்தைகளும் பெரியவர்களிலும் பார்க்க அந்தப் பாதுகாப்புப் பெட்டியைப் பார்ப்பதில் ஆர்வமாக இருந்தனர். அவர்கள் பெட்டியினுள்ளே உற்றுப் பார்த்தார்கள். திரு அடம்ஸ் அது எப்படி வேலை செய்கிறதென்று விளங்கப்படுத்திக்கொண்டிருந்தார். அதன் பின் சடுதியாக ஒரு கணத்தில் விளையாட்டாக பெரிய சிறுமி தன் சிறிய தங்கையை பாதுகாப்புப் பெட்டிக்குள்ளே தள்ளிக் தடாரெனக் கதவைச் சாத்தி விட்டாள். அடம்ஸ் செய்து காட்டியது போல கதவுக் குமிழியை அப்படியும் இப்படியும் திருகி விட்டுத் தான் செய்ததில் பெருமைப்பட்டுச் சிரித்தாள்.

பெட்டிக்குள்ளே இருந்த சிறுமி கிலி பிடித்து அலறினாள்.

திரு அடம்ஸும் பீதியடைந்து விட்டார். அந்தக் குழந்தையின் தாயாரும், அறையில் இருந்த மற்றவர்களும் பீதி அடைந்து விட்டனர்.

'கதவை என்னால் திறக்க முடியாது!' என்று சொன்னார், அடம்ஸ். கதவை இழு இழுவென இழுத்தும் பார்த்தார். 'நேரப் பூட்டை இன்னும் சரியாக அமைக்கவில்லை. இங்கிருந்து நூறு மைல்களுக்குள் இதைத் திறக்கக்கூடிய மனிதர் ஒருவருமே இல்லை. அத்துடன் பாதுகாப்புப் பெட்டிக்குள் போதியளவு காற்றும் இல்லை,' என்றார்.

'ஓ, ரால்ஃப்,' என்று அனபெல் தன் காதலனின் சட்டைக் கையைப் பிடித்து இழுத்தாள். உலகிலுள்ள மனிதர்களில் அவன் மட்டுந்தான் ஏதாவது அற்புதத்தைச் செய்வான் என்பது போல. 'ஓ, ரால்ஃப், உன்னால் ஏதாவது செய்ய முடியுமா?' என்று கேட்டாள்.

இதழ்களில் விசித்திரமான புன்முறுவல் தோன்ற அவளைப் பார்த்தான், அவன். திடீரென்று அந்த அறையிலிருந்து ரால்ஃப் டி மறைந்து, அவனுக்குப் பதிலாக ஜிம்மி வலென்ரைன் நின்றான்.

ஒரு நொடியில் தன் மேலங்கியைக் கழற்றி எறிந்தான். பாரமான பெட்டியை மேசையில் எடுத்து வைத்துத் திறந்தான். கருவிகளை ஒவ்வொன்றாக வெளியே எடுத்து மேசையில் வைத்தான். அதன் பின் அமைதியாக தன் வேலையை ஆரம்பித்தான். ஒரு நிமிடத்தில் அவனுக்குப் பிடித்த துளைக்கும் கருவி பாரமான பாதுகாப்புக் கதவை துளைத்துக் கொண்டிருந்தது. மேலும் சில நிமிடங்களுக்குள் தன் வேக சாதனையையே தானே முறியடித்து, அந்தக் கதவைத் திறந்தான், ஜிம்மி.

பீதியில் உறைந்து போயிருந்த குழந்தை எந்தக் காயமும் இல்லாமல் வெளியேறி தன் தாயின் கைகளுக்குத் தாவிச் சென்றது.

ஜிம்மி வலென்ரைன் தன் மேலங்கியை அணிந்தான். கருவிகளை திரும்ப பெட்டியில் வைத்தான். முன் கதவடிக்குச் சென்றான். அவன் போய்க்கொண்டிருக்கும் போது அவனுக்குப் பழக்கமான ஒரு குரல் அவன் பின்னால் கேட்டது போல இருந்தது. 'ரால்ஃப், ஓ, ரால்ஃப்!' என்றது, அது. ஆனால் அவன் நடப்பதை நிறுத்தவில்லை.

அப்போது கதவடியில் அவன் போகும் வழியை பெரியதொரு உருவம் மறைத்துக் கொண்டு நின்றது.

'ஹெல்லோ, பென்,' என்றான் ஜிம்மி. தன் பழைய சோகமான புன்முறுவலுடன்.

'திரும்பவும் நீயா? சரி, நாங்கள் போவாம். இப்போதும் நீ அதே மாதிரியாகத் தான் இருக்கிறாய். உன்னில் ஒரு வித்தியாசம் இல்லை,' என்றான் பென்.

பின்னர், பென் பிறைஸ் விசித்திரமான ஒரு வேலையைச் செய்தான்.

'நீ என்னைத் தவறாகப் புரிந்து கொண்டாய். உன்னை எனக்குத் தெரியாது,' என்றான் பென்.

திரும்பவும் ஜிம்மைப் பார்க்காமல், அவனை விட்டு விட்டு, முகத்தைத் திருப்பிக்கொண்டு வீதியில் இறங்கி நடந்தான், பென்.



mahalingam.k@thaiveedu.com

'உறங்கா விழிகள்' தொண்டு நிறுவனத்தின் வெளியீடாக

'வலிகளின் மொழி'

ஒலிப்பேழை வெளியீடு

மே 12, சனி மாலை 5 மணி

இடம்: கனடா ஶ்ரீ ஐயப்பன்கோவில் மண்டபம்

635 Middlefield Road, Scarborough

தொடர்புகளுக்கு: சு சோமசுந்தரம்: 416 747 9634


உங்கள்
உறவுகளின்
இழப்பில்
துயருறும்
நேரத்தில்
நாம்
உங்களுடனேயே
பயணிக்கிறோம்
தர்மா
416-655-6164
• 5 பெரிய இறுதி வணக்க மண்டபங்கள்
• தாராளமான Parking வசதிகள்
• இறுதி வணக்க மண்டபத்திலேயே இறுதிக்கிரியைகளை நடத்தும் வசதி
• உங்களுக்கு அருகாமையிலேயே அமைந்த மண்டபங்கள்
• நட்போடு சேவை புரியும் அமைப்பாளர்கள்/ஊழியர்கள்
• உங்கள் குடும்ப வழமைப்படியே இறுதிநிகழ்வுகளை நடத்தவும் முடியும்
Brampton
CREMATORIUM & VISITATION CENTRE INC
Crematorium Operated by Park Lawn Co
30 Bramwin Court, Brampton, ON L6T 5G2
905-458-2222


The Best Gift you can give someone is their Dream Vacation!
AMAZING ALL INCLUSIVE DEALS
MEXICO
CUBA
JAMAICA
PUNTACANA
MALAYSIA
Special Deals to India/Sri Lanka
UPCOMING EXCITING HOLIDAYS
27 DAYS DISCOVERING 12 JOTHIRLINGA (MAY) 2018
KAILASH IN YATRA (JUN-AUG) 2018
MALAYSIA OR AMAZING THAILAND & CAMBODIA
8 DAYS FROM ANGKOR WAT ... all the way to Chiang Mai
HOLY LAND (MAY & OCT) 2018
SERANDIB
TRAVEL 1
Your Satisfaction is Our Success
உங்கள் மனநிறைவே எங்கள் வெற்றியின் இரகசியம்
7 Eastvale Dr, Unit #1
Markham, ON. L3S 4N8
Tel: 905.472.7500/416.750.0009
Toll Free: 1.888 .207.0902
www.serandibtravel.com
info@serandibtravel.com
SriLankan
Emirates
ETIHAD
AIR CANADA
QATAR
JET AIRWAYS
IATA
tico.ca


Mega Financial Group
WE ARE PROVIDING A LIFETIME
FAMILY PROTECTION
SAVE BIG
ON COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET
OUR PRODUCTS AND SERVICES
Life Insurance products
Critical Illness Insurance
Disability Insurance
Dental & Drug Insurance
Travel Insurance
Non-Medical Insurance
Mortgage Insurance
RRSP's Investments
RESP-Education Saving Plan
Final Expense Products
(Through Funeral Homes)
INDUSTRIAL ALLIANCE
Canada Life
Sun Life Financial
UL Mutual
OBF
La Capitale
Assumption Life
RBC Insurance
Empire Life
Desjardins
Manulife Financial
www.megafinancial.ca
RAJ NADARAJAH
President & CEO
Dir: 416-666-1120
raj@megafinancial.ca
Office: 416-293 5559 • Fax: 416-293 9409
PH28 -4168 Finch Ave. E., Scarborough, ON., M1S 5H6


வீடு வாங்க விற்க வாங்க
CONSUMER CHOICE AWARD 2016 GTA EAST
RE/MAX COMMUNITY
Realty Inc , Brokerage
Esan Kulasegaram
Sales Representative
416.833.9999
off. 416.287.2222 | fax. 416.282.4488
203 - 1265 Morningside Ave Toronto, ON
Brokerage Independently Owned And Operated


ATTENTION SELLERS!
If you are thinking of selling your property,
the time is right!
I may be the Real Estate guy
you have been looking for.
Why not Call Me?
My Listing Service Include:
Comparative Market Analysis
Property Preparation Advise
Professional Photography Including Virtual Tour
Colour Feature Sheets
24/7 On-Line Advertisement
Social Media Campaign
and more for a mere 3.5% *
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Future Realty Inc.
உங்கள் விருப்பமே என் முதல்வீடு!
Sri Sivasubramaniam
சிறி சிவசுப்ரமணியம்
Sales Representative (Team Veedu)
Homelife Future Realty inc.
ssriskand@gmail.com / www.sriveedu.com
Dir: 416-884-3991
Office: 905-201-9977
Fax: 905-201-9229
7 Eastvale Dr., Unit 205
Markham, L3S 4NB


TD Canada Trust
ICICI Bank
Scotiabank
NATIONAL BANK
EQUITABLE BANK
B2B BANK
INSTANT AND EASY CASH FOR IMMEDIATE NEEDS
கடன் செய்து கொடுப்பது எமது கடமை
F.S.C.O.Brokerage # 10687
Mortgage Broker # M08004190
www.cashbankcanada.com
வங்கிகளில் MORTGAGE பெற்றுக்கொள்ள
அழையுங்கள் : தம்பி பிரபா
(416) 645 3027
1% வட்டி வீதத்தில் ஆரம்பித்து
$1 Million வரை பெற்றுக்கொள்ளலாம்
HomEquity Bank
BRIDGEWATER BANK
Manulife Bank




# நேரமும் நம்பகத் தன்மையும்

ஒரு செயலில் இறங்குவதற்கு முன் தீவிரமாக யோசிக்கவேண்டும். அப்படி யோசித்து இறங்கியபின் மனதில் சலனம் ஏற்படக்கூடாது. எடுத்துக்கொண்ட விடயத்தை திறமையாகச் செய்து, நாம் நினைத்த பலாபலனை அடைய வேண்டும். நினைத்த பலாபலனை அடைய முடியாவிட்டாலும் பரவாயில்லை, கடுமையாக உழைப்பவர் என்ற நற்பெயராவது கிட்டும். அதுவே ஒருவர் பெறக்கூடிய பெருமை. ஹமீடின் நவரசக்கோவை நிகழ்ச்சியை ஒலிப்பதிவுசெய்து வானலையில் கேட்டபின்னர் எனக்கு ஏற்பட்ட தீவிர சிந்தனை இது. நான் நுழைந்திருக்கும் துறைக்கான அடிப்படைத் தகுதியும் திறமையும் எனக்கிருக்கிறது. இந்தத் துறையில் என்னால் நிச்சயம் முன்னேற முடியும். இப்போதுதான் நான் முதற்படியில் கால் வைத்திருக்கிறேன், இதனைச் சரியான விதத்தில் திறமையாகச் செய்து அனைவரது கவனத்தையும் அங்கீகாரத்தையும் பெறுவதே முன்னேறுவதற்கான ஒரேவழி. இப்படி நான் நினைத்த பின் எனக்கிருந்த தடுமாற்றம், கவலையெல்லாம் பறந்தோடிவிட்டன. மனமுதிர்ச்சியடைந்த ஒரு மனிதனாகிவிட்டேன். தீவிர பயிற்சிதான் ஒரேவழி. அதை ஆரம்பித்துவிட்டேன்.


சிங்கள ஒலிபரப்பு இடம்பெறும் B கலையகத்தைத் தவிர மற்றைய எல்லாக்கலையகங்களும் காலை பத்துமணிக்குப் பின்னர் மாலை ஒலிபரப்பு ஆரம்பிக்கும் வரை பராமரிப்பு வேலைகள் மற்றும் நிகழ்ச்சி ஒலிப்பதிவுகள் தவிர்ந்த நேரங்களில் செயலற்றிருக்கும். அவற்றில் ஏதோ ஒரு கலையகத்திற்குச் சென்று இசைத்தட்டுகளைத் துரிதமாக அவை சுழலும் மேசைகளில் (turn tables) ஒன்றுமாறி யொன்றாகச் சுழல விடுவதற்கும் ஒரு இசைத்தட்டின் ஒரு பக்கம் முடிந்ததும் மிகக் குறைந்த அளவு வினாடிகளில் மறுபக்கத்தைத் திருப்பிப் போடுவதற்கும் பயிற்சி எடுக்கலானேன்.

அப்போது வர்த்தகசேவையில் சுகதபால அதிகாரி என்ற மூத்த நிகழ்ச்சி உதவித் தயாரிப்பாளர் இருந்தார். நான் அங்கு சேர்ந்த சமயம் மேற்பார்வையாளராகப் பதவி உயர்வுபெற்றுவிட்ட அவர், தமிழ் சரளமாகப் பேசக்கூடியவர். எமக்கு முன் தமிழ் அறிவிப்பாளர்களின் அபிமானம் பெற்ற தயாரிப்பு உதவியாளர். மிகத் திறமையானவர். அவர் பணியாற்றும்போது பார்ப்பதற்கு மிக இலாவகமாக வேலை செய்வது போலவும் நளினமாகவும் இருக்கும். சில பாடல்கள் நீண்டவையாக இசைத்தட்டின் இருபக்கங்களிலும் பதியப்பட்டிருக்கும். அத்தகைய பாடல்களுக்கு இரண்டு இசைத்தட்டுகளைக் கலையகங்களுக்கு அனுப்பிவைப்பார்கள். முதலாவது இரண்டாவது பக்கங்களை இரண்டு ரேர்ண் டேபிள்களில் ஓடவிட்டு ஒன்று முடிய மற்றயதை ஒருவித இடைவெளியும் தெரியாதவண்ணம் சுழலவிடவேண்டும். சுகதபால அவர்கள் இதை மிகவும் நுணுக்கமாகக் கையாள்வார். உதாரணமாக, சந்ரோதயம் ஒரு பெண்ணானதோ என்ற பாடல் முதலாவது பக்கம் முடிவடையும் போது சுசிலாவின் ஹம்மிங் உடன் முடியும். இரண்டாவது பக்கம் ஆரம்பிக்கும்போது அதே ஹமிங் திரும்பவும் பதிவு செய்யப்பட்டிருக்கும். சுகதபால அவர்கள் இரண்டாவது இசைத்தட்டில் இரண்டாவது பக்கத்தில் இருக்கும் முதல் ஹம்மிங்கைத் தவிர்த்துவிட்டு, இசை தொடங்கும் இடத்திலிருந்து ஆரம்பிப்பார். பாடல் தொடர்ச்சியாக ஒலிப்பது போல் இருக்கும். எவராலும் கண்டுபிடிக்க முடியாது. நிகழ்ச்சி உதவித் தயாரிப்பாளர்கள் இவ்வாறு ஒலிபரப்பை மெருகேற்றலாம். அதுமட்டுமல்ல, இவ்வாறு இரண்டு இசைத்தட்டுகளை வைத்துக்கொண்டு பலவற்றை எமக்குச் செய்து காண்பிப்பார். இரண்டு இசைத்தட்டுகளின் ஒரே பக்கங்களை ஒன்றாகச் சுழலவிட்டு ஒரு இசைத்தட்டை விரலால் தட்டித் தட்டி அதன் வேகத்தை மற்றைய இசைத்தட்டின் வேகத்தோடு அச்சொட்டாக சமமாக ஓடவிட்டு இரண்டு இசைத்தட்டுகளின் ஃபேடர்களையும் திறந்து மூடுவார். எந்த இசைத்தட்டு ஒலிபரப்பாகின்றது என்று சிறிதளவுகூட வித்தியாசம் கண்டுபிடிக்கவே முடியாது. அதேபோல் ஒரு இசைத்தட்டின் வேகத்தை விரலால் தட்டி சிறிது தாமதப்படுத்தி விட்டு இரண்டின் ஃபேடர்களையுமே திறந்தால் எதிரொலியோடு ஒலிப்பதிவு செய்யப் பட்ட பாடல்போன்று கேட்கும். சிலவேளைகளில் இருபக்கப் பாடலுக்கு ஒரு இசைத்தட்டு மட்டுமே இருந்தால் ஒரு பக்கம் முடிந்தவுடன் அடுத்தபக்கத்தை அவர் திருப்பிப் போடும் வேகம் பிரமிக்க வைக்கும். பரிட்சயமில்லாமல் அவ்வாறு செய்யும்போது ரேர்ண் டேபிளின் வேகத்தில் இசைத்தட்டுத் தெறித்து விழுந்து உடைந்துவிடுவதுமுண்டு. இத்தகைய செயற்பாடுகளை நாமும் பழகிக்கொள்வோம். ஹமீட் அறிவிப்பாளராகப் பணியாற்றும் வேளைகளில் இத்தகைய செயற்பாடுகளில் தானும் உற்சாகமாகக் கலந்துகொள்வார்.

பாடல்கள் எவ்வித பிசிறுமின்றி உள்ளது உள்ளபடியே ஒலிக்க வேண்டுமானால் ரேர்ண் ரேபிள்கள் இசைத்தட்டுகளுக்குரிய துல்லியமான வேகத்தில் சுழலவேண்டும். அந்தத் துல்லியம் கலையகத்தில் இருக்கும் அனைத்து ரேர்ண் ரேபிள்களுக்கும் இருக்கவேண்டும். ஏனென்றால் இரண்டு பக்கப் பாடல்களை வெவ்வேறு ரேர்ண் ரேபிள்களில் சுழலவிடும் போது அவை ஒத்த வேகத்தில் இயங்காவிடில் இரண்டாவது பக்கப் பாடல் உள்ள இசைத்தட்டு ஒலிக்கத் தொடங்கும்போது பெருமளவில் வேறுபாடு தெரியும். இதற்கு மிகவும் கண்டிப்பான ஒழுங்கில் பராமரிப்பு வேலைகள் நடக்கவேண்டும். இதற்கென்றே விசேட தொழில்நுட்பவியலாளர்களைக்கொண்ட பராமரிப்புப் பகுதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இயங்கியது. சகல ஒலிபரப்பு உபகரணங்களையும் கலையகங்களையும் பராமரிக்கும் பணி இந்தப் பிரிவினுடையது. ஒரு கிரமமான அட்டவணையில் சகல கலையகங்களும் பராமரிக்கப்படும். அப்போது ரேர்ண் ரேபிள்கள் சுற்றுவதில் தவறிருந்தாலோ அல்லது ஃபேடர்களைத் திறந்து மூடும்போது கரகரப்பான ஒலி எழுந்தாலோ (cracking sound) அவையெல்லாம் சீர்செய்யப்படும். நிகழ்ச்சி உதவித் தயாரிப்பாளர்கள் பணியாற்றும்போது மேற்கூறிய குறைபாடுகளை அவதானித்துப் பதிவுப் புத்தகத்தில் எழுதினால் பராமரிப்பு அட்டவணைப்படி அந்தக் கலையகத்தில் அன்று பராமரிப்பு வேலை இல்லாவிட்டாலும்கூட தொழில்நுட்பவியலாளர்கள் உடனடியாகவே அவற்றைச் சரிசெய்துவிடுவார்கள். ஒலிபரப்பப்படும் ஒலி எந்தவித இடையூறுமின்றித் துல்லியமானதாகவும் தரமானதாகவும் இருக்கவேண்டுமென்ற நிலைப்பாடு மிகவும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டது. அது இசையாக இருந்தாலென்ன அறிவிப்பாக இருந்தாலென்ன சரியான ஒலி ஒலிபரப்பப்படவேண்டுமென்பதே நோக்கம். இதனால் அங்கு ஒலிபரப்பில் நேரடியாக ஈடுபடும் அநேகமானவர்கள் ஒலி பற்றிய உணர்வு நிறைந்தவர்களாக இருந்தார்கள். ஒலியில் இம்மியளவு வித்தியாசமோ குறையோ இருந்தால்கூட அவற்றைக் கவனிக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். இந்த ஒலி உணர்வுதான் சிறந்த வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களை உருவாக்குகிறது. இந்த உணர்வில் ஒவ்வொரு ஒலிபரப்பாளருக்கும் உள்ள வேறுபாடு அவரவர் நிகழ்ச்சிகளில் பிரதிபலிக்கும்.

இலங்கை வானொலியில் ஒலிபரப்போடு நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு அடிக்கடி பயிற்சிகள் வழங்கப்படுவது வழக்கம். இதற்காகவே அங்கு பயிற்சிப் பிரிவொன்று இயங்குகிறது. இந்தப் பிரிவு 1960களின் பிற்பகுதியில் ஸ்ருவார்ட் வேவல் என்ற BBCயின் ஒலிபரப்பு நிபுணரால் ஆரம்பிக்கப்பட்டது. நான் வேலைக்குச் சேர்ந்த பொழுது அவர் அதன் பணிப்பாளர். ஈ.கே. பெரேரா என்பவர் அதன் மேலதிக பணிப்பாளராக இருந்தார். மிகவும் பிரசித்தி பெற்ற வானொலிப் பயிற்சியாளரான சீ.வீ. இராஜசுந்தரம் அவர்கள் அந்தப் பிரிவின் உதவிப் பணிப்பாளராகச் செயலாற்றினார். அங்கே கிரமமாகப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஒலிபரப்பாளர்கள் தமது அன்றாடப் பணிகளிலிருந்து விடுவிக்கப்பட்டு இத்தகைய பயிற்சி நெறிகளுக்கு அவ்வப்போது அனுப்பப்படுவார்கள். அப்படி நான் சென்ற பயிற்சிநெறியொன்றின் போது, பயிற்சியின் இறுதியில் நான் தயாரித்த உரைச்சித்திரமொன்றைக் கேட்பதற்குப் பயிற்சி நெறியை நடத்திய அதிகாரிகள் தயாராக அமர்ந்திருந்தார்கள். அவர்களுள் சீ.வீ.இராஜசுந்தரமும் ஒருவர். அவர் சாதாரணமாக நிகழ்ச்சிகளைக் கேட்கும்போது கண்களை முடிக்கொண்டே கேட்பது வழக்கம். எனது நிகழ்ச்சி ஆரம்பமாகிப் போய்க்

தொடர்தல் 84ம் பக்கம்



ஒலிபரப்புப் பயிற்சியாளர் சி.வி. ராஜசுந்தரம் அவர்களுடன் வீ.என். மதியழகனும் நானும் கனடாவில்.



# நேரமும் நம்பகத்...

83ம் பக்கத் தொடர்ச்சி...

கொண்டிருந்தபோது திடீரென மிகவும் சிறிதாக டுக்டுக் என்ற ஒரு சத்தம் கேட்கத் தொடங்கியது. இராஜசுந்தரம் அவர்கள் மிகவும் சினம்கொண்டவராகக் கண்களைத் திறந்து "என்னது... பின்னணியில் ஒரு சத்தம்" என்று கோபத்துடன் கேட்டார். நான் அந்த உரைச்சித்திரத்தின் பின்னணி இசையாக ஒரு இசைத்தட்டிலிருந்த இசையைப் பதித்திருந்தேன். மிக மிகக் குறைந்த தொனியில்தான் அந்த இசை இருந்தது. ஆனால் இசைத்தட்டில் சிறு கீறல் இருந்ததை தயாரிப்பின்போது அவசரத்தில் நான் கவனிக்கவில்லை. இப்போது எல்லோரும் அமைதியாக இருந்து உரத்ததொனியில் கேட்டபோது இசைத்தட்டின் வெட்டில் ஊசி விழுந்து எழும் சத்தம் ஒரு சீரான தாளகதியில் கேட்டுக் கொண்டிருந்தது. இராஜசுந்தரம் அவர்களுக்குப் பயங்கரக் கோபம். நிகழ்ச்சியை உடனடியாக நிறுத்தச்சொன்னார். "I thought you are a perfectionist - நீ சகலவற்றையும் நேர்த்தியாகச் செய்பவனென்று நினைத்திருந்தேன்" என்று கோபமாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். எனக்குப் பயங்கரமான குற்றம் செய்துவிட்டதைப் போன்ற உணர்வு. எனது திறமைக்கு ஏற்பட்ட களங்கமாகக் கருதி மிகவும் சங்கடப்பட்டேன். இதை நான் சொல்வதன் காரணம், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் அப் போது ஒலி பற்றி மிகுந்த கரிசனை காட்டப்பட்டது. அந்த உணர்வு எமக்கு வலியுறுத்திப் புகட்டப்பட்டது. ஒலியில் ஒரு சிறு குறை பாடிருந்தாலும் அது பாரதூரமானதாகக் கருதப்பட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மக்கள் தம்மால் செய்யமுடியாதது என்று கருதுபவற்றின்மீதுதான் பிரமிப்பும் மரியாதையும் அபிமானமும் கொண்டிருப்பார்கள். ஒலிபரப்பு எந்தத் தவறுமில்லாது நேர்த்தியாகப் பேணப்படும் போதுதான் மக்கள் அவ்வொலிபரப்பிற்கு மதிப்பளிப்பார்கள். நேர்த்தி(perfection) என்ற சொல் எமது பயிற்சிகளின்போது பெரிதும் பயன்படுத்தப்பட்டது.

ஒலி உணர்வுடன் எமக்கு ஊட்டப்பட்ட மற்றுமொரு பிரதான உணர்வு நேரம்பற்றியது. ஒலிபரப்பில் நேரம் என்பது மிக மிக முக்கியமானதோர் அம்சம். எமது பயிற்சிகளின்போது முதலில் வலியுறுத்தப்படும் விடயம் இதுதான். காலஞ்சென்ற பிரபல சிங்கள ஒலிபரப்பாளரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகமாகப் பதவி வகிக்கும் போது சுட்டுக் கொல்லப்பட்டவருமான தேமிஸ் குருகே அவர்கள், எமது ஆரம்பப் பயிற்சியின்போது "ஆறு மணி என்பது, ஐந்து மணி ஐம்பத்தொன்பது நிமிஷம் ஐம்பது விநாடிகளோ அல்லது ஆறுமணி ஐந்து வினாடிகளோ அல்ல. ஆறு மணியென்பது ஆறு மணிதான்" என்று சொன்னது எனக்கு இப்போதும் நினைவிருக்கிறது. ஒலிபரப்பில் சரியான நேரத்தை அச் சொட்டாகப் பின்பற்றுவதற்கு மிகுந்த பிரயாசை மேற்கொள்ளப்பட்டது. கலையகங்களிலிருந்து ஒலிபரப்பு ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னரே மேற்பார்வையாளர்கள் ஒவ்வொரு கலையகத்திலிருந்தும் ற்றோண் (tone) என்று சொல்லப்படுகின்ற ஒருவித விசில் சத்தத்தைப் பிரதான கட்டுப்பாட்டறையினூடாக (master control room)வானலைகளுக்கு அனுப்புவார்கள். அத்தோடு பிரதான கட்டுப்பாட்டறையிலுள்ள மணிக்கூடு காட்டும் நேரத்தோடு கலையகங்களிலுள்ள மணிக்கூடுகள் காட்டும் நேரங்கள் ஒத்துப்போகின்றனவா என்பதை நிச்சயப்படுத்தும் நடவடிக்கையையும் மேற்கொண்டு கலையகங்களை ஒலிபரப்புக்குத் தயார்நிலையில் வைத்திருப்பார்கள். பிரதான கட்டுப்பாட்டறையிலுள்ள கடிகாரத்தின் நேரம் அங்கேயுள்ள க்றீன்விச் நேரத்தைக் காட்டும் கடிகாரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும் ஒன் த டொற் (on the dot) என்று சொல்லப்படும் அச்சொட்டான நேரக் கணக்கில் இடம்பெறும். பிப்ஸ் (pips) எனப்படும் செக்கனுக்கு ஒன்றாக ஒலிக்கும் ஆறு பிப்ஸ் ஓசைகளைக் கேட்டிருப்பீர்கள். இதுதான் நேரத்தைப் பேணும் பிரதான ஒலி. இந்த ஒலியைத் தொடர்ந்து அறிவிப்பாளர் நேரத்தைச்சொன்னால் அச்சொட்டான நேரத்தில் நிகழ்ச்சி ஆரம்பிக்கிறது என்று அர்த்தம். குறிப்பாக, காலை 6.30 செய்திகளை எடுத்துக்கொண்டால், காலை ஆறுமணி இருபத்தொன்பது நிமிடம் முப்பது விநாடிகளில் குறியிசை ஒலிபரப்பப்படும். அது ஆறுமணி இருபத்தொன்பது நிமிடம் ஐம்பத்தினான்கு விநாடிகளில் முடிவடைய, தொடர்ந்து ஒரு விநாடிக்கு ஒன்றாக ஆறு பிப்ஸ் ஒலித்து முடிய அறிவிப்பாளர் "நேரம் ஆறு மணி முப்பது நிமிடம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், செய்திகள், வாசிப்பவர் ..."என்று தொடங்குவார். எப்போதும் செய்திகளுக்கு நேரத்தை முன்னிறுத்தியே அறிவிப்பு மேற்கொள்ளப்படவேண்டுமென்று எமக்குப் பயிற்றுவிக்கப்பட்டது. இப்போதும் கடைப்பிடிக்கப்படுமென்றே நினைக்கிறேன். மற்றைய நிகழ்ச்சிகள் குறித்த நேரத்திற்குத் தொடங்குவதை உறுதிப்படுத்துவதற்காக அந்த நிகழ்ச்சிகான அறிவிப்புகள், "இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சேவை இரண்டு, நேரம் ஏழு மணி" என்று சொன்னவுடன் நிகழ்ச்சியின் குறியிசை ஆரம்பமாகும். இப்படி நேரத்தைக் குறிப்பிடுவது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

நான் அறிந்தவரையில் இந்திய ஒலிபரப்பில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைப் போல் நேரத்தை அவ்வளவு இறுக்கமாகப் பின்பற்றுவதில்லையென்றே கருதுகிறேன். நான் சிறுவனாக இந்திய வானொலிச் சேவைகளைக் கேட்டபோது பிராந்திய நிலையங்களிலிருந்து, "இப்போது டெல்லியிலிருந்து ஆகாசவாணியின் செய்திகள் ஒலிபரப்பாகும்" என்று அறிவிப்பாளர் அறிவித்தவுடன் நீண்ட சில கணங்கள் நிசப்தம் நிலவும். அதன்பின்னர் கறபுற என்ற சத்தத்துடன் கலந்து "ஆகாசவாணி, செய்திகள், வாசிப்பது ..." என்ற அறிவிப்புடன் செய்திகள் ஆரம்பமாகும்.

இவ்விடத்தில் செய்திகளின்போது இந்த பிப்ஸின் அவசியம்பற்றி எமது பயிற்சிகளின்போது கூறப்பட்ட ஒருவிடயத்தைக் கூறலாமென்று நினைக்கிறேன். உண்மையில் செய்திகள் என்பது பரபரப்பும் எதிர்பார்ப்பும் நிறைந்த ஒரு நிகழ்ச்சி. எனவே, எப்போதும் நிலையத்தின் செய்திகள் தொடங்கும் போது ஒரு நிசப்த நிலையைப் பேணுவது செய்திகளின்மீது எதிர்பார்ப்பைக் கூட்டும் நடவடிக்கை என்று கருதப்படுகிறது. இதன்காரணமாகத்தான் ஆகாசவாணிச் செய்திகளுக்கு முன்னர் நிசப்தம் நிலவுகிறது என்றுகூட எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அப்படி நிசப்தமாக விடாமல் BBC யைப் பின்பற்றி, வினாடிக்கு ஒரு பிப்பாகப் போடும்போது எதிர்பார்ப்பில் ஏற்படும் நெஞ்சத்துடிப்பை கூட்டுகிறது என்று எமக்குப் பயிற்சியளித்த விற்பன்னர் ஒருவர் சொல்லியிருக்கிறார். போட்டிகளில் இறுதி வெற்றியாளரை அறிவிக்க முன் பத்து வினாடிகளை மேலிருந்து கீளாக எண்ணுவது போல்(Countdown). முன்பு ஆறு பிப்ஸூம் ஒரேமாதிரி ஒலித்தன. பின்னர் கடைசிப் பிப்பை சிறிது நீட்டி ஒலித்து பிப்ஸின் முடிவைக் காட்டுவதாகச் செய்திருந்தார்கள். இது 1972ம் ஆண்டிலிருந்து பிபிசியில் நடைமுறைக்கு வந்தது. இலங்கையில் இப்போது அது இருக்குமென்று நினைக்கிறேன்.

இலங்கை ஒலிபரப்பின் ஆசிய சேவைகளில் பிபிசியின் ஆங்கில மற்றும் ஹிந்திச் செய்திகளை இணைக்கும்பொழுது எமது செய்திக்கான குறியிசையை ஒலிபரப்பி தொடர்ந்து ஆறு பிப்ஸ் ஒலித்து முடிந்ததும் அடுத்த கணமே 'திஸ் இஸ் BBC வேர்ல்ட் சேர்விஸ்' என்று அறிவிப்புத் தொடங்கும். ஒரு சிறிய இடைவெளி கூட இருக்காது. அது சர்வதேச ஒலிபரப்பு என்பதால் பிபிசியின் உலக சேவைச் செய்திகளை பல நாடுகளிலுமுள்ள ஒலிபரப்பு நிலையங்கள் ஒரே நேரத்தில் ஒலிபரப்புவதால் பிபிசியிலிருந்து நேரம் அறிவிக்கப்படுவதில்லை.

வர்த்தக சேவையில் அறிவிப்பாளர்கள் அடிக்கடி நேரத்தை அறிவித்துக் கொண்டே இருப்பார்கள். முன்பு அவர்களது மேசையில் கொங் (gong) என்ற இனிமையான மணியோசை எழுப்பக்கூடிய ஒரு கருவி இருக்கும். அதன்மீது இறப்பர் முனைகொண்ட குச்சியால் தட்டும்போது அழகான ஒலி எழும். அதைத் தட்டிவிட்டு நேரத்தை அறிவிப்பார்கள். ஒவ்வொரு அறிவிப்பாளரும் தமக்குரிய பாணியில் தட்டி இசை எழுப்புவார்கள். குறிப்பாக ரைம் செக் (time check) என்று சொல்லப்படுகின்ற விளம்பர அறிவிப்புகளின்போது "இது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், வர்த்தக சேவை" என்று சொல்லிவிட்டு, இந்த மணியோசையை எழுப்பி, "நெஸ்டோமோல்ற் நேரம் சரியாக ஆறுமணி" என்று சொல்வார்கள். இது கட்டணம் கூடிய விளம்பரமாகும்.

இப்படி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேரத்தை முன்னிலைப்படுத்துவதால் அதைக் கடைப்பிடிப்பதற்கு மிகுந்த பிரயாசை மேற்கொள்ளப்படுகிறது. ஒலிபரப்பாளர்கள் எந்தவிதத்திலும் நேரத்தைத் தவறவிட்டுவிடக்கூடாதென்பதற்காக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சகல இடங்களிலும் சுவர்களில் பெரிய கடிகாரங்கள் பதிக்கப்பட்டிருக்கும். இவை அனைத்தும் பிரதான கட்டுப்பாட்டறையிலுள்ள கடிகாரத்துடன் ஒத்திசைவுடன் இயங்குகின்றனவா என்பதைச் சரிபார்த்துப் பராமரிப்பதற்கு ஓர் அலுவலர் நியமிக்கப்பட்டிருப்பார். அவர் ஒரு சிறிய ஏணியும் கட்டுப்பாட்டறையிலுள்ள கடிகாரத்துடன் ஒத்து ஓடும் நிறுத்தற் கடிகாரம் (stop watch) ஒன்றையும் வைத்துக்கொண்டு, எல்லாக் கடிகாரங்களும் துல்லியமாக ஒரே நேரத்தைக் காட்டும்வகையில் பராமரிப்பார். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் எந்த மூலையில் இருப்பவரும் நேரத்தைத் தவற விட்டுவிட்டேன் என்று சாட்டுச் சொல்ல முடியாது.

ஒலிபரப்பில் நேரத்தைக் கண்டிப்புடன் கடைப்பிடிப்பது மக்களிடையே அதற்குரிய நம்பகத் தன்மையைப் பேணும் நடவடிக்கைகளில் ஒன்று. சிறந்த தொழில் முறை ஒலி, ஒளிபரப்பு நிலையங்களில் இது இன்றும் கடைப்பிடிக்கப்படுகிறது. சீஎன்என் ஒளிபரப்பில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் குறிப்பிட்ட நேரத்தில் அச்சொட்டாகத் தொடங்குவதை நீங்கள் அவதானிக்கலாம்.

நேரத்தைச் சரிவரக் கடைப்பிடிப்பது ஒலிபரப்பாளர்களுக்குக் காலப்போக்கில் அவர்களின் இயல்பாக மாறிவிடுகின்றது. இவர்களுக்கு நேரத்தைப்பற்றிய எந்தவித உணர்வுமில்லாத சிலருடன் சேர்ந்து எதிலும் ஈடுபடுவது இயலாத காரியமாகப் போய்விடுகிறது. இதை நான் கனடாவில் அதிகமாக உணர்கிறேன்.

எனது கடுமையான பயிற்சியும் முயற்சிகளும் 1970ம் ஆண்டு ஃபெப்ரவரி மாதத்தில் பணிக்குச் சேர்ந்த என்னை அந்த வருடம் முடிவடைவதற்குள்ளேயே அனைவரது கவனத்தையும் பெற்றவனாக உருவாக்கிய விதத்தைத் தொடர்ந்து விபரிப்பேன்.

தொடரும்....



wikneswaran.p@thaiveedu.com

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான*
*பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 416-849-0594 Tel: 416-646-3422***

www.inayam.net
தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்

இணையம்
inayam.net
முற்றிலும் இலவசம்
inayam


SECOND INTERNATIONAL CONFERENCE
OTTAWA 2018
TAMIL NATIONHOOD AND
GENOCIDE IN SRILANKA
MAY 5 6 & 7 2018
OTTAWA
SEARCH FOR JUSTICE &
POST-WAR REBUILDING OF TAMIL NATION
Over 20+ World Renowned Academics Present Research Papers..
SUPPORTING ACADEMIC INSTITUTIONS
Carleton University - Faculty of Arts and Social Sciences, Colin Powell School for Civil and Global Leadership -
City College, New York, York University - The School of Arts.
SUPPORTING TAMIL STUDENT UNIONS
Wilfrid Laurier Tamil Student Association and
தமிழர் தேசமும் சிறிலங்காவின் தமிழ் இனப்படுகொலையும் 2ம் சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்ள
647 243 9396 இற்கு அழையுங்கள் அல்லது www.tamilconferences.org
இணையத்தில் பதிவு செய்யுங்கள்.
Largely Supported by Many Tamil Associations
and Community Organizations.
https://www.gofundme.com/OttawaTamilConference
https://www.facebook.com/tamilconferences


SECOND INTERNATIONAL CONFERENCE
OTTAWA 2018



# நினைவிலி

ஒளித்து வைத்திருந்த கூடம் ஒரு சற்சதுரக் கட்டிடம்.(தெருவோரம், சற்சதுரக் காணி நிலத்தில் ஒரு வீடும் வளவும் சீதன-மாக வேண்டும் என நானும் நீயும் பலரும் வலிந்து கேட்டதை இப்போது மறந்து விடுவோம்.)

யன்னல் இல்லை. ஒரு துளி வானம் இல்லை.மழைக்கும் இடிக்கும் மின்னலுக்கும் கட்டிடம் அதிர்ந்ததாக ஒரு குறிப்பு இல்லை. அது பற்றிய நினைவு இல்லை. காவல் படையாளின் சிங்களம் விளங்கவில்லை என்று அவளுக்குத் திருப்பிச் சொன்னால் அதற்குப் பதிலாக அவள் தனக்குத் தெரிந்த எல்லாத் தமிழ்க் கெட்ட வார்த்தைகளையும் ஏவுகணைகளாக எறிகிறாள்.அவள் சொல்லாட்சியில் எனது கவிதை நேரே கல்லறைக்குப் போகிறது.அவளுக்கு ஒருமை, பன்மை,ஆண்பால், பெண்பால்,பலர்பால் என எதுவுமே தெரியாது என்பதில் வியப்பு இல்லை. அவள் யார் பால் என்பது சொல்லித் தெரிகிற சூத்திரமும் அல்ல.

எங்களுக்கு முன்னே எங்கள் உணவுத் தட்டில் சிறுநீர் கழிக்கிறாள். குழம்பும் சொதியும் இன்னும் நீராலாகின.அதனைத் தின்னா விட்டால் உக்கிய இரும்புக் கம்பியால் அடிப்பர் எனத் தெரிந்தும் உணவுத் தட்டின் மீது காறி உமிழ்கிறேன். முட்டாள்தனமும் அகங்காரமும் உணர்ச்சிப் புயலும் சேர்ந்த கொண்டாடப்படாத மாவீரம் இதுவும்தான் என்பது தெரிந்ததே.

இருந்தாலும் இது அவலச்சிறை.சுரிசேறு அல்ல தாமரை மலர்வதற்கு.
நினை.
நினைவிலிக்கு வாழ்வில்லை.

**- சேரன்**
(மே, 2018)

படங்கள்: பிரியா தர்மசீலன், மருத்துவர் வரதராஜா, மருத்துவர் சிவதாஸ்

## மே மாதம், 2009:

# துண்டிக்கப்பட்ட கால்

மருத்துவர் துரைராஜா வரதராஜா, திருகோணமலை மாவட்டம், தம்பலகாமத்தில் பிறந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மருத்துவப் படிப்பை மேற்கொண்டு 2004இல் மருத்துவராகப் பணியாற்றத் தொடங்கினார். குருநாகல், அம்பாறை, மூதூர் மருத்துவமனைகளில் மருத்துவமனைகளில் பணியாற்றியவர்.

2006 ஜூன் மாதம் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் சிதைய ஆரம்பித்தபோது மூதூர் பகுதியில் மிகுந்த சிக்கல்களுக்கு மத்தியில் பணியாற்ற நேர்ந்தது. 2006 ஓகஸ்ட் மாதம் மாவிலா றில் ஏற்பட்ட சிக்கல் முழுமையான போராக வெடித்தபோது எழு பதாயிரம் மக்களோடு வாகரைக்கு இடம் பெயர்ந்தார். அச் சூழலில் அங்கு பணிபுரிந்த ஒரேயொரு மருத்துவர் வரதராஜா அவர்கள்தான். பிற்பாடு, 2007 ஜனவரி மாதம் மட்டக்களப்புக்கு இடம் பெயர்ந்தார். 2007 பெப்ரவரி மாதம் முல்லைத்தீவுக்கு சென்று அங்கே மருத்துவமனையில் பணி யாற்றத் துவங்கினார். அன்றிலிருந்து 2009 மே 15 அன்று ஷெல்லடியால் காயப்படும் வரை முள்ளிவாய்க்கால் உட்பட எல்லா இடங்களிலும் பணி யாற்றினார்.

காயத்தால் வலது கையும் வயிறும் பாதிக்கப்பட்ட நிலையிலும் இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்டுத் துன்புறுத்தப் பட்டார். 2011 செப்ரெம்பர் மாதம் இலங்கையை விட்டு வெளி-யேறினார். இப்போது அமெரிக்காவில் வாழ்கிறார். போரின் அகோ ரமான இறுதிக் கணங்களில் மானுட அவலத்தையும் இனப் படுகொலையையும் குருதியும் தசையும் ஆற்றொணா வலியுமாக உணர்ந்தவர் மருத்துவர் வரதராஜா.

தனது அனுபவங்களை விரிவாக அவர் எழுதியுள்ள நூல் வெளி வர இருக்கிறது. அந்த நூலில் இருந்து சில பகுதிளை அவரி டம் அனுமதி பெற்று நன்றியுடன் பிரசுரிக்கிறோம்.

**துரைராஜா வரதராஜா**

வழமை போலவே அன்றும் எங்கள் புது-மாத்தளன் வைத்தியசாலை மிகவும் பரப ரப்பாகவே இயங்கிக்கொண்டிருந்தது. இராணுவத்தின் செறிவான எறிகணை வீச்சிலும் விமானத்தாக்குதலிலும் காயம-டைந்தவர்களால் வைத்தியசாலை நிரம்பி வழிந்தது. வெளிநோயாளர்கள் பிரிவில் மருந்து எடுப்பதற்காக நூற்றுக்கணக்கான நோயாளர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். காயமடைந்து வந்தவர்களுக்கு ஆரம்ப கட்ட சிகிச்சை அளிக்கும் இடம் அந்தப் பெரிய புளியமரம்தான். அதன் கீழ், காயப்பட்டவர்களைத் தொடர்ச்சியாக இறக் கிக்கொண்டிருந்தார்கள்.

மரத்தின் கிளைகளில் சேலைன் போத்-தல்கள் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. குருதி வெளியேறுவதை தடுக்க மருத்து வப் பஞ்சுகள் இல்லாததால் போர்வை, சாரம், சேலை என எனமக்குக் கிடைத்த எல்லத் துண்டு, துணிகளையும் பாவிக்க நேர்ந்தது. ஏற்கனவே இறந்தவர்களையும் எங்கள் வைத்தியசாலை மூலையில் இருந்த மரத்தின் கீழ் கிடத்திக்கொண்டி ருந்தனர். கைகள் இல்லாமலும் கால்கள் இல்லாமலும் வயிறு கிழிந்தும் இறந்து போனவர்கள் எல்லாம் விறகுக் கட்டை கள் போல அடுக்கப்பட்டிருந்தார்கள். இறந்தவர்களின் உடல்களை எடுத்துச் சென்று அடக்கம் செய்ய முடியாத சூழ்-நிலையால் இறந்தவர்களின் உடல்களை வைத்தியசாலையில் விட்டுவிட்டு கனத்த மனத்துடன் அழுதவாறே செல்கின்றனர் உறவினர்கள்.

திட்டுத்திட்டாகச் செங்குருதித்துளிகளால் சிவந்துபோன எங்கள் வைத்தியசாலை-யெங்கும் மெல்லிய அழுகுரல்களும் வலி யால் துடிப்போரின் முனகல் சத்தங்க ளும் இடைவிடாமல் கேட்டுக்கொண்டே இருந்தன.

நானும் மருத்துவர் சத்தியமூர்த்தியும் அடுத்த நாள் வரவிருந்த சர்வதேசச் செஞ் சிலுவை கப்பல் மூலம் நோயாளர்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகளையும் மருத்துவமனை சார்ந்த மற்றைய வேலை களையும் செய்து கொண்டிருந்தோம்.

மருத்துவர் கதிர் செல்வனும் அவருடன் நின்ற வேறு சில வைத்தியர்களும் ஊழி-யர்களும் தொடர்ந்தும் அறுவைச் சிகிச் சைகளைச் செய்துகொண்டே இருந்தனர். அறுவைச் சிகிச்சைக் கூடமாக செயற் பட்ட புதுமாத்தளன் பாடசாலைக் கட்டடம் குருதியாலும் காயமடைந்தவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யும்போது சித றிய சிறிய சிறிய தசைத் துண்டங்களா லும் இறைச்சிகடை போலவே இருந்தது. மூலையில் இருந்த பெரிய பிளாஸ்டிக் வாளிக்குள் வெட்டியகற்றப்பட்ட கைக ளும் கால்களும் கிடந்தன.

உணவையும் நித்திரையையும் மறந்து எம்மக்களுக்கு சேவைசெய்து கொண்டி ருந்த வைத்தியர்களும் ஊழியர்களும் ஒருபுறம், தங்கள் உறவினர்களை எப்படி யாவது காப்பாற்றுங்கள் என்று கதறி அழும் மக்கள் ஒருபுறம், அவலங்களின் உயிர்ச் சாட்சியாகவும் உயிரற்ற சாட்சி யாகவும் எங்கள் வைத்தியசாலை காட்சி-யளித்தது.

இப்படி பரபரப்பாக இயங்கிக்கொண்டி ருந்த அறுவைச் சிகிச்சைக் கூடத்தில் இருந்த அனைவரும் பெரும் பதைபதைப்-போடு திடீரென வெளியில் ஓடிவர, வைத் தியசாலை எங்கும் வழமைக்கு மாறான ஒரு பதைபதைப்பு தொற்றிக்கொள்கிறது. என்னவென்று விளங்கிக்கொள்ள முடியாத அச்ச உணர்வும் பீதியும் எல்லோர் முகம்களிலும் தெரிந்தது. என்ன நடந்தது என்பத்கை அறிய உள்ளே சென்றேன்.

காயமடைந்து கொண்டுவரப்பட்டவர்களில் ஒருவர் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி. அவரின் வலது காலின் முழங்காலுக்கு சற்று கீழாக பெரிய ஒரு காயம். தோலும் கிழிந்த சதைத்துண்டுக ளும் தொங்கிக்கொண்டும், குருதி வழிந்து கொண்டும் இருந்த அவரில் காலின் காயத்தினுள்ளே ஏதேனும் இருக்கும் என்று எவரும் ஊகிக்கவில்லை. அவரின் காலுக்குள் ஏதும் இருப்பதற்கான அறி குறிகளும் முதலில் தென்படவில்லை. அதனால் மருதுவர்கள் அவரின் காலுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய அவருக்கும் மயக்கமருந்தை வழங்கிவிட்டு காயத்தை சுத்தம் செய்யும் போது தான் அவரின் காலுக்குள் ஒரு சிறிய பேணி போல எதோ ஒன்று இருப்பதை கண்டனர். பின்பு நன்கு உற்றுப்பார்த்த பின்பு, அது கொத்துக் கொத்தாக வீசப்பட்ட கொத்துக்குண்டின் ஒரு வெடிக்காத குண்டென்று அறிந்து கொண்டனர். அது தட்டுப்பட்டால் எந்த நேரத்திலும் வெடித்துவிடலாம் என்று அறிந்ததும் அனைவருக்கும் பயம் தொற றிக்கொள்கிறது.



**“அவரின் காலுக்குள் ஏதும் இருப்பதற்கான அறிகுறிகளும் முதலில் தென்படவில்லை. அதனால் மருதுவர்கள் அவரின் காலுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய அவருக்கும் மயக்கமருந்தை வழங்கிவிட்டு காயத்தை சுத்தம் செய்யும் போது தான் அவரின் காலுக்குள் ஒரு சிறிய பேணி போல எதோ ஒன்று இருப்பதை கண்டனர்”**

அது வெடித்தால் அங்கு இரவுபகலாக தங்களை அர்ப்பணித்துச் சேவை செய்து கொண்டிருந்த அனைவரும் இறக்கலாம் அல்லது காயமடையலாம் என்ற நிலை. அந்த பெண்ணும் உடல் சிதறி பலியா கிப்போகலாம்.

அறுவைச் சிகிச்சை கூடத்தை விட்டு அவசரமாக அனைவரும் வெளியில் வந்த தாலும், எவ்வாறு இந்தச் சவாலைச் சமா ளிப்பது என்று அனைவரின் மூளையும் வேலை செய்தது. அந்த நேரத்தில் அங்கு தொண்டராக பணிபுரிந்த இளம் பெண் ஊழியர் ஒருவர்தான் காயமடைந்தவரின் காலை குண்டு இருக்கும் இடத்தில் கை வைக்காமல் முழங்காலுக்கு மேலே வெட்டி அகற்றுவோமா என்று கேட்டார். அதுதான் சரியான யோசனையாகப்பட அநியாயமாக அவரின் கால் முழங்கா லுக்கு மேலாக வெட்டியகற்றப்பட்டது. வெட்டியகற்றப்பட்ட அந்த காலை எதிலும் முட்டுப்படாமலும் கீழே வைக்காமலும் அப்படியே வாகனத்தில் எடுத்துச்சென்று மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதியில் போட்டு விட்டு வந்தனர் எங்கள் சக ஊழியர்கள்.

எல்லோர் மனதிலும் என்றுமே மறக்கமுடித்த சம்பவமாக இது பதிந்து விடடது.

பின்பும் தொடர்ந்தும் வழமைபோல பர-பரப்பாக இயங்கிக்கொண்டே இருந்தது எங்கள் புதுமாத்தளன் வைத்தியசாலை.

### ஓகஸ்ட் 2006: வாகரை:

மிகவும் வேகமாக வைத்தியசாலைக்குள் நுழைந்தத்தது அந்த ஹண்டர் ரக வாக னம். இருள் சூழ தொடங்கி கிட்டத்தட்ட 6.30மணி இருக்கும். விடுதியில் இருந்த என் அமைதியை குலைத்தது அந்த வாகனச்சத்தம். அத்துடன் பெரிய அழு குரல் சத்தமும் அவலச்சத்தமும் ஒருங்கே எழ அவசரமாய் வைத்தியசாலைக்குள் விரைந்தேன். வாகனத்தை எட்டிப்பார்த் தேன். இரத்தவெள்ளத்தில் பலர் முனகிக் கொண்டும் வலியால் துடித்துக்கொண்டும் இருந்தனர். சுமார் 15 பேர் இருக்கும். அவர்களில் ஒருவர் சிங்களத்தில், “சுடா-தீங்க சுடாதீங்க” என்று திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருந்தார்.

வீதி திருத்தத்தில் ஈடுபட்ட ஹண்டர் வாக னத்தையும் சிங்களத்தில் கதைத்ததையும் வைத்து, வீதி திருத்த வந்த சிங்களவர் கள் காயமடைந்து விட்டார்கள் என்றே எண்ணினேன். வைத்தியசாலை ஊழியர்க ளும் வாகனத்தில் வந்தவர்களும் வாக-னத்தில் கொண்டு வந்தவர்களை இறக்கத் தொடங்கினர். அவர்களில் ஒருவர் பெரிய காயங்கள் எதுவும் இல்லாது அசைவற் றுக் கிடந்தார். அவர் இறந்து விட்டார் என்பதை உறுதிப்படுத்திய பின்பு காயத்தை தேடினேன். தலையின் பின்புறத்தில் இருந்த ஒரு சிறிய காயம் அவர் உயி-ரைக் குடித்ததை அறிந்து கொண்டேன். அவர் மூதூர் நீதிமன்றத்தில் வேலை செய்த ரவி என்று பின்னர் அறியக்கிடைத் தது. அவருக்கு அருகே மண்டையோடு இல்லாது மூளை வெளியில் தெரிந்த வண்ணம் ஒருவர் உயிருக்காக போராடிக் கொண்டிருந்தார். அவரின் கைகளிலும் காயங்களிருந்தன. தொடர்ந்தும் சிங்களத் தில் சுடாதீங்க சுடாதீங்க என்று சொல் லிக்கொண்டே இருந்தார். தலைக்காயம் என்பதால் சில மணிநேரத்தில் இறந்து விடுவார் என்று எண்ணினேன். எனவே, அவருக்கு சிகிச்சை செய்து, அன்றைய அவசர நிலையில் எனது நேரத்தை வீணாக்காமல் மற்றைய காயமடைந்தவர் களைக் கவனிக்கத் தொடங்கினேன். ஆனால், சிறிது நேரத்தில் சிங்களத்தில் கதைத்த அவர் தமிழ் பழைய பாடல்

தொடர்தல் 88ம் பக்கம்

# துண்டிக்கப்பட்ட...

87ம் பக்கத் தொடர்ச்சி...

களைச் சீராக பாடத்தொடங்கினார். அப்பொழுது அங்கு வந்த எங்கள் அம்புலன்ஸ் சாரதி நந்தன், காயமடைந்தவர் மூதூர் அம்புலன்ஸ் சாரதி அர்ச்சனா என்று அடையாளம் கண்டார்.

பின்புதான் அறிந்து கொண்டோம், மூதூர் பகுதியை தமிழீழ விடுதலைப்புலிகள் கைப்பற்ற சண்டையிட்ட போது, உயிருக்கு பயந்த மூதூர் வைத்தியசாலை ஊழியர்கள் (தமிழ், சிங்கள, முஸ்லீம்) இரண்டு அம்புலன்ஸ் மூலம் திருகோணமலைக்கு சென்று கொண்டு இருந்தபோது, விடுதலைப்புலிகளின் தாக்குதலில் இருந்து தப்பிப் பின்வாங்கிய இராணுவத்தினர் சற்று மறைவான இடத்தில் இருந்து மேலே வெடிவைத்து ஆம்புலன்ஸை நிறுத்தச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அந்த வேட்டோசை தங்களை நிறுத்தச் சொல்லியா அல்லது சண்டையின் சத்தமா என்று குழம்பிய அர்ச்சனாவுக்கும் கணேஷ் என்கிற மற்றைய அம்புலன்ஸ் சாரதிக்கும், ஆம்புலன்ஸை நிறுத்தினால் தமிழ் ஊழியர்களை இராணுவம் சுட்டுக்கொல்லக் கூடும் என்ற பயத்தினால் ஆம்புலன்ஸை நிறுத்தாமல் ஓடிக்கொண்டு வர, இராணுவத்தினர் ஆம்புலன்ஸை நோக்கி சரமாரியாக சுடத் தொடங்கினர். அம்புலன்சிற்கு சுடப்படுவதை அறிந்த அர்ச்சனா சிங்களத்தில் சுடாதீங்க சுடாதீங்க என்று கத்திக்கொண்டிருக்கும் போதே அவரின் தலையில் குண்டு பட்டு தலையோடு சிதறி மூளை வெளியே தெரிந்தது. அவரின் கட்டுப்பாட்டை இழந்த அம்புலன்ஸ் ஒரு பாறையில் மோதி நின்றது. அவருக்குப் பக்கத்திலிருந்த அவரின் மனைவி அந்த இடத்திலேயே இறந்து போக காயமடைந்தவர்களை மீட்டு எமது வைத்திய சாலைக்கு கொண்டு வந்தார்கள். மற்ற அம்புலன்ஸ் சாரதி கணேசும் சுடாதீங்க என்று கையை அசைத்து காட்ட அவரின் உள்ளங்கையை துளைத்துக்கொண்டு சென்றது ஒரு துப்பாக்கிக் குண்டு.

எமது வைத்தியசாலைக்கு நேரே கொண்டு வந்தவர்களைத் தவிர மற்றவர்கள் சிலர் விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினரிடமும் தியாக தீபம் மருத்துவ மாலையிலும் முதலுதவி பெற்று மறுநாள் வந்து சேர்ந்தனர். இவர்களுள் சிங்கள ஊழியர்களும் அடங்கும். விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகளாக எண்ணிப் பயந்த சிங்கள ஊழியர்களுக்கு போராளிகள் வழங்கிய சிகிற்சையும் கனிவான உபசரிப்பும் அவர்களை மெய்சிலிர்க்க வைத்தது. சேதமடைந்த அம்புலன்ஸையும் ஆம்புலன்சில் இறந்து கிடந்த அர்ச்சனாவின் மனைவியையும் சில நாட்களின் பின்னரே மீட்கக்கூடியதாக இருந்தது.

காயமடைந்த அம்புலன்ஸ் சாரதி அர்ச்சனாவையும் ஏனையவர்களை மட்டக்களப்பிற்கு அனுப்ப முடிவு செய்தோம். ஆனால், ஆரம்பத்தில் உயிர்ப் பயம் காரணமாக இரவு செல்வதைத் தவிர்த்த எங்கள் அம்புலன்ஸ் சாரதி, காயமடைந்தவர்களின் நிலைமையை கருத்தில் கொண்டு தன் உயிர் போனாலும் பரவாயில்லை தான் அவர்களை எடுத்துச்செல்கிறேன் என்று கூறினார். ஆனால் இராணுவத்தினர் இரவு நேரத்தில் பாதையை திறக்க சம்மதிக்கவில்லை. பின்பு செஞ்சிலுவைச்சங்கம், யூ என், மற்றும் எங்கள் சுகாதாரத்திணைக்களத்தில் அழுத்தத்தினால் அவர்கள் பாதையைத் திறக்கச் சம்மதித்தனர். இதனால் இரவு 12 மணியளவில் காயமடைத்தவர்களை செங்கல் ஆம்புலன்ஸில் ஏற்றி மட்டக்களப்பிற்கு அனுப்பினேன். ஆனால் அங்கிருந்து கொழும்பிற்கு அனுப்பபட்ட அர்ச்சனா மூன்று நாட்களின் பின் உயிரிழந்தார்.

இது எனது ஈச்சிலம்பற்று வைத்தியசாலையின் முதல் அனுபவமாக இருந்தாலும் இப்படியான அனுபவங்கள் எண்ணிலடங்காமல் முள்ளிவாய்க்கால் வரை தொடரும் என்பது அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

varatharaja@thaiveedu.com



## விதைக்கப்பட்ட விடு'தலை'கள்

வானமே நீ ஏங்கியழு.
வானமே உன் சோகம் தீரும் வரை
தேம்பியழு.
பசித்தழுத பாலகன் குருதியைப் பாலாய்ச்
சுவைத்த கதை சொல்லியழு.

சமாதானச் சேதி சொன்ன வெண்புறாக்கள்
செல்களைக் கக்கி தமிழ்த் தேசம் சிதைத்த கதை சொல்லியழு.

கோவணத்தை வெண் கொடியாக்கி அபயம் கேட்டவரை கோபம்
தீரக் குருதி குடித்த கோமான்களின் கதை சொல்லியழு..

வானமே நீ ஏங்கியழு
புதையுண்ட ஆன்மாக்கள் பனைகளாய் முளைத்துப் பசுமைக்காய்
போராடட்டும்
வானமே நீ ஏங்கியழு
என் கண்கள் பெய்த மழையில் கைவிரல்கள் குளித்துவிட்டன
எழுதித் தீர்க்க இன்னும் ஓராயிரம் கதைகள் உண்டு
தற்போதைக்கு நான் அழுது தீர்க்கிறேன்

எழுதித் தீர்க்க இன்னும் ஓராயிரம் கதைகள் உண்டு
தற்போதைக்கு நான் அழுது தீர்க்கிறேன்.

- முகமட் நவ்ஷாட்
மாவனல்லை



கடந்த வருடம் முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் இந்தக் கவிதை எழுதப்பட்டுக்கொண்டிருந்த போது பெருமழை பொழிந்துகொண்டிருந்தது.







# வன்னி மகள் கவிதைகள்

**வன்னிமகள் எஸ். கே. சஞ்சிகா**

## யுத்த யாத்திரை

முகமாலைப் பாதை பூட்டு
பளையில் இடப்பெயர்வு
மன்னார் சனங்களும் ஓடுதாம்
நிலமிழந்த ஓட்டம்.
ஆகுதி சிந்தி கட்டிய
கொத்தளம்
ஆடியாடி ஆட்டம் கண்டது.
கிளிநொச்சியும் அதிர்ந்தது
கிபீரடி வானதிர்ந்தது.
குண்டடியில் குருதி பாய
கண்முன்னால் உறவிழந்தோம்.
பள்ளிக்கூடங்களும்
தப்பவில்லை
கோவில்களும் இடம்நகர்வில்
நீதிமன்றக் கோபுரங்களும்
சரிவில்
நிம்மதிக்குறைவோடு
வாழ்வு தந்த வீட்டுக் கூரை
பிரித்து
வாசல்காத்த நாயுடனும்
வளம் தந்த கோழி முயல்
வாத்துடன்
நாடோடி வாழ்வை நோக்கி
நடைபவணி தொடங்கினோம்.
கடந்து சென்ற செல் கடந்தோம்
கிபீரின் கந்தக நொடி சுமந்து
பற்றி எரியும் தேசத்தை
பார்த்துப் பார்த்து ஓடினோம்.

பரந்தன் முரசுமோட்டை
தர்மபுரம் நெத்தலியாறு
கடந்து ஓடினோம்
ஆற்றோடு அள்ளுண்டோரை
அவசரமாய் அஞ்சலித்தோம்.
கல்லாற்றில் நள்ளிரவில்
வல்லூராய் கிபீர்
குருதி குடித்த வரலாற்றை
கண்கண்ட சாட்சியராய்
உடையார்கட்டை விட்டு
சுதந்திரபுரம் ஓடினோம்.
போன இடமெங்கும்
பங்கர் வெட்டி
பங்கருக்குள் பிள்ளை பெற்று
அடுத்த நிமிடமே
மீண்டும் ஓட்டம்.
இரணைப்பாலைக் காட்டுப்பாதை
இறைத்தூதிய உடலங்கள்
வெடித்து நாய் தின்னும்
உடல்கள்
கண்டும் ஓடினோம்
முடிவில்லா ஓட்டம்
ஒற்றைப்பையுடன் ஓடி ஓடி
வற்றிய வயிற்றின் வலி தீர்க்க
கஞ்சி வாங்கச் சென்று
காத்திருந்தவர் செல்லடியில்
சிதைந்து போனார்.
ஒட்டி உலர்ந்த தாய்பால் தேடி
அழும் குழந்தை பசி தீர்க்க
சென்றவரும் பலியுண்டார்.
சொல்லெனா துயர்ப்பயணம்
மே18இல் 2009 இன்
கும்பலாய் கொட்டிக் கிடந்த
மனிதத் தசைக்குவியல் மிதித்து
குடல் பிரிந்து குருதி உறைந்து
கும்பிட்டுக் கும்பிட்டு
கெஞ்சியோர்
கண்ணின் வலி சுமந்து
ஒட்டியுலர்ந்த எலும்புக்கூட்டு
உடல் சுமந்து ஓடி வந்தோம்.
உடலில் உடுப்பிருந்தும்
இல்லாத உணர்வோடு
தலைகவிண்டு முக்காடிட்டோம்.
எட்டி எறிந்த உணவையும்
தண்ணீரையும்
தன்மானமிழந்துண்டோம்.
ஏனிந்த உயிர் கொண்டு
ஓடிவந்த வேதனையும்
மனதை தின்றது
எலும்புக்கூடுகளாய்
ஏம்பலித்தழுதோம்.
காணாமல் போனோரும்
கணவனிழந்தோரும்
பிள்ளையை இழந்தோரும்
பெற்றோரை இழந்தோரும்
இழந்தோர் வகை பிரிக்க
முடியாது
உட்குழிந்த கண்ணீரின் சூட்டை
தாங்க முடியாது தவித்தோம்.

இன்னும் வலிக்கிறது
இப்பவும் வலிக்கிறது
யுகமாயினும் வலித்துக்
கொண்டேயிருக்கும்
“கூட்டிப்போங்கோ எங்களையும்”
கெஞ்சிக்கேட்ட உறவுகளை
தவிக்க விட்டு தாண்டி வந்தேன்
கடந்து வந்த வலிசுமந்து
இன்னும் இன்னும் சாகிறேன்.
நானென்ன செய்வேன்?
காயப்பட்ட கணவனைச்
சுமப்பனோ?
கையில் கைக்குழந்தையை
சுமப்பனோ?
கால்கடுக்குதம்மா என்றழும்
நான்கு வயது மகனைச்
சுமப்பனோ?
ஆனாலும் அழுகிறேன்
என் இயலாமைகளை எண்ணி..
யுத்த யாத்திரை சபிக்கப்பட்ட
ஈழத்தமிழனின் தலைவிதியா?
தலைநிமிர்வுக்கான கருத்தரிப்பா?

■■■

## முள்ளாய்க் குத்தும் முள்வேலி நினைவுகள்

நீறுபூத்த தணல்களாய்
நினைவுகள்...
கண்ணீரின் கொந்தளிப்புக்கள்
சுடுநீரின் வெம்மையாய்...

உயிரைத் திருகும்
வதை நிறைந்த வலி...
உக்கி உலர்ந்து எருவானோரின்
ஆக்கிரமித்த அழகு மொழி காற்றோடு...

அன்னையின் அமுதத்தைத் தேடும்
குழந்தையின் சிறுவிரல்களின்
நினைவுத் தழுவல் நெஞ்சோடு...

மூடிய சுவருக்குள் நசுங்குண்டு
மெய்யிடிந்து ஒப்பாரியிடும் கதறல்
மழையோடு கரைந்த இடிமின்னலாய்...

ஏதிலராய்ப் போன வாழ்வின் துடிப்பில்
எழுதப்படாத காவியங்களின் நீட்சி
ஓவியனுக்குத் தூரிகையற்ற நிலையாய்...

நொடிப்பொழுதில் மூச்சிழந்து புதையுண்டோரின்
வாழ்நாள் வலி...
நெஞ்சுக் கூட்டுக்குள் நெருப்போடு
நெடும் பயண யாத்திரையாய்...

வன்னி யுத்த அவலச் சகதி
குருதியும் பிணமும் மணமுமாய்...
கந்தக நொடியும் கண்ணீர்க் கதைகளும்
நீதி கேட்டிரங்கும் அலையடிப்பாய்...

இன்னும் இரங்காத இரட்சகர்கள்
உள்ளும் வெளியுமாய் தந்திர மேய்ப்பராய்
ஆண்டுகளை இழுத்தடிக்கும் கள்ளத்தனம்.

கண்ணீரோடு கட்டித்தழுவி சரணடைய
கண்காண அனுப்பினோரை
காணமல் போனோர் என
பொய் உரைக்கும் நரித்தந்திரம்...

மன்னாரில் தொடங்கி முள்ளி
வாய்க்காலில் முடிந்த கதை...
கதையல்ல இனத்தின் அழிப்பு...
இனத்தின் இறைமைச் சரிவு...

கள்ளப் படைகளும் கைக்கூலிகளும்
இனத்தின் சங்கறுத்த சரித்திர நீட்சி...

இரத்தமும் சதையும் உயிரும்
உரமாய் விதைத்தமண்ணின்
அவல உயிர்ப்புகள் மூண்டெரிய
முள்ளாய் குத்தும் முள்வேலி நினைவுடன்
நடமாடும் பிணங்களாய் நாம்.

■■■

வன்னிமகள் எஸ். கே. சஞ்சிகா என்ற பெயரில் எழுதி வரும் எஸ். கே. லதாவின் தாய், தந்தையர் இருவரும் 1986இல் யுத்தத்தில் கொல்லப்பட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட செஞ்சோலை வளாகத்தில் வளர்ந்தவர். 97இல் வள்ளிபுனத்தில் நடத்தப்பட்ட செஞ்சோலைத் தாக்குதலை நேரிலே கண்டவர். செஞ்சோலையில் படித்து யாழ். பல்கலைக் கழகத்துக்கு தெரிவானவர். முள்ளி வாய்க்கால் அவலத்தை நேரிலே அனுபவித்தவர். தன்னுடைய மூன்று வயதுப் பிள்ளையை முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் பலி கொடுத்தவர். இவருடைய ‘சுவாசம் மட்டுமே சுடுகலனாய்’ கவிதைத் தொகுதி இந்த வருடம் வெளிவந்துள்ளது.



# அம்மை சொன்னவை

- பிரியா தர்மசீலன் -

"புதைகுழிகளுக்கிடையில்
பிணங்களுக்கிடையில்
குருதி படிந்த
உடைகளுக்கிடையில்
புத்திர சோகத்தில் நெஞ்சு பிளந்த
அன்னையர் கண்ணீர்த் துளிகளுக்கிடை
யில்.
......"

-சேரன், 1986

## நளினாதேவி அம்மா

நளினாதேவி அம்மா(பெயர் மாற்றப்பட்டுள்ளது)வை நான் முதன் முறையாகச் சந்தித்தது ஜனவரி 2017ல். அப்போது அவர் வவுனியாப் பொது மருத்துவ மனையின் உளவளச் சிகிச்சைப் பிரிவில் இருந்தார். 2017 ஜூலை மாதமும் நவம்பர் மாதமும் அவரோடு இருந்தேன். போரின் இறுதிப் பகுதிகளில் போரிட என வலிந்து சேர்க்கப்பட்டவர்களில் நளினாதேவி அம்மையின் மகளும் ஒருவர். நளினாதேவி அம்மையின் இன்னொரு மகன் (29 வயது) தான் போய்ச் சேர்ந்து கொண்டு மகளை இயக்கத்திலிருந்து விடுவித்தார். மகனின் உடல் மே மாதம் மூன்றாம் திகதி நளினாதேவி அம்மையிடம் வழங்கப்பட்டது. விடுதலைப் புலிகளுக்குரிய முறையிலும் மரபிலும் சாவீடும் சடங்குகளும் நடந்தன.

நளினாதேவி அம்மையின் 15 வயது மகன் மே மாதம் 17ம் திகதி கொல்லப்பட்டார். நளினாதேவி அம்மையாரும் வேறு பலரும் இலங்கைப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்த பகுதிக்கு சென்று கொண்டிருந்த போது, படையினர் லலிதா அம்மையின் 15 வயது மகனைச் சுட்டுக் கொன்றார்கள். மகனது உடலையாவது எடுத்துக் கொண்டு போக அனுமதிக்குப்படி படையினரின் காலில் விழுந்து கெஞ்சினார் நளினாதேவி அம்மை. படையினர் விடவில்லை. மகனின் உடலை அந்த இடத்திலேயே விட்டுவிட்டுச் செல்ல வேண்டிய அவலம்.

நளினாதேவி அம்மையின் கனவுகளில் அந்தப் பதினைந்து வயது மகன் எப்போதும் வருகிறான். தான் சாகவில்லை என்றும் மீண்டும் வருவேன் என்றும் சொல்கிறான். மகனின் உடலைக்கூட எடுத்து வரமுடியாமல் போய்விட்டமை மகனுக்குத் தான் செய்ய வேண்டிய கடமைகளில் இருந்து தான் தவறி விட்டதான பெரும் குற்ற உணர்வை அவருக்கு ஏற்படுத்தி விட்டதாகச் சொல்கிறார் அவர்.

இறை பக்தி மிக்கவராக இருந்தவர் நளினாதேவி அம்மை. எனினும் மே 2009ன் பின் அவர் எந்தக் கோவிலுக்கும் செல்வதில்லை. எந்த மதச் சடங்குகளிலும் கலந்து கொள்வதில்லை.

அவரது மூத்த மகனின் சட்டையையும் இளைய மகன் பாடசாலைக்கு அணிந்து செல்லும் கழுத்துப்பட்டியையும் அவர் எப்போதும் தன்னுடனேயே வைத்திருக்கிறார். காலம் செல்லச் செல்ல அவரது உளவடுவும் தடுமாற்றங்களும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. சென்ற ஆண்டு நவம்பர் மாதம் அவரை நான் படம் எடுத்த போது அவருடைய கைகள் தொடர்ந்து நடுங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். தாதி ஒருவர் தேநீர்க் கோப்பையை அவரது வாயில் வைத்தார். மெல்ல மெல்லத் தேநீரைச் சிந்தாமல் குடிப்பதே நளினாதேவி அம்மைக்குச் சாத்தியமாகவில்லை. அவர் எடுக்கும் மருந்துகளின் பக்க விளைவுகளும் பேரழிவை ஏற்படுத்திய மனப் புண்ணும் அவரது நினைவை மெல்ல மெல்ல அழிகின்றன.

அவரது உளவளச் சிகிச்சை மருத்துவரையே அவர் சில சமயங்களில் மறந்து விடுகிறார்.

●●●

## நெடுங்கேணி அம்மா

நெடுங்கேணி அம்மா தண்ணீர் எடுத்து வரப் போயிருந்த போது அவரின் குடும்பத்தில் பதினாறு பேர் ஒரே நாளில் வன்னியில் கொல்லப்பட்டனர். கொல்லப்படும் போது நெடுங்கேணி அம்மாவின் மகள் ஒன்பது மாதக் கற்பிணியாக இருந்தார். தண்ணீர் எடுத்துக் கொண்டு அவர் திரும்பி வந்த போது அவருடைய மகளினதும், மகளின் வயிற்றிலிருந்து சிதறி வெளியே றியிருந்த பிஞ்சுக் குழந்தையினதும் உடலைக் கண்டார். 'கடவுளைக் கையெடுத்துக் கும்பிடுகிற மாதிரி' தரையில் கிடந்த அந்தப் பிஞ்சுக் குழந்தையின் உடலை இப்போதும் மறக்க முடியாமல் தவிக்கிறார் நெடுங்கேணி அம்மா.

கடைசியாக எஞ்சியிருக்கும் மகளோடு இப்பொது வாழ்ந்து வருகிறார் அவர். அவர்கள் வீட்டுச்சாமி அறையில் கடவுளரோடு கடவுளாக அவரது மகனின் படமும் இருக்கிறது. மகனுக்கு முப்பது வயது கூட முடியவில்லை. மதச்சடங்குகளின் போது அவரது மகனின் படத்துக்கும் தண்ணீரும் உணவும் வைப்பதாக என்னிடம் சொன்னார். மகனின் படம் எப்போதும் மாலையோடு இருக்கிறது. மகனைப் பற்றிப் பேசவே முடியாமல் இருக்கிறது. அவருக்குச் சொற்கள் வர மறுக்கின்றன.

போருக்குப் பின்னான இலங்கை, உல்லாசப் பயணிகளுக்கான சொர்க்கமாக இலங்கை அரசால் காட்டப்படுகிறது. 'ஆசியாவின் உன்னதம்' என்று இலங்கையை அழைக்கிறார்களாம் இப்போது. நெடுங்கேணி அம்மாவினதும் அவரைப்போல பல்லாயிரக்கணக்கான அன்னைமாரின் ஆற்ற முடியாத வலியும்தான் உண்மையில் இலங்கைக்கான பொருத்தமான உருவகம். இந்த அன்னைமார், தப்பிப் பிழைத்து நாளாந்தம் வாழ்வதே 'ஆசியாவின் உன்னதம்'!

நெடுங்கேணி அம்மா அடிக்கடி வவுனியா மருத்துவமனைக்கு உள்வள ஆலோசனைக் காகச் செல்கிறார். தனக்கு என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொள்ள முடியாமலும், நடந்தவை எல்லாவற்றுக்குமே என்ன அர்த்தம் அல்லது அர்த்தம் ஏதும் உள்ளதா எனக் குழம்புகிறார். அவருடைய மனநல மருத்துவர் அவ்வப்போது நெடுங்கேணி அம்மாவின் வீட்டுக்கு வருவார். நெடுங்கேணி அம்மா தன் வீட்டுப் பலாப்பழமும் தேநீரும் மருத்துவருக்குத் தருகிறார்.

◆◆◆

நான் சந்தித்த ஏராளமான அன்னையர், மகளிர்களில லலிதா அம்மை, நெடுங்கேணி அம்மா ஆகிய இருவரின் கதைகளை மட்டுமே நான் இங்கு பகிர்ந்து கொண்டிருக்கிறேன்.

ஒளிப்படக்கலைஞர் என்ற முறையில் எமது மக்கள் பட்ட அவலங்களைக் காட்டுவது மட்டுமே என் கடமை என நான் கருதவில்லை. இந்த அன்னையரின் வாழ்வைப் போலவே அவர்களின் கதையைக் கேட்பதும் தொடர்வதும் பதிவு செய்வதும் பெரும் துன்பமானதுதான். அவலங்களுக்கு அப்பால், இந்த அன்னையரின் மீண்டெழும் துணிச்சல் பற்றியும், எஞ்சி இருக்கும் குடும்பத்தவரையும் உறவினர்களையும் பேண அவர்கள் இடையறாது எடுக்கும் முயற்சிகள் பற்றியும் ஒளிப்படங்களில் சித்திரிப்பதும் எனது தார்மிகக் கடமை என நான் கருதுகிறேன்.





**பிரியா தர்மசீலன்**

லண்டன், ஒன்ராறியோவில் வாழ்ந்து வரும் பிரியா தர்மசீலன் புகைப்படக் கலைஞர். இனப்படுகொலைக்குப் பின்னரான இலங்கையின் வடக்குக் கிழக்கையும் அம்மணின் மாந்தர் கதைகளை யும் தனது புகைப் படங்கள் மூலம் ஆவணப் படுத்தி வருகிறார்.



# அரசாங்கம் பொறுப்புக் கூறும் வரை போராடியே ஆகவேண்டும்!

**- விஸ்வா -**

காணாமலாக்கப்பட்டவர்களுக்காக அவர்களது உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டம் 400 நாட்களைக் கடந்து, தொடர்ந்து நடைபெற்ற வண்ணமுள்ளது. இதற்கான தீர்வு கிடைக்குமா என்பதில் அவர்கள் நம்பிக்கை இழந்துள்ள நிலையிலும் போராட்டத்தை கைவிடத் தயாராக இல்லை.

வடக்கிலும், கிழக்கிலும் இப்போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களில் இடைவிடாது இப்போராட்டம் தொடர்கின்றது.

தமிழர்கள் வாழும் பிரதேசங்களிலும், தென்னிலங்கையிலும் யுத்த காலத்தில் பல தமிழ் இளைஞர்கள் காணாமலாக்கப்பட்டனர். வீடுகளுக்குள் நுழைந்து படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட பல இளைஞர்களுக்கு என்ன நடந்ததென்பதே தெரியாத நிலையில், இன்று வரை அவர்களை அவர்களின் உறவினர்கள் தேடி வருகின்றனர்.

2009ம் ஆண்டு யுத்தம் முடிவடைவதற்கு முன்னரிலிருந்தே தமிழ் இளைஞர்கள் காணாமலாக்கப்படும் நடவடிக்கைகள் படையினரால் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டன. எனினும், இறுதி யுத்தத்தில் படையினரிடம் சரணடைந்து காணாமலாக்கப்பட்ட விடயமே இன்று பாரிய போராட்டங்களுக்கு காரணமாகியது. இப்போராட்டம் சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இறுதி யுத்தத்தின் போது பெற்றோர் தங்கள் பிள்ளைகளையும், பெண்கள் தங்கள் கணவன் மாரையும் படையினரிடம் நேரில் ஒப்படைத்ததால் அவர்கள் இன்று சாட்சிகளாக உள்ளனர். இதனை அரசாங்கத்தால் நிராகரிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக் காலத்தில் காணாமலாக்கப்பட்ட உறவினர்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. காணாமலாக்கப்பட்டவர்களுக்காக மஹிந்த ராஜபக்ஸவினால் அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவில் பதிவுகளை மேற்கொள்ளச் செல்பவர்களும், சாட்சியமளிக்கச் செல்பவர்களும் கூட புலனாய்வாளர்களால் அச்சுறுத்தப்பட்டனர். காணாமலாக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ்களை வழங்கி பிரச்சினையை முடிவிற்கு கொண்டு வரும் முயற்சிகளும் அப்போது மேற்கொள்ளப்பட்டன.

மஹிந்த அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் இப்பிரச்சனையை புதிய அரசாங்கம் கவனத்திலெடுக்கும் என தமிழ் மக்கள் ஓரளவில் நம்பினர். சர்வதேச சமூகமும் நம்பியது. ஆனால், புதிய அரசாங்கமும் இந்தப் பிரச்சினையை இழுத்தடித்தே வருகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்தித்து சில தடவைகள் கலந்துரையாடியுள்ளார். இப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாகவும் உறுதியளித்திருக்கின்றார். ஆனால், நடைமுறையில் எதுவும் சாத்தியமாகவில்லை. ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையையும், சர்வதேச சமூகத்தையும் திருப்திப்படுத்தும் விதமாக வாக்குறுதிகளை வழங்கிவிட்டு எதனையும் நடைமுறைப்படுத்தாமல் இருக்கும் போக்கையே அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் ஒன்றை உருவாக்கி அதன் மூலம் இப்பரச்சினைக்கான தீர்வை விரைவுபடுத்த முடியும் என தெரிவிக்கப்பட்ட போதும் அதுவும் பேச்சளவிலேயே உள்ளது.




பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காணாமலாக்கப்பட்டவர்கள் உயிருடனிருப்பதற்கான வாய்ப்புகளில்லை என்று கூறியிருக்கின்றார். வடக்கிற்கு விஜயம் செய்த சமயங்களிலும் அவர் இக்கருத்தை தெரிவித்திருக்கின்றார். மஹிந்த ராஜபக்ஸ காணாமல் போனவர்கள் என்று எவருமில்லை அவர்கள் படையினருடனான யுத்தத்தில் உயிரிழந்த புலிகள் என்று அன்று கூறினார். இன்று பிரதமர் ரணில் காணாமலாக்கப்பட்டவர்கள் உயிருடன் இருப்பதற்கு வாய்ப்பில்லை என்று கூறுகின்றார். அதாவது, காணாமலாக்கப்பட்டவர்கள் படையினரால் கொல்லப்பட்டு விட்டார்கள் என்பதையே அவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

அவர் கூறுவது போல காணாமலாக்கபட்டவர்கள் உயிருடன் இல்லை என்றால், அவர்களைக் கொலை செய்தவர்கள் நீதியின் முன்னிறுத்தப்பட்டு தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும். ஆனால், படையினரை காட்டிக்கொடுக்கவோ, குற்றம் செய்தவர்களை கண்டறிந்து தண்டிக்கவோ இந்த அரசாங்கமும் விரும்பவில்லை.

இந்த நிலையில்தான் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். உணவுத் தவிர்ப்பு, வீதிமறிப்பு, பேரணிகள் எனப் பல்வேறு வடிவங்களில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பெற்றோர் தங்கள் பிள்ளைகளைத் தேடியும், பெண்கள் தங்கள் கணவன்மாரைத் தேடியும், பிள்ளைகள் தங்கள் தந்தை, தாயை, சகோரர்களைத் தேடியும் தவிக்கின்றனர்.

இத் தொடர் போராட்டத்திலீடுபட்டிருந்த சில முதிய பெற்றோர் உடல்நலன் குன்றி உயிரிழந்தும் விட்டனர். பலர் நோயாளிகளாகி விட்டனர். மருந்து வில்லைகளுடன் போராட்டக் கூடாரத்தில் அவர்கள் அவதிப்படுவதை காணமுடிகின்றது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகவுள்ள அரசியல்வாதிகளும் எதுவும் செய்ய முடியாத நிலையிலேயெ காணப்படுகின்றனர். அவ்வப்போது நாடாளுமன்றத்தில் இது குறித்து பேசுவதோடு அவர்களின் கடமை முடிந்து விடுகின்றது. காணாமலாக்கப்பட்டவர்களுக்காக போராடும் புதிய பொறிமுறை எதனையும் அவர்களால் உருவாக்க முடியவில்லை. இதன் காரணமாக போராடும் மக்கள் தங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரநிதிகள் தொடர்பாகவும் நம்பிக்கையிழந்த நிலையிலேயே உள்ளனர்.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம் நடத்தும் இடங்களுக்கு அவ்வப்போது சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் வந்து கலந்துரையாடி செல்கின்றனர். இதன்மூலம் இப்பிரச்சினையின் தீவிரத் தன்மை ஒரு வகையில் பாதுகாக்கப்படுவதுடன் தொடர்ந்து அவர்களின் போராட்டத்தை ஆவணப்படுத்தும் பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றது. இதுவே அரசாங்கத்திற்கு தற்போது தலையிடி கொடுக்கும் ஒன்றாகியுள்ளது.

அண்மையில் இது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருத்தோன்றை தெரிவித்துள்ளார். வட பகுதி தமிழ் மக்களை அரசாசார்பற்ற நிறுவனங்கள் தவறாக வழிநடத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். காணாமலாக்கப்பட்டவர்களின் போராட்டம் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஸ புலிகளின் ஆதரவாளர்களால் இந்தப் போராட்டங்கள் வழிநடத்தப்படுகின்றன என்று கூறினார். அரசசார்பற்ற நிறுவனங்கள் புலிகளை ஆதரிப்பவை என்றும் அவர் கூறினார். தற்போதைய ஜனாதிபதியும் அக்கருத்தினையே சிறிது மாற்றத்துடன் தெரிவிக்கின்றார்.

கடந்த காலங்களில் சிங்களத் தலைவர்கள் சிலர் தமிழ் மக்களுக்கு எவ்விதப் பிரச்சினையும் இல்லை என்று கூறினர். சிலர் பிரச்சினைகள் உள்ளன என்று கூறிக் கொண்டு அப்பிரச்சினைக்கு தீர்வினைக் காணாமல் விட்டுவிட்டனர். இதே நிலைப்பாடுதான் இன்றளவும் நடைமுறையிலுள்ளது.

இலங்கை அரசு மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றங்களில் தமிழர்கள் காணாமலாக்கப்பட்ட நடவடிக்கைகளும் முக்கியமானவை. இக்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு அரசாங்கம் உறுதியான நடவடிக்கையினை இன்னமும் மேற்கொள்ளாதிருப்பது தொடர்பில் சர்வதேச கண்டனங்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா மனிதஉரிமைப் பேரவையின் கூட்டத் தொடரில் இந்தக் கண்டனங்கள் வெளிப்படையாக முன்வைக்கப்பட்டன.

புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று மூன்று வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் இன்னமும் மீதமிருக்கும் சுமார் 20 மாதங்களில் எதனையும் செய்யப்போவதில்லை. ஆட்சியைத் தக்கவைக்கும் செயற்பாடுகளிலேயே கவனத்தைச் செலுத்தும் அரசாங்கம் படையினருக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது என்பதே யதார்த்தமான உண்மை. இந்த நிலையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் சர்வதேச கவனத்தை ஈர்க்கும் வகையிலான போராட்டத்தை தொடர்ந்து நடத்த வேண்டியது கட்டாயமானதாகும்.

போராடும் மக்களுக்குத் துணையாக தமிழ் அரசியல்வாதிகளும் போராட்டத்தில் குதிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. வீதியிலிறங்கி போராடாவிட்டாலும் அரசாங்கத்திற்கும் சர்வதேசத்திற்கும் அழுத்தம் கொடுக்கும் வகையிலான போராட்ட பொறிமுறையொன்றை அவர்கள் வடிவமைக்க வேண்டும். இது காலத்தின் கடமையாகவுள்ளது.

காணாமலாக்கப்பட்டவர்கள் என்று எவரும் இல்லை அவர்கள் எங்கும் தடுத்துவைக்கப்படவில்லை இரகசிய முகாம்கள் என்று நாட்டில் எப்பகுதியிலும் எதுவுமில்லை என்று அரசாங்கத் தரப்பினர் கூறுகின்றனர். பிரதமர் காணாமலாக்கப்பட்டவர்கள் உயிருடனிருப்பதற்கான வாய்ப்புகளில்லை என்று கூறுகின்றார். ஒன்பது ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு இந்த வார்த்தைகள் தீர்வாக அமையப் போவதில்லை.

இறுதி யுத்தத்தின் போது படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இன்று சாட்சிகளாக உள்ளனர். உயிருடன் ஒப்படைக்கப்பட்ட தங்கள் உறவுகள் எங்கே? என அவர்கள் உரத்து குரலெழுப்புகின்றனர் அவர்களுக்கு இந்த அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும். காணாமலாக்கப்பட்டவர்கள் உயிருடன் இல்லை என்றால் அவர்களை கொலை செய்தவர்களை அடையாளம் கண்டு அவர்களை நீதியின் முன் நிறுத்தி தண்டனைக்குள்ளாக்க வேண்டும்.

இதன் பின்னரே பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகள் பற்றி சிந்திக்க முடியும். இடைநடுவே மரணச்சான்றிதழ், இழப்பீடு என்பவற்றை வழங்கி அத்துடன் இப்பிரச்சினையை முடிவிற்கு கொண்டுவரும் அரசாங்கத்தின் சூழ்ச்சிக்கு எவரும் இடமளிக்கக் கூடாது.

■ ■ ■

# விதுரன் கவிதைகள்

## (ராசையா தங்கேஸ்வரன்)

### யுத்த நிறுத்தமும் யுத்தமும்
(தேடல் 11 - 1993)

இலட்ச வருட வரலாற்றில்
உலகத்தில் வாழ்வதற்கான
உன்னுடைய சொற்ப நேரம் இது
உன்னுடன் சேர்ந்து வாழ்வதற்கான
என்னுடைய காலமிது
எமக்குள் ஏன் சண்டை
தோழனே கை கொடு
ஆயிரமாயிரமாண்டுகளாய்
அழியாமல் பாதுகாத்து
எமது பிறப்புக்கும் வாழ்வுக்கும்
சுத்தமான பூமியை விட்டுத் தந்த
எமது முன்னோர்க்கு நன்றி சொல்வோம்.

இரு நூறு வருடத்தில்
ஏனிந்தச் சீரழிவு!
கைத்தொழில் புரட்சியாம்.
கண்ட இடமெல்லாம்
பூமியைத் துளைத்தெடுத்த கனிமங்கள்
மீண்டும் இயற்கையில் சேரமுடியாத
சேர்வைக் குப்பைகளாய்
பூமியின் மேற்பரப்பில்...

புறப்படு நண்பனே!
எங்கள் பங்கிற்கு
ஏதாவது ஒரு குப்பை மேட்டை
எரித்துச் சுத்தப் படுத்துவோம்
இல்லை
இயற்கை வட்டத்தில்
இணையாத எதையும்
பாவிக்காமல் விடுவோம்

உல்லாச வாழ்வு பெறும் ஒரு சாரார்
உலக வளம் யாவும் உட்கொண்டும்
போதவில்லையாம்
பொருளாதாரச் சுருக்கமாம்
இன்னும் நிறைய தொழிற்சாலைகள் வேண்டுமாம்
உலக வளங்களை பயன்படுத்த.. வேலை வழங்க..
சூழல் மாசுபடுகிறது என்கிறாயா..?
மறந்துவிடு!

மரண ஓலமிடும் மறுசாராரை
சமகாலத்தில் வாழும் சகோதரரை
சிந்திக்க மறந்தவர்கள்
வருங்கால மாந்தருக்கு எதையும்
விட்டுவைக்கவா போகிறார்கள்

ஓ! நண்பனே சண்டையிடு
அவர்களுடன் சண்டையிடு
என்னுடன் வேண்டாம்
இழக்க எதுவுமில்லாத
என்னுடன் வேண்டாம்.!

### காணாமல் போன ஆடு
(மே 1997)

சூரியனைச் சுருக்கிட்டு
கட்டி வைக்க முயன்றவன்
விடிவெள்ளி தேடினான்
காணவில்லை.

பின் எப்படிச் சூரியன்?

ஓ! மனிதர்களே நம்புங்கள்.
நான்,
பிரபஞ்சத்தில் ஒளி தேடுபவன்.
சிறந்த சித்தாந்தத்தின் புத்தன்.
இப்பூவுலகம் என் போதிமரம்.

உங்களுக்குத் தெரியுமா?
நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும்
சூரியனை விடப் பெரியவை.

போனால் போகட்டும் சூரியன்
உங்களுக்கு,
நட்சத்திரப் பிரகாசம் நிச்சயம்.

சுருக்குகள் தயார்.
இதோ நட்சத்திரங்கள்
என்றவன்
திடீரென ஓர் நாள்
மினிமினியைத் திருடிக் கொண்டு
தலைமறைவானான்.
அத்துடன்..
முருகன் கோவிலில் மின்னிய
குத்துவிளக்கும்
பிள்ளையாருக்கு தீபமேற்றிய
பஞ்சாலாத்தியும்
காணாமல் போயிருந்தது.

தோழர்கள் சொல்லிக் கொண்டார்கள்
அவனுக்கு தலைக்கு மேல்
வெள்ளமாம்.
மக்கள்!!
தமக்கு உரிய நளினத்துடன்
இடம் புதுசு. கதை பழசு என்றார்கள்.

*இலக்கிய ஆர்வலர் கவிஞர் விதுரன், கடந்த பெப்ரவரி 19ம் நாள் இயற்கையெய்தினார். விதுரனின் நினைவாக அவரின் கவிதை வெளியாகின்றது.*

# வளர்ந்திடுவாய் உயிர்ச்சுடராய்

## அன்னை பூபதி 1934 - 1988

- மு. புஷ்பராஜன் -

காந்தியின் அகிம்சைப் போராட்டத்தின் மூலம் இந்தியா சுதந்திரம் அடைந்ததாக அந்நாட்டு அரசியல்வாதிகள் எப்போதும் பெருமையுடன் கூறிக்கொள்வார்கள். அதே காந்தியின் உண்ணாவிரதம் இந்து, முஸ்லிம் கலவரத்தை நிறுத்தியது, டொக்டர் அம்பேத்கர்காரின் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இரட்டை அங்கத்தவர் தொகுதிக்கான கோரிக்கையை மீளப்பெற வைத்தன. ஆனால், பூபதி அம்மாளின் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டமோ உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் கருணையால் அவர் மரணத்தில் தான் முடிந்து. முப்பது ஆண்டுகள் கழிந்துவிட்டன.

உலகின் பல்வேறு நெருக்கடிகளின் போது பெண்கள் பலர் தமது அசாத்திய துணிச்சலினால் அதை எதிர்கொண்டுள்ளார்கள். இயேசு மரணத்திற்குத் தீர்ப்பிடப்பட்டபின்னர், சிலுவையில் அறைந்து கொல்வதற்காக 'கொல்கொதா' நோக்கி அழைத்துச் செல்லப்படுகிறார். காவலர்கள் புடை சூழ, இயேசு சிலுவை சுமந்து செல்கிறார். கற்றாணில் கட்டி அடிக்கப்பட்டு சிதைந்த உடல், தலையில் முள்முடி, மிகப் பலவீனமான நிலையில் தள்ளாடித் தள்ளாடி விழுந்தும் எழுந்தும் செல்கிறார். செல்லும் வழியெல்லாம் மக்கள். காவலர்கள் மக்கள் எவரையும் இயேசுவை நெருங்க விடாமல் விரட்டுகின்றார்கள். அந்த நெருக்கடியிலும் வரோணிக்கா என்ற ஒரு பெண் காவலர்கள் தடையும் மீறிச்சென்று இயேசுவின் இரத்தம் வடிந்த முகத்தைத் தன் கைக்குட்டையால் துடைத்தள்தாளே! 'மெய்யில் பொடியும் விரித்த கருங்குழலும் கையில் தனிச்சிலம்பும்' கொண்டு பாண்டியன் அவை நடுங்க நீதி கேட்டவளும் பெண்தான். ஹிட்லரின் நாசிப் படைகளின் யூதப் படுகொலைகளின்போது பல்லாயிரக்கணக்கான யூதச் சிறுவர்களை தமது உயிரையும் மதியாமல் மரணத்தில் இருந்து காத்தவர்கள் பெண்கள் தான். அந்த வழிவந்தவர்தான் பூபதியம்மா அவர்கள். அவரின் தொடர்வழியாக இன்று முள்ளிவாய்க்காலின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டோருக்காக வீதியிலிருந்து நீதி கேட்பவர்களும் பெண்கள்தான். அதனால்தான் பாரதி பெண்களைச் சக்தியின் வடிவமாகக் கொண்டாடினர்.

மட்டக்களப்பு, கிரானில் அன்னமுத்து, பெரிபிள்ளை இணையர்களிற்கு மூன்றாவது குழந்தையாகப் பிறந்தவர் பூபதி. குடும்பப் பொருளாதார நிலைமை காரணமாக பள்ளிக்கூடத்திலிருந்து நிறுத்தப்பட்ட இவர், தனது பன்னிரண்டாவது வயதில் திருமணம் செய்தார். சிறிது காலத்தின் பின்னர் கணவரை இழந்தார். பின்னர், ஏற்கனவே மனைவியை இழந்த கணபதிப்பிள்ளை என்பவரை மறுமணம் செய்து கொண்டார். மொத்தம் பத்துக் குழந்தைகளுடன் வாழ்ந்த பூபதியம்மாவுக்கு பேரக்குழந்தையும் உண்டு.

போராட்ட காலத் தமிழ் இளஞர் பலர் தலைவிதிக்கு அமைய, இருபத்தியெட்டு வயதான பூபதியம்மா மகன் இராணுவத்தால் கொல்லப்பட்டார். மீண்டும் இரண்டாவது திருமணத்தின் வழிவந்த மூத்த மகன், அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார். இதனைத்தொடர்ந்து நாவற்கேணிக்கு இடம்பெயர்ந்தார். அங்கும் இன்னொரு மகன் இராணுவத்தின் சுற்றிவளைப்பில் கைதுசெய்யப்பட்டு, பூசா முகாமில் சித்திரவதைக்கு ஆளானவர். எனவே, பூபதியம்மா தனது சொந்த அனுபவத்தின் மூலம் சமூகத்தின் கூட்டுத்துயரை அதிலும் குறிப்பாக பிள்ளைகளை இழந்த அன்னையர் துயரம் எவ்வகை வலி கொண்டது என்பதை அறிந்தே இருந்தார். எனவே யுத்தங்களின்



பொது விளைவான கொலைகள், ஆட்கடத்தல்கள், சித்திரவதைகள், காணமல் போகச்செய்தல் ஆகியவற்றிற்கு எதிராகச் அவர் கிழக்கிலங்கை 'அன்னையர் முன்னணியுடன் இணைந்து செயற்பட்டமையில் ஆச்சரியம் எதுவுமில்லை.

அமைதிப்படையினராக வந்திறங்கி ஆக்கிரமிப்புப்படையாய் மாறிப்போன இந்தியப்படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் யுத்தம் ஆரம்பித்து வட-கிழக்கை இந்தியப்படைகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருந்தனர். பொதுமக்கள் வாழ்வு பாரிய அவல நிலைக்கு உள்ளாகியிருந்தது. இதனை முடிவுக்குக் கொண்டுவரும் முகமாக இந்தியப்படைக்கு எதிராக மட்டு-அம்பாறை மாவட்ட 'அன்னையர் முன்னணி' இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து சாத்வீக வழியில் போராட்டத்தை நடத்த முன்வந்தனர்.

- யுத்த நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.
- புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும்.

இந்துசமுத்திரப் பிராந்திய மேலாதிக்க பெருமிதம் நிறைந்த இந்தியப் படையினர் இந்தக் கோரிக்கைகள் பற்றி அலட்சியப் போக்கையே கொண்டிருந்தனர். ஆனால், மக்கள் இந்தப் போராட்டத்திற்கு பெருமளவில் அதரவு தெரிவித்தனர். அதிலும் பெண்கள் இந்தப் போராட்டத்தில் அணிதிரண்டனர். இந்நிலையில் 1988ம் ஆண்டு ஜனவரி 04ம் திகதி திருமலையிலும் 1988ம் ஆண்டு பெப்ரவரி 10 ம் திகதி கொழும்பிலும் அமைதிப்படையினர், அன்னையர் முன்னணியுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். எதுவும் பயனளிக்காத நிலையில் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தைத் தேர்வு செய்தனர். குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்ட அன்னம்மா டேவிட் அவர்களால் 1988ம் ஆண்டு பெப்ரவரி 16ம் திகதி அமிர்தகழி மாமாங்கேஸ்வர் ஆலய குருந்தை மரநிழலில் போராட்டம் ஆரம்பமாகியது.

உண்ணாவிரதப் போராட்டத்திற்கு பெருகும் மக்கள் ஆதரவை அறிந்த இந்தியப் படையினர் அன்னம்மா டேவிட்டின் பிள்ளைகளைக் கைது செய்தனர், இதன்பின்னர் 'தமது அன்னை நிர்பந்தமாக உண்ணாவிரதத்தில் இருத்தப்பட்டார்' என பிள்ளைகள் முறையிட்டதாகக் அறிவித்த இந்தியப்படை, அன்னம்மாவைக் காப்பாற்றுவதாகக் கூறிக் கடத்திச்சென்றுவிட்டனர்.

இந்த நிலையில் பூபதியம்மா, அன்னையர் முன்னணி சார்பில் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முன்வந்தார். அன்னமா டேவிட்டுக்கு நடந்த அனுபவத்தினால் "சுயவிருப்பின் பேரில் உண்ணாவிரதம் இருகிறேன் எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக்கூடாது" எனப் பூபதியம்மா கடிதம் எழுதிவிட்டு அதே இடத்தில் 1988ம் ஆண்டு மார்ச் 19ல் நீர் மட்டும் அருந்திச் சாகும் வரை போராட்டத்தை ஆரம்பித்தார். உண்ணாவிரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய வர்களையும் பூபதியம்மா பிள்ளைகள் சிலரையும் இந்திய இராணுவம் கைது செய்தது. ஆயினும் மக்களின் ஆதரவுடன் உறுதியாகப் போராட்டம் தொடர்ந்தது. இந்திய அரசால் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் 1988ம் ஆண்டு ஏப்ரல் 19ம் திகதி அன்று பூபதி கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் அன்னை பூபதி ஆனார்.

அன்னை பூபதி அவர்கள் தமது சொந்த நலன்சார்ந்து இவ்வீகத்திற்கு முன்வரவில்லை, தமது ஈகத்தின் மூலம் தனது இனத்தின்மீது இறுகக் கவிந்திருந்த இராணுவ இருளினிடையே ஒளி புலரும் என்ற அவரது நம்பிக்கையை நிர்மூலமக்கிய தன் மூலம் இந்தியா தான் சொல்லிக் கொள்ளும் மாபெரும் ஜனநாயகத்தில் மீண்டும் கறையை ஏற்படுத்திக்கொண்டது.

ஈழத்தமிழர்களின் பொது அடையாளமாக வுள்ள அன்னை பூபதி அவர்களின் பிள்ளைகள் 'அன்னை பூபதி நினைவு நாளை தமிழர்கள் இணைந்து நினைவு கொள்வதையே நாம் விரும்புகின்றோமே தவிர தனிப்பட்ட கட்சிகள் கொண்டடுவதற்கல்ல' என்று அறிவித்தமை, இன்றைய சிதறிச் சீரழித்த ஈழ அரசியல்வாதிகள் தம்முடைய தேர்தல்கால இலாபங்களுக்காக அன்னை பூபதியை தமக்கு மட்டுமே சொந்தமானவர் எனக் கட்டிக்கொள்ள முயல்கிறார்கள் என்பதையே வெளிப்படுத்துகிறது.

இந்த ஆண்டு மட்டக்களப்பு கல்லடி, நாவலடியில் இடம்பெற்ற நினைவேந்தல் நினைவின்போது அன்னை பூபதியின் சமாதிக்கருகில் பொலிசார் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இதைக்கண்ட மட்டக்களப்பு மாநகர மேயர் 'அன்னை பூபதியின் இந்தச் சமாதி என்பது எம்மைப் பொறுத்தவரையில் புனிதமான இடமாகக் கருதுகிறோம். தயவுசெய்து உங்கள் பாதணிகளை வெளியே கழற்றி விட்டு வாருங்கள்' என்றார். இந்த மனநிலையே ஈழத்தமிழர்கள் மனங்களில் எனறேன்றும் நிலைத்திருக்க வேண்டியது.

**உசாத்துணை:**
- அன்னை பூபதியின் வாழ்க்கைக் குறிப்புகள்: Tamil Net இணையத் தளதம்



pushparajan.m@thaiveedu.com




STAR GROUP REALTORS

RE/MAX ACE REALTY INC., BROKERAGE

# THE GREAT OPPORTUNITY FOR FIRST TIME BUYERS & INVESTORS TO ATTENDED FREE SEMINAR

## YOU ARE INVITED TO FREE SEMINAR ON MAY12,2018

### TOPICS COVERED

10:00 AM TO 11:00 AM: FIRST TIME BUYERS/ MORTGAGE
11:00 AM TO 11:30 AM: INVESTORS/ MORTGAGE
11:30 AM TO 12:30 PM: LANDLOARD & TENTANT ISSUES

### ALL ARE WELCOME

**LIMITED SEATS, CALL US TO RESERVE YOUR SEAT**
**647.205.5008/ 416.276.9999/ 416.271.4095**

### VENUE: STAR GROUP REALTORS

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
3-1286 KENNEDY RD., SCARBOROUGH
ONTARIO, M1P 2L5
OFFICE: 416.270.1111

Visit our website
**www.stargrouprealtors.com**

## LUCKY DRAW

FOR CHANCE TO WIN FREE

APPLE  i PAD

FROM APRIL 1. 2018 to JUNE 28. 2018.
DRAW DATE JUNE 30. 2018
(No Buy or Sell necessary)

BEDROOMS:3 / WASHROOMS:2




BEDROOMS:1 /WASHROOMS:1




BEDROOMS:3+1 /WASHROOMS:2




BEDROOMS:4+1/WASHROOMS:2




BEDROOMS:4+2 /WASHROOMS:4




**A PORTION OF OUR COMMISSION GOES TO SUPPORT SICK KIDS.**

CELEBRATING 25 YEARS OF MIRACLES



**VAHEESAN JEYAVEERASINGAM**
Sales Representative
Direct: 416-276-9999

**VIJAY SELVANAYAGAM**
Sales Representative
Direct: 416-271-4095

**CHANDRIKA THAMBIDURAI**
Broker
Direct: 647-205-5008

stargrouprealtors@gmail.com
WWW.STARGROUPREALTORS.COM

Most Productive Agents in Canada

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
416.270.1111 416.270.7000
1286 Kennedy Road Suite 03, Toronto, ON M1P 2L5

# 'எழுத்துலகில் அ. முத்துலிங்கம் 60'

- சோக்கல்லோ சண்முகநாதன் -

கி.ராஜநாராயணன், தோப்பில் முகமது மீரான் போன்ற கதை சொல்லிகள் பலரும் தன்னனுபவத்தைப் பிரதானமாகக் கொண்டுதான் கதைகள் எழுதினார்கள். இதற்கு வெளியில் அசோகமித்திரன், வண்ணநிலவன் போன்ற எழுத்தாளர்கள் தன்னனுபவத்தையும், கற்பனா சக்தியையும் கொண்டு கதைகள் எழுதினர். இந்த இரு போக்குகளுக்கும் இடையில் இயங்கியவர் எழுத்தாளர் அ. முத்துலிங்கம்.

முத்துலிங்கம் அவர்களுடைய கதைகளின் அமைப்பு, அசோகமித்திரனுடன் ஒப்பிடத்தகுந்தது. எந்தப் பின்னணியில் இருந்தாலும், எந்தவிதமான கருத்தியலைப் பேசினாலும் அவரது கதைகள் அடைய நினைக்கும் இலக்கு சுவாரசியம் தான். சுவாரசியம்தான் தன் கதைகளின் இலக்கு என்கிறார் அசோகமித்திரன். ஆனால் முத்துலிங்கத்தின் சுவாரசியம் வெகுளியானது. இந்தப் பூமிப் பரதேசத்தின் பேரார்வத்துடன் அணுகும் குழந்தையின் தன்மை அதற்குண்டு. சுவாரசியத்தின் வெளிப்பாடாக இருக்கும் சிரிப்பைக் கதைக்குள் வைத்திருப்பார்கள். அதிலும் அசோகமித்திரனின் நகைச்சுவை, கதைக்குள் புதிர் போன்றது. தேர்ந்த வாசகனால் மட்டுமே அதனை அவிழ்க்கமுடியும். முத்துலிங்கம் அந்தச் சிரமத்தை வாசகனுக்கு அளிப்பதில்லை.

இவ்வாறு மிகச் சிறந்த தமிழ் இலக்கியத் திறனாய்வாளர் கலாநிதி நா.சுப்பிரமணியன் அவர்கள் தமிழிசைக் கலாமன்றத்தில் நடைபெற்ற 'எழுத்துலகில் அ.முத்துலிங்கம் 60' என்ற நிகழ்வில் பேசினார். இந்நிகழ்வு ஏப்பிரல் 21, 2018 அன்று மாலை 3:30 மணியிலிருந்து 8:30 மணிவரை மிகச்சிறப்பாக நடைபெற்றது.

கலாநிதி சுப்பிரமணியன் அங்கு தொடர்ந்து பேசுகையில், தமிழின் புலம்பெயர் இலக்கியமானது தனது அவ்வடையாளத்தைக் கடந்து 'உலகத் தமிழ் இலக்கியம்' என்பதான புதிய பரிமாணத்தை எய்தத் தொடங்கியுள்ள வரலாற்றுச் சூழலில் நாம் வாழ்கிறோம். அவ்வாறான புதிய வரலாற்றை முன்னெடுக்கும் படைப்பாளிகளில் முதல் வரிசைக்கணிப்புக்குரியவராக திரு. அ. முத்துலிங்கம் அவர்கள் திகழ்ந்து வருகிறார் என்பது வெளிப்படை. அவர் அப்பணியை மேலும் புத்தாக்கத்துடன் தொடர வேண்டும் என வாழ்த்தி எனது இவ்வுரையை நிறைவு செய்கிறேன் என்றார்.

இலக்கியச்சோலையில் தேன்குடித்த வண்டாகினர் சபையோர். இவ்விழாவிற்கு தலைமை தாங்கிய வைத்திய கலாநிதி இலம்போதரன் அவர்கள் இப்பேச்சை 'மணிமகுடம்' என புகழாரம் சூட்டினார்.

எட்டு திசைகளைக் குறிப்பதாக, எட்டு இல்லத்தரசிகள் மங்கல விளக்கேற்றினார்கள். எட்டு நாவுக்கரசர்களும், நாவுக்கரசிகளும் ஆறு துறைகளில் சொற்பெருக்காற்றினார்கள். எல்லாமே சுவை நிறைந்த இலக்கியப் பேச்சுக்கள். கேட்டவர்கள் அதிஷ்டசாலிகள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் மகா வாக்கியத்தோடு தனது தலைமையுரையைத் தொடங்கிய வைத்திய கலாநிதி இலம்போதரன் அவர்கள் எட்டு அறிஞர்கள் எட்டுக்கோணத்தில் பேச இருக்கிறார்கள். சபையை நடத்துகின்ற கருவியாக நான் இருக்கின்றேன், என்று மிகச்சுருக்கமாகப் பேசி பேச்சாளர்களுக்கு இடமளித்தார். செல்வி சின்மயி அவர்களின் இனிய குரலில் தமிழ் வாழ்த்து, கனடிய தேசிய கீதம் என்பன இடம்பெற்றது. அகவணக்கத்தின் பின் உரைகள் தொடர்ந்தன.

தனது மணிப்பிரவாள நடைப்பேச்சினாலும், இலகு தமிழாலும் சபையைக் கட்டுக்குள் வைத்திருக்கும் பெண் பேச்சாளர்களில் ஒருவராகிய வைத்திய கலாநிதி மேரி கியூரி போல் அவர்கள் முதலில் பேசினார்.

'நாயென்றால் ஏதோ சந்திரகுலம், சூரிய குலத் தோன்றலில்லை. சாதாரண ஊர் நாய்தான். (எலுமிச்சை) எதிரி என்னும் கதையில் அந்தப் பாம்பு அவரை ஏமாற்றி முட்டையைத் திருடி தப்பிவிடுகிறது என்பதை அந்தப் பாம்புக்குக்கூட தன் புரவலரை ஒரு நாளாவது பார்க்க வேண்டுமெனத் தோன்றவில்லை (எதிரி) போன்ற வரிகளில் உள்ள புதுமையும், நகைச்சுவையும் குறித்து வைக்கப்பட வேண்டியவை.

கனடா வந்ததிலிருந்து நான் பார்க்கும் சின்னச்சின்ன பின்னல்கள் கொண்ட குழந்தைகளும், பெண்களும் 'நாலுநாள் வயது கொண்ட பாம்புக்குட்டிகள் போல் அவள் தன்னுடைய கேசத்தை தனித்தனியாக சுருட்டியும், பின்னியும் விட்டிருந்தாள்' என்பதையே நினைவுறுத்துகிறார்கள். பாம்புக்குட்டிகள் போல என்பதை எந்த எழுத்தாளரும் எழுதிவிடமுடியும். அந்த நாலு நாளில் நிற்கிறார் அ.முத்துலிங்கம். மேலும் ஒருபடி போய் அவள் பாம்புக்குட்டிப் பின்னல்கள் தோளைத் தொடப் பயந்தது போல ஒரு மரியாதையான தூரத்தில் நின்றன (மாற்று) என்று சேர்க்கிறார்.



அவர் கதைகளின் உவமைகள் எங்கும் காணக்கிடைக்காதவை. நனைந்த நிலக்கரி போன்ற கண்கள் (சின்ன ஏ பெரிய ஏ) என்னும் உவமையை எழுத எவ்வளவு தெரிந்து வைத்திருக்க வேண்டும். நிலக்கரி நனைந்த பின் எவ்வளவு கருமையும், ஒளியும், ஆழமும் ஒன்று சேர்ந்து கொண்டிருக்கும். காலம் காலமாய் வர்ணிக்கப்பட்ட கண்கள் எல்லாம் சட்டென அரைவரியில் தோற்றுவிட்டதே. மாதம் தவறாமல் அரசாங்கத்திலிருந்து ஒருவனுக்கு அனுப்பப்படும் கடிதத்திற்கு 'ஆரோக்கியமான ஒரு பெண்ணின் மாதவிடாய் போல' (23சதம்) என உவமிக்க எவருக்கு ஞானம் வரும். இவ்வாறு தொடர்ந்து மேரி கியூரி போல், அ.முத்துலிங்கம் அவர்களுடைய கதைகளை ஆணிவேறு அக்கு வேறாக புட்டுப்புட்டு ஆராய்ந்தார்.

எழுத்தாளர் அகில் சாம்பசிவம் அவர்கள் இலக்கிய உலகில் ஒரு நல்ல உழைப்பாளி. கனடாவில் மாத இறுதியில் நடைபெறுகின்ற தமிழ்ச்சங்கத்தின் இலக்கியக் கலந்துரையாடல்கள் இதற்கு நல்ல சாட்சி. இவர் எழுத்துலகில் பல நல்ல பணிகளைச் செய்து வருபவர். அ. முத்துலிங்கம் அவர்கள் பற்றிய அகிலின் பார்வையில்...

அ. முத்துலிங்கம் அவர்களுடைய சிறுகதைகளை முக்கியமான மூன்று காலகட்டங்களாக வகுத்து நோக்கலாம்.

- 1960களில் வெளிவந்த சிறுகதைகள்.
- 1990 களின் பிற்பகுதியில் வெளிவந்த சிறுகதைகள்.
- 2000க்குப்பின் இன்று வரையான காலப் பகுதியில் வெளிவந்த சிறுகதைகள்.

என்று தொடங்கி, 1960களில் தொடங்கி 60 ஆண்டுகளுக்கும் மேலாக படைப்புலகில் தன்னை முழுமையாகச் செயற்படுத்தி வருகின்ற ஈழத்தின் மிகப்பெரும் ஆழுமை அ. முத்துலிங்கம். தனது தொழில் நிமித்தம் பல்வேறு ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலும் வாழ்ந்துள்ளார். இது இவருக்குக் கிடைத்துள்ள வரம் என்றே கூறத் தோன்றுகிறது. 2000ம் ஆண்டளவில் புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்து வருகிறார். பரந்துபட்ட வாசிப்பும் பல்வேறு நாடுகளில் கிடைத்த அனுபவமும் இவரது நினைவுப் பெட்டகத்தை நிறைத்துள்ளன. அவ்வப்போது அவற்றில் கொஞ்சத்தை அள்ளி எடுத்து சிறுகதைகளாகத் தெளித்து விடுகிறார். 60வருடங்களாக விடாப்பிடியாக எழுதிவரும் எழுத்தாளர் என்பதோடு, எங்கெல்லாம் தமிழ்மக்கள் வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம் முத்துலிங்கத்தின் எழுத்துக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவருடைய படைப்புக்களைத் தேடிப்படிக்கின்ற தீவிர ரசிகர்கள் உலகெங்கும் இருக்கிறார்கள். அப்படி இவருடைய எழுத்துக்களில் என்னதான் இருக்கிறது என்பது ஆராயப்பட வேண்டியதே.

நிறைவாக அகில் சொல்கிறார், அ. முத்துலிங்கத்தின் பெரும்பாலான கதைகள் உண்மைக் கதைகளாக இருக்கின்றன அல்லது உண்மைக்கு மிகச் சமீபமாக இருக்கின்றன. தனது கதைக்கு சில விடயங்கள் தேவைப்படும்போது அது சார்ந்த அனுபவத்தை தேடிப்பெற்றுக்கொண்டு எழுதுகிறார். கதையை வாசிக்கும்போது வாசகனுக்கு அவர் அவை சார்ந்து தருகின்ற தகவல்கள் ஆச்சரியப்படுத்துவதாக அமையும். இவ்வாறு தொடர்ந்து பேசினார் அகில்.

முத்துலிங்கத்தின் சிறுகதைகளில் தன்கதைப் பிரக்ஞையும் உரைப்பிய உத்திகளும் என்ற கோணத்தில் இன்னுமோர் கலை ஆளுமை, கலாநிதி அமுது ஜோசப் சந்திரகாந்தன் அவர்கள் பேசினார்கள்.

வாழ்வில் நாம் வெகுதூரத்தில் பார்க்க, அல்லது விலத்தி வைக்க விரும்புவதை சிறுகதை அருகிலே கொண்டு வந்து சேர்த்து விடும் தன்மை கொண்டது. மற்றவர்கள் எப்படி வாழ்கின்றனர், சவால்களைச் சந்திக்கின்றனர் என்ற எமது இனந்தெரியாத உள்ளக ஆசைகளுக்கு சிறுகதை உணவும், உரமும் தந்து வளர்க்கின்றது. முத்துலிங்கத்தின் 'நாடற்றவன்' போன்ற கதைகளில் நாம் சந்திக்கும் பாத்திரங்கள் தூரதேசத்து ஒடுக்கப்பட்ட ஒருவனின் கதைபோல் தோன்றினும் அதன் உள்பியல்பிலும், உணர்வுச்செறிவிலும் அவை எமக்கு அருகாமையில் இடம்பெறுபவை அல்லது இடம்பெற்றவை.


தொடர்பேதும் இல்லாத எங்கோ, எதுவோ என்று எவரும் ஏறெடுத்துப்பார்க்க விரும்பாத சிலவற்றைக்கூட சிறுகதைகள் வாழ்வோடு தொடர்புபடுத்தி எமக்குமுன் கொண்டுவந்து விடுகின்றன. உள்மனத்திலும், சிந்தனையாலும் இதயத்திலும் ஏற்படும் கீறல்களும் சிறு கதைக்கு சிலவேளைகளில் தளம் அமைத்துத் தருபவை.

இவ்வாறு தொடர்ந்து பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன் அடிகள் பேசினார்கள்.

அ. முத்துலிங்கம் சிறுகதைகளில் பெண் பாத்திர வார்ப்பு என்ற மகுடத்தின் கீழ் கலாநிதி மைதிலி தயாநிதி பேசினார். தெளிந்த நீரோடைபோல் அமைதியாகவும், ஆழமாகவும் பேசக்கூடிய பேச்சாளர் என்று அடையாளம் காணப்பட்ட கலாநிதி மைதிலி அவர்கள் அங்கு பேசுகையில் 'கொம்புளானா' கதையில் கனடாவில் வதியும் பத்மாவதி என்ற இல்லத்தரசி கணவர் சொல்வதே வேதம் என்று ஆண்மைச் சமூக விழுமியங்களை உள்வாங்கியவளாக வாழ்கின்றாள். அவளின் இலக்கிய ரசனைக்கோ, நூல் வாசிப்புக்கோ சிறிதும் அனுசரணை இல்லாத கணவன், பண்பாடு, கலாச்சாரம் என்னும் கருத்தாயுதங்கள் மூலமாக அவளின் தனித்துவத்தினை மழுங்கடிக்கின்றார். சமையலறையே அவள் இருப்பிடமாகின்றது. தனது பிறந்த நாளுக்கு கணவன் சொற்படி தானே கேக் தயார் செய்து, இருபது பேருக்குச் சமைக்கிறாள். கணவனின் பிறந்தநாள் பரிசு தான் கேட்ட புத்தகமாக அல்லது ஜிம்மிற்கு போவதற்குரிய நைக்கி சப்பாத்து என்ற ஆவலொடு ஐயப்பட்டவள் நூடில்ஸ் சமைக்கும் சீனப்பாத்திரத்தினைக் கண்டு பெரும் ஏமாற்றம் கொள்கிறாள். தனது அடுத்த பிறந்தநாள் பரிசு என்ன சமையற் பாத்திரமாக இருக்குமோ என அவள் அஞ்சுவதாக கதை முடிவுறுகிறது. குடும்பமெனும் அமைப்புக்குள் பெண் எவ்வளவு கட்டுப்படுத்தப்பட்டு, கீழ்மையுறுகின்றாள் என்பதற்கு பத்மாவதிப் பாத்திரம் சாட்சி. 'கொம்புளானா' என்பது குடும்பத்திற்காக சுயநலமற்று உழைக்கும் பெண்ணிற்கான குறியீடாக இக்கதையில் வருகிறது. இவ்வாறு தொடர்ந்து பெண்பாத்திர வார்ப்பு பற்றி கலாநிதி மைதிலி, அ. முத்துலிங்கம் அவர்களின் சிறுகதைகளை ஆராய்ந்தார்.

இவ்விழாவில் கலாநிதி பார்வதி கந்தசாமி, இலங்கையிலிருந்து வருகை தந்த ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் திரு. ஞானசேகரன் ஆகியோரும் பேசினார்கள். ஏப்ரல் 2018 'ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை' 'எழுத்துலகில் அ. முத்துலிங்கம் 60' எனும் சிறப்பு மலராக வெளிவந்தது மிகவும் போற்றுதற்குரியது.

நிறைவில் எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்களின் ஏற்புரையல்ல, சில குறிப்புக்களோடு விழா இனிதே நிறைவெய்தியது.



sanmuganathan@thaiveedu.com

# அ. முத்துலிங்கம் கதைகளில் பெண் பாத்திரவார்ப்பு

- மைதிலி தயாநிதி -

> பெண் பிரச்சினைகளைப் புனைவிலக்கியத்தில் கையாளும் வல்லமை பெண் எழுத்தாளர்களிடத்தே மட்டுந்தான் உண்டு எனும் கருத்து பெண்ணிய உலகில் செல்வாக்குப் பெற்றதொன்று. ஆண்களினால் பெண் உணர்ச்சிகளை அசட்டை செய்யாது, அவளை இழிவுபடுத்தாது, அவளை ஒரு 'மனுஷி'யாகக் கணித்துப் புனைவிலக்கியம் படைக்கவியலுமா என்பதில் பெண்ணியலாளருக்கு எப்பொழுதுமே ஓர் ஐயம் உண்டு.

1965ம் ஆண்டு வெளிவந்த எழுத்தாளர் அ. முத்துலிங்கத்தின் அக்கா எனும் முதற் சிறுகதைத் தொகுப்புக்கு பேராசிரியர் கைலாசபதி அளித்த அணிந்துரையில் 'கடந்த பத்தாண்டு காலத்திற்குள் ஈழத்திலே தோன்றிய தரமான எழுத்தாளர்களுள் திரு.முத்துலிங்கமும் ஒருவர். அத்தகைய எழுத்தாளர் ஒருவரை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டு கொண்டதில் நான் எப்பொழுதுமே பெருமைப்படுவதுண்டு' என்று கூறுவதுடன் அமையாது, 'எழுத்துலகில் அவருக்கு நல்ல எதிர்காலமுண்டு 'என்று எதிர்வு உரைத்துத் தனது அணிந்துரையினை நிறைவு செய்கின்றார். அவ் அதிர்வு கூறுகை நூற்றுக்கு நூறுவீதம் பலித்திருப்பதை இன்று கண்கூடாகக் காண்கின்றோம். தமிழிலக்கிய உலகில் அறுபதாவதாண்டினைப் பூர்த்தி செய்து மணிவிழாக் காணும் முத்துலிங்கம் அவர்களுக்கு இவ்வமையத்தில் முதலில் எனது மகிழ்ச்சியையும் வாழ்த்துகளையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இக்கட்டுரை அவரின் சிறுகதைகளில் பெண் பாத்திர வார்ப்பு தொடர்பானது. 2016ல் அவரின் 138 சிறுகதைகள் அடங்கிய இரு தொகுதிகளை நற்றிணைப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இவற்றில் மூன்று சிறுகதைகளை மட்டுமே கவனத்தில் எடுத்துக் கொள்கிறேன். ஆண்மைய சமூகம் தனது அதிகாரத்தினை நிலைநிறுத்தும் திருமணம் எனும் நிறுவனத்தில் தனக்கு எழும் சிக்கல்களை பெண் எவ்வாறு கையாளுகின்றாள் என்பது குறித்த வெவ்வேறு விதமான பெண் பாத்திரச் சித்திரிப்பினை இக்கதைகளில் காணலாம்.

எனது கட்டுரைத் தலைப்பானது இலக்கியப் பிரதிகளில் மேலான கவனம் செலுத்த வேண்டும் எனும் தீர்மானத்திலிருந்து பிறந்தது. பாத்திரப் படைப்பினைப் புரிந்து கொள்வதற்குப் பிரதியை ஊன்றி வாசித்தல் அவசியம். பிரதியை ஆழமாக வாசித்த வாசகர்களும் தமது விமர்சனத்தில் பிரதியை விட எழுத்தாளருக்கே முக்கியத்துவம் அளிக்கக் காணலாம். எழுத்தாளர் முத்துலிங்கத்தின் எழுத்துகள் குறித்து மாறுபட்ட பார்வைகள் உள்ளன. எனவே, அவரின் எழுத்துகள் குறித்த விமர்சனங்களின் அடிப்படைக்கருதுகோள்கள் தொடர்பான எனது நிலைப்பாட்டினைச் சுருக்கமாகக் கூறிவிட்டுப் பெண் பாத்திரவார்ப்பு விடயத்திற்குச் செல்கிறேன். இலக்கியம் என்றால் என்ன? இலக்கியத்தின் பயன் என்ன? இலக்கியத்திற்கும், சமூகத்திற்கும் இடையில் உள்ள தொடர்பு என்ன? போன்ற அடிப்படையான விவாதங்களை இவ்விளக்கம் முடுக்கிவிடலாம்

புனைவிலக்கிய எழுத்தாளர், ஆக்கம், வாசகர் எனும் இம்மூன்றிலும் தமிழிலக்கிய உலகைப் பொறுத்தவரையில் எழுத்தாளருக்கே அதீத முக்கியத்துவம் தற்காலத்தில் அளிக்கப்பட்டு வருவதாக எனக்குப் படுகிறது. இது எழுத்தாளரை மையப்படுத்திய விமர்சனமாக அவர் குறித்த மிகையான புகழ்ச்சி மொழியாக, அல்லது கண்டனமாகப் பொது வெளியில் அமைகின்றது. இவ்விரண்டுமே ஆரோக்கியமான இலக்கியச்சூழலுக்கு உகந்தவை அல்ல.

இத்தகைய இருதுருவக் கருத்துகளின் தோற்றப்பாட்டிற்குக் காரணம் எழுத்தாளருக்கும், அவர் படைப்புக்கும் இடையில் உள்ள தொடர்பு குறித்த மிகைப்படுத்தப்பட்ட, பகுத்தறிவுக்கு ஒவ்வாத சிந்தனையாகும். இது 'நல்ல' மனிதரையும் 'சிறந்த' இலக்கியத்தினையும் தொடர்புபடுத்தி 'நல்ல மனிதர் சிறந்த இலக்கியம் படைக்கின்றார்' எனும் கருத்தாக அமைகின்றது. (இது 'கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் நல்லவர்கள்' அல்லது 'மாமிசம் புசிக்காதவர் மதுவைத் தொடார்' என்ற பகுத்தறிவுக்கு ஒவ்வா நம்பிக்கைகள் போன்றது.) இலக்கியத்தரம் எழுத்தாளரின் வாழ்வியல் அம்சங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவது அன்று. எழுத்தாளரை விடுத்து அவரின் படைப்பினை மட்டும் எம்மால் பார்க்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

இரண்டாவது நேரடி அனுபவமின்றி இலக்கியம் படைக்க முடியாது எனும் கருத்து முழுமையாக ஏற்றுக் கொள்ளக் கூடியதன்று. வாசிப்பு, கேள்வி, கற்பனை என்பனவும் படைப்பாக்கதிற்கு இன்றியமையாதவை ஆகும். என் மனம் தொட்ட, 'கறுப்பு அணில்' என்ற தமிழ் அகதி பற்றிய முத்துலிங்கத்தின் சிறுகதையை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இது எழுத்தாளனின் நேரடி அனுபவம் என்று சொல்வதற்கிடமில்லை. வாசிப்பு, நேரமுகாமைத்துவம், உழைப்பு, எழுத்தாற்றல் என்பனவே சிறுகதை எனும் இலக்கிய வடிவத்தினைத் தொடர்ச்சியாகப் பரிசீலனை செய்யவும், அதன் மூலமாக இலக்கிய உலகில் இதுகாறும் நிலைத்து நிற்கவும் முத்துலிங்கம் அவர்களுக்குத் துணை போனவை என்பது என் கருத்து. அவரின் 1995ம் ஆண்டு இரண்டாம் இலக்கியப் பிரவேசத்தின் பின்னர் அவர் எழுதிய கதைகளே இதற்குச் சான்று. இவற்றில் கணிசமானவை அறிவுப் புலங்களை அடிப்படையாகக் கொண்டவை. தீவிர வாசிப்பு, ஆராய்ச்சியின் பின்னர் எழுதப்பட்ட கதைகள் போன்று தோற்றுகின்றன. மேலும் நூல்களுக்கிடையிலான இடையீட்டுப்பண்பு மேவிய (intertextuality) சிறுகதைகளும் உண்டு. இது தொடர்பாக சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், பெரியபுராணம், கந்தபுராணம், இதிகாசங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். அவரின் மொழி அனுபவங்களைப் பேசும் எளிமையான மொழி எனினும் கதை கூறும் பாங்கும், உத்திகளும் (narrative techniques) எப்பொழுதும் எளிமையானவை அல்ல. எனவே பல சமயங்களில் அவர் கதைகள் வாசகரின் ஆழமான கவனத்தைக் கோருபவை. 'கொழுத்தாடு பிடிப்பேன்', 'கறுப்பு அணில்' செங்கல், என்பவற்றை எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம்.

மூன்றாவது இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் இடையில் உள்ள தொடர்பு. இலக்கியம் சமூகத்தைக் கண்ணாடி போன்று பிரதிபலிக்கின்றது எனும் கருத்து சர்ச்சைக்குரியது. படைப்பிலக்கியம் காட்டும் உலகம் எழுத்தாளரால் புனையப்பட்ட உலகம். அவர் சூழலிலிருந்து தனது ஆக்கத்தின் நோக்கத்தினைப் பூர்த்தி செய்யும் வகையில் தேவையான அம்சங்களை மாத்தி ரம் தெரிந்தெடுத்து தனது படைப்புலகத்தை சிருஷ்டிக்கின்றார். நிஜ உலகின் சாயல் அவர் படைப்புலகில் இருக்கலாம். ஆனால், இரண்டும் ஒன்றல்ல. எழுத்தாளரின் படைப்பொன்றினை அடிப்படையாக வைத்து, அப்படைப்புச்சித்திரிக்கும் சமூகத்தினையோ குழுவினையோ மதிப்பிடல் எவ்வளவு தூரம் சரியானதாக இருக்கும் என்ற கேள்வியை அசட்டை செய்யயியலாது.

நான்காவது, எவ்வளவுதான் மன அசௌகரியம் இருப்பினும், சமூகத்தின் பாலியல் தொடர்பான தூய்மைவாத சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டதே இலக்கியம் என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். முதியவர் ஒருவரின் மனதில் பதின்மவயதுப் பெண் உண்டாக்கும் சபலங்களை வர்ணிக்கும் 'வடக்கு வீதி', பருவமடையா பதின்மவயதுச் சிறுமியிடம் திருமணமான ஒருவர் கொள்ளும் பாலியல் உறவினை இலைமறைகாயாகப் பேசும் 'பக்குவம்', கணவன் கொழும்பில் வேலைசெய்யும் போது புது மணப்பெண்ணுக்கு அயலவனான இளைஞனுடன் ஏற்படும் உறவினை மையமாகக் கொண்ட 'சங்கற்பநிராகரணம்' முதலான கதைகள் பேசுபொருள் அடிப்படையில் ஒதுக்கப்படவியலாதவை.

## பாத்திரவார்ப்பு:

பாத்திரவார்ப்பு என்பது புனை விலக்கியத்தில் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது. எனினும் சிறுகதை சம்பந்தபட்ட அளவில் இதனை மிகச் சரியான கூற்றாகக் கருதமுடியாது. அதன் சுருக்கமான பண்பு (brevity) பாத்திரத்தினை வளர்த்தெடுப்பதற்குத் தடையாக உள்ளது. எனவே, நாவல் அளவிற்கு சிறுகதையில் பாத்திர வார்ப்பு முழுமையடைந்து விடுவதில்லை. பாத்திரங்களின் சமூகப்பின்னணி, உடல் தோற்றம், உளவியல் குறித்த செய்திகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே சிறுகதையில் கிடைக்கின்றன. மேலும், சிறுகதையில் பாத்திரவார்ப்பானது நேரடி வர்ணனையாகவோ (direct characterization)அன்றி, பாத்திரத்தின் பேச்சு, செயற்பாடு, எண்ணவோட்டங்கள் தொடர்பான விவரணங்களிலிருந்து உய்ந்தறிந்து கொள்ளக் கூடியதாகவோ (indirect characterization) அமையும்.

எனது தலைப்பினைத் தேர்ந்தெடுத்தமைக்கு அவரின் அக்கா சிறுகதைத் தொகுதி ஒரு காரணமாக அமைகின்றது. பாத்திரங்களின் மனப்போராட்டத்தை மையமாகக்கொண்ட கதைகள், உணர்ச்சிபூர்வமான நடை - இவையே என் லயிப்பிற்குக் காரணமாகலாம். ஆனால், இதற்குப் பின்னர் அவர் எழுதிய கதைகளில் உணர்ச்சி கொப்பளிக்கும் இந்நடை அருகிவிட்டது. படர்க்கையில் கதைசொல்லி கதையைச் சொல்லும்போது தனக்கும் பாத்திரங்களுக்குமிடையே இடைவெளியைக் கவனமாகப் பேணுகிறார். 'புதுப்பெண்சாதி', 'இன்னும் முன்னேற இடமுண்டு' முதலான கதைகளில் இப்பண்பு மிகத் தூக்கலாகத் தெரிகிறது. இத்தகைய கதைகள் வாய்மொழிக் கதைப் பண்பின் சாயலுடையவை. அக்கா தொகுப்பில் உள்ள பெண் பாத்திரங்கள் அனைத்தும் இலங்கை சார்ந்தவை. ஆனால் அவர் பின்னர் வெளியிட்ட தொகுப்புகளில் பல்வேறு நாடுகள், சமூகங்களைச் சேர்ந்த பெண் பாத்திரங்கள் இடம் பெறுகின்றன. தமிழில் சர்வதேசியத்துவத்தைக் கொணர முயல்வன இக்கதைகள்.

பெண்ணுக்கும் ஆணுக்கும் பொதுவான பிரச்சினைகளைப் பொருளாகக் கொண்ட கதைகளை அவர் எழுதியுள்ளார். உதாரணமாக அவரின் 'சங்கற்பநிராகரணம்', 'உன்மத்தராயிருந்தோம்' எனும் சிறுகதைகள் முறையே மனைவியினதும் கணவனினதும் திருமணத்திற்கு வெளியேயான உறவு பற்றிப் பேசுவன. அதுபோன்று அவரின் 'கடவுச் சொல்', 'கடன்' என்பன முறையே முதுமையுற்ற பெண், ஆண் வெளிநாட்டில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பானவை. அதேசமயம் பெண்ணுக்கே உரித்தான பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்ட கதைகளும் உண்டு. அத்தகைய பெண் மையக்கதைகளே என்னை ஈர்த்தவை.

பெண் மையக் கதைகள் சிலவற்றில் இழையோடும் சோகத்தினைக் கவனியாது இருக்கவியலாது. இந்த சோகத்தின் மூல காரணமாகத் திருமண வாழ்வு அமைகின்றது. வெளிநாட்டைக்களங்களாகக் கொண்ட 'கொம்புளானா', 'லூக்கா 22:34', 'இன் னும் முன்னேற இடமுண்டு' எனும் மூன்று கதைகளை மட்டும் தெரிந்தெடுத்து, இக்கதைகளிற் காணப்படும் பெண்பாத்திரங்கள் தமது குடும்பவாழ்க்கையின் அதிருப்தி, சந்தோஷமின்மையை எவ்வாறு சமாளிக்கின்றன என்பதைப் பார்ப்போம். இவை மூன்றும் பெண் விவரணச்சித்திரங்களாக விரிகின்றன.

'கொம்புளானா' கதையில் கனடாவில் வதியும் பத்மாவதி என்ற இல்லத்தரசி கணவர் சொல்வதே வேதம் என்று ஆண்மையச் சமூக விழுமியங்களை உள்வாங்கியவளாக வாழ்கிறாள். அவளின் இலக்கிய ரசனைக்கோ, நூல் வாசிப்புக்கோ சிறிதும் அனுசரணை இல்லாத கணவர் பண்பாடு, கலாசாரம் எனும் கருத்தாயுதங்கள் மூலமாக அவளின் தனித்துவத்தினை மழுங்கடிக்கின்றார். சமையலறையே அவள் இருப்பிடமாகின்றது. தனது பிறந்த நாளுக்குக் கணவன் சொற்படி தானே 'கேக்' தயார் செய்து இருபது பேருக்குச் சமைக்கின்றாள். கணவனின் பிறந்தநாட் பரிசு தான் கேட்ட புத்தகமா அல்லது 'ஜிம்க்குப்' போவதற்குரிய 'நைக்கி' சப்பாத்தா என்று ஆவலொடு ஐயப்பட்டவள் நூடில்ஸ் சமைக்கும் சீனப்பாத்திரத்தினைக் கண்டு பெரு ஏமாற்றம் அடைகின்றாள். தனது அடுத்த பிறந்தநாள் பரிசு என்ன சமையற்பாத்திரமாக இருக்குமோ என அவள் அஞ்சுவதாக கதைமுடிவுறுகிறது. குடும்பமெனும் அமைப்புக்குள் பெண் எவ்வளவுகட்டுப்படுத்தப்பட்டு, கீழ்மையுறுகின்றாள் என்பதற்கு பத்மாவதி பாத்திரம் சாட்சி. கொம்புளானா என்பது குடும்பத்துக்காக சுயநலமற்று உழைக்கும் பெண்ணிற்கான குறியீடாக இக்கதையில் வருகிறது.

திருமணம் எனும் வெஞ்சிறையில் வாடி

தொடர்தல் 98ம் பக்கம்

# அ. முத்துலிங்கத்தின் படைப்பாளுமை

- நா. சுப்பிரமணியன் -

நமது தலைமுறை சார்ந்த தமிழிலக்கியச் சூழலிலே முக்கிய இலக்கிய ஆளுமைகளில் ஒருவராகத் திகழ்ந்து வருபவர் திரு. அ. முத்துலிங்கம் அவர்கள். எழுத்தாளர் என்ற நிலையிலே திரு.அ. முத்துலிங்கம் அவர்கள் புனைகதை மற்றும் கட்டுரை ஆகியவற்றில் தனிக் கவனம் செலுத்தி வந்துள்ளார். புனைகதைத் துறையிலே குறிப்பாகச் சிறுகதை எழுதுவதில் அவர் தனிக்கவனம் செலுத்திவந்துள்ளார். செலுத்தி வருகிறார். ஆரம்பகாலம் முதல் அவர் எழுதிய சிறுகதைகள் அக்கா(1964), திகடசக்கரம்(1995), வம்சவிருத்தி(1996) முதலிய பெயர்களிலான பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 2016 வரையிலான இவருடைய சிறுகதையாக்கங்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டு அ. முத்துலிங்கம் சிறுகதைகள் என்ற தலைப்பில் இருபெருந்தொகுதிகளாக வடிவங்கொண்டுள்ளன. உண்மை கலந்த நாட்குறிப்புகள்(2008) கடவுள் தொடங்கிய இடம் ஆகிய தலைப்புகளில் இரு நாவல்களையும் அவர் எழுதியுள்ளார்.


மேற்சுட்டியவாறான அவருடைய எழுத்தாக்கங்களும், தொடர்ந்து அவர் அத்துறையில் இயங்கி வரும் முறைமைகளும் சமகாலத் தமிழிலக்கியச் சூழலிலே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. அவர் உலகுதழுவிய நிலையிலே தனக்கான ஒரு பெரும் வாசகர் வட்டத்தை உருவாக்கியுள்ளார். அத்துடன் சமகாலத் தமிழிலக்கிய வரலாற்றில் தனக்கான ஒரு தடத்தை - தனி அடையாளத்தை ஆழமாகவே பதித்தவராகவும் திகழ்கிறார்.

தமிழகத்திலும் ஈழத்திலும் இவருடைய எழுத்துகள் பெற்றுள்ள வரவேற்புகளுக்கான முக்கிய சான்றுகளாக இணைய இதழான சொல்வனம், ஈழத்தின் பிரபல இலக்கிய இதழான ஞானம் ஆகியன இவரை மையப்படுத்தித் தயாரித்துள்ள சிறப்பு வெளியீடுகளைச் சுட்டலாம். சொல்வனம் இதழ் தனது 166வது வெளியீட்டை(07-02-2017) 'அ.முத்துலிங்கம் சிறப்பித'ழாக வெளியிட்டு இவரைச் சிறப்பித்துள்ளது. அது இத்தகைய சிறப்புக் கௌரவத்தைத் தமிழின் முதல்வரிசை இலக்கியவாதிகளாகத் திகழ்ந்தவர்களான க.நா.சுப்ரமணியம், தி. ஜானகிராமன், வெங்கட் சாமிநாதன் மற்றும் அசோகமித்திரன் ஆகியவர்களுக்கே வழங்கிவந்துளது என்பது இங்கு நமது கவனிப்புக்குரிய தகவல்ஆகும். ஈழத்தின் ஞானம் இதழின் 215வது வெளியீடானது எழுத்துலகில் அ.முத்துலிங்கம் 60 சிறப்பு மலர் ஆக அமைந்துள்ளது. ஈழத்தின் முதல் வரிசைத் தமிழ் இலக்கியவாதிகளும் புலம்பெயர் சூழல்கள்சார் ஈழத்து இலக்கிய வாதிகளும் திரு. அ.முத்துலிங்கம் அவர்களைப் பற்றிய தங்களுடைய பார்வைகளை அதில் பதிவுசெய்துள்ளனர். சொல்வனத்தில் இடம்பெற்ற அவரைப்பற்றிய பதிவுகளுக்கான ஒரு சான்று வருமாறு:

'கலையாக்கத்தை ஒரு தொழில்நுட்பம் போலப் பயின்று பயின்று தேர்ச்சிபெற்றவராக இருக்கிறார் முத்துலிங்கம். இருபதாண்டுகளுக்கும் மேல் பழகிப்பழகி இன்று அவருக்கு வசப்பட்டுவிட்ட ஒன்றாக மிளிர்கிறது அந்தக்கலை. இன்று எந்த அபூர்வமான தகவலையும் அவர் அழகானதொரு கதையாக மாற்றியமைப்பதில் வல்லவராக இருக்கிறார். தகவலையும் கலையையும் கச்சிதமான முறையில் ஒன்றிணைத்து புதிதைப் புதிதாக உருவாக்கும் படைப்பாளிகளில் இன்றைய காலகட்டத்தில் முத்துலிங்கமே முதன்மையான கலைஞர்.' தமிழகத்தின் முதலவரிசை இலக்கியவாதிகளுள் ஒருவரான திரு. பாவண்ணன் அவர்களது மதிப்பீடு இது. *(சொல்வனம் இதழ்: 166 - 07-02-2017)*

தமிழின் முதல்வரிசை எழுத்தாளராகவும் திறனாய்வாளராகவும் திகழ்ந்துவரும் திரு. ஜெயமோகன் அவர்கள் தமது இணையதளத்தில் அ.முத்துலிங்கம் அவர்கள் பற்றித் தந்துள்ள மதிப்பீடொன்றையும் வாசகர் கவனத்துக்கு முன்வைக்க விழைகிறேன்.

'மெல்லிய நகைச்சுவையும் சொல்லாத வற்றால் ஆன படலமாகக் கண்டுகொண்டவற்றை அமைக்கும் கலைத்திறனும் கொண்ட படைப்புகள் அ. முத்துலிங்கம் எழுதுபவை. அனைத்துக்கும் மேலாக தமிழ்ப் படைப்பாளிகளில் அவர் ஒருவரே உலக மனிதன். எந்த நாகரிகத்தின் மேலும் இளக்காரம் சற்றும் அற்ற நோக்கு கொண்டவர். ஏனென்றால் தன் நாகரீகத்திற்குள் தன்னைக் குறுக்கிக் கொள்ளாதவர்.' *(ஜெயமோகன்- jeyamohan.in- February 2, 2018)*



இவ்வாறாக திரு. அ.முத்துலிங்கம் அவர்கள் பெற்றுள்ள கவனிப்புகள், கணிப்புகள் ஆகியவற்றுக்கான முக்கிய காரணிகளுள் ஒருவகையின அவர் தமது கதைகள் மற்றும் கட்டுரைகள் ஊடாக வாசகர் தரிசனத்துக்கு முன்வைக்கும் 'புதுவகை அநுபவ அம்சங்க'ளும் 'நுட்பமான தகவல்க'ளும் ஆகும். இவை ஒரு இலக்கிய ஆக்கத்திலே 'உள்ளடக்க அம்ச'ங்களாகக் கொள்ளப்படுவன. திரு. முத்துலிங்கம் அவர்கள் பெற்றுள்ள கவனிப்புகள், கணிப்புகள் ஆகியவற்றுக்கான இரண்டாவதான காரணி, அவர் மேற்சுட்டிய 'உள்ளடக்க அம்ச'ங்களை வாசகர் கவனத்துக்கு ஏற்றவகையில் 'எடுத்துரைத்துள்ள முறைமைகள்' சார்ந்ததாகும். குறிப்பாக, மேற்சுட்டிய அநுபவ அம்சங்களையும் புதுவகைத் தகவல்களையும் வாசகர் மத்தியில் இட்டுச்செல்வதில் அதாவது வாசகர்களின் உள்ளங்களில் பதியவைப்பதில் அவர் கொண்டிருந்த தனிக்கவனமே இங்கு எடுத்துரைப்பு முறைமை எனச் சுட்டப்படுகிறது. 'எவ்வகை உணவை எப்படி என்ன பதத்தில் தயாரித்துப் பரிமாற வேண்டும்' என்பதில் அவர் மிகத்தெளிவாக இருந்தார். மேற்சுட்டியவாறாக முத்துலிங்கமவர்களின் படைப்புகளின் உள்ளடக்கநிலை மற்றும் எடுத்துரைப்பு முறைமை என்பன சார்ந்த அம்சங்களே இங்கு படைப்பாளுமை என்ற வகையில் நமது கவனத்துக்குரியவாகின்றன.

படைப்பாளுமை என்பது குறித்த படைப்பாளியின் இலக்கிய நோக்கு மற்றும் புனைதிறன் ஆகிய இரு கூறுகளையும் உள்ளடக்கியதாகும். இலக்கியம் என்ற கலையாக்கத்தின் இயல்பு பற்றியும் அதன் வாசிப்புநிலை மற்றும் பயன்பாட்டுநிலை ஆகியன தொடர்பாகவும் ஒருவர் கொண்டுள்ள கருத்தாக்கங்களின் தொகுப்பே இங்கு இலக்கிய நோக்கு என்பதால் சுட்டப்படுகின்றது. இதனை அவருடைய இலக்கியக்கொள்கை என்றும் கூறலாம். புனைதிறன் என்ற சொல்லானது குறித்த படைப்புக்கான உள்ளடக்கத் தேர்வு மற்றும் அதனை எடுத்துரைக்கும் முறைமை ஆகியவற்றை உள்ளடக்கியதாக விரிந்த பொருட்பரப்புடையதாகும். அவ்வகையில் அது, குறித்த படைப்பாளியின் உலக நோக்கு(Vision), படைப்புக்கான விடயத் தேர்வு, அதற்கான பார்வைகளின் எல்லைகள், படைப்பின் கட்டமைப்புசார் உத்திகள் மற்றும் மொழியாளுமை ஆகிய பலவற்றை அச்சொல் தொகுத்துச் சுட்டி நிற்கிறது. எந்தவொரு படைப்பாளியைப் பற்றிய மதிப்பீடுகளை முன்வைக்க முற்படும்போதும் மேற்சுட்டியவாறான படைப்பாளுமை சார் அம்சங்களைக் கருத்துள் கொண்டு அணுகுவதே பொதுவான திறனாய்வு முறைமையாகும்.

இவ்வகையில் திரு. அ. முத்துலிங்கம் அவர்களின் இலக்கிய நோக்கு பற்றிய பார்வையிலே முதலிற் குறிப்பிட வேண்டிய அம்சம் அவர், இலக்கிய ஆக்கத்தை மகிழ்ச்சி தரும் ஒரு அநுபவநிலையாகக் கருதிவருபவர் என்பதாகும். படைப்பவர் மற்றும் வாசகர் ஆகிய இரு சாராருக்கும் இந்த அநுபவம் முக்கியம் எனக் கருதும் அவர், மேற்படி இரு சாராருள் படைப்பவரின் இன்ப அநுபவத்துக்கே முதலிடம் அளிக்கிறார். 'படைப்பானது தன்னளவில் தனித்துவமான ஒன்று' என்றும் அவர் கருதுகிறார். 'படைப்பின் பொருளே தனக்குரியவடிவத்தைத் தேர்ந்துகொள்கிறது' என்பதோடு அது 'தன்னைத்தானே எழுதிக் கொள்கிறது' என்பதுமான அவருடைய கருத்துகள் இதனை உணர்த்துவன. இவ்வாறான படைப்பை வாசகரிடம் சென்றடையக் கூடியவகையில் எடுத்துரைக்க வேண்டியது 'எழுத்தாளனின் பொறுப்புணர்வு சார்ந்த செயற்பாங்கு' என்பதானகருத்தையும் அவர் கொண்டுள்ளார்.

அவருடைய இவ்வாறான கருத்து நிலைகளுக்கான சான்றுகளை அவருடைய நேர்காணல் பதிவுகளிலிருந்து நாம் தெளிவாகவே தெரிந்து கொள்ளலாம். குறிப்பாக வடஅமெரிக்காவிலிருந்து வெளிவரும் தென்றல் இதழிலும் ஈழத்திலிருந்து வெளிவரும் ஞானம் இதழிலும் இடம்பெற்றுள்ள அவருடைய நேர்காணல் பதிவுகளில் அவரது மேற்படி கருத்துகள் தெளிவாகவே பதிவாகியுள்ளன. சில சான்றுகள் வருமாறு:

"உண்மையில் ஓர் எழுத்தாளர் படைப்புச்சம் தரும் இன்பத்துக்காகவே எழுதுகிறார். வாசகனுக்குக் கிடைக்கும் இன்பம் இரண்டாம் பட்சம் தான். நான் ஒரு சிறுகதை எழுத உட்காரும் போது மனதில் ஒரு திட்டம் இருக்கும். ஆனால், அச்சாகி வெளிவருவது ஒன்று. அதுதான் படைப்பு. சில எழுத்தாளர்கள் 'கதை தன்னைத்தானே எழுதுகிறது' என்று கூறுவார்கள். எழுத்தாளர் தள்ளிநின்றாலே போதும், நல்ல கதை பிறந்துவிடும்" *(தென்றல் -பெப்ரவரி 2013.ப.48)*

"ஒரு படைப்பு வாசகரைச் சென்று அடைய வேண்டும். அதுதான் முக்கியமானது. அது தேவையில்லையென்றால் எழுத்தாளர் கதையை எழுதிப் பெட்டியிலே பூட்டி வைப்பதற்குச் சமம். ஒரு கதைக்கு ஆரம்பம், நடு, முடிவு என்று இருக்கவேண்டும். ஆரம்பம் வாசகரை உள்ளே இழுக்கவேண்டும். முடிவு வாசகரை வெளியே போகாமல் தடுத்தவேண்டும். அதாவது கதை முடிந்த பின்னரும் அவர் சிந்தனை கதையின் பாதையில் தொடர்ந்து ஓடவேண்டும். கதை முடியும் சமயம் நீங்கள் புதுப்பிக்கப்பட்டதாக உணர வேண்டும் ..." *(ஞானம்- ஜனவரி 2017. ப. 757-58)*

திரு. அ.முத்துலிங்கம் அவர்கள் கொண்டிருக்கும் இக்கருத்தாக்கங்கள் தமிழ், சம்ஸ்கிருதம் முதலிய இந்திய மொழிகளிலும் ஆங்கிலம், பிரஞ்சு, ரஷ்யன் முதலான பல்வேறு உலக மொழிகளிலும் வெளிவந்த இலக்கியங்கள் பலவற்றையும் வாசித்துச் சுவைத்த அநுபவங்களிலிருந்து அவரால் உருவாக்கிக் கொள்ளப்பட்டவையாகும்.

இவ்வாறு திரு. அ. முத்துலிங்கம் அவர்கள் கொண்டுள்ள 'இலக்கிய நோக்கு' சார் அம்சங்கள் இலக்கியக் கோட்பாட்டு நிலையில் 'நவீனத்துவம்'(Modernism) என்ற வகைமை சார்ந்தனவாகும். இலக்கியத்தின் அநுபவ நிலைக்கு முதன்மைதரும் கோட்பாடு இது. கலை, இலக்கியம் என்பவற்றின் அடிப்படையான அம்சம் 'படைப்பாளியின் மனவாழ்க்கை'தான் - அதாவது படைப்பு மனம்தான் என்பதே மேற்படி நவீனத்துவம் என்ற கோட்பாட்டின் அடித்தளம் ஆகும். 'இலக்கியம் என்பது அறத்தைப் போதிப்பதற்கும் சமூகச்சூழல்சார் பிரச்சினை அம்சங்களைப் பதிவுசெய்வதற்கான ஒரு கருவி' என்ற வகையில் நிலவிவந்த சிந்தனைகளை மறுதலிக்கும் வகையில் மேலை நாடுகளில் உருவான கோட்பாடு இது என்பதே வரலாறு தரும் செய்தியாகும். இவ்வாறாக 'அநுபவ நிலை'க்கு முதன்மை தரும் இந்தக்கோட்பாட்டிலே,'படைப்பாளியானவர் தமது அவ்வநுபவ நிலைகளைச் சிந்தாமல் சிதறாமல் வெளிப்படுத்த வேண்டும்' என்பதும், 'அம்முயற்சிக்கு மொழி என்ற கருவியைச் சாத்தியப்படக்கூடிய அளவுக்குச் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்'என்பதுமான சிந்தனைகள் அழுத்தமாக முன்வைக்கப்பட்டுள்ளன.

தமிழிலே 'சிறுகதை மன்னன்' என்ற சிறப்பு அடைமொழி பெற்றுள்ளவரான புதுமைப் பித்தன் முதல் இன்றைய முதல்வரிசைப் படைப்பாளியாகத் திகழும் ஜெயமோகன் வரையான பலர் - க.நா. சுப்ரமணியம், தி.ஜானகிராமன், சுந்தர ராமசாமி, அசோகமித்திரன், கி. ராஜநாராயணன், தோப்பில் முகமது மீரான், நாஞ்சில் நாடன், வண்ண நிலவன் முதலியோர் மேற்படி நவீனத்துவத் தளம்சார் எழுத்தாளர்களாகவே திகழ்ந்

தொடர்தல் 98ம் பக்கம்

# அ. முத்துலிங்கத்தின்...

96ம் பக்கத் தொடர்ச்சி...

தவர்கள் திகழ்பவர்கள். இவர்களின் எழுத்துகளின் ஊடாகவே தமிழின் நவீனத்துவ புனைகதை மரபு இன்றுவரை வளர்ந்து வந்துள்ளது வளர்ந்துவருகிறது. இதுவே தமிழின் 'மையப்பட்ட புனைகதை மரபு' மாகும். இந்த மையப்பட்ட மரபுசார்ந்த ஒரு படைப்பாளியாகவே திரு.அ.முத்துலிங்கம் அவர்களும் திகழ்ந்துவருகிறார் என்பதே அவருடைய படைப்பாளுமை பற்றிய பார்வையில் தெளிந்துகொள்ளப்பட வேண்டிய முக்கிய அடிப்படை அம்சமாகும்.

'நவீனத்துவ எழுத்தாளர்க'ளாக மேலே நாம் நோக்கிய தமிழக எழுத்தாளர்கள் பலரும் தத்தம் படைப்பாளுமை நிலைகளிலே குறிப்பிடத்தக்க தனித்தன்மைகள் கொண்டவர்களாவர். அவர்களுடன் ஒப்பிடும் நிலையில் அ. முத்துலிங்கமவர்கள் தமக்கான தனி அடையாளங்களைத் தமது படைப்புகளில் தெளிவாகவே புலப்படுத்தி நிற்பவராவார். இத்தொடர்பிலே, 'மண்குதிரை' என்ற புனைபெயர் பூண்ட இலக்கியவாதியொருவர் 04-03-2018 திகதியிட்டதி இந்து நாளிதளிலே அ. முத்துலிங்கம் அவர்களை மையப்படுத்தி, 'கதையெல்லாம் தித்திப்பு' என்ற தலைப்பில் எழுதிய சிறு கட்டுரையில் முன்வைத்த அவதானிப்பொன்றை இங்கு சுட்ட விழைகிறேன்.

மேற்படி கட்டுரையிலே அ. முத்துலிங்கம் அவர்கள் தமிழகத்தின் முன்னணி எழுத்தாளர்களான கி. ராஜநாராயணன், வண்ணநிலவன் மற்றும் அசோக மித்திரன் ஆகியோருடன் ஒப்பிடப்படுகிறார். ராஜநாராயணனின் எழுத்தைக் கரிசல் காட்டு விவசாயிகளின் அநுபவங்களுடனும் அசோக மித்திரன் மற்றும் வண்ணநிலவன் ஆகியோருடைய எழுத்துகளை நடுத்தர வர்க்கத்தினரினுடைய அநுபவங்களுடனும் அடையாளப்படுத்தி வரையறுத்துக்கொள்ள முடியும் எனக் கூறும் 'மண்குதிரை' அவர்கள், 'முத்துலிங்கமவர்களின் எழுத்துகளை அவ்வாறான குறித்த வரையறைக்குள் அடக்குவது சாத்தியமில்லை' என்ற கருத்தை முன்வைத்துள்ளார். 'முத்துலிங்கம் கதைகள் பாடுபொருள்களிலும் நிலக்காட்சிகளிலும் ஒன்று மற்றொன்றிலிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டுபவை' என்பதே அவருடைய கணிப்பாகும்.

இவ்வாறான ஒப்பீட்டுப்பார்வைகள் தமிழக இலக்கியவுலகிலே திரு. அ. முத்துலிங்கமவர்கள் தனிக் கவனிப்புப் பெற்றுவருவதை உணர்த்துவன. அத்துடன், இவ்வகை ஒப்பீடுகளின் பொருத்தப்பாடுகள் எதிர்காலத்தில் நிகழக்கூடிய விரிநிலையிலான திறனாய்வுகளில் மீளாய்வுக்குரியன என்பதையும் இங்கு சுட்டுவது அவசியமாகிறது. எதிர்காலத்தில் நிகழக்கூடிய அவ்வகைத் திறனாய்வுகளில் நவீனத்துவத் தமிழ் எழுத்தாளர்களில் திரு. அ. முத்துலிங்கமவர்களுடைய தனித்தன்மை என்ற அம்சமானது எத்தகையது என்பது மேலும் துலக்கமாக வெளிக்கொணரப்படும் என்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகும்.


நவீனத்துவத் தமிழ் எழுத்தாளர்கள் பலருடனும் ஒப்பிடும் நிலையிலே, திரு. அ. முத்துலிங்கமவர்களின் தனித்துவம் என்ற வகையில் கவனத்துள் இருத்த வேண்டிய ஒரு முக்கிய அம்சம், அவருடைய உலகளாவிய நிலையிலான 'அநுபவங்களின் திரட்சி' ஆகும். கால்நூற்றாண்டுக்கு மேலாக உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து பெற்ற அநுபவங்கள் மற்றும் அதையடுத்து ஏறத்தாழ இருபதாண்டு காலம் கனடாவில் வாழ்ந்து பெற்ற வெவ்வேறு பட்ட வாழ்க்கைச் சூழல்கள் சார் அநுபவங்கள் ஆகியவற்றின் திரட்சியான ஒரு களஞ்சியமாக ஒரு 'அநுபவ வங்கி' யாக அவரது படைப்பு மனம் திகழ்கிறது.' என்பதே அவரது படைப்பாளுமை என்றவகையில் இங்கு அழுத்திக் கூறவேண்டிய அம்சமாகும்.

இவ்வாறான பரந்துபட்ட வாழ்வியல் அநுபவங்கள் தமிழகத்திலோ அல்லது ஈழத்திலோ உள்ள இன்றைய எழுத்தாளர்களில் மிகப் பெரும்பாலானோருக்கு இல்லை என்பதை நாம் ஊகித்துணர்ந்து கொள்ளலாம். புலம்பெயர் சூழலிலுள்ள தமிழ் எழுத்தாளர்கள் கூட தாம் தாம் வாழுகின்ற சூழல்கள் மற்றும் பயணங்கள் மேற்கொள்கின்ற சூழல்கள் சார்ந்த அநுபவங்களை மட்டுமே பெற்றிருப்பர் என்பதும் வெளிப்படை. திரு. அ.முத்துலிங்கமவர்கள் பல்வேறு நாடுகளில் பணியாற்றியவர். அவ்வகையில் அவ்வந்நாடுகளில் பல ஆண்டுகள் வாழநேர்ந்ததன் மூலம் அவற்றின் சமூகவாழ்வியல்களைத் தொடர்ச்சியாக அவதானிக்கும் வாய்ப்புகளையும் பெற்றவர். இவ்வாறான வாய்ப்புகள் புலம்பெயர் சூழல்சார் ஏனைய எழுத்தாளர்களில் எவருக்கும் கிட்டியிருக்குமா? என்பது இன்றுவரை விடைதேடிநிற்கும் ஒரு வினாவாகவே உள்ளது. திரு. அ. முத்துலிங்கமவர்களை அவருடைய சமகால எழுத்தாளர்கள் பலருடனும் ஒப்பிட முயலும் நிலையில் திறனாய்வாளர்கள் கவனத்துள் இருத்த வேண்டிய முக்கிய அம்சம், இது.

திரு. அ. முத்துலிங்கமவர்களின் மேலே சுட்டிய படைப்பாளுமை அம்சங்கள் அவருடைய படைப்புகளில் பிரதிபலித்துள்ள முறைமையானது தனிநிலையில் விரித்துப் பேசவேண்டிய ஒரு பொருட்பரப்பா கும். அவை தமிழகம், ஈழம் உட்பட்ட உலகளாவிய தமிழிலக்கியச் சூழலில் வரவேற்கப்படக்காரணமாக அமைந்ததான 1990கள் காலகட்டத் தமிழிலக்கியச் சூழல் குறிப்பாகத் தமிழக இலக்கிச்சூழல் என்ற அம்சமும் தனியானதொரு கட்டுரையில் விரித்துப் பேசப்படவேண்டிய விடயப் பரப்பாகும். திரு. அ. முத்துலிங்கமவர்களின் படைப்பாளுமை தொடர்பாக சமகாலத்தில் பல விமர்சனங்களும் பதிவாகிவருகின்றன என்பதையும் இங்கு கவனத்திற்கொள்ள வேண்டியது அவசியமாகும். குறிப்பாக அவருடைய சமூகப்பார்வை மற்றும் எடுத்துரைப்புமுறை என்பன சில திறனாய்வாளர்களால் கேள்விக்குட்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான பல்வேறு அம்சங்களையும் கவனத்துட்கொண்டு அவரைப் பற்றிய விரிவானதொரு திறனாய்வு நோக்கிலான ஆய்வேடுகள் மற்றும் திறனாய்வு நூலகள் எழுதப்படவேண்டும் என்பதான எனது விருப்பத்தை இங்கு முன்வைக்கிறேன்.

தமிழின் 'புலம்பெயர் இலக்கிய'மானது தனது அவ்வடையாளத்தைக் கடந்து உலகத் தமிழ் இலக்கியம் என்பதான புதிய பரிமாணத்தை எய்தத் தொடங்கியுள்ள வரலாற்றுச்சூழலில் நாம் வாழ்கிறோம். அவ்வாறான புதிய வரலாற்றை முன்னெடுக்கும் படைப்பாளிகளில் முதல்வரிசைக் கணிப்புக்குரியவராக திரு.அ.முத்துலிங்கம் அவர்கள் திகழ்ந்துவருகிறார் என்பது வெளிப்படை. இச்சூழலில் தமிழ இலக்கியவுலகம் அவரிடமிருந்து இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறது. அவர் அப்பணியை மேலும் புத்தூக்கத்துடன் தொடரவேண்டும் என்ற எனது விருப்பத்தை முன்வைத்து எனது இவ்வுரையை நிறைவு செய்கிறேன

*(2018 ஏப்ரல் 21 அன்று ரொறன்ரோவில் நடைபெற்ற 'எழுத்துலகில் அ. முத்துலிங்கம் 60' நிகழ்வில் வாசிக்கப்பட்ட கட்டுரையின் சுருக்கம்.)*



subramanian.n@thaiveedu.com

# அ. முத்துலிங்கம்...

96ம் பக்கத் தொடர்ச்சி...

னும், பத்மாவதி போன்று கையறு நிலையில் நிற்பவள் அல்லள் 'லூக்கா 22:34' எனும் கதையில் வரும் மார்செலா. மேற்படிப்பு படிக்க விரும்பிய மார்செலாவை கனடாவிலுள்ள வீடு விற்பனை முகவருக்குத் திருமணம் செய்து அனுப்பிவிடுகின்றனர் பெற்றோர். தனது கணவருக்குத் தேவை ஒரு வேலைக்காரியே என்று கனடா வந்த சிறிது காலத்திற்குள் புரிந்துகொள்கிறாள். அவள் என்னென்ன செய்யவேண்டும் என்ற எல்லாத்தீர்மானமும் கணவனாலேயே எடுக்கப்படுகின்றது. காலையில் அவர் அலுவலகம் செல்ல முன்னர் தேவையான பொருட்களைத் தேடிக் கொடுக்க வேண்டும். மத்தியானம் என்ன சமையல் என்பதை அவர் தவறாமல் சொல்லிவிட்டுப் போக, கடைக்குப் போய் பொருட்கள் வாங்கி வந்து சமைக்கவேண்டும். வாசிப்பதற்கு புத்தகங்கள் இல்லாத வீடு அது. தொலைபேசியை மட்டும் தொடக்கூடாது எனும் கட்டளையை மீறி அவள் அதைத் தொட்டமையால் அவள் தலையில் தடித்த அட்டைப் புத்தகத்தினால் அடித்து விடுகின்றார். இரத்தக் காயமாகின்றது. அன்றிரவு அவள் அந்தத் தொலைபேசியை எடுத்து அவர் பதிந்து வைத்திருந்த 500 தொலைபேசி எண்களையும் அழித்து விடுகின்றாள். கணவனுக்கு மார்செலா மீது ஐயம் எழுகின்றது. அவள் தொலைபேசியைத் தொட்டாளா என்பதை மூன்று முறை கேட்டு உறுதி செய்து கொள்கிறான். அவள் அந்த மூன்று முறையும் தான் தொலைபேசியைத் தொடவில்லை என்று கூறுகின்றாள். இதைக் கதையின் தலைப்பான 'லூக்கா 22:34' என்பதுடன் சேர்த்துப் பார்க்கவேண்டும். இதில் பேதுரு தன்னைத் தெரியும் என்ற உண்மையை மூன்றுதரம் மறுதலிப்பான் என்று யேசு கூறுகிறார். மார்செலா கைத்தொலைபேசியில் சேகரிக்கப்பட்டிருந்த அத்தனை எண்களையும் அழித்தமை அவரின் வீட்டு விற்பனை விவகாரத்தைப் பெரிதும் பாதிக்கின்றது. அதை உணர்ந்த அவள், கணவனின் அடக்குமுறைக்கும் வன்முறைக்கும் எதிரான தனது தற்காலிக வெற்றியைக் கொண்டாடுகின்றாள். அவருக்குத் தரையில் அமர்வது, செபம் பண்ணுவது பிடிக்காது. அவள் அன்று கணவனுக்குப் பிடிக்காத பெரிய பூப்போட்ட இரவுடையை அணிந்துகொண்டு தரையில் அமர்ந்து செபம் சொல்லி இலங்கைப் பாணும், குழம்பும் சுவைத்து கோப்பி குடித்து மனங் களிக்கின்றாள்.

இதே சாயல் கொண்ட இன்னொரு கதையான 'ஐந்தாவது கதிரை'யினை இங்கு குறிப்பிடல் பொருத்தமானது. இதில் எவனோ ஒரு வண்டிக்காரன் மாடுகளை அடிப்பதைத் தனது பதின்ம வயதில் துணிச்சலுடன் நிறுத்தும் பத்மாவதி, தான் கணவனிடம் அடி வாங்கியபோது (புறங்கை வீச்சில் வீங்கின உதடுகளைச் சாமர்த்தியமாக உதட்டுச்சாயத்தினால் மறைத்திருந் தாள்), கணவனுக்கு ஏனையவர்களிடம் கூறிப்பகிரமுடியாத அவமானத்தை அவனுக்குக் கொடுக்கத் தீர்மானிக்கின்றாள்: தனது மார்பில் நடைபாதை சைத்திரிகன் மூலமாகப் பச்சை குத்திக் கொள்கிறாள். அதைப் பார்த்துக் கணவன் அதிர்ந்தபோது அவள் கடைவாயில் ஒரு சிரிப்புத் தோன்றி சட்டென மறைந்தது என்று கதை முடிவுறும்.

'இன்னும் முன்னேற இடமுண்டு' எனும் கதையில் வரும் சுவாதி, திருமணமானது அவள் மனம் விரும்பிய எளிமையான சந்தோஷங்களைத் தராதபோது எவ்வித புலம்பலும் இன்றி, மார்செலா, பத்மாவதி போன்று பழிவாங்கும் எண்ணம் ஏதுமின்றி, அப்பந்தத்திலிருந்து தன்னை மெல்ல விடுவித்துக் கொள்கிறாள். தாயில்லாது, தந்தையுடனும் சகோதரருடனும் போர்க் காலத்தில் வளரும் யாழ்ப்பாணக் கிராமப் பெண்ணான அவள், தன்னை விரும்பிய மிகப்பெரிய பணக்காரக் கணவனை மணந்து துபாயில் சென்று வசிக்கின்றாள். வீட்டில் பணிவிடைகள், சேவகம் செய்யப் பலரிருந்தும் தனிமையை உணர்கிறாள். ஆசையாகச் சமைத்து விட்டுக் கணவனுக்காகக் காத்திருந்து அவனோடு ஒன்றாக இருந்து உணவருந்தும் சந்தர்ப்பங்கள் கணவனின் வேலை, அக்கறைக் குறைவால் தவறிப்போகின்றன. வன்முறையில் கொல்லப்பட்ட தனது அண்ணனின் பத்தாவது ஆண்டு நினைவஞ்சலியை மறந்தது குறித்து மனக்கிலேசம் அடைகின்றாள். அதற்கு கணவன் வழங்கிய மதியூக சமாதானத்தை அவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவளின் வேண்டுகோட்படி கணவன் அவளைக் கிராமத்தில் கொண்டு போய்விடுகின்றான். ஒரு வருடமாகியும் துபாய்க்குத் திரும்ப மறுத்ததால் விவாகரத்தாகின்றது. மிகப் பெருந்தொகையான பணம் அவளுக்கு ஜீவானாம்சமாக அவள் கேளாதே கிடைக்கின்றது. ஆனால் அவள் பெரிதும் மதிப்பதோ தந்தை தனக்குப் பரிசளித்த வெறும் 60 ரூபா பெறுமதியான புல்லாக்கு. அதனைத் திருப்பி அனுப்புமாறு கணவனுக்கு அவள் கடிதம் எழுதுவதுடன் கதை முடிவடைகின்றது. பணத்திற்கு மதிப்பளியாது சொந்தங்களுக்கும், உறவுகளுக்கும் முதன்மை கொடுத்து எளிமையான வாழ்க்கை விழுமியங்களை உள்வாங்கி குடும்ப அரவணைப்பில் வாழ்ந்த சுவாதி, தன் உணர்வுகள் மதிக்கப்படவில்லை என்று உணர்ந்த மாத்திரத்தே திருமண வாழ்விலிருந்து விலகிக் கொள்ளும் துணிவுப் படைத்தவளாக இங்கு காட்டப்படுகின்றாள்.

எவ்வாறு சிறுகதைகளில் இப்பாத்திரங்களின் இயல்புகள், எண்ணவோட்டங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன என்பதை நோக்குதல் முக்கியமானது. அதுவே சுவாரசியமானதுங் கூட. சில எடுத்துக்காட்டுகள் தருகிறேன். 'இன்னும் முன்னேற இடமுண்டு' எனும் கதையில், அண்ணனின் நினைவுதினத்தை மறந்த சுவாதி மூன்று இரவுகளைத் தூக்கமின்றிக் கழிக்கின்றாள். மாடியில் நின்று ஆகாயத்தைக் காணும் போது சுவாதி நட்சத்திரம் தென்படுகிறது. 'சுவாதி நாலாவது பிரகாசமான நட்சத்திரம்' என்று தந்தை சொல்ல, அவள் ஏன் தனக்கு முதலாவது நட்சத்திரத்தின் பெயரை வைக்கவில்லை என்று அழுவாள் என்று கதைசொல்லி குறிப்பிடும்போதே திருமண வாழ்க்கையில் கணவன் தனக்கு முதலிடத்தைத் தரவில்லை என்ற சுவாதியின் ஆதங்கம் எமக்குப் புரிந்து விடுகின்றது. இதன் பின்னர் குடும்பத்தின் அதிகார இயக்கவியல் (power dynamics) மாறப்போகின்றது. தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை அவள் தன் கையில் எடுத்துக் கொள்கிறாள் என்பதைக் கணவன் 'அன்று வீட்டுக்கு வந்தபோது சுவாதி சூட்கேசை நிறைத்து விட்டு அதன்மேல் உட்கார்ந்திருந்தாள்' என்று வரி உணர்த்துகின்றது. 'லூக்கா 22:34' கதையின் முதல் வாக்கியத்தில் கணவன் தன்னை நடத்தும் விதம் குறித்த மார்செலாவின் ஆத்திரம் உறைந்திருக்கின்றது. 'ஆரம்பத்தில் ஒரு துவக்கு இருந்தால் நல்லாயிருக்கும் என்ற எண்ணம் மார்செலாவுக்கு எழவே இல்லை'.

பெண் பிரச்சினைகளைப் புனைவிலக்கியத்தில் கையாளும் வல்லமை பெண் எழுத்தாளர்களிடத்தே மட்டுந்தான் உண்டு எனும் கருத்து பெண்ணிய உலகில் செல்வாக்குப் பெற்றதொன்று. ஆண்களினால் பெண் உணர்ச்சிகளை அசட்டை செய்யாது, அவளை இழிவுபடுத்தாது, அவளை ஒரு 'மனுஷி'யாகக் கணித்துப் புனைவிலக்கியம் படைக்கவியலுமா என்பதில் பெண்ணியலாளருக்கு எப்பொழுதுமே ஓர் ஐயம் உண்டு. அந்த ஐயத்தினை மேலே குறிப்பிட்ட சிறுகதைகள் போக்குகின்றன என்பது எனது கணிப்பு.

*(இது 21.04.2018 அன்று 'எழுத்துலகில் முத்துலிங்கம் 60' எனும் நிகழ்வில் வாசிக்கப்பட்ட கட்டுரையின் எழுத்து வடிவம்)*



maithilithayanithy@thaiveedu.com

# MILLION DOLLAR ROUND TABLE

MDRT
The Premier Association of Financial Professionals®
2017

## QUALIFYING MEMBER

MDRT
The Premier Association of Financial Professionals®
2018

# VIMAL VISVANATHAN



## THANK YOU!

I am extremely honoured to be receiving many awards at the Life100 Awards Gala 2018. I sincerely thank my clients for helping me reach a stage where I can proudly hold up this awards as a mark of my achievement. Continuously qualifying to receive MDRT (Million Dollar Round Table) award Is not easy without the help and guidance from clients like you. THANK YOU!

**VIMAL VISVANATHAN**
*Insurance Advisor,*
*Member, Million Dollar Round Table,*

**647.991.1110**

Life100
INSURANCE & INVESTMENTS INC.

10 Milner Business Crt, Suite 208, Scarborough, ON, M1B 3C6 Phone 416.321.2500

# தாய்வீட்டார் சந்திப்பு - 2018

ஆண்டுதோறும் நடைபெறும் தாய்வீட்டின் எழுத்தாளர் சந்திப்பின் வரிசையில், 2018ம் ஆண்டுக்கான எழுத்தாளர் சந்திப்பு மார்ச் மூன்றாம் நாள் சனிக்கிழமை மாலை மார்க்கம் **Armadale Community Centre** இல் நடைபெற்றது.
நிகழ்வுக்கு, தாய்வீடு பத்திரிகையின் ஆலோசகர் குழு உறுப்பினரும் எழுத்தாளருமான பொன்னையா விவேகானந்தன் தலைமைதாங்கினார்.

தாய்வீட்டின் எழுத்தாளர்கள், தாய்வீடு பற்றிய தங்கள் கருத்துகளையும் தாய்வீடு மேலும் சிறப்புறுவதற்கான தங்கள் ஆலோசனைகளையும் பகிர்ந்துகொண்டனர்.

இம்முறை, சிறப்பு நிகழ்வுகளாக இரு நிகழ்வுகள் அமைந்திருந்தன.
தாய்வீட்டின் ஆலோசகர் குழு உறுப்பினரும் எழுத்தாளருமான அருண்மொழிவர்மன், கடந்த ஓர் ஆண்டு தாய்வீடு இதழ்கள் பற்றிய தன் பார்வையை எழுத்தாளர்களோடு பகிர்ந்துகொண்டார். ஆக்கங்களின் உள்ளீடு பற்றிய தன் கருத்தை முன்வைத்த அவர் தாய்வீடு இதழில் தான் கவனித்த சில குறைகளையும் குறிப்பிட்டு, அவற்றைத் தவிர்ப்பதற்கான சில வழிமுறைகளையும் கூறினார்.

தொடர்ந்து, தாய்வீட்டின் ஆலோசகர் குழு உறுப்பினரும் எழுத்தாளருமான கந்தசாமி கங்காதரன், தாய்வீட்டில் வெளியாகின்ற ஆக்கங்களை வாசிக்கும்போதும் ஒப்புநோக்கும்போதும் அவதானித்த கருத்துப்பிழைகள், எழுத்துப்பிழைகள், இலக்கணப் பிழைகள் பற்றியும் கட்டுரைகள் எழுதப்படும்போது கவனத்திற்கொள்ளவேண்டிய சில விடயங்களையும் எடுத்துக்கூறினார்.

எழுத்தாளர்களின் கருத்துகள், கேள்விகள், ஆலோசனைகளுக்கான, தாய்வீடு ஆசிரியர் பி.ஜெ. திலீப்குமாரின் பதிலோடு மாலை 7:30 மணியளவில் தாய்வீட்டார் சந்திப்பு நிறைவுற்றது.

வழமைபோல இம்முறையும் இச்சந்திப்புக்கு **Credit Solutions Centre** - சிறி வல்லிபுரநாதர் ஆதரவு வழங்கினார்.












படம்: சர்வேசன் & www.eettv.com

# கடன் பிரச்சனைகளா?

- கடன் அட்டை சிக்கல்கள்
- வங்கிக்கடன் சிக்கல்கள்
- கலக்சன் கம்பனி போன் தொல்லை
- ஊதிய கையகப்படுத்தும் சிக்கல்கள்
- இது போன்ற கடன் பிரச்சனைகளால் தினந்தோறும் வீட்டில் சண்டை

## நல்ல செய்தி

### எம்மிடம் தீர்வு உண்டு

நம்மால் 80% வரை உங்கள் கடன்களை குறைக்க முடியும், உங்களால் முடிந்த குறைந்த மாதக்கட்டணம் மட்டும் செலுத்தலாம். இது ஒரு கடன் ஒருங்கிணைப்பு பெறுவது போல.

## இலவச ஆலோசனை பெற




**JANNET FINANCIAL SERVICES INC.**

Ms. Jennet Sam & Mr. Stalin Dominic

Tel: 647-894-3876


FaX: 905-471-8080

Email: jennet_renni@hotmail.com

உடன் அழையுங்கள் உடனடியாக உங்கள் புதிய வாழ்க்கையை தொடங்க

# HOMES,CONDOS,BUSINESS,COTTAGE, LAND

Mccowan/hwy 401




2 Bm 2 Wsrm. $409000.00

Mccowan/scar. town centre



2 bedroom/2 Wsrm $399k

Georgian bluff




1 hour drive north from Toronto

Westney Rd/ Rossland Ave



4 bm 4 Wsrm bsmnt fin $ 799k

COTTAGE FOR SALE $350k to 700K or Days Rental 129/-



NORTH EAST SIMCOE

PAT PUSHPAKANTHAN
REAL ESTATE BROKER - HALL OF FAMER
416-894-1187


Century 21
AFFILIATE REALTY INC.
BROKERAGE*
OFFICE: 416-290-1200
1% Listing Commission*
Also Available

17 YEARS REAL ESTATE EXPERIENCE




PAT WILL BEAT ANY DEAL*!!

Bowmanville



New 4 Bm Detached Home $879,900

Hwy 48 north east toronto $599,900




2 acre lot

Excellent Investment
INVESTMENT



Markham & 14 th ave. $238K.
Run your business

Victoria park/Lawrence ave east



3Bm/2Wsrm w/out basement
$769K

Meadowvale and Ellesmere


Build Your Dream Home



Vacant land $299K




# தெய்வீகக் கனவு அன்னது வாழ்வே...



ஓவியம்: கே.கே. ராஜா

இவ்வளவு நெடிய தூண்களும் அந்த வான விதானத்தைத் தாங்கிக்கொண்டு நிற்கின்றனவா...! அப்படித்தான் இருந்தது, சிங்கப்பூர் நீரிணையில் போய்க்கொண்டிருக்கும் போது அந்த மத்தியான வேளையில் தூரத்தே தெரிந்த சிங்கை நகர். உயர்ந்த கட்டடங்கள் வானத்தை அளாவிக்கொண்டிருந்தன. பச்சைப் பசுமைகளே இல்லாத வெறும் கட்டடச்சோலை. எங்காவது கொஞ்சம் பசும்புல் தலை தூக்கியிருக்கலாம்... இன்னும் சில மணி நேரத்தில் ஊருக்குள்ளே போய்ப் பார்த்து விடலாம். இதோ கப்பலின் இயந்திரம் நிறுத்தப்பட்டுவிட்டது. இன்னும் அரை மணிக்கூறில் 'பைலட்' வரப்போவதாக புதிய 'மார்க்கோணி' ஆந்திராவைச் சேர்ந்த கொம்மராஜு தகவல் கொண்டுவந்தார். அன்று 'வீல்' பிடிப்பது எனது முறை. 'காப்டன்' 'ஸெக்கண்ட் ஆபீஸர்' ப்ரஸன்னா யாதவ் ஆகியோருடன் நான் 'ப்ரிட்ஜ்' இலிருந்து பார்த்துக்கொண்டு நிற்கிறேன். ரஞ்ஜித்தும், லூயிஜ்ஜியும் கயிற்றேணியைக் கட்டிக் கடல்மட்டத்தில் இறக்கி வைத்துவிட்டு 'லைஃவ் லைன்'... உயிர்காக்கும் சிகப்பு ரப்பர் வளையங்கள்... கப்பலினுள்ளே இறங்கி வருவதற்கான மரப் படிக்கட்டு ஆகியவற்றை தயார் செய்து சரிபார்த்துப் 'பைலட்' ஏறிவர வழிவகை செய்துகொண்டிருக்கிறார்கள். ஒரு விசைப் படகு எமது கப்பலை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. அதில் ஐந்து அல்லது ஆறு பேர் இருக்கலாம்... சீருடைக்கு மேல் 'லைஃவ் ஜாக்கெட்' அணிந்து அமர்ந்திருக்கிறார்கள்.

இப்போது அந்தப் படகு எனது கண்பார்வையிலிருந்து கப்பலின் அடிவாரத்தில் மறைந்து போனது. 'ஸ்ரார்போர்ட்' பக்கத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்த 'பைலட் லாடர்' வழியாக ஒவ்வொரு தலையாக ஏறி உள்ளே வந்துகொண்டிருக்கிறார்கள். அதில் இருவர் போலீஸ்காரர்கள் என்பதை அவர்கள் இடுப்பில் கட்டியிருந்த பட்டியின் வலது புறம் தொங்கிய உறைக்குள் உறைந்து கிடந்த துப்பாக்கிகள் அடையாளம் காட்டின. 'கோட்... டை' சகிதம் வந்த இருவரில் ஒருவர் சீன இனத்தவர்... மற்றவர் வெள்ளை இனத்தவர். இருவரினதும் இடது கரங்களில் பருமனான தோற் பைகள். வெண்ணிறச் சீருடையில் கடற்படைத் தொப்பியணிந்தவர் 'பைலட்'. சற்று நேரத்தில் எல்லோரும் மேலே 'ப்ரிட்ஜ்'ற்கு வந்துவிட்டார்கள். 'காப்டன்'இடம் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். சீன இனத்தவர் சிங்கப்பூர் குடிவரவு அதிகாரியென்றும்... வெள்ளை இனத்தவர் அமெரிக்கத் தூதரக ஊழியர் என்றும் அறிந்து கொண்டேன். இப்போது ஒரு குறும் படம் மனதுக்குள்ளே திரையிடப் பட்டுக்கொண்டிருந்தது. அடுத்த அரைமணி நேரத்தில் அதுபோலவே நிகழ்வுகள் நிஜத்தில் அரங்கேறின!

வந்தவர்கள் எல்லோரையும் 'காப்டன்' 'ஆபீஸர்ஸ் மெஸ்'ற்கு அழைத்துச் சென்றார். எல்லோரும் 'ப்ரிட்ஜ்'ஐ விட்டுக் கீழிறங்கிச் சென்றதும் நானும், 'ஸெக்கண்ட் ஆபீஸர்' ப்ரஸன்னா யாதவும் தனித்து விடப்பட்டோம். இந்த சந்தர்ப்பத்தை உபயோகித்து எனது மனத்திரையில் ஓடிக் கொண்டிருந்த படத்தின் திரைக்கதை... சரியான தரவுகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிறதா என்பதை ஊர்ஜிதப் படுத்திக்கொள்ள முனைந்தேன்.

"வழக்கமாகப் 'பைலட்' மட்டும் தானே வருவார் கப்பலை உள்ளே கொண்டு போக... இவர்கள் ஏன் கூடவே... 'ஸெக்கண்ட்'?"

"நாங்கள் சிங்கப்பூர் நீரிணைக்குள் நுழைந்ததுமே 'போர்ட் காப்டன்' நிக்கோஸ் சிங்கப்பூர் குடிவரவு நிலையத்தோடு தொடர்பு கொண்டு கப்பலில் இரண்டு வியெட்நாமியப் பெண்கள் எப்படியோ ஒளித்துத் தப்பித்து வந்து நடுக்கடலில் எம்மிடம் தஞ்சம் கோரியுள்ள தகவலைச் சொன்னதும்... வழமை போல் பிள்ளையைக் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடுகிற கருணையுள்ளம் படைத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் 'எங்கே ... இப்படி யாரேனும் வர மாட்டார்களா... எங்கள் கறைகளை மறைத்து உலக மேடையில் நாடகமாட...?' என்று ஏங்கிக்கிடந்த அமெரிக்கத் தூதுவராலயங்களின் கதவுகளைத் திறந்து வைத்து இருகரம் நீட்டி அவர்கள் ஊருக்கு இவர்களை அழைத்துப் போக இதோ வந்திருக்கிறார்கள் சகோதரா...!"

"அமெரிக்கா இந்தப் பெண்களைத் தத்தெடுத்துக் கொள்ளுமா 'ஸெக்கண்ட்'?"

"ஆம்... இங்கிருந்தே பச்சை அட்டையுடன் பயணமாகப் போகிறார்கள்... அவர்கள் இவர்களுக்கு இழைத்த அநீதிகளுக்குப் பரிகாரம் தேடிக்கொள்கிறார்கள்... வியெட்நாமிலிருந்து நாங்கள் கிளம்பிய நாளிலிருந்து பசியையும், உடல் உபாதைகளையும் சகித்துக்கொண்டு சுதந்திரமாக உயிர் வாழ்தலின் மீதிருந்த அதீதக் காதலில் தங்களது மனோபலங்களை இழந்து விடாது அந்த இரண்டு பெண்களும் சிங்கப்பூர் வந்து சேர்ந்துவிட்டார்கள். வாழ்வைத் தேடி ஓடுபவர்களுக்கு இவ்வாறான மனோதிடம்தான் திசை காட்டி. ஆயினும் எப்படி நாங்கள் தாய்லாந்துக்குத் தான் போகிறோம்... அதன் பிறகு அங்கிருந்து இங்கு தான் வருகிறோம் என்பதையெல்லாம் உய்த்துணர்ந்தார்கள் என்பது தான் என்னை வியப்பிற்குள்ளாக்கிய பெரும் புதிர்! யாராவது நல்ல மனங்கள் உதவியிருக்கக்கூடும்... அவர்களும் நம்மிடையே இருந்திருக்கவும் கூடும்... எப்படியோ அவர்களுக்கான நியாயம் கிடைத்து விட்டது இல்லையா சகோதரா...?"

எனது மூளைக்குள்ளே 'சுருக்'கென்றொரு பொறி தட்டியது. இந்த நல்ல மனிதர் ஏதோ அறிந்து வைத்திருக்கிறார் என்பதை அறிவு உணர்ந்து கொண்டது. இத்தோடு இந்த உரையாடல் முற்றுப்பெற வேண்டுமே ஆண்டவரே... என்று நான் பிரார்த்திக்க எத்தனிக்கையில் கீழே சென்றிருந்த 'பைலட்' மேலேறி வந்துகொண்டிருந்தார். அவரோடு கூட வந்தவர்களைக் காணவில்லை. நான் மெதுவாக 'ப்ரிட்ஜ்'ன் வலது பக்க இறகில் சென்று பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு சில வினாடிகளில் குடிவரவு அதிகாரியும், அமெரிக்கத் தூதரக ஊழியரும் முன்னே செல்ல... அவர்களின் பின்னால் அந்த இரண்டு பெண்கள்... போலீஸ்காரர்கள் இருவரும் பின் தொடர நடந்து வந்து... வந்த வழியே மீண்டும் கயிற்றேணி வழியாக ஒவ்வொருவராகக் கீழே இறங்கினர். எனது போராளிப் பெண்ணின் முறை வந்தபோது இறங்கிக் கொண்டிருந்தவள் தலை மறையும் முன்பாக நிமிர்த்தி என்னை அண்ணாந்து ஒரு முறை பார்த்துவிட்டு இமைப்போதில் மறைந்தாள். இரண்டொரு வினாடிகளில் விசைப் படகு புறப்பட்டு எமது கப்பலை விட்டு அப்பால் நகர்ந்து போவது தெரிந்தது.

அவ்வளவில் ஆனதே எனது முதற் காதல்!

"சில தினங்கள் உயிர்க்கமுதாகியே... செப்புதற்கரிதாக இருக்குமால்...

தொடர்தல் 104ம் பக்கம்

# தெய்வீகக் கனவு...

103ம் பக்கத் தொடர்ச்சி...

திலத வாணுதலார் தரும் மையலாம்
தெய்வீகக் கனவு அன்னது வாழ்வே..."

என்றோ படித்தறிந்த பாடல் வரிகள் அந்தக் கனவு வாழ்விலிருந்து என்னை மீட்டெடுக்க உதவியது. கடல் மட்டத்தில் தொங்கிக்கொண்டிருந்த 'பைலட் லாடர்'ஐ லூாயிஜ்ஜி மேலே இழுத்துச் சுருட்டிக் கொண்டிருந்தான். கப்பலின் இயந்திரம் மீண்டும் இயங்கத் தொடங்கியது. நான் உள்ளே சென்றேன். 'பைலட்' கை குலுக்கினார். நான் 'வீல்'இற்கு மேலே இருந்த பாகைமானியை எனது உயரத்திற்குச் சரிசெய்துகொண்டதும் "ஸ்லா போட் டெங்..." கட்டளைகள் பிறந்தன. கப்பல் சிங்கை நகருக்குள் மெதுவாக நுழைய வாரம்பித்தது.

திருக்கோணமலையில் நான் வாழ்ந்த காலங்களில் கருத்துமுதல்வாதிகளாகக் கற்பனா சோஷியலிஸத்தைப் பேசிக்கொண்டிருந்த எனது நண்பர்கள் வட்டமானது... நாளடைவில் கார்ல் மார்க்ஸின் சித்தாந்தங்களின் யதார்த்தங்களினால்... பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் மூலங்களைப் புரிந்துகொள்ள வைத்த பொதுவுடமைக் கருத்துக்களால் பொருள்முதல்வாதிகளாகத் தீவிரமாகி... சீன, ரஷ்ய சார்புகளின்றித் தோழர்கள் வட்டமாகியிருந்த நாட்களில்... வட்டத்திலிருந்து ஒரு தோழன் கொழும்பு கட்டுப்பெத்த பல்கலைக்கழகத்தில் அனுமதி கிடைத்து உயர் கல்வியைத் தொடரத் தலைநகர் பயணமாகியிருந்தான். திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் பலகாலம் மிகக் கண்டிப்பான அதிபராகக் கடமையாற்றிய திரு. சிவபாலன் அவர்கள் தெஹிவலயில் குடியிருந்த வீட்டில் ஒரு அறையை வாடகைக்குப் பிடித்துத் தங்கியிருந்த அவனைப் போய்ப் பார்த்துவரலாம் என்று ஏதோ ஒரு நாளின் பகலில் திடீரென்று தீர்மானித்தோம்! எங்களுக்கென்று ஒரு தனித்துவமான குணமிருந்தது. நீண்ட காலத் திட்டமிடுதல்களில் நம்பிக்கை இல்லாமையே அது! ஒன்றைச் செய்யவேண்டும் என்பதாகத் தீர்மானித்தால் 'சுடச் சுட'! எமது வழமையேயான திருமால் வீதியோரத்திலிருந்த சங்கப் பலகையில்... அதாவது 1963ம் ஆண்டில் திருக்கோணமலையைத் துவம்சம் பண்ணிய பெரும்புயலில் விழுந்து கிடந்த நீண்ட மரக்குத்தியில் அமர்ந்திருந்து கொழும்பு போகத் தீர்மானித்த நேரத்தில் தோழர் ஞானம் அங்கே வந்தான்.

திட்டத்தை அவனிடம் சொன்னோம். ஞானம் ஒரு 'டாக்ஸி' சாரதி. அன்றிரவே கிளம்புவோம் என்றான். எல்லோரும் அவரவர் வீடுகளுக்கு ஈருருளிகளில் பறந்தோம். ஆளுக்கொரு சாரத்தையும், துவாய்த் துண்டையும் எடுத்துக்கொண்டு, "கொழும்புக்குப் போகிறோம்... இரண்டு மூன்று நாட்களாகும் திரும்பி வர" என்று வீட்டாரிடம் சொல்ல... ஊருக்கு உதவியாக... வீட்டுக்கு உதவாத எங்களை யாருமே கணக்கில் எடுக்கவில்லை. மீண்டும் சங்கப் பலகையில் சங்கமித்த போதில் ஞானம் தனது 'மொறீஸ் மைனரில்' சாய்ந்தவாறு நின்றுகொண்டிருந்தான். என்னதான் கம்யூனிஸக் கவர்ச்சியிலிருந்தாலும்... எங்களுக்குள்ளும் இரண்டு வர்க்கங்கள் திகழ்ந்திருந்தன! முதலாவது அன்றாடம் வேலைக்குப் போய் சம்பாதித்துக் குடும்பத்தைக் காத்துக்கொண்டிருந்த உழைப்பாளி வர்க்கம்...இன்னொன்று வேலை தேடிக்கொண்டிருப்பதான பாவனையில் பெற்றோரின் ஓய்வூதியங்களில் வாழ்ந்து கொண்டிருந்த சுரண்டல் வர்க்கம்! இந்தப் பயணத்தில் இரண்டாவது வர்க்கம் மட்டுமே இணைந்து கொண்டது. நான், மூர்த்தி, இரத்தினதுரை, எட்வேட் எல்லோரும் வண்டியில் ஏறிக் கொள்ள... திருக்கோணமலை பேருந்து நிலையத்தின் முன்னாலிருந்த 'பெற்றோல்' நிலையத்தில் எரிபொருள் நிரப்பிக்கொண்டு... 'ப்ளாஸ்டிக்' கொள்கலனில் மேலதிகமாகவும் நிரப்பி... ஆளாளுக்கு இருபத்தைந்து ரூபாய்கள் பங்கு போட்டுக் கொடுத்துவிட்டு... மீதிப் பணத்தில் 'கிங்ஸ் ஹோட்டல்'ல் ஒரு போத்தல் இரட்டைவடியும், 'ப்ரிஸ்டல்' இரண்டு 'பாக்கெட்'டும் வாங்கிக்கொண்டு கிளம்பினோம்.

வழியெங்கும் பாட்டும், கலகலப்புமாக... அவ்வப்போதில் திருக்கோணமலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் இராணுவ வண்டிகளையும் தாண்டிப் போய்... ஹபரணவில் சாப்பிட்ட பின்னர் மீண்டும் தொடர்ந்தது பயணம். மறுநாள் அதிகாலையில் தெஹிவலயில் தோழனின் வாடகை வீட்டின் முன்னால் எழுந்தருளி-னோம்...அவன் எதிர்பார்க்கவில்லை! அவனது அறை பெரிதாக இருந்தது. எங்களைப் படுத்துத் தூங்கும்படி சொல்லிவிட்டுக் கட்டுப்பெத்த வளாகத்திற்குச் சென்றவன் பிற்பகலில் திரும்பி வந்தான். மாலையில் டாம் வீதியில் இருந்த குமரன் பதிப்பகத்துக்குச் சென்றோம். தோழர்கள் மூர்த்தியும், இரத்தினதுரையும் குமரன் பத்திரிகையில் எழுதிக்கொண்டிருந்தார்கள். இரத்தினதுரை தொடர்ச்சியாக வரதபாக்கியான், ரஞ்ஜனிரத்னதுரை, புத்தூரான்... என்று பல்வேறு பேர்களில் கவிதைகள் எழுதிக் கொண்டிருந்தான். குமரன் பதிப்பகத்தில் அப்போது எங்களை மிகவும் பாதித்த எழுத்தாளரான செ.கணேசலிங்கம் இருந்தார். அவருடன் மணிக்கணக்காக இலங்கையின் அரசியல் எதிர்காலம் பற்றியும்... நிற்சாமக் கிராமம் எரிந்து சாம்பரானதின் பின்னரான யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் புதிதாக இல்வாழ்வில் இணைந்திருந்த கவிஞர் சில்லையூர் செல்வராஜன்... கமலினி ஆகியோரைச் சென்று சந்தித்து வாழ்த்திப் பேசிவிட்டுத் திரும்பினால்... அதிபர் சிவபாலனின் இளைய மகன் மயூராதரன் சிவமூலியுடன் தயாராக இருந்தான்.

அன்றிரவு முழுவதும் தெஹிவல... காலி வீதியில் அலைந்து திரிந்தோம். இரத்தினதுரை 'மச்சான்... வாழ்வு தரும்' என்ற ஒரே வரியைப் பாட்டுப் பாடுவதாக நினைத்துக்கொண்டு... பாடிக்கொண்டே இருந்தான். நாங்களும் கூடவே ஒத்து இசைத்துவிட்டு எதிரே இருந்த 'ஹோட்டல் தவளகிரி'யில் வயிறு புடைக்கச் சாப்பிட்ட பின்னர் எல்லோரும் தங்கியிருந்த அறைக்குத் திரும்பினோம். இரவிரவாக இழுத்திருந்த சிவமூலியின் கடாட்சத்தால் சிரிப்பலைகளின் அதிர்வு கொஞ்சம் அதிகமானதில் தூக்கம் கலைந்தெழுந்த அதிபர் சிவபாலன் அறைக்குள் வந்து ஆங்கிலத்தில் "இது என்ன 'ரெஸ்ற் ஹௌஸ்' என்று நினைத்தீர்களா?" என்று திட்டிவிட்டுப் போன அதே சுப முகூர்த்தத்தில்... தெஹிவல மிருகக்காட்சிசாலையிலிருந்து ஒரு சிங்கத்தின் கர்ஜ்ஜனை கேட்டது. அதற்கும் அடக்கிக்கொண்டு சிரித்துத்தள்ளினோம்!

மறுநாளில் கொழும்பு ஆமர் வீதி சந்திப்பிலிருந்த 'ஜனதா விமுக்தி பெரமுன' கட்சிக் காரியாலத்தில் தோழர் லயனல் போபகே அவர்களைச் சந்தித்தோம். வேறு சில தோழர்களும் அங்கே இருந்தனர். இலங்கத்தீவின் அப்போதைய அரசியல் நிலவரங்களையும், தமிழர்களின் உரிமைச் சிக்கல்களையும் பற்றி விவாதித்தோம். ஓரளவுக்குத் தெளிவான கருத்துகள் அவர்களிடமிருந்ததாகத் தெரிந்தது. அன்றிரவு அங்கேயே கட்சிப்பத்திரிகையான 'செஞ்சக்தி'யை நிலத்தில் விரித்து...அதன் சிங்களப் பதிப்பான 'நியமுவ' பத்திரிகைக் கட்டுகளைத் தலைக்கு அணையாக வைத்துத் தூங்கிப்போனோம். எங்களுக்கு அது ஒருநாள் தலையணை. மக்கள் விடுதலை முன்னணியின் தோழர்களுக்கோ அதுவே தினசரித் தலையெழுத்து!

அடுத்தநாள் சனிக்கிழமை. தோழருக்குப் பல்கலைக்கழகம் செல்லவேண்டியதில்லை என்பதால் கொழும்பு பிரதான வீதிகளில் சுற்றித் திரிந்துவிட்டு மாலை விழுந்ததும் விடை பெற்றுக்கொண்டு திருக்கோணமலையை நோக்கித் திரும்பினோம். இந்தப் பயணத்தின் பின்னர் பல தடவைகள் எங்கள் மரக்குத்திச் சங்கப் பலகையில் இலங்கைக் கம்யூனிஸக் கட்சியினதும், மக்கள் விடுதலை முன்னணியினதும் சமூக மாற்றங்களுக்காகிய வேலைத் திட்டங்கள் பற்றிய விவாதங்கள் மிகக் காரசாரமாக இடம் பெற்றுக் கொண்டிருந்தன. அந்தக் காலப்பகுதியில் திருக்கோணமலையில் தென்னிலங்கைச் சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுள்தண்டனைக் கைதிகளை பொது மன்னிப்பு வழங்கிக் குடியமர்த்தும் தந்திரோபாயங்கள் ஓசைப்படாமல் நிறைவேறிக் கொண்டிருந்தன. தமிழரின் பாரம்பரியக் காணிகள் சுவீகரிக்கப் பட்டுக்கொண்டிருந்தன. இதனால் மிகுந்த கோபத்திலிருந்த தோழர் இரத்தினதுரை இலங்கைக் கம்யூனிஸக் கட்சியைக் கடுமையாக விமர்சித்தான். மக்கள் விடுதலை முன்னணி தமிழரின் சுய நிர்ணய உரிமையை ஆதரித்ததை முன்வைத்து ஓரளவுக்கு அவர்களை நம்பலாமென்றும் வாதிட்டான். எங்களுக்கும் அது சரியாகவே பட்டது.


அப்போது மக்கள் விடுதலை முன்னணியின் திருக்கோணமலைக் கிளைக்குப் பொன்ஸேகா என்கிற இளைஞர் பொறுப்பாளராக இருந்தார். "என்னா தோழர் எஃவ் விடி இரிக்கீங்க...?" என்று விளிப்பது கொஞ்சம் சிரிப்பை வரவழைத்தாலும்... சரளமாகத் தமிழ் பேசும் இனிய சுபாவமுள்ளவர். கட்சிப் பத்திரிகைகளான 'செஞ்சக்தி' அதன் ஆங்கில, சிங்களப் பதிப்புகளான 'ரெட்பவர்' 'நியமுவ' இவைகளை விற்றுத் தேறும் சில்லறைகளில் தான் வயிற்றைக் கழுவிக்கொண்டிருந்தார். ஒரு சிங்களத் தோழரின் வீட்டின் பின் விறாந்தையில் 'சும்மா' தங்கியிருந்தார். அவ்வப்போதில் மாலைகளில் எங்கள் மரக்குத்திக்கு வந்து எங்கள் விவாதங்களில் பங்கெடுத்துக் கொள்வார். துலாம்பரமான அரசியல் ஞானம் இருந்தது. நாளடைவில் எங்கள் சமூகவியற் பார்வைகளும் விசாலப்பட்டன. வடக்கு, கிழக்கு, மலையகத்துத் தமிழர்களினதும்... தென்னிலங்கைச் சிங்களவர்களினதும் வாழ்வாதாரப் பிரச்சினைகளின் அடிப்படை மூலக்கூறுகளைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிந்தது. இதனைச் சீராக்குவதற்கான ஆய்வுகளை முன்னெடுப்பதை விட்டுவிட்டு இனவாதத்தைக் கக்குவதையே வேலைத்திட்டமாகக் கொண்ட தமிழ், சிங்கள அரசியல் வாதிகளை இனங்கண்டுகொண்டோம்.

அந்த வருடம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் போட்டியிட்ட திருக்கோணமலை வேட்பாளருக்கு உதவியாக இயங்கினோம். இத்தனைக்கும் நாங்கள் கட்சியின் அங்கத்தவர்களில்லை! இந்தச் சமயத்தில் வரணி சுட்டிபுரம் அம்பாள் கோயில் தேரின் மரச்சிற்பப் பணிகளுக்காக இரத்தினதுரை சாவகச்சேரிக்குச் சென்றுவிட்டிருந்தான். தேர்தல் நாளன்று வாக்குச் சாவடிகளில் தோழர்கள் 'போலிங் ஏஜென்ட்'டுகளாக அமர்ந்திருந்தனர். திருக்கோணமலை ஸ்ரீ ஷண்முக வித்யாலயத்தில் அமைந்திருந்த வாக்களிப்பு நிலையத்தில் நானும், தோழர் ரேமன்ட்டும் வாக்காளர் பட்டியலைச் சரிபார்க்கும் பணியில் இருந்தோம். அப்போது தான் ஊருக்குள் எல்லோராலும் நாங்கள் யாரென்று அடையாளம் காணப்பட்டோம். தமிழர் விடுதலைக்கூட்டணி வாலிப முன்னணியினர் எங்களை முறைத்ததோடு மட்டும் அல்லாது இருட்டடி கொடுக்கப் போவதாகவும் அன்போடு சொல்லிவிட்டுச் சென்றனர்! அதன் தூண்களில் ஒருவரான கோணேச்வரா உணவகத்தின் உரிமையாளர் மாதகல் வீரசுப்பிரமணியம் "இனிமேல் என்ர கடைப்பக்கம் தேத்தண்ணி குடிக்க வராதையுங்கோ தம்பிமார்..." என்று ஜனநாயக அரசியலில் அவருக்கிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டை வெளிக்காட்டிவிட்டுச் சென்றார்! நாங்கள் தீண்டத் தகாதவர்களா-னோம்!!

குளிர் விட்டுப்போய்த் தொடர்ந்து பகிரங்கமாக இயங்கினோம். இராணுவக் கெடுபிடிகள் ஒரு புறம்... ஊரடங்குச் சட்டங்கள் மற்றொரு புறமாக இருந்தாலும். ஒரு நாள் காலையில் இருவழிப் போக்குவரத்துப் பாதையாக இருந்த பிரதான வீதியில் 'கிங்ஸ் ஹோட்டல்'இன் முன்பாக ஒரு கல்லூரி மாணவி 'ட்ராக்டர்' வாகனத்தில் அடிபட்டு அதன் பின் சக்கரத்தின் கீழே தலை நசுங்கி ஸ்தலத்திலேயே மரணம-டைந்தார். அந்தத் தெருவை ஒருவழிப் பாதையாக மாற்றும்படி நகரசபைக்கு அறிவுறுத்த அன்றிரவு ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்த பின்னர் இரவிரவாக சுவரொட்டிகள் எழுதி... பசை கரைத்து... ஒளித்தோடி நகரெங்கும் ஒட்டிவிட்டுக் காலைவரை உவர்மலையில் வாய்க்கால் ஒன்றுக்குள் பதுங்கியிருந்து வீடு திரும்பினோம். அதன் பிறகு எவ்வளவோ அத்துமீறல்களைக் கண்டித்து உண்ணா விரதங்களையும்... சுவரொட்டிப் போராட்டங்களையும் முன்னெடுத்தாலும்...இதையெல்லாம் வெகுதூரம் தாண்டிப் போய் எமது போராட்டம் எங்களுக்கு அறவே உடன்பாடில்லாத ஆயுதம் தாங்கிய பரிணாமம் எடுத்து விட்டதை உணர்ந்த நாங்கள் ஒவ்வொருவராக ஊரை விட்டுத் தொலைய விளைந்தோம். வரணிக்குச் சென்றிருந்த இரத்தினதுரை திரும்பி வராமலே யாழ்ப்பாணத்தில் இருந்து சிங்கப்பூருக்கு ஒரு முகவர் மூலமாக வேலையனுமதி பெற்றுக்கொண்டு 'செம்பவாங் ஷிப் யார்ட்' என்கிற பாரிய கப்பல் திருத்தத் தளத்தில் பணியேற்று முறியச் சென்றுவிட்டான்.

ஒரு வருடம் கழித்து இரண்டு வார விடுமுறையில் திருக்கோணமலைக்குத் திரும்பி வந்தான். உவர்மலை வீட்டில் மகள் மாலிகாவின் பிறந்த நாளை விமரிசையாகத் தோழமையுள்ள நண்பர்கள் எல்லோருடனும் கொண்டாடினான். 'ஜானி வாக்கர்' சிற்றாறாக ஓடியது. சிவமூலியும் இணைந்து கொள்ள நண்பன் சத்தியமூர்த்தி குழந்தை மாலிகாவின் ஆடுகுதிரைக்குப் புல்லுப் பிடுங்கித் தீத்திவிடும் எத்தனத்தில் இருந்தான். 'க்ளப்பன்பேர்க்' இராணுவ முகாமுக்குக் கேட்குமளவுக்குச் சிரிப்பின் பேரோசை எழுந்தது. ரஞ்சனி வந்து எச்சரித்தார்... அடக்கி வாசித்தோம்.

ஊரை விட்டு விடுதலையாகிவிட முயற்சித்துக் கொண்டிருந்த என்னையும், மற்றுமொரு தோழரையும் உடனே கடவுச் சீட்டு எடுத்து அதன் ஒளிப்பிரதிகள் இரண்டைத் தன்னிடம் தரச்சொல்லித் தான் போகும் போது எடுத்துச் சென்று சிங்கப்பூர் வேலை அனுமதிப் பத்திரம் பெற்றுத் தருவதாகவும் தன்னுடனே வேலை பார்க்கலாம் என்றும் நம்பிக்கை தந்தான். கனவுகளில் மிதந்தோம்! சிங்கப்பூரின் ஐந்துமணி நேர வித்தியாசங்களை உணர்ந்து தூங்கியும், எழுந்தும் ஒத்திகைகள் பார்த்துக் கொள்ளும்படியும் அறிவுறுத்திவிட்டுத் திரும்பிச்சென்றான். அதுதான் நான் தோழர் இரத்தினதுரையைக் கடைசியாகப் பார்த்தது.



anandprasad@thaiveedu.com

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான*
*பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 416-849-0594 Tel: 416-646-3422***



• Provincial Offences / Traffic Tickets
(மாகாணவியல் குற்றங்கள் / வீதிச்சட்ட விதிமீறல்கள்)
• Small Claims court matters
($25,000 வரையிலான நஷ்ட இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்ளுதல்)
• Tribunals:
- Landlord and Tenant Board
நிலஉரிமையாளர் குடியிருப்பாளர் தொடர்பான பிரச்சனைகளுக்கு
- Immigration and Refugee board:
குடிவரவு மற்றும் அகதிகள் சபை
• Summary convictions
சுருக்கமுறை தண்டனைக் குற்றங்கள்
(6 மாதத்திற்குட்பட்ட சிறைக்காலம் மற்றும் $ 5,000 இற்குட்பட்ட அபராதத்திற்குரிய குற்றங்கள்)
– உதாரணம்: கடைகளில் பொருள் திருடல்
(Shop lifting)
அஞ்ஜலீன் திசைராஜா
B.A (Hons), M.Sc, Ph.D
Licensed Paralegal
தொடர்புகளுக்கு:
Tel: 647-291-1357
Email : anjeljeeva@gmail.com




www.mlssale.com
வீடு வாங்க விற்க...
LEASE $1,650
Leslie/Green Lane
2+1 Bed Room, 1 Washrooms
LEASE $1,800
Markham/14th Ave
2+1 Bed Room, 2 Washrooms
$ 599,000
Brock & Taunton
3 Bed Room, 3 Washrooms
$619,800
Brock & Taunton Rd
3 Bed Room, 4 Washrooms
$649,900
Main & Whitmer
3 Bed Room, 3 Washrooms
$799,000
Lawrence & Port Union
4+1 Bed Room, 4 Washrooms
$898,000
Yonge / Batson / Walton
4+1 Bed Room, 4Washrooms
Gopi THE REALTOR
OPEN HOUSE APR 7&8
Bur Oak & 9th Line
3640 SQFT ... Detached Home
JUST LISTED
CALL GOPI FOR MORE INFO
GOPI KOKULAN SHANMUGAM
Sales Representative
Dir: 647-296-4624
gopihomelife@gmail.com | www.mlssale.com
HomeLife /Future Realty Inc., Brokerage,


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
Mortgages
Refinance
Second Mortgages
Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com

# இலக்கியத் திறனாய்வியலின் இயங்கு நிலை

- நா. சுப்பிரமணியன் -

பல்லவர் காலப்பகுதியில் எழுந்த, 'பக்திசாராத பிறவகை ஆக்கங்கள்' பற்றிய பார்வையிலே கடந்த சில கட்டுரைகளில் அக்கால சிற்றிலக்கியங்கள் மற்றும் பேரிலக்கியங்கள் ஆகியன பற்றி நோக்கிவந்தோம். அவ்வகையில் முன்னைய கட்டுரைகளில் முதலிலே சிற்றிலக்கிய வகைசார்ந்ததான பாண்டிக்கோவை மற்றும் நந்திக் கலம்பகம் ஆகியனவும் அவற்றைத் தொடர்ந்து பேரிலக்கிய வகைசார்ந்தனவாகிய தகடூர் யாத்திரை, பாரதவெண்பா, பிம்பிசார-கதை மற்றும் பெருங்கதை ஆகியனவும் நோக்கப்பட்டன. மேற்படி இருவகை இலக்கியங்கள் தொடர்பான பார்வையை நிறைவு செய்யும் நிலையிலே அவற்றின் படைப்பாக்க நிலைகள் தொடர்பான ஒரு தொகு நிலைக் குறிப்பு இங்கு முதலிற் பதிவாகின்றது. அதனைத் தொடர்ந்து, மேற்சுட்டிய காலகட்டத்தின் இலக்கண நூல்கள் பற்றிய பார்வையுடன் இக்கட்டுரை தொடரவுள்ளது.

பக்திசாரா இலக்கிய ஆக்கங்களின் படைப்பாக்க நிலைகள் தொகுநிலைக்குறிப்பு

மேற்சுட்டிய பக்திசாரா இலக்கிய ஆக்கங்களின் படைப்பாக்க நிலை பற்றிய பார்வையிலே புலனாகும் முக்கிய செய்தி அக்கால சிற்றிலக்கிய வகைகள் பண்டைய தமிழ் மரபிலே முளைகொண்டு முகிழ்த்தவை என்பதாகும். அதாவது தமிழரின் பண்டைய அகத்திணை மரபு மற்றும் புறத்திணை

**பகுதி: 53**

மரபு ஆகியவற்றின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமாகவே அக்காலச் சிற்றிலக்கிய வெளிப்பாடுகள் அமைந்திருந்தன என்பதே இங்கு நாம் தெரிந்துகொள்ளவேண்டிய செய்தியாகும். பாண்டிக்கோவை மற்றும் நந்திக் கலம்பகம் ஆகிய இரண்டும் இதனையே உணர்த்தி நிற்பன. (இவ்விரு ஆக்கங்களையும் பற்றிக் கடந்த ஜனவரி 2018 இதழில் வெளிவந்த 49ம் கட்டுரையிலே விரிவாக நோக்கியுள்ளோம்).

அக்காலப் பேரிலக்கிய உருவாக்கத்தில் இரு நிலைகளை அவதானிக்க முடியும். ஒன்று பண்டைய மரபுசார்ந்த படைப்பாக்க நிலை. இன்னொன்று, தமிழகத்துக்கு அயலான குறிப்பாக சம்ஸ்கிருதம், பிராகிருதம் மற்றும் பாளி ஆகிய மொழிமரபுகள் ஊடாகப் பெற்ற கதையம்சங்களை இலக்கியமாக்கும் நிலையாகும். மேற்படி முதலாவது நிலைக்குச் சான்றாகத் திகழ்வது தகடூர் யாத்திரை ஆகும். அது தமிழரின் பண்டைய புறத்திணை மரபின் தளத்தில் முகிழ்த்த 'போரிலக்கியம்' ஆகும். அது, முழுவடிவில் கிடைக்காத நிலையில் அது பற்றி இங்கு விரித்துப் பேசுவது சாத்தியமில்லை. பாரதவெண்பா, பிம்பிசார கதை மற்றும் பெருங்கதை ஆகியன தமிழகத்துக்கு அப்பாலான கதையம்சங்களை உள்வாங்கி உருவானவை என்பதை முன்னரே விரிவாக நோக்கியுள்ளோம்.

தமிழின் பண்டைய பேரிலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் தகடூர் யாத்திரை ஆகியன தமிழ்நாட்டுக் கதைகள் என்பது வெளிப்படை. ஆனால் அவற்றை அடுத்து, தமிழ்ப் பேரிலக்கிய உருவாக்கத்தில் தமிழகத்துக்கு அப்பாலான கதைகள் 'குறிப்பாக வட இந்திய மொழிகள் மற்றும் அவைசார் சமூக பண்பாட்டு நிலைகள் சார் கதைகள்' செல்வாக்குச் செலுத்தத் தொடங்கிவிட்டமை தெளிவாகவே தெரிகிறது.

இச்செல்வாக்கானது பலநூறு ஆண்டுக-ளாகத் தொடர்ந்தது. நவீன இலக்கிய காலத்திலும் தொடர்வதுங் கூட. சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, சூளாமணி, நீலகேசி, உதயணன்கதை, நாககுமார காவியம், யசோதர காவியம் கம்ப-ராமாயணம், கந்தபுராணம், வில்லிபுத்தூரார் பாரதம், நைடதம் முதலிய இடைக் காலக் காப்பியவகைசார் ஆக்கங்களும் எஸ்.ராமகிருஷ்ணன், ஜெயமோகன், தேவகாந்தன் முதலியவர்களின் 'இதிஹாஸ மறுவாசிப்பு' நிலையிலான ஆக்கங்களும் தமிழப் படைப்பிலக்கியத் துறை மீது மேற்படி வடஇந்தியக் கதைமரபுகள் செலுத்தி வந்துள்ள செலுத்தி வருகின்ற செல்வாக்கிற்கான முக்கிய சான்றுகளாகத் திகழ்வன. இவ்வாறான தமிழின் படைப்பாக்க நிலை வரலாற்றை திறனாய்வு நோக்கில் நாம் எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும் என்பதை நாம் பின்னர் விரிவாகவே எடுத்துப் பேசவேண்டியுள்ளது. எனவே இவ்விடத்தில் அவ்விடயம் தவிர்க்கப்படுகிறது.

அடுத்து, 'பல்லவர்காலப்பகுதியில் எழுந்த, பக்திசாராத பிறவகை ஆக்கங்கள்' என்ற வகையிலான இலக்கணநூல்கள் கவனத்துக்கு வருகின்றன. முதலில் அந்நூல்கள் பற்றிய பொது நிலையிலான அறிமுகக் குறிப்புகள் முன்வைக்கப்படவுள்ளன. அவற்றைத் தொடர்ந்து தமிழிலக்கண வரலாற்றில் அவற்றுக்குரிய முக்கியத்துவம் மற்றும் அவை உணர்த்திநிற்கும் 'இலக்கண வரலாற்றுச் செல்நெறி' ஆகியன நோக்கப்படவுள்ளன.

> **தமிழின் பண்டைய பேரிலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் தகடூர் யாத்திரையும் தமிழ்நாட்டுக் கதைகள் என்பது வெளிப்படை. ஆனால் அவற்றை அடுத்து, தமிழ்ப் பேரிலக்கிய உருவாக்கத்தில் தமிழகத்துக்க அப்பாலான கதைகள் 'குறிப்பாக வட இந்திய மொழிகள் மற்றும் அவைசார் சமூக - பண்பாட்டு நிலைகள் சார் கதைகள்' செல்வாக்குச் செலுத்தத் தொடங்கிவிட்டமை தெளிவாகவே தெரிகிறது.**

## பல்லவர் காலப்பகுதியின் இலக்கண நூல்கள் - பொது அறிமுகம்:

பல்லவர் காலப்பகுதியில் எழுந்த இலக்கணநிலை ஆக்கங்களில் ஒருவகையின பொருளிலக்கண மரபு சார்ந்தவை. இறையனார் களவியலுரை, தமிழ்நெறிவிளக்கம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகியன இவ்வகைமைக்குரியன. இவற்றுள் முதலிரண்டும் பண்டைய அகத்திணைமரபு சார்ந்தனவாகும். மூன்றாவது ஆக்கம் புறத்திணை மரபு சார்ந்ததாகும். இக்கால இலக்கண நிலை ஆக்கங்களில் இன்னொரு வகையின யாப்பிலக்கணம் சார்ந்தவையாகும். இவ்வகைமைக்குரியனவாக அவிநயம், காக்கை பாடினியம், சங்கயாப்பு, செய்யுளியல், சிறுகாக்கைபாடினியம், மயேச்சுரர்நூல் முதலான பல ஆக்கங்கள் இக்காலப்பகுதியில் எழுந்துள்ளன. இவை தவிர இலக்கணத்தின் ஒருபகுதி எனக் கொள்ளக்கூடியதான அகராதியியல் சார்ந்த ஒரு நூலும் இக்காலப்பகுதியில் எழுந்துளது. அதன் பெயர் திவாகர நிகண்டு ஆகும்.

இறையனார்களவியல் என்ற ஆக்கம் தமிழ் அகப்பொருள் மரபை 60 நூற்பாக்களில் எடுத்துரைப்பது. அகப்பொருள் மரபின் இரு முக்கிய கூறுகளான களவியல் மற்றும் கற்பியல் ஆகியவற்றின் இலக்கணமே இந்நூற்பாக்களில் பேசப்படுகின்றது. 33நூற்பாக்கள் களவியலையும் 27 நூற்பாக்கள் கற்பியலையும் பேசுவன. இந்நூல் களவியல் எனப்பெயர் பெற்றிருப்பினும் கற்பியலையும் உள்ளடக்கியதே என்பது இங்கு நினைவில் இருத்த வேண்டிய செய்தியாகும். இவ்வாக்கத்தை இறையனார் அகப்பொருள் எனச்சுட்டும் மரபும் உளது. இறையனார் என்பாரால் ஆக்கப்பட்டதாக அறியப்படும் இந்நூலுக்கு நக்கீரர் என்பவர் செய்த உரையொன்று உளது. உரையுடன் கூடியமைந்த நிலையிலேயே அந்நூலாக்கம் இறையனார் களவியலுரை என்ற பெயருடன் வழங்கி வருகிறது. உரைப் பகுதியிலே கி.பி. 7ம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டிய மன்னனான 'நின்றசீர் நெடுமாறன்' என்பானைப் புகழ்ந்தேத்தும் பாடல்கள் இடம்பெற்றுள்ளமையால் உரையுடன் கூடிய நிலையிலான இந்நூலின் காலம் கி.பி. 7ம் அல்லது 8ம் நூற்றாண்டாகலாம் என ஊகிக்க முடிகிறது. மேற்படி உரையிலிடம் பெற்ற பாடல்களை மையப்படுத்தியே பாண்டிக் கோவை என்ற கோவைப் பிரபந்தம் தொகுக்கப்பட்டதென்பது இங்கு நமது கவனத்துக்குரிய செய்தியாகும். (இத்தொடர்பில் மேலதிக தெளிவிற்கு: பார்க்க: 49ம் கட்டுரை-ஜனவரி-2018)

தமிழ்நெறி விளக்கம் என்பது தமிழ் அகப்பொருள் மரபை 25நூற்பாக்களில் சுருக்கியுரைக்கும் சிறியதொரு நூலாகும். தஞ்சைமாவட்டத்தைச் சார்ந்ததான வழுந்தூர் என்ற ஊரினரான மதிதரன் என்பாரால் இயற்றப்பட்டதான இவ்வாக்கம் விரிவான உரையுடன் அமைந்துளது. இவ்வுரையை நூலாசிரியரே எழுதினார் என்ற கருத்தே பொதுவாக நிலவுகிறது. இதனை மறுத்து, உரையெழுதியவர் இன்னொருவர் எனக் கொள்வாரும் உளர். இந்நூல், கி.பி. 9ம் நூற்றாண்டின் பின்பகுதியில் எழுந்த திவாகர நிகண்டுக்கு முற்பட்டது என்றவகையில் இது எழுந்த காலம் கி.பி. 8ம் நூற்றாண்டு அல்லது 9ம் நூற்றாண்டின் முற்பகுதியாகலாம் எனக்கருதப்படுகிறது. (தகவல்: முனைவர் சோ.ந. கந்தசாமி, உலகத் தமிழிலக்கிய வரலாறு, கி.பி. 501-900. ப.244)

புறப்பொருள் வெண்பா மாலை என்ற நூலானது ஐயனாரிதனார் என்பாரால் இயற்றப்பட்டதாகும். இவர் சேர அரசமரபினர் என அறியப்படுகிறார். இந்நூல் புறப்பொருளிலக்கணத்தை, வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை எனப்பன்னிரு திணைகளாக வகுத்துரைப்பது. தொல்லிலக்கணமான தொல்காப்பியமானது புறப்பொருளிலக்கணத்தை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி மற்றும் பாடாண் என ஏழு திணைகளாக மட்டும் வகைப்படுத்துவது என்பது இங்கு நமது சிந்தனைக்குரிய செய்தியாகும். அவ்வகையில் புறப்பொருள் வெண்பாமாலையானது தொல்காப்பியத்திலிருந்து குறிப்பிடத்தக்க அளவு வேறுபடுகின்றமை வெளிப்படை.

புறப்பொருள்வெண்பா மாலைப் பாடல்கள் பல கி.பி. 10-11ம் நூற்றாண்டுகளைச் சார்ந்ததான யாப்பருங்கல விருத்தியுரையிலே மேற்கோள்களாக எடுத்தாளப்பட்டுள்ளன. எனவே இவ்வாக்கமானது 10ம் நூற்றாண்டின் முற்பகுதி சார்ந்ததாக அல்லது அதற்கு முற்பட்டதாகக் கருதப்பட வேண்டியதாகிறது. கி.பி.9ம் நூற்றாண்டைச் சார்ந்தாகக் கருதப்படும் திவாகர நிகண்டு நூலின் சொல்வைப்பிலே, நொச்சி என்பதை முதலிற்கூறி அதனை அடுத்து உழிஞை கூறப்பட்டுளது. இவ்வைப்பு முறைமையானது புறப்பொருள் வெண்பாமாலை சார்ந்ததாகும். எனவே இந்நூல் கி.பி.8 அல்லது 9ம் நூற்றாண்டளவில் இயற்றப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (பார்க்க: முனைவர் சோ.ந.கந்தசாமி அவர்களின் உலகத் தமிழிலக்கிய வரலாறு…ப.249)

இந்நூலின் சிறப்புப்பாயிரத்திலே தொல்காப்பியர் முதலிய பன்னிருவரால் பாடப்பட்டதாக அறியப்படும் பன்னிரு படலம் என்ற பெயரிலான புறப்பொருள் சார்ந்த இலக்கணநூல் பற்றிய குறிப்பு உளது. நூலாசிரியரான ஐயனாரிதனார் மேற்படி நூலை முறையாகக் கற்று அதன் வழி நின்று இந்நூலை இயற்றினார் என்று அச்சிறப்புப் பாயிரம் குறிப்பிடுகிறது. மேற்படி பன்னிருபடலம் என்ற ஆக்கத்தின் சில நூற்பாக்கள் மட்டுமே இப்பொழுது கிடைக்கின்றன என்பதும் அவ்வகையில் அந்நூலைக் காலவெள்ளத்தில் நாம் இழந்துவிட்டோம் என்பதும் இங்கு நமது கவனத்துக்குரிய கவலைதரும் செய்திக-ளாகும்.

கி.பி. 15ம் நூற்றாண்டில், புறப்பொருள் வெண்பாமாலை நூலுக்கு 'மாகறல்' என்ற ஊரைச் சார்ந்தவரான சாமுண்டிதேவ நாயக்கர் என்பார் உரையெழுதியுள்ளார். ஈழத்தவரான 'தொல்புரக்கிழார்' புலவர் நா.சிவபாதசுந்தரனார் என்பார் கடந்த நூற்றாண்டிலே புறப்பொருள் வெண்பா மாலை ஆராய்ச்சி என்ற தலைப்பிலான ஆய்வுநூலொன்றை எழுதியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய முக்கிய செய்தியாகும்.

மேலே நாம் நோக்கிய யாப்பிலக்கண வகை சார்ந்தவையான அவிநயம், காக்கை பாடினியம், முதலான நூல்கள் உரை மேற்கோள்களின் மூலம் அறியப்படுவனவாகும். கி.பி.10-11ம் நூற்றாண்டுகளைச் சார்ந்ததாக முன்னரே நாம் நோக்கிய யாப்பருங்கல விருத்தியுரை என்ற ஆக்கத்திலே மேற்படி அவிநயம் முதலான நூல்களின் நூற்பாக்களிற்பல மேற்கோள்களாக எடுத்தாளப்பட்டுள்ளன. அவ்வகையிலே அவ்வாக்கங்கள் கி.பி.10ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை என்ற கணிப்புக்குரியவாகின்றன. மேற்படி நூல்களில் அவிநயம், காக்கை பாடினியம் முதலிய சிலவற்றின் மேற்கோள்கள் மட்டும் தனித்தனியாகத் தொகுக்கப்பட்டு அவ்வப் பெயர்களிலான தனித்தனி நூல்களாக கடந்த நூற்றாண்டில் அச்சேற்றப்பட்டுள்ளன.

யாப்பிலக்கண வகைசார்ந்த இந்நூல்களின் வரலாற்று முக்கியத்துவம் என்ற வகையில் இவை 'பாவினம்' என்ற ஒரு தனிப் பகுப்புமுறையை அறிமுகம் செய்துள்ளமையாகும். தமிழ்ப் பாடல் வடிவங்களை ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற நால்வகை 'பாக்க'ளாக மட்டுமே வகைப்படுத்தும் மரபே பண்டு தொட்டு நிலவி வந்த முறைமையாகும். தொல்லிலக்கண நூலான தொல்காப்பியமானது இப்பகுப்பு முறையையே சுட்டிநிற்கிறது. ஆனால் அவிநயம், காக்கை பாடினியம் முதலான நூல்கள் மேற்படி பாவகைகளைப்பற்றிய இலக்கணங்களைக் கூறியுள்ளதோடு அவை சார்ந்தனவாக - அதாவது 'பாக்களின் இனம் என்ற அடையாளங்களுக்கு உரியன' என்ற பொருளில் பாவினம் என்ற பெயரிலான தனிப்பகுப்பு முறையொன்றை இவை முன்வைத்தன. தாழிசை, துறை, விருத்தம் ஆகிய பெயர்களில் இப் 'பாவினப்பகுப்புமுறை' அமைந்தது. யாப்பருங்கலம் மற்றும் யாப்பருங்கலக் காரிகை ஆகிய யாப்பிலக்கண நூல்களில் மேற்படி அவிநயம், காக்கை பாடினியம் முதலியவற்றின் 'பா' மற்றும்'பாவின'ப் பகுப்புமுறைகளை அடியொற்றியே யாப்

தொடர்தல் 109ம் பக்கம்

## ரொறன்ரோ தமிழ்ச்சங்கம்

### வைகாசி மாத இலக்கியக் கலந்துரையாடல்

### "ஈழத்தின் வன்னிப் பெருநிலம் - சமூக-பண்பாட்டுப்பார்வை"

**பிரதம பேச்சாளர் உரை:**

"வன்னிப் பெருநிலப் பரப்பின் வரலாறும் அதன் பண்பாட்டு அடையாளங்களும்"
- பேராசிரியர் கலாநிதி நா.சுப்பிரமணியன்.

**சிறப்புப் பேச்சாளர்கள் உரை:**

"வன்னியின் கல்வி வரலாறும் கலை மரபுகளும்" - திரு. த.சிவபாலு எம்.ஏ.

"வன்னியின் சமூக - பொருளியல் நிலைகள் போராடத்திற்குப் பின்னரான சூழலை மையப்படுத்திய பார்வை."
- திரு. சபா.இராஜேஸ்வரன். B.A (Hons), MCSE.

"வன்னிப் பெருநில வாழ்வாதார முன்னேற்றத்தில் கனடா வன்னிச்சங்கத்தின் பங்கு" - திரு.கார்த்திகேசு யோகநாதன்

'கொம்பறை' (வன்னித் தமிழ்ச் சமூக கலாசார இதழ்) - ஒரு பார்வை - வைத்திய கலாநிதி இ.லம்போதரன்

**ஐயந்தெளிதல் அரங்கு**

**நாள்: 26-05-2018**

**நேரம்: மாலை 3:00 முதல் 7:00 வரை**

இடம்: ரொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபம்
Unit 7, 5633, Finch Avenue East
Scarborough, M1B 5K9
(Dr. Lambotharan's Clinic - Basement)

தொடர்புகளுக்கு: அகில் - 416-822-6316

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அனுமதி இலவசம்!

## ரொறன்ரோ தமிழ் சங்கத்தின் மாதாந்த இலக்கியக் கலந்துரையாடல் நிகழ்வு 28.04.2018 அன்று ரொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது.


நிகழ்வில் "சங்க கால மக்களின் இயற்கையோடு இயைந்த புறவாழ்வியல்" என்ற தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது. அந்நிகழ்வில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சில....



திருமதி லீலா சிவானந்தன்



கலாநிதி பால.சிவகடாட்சம்



திரு.த.சிவபாலு

# இலக்கியத் திறனாய்...

107ம் பக்கத் தொடர்ச்சி...

பிலக்கணம் கூறியுள்ளன.

திவாகரம் என்ற நிகண்டுநூலானது திவாகரர் என்ற அறிஞரால் இயற்றப்பட்டதாகும். இவர் சேந்தன் என்னும் வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர் என்ற வகையில் இந்நூலுக்குச் சேந்தன் திவாகரம் என்ற பெயரும் வழக்கில் உளது.

நிகண்டு என்பது சொற்களின் பொருண்மைளை எடுத்துரைக்கும் முயற்சியாகும். அவ்வகையில் அதுவும் இலக்கணத்தின் ஒரு பகுதியேயாம். தமிழில் இவ்வகை இலக்கண முயற்சியின் தொடக்க நிலையைத் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் இடையியல், உரியியல் மற்றும் அதன் பொருளதிகாரத்திலுள்ள மரபியல் ஆகியவற்றிலே நோக்கியுணரமுடியும். இடையியலிலே 'மன்', 'தில்', 'உம்' முதலிய பல இடைச்சொற்கள் பொருள் கொள்ளப்படும் முறைமையும் உரியியலிலே உறு, உரு, புரை, குரு, கெழு, செல்லல், மல்லல் முதலான உரிச்சொற்கள் பல பொருள் கொள்ளப்படும் முறைமையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மரபியலின் ஒரு பகுதி நூற்பாக்கள் யானை, எருது, சேவல் முதலிய சில அஃறிணை உயிர்கள் பெயர் சுட்டப்படும் முறைமை பேசுவன. அதன் வேறுசில நூற்பாக்கள் தாவரங்கள், மரங்கள் முதலியவற்றின் உறுப்புகளின் பெயர் சுட்டப்படும் முறைமை பற்றி எடுத்துரைக்கின்றன.

இவ்வாறு சொல்லிலக்கணம், பொருளிலக்கணம் ஆகியன சார்ந்து வழக்கிலிருந்துவந்த சொற் பொருள் கூறும் முறைமைகளின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமான ஒரு புதிய ஆக்கமாகவே நிகண்டு என்பதான தனிநூலாக்க மரபு உருவானது. தொல்காப்பியம் எழுந்த காலப்பகுதியை அடுத்து நூல்கள் பெருந்தொகையாக எழுந்துவந்த சூழ்நிலையில் அந்நூல்களிற் பயிலும் சொற்களைப் பொருள்கொள்ளும் நிலைகளில் குழப்பங்கள் ஏற்படாவண்ணம் பாதுகாக்கும் நோக்கிலான இலக்கண நிலைச் சிந்தனையின் வெளிப்பாடாகவே இந்த நிகண்டு மரபு உருவானதென்பதை உய்த்துணரமுடிகின்றது. இவ்வகையில் பேணப்பட்டதாக எமக்குக் கிடைக்கும் முதலாவது ஆக்கமாகவே திவாகரம் என்ற இந்த நூல்திகழ்கிறது. இந்நூலின் நூற்பாக்கள் மேற்சுட்டிய யாப்பருங்கல விருத்தியுரையிலே மேற்கோள்களாக எடுத்தாளப்பட்டுள்ளன. அவ்வுரை கி.பி.10-11ம் நூற்றாண்டுகளுக்குரியதென்ற வகையில் இந்நூல் 10ம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென்பதை ஊகித்துணர முடிகின்றது.

இந்நூலினது காலம் 9ம் நூற்றாண்டின் பிற்பகுதியாகலாம் என்பது இரு அகச்சான்றுகள் மூலம் உய்த்துணரப்படுகின்றது. அவ்வகச்சான்றுகளில் ஒன்று அதில் இடம்பெற்ற சாளுக்கியர் பற்றிய குறிப்பாகும். இந்நிகண்டின் மக்கட் பெயர்த் தொகுதி என்ற இரண்டாவது பகுதியில் "வேள்புலவரசன் சாளுக்கியர் வேந்தன்" என்ற நூற்பாத்தொடர்(183) இடம்பெற்றுளது. சாளுக்கியவரசன் வேள்புல அரசன் எனச் சுட்டப்பட்டுவந்த மரபை இத்தொடர் அறியத்தருகிறது. சாளுக்கியர் என்ற அரசமரபினர் பற்றிய செய்திகள் தமிழக வரலாற்றிலே கி.பி. 7ம் 8ம் நூற்றாண்டுகளிலேயே அறியப்படுவன. இவர்கள் இன்றைய ஆந்திர மாநிலம் மற்றும் கர்நாடக மாநிலம் சார்ந்தவர்கள். கி.பி. 7-9ம் நூற்றாண்டுக் காலப்பகுதிகளில் தமிழகத்தின் பல்லவ மற்றும் பாண்டிய மன்னர்களுடன் இவர்கள் அடிக்கடி போரிட்டவர்கள். அவ்வகையில் மேற்படி நூற்றாண்டுகளில் அம்மன்னர் மரபின் பெயர் தமிழில் பயிற்சிபெறத் தொடங்கிவிட்டது என்பதையும் அப்பெயர் இடம்பெற்றதன் மூலம் கி.பி.7-8ம் நூற்றாண்டுகளை அடுத்தே திவாகரம் உருவாகியிருக்கலாம் என்பதையும் ஊகித்துணரமுடியும். இன்னொரு அகச்சான்றாக அமைவது அந்நூலில் இடம்பெற்றுள்ள 'நிருபதுங்க ராகம்' (நூற்பா: 1887) என்ற தொடராகும். நிருபதுங்கன் என்ற பெயர் கி.பி. 9ம் நூற்றாண்டில் பல்லவ நாட்டை ஆட்சிசெய்த மன்னன் ஒருவனுக்குரியதாகும். இந்த ராகம் அம்மன்னனுடன் தொடர்புடையதாக இருக்கலாம். அவ்விராகப் பெயர் இடம்பெற்ற வகையில் இந்நிகண்டுநூல் 9ம் நூற்றாண்டின் பிற்பகுதி சார்ந்தது என்ற ஊகத்துக்குரியதாகிறது. திவாகரத்தை அடுத்து பின் வந்த நூற்றாண்டுகளில் பிங்கலம், சூடாமணி முதலிய பெயர்கள் தாங்கிய நிகண்டு பல நூல்கள் தமிழில் எழுந்துள்ளன. இவ்வாறான சொற்பொருள் கூறும் முயற்சிகள் பின்னாளில் மேலைத்தேய மரபுகளை உள்வாங்கி அகராதி, அகரமுதலி ஆகிய பெயர்களில் புதிய கட்டமைப்புகளுடன் உருவாகத் தொடங்கிவிட்டன. (இவ்வகை நூல்களின் உருவாக்க வரலாறானது பின்னர் தனியாக நோக்கப்பட வேண்டியதாகும்.)

> **தொல்காப்பியத்துக்குப் பின்னர் குறிப்பாகப் 10ம் நூற்றாண்டு வரையான காலப் பகுதியில் அந்நூலைப் போல அனைத்தம்சங்களையும் உள்ளடக்கியவகையில் விரிந்த தளத்தில் இலக்கணங் கூறும் முயற்சியானது அருகத் தொடங்கிவிட்டது என்பதும், குறித்த சில இலக்கணப்பகுதிகளை மையப்படுத்தி நுனித்து நோக்கும் வகையிலான இலக்கண ஆக்க முறைமை உருவாகிவிட்டது என்பதும் புலனாகின்றன.**

பல்லவர்கால இலக்கணநிலை ஆக்கங்கள் பற்றிய பொதுவான சுருக்கமான அறிமுகக் குறிப்புகளை மேலே நோக்கினோம். இவ்வாக்கங்களின் உள்ளடக்க அம்சங்களை நாம் உரியவாறு புரிந்துகொள்வதற்கும் அவற்றின் 'இலக்கண வரலாற்றுநிலைகளிலான முக்கியத்துவ'ங்களைத் தெளிந்து கொள்வதற்கும் தமிழின் தொல்லிலக்கணமான தொல்காப்பியத்துடன் இவற்றைத் தொடர்புறுத்தி நோக்கிச் சில மேலதிக விளக்கங்களை முன்வைக்கவேண்டியது அவசியமாகிறது

## பல்லவர்கால இலக்கண நூல்கள் உணர்த்திநிற்கும் 'இலக்கண வரலாற்றுச் செல்நெறி':

தொல்காப்பியம் கி.பி.5ம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்பதை முன்னரே பலமுறை நோக்கியுள்ளோம். அது, எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் மற்றும் பொருளிலக்கணம் ஆகிய முப்பிரிவுகளைக் கொண்டதென்பதும் அவற்றுள் பொருளிலக்கணமானது இலக்கியத்தின் பொருள், வடிவம் (யாப்பு), எடுத்துரைப்புசார் உத்திமுறைகள் (அணி) முதலியவற்றை உள்ளடக்கிய விரிந்த பொருட்பரப்புடையது என்பதும் கூட முன்னரே பலமுறை நோக்கப்பட்ட செய்திகளேயாம். மேற்சுட்டியவாறு தொல்காப்பியம் விரிவாகக் கூறிய இலக்கண அம்சங்களில் சிலவற்றையே பல்லவர்காலப்பகுதிசார்ந்த இவ்விலக்கண ஆக்கங்களும் தனித்தனியாக எடுத்துப்பேச முற்பட்டுள்ளன. குறிப்பாகப் பொருள்மரபு, யாப்பியல் மற்றும் சொற்பொருள்நிலை ஆகியன சார்ந்த இலக்கணப் பகுதிகளே இவற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன என்பதை மேலே நோக்கினோம். இவ்வாறான இவற்றின் இயல்புகளை நோக்கும்போது, தொல்காப்பியத்துக்குப் பின்னர் குறிப்பாகப் 10ம் நூற்றாண்டு வரையான காலப் பகுதியில் அந்நூலைப்போல அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய வகையில் விரிந்த தளத்தில் இலக்கணங்கூறும் முயற்சியானது அருகத்தொடங்கிவிட்டது என்பதும், குறித்தசில இலக்கணப்பகுதிகளை மையப்படுத்தி நுனித்து நோக்கும் வகையிலான இலக்கண ஆக்க முறைமை உருவாகிவிட்டது என்பதும் புலனாகின்றன.

இவ்வாறு குறித்த சில இலக்கணப்பகுதிகளை மையப்படுத்தி நோக்கும் செயற்பாடுகளிலே குறிப்பிடத்தக்க இரண்டு முக்கிய அணுகுமுறைகளை அவதானிக்க முடிகிறது. அவற்றுள் ஒன்று, பாரம்பரியமான மரபுகளை குறிப்பாகத் தொல்காப்பியச் சிந்தனைகளை பெரிதும் அடியொற்றிச் செல்லும் அணுகுமுறையாகும். இதனைப் பொதுவாக வழிநூல் மரபு என்பர். 'முன்னோர் மொழிபொருளைப் பொன்னே போல் போற்றி'ப் புதிய செற்களிலும் தொடர்களிலும் எடுத்துப் பேசும் முறைமையே இது. இவ்வகை முயற்சிகளில் காலத்தேவைகளுக்கேற்பச் சிற்சில மாற்றங்களும் புதிய செய்திகளும் இடம்பெறுவதுண்டு. ஆயினும் ஒட்டுமொத்தப் பார்வையிலே இவ்வகை முயற்சிகள் மரபின் தொடர்ச்சிகளாகவே கொள்ளப்படவேண்டியன.

மேற்சுட்டிய இரண்டாவது அணுகுமுறையானது பாரம்பரியமான மரபுகளை அடியொற்றிச் செல்லும் அதேவேளை கால மாற்றங்களுக்கு ஏற்ப இலக்கியவெளிப்பாட்டு முறைமைகளில் நிகழ்ந்து வந்த மாற்றங்களைக் கருத்துட்கொண்டு இலக்கணங்கூறும் செயன்முறையாகும். இவ்வாறான அணுகுமுறைகொண்ட ஆக்கங்களே இலக்கணவரலாற்றில் நிகழ்ந்துவரும் மாற்றங்களையும் வளர்ச்சி சார் அம்சங்களையும் துல்லியமாக இனங்காட்டக்கூடிய காலக் கண்ணாடிகளாகத் திகழ்வனவாகும்.

மேற்சுட்டிய இருவகை அணுகுமுறைகளுள் இறையனார் களவியலுரை மற்றும் தமிழ்நெறி விளக்கம் ஆகியன பெரிதும் மேற்படி முதலாவது வகைமை சார்ந்து உருவானவையாகவே கொள்ளப்படக் கூடியனவாகும். அவை ஏற்கெனவே தொல்காப்பியம் கூறிச்சென்ற அகப்பொருள்மரபையே சிற்சில வேறுபாடுகளுடன் வெவ்வேறு சொற்களில் சுருக்கிக் கூறும் முயற்சிகளாகவே உருவானவை என்பதை அவற்றின் அமைப்பு தெளிவாகவே உணர்த்தி நிற்கிறது.

தமிழின் பண்டைய அகப்பொருள் மரபானது தொல்காப்பியத்திலே அகத்திணையியல், களவியல், கற்பியல் மற்றும் பொருளியல் ஆகிய நான்கு இயல்களில் 214 நூற்பாக்களில் விரிவாகப் பேசப்பட்டுளது. ஆனால் இறையனார் களவியல் என்ற ஆக்கத்தில் அப்பொருட்பரப்பானது களவியல் மற்றும் கற்பியல் ஆகிய இரு இயல்களின் 60நூற்பாக்களுக்குள் மட்டும் சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தமிழ்நெறிவிளக்கமானது மேலும் சுருக்கமாகவே அதனை எடுத்துரைத்துளது. 25நூற்பாக்களாலான அதன் சுருக்கமான அமைப்பே இதனை உணர்த்தவல்லது.

இந்நூலானது இறையனார் களவியல் நூலில் அமைந்த அகப்பொருட் செய்திகளை சுருக்கிக்கூறும் வகையில் எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது என ஆய்வாளர் கருதுவர்.(பார்க்க: முனைவர் சோ.ந. கந்தசாமி, உலகத்தமிழிலக்கிய வரலாறு... ப.244)இவ்வாறு நோக்கும்போது, இவ்விரு இலக்கண நூல்களும் தமிழின் பாரம்பரியமான அகப்பொருள் மரபைத் தமது கால இலக்கியச் சூழலுக்கு அறிமுகப்படுத்தி நிற்கும் 'கையேடு'களாக உருவானவை' என்றே கணிப்புக்குரியனவாகின்றன.

இத்தொடர்பிலே அடுத்து நமது கவனத்துக்குவரும் அம்சம், இறையனார் களவியல் என்ற ஆக்கம் எழுதற்குக் காரணமாயமைந்த சூழல் தொடர்பாக அந்நூலின் உரைப்பகுதி தரும் தகவல் ஆகும். இத்தகவலானது அந்நூலின்'அவதாரிகை' என்ற பகுதியில் ஒரு கதையாகவே எடுத்துரைக்கப்பட்டுளது. அக்கதையின் சுருக்கம் வருமாறு:

பாண்டியநாட்டில் ஒரு காலகட்டத்தில் வறட்சியேற்பட்டது. அந்நிலையில் பாண்டியன் சங்கப்புலவர்களை அழைத்து உங்களை என்னால் இப்போது பேண முடியவில்லை, நீங்கள் எங்காவது சென்று பிழைத்துக்கொள்ளுங்கள் எனக்கூறி நாட்டைவிட்டு அனுப்பிவிட்டான். பின்னர் நாட்டில் செழிப்பேற்பட்டபோது அப்புலவர்களை அவன் அழைத்துவரச் செய்தான். அப்படி மீண்டபுலவர்களில் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் மற்றும் யாப்பிலக்கணம் ஆகியவற்றில் புலமை வாய்ந்தோரே இருந்தனர். பொருளிலக்கணம் அறிந்தவர்கள் இருக்கவில்லை. அதனால் அம்மன்னன் பெரிதும் கவலை கொண்டான். அக்கவலையைப் போக்கவிழைந்த இறைவன்(சிவபிரான்) அறுபது நூற்பாக்களைச் செப்பேடுகளில் எழுதித் தனது இருக்கையில் வைத்தார். அதுவே இறையனார் களவியல் என்ற நூலாகும். நூல் கிடைக்கப்பெற்ற நிலையில் மகிழ்ச்சியடைந்த பாண்டியமன்னன் அதற்கு உரை எழுதுவித்துப் பேணிக்கொண்டான்.

மேற்படி கதையம்சமானது புராணத்தன்மை வாய்ந்தது என்பது வெளிப்படை, ஆயினும் இதனூடாக நாம் புரிந்துகொள்ள வேண்டிய வரலாற்றுச் செய்தியொன்று உளது. பாண்டியநாட்டில் உள்ள மதுரைச் சூழலில் குறித்த ஒரு காலகட்டத்தில் தமிழ் இலக்கணக் கல்வியானது உரியவாறு பேணப்படாதிருந்த நிலையில் அவ்விலக்கணத்தின் ஒரு கூறாகிய அகப்பொருள் மரபானது வழக்கிழந்துவிட்டிருந்தது. சிலகாலத்தின் பின்னர் அம்மரபு மீட்டெடுக்கப்பட்டது. மேற்சுட்டிய இறையனார் களவியல் உருவான கதை' ஊடாக இங்கு நாம் புரிந்துகொள்ளவேண்டிய முக்கிய வரலாற்றுச் செய்தி இதுவேயாகும். இவ்வாறு நோக்கும் போது இந்நூலாக்கம் குறித்த ஒரு காலகட்ட இலக்கணச் சூழலின் தேவையை நிறைவுசெய்யும் நோக்கிலான புலமைசார் செயற்பாடு என்பது தெளிவாகிறது.

இவ்வாறாக, 'இழந்துவிட்டமரபை மீட்டுருவாக்குவதான' செயற்பாட்டிலே குறித்த ஒரு புலவரோ அல்லது புலவர்கள் சிலர் இணைந்தோ ஈடுபட்டிருக்கலாம். 'அவர்கள், தம்மிடமிருந்த பண்டைய ஏட்டுப் பிரதிகளிலிருந்தோ அல்லது நினைவுகளிலிருந்தோ அம்மரபை மீட்டெடுத்துப் பதிவு செய்திருக்க வேண்டும்' என்பதே இங்கு உய்த்துணரப்பட வேண்டிய செய்தியாகும். ஆயினும் அன்றைய சமய நம்பிக்கைச் சூழல் சார்ந்தோர் அச்செயற்பாட்டை 'மானுட முயற்சி'யாகக் கருத முற்படவில்லை, மாறாக அவர்கள் அதனை, 'இறைவனது அருட்செய'லாகவே கருதிப்போற்ற முற்பட்டனர். நாளடைவில் அதுவே உண்மையாகவும் நம்பப்படலாயிற்று. இறையனார் களவியலின் உருவாக்கம் தொடர்பாக நமதுகாலத் திறாய்வுப் பார்வைக்குப் பொருந்தக்கூடிய புரிதல் இதுவேயாகும்.

(தொடரும்)



subramanian.n@thaiveedu.com

# வடக்கு, கிழக்குப் பழமைமிகு பாடசாலைகளின் வரலாறு

**ஈழத்தில் 100 வருடங்களுக்கு முன்பு சைவ, கிறிஸ்தவ அமைப்புகளினால் ஆரம்பிக்கப்பட்ட பின்வரும் பாடசாலைகளின் வரலாறு பற்றி தாய்வீட்டில் தொடர்ந்து எழுதியுள்ளேன். இவ்வாக்கங்கள் அனைத்திலும் தகவல்கள் எதும் விடுபட்டும், தவறுகள் இருப்பினும் சுட்டிக்காட்டினால் வெளிவரவிருக்கும் நூலில் அவற்றைத் திருத்திப் பதிப்பிக்க வசதியாகவிருக்கும்.**

1814 மட்/ மெதடிஸ்த மத்திய கல்லூரி - மட்டக்களப்பு
1816 யா/ தெல்லிப்பளை யூனியன் கல்லூரி - தெல்லிப்பளை
1816 யா/ யாழ். மத்திய கல்லூரி - யாழ்ப்பாணம்
1819 திரி/ மெதடிஸ்த பெண்கள் கல்லூரி - திரிகோணமலை
1820 மட்/ வின்சன்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை - மட்டக்களப்பு
1823 யா/ பரி. யோவான் கல்லூரி - யாழ்ப்பாணம்
1823 யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை - பருத்தித்துறை
1823 திரி/ விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம் - திரிகோணமலை
1824 யா/ உடுவில் மகளிர் கல்லூரி - உடுவில்
1834 யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை - யாழ்ப்பாணம்
1836 யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை - மானிப்பாய்
1838 யா/ ஹாட்லிக் கல்லூரி - பருத்தித்துறை
1845 யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம் - யாழ்ப்பாணம்
1850 யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி - கோப்பாய்
1850 யா/ சம்பத்தரிசியார் கல்லூரி - யாழ்ப்பாணம்
1852 யா/ உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி - உடுப்பிட்டி
1864 திரி/ புனித மரியாள் கல்லூரி - திரிகோணமலை
1867 திரி/ புனித ஜோசப் கல்லூரி - திரிகோணமலை
1867 யா/ யாழ்ப்பாணக் கல்லூரி - வட்டுக்கோட்டை
1868 மட் / புனித சிசிலியா கொன்வென்ட் - மட்டக்களப்பு
1872 யா/ புனித அந்தோனியார் கல்லூரி - ஊர்காவற்றுறை
1873 மட் / புனித மைக்கேல் கல்லூரி - மட்டக்களப்பு
1875 யா/ றிபேக் கல்லூரி - சாவகச்சேரி
1879 யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி - சுழிபுரம்
1888 யா/ காரைநகர் இந்துக் கல்லூரி - காரைநகர்
1890 யா/ யாழ். இந்துக் கல்லூரி - யாழ்ப்பாணம்.
1890 யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி - கொக்குவில்
1890 வவு/ றம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் - வவுனியா
1890 வவு/ றம்பைக்குளம் திருக்குடும்பக் கன்னியர்மடம் - வவுனியா
1894 யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி - சுன்னாகம்
1894 யா/ அருணோதயாக் கல்லூரி - அளவெட்டி
1896 யா/ சிதம்பராக் கல்லூரி - வல்வெட்டித்துறை
1896 யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி - யாழ்ப்பாணம்
1904 யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி - சாவகச்சேரி
1910 யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி - மானிப்பாய்
1910 யா/ தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பளை
1911 யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி - உரும்பிராய்
1913 யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி - வண்ணார்பண்ணை
1913 யா/ இராமநாதன் இந்துக் கல்லூரி – மருதனார்மடம்
1914 யா/ தேவரையாளி இந்துக் கல்லூரி - வதிரி

திரிகோணமலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, திரிகோணமலை புனித மரியாள் கல்லூரி - மேற்படி மூன்று பாடசாலைகளுக்கும் லரலாற்று ஆதாரங்கள் எதுவும் கனடாவில் கிடைக்காததனால் அதனைப் பதிவு செய்ய முடியவில்லை., மன்னிக்கவும்.

திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, மட்டக்களப்பு புனித சிசிலியா கொன்வென்ட் - மேற்படி பாடசாலைகள் இரண்டிற்கும் போதிய தகவல்கள் கிடைக்காததனால் மிகவும் குறைந்த தகவல்களுடன் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இது ஒரு திருப்தியான முழுமையான வரலாறு இல்லை. தயவுசெய்து மேற்படி 5 பாடசாலைகளுக்கும் போதிய தகவல்கள், ஆதாரங்கள், பாடசாலை நூல்கள் எதுவாகினும் பழைய மாணவர்கள் தந்து உதவினால் ஒரு முழுமையான பாடசாலை வரலாற்று நூலைத் தரமுடியும்.

**தொடர்புகட்கு: முருகேசு பாக்கியநாதன்: 1 647 856 6326, e-mail: packsmuru100@gmail.com**

வீடு வாங்க விற்க

$1,199,000




South of Patterson
4 + 7 Bedrooms 7 Washroom
W/O Basement Finished

$375,000




Markham/McNicoll
Commercial Condo



Kuga Raveendrarajah
Real Estate Broker
Dir: 416-843-8585



Mathan Selvendarakumaran
Sales Representative
Dir: 416-625-2870



Shajetha (Suzy) Sabanathan B.Sc.
Sales Representative
Cell: 416-298-3200

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6

சேமிப்பின் அடையாளம் அழகானதோர் வீடு

Bus: 416-298-3200

*Independently Owned and Operated, Realtor

# தமிழ்வலை - 30


‘தாய்வீடு’ சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் ‘தமிழ்வலை’யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-30 வினா

**இடமிருந்து வலம்**

1 புது வருடம்
3 புன்னகை புரி
5 மணமகள் அணியும் சேலை
6 இரை
7 செவிமடுப்போர்
9 கொடுக்குள்ள உயிரினம்
10 பத்துப் பாடற்கூறு
12 மனையாள்
15 புனுகு
17 பேடி
18 இலைவகைத் தீன்
19 ஓர் இலக்கணச் சொல்
21 பணிவிடைப் பெண்

**மேலிருந்து கீழ்**

1 மெய்சிலிர்
2 சொரியும் நீர்
3 மக்களின் முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரி (4-5)
4 தீவிரம்
8 நியாயவான்
11 ஒரு தானியம்
13 கிழகிலங்கையில் பாயும் ஓர் ஆறு
14 தவறு காண்
16 விரும்பு
18 நீராடு
20 ஒருவகை ஆந்தை

தமிழ்வலை போட்டிக்கான விடையை
இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல்
அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து
அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.


பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய
அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

**விடைகளை அனுப்பவேண்டிய மினன்னஞ்சல் முகவரி**
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**விடைகளை அனுப்பவேண்டிய அஞ்சல் முகவரி**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 29க்கான விடைகள்



## தமிழ்வலை-29 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்கள்

கருனாநிதி சந்திரன், ரொறன்ரோ
புண்ணியமூர்த்தி விவேக், ரொறன்ரோ
திருமதி சாந்தி ஆறுமுகம், மார்க்கம்

### பரிசுபெறும் போட்டியாளர்

**சுந்தரம் திருச்செல்வம்,** ஸ்கார்பரோ

thamilvalai@thaiveedu.com



# வாய்ப்பாணம்

- செல்வம் அருளானந்தம் -



'வீட்டுப்பக்கம் வா... சாப்பிட்டிட்டு போகலாம்' எண்டார் துரைசிங்கம் அண்ணர்.

அடுத்தடுத்த நாள் மத்தியானம் துரைசிங்கம் அண்ணன் வீட்டில சாப்பாடு.

மரவெள்ளிக் கிழக்கும் கணவாய் அவியலும் தொட்டுக் கடிக்கப் பச்சை மிளகாயும் இருந்த அந்த சந்தோசமான தருணத்தில... 'அண்ணை, சாதி யாழ்ப்பாணத்துக்குத் திரும்ப வந்திட்டுதாமே' எண்டு நான் கதையைத் தொடக்கினன்.

கொஞ்சங்கூடத் தாமதிக்காம, கொடுப்புக்குள்ள சிரிச்சுக்கொண்டு சட்டெண்டு சொன்னார், "சாதி எங்கையடா போனது? திரும்பி வாறதுக்கு... அது கொஞ்சநாள் கள்ளன் பொலிஸ் விளையாட்டெல்லே விளையாடினது".

"ஆமி வன்னியிலை நிக்கேக்கை யாழ்ப்பாணத்திலை இயக்கம் இருக்கும். ஆமி யாழ்பாணத்திலை நிக்கேக்கை இயக்கம் வன்னியிலை நிக்கும். சாதியும் அப்பிடித்தான் ஒளிச்சு திரியும்.

கொஞ்ச நாள் ஆட்கள் இடங்கள் மாறி-மாறி ஓடித்திரிஞ்சதாலையும் பெடிய ளின்ரை தண்டனையாலையும் சாதி இல்லாத மாதிரி இருந்தது உண்மைதான். ஆனா அது இந்த மண்ணை விட்டு எங்கையும் போகேல்ல.

இப்பவும் புத்தகக் கடையளில ஆறுமுக நாவலர் எழுதின, 'குறைந்த சாதியோடை ஒரேபந்தியில் இருந்து சாப்பிடப்படாது' எண்ட சைவ வினாவிடை நல்லாய் விற்றுக் கொண்டுதான் இருக்கு".

சொல்லிப் போட்டு எங்கேயோ பாத்தபடி ஒரு பெருமூச்சு விட்டார்.

மனசப் பிழியிற மாதிரி இன்னொரு கதையையும் சொன்னார்.

"உன்னோடை முந்தி திரிஞ்சானே மாசில்லான்... நினைவிருக்கே"

மாசில்லான் என்ர நினைவுக்குத் தெளிவாக வந்தான். மெலிந்த வளைந்த தேகமும் பரட்டைத் தலையுமாய்..

"ஓம் அண்ண.. இப்ப எங்கையவன்?"

நீ வெளிநாட்டிக்குப் போயிற்றாய். ஊருக்குள்ள ஆமி வாற மாதிரி அப்பப்ப சாதிப் பிரச்சினையளும் வந்து போகும். மாசில்லான்ர சாதியோடையும் ஏதோ பிரச்சினை. எத்தினை நாளைக்குத்தான் பொறுக்கிறது? மாசில்லான் கெம்பிக் கொண்டு கிளம்பிட்டான். 'இனி இவங்களுக்கு மேளம் அடிக்கிறதோ' எண்டு நினைச்சான் போல...

தங்கடை ஆட்களின்ரை எல்லா பறை மேளங்களையும் சந்தியிலை கொண்டு வந்து போட்டான். அவன்ர இனசனங்கள் குளறினதுகள்தான். அவன்ர காதில விழேல்ல. எல்லாத்தையும் மண்ணெண்ணை ஊத்திக் கொளுத்திப் போட்டான்.

சாதிப்பிசாசு விடுமே...அவன் ஊரை விட்டுக் குடும்பத்தோட வன்னிக்குப் போனான். அங்கையெங்கையோ ஒரு வீட்டைக் கட்டி வாழ யோசிச்சிருப்பான் போல, யுத்தம் விடுமே...? அவன்ரை இரண்டு தம்பிமார் சண்டையிலை செத்துபோய் மாவீரர் ஆகிப் போனாங்கள்.

மாவீரர் குடும்பம் எண்டுறதாலை இயக்கம் அந்தக் குடும்பத்துக்கு ஆற்றையோ வீட்டையும் காணியையும் குடுத்துது. முள்ளி வாய்க்கால், முகாம்... எண்டு ஒரு வழியா உயிர்தப்பி, திரும்பி வந்து அந்த வீட்டில இருந்திருக்கிறான்.

யாழ்ப்பாணத்தில இருந்த அந்த காணிக் காரன் பொலிசோட அங்க போய் மாசில்லான் குடும்பத்தை விரட்டிப் போட்டு காணிய எடுத்திட்டான்" எண்டு சொன்ன துரைசிங்கம் அண்ணர் ஆறுதலாச் சுவாசிக்க கொஞ்சம் இடைவெளி விட்டார்.

'மாசில்லான் இஞ்சை வந்து என்ன செய்யிறான்?' எண்டு நான் கேக்க...

'அவன் இங்க வரேல்ல...அவனுக்கு அஞ்சாறு பிள்ளைகள். எங்கையோ மன்னார் பக்கம் போய் கூலி வேலை செய்யுறானாம் எண்டு கேள்விப்பட்டன்' எண்டு சொன்னவர் ஏதும் பேசாமல் இருந்தார்.

மாசில்லான் என்ர மனசுக்குள்ளையும் நிலைச்சு நிண்ட மாதிரிக் கிடந்துது. முடிஞ்சா அவனச் சந்திக்க வேணும்.

இனிக் கதைய வேறை பக்கத்துக்கு மாத்தினாத்தான் துரைசிங்க அண்ணர் வாய் திறப்பார்.

ஏன் அண்ணன்? ஆற்ரை வீட்டுக்குப் போனாலும் இரண்டு மூன்று நாய் குரைச்சுக் கொண்டு நிக்குது. கேற்றுக்கு வெளியாலை நிண்டு கொண்டு 'நாய் கடிக்குமோ' எண்டு கேட்டால் 'அது நெடுகக் கடிக்காது எப்பையாச்சும் இருந்திட்டு தான் கடிக்கும்' எண்டு சொல்லிகினம். இந்த எப்பையாச்சும் எண்டுறது இப்பவா இருந்திட்டா என்ரை பாடெல்லே பெரும் பாடாப் போகும். இங்க கள்ளர் பெருகிப் போச்சினமோ?

இப்ப துரைசிங்கம் அண்ணர் 'மூட்'டுக்கு வந்திட்டார். மெல்லிசாச் சிரிச்சுக்கொண்டு...

'எங்கடை குறிச்சியிலை ஒரு 35-40 சனங்கள்தான் இருக்கினம். ஆனா கிட்டத்தட்ட 65 - 70 நாய்கள் இந்த வீடுகளில நிக்குது. இது பழைய அரசாங்கத்தின் வேலை. அப்ப நாயைக் கொல்லப்படாது எண்டு சட்டம் போட்டாங்கள். அது வாயில்லாப் பிராணியாம்.

அவங்கட ஆட்சிக்காலத்தில, வரையறை இல்லாம ஆட்கள் கடத்தப்பட்டிருக்கினம், பெண்டுகள் நாசப்படுத்தப்பட்டுதுகள். ஆள் வெட்டு, வாள் வெட்டுக்குக் குறைவில்ல. ஆனா நாயை கொல்லப்படாது, றோட்டிலை புகைக்கப்படாது, கண்ட இடத்தில குடிக்கப்படாது என்றெல்லாம் சட்டங்கள் போட்டாங்கள்.'

துரையிங்கம் அண்ணர் ஒரு சரளமான ஓட்டத்தில கதைக்கத் தொடங்கியிருந்தார். அவற்ரை மனசுக்குள்ளையும் இந்த மண்ணுக்குள்ளையும் புதைஞ்சி கிடக்கிற விசயங்களக் கொஞ்சமாவது பிடுங்க வேணும் எண்டிறதில நான் கவனமா

*தொடர்தல் 113ம் பக்கம்*

An Ontario Secondary Private School Registered Under the Ministry of Education

**Delta Academy Inc.**

Offers the Following OSSD Credit Courses

Our goal is not the quantity of students but quality of education. We ensure that the students are trained to work independently and be prepared to the next grade level with the help of our highly qualified and experienced teachers.



BSID # 667561

| Course | Code |
|---|---|
| **Grade 10** | |
| English | ENG2D |
| Principle of mathematics | MPM2D |
| Science | SNC2D |
| **Grade 11** | |
| English | ENG3U |
| Functions | MCR3U |
| Biology | SBI3U |
| Chemistry | SCH3U |
| Physics | SPH3U |
| Accounting | BAF3M |
| Economics | CIA3U |
| **Grade12** | |
| English | ENG4U |
| Advanced Functions | MHF4U |
| Calculus and Vectors | MCV4U |
| Data Management | MDM4U |
| Biology | SBI4U |
| Chemistry | SCH4U |
| Physics | SPH4U |
| Accounting | BAT4M |
| Economics | CIA4U |

ART COURSES

| Course | Code |
|---|---|
| **Grade 10** | |
| Tamil | LITBD1 |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU20 |
| Piano Keyboard | |
| Dance | ATI201 |
| Miruthangam | AMP20 |
| **Grade 11** | |
| Tamil | LITCU1 |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU3M |
| Piano Keyboard | |
| Dance | ATI3M1 |
| Miruthangam | AMP3M |
| **Grade 12** | |
| Tamil | LITDU1 |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU4M |
| Piano Keyboard | |
| Dance | ATI4M1 |
| Miruthangam | AMP4M |

**Classes begins on**
**February, July, September**
**Register with us early as the space is limited.**
**All courses are 110 hours.**
**Course fee is $500 (Including registration )**

KINDERGARTEN TO GRADE 12
**TUTORING & HOMEWORK HELP**
Special Classes For:

- Functions
- Physics
- Advanced Function
- English
- Chemistry
- Calculus & Vectors

Evening and weekend classes available
Qualified and experienced teachers to help your children to do better

**416.751.2011**
**deltaacademyinc@hotmail.com**
**1160 Birchmount Road, Unit 1B, Scarborough ON M1P 2B8**

# வாய்ப்பாணம்…

**112ம் பக்கத் தொடர்ச்சி…**

இருந்தன்.

‘இப்ப யாழ்பாணத்திலை படிப்புகள் எப்பிடிப் போகுது? படிப்புத்தானே யாழ்ப்பாணத்தின்ரை சொத்து.’

‘உலகத்திலை எல்லா ஊரிலையும் சனத்தொகை கூடிக்கொண்டு போகுது. இங்கதான் சனத்தொகை குறைஞ்சு கொண்டு போகுது. இருக்கிறதுகளில கொஞ்சம் படிப்பு படிப்பு எண்டு புலம்பிக்கொண்டு திரியுதுகள்.

இந்தத் தாய் தகப்பன்மார் பிள்ளைகளை படிக்க விடுகிறாங்கள் இல்லை. பிள்ளைகளை படிக்க வைக்கிறம் எண்டிட்டு சித்திரவதையெல்லே செய்யுறாங்கள்.

என்னர பேத்தியை பத்திச் சொல்லுறன் கேள். தேப்பன் அவளை அஞ்சரை மணிக்கு எழுப்புறான். தாய் தேத்தண்ணியப் போடடுக் குடுக்கிறாள். உடன ரியூசனுக்குக் கூட்டிக்கொண்டு போறான். பாவம் அது. தூக்கக் கலக்கத்தில என்னத்தைப் படிச்சுதோ தெரியாது. 7 மணிக்கு திருப்பி வீட்டுக்கு வந்து, அரக்கப் பரக்க வெளிக்கிட்டு, தாய் குடுக்கிறதை விழுங்கியிட்டு… 8.30க்கு முதல் பஸ்சைப் பிடிச்சு மானிப்பாய் பள்ளிக்கூடத்துக்குப் போகவேணும்.

திரும்ப 4 மணிக்கு வீட்டை வந்து கிடக்கிறதை திண்டுட்டு, மற்ற ரியூசனுக்குப் போக வேணும். எட்டு மணிக்குத் தூங்கி விழுந்து கொண்டுதான் வரும். இனி பள்ளிக்கூடத்தின்ர வீட்டுவேலை. அரைகுறைச்சாப்பாடு, நித்திரை. பிறகு திருப்பியும் விடிய அஞ்சரை மணி. என்ன சீவியமடா இது?

இதிலை…பிள்ளை ஆறுதலாயிருந்து விளையாடிச்சிரிச்சு சிந்தித்து படிக்கிறது எங்கே.?’

உணர்ச்சிவசப்பட்ட துரைசிங்கம் அண்ணற்ரை குரல் சூடாயிற்று.

‘அந்த குழந்தைகளை தன்ர பாட்டிலை படிக்க விடுங்கோடா’ எண்டு சத்தமாவே கத்தினார்.

வீட்டுக்குள்ள ஆருக்கும் அது கேட்டமாதிரித் தேரியேல்ல.

நான் விடுறதாயில்லை. ‘பிள்ளையள் இப்பிடிப் படிக்குதுகள் எண்டால் படிப்பில முன்னேற்ங்கள் எப்பிடியண்ண?’ என்றேன்.

‘என்ன முன்னேற்றம்…? முதல் இடத்தில் இருந்த யாழ்ப்பாண யூனிவேசிற்றி பத்தாவது இடத்திலை இருக்கு. இலங்கையில இருக்கிறதே பத்து யூனிவேசிற்றிதானே. எனக்கு கடைசி எண்டு சொல்லக் கூச்சமாய்க் கிடக்குது என்றார்.

இதைக் கவலையும் கடுப்புமாய்த்தாய் துரைசிங்கம் அண்ணர் சொன்னார்.

நான் ‘இதுக்கு யுத்தமும் இடப்பெயர்வுகளும் பெரிய காரணம் எல்லோ’ எண்டு சொல்ல, இடைமறிச்ச அண்ணர்,

அதுகள் பெரிய காரணங்கள்தான். அதை விட மோசமான காரணங்கள் உங்கடை வெளிநாட்டு பணமும் வெளியில போற ஆசையும்தான். உங்க கனக்கப் பெடியன் பெட்டையள் வெளிநாட்டுக்குப் போற கனவில கையில இருக்கிற வாழ்கையைத் துலைச்சுப்போட்டுத் திரியுதுகள்.

நீ எங்கையாவது கையிலை குழந்தை-யோடை, அல்லது வயித்திலை பிள்ளை-யோடை பெம்பிளைகளைக் கண்டனியோ. வலு குறைவு… வெளிநாட்டு மாப்பிளையளின்ர சாதகத்தோட திரியுற புரோக்கர்மார் கண்ணில படுகிற பொம்பிளையப் பிடிச்சு வெளியால அனுப்பிப் போடுறாங்கள்.

‘உங்களாலை தான் இங்கு பெரிய பிரச்சினை. வெளிநாட்டு மோகமும் வெளிநாட்டுப் பணமும் இல்லையெண்டால் நாடு கொஞ்சம் நல்லாய் வரும் என்று நினைக்கிறன்.’

என்னை ஒரு வெறுப்போட பாத்துக்கொண்டுதான் துரைசிங்கம் அண்ணர் இதைச் சொன்னார்.

வெளிநாட்டுத் தமிழருக்குச் சார்பாய் ஏதாச்சும் சொல்லவேணும் எண்டு நினைச்சுக் கொண்டு, ஏன் அண்ணை வெளிநாட்டு தமிழரிலை பாய்யிறியள்? அவங்கள் தங்கட இனசனம் நல்லாயிருக்க வேணும் எண்டுதானே காசு பணத்தை அனுப்புறாங்கள்… எண்ணன்.

‘என்ர வாயில வரும் இப்ப…காசு அனுப்புற நீங்கள் எதுக்கு என்னத்துக்கு எண்டு கேக்க மாட்டியளே? மோட்ட சைக்கிளும் வாங்கிக் கொண்டு, கஞ்சாவும் தண்ணியும் அடிச்சுக் கொண்டு, பெட்டைய ஏத்தித் திரியிற பெடியளுக்குப் பின்னால விளையாடுறது உங்கட காசு.

அங்க லீவு எண்டு போட்டு, யூன் யூலையில இங்க வாறியள். இங்க வந்து நீங்கள் காட்டுற சோக்குப் போக்கு இருக்கே… என்னத்தைச் சொல்ல நான்? இந்த மண்ணோட ஊறிக்கிடக்கிற வயசான என்ன மாதிரி ஆக்களே கிளுகிளுத்துப் போறம் எண்டா… இங்கயிருக்க பெடி பெட்டையள் என்ன செய்யும்?

‘எங்கட சனத்தைப் பத்தி உங்கட பக்கத்தில யோசிக்கிறத்துக்கு நிறையக் கிடக்குது தம்பி.’

துரைசிங்கம் அண்ணற்றை கதையில ஞாயம் இருந்தாலும் ஒட்டு மொத்தமா எல்லாரையும் சாடுறதலை எனக்கு உடன்பாடு இருக்கேல்ல. கொஞ்சம் கோவமாத்தான் கேட்டன்.

‘கடந்த காலத்திலை எங்கட சனங்கள் சாவின்ர விளம்பில கிடக்கேக்க, தாங்கிப் பிடிச்சு, திருப்பியும் வாழுறத்துக்கு வழி செய்தவை வெளிநாட்டுத் தமிழர். இது எங்கடை நாடும் தானே அண்ணன். எங்களுக்கும் எல்லா உரித்தும் இருக்கு. நாங்கள் எங்கட மண்ணுக்கு சோக்காட்ட வாறம் எண்டு ஏன் நினைக்கிறியள்? இந்தக் காத்தைச் சுவாசிச்சு… இந்த மண்ணில நடந்து… எங்களுக்குள்ளையும் காயங்கள் கிடக்கு. இந்த மண்தானே அண்ணர் அதுக்கும் மருந்து.’

‘நான் இல்லையெண்டு சொல்லேல்ல. எல்லாத்துக்கும் ஒரு அளவு இருக்கு. ஒரு கதைக்கு சொல்லுறன். உனக்கொரு தங்கச்சி இருக்கிறா என்று வைச்சுகொள், அவவுக்கு கொப்பர் கல்யாணம் செய்ய வெளிக்கிடுகிறார் எண்டா… நீ கொஞ்சக் காசு அனுப்பு. நடக்கிறதைக் கவனி. காசு அனுப்புறனான் எண்டுறத்துக்காக, அந்த மாப்பிள்ளைப் பார்… இந்த மாப்பிள்ளையைப்பார்… எண்டு ஊர் நிலவரங்கள் தெரியாமல் அங்கையிருந்தபடி நீ சொல்லப்படாது. அதை முடிவு செய்யிறது உன்ரை தங்கச்சியும் கொப்பரும்தான்.’

85 வெளியால போன உனக்கு, 2015இல இந்த மண்ணும் மண்ணின்ர மனசும் எப்பிடி மாறிக் கிடக்கு எண்டு தெரியுமே? அதுகள தெரியாமத்தானே என்னட்ட பிடுங்கிப் பிடுங்கிக் கேட்டுக் கொண்டிருக்கிறாய். இப்பிடியிருக்கிற நீ அங்கயிருந்து கொண்டு இங்க நடக்கிறதுகளை எப்படி முடிவு செய்யேலும்?

இங்கை இருக்கிற காரை இங்க இருக்கிற ரைவர்தான் ஓட்ட வேணும். அங்கையிருந்து கொண்டு நீ ஓட்டப்படாது.’

என்ர நியாயத்தை நான் கதைக்க வெளிக்

*தொடர்தல் 114ம் பக்கம்*

# வாய்ப்பாணம்...

113ம் பக்கத் தொடர்ச்சி...

கிட்டு, இந்த மனிசனோட சண்டை பிடிக் கேலாது எண்டு மனசுக்க நினைச்சுக் கொண்டு... 'அண்ணர், இப்பையும் மக்க ளுக்கு சீவிக்கிறதிலை கஸ்டம் இருக்கோ?' எண்டு கதைய மாத்தினன்.

ஓமடா தம்பி... வெளிநாட்டில உறவுகள் இல்லாததுகள், வெளிநாட்டுக்கு போனவங் களால முழுசாக கைவிடப்பட்டதுகள் வாழப் போராடிக் கொண்டுதானிருக்குதுகள். வன் னிக்குள்ள இது கனக்க.

இப்ப... அவற்ற குரல் தணிஞ்சு போயி ருந்துது.

'அண்ணர், வெளிநாடுகளிலே வாழுகிற தமிழ் அமைப்புகள் அப்பப்ப சில நிகழ்ச் சியளச் செய்யேக்க வார வரும்படியில ஒரு பகுதியை ஊரில் துன்பப்படுகிற உற வுகளுக்கு அனுப்பப்போறம் என்று சொல் லித்தான் நடத்துகினம். சில நிகழ்சிகளுக்கு மண்டபக் காசே சேராது, அது வேறை கதை. வெளிநாட்டு தமிழற்றை காசு இல் லாவிட்டால் நாடு இன்னும் கஸ்ரப்பட்டிருக் குமல்லோ என்று என்ர ஆதங்கத்தையும் கொட்டிப் போட்டு ஒரு கதையைச்சொன் னேன்.

'யுத்தம் முடியிற காலத்திலை என்ரை நண்பர் ஒருவருக்கு அவற்ரை சொந்தக் காரர் ஒருவர் இங்கையிருந்து ரெலிபோன் எடுத்தார். தனக்கு சரியான கஸ்டம் எண் டும், குடும்பம் சரியான வறுமையில் இருக் குது எண்டும் சொல்லி, ஏதாவது உதவி செய் என்று கேட்டிருக்கிறார்.

என்ரை நண்பரோ வீட்டு மோட்கேஜ், கார் கடன் எண்டு கனக்க பிரச்சினையில இருக் கிற சாதரண ஆள். கடன்பட்டாலும் ஏதா வது அந்தக் குடும்பத்துக்கு உதவி செய்ய வேணும் எண்டு நினைச்சான்.

'நான் காசாய்த் தரேல்ல, ஏதாவது தொழில் செய்யிறத்துக்கு உதவி செய்யிறன்' எண்டு நண்பருக்குச் சொல்லியிருக்கிறார். நண்ப ரும் 'இரண்டு மூண்டு பால்மாடு வாங்கி வளர்க்கிறன், ஐஞ்சு இலட்சம் காசு அனுப்பு' எண்டிருக்கிறார். சரியாக் கஸ டப்பட்டுத்தான் அந்தக்காசை என்ர நண் பர் அனுப்பினார்.

அத்தோடை அந்த அலுவல் முடியேல்லை.

'மாட்டுக்கு கொட்டில் எல்லாம் போட்டு மாடுகளும் வேண்டிப் போட்டன். ஆனா மாடுகள் வாய்கேல்லை. மாட்டின்ரை பால் மாடுகளின்ர கண்டுகளுக்கே காணாமல் கிடக்கு. அதுகளைப் பராமரிக்க இன்னும் கொஞ்சம் காசு அனுப்பு' எண்டு திருப்பி யும் கேட்டிருக்கின்றார். இப்பிடி அடிக்கடி ரெலிபோன் எடுக்க என்ர நண்பருக்குக் கொதி ஏறிவிட்டது.

இப்படித்தான் ஒரு நாள் விடியப்பறத் தால தொலைபேசியெடுத்து மாடுகள் பட் டினியாக் கிடக்கு. சாப்பாடு போடக் காசு வேணும் எண்டு கேட்டிருக்கிறார்.


இனி என்னாலை உதவி செய்ய இயலாது. நீ ஒன்று செய்... அந்த மாடுகளை அவிழ்த்து வெளியிலை கலைத்து விடு எண்டிருக்கிறார் என்ர நண்பர்'.

நான் என்ர கதையை முடிச்சுப் போட்டு துரைசிங்கண்ணற்ரை முகத்தைப் பார்த் தன்.

துரைசிங்கண்ணர் மெல்லிசாய்ச் சிரிச்சார். ஒன்றும் சொல்லேல்லை.

அவற்ரை வாயை அடைச்சுப் போட்டன் எண்டு என்லையும் சந்தோசப்பட முடி யேல்ல.

'உன் சேலை தானே வண்ணப்பூஞ்சோலை தானே...'



**'என்ன முன்னேற்றம்? முதல் இடத்தில் இருந்த யாழ்ப்பாண யூனிவேசிற்றி பத்தாவது இடத்திலை இருக்கு. இலங்கையில இருக்கிறதே பத்து யூனிவேசிற்றிதானே. எனக்கு கடைசி எண்டு சொல்லக் கூச்சமாய்க் கிடக்குது என்றார்.**

தற்செயலாத்தான் காதில விழுந்தது.

*ஆத்தா உன் சேல - அந்த*
*ஆகாயத்தப் போல*
*தொட்டில் கட்டித் தூங்க*
*தூளி கட்டி ஆட*
*ஆத்துல மீன் புடிக்க,*
*அப்பனுக்கு தல தொவட்ட*
*பாத்தாலே சேத்தணைக்கத் தோணும்*
*நான் செத்தாலும்*
*என்னப் பொத்த வேணும்!*

காதில விழுகிற பாட்டுகள் எல்லாம் நெஞ் சத் தொடுறதில்லை. அப்பிடியே தொட் டாலும் நிலைக்கிறதில்லை.

இது வேற மாதிரியா இருந்துது. திரும்பவும் முழுசாக் கேட்டன்.

*'ஈரச்சேலை காயும் போது*
*வானவில்லாத் தெரியும்*
*இத்துப்போன சேலையில் உன்*
*சோகக் கதை புரியும்*
*வெக்கையிலை விசிறியாகும்*
*வெயிலுக்கு குடையாகும்.*
*உன் சேலை தானே*
*வண்ணப்பூஞ்சோலை தானே.*

உடம்பில ஓடின உணர்வெல்லாம் ஓரிடத் தில நிண்டு ஓங்கிக் குத்தின மாதிரி ஒரு வலி. இயல்பான நாட்டுப்புற நடையில, உயிரை உலுப்புற ஒரு ஓசையில மன சுக் குள்ள நிறைஞ்சு நிண்டது இந்தப் பாட்டு.

தாயின்ர அரவணைப்பு மட்டும் இல்லை யெண்டால் இந்த உலகம் பூரிப்பைத் தரிசிக்க வாய்ப்பே இல்ல. 'அம்மா' எண்ட ஒத்த ஓசைக்குள்ள உயிரின்ர ஒட்டு மொத்த சிலிர்ப்பும் அடங்கிப் போயிடும்.

நான் அம்மாவைப் பத்தி எழுதவேணும் எண்டு எப்பவும் நினைச்சதில்லை. ஆனா இந்தப் பாட்டு அடி மனசில கிடந்த ஏதோ ஒரு ஒளிப் புள்ளிய உசுப்பி விட்டுட்டுது. ஒளிப்புள்ளி சுடராகி சுவாலையாகி என்னை எரிச்சுது.

நான் எரிஞ்சு போனன்.

அம்மாவைத் தாட்டுப் போட்டு வரேக்கை மத்தியானம் தாண்டிப்போட்டுது. மண்வெட் டியைத் தோளில வைச்சுக் கொண்டு பொன்ராசா மாமா முன்னால போக, நான் பின்னால போனன்.

வீட்டு வாசலில கண்ணைக் கசக்கிக்கொண் டிருந்த உறவுப் பெண்கள் சவக்காலை யால வந்தவையின்ர காலில விழுந்து ஒப்பாரி பாடி அழுதிச்சினம். இது எங்கள் ஊர் வழமை.

நான் பொன்ராசா மாவின்ர முகத்தைப் பாக்க அவர் அழுது கொண்டே மண்வெட் டியை அங்காலை வைச்சிட்டு, உள்ள போய் அம்மா படுத்துக் கிடந்த மெத் தையை வீட்டு கோடிக்கு இழுத்து கொண்டு போனார்.

அதை நெருப்பு வைச்சுக் கொளுத்தேக்க தான் எனக்கும் விசயம் விளங்கிச்சுது.

அந்த நெருப்பில, அம்மாவின் சேலை, பாவாடை, சட்டை எல்லாத்தையும் போட் டார். நெருப்புக்கு என்ன தெரியும்? கனன்று சுழண்டு நடனம் ஆடியது. நான் கண்க லங்கப் பாத்துக் கொண்டு நிண்டன்.

மாவினர கையில இருந்த சாரியளைப் பாத்தன். ஓடிப்போய் அதில இருந்த இரண்டை வாங்கினன். மாமா இழுத்துப் பிடிக்க, 'மாமா இது கனடாவிலை என்ர பிள்ளையள் அப்பம்மாவுக்கு எண்டு வாங் கிக் குடுத்தது. அவை பெரிதாய் இதை உடுக்கேல்லைப் போல..இதுகளை எரிக் காதையுங்கோ' எண்டு நான் சொல்ல, அவர் விட்டுட்டார்.

அந்தக் காலத்திலை அம்மாவட்டை நாலு சீலைதான் இருந்தது. கோயிலுக்கு இரண்டு, வீட்டுக்கு இரண்டு எண்டுதான் பாவிச்சவ.

படுக்கேக்கை போர்க்கிறத்துக்கு எனக்கு அம்மாவின்ரை சீலைதான் வேணும். வெங் காய வாசனை வாற அந்தச் சீலையைப் போர்க்காட்டி எனக்கு நித்திரை வராது.

அம்மா சம்பளத்திக்கு வெங்காயம் ஆயப் போறவ. எப்பிடித்தான் தோய்ச்சாலும் அந்த வெங்காய மணம் போகாது. நித்திரை வரேக்க அந்த மணம் என்னை மயக்கும். கனகாலமா அதுதான் என்ர சொர்க்கம். நித்திரை கொள்ளேக்க அந்தச் சேலைக் குள்ள காலைச் செருகிச் செருகி படுக் கேக்க, 'தம்பி டேய் காலை அங்க இங்க ஓட்டி சீலையைக் கிழியாதையடா' எண்டு செல்லமாக் கத்துவா.

நான் கொஞ்சம் வளர்ந்த பிறகு அம்மா சேத்து வைச்ச காசில, பண்டத்தரிப்பில இருக்கிற கூட்டுறவுச் சங்கத்தின்ர கடைக் குப்போய் ஒரு போர்வை வேண்டித் தந்தா.

எனக்கு அது சரிவரேல்லை. ஊரை விட்டு வெளிகிடும் மட்டும் அம்மாவின் இரண்டு மூன்டு சீலைகளை மாத்தி மாத்தி போர்த் திக்கொண்டுதான் படுத்தேன்.

அம்மா கனடாவில வந்து நிக்கேக்க, சீலைய விட்டுட்டு, வேறு உடுப்புகள உடுத்துங்கோ எண்டு சொல்ல, அவவால அது முடி யேல்ல. 'சீலைய விட்டிட்டு வேற உடுப் புப் போடுறது சீவனப் பிடுங்கிற மாதிரி இருக்கு' எண்டு சொன்னது இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கு.

பின்னாளிலை வீட்டைவாறபோற சொந் தக்காரர் எல்லாம் பெருநாள், திருநாள், பிறந்தநாள் எண்டு சீலையளாக் கொண் டுவந்து குடுக்க, அவவுக்கு சீலையல் பெருகிப் போச்சுது. இப்ப அந்தச் சீலை யள வைக்க இடம் இல்லை.

பழைய சீலையள எறியம்மா... புதுச் சீலை யள வைக்க இடம் வரும் எண்டு நான் சொல்ல, போடா அந்தக்காலத்தில, நாங் கள் பட்டபாடு தெரியுமோ? எண்டு, அவ தொடங்க.., நான், இப்ப அந்தக்கதையள கதைக்காதை அம்மா எண்டு சொல்ல, 'பஞ்சம் போகும் பஞ்சத்தில் பட்ட வடுப் போகாதடா' எண்டு அவ பழமொழி சொன் னதை என்னால எண்டைக்கும் மறக்க ஏலாது.

இந்தமுறை ஊருக்குப் போன முதல்நாள் இரவு படுக்க முதல்ல அவவின்ர அலு மாரியைத் திறந்து எஞ்சியிருந்த அந்தச் ரெண்டு சீலைகளை தொட்டுத் பாத்திட் டுப் போய்ப் படுத்தன்.

பிரயாணக் களை, உடனே அயர்ந்திட்டேன்.

அம்மா நடந்து வந்து என்னை எழுப்பி 'சாப்பிட்டு விட்டுப் படடா' எண்டு செல்ல மாக சொன்னா.

திடுக்கிட்டு எழும்பினன். உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

மனிசி இன்னமும் வீட்டைச் சுத்திக்கொண் டுதான் திரியுது...எண்டு நினைச்சுக்கொண்டு படுக்கையில குந்தியிருந்தன்.

தனியப் படுக்க பயமாயிருந்தது.

நித்திரை வராமல் உடம்பு உழண்டு பிரண்டு கொண்டிருந்தது. தூரத்தில மாத கல் பக்கமாய் 'நதியில் விளையாடி கொடி யில் தலை சீவி வளர்ந்த இளம் தென் றலே' எண்ட அம்மாவுக்குப் பிடிச்ச பாச மலர் பாட்டு மெல்லிசாய்க் கேட்டுக் கொண் டிருந்தது.

இப்ப இந்தப் பாட்டைக் கேக்க அம்மா இல்ல. அவ நேசிச்ச அண்ணன் - என்ர மாமா இல்ல. பாடின சௌந்தரராசன், எழு தின கண்ணதாசன், நடிச்ச சிவாஜி ஆரும் இல்ல. எல்லாரும் போயிட்டினம்.

'குடம்பை தனித்து ஒழியப் புள் பறந் தற்றே...' தேவைப்படும் நேரத்தில் நினை வுக்கு வராத வள்ளுவன் இப்போது வந் தான்.

டப்பப் என்று ஓடி மறைந்தது காலம். இந்தச் சின்ன வாழ்க்கைவாழ எத்தனை அலைச்சல்கள். எத்தனை தலை சுற்று தல்கள். எத்தனை கனவு.

*நானுமோர் கனவோ?*
*இந்த ஞாலமும் பொய்தானோ?*
*காலமெனும் ஒருநினைவும்*
*காட்சியென்ற பலநினைவும்*
*கோலமும்பொய்களோ?*

என்ட பாரதி பாடலை நினைக்க, மனசில இருந்த பயம் விலகின மாதிரிக் கிடந்துது.

அம்மாவின்ர சீலைபோல
நித்திரை என்னை
அணைத்தது.



selvam.a@thaiveedu.com

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 416-849-0594   Tel: 416-646-3422***

# HOME SELLING PROCESS





SWAP TEAM

**SWAPNA** CHARI, MSc, DBIF, SRES

**HOMELIFE GALAXY REAL ESTATE LTD., BROKERAGE**
111 Grangeway Ave #301,
Toronto, ON M1H3E9
Tel: 416-284-5555

HOMELIFE GALAXY REAL ESTATE LTD., BROKERAGE




PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
TORONTO $295,000
2150 LAWRENCE AVE
LAWRENCE AVE E / BIRCHMOUNT RD
1 Bedrooms, 1 Washroom
TORONTO $299,000
2150 LAWRENCE AVE
LAWRENCE AVE E / BIRCHMOUNT RD
1 Bedrooms, 1 Washroom
TORONTO $388,800
400 MCLEVIN AVE
NEILSON RD / MCLEVIN AVE
2 Bedrooms, 2 Washrooms
MARKHAM $498,800
7340 MARKHAM RD #213
MARKHAM RD / DENISON ST
2+1 Bedrooms, 2 Washrooms
TORONTO $499,900
58 ORCHARD VIEW BLVD
YONGE ST / EGLINTON AVE W
1 Bedrooms, 1 Washroom
TORONTO $499,800
50 SILVER BELL GRVE
SHEPPARD / NEILSON
3 Bedrooms, 3 Washrooms
AJAX $689,900
24 TANSLEY CRES
TAUNTON RD W / AUDLEY RD
3 Bedrooms, 3 Washrooms
WHITBY $528,800
332 ROSEDALE DR
BURNS ST E / GARDEN ST
3+2 Bedrooms, 2 Washrooms
MARKHAM $738,800
14 CLANDFIELD ST
MARKHAM RD / 14TH AVE
3 Bedrooms, 4 Washrooms
OSHAWA $718,800
268 COSGROVE DR
WINDFIELDS FARM DR / SIMCOE ST
4 Bedrooms, 3 Washrooms
PORT PERRY $699,000
2.31 ACRES
15250 HIGHWAY 7 & 12 RD
HWY 12 / HWY 7A
5 Bedrooms, 2 Washroom
PORT PERRY $988,800
2.74 ACRES
15300 HIGHWAY 7 & 12 RD
HWY 12 / HWY 7A
Commercial
SOLD OVER ASKING
21 CHEETAH CRES, TORONTO
MEADOWVALE RD / SHEPPARD AVE E
21CheetahCres.com
SOLD OVER ASKING
20 HAINFORD ST, TORONTO
LAWRENCE AVE E / MANSE RD
20HainfordStUnit1.com
SOLD OVER ASKING
7 HIRONS DR, AJAX
PICKERING BEACH RD / BAYLY ST E
7HironsDrive.com
SOLD OVER ASKING
53 ABBEVILLE RD, TORONTO
MARKHAM RD / PAINTED POST DR
53AbbevilleRd.com
SOLD OVER ASKING
6 YULEWOOD GATE, TORONTO
HWY 401 / PORT UNION RD
6YulewoodGate.com
SOLD OVER ASKING
61 WOODGROVE DR, TORONTO
LAWRENCE AVE / MEADOWVALE
61WoodgroveDr.com
SOLD OVER ASKING
43 CHALLENGER CRT, TORONTO
ELLESMERE RD / CONLINS RD
43ChallengerCrt.com
SOLD OVER ASKING
14 CLAIRCREST RD, MARKHAM
MCCOWAN RD / DENISON ST
14ClaircrestRd.com
SUGAN SIVARAJAH
Broker of Record
416.890.9999
UTHAYAN SIVARAJAH
Broker
416.301.5555
RAJ SIVARAJAH
Broker
416.843.3333
SIVAKUMAR SIVARAJAH
Sales Representative
416.453.7777
Royal LePage Ignite Realty Inc., Brokerage
Independently Owned and Operated
795 Milner Avenue, Unit D2, Scarborough, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
ROYAL LEPAGE ignite

# கனடாவில் அடுத்த தலைமுறைத் தமிழரும் தமிழும்

- வல்லிபுரம் சுகந்தன் -

வந்தாரை வாழவைத்தல் தமிழரின் மரபாகும். அந்தத் தமிழரே ஏதிலிகளாக, அகதிகளாக அலைந்து திரிந்த போதினில், அவர்களைத் தன்மண்ணில் குடியேற அனுமதித்து வாழவைத்துக் கொண்டிருக்கும் கனடாவில், எமது அடுத்த சந்ததியினரிடம் தமிழ்மொழி நிலைக்குமா என்பது மிகவும் சந்தேகத்திற்குரிய ஒன்றாக இருக்கின்றது. பல்கலாச்சாரங்கள் கொண்டவர்களைத் தன்னகத்தே கொண்டுள்ள கனடாவானது, இங்கே வாழ்பவர்களை அவர்களது கலாச்சாரங்களுடன் ஏற்றுக்கொண்டிருப்பதையும், பல்கலாச்சாரங்களைப் பேணி ஊக்குவிப்பதையும் பார்க்கையில், அதிலும் தை மாதத்தினை தமிழர் மரபுடைமைத் திங்களாக அங்கீகரித்திருப்பதையும் நோக்குகையில், தமிழ்மொழியினைக் கனடாவில் வாழும் மொழியாக நிலைபெறச்செய்வதற்காக, எமது அடுத்த சந்ததியினரிடம் உரிய முறையில் தமிழ்மொழியைக் கையளிப்பது இன்றைய சந்ததியினரின் கைகளில்தான் உள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெளிவாகத் தெரிகிறது. ஆயினும் அதற்கான போதிய தயார்ப்படுத்தல்கள் எம்மிடம் இல்லை என்பதும் மறுக்க முடியாத உண்மை. இனிமேலும் அவ்வாறான தயார்ப்படுத்தல்களை நாம் செய்யாது விடுவோமேயானால் எமது அடுத்த தலைமுறையைத்தாண்டித் தமிழ்மொழி வாழாது போகலாம்.

'ஒரு மனிதன் உண்மையில் இறந்துபோவது அவன் பற்றிய நினைவுகளை மக்கள் முற்றாக மறந்து போகையில் தான்' இக் கூற்று மனிதனுக்கு மட்டுமல்ல, அவன் பேசும் மொழிக்கும் பொருத்தமாகவே அமைந்திருக்கிறது. எனவே தமிழ்மொழி கனடாவில் மறக்கப்படாமல் தொடர்ந்தும் உயிர்ப்புடன் வாழ்வதற்கு தமிழ்மொழியின் தொன்மையையும், அதன் சிறப்பையும், அதைக்கற்பதனால் உண்டாகும் நன்மைகளையும், தமிழின் முக்கியத்துவத்தையும் எம் இளந் தலைமுறையினர் ஏற்றுக்கொள்ளும் வகையில் எடுத்துரைத்தல் வேண்டும்.

தமிழ்மொழி உலகின் மிகப்பழமையான மொழிகளில் ஒன்று. உலகின் அங்கீகரிக்கப்பட்ட செம்மொழிகளில், வாழும்மொழிகளில் ஒன்றாக விளங்குவது அதன் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது. இதனையிட்டுத் தமிழராகப் பிறந்ததில் எம் அடுத்த சந்ததி பெருமைப்படவேண்டும் என்பதை அவர்களுக்கு உணர்த்துதல் வேண்டும்.

ஒரு இனத்தின் தொன்மையை, அதன் வரலாற்றை நாம் அறிந்துகொள்வதற்கு மூலாதாரமாக விளங்குபவை அம்மொழியில் உருவாக்கப்பட்டிருக்கும் இலக்கியங்களாகும். 'இலக்கியம் காலத்தைக் காட்டும் கண்ணாடி' என்பார்கள். அந்த வகையில் தமிழின் தொன்மைக்கு சான்றாக இன்று எம்மிடம் இருப்பவை தொல்காப்பியம் என்னும் இலக்கணநூலும், சங்க இலக்கியங்களாகிய தொகைநூல்கள் எட்டும், பத்துத் தனிப்பெரும் பாடல்களான பத்துப்பாட்டும் ஆகும். இவை தவிரவும் தொன்மைக் கதைகளாகவும், குறிப்புக்களாகவும், கர்ண பரப்புரைக் கதைகளாகவும், தொல்காப்பியத்திலும் காலப்பழமை வாய்ந்ததான அகத்தியம் என்னும் இலக்கணநூல் பற்றியும் மற்றும் முதற்சங்க, இடைச்சங்க காலங்களில் பற்பல நூல்கள் இருந்தன என்பது பற்றியும் அறியக் கிடைத்தாலும் அவை இப்போது எம்மிடையே இல்லாததால் அவற்றைத் தமிழின் தொன்மைக்கு விஞ்ஞான ரீதியிலான ஆதாரமாகக் கொள்ளமுடியாது.

ஆயினும் தொல்காப்பியர், தொல்காப்பியத்தின் பல இடங்களிலும், 'என்ப', 'என்மனார் புலவர்', 'மொழிப' போன்ற பதங்களின் ஊடாக தனக்கு முற்பட்ட அறிஞர்களைப் பெயர் சுட்டாமற் குறிப்பிட்டிருப்பதால், தொல்காப்பியத்திற்கு முன்னரேயே பல இலக்கணநூல்கள் இருந்திருக்கின்றன என்பதனை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் வகுத்தலே முறை. எனவே தொல்காப்பியத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே தமிழிலக்கியங்கள் தோன்றியிருக்கவேண்டும் என்பதும் அறிவியல் ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதே. அதுமட்டுமன்றி உலகப் பொதுமறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள திருக்குறளைத் தந்ததும் தமிழ்மொழியே. எனவே, எமது அடுத்த தலைமுறைக்கு தமிழின் தொன்மையையும் அதன் பெருமையையும் எடுத்துக்கூற வேண்டியது இன்றைய தலைமுறையினரான எமது தலையாய கடமையாகும். அதை எமது பிள்ளைகள் ஏற்றுக் கொள்ளத்தக்க முறையில் கூறவேண்டியது மிகமிக இன்றியமையாததாகும்.



பொதுவாக எல்லோருக்குமே இலக்கணத்தைக் கற்பதிலும் பார்க்க இலக்கியத்தைச் சுவைப்பதில் மிக்க ஆர்வம் இருப்பது இயல்பு. எனவே எம்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் இலக்கியச் செழுமையையும், கற்பனை வளங்களையும் நுகர்வதற்கு இளைய தலைமுறையினரை வழிப்படுத்துதல் வேண்டும். அதற்கு, தெரிந்தெடுக்கப்பட்ட இக்கால இலக்கியங்களில் தொடங்கிப் படிப்படியாக இலகுவான சங்ககால இலக்கியப் பாடல்கள் வரை அவர்களைச் சுவைக்க வைக்க வேண்டும். அப்படிச் செய்வோமேயானால் அதன்பின் அவர்களாகவே தமிழிலுள்ள எல்லா இலக்கியங்களைத் தேடி வாசிக்கத் தொடங்கிவிடுவார்கள். அப்படியான ஒருநிலையை அவர்கள் அடைந்தால் தமிழ் மொழியின் தொன்மையையும் அது கொண்டுள்ள இலக்கியச் செழுமைகளையும் அக்காலங்களில் வாழ்ந்த தமிழரின் பண்பாட்டு விழுமியங்களையும் நாகரிகச்சிறப்புகளையும், காதல், வீரம் கொடை போன்றவற்றில் எல்லாம் தமிழர்கள் பெற்றிருந்த சிறப்பினையும் உணர்ந்துவிடுவார்கள். அப்படி உணரும்பட்சத்தில், தாம் தமிழர் என்பதிலும், தமது தாய்மொழி தமிழ் என்பதில் நிச்சயம் பெருமிதம் கொள்வார்கள். எதனை நாங்கள் உயர்வாக பெருமையாக நினைக்கின்றோமோ அதனை இயல்பாகவே நாம் மதிக்கத் தொடங்கிவிடுவதுடன் எமது பிள்ளைகளுக்கும் அதனை வழங்க முயற்சிப்போம். அந்த வகையில், தாங்கள் தமிழராய்ப் பிறந்ததில் பெருமையையும் தமிழ்மொழியின் உயர்வினையும் உணர்ந்து கொண்ட இளையவர்கள் தாமாகவே தமிழ்மொழியை அவர்களுக்கு அடுத்துவரும் தலைமுறைக்கு கடத்தும் பணியினை செம்மையாகச் செய்வார்கள்.

*'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல்'*

என்று கூறிய வள்ளுவப் பெருந்தகையே,

*'எண்ணிய எண்ணியாங்கு எய்துப*
*- எண்ணியார்*
*திண்ணியர் ஆகப் பெறின்'*

என்றும் சொல்லியிருக்கிறார். எனவே எம் இளம் சந்ததியினர் தமிழ்மொழியினை விரும்பிக் கற்பதற்கு, முதற்படியாக நாம் ஒவ்வொருவரும் எங்கள் எங்கள் வீடுகளிலிருந்தே அதனை ஆரம்பிக்க வேண்டும். வீடுகளில் எம் குழந்தைகளுடன் தமிழ்மொழியில் மட்டுமே உரையாடுதல் வேண்டும். இதற்கு தளராத மனவுறுதி மிகவும் இன்றியமையாததாகும்.

சிறுவயதுப் பிள்ளைகள் கைக்கணினிகளில் அதிக நேரத்தைச் செலவு செய்ய அனுமதிக்கக்கூடாது. அப்படி அனுமதிப்பது அவர்களுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும். எங்களை எமது பிள்ளைகள் தொந்தரவு செய்யாமலிருப்பதற்காகவே நாங்கள் எம் பிள்ளைகளைக் கைக்கணினிகளில் அதிகநேரம் செலுவிடுவதை எமது வசதிக்காக அனுமதித்து விடுகிறோம். அது தவறு என்பதை நாம் உணர்ந்து கொண்டால், பிள்ளைகளுடன் எங்கள் நேரத்தை அதிகம் செலவிடுவோம். அப்போது எமது பிள்ளைகளுடன் தமிழறிவை வளர்க்கும் விளையாட்டுக்களை விளையாடலாம்.

எடுத்துக்காட்டாக விடுகதைகள் கேட்டல் (நொடி அவிழ்த்தல்),புதிர்க்கதைகள் கூறுதல் என்பவற்றைக் கூறலாம். அல்லது எங்கள் சிறுவயதுகளில் நாங்கள் விளையாடிய விளையாட்டுகளில் ஒன்றான, ஒரு எழுத்தைக் கூறி அந்த எழுத்தில் ஆரம்பிக்கும் ஆண்பாற்பெயர், பெண்பாற்பெயர், பொருள், இடம், படம் என்பவற்றை குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதவேண்டும் என்று கூறலாம். இதன் மூலம் பிள்ளைகள் விரைவாகத் தமிழில் எழுதத் தேர்ச்சி பெறுவதுடன் அதிகளவிலான தமிழ்ச்சொற்களையும் அறிந்து கொள்வார்கள். அண்மையில் கனடாவில் உள்ள தமிழ் வானொலியொன்றிலும் இவ்வாறான நேயர் போட்டியொன்றைக் கேட்க நேர்ந்தது. ஆயினும் தொலைபேசியூடான அந்நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களில் ஒருவர்கூட இளைய தலைமுறையைச் சார்ந்தவர் இல்லை என்பது மனவருத்தத்தைத் தந்தது. சிறு பிள்ளைகளுக்கு ஆர்வமூட்டும் சில விளையாட்டான தமிழ்ப்பாடல்களைச் சொல்லிக் கொடுக்கலாம்.

'அக்கா வீட்ட போனேன். அரிசிப்பொதி தந்தா. வேண்டாமெண்டு வந்தேன். வழியெல்லாம் பாம்பு. பாம்படிக்கத் தடிக்குப் போனேன். தடியெல்லாம் தேன். தேன் எடுக்க சட்டிக்குப் போனேன். சட்டியெல்லாம் ஊத்தை. ஊத்தை கழுவத் தண்ணிக்குப் போனேன். தண்ணியெல்லாம் மீன். மீன் பிடிக்க வலைக்குப் போனேன். வலையெல்லாம் ஓட்டை. ஓட்டை தைக்க ஊசிக்குப் போனேன். ஊசியெல்லாம் வெள்ளி. வெள்ளியடி வெள்ளி. உன்ரை கையில கிள்ளி' என்று சொல்லி இறுதியில் பிள்ளையின் கையில் மெதுவாகக் கிள்ளினால் அப் பிள்ளை ஆர்வமுடன் தானும் இதைத் தனது நண்பர்களுடன் விளையாட ஆரம்பிக்கும்.

'என்ன வேணும்?' 'பழம் வேணும்.' 'என்ன பழம்?' 'வாழைப்பழம்.' 'என்ன வாழை?' 'கப்பல் வாழை.' 'என்ன கப்பல்?' 'பாய்க்கப்பல்.' 'என்ன பாய்?' 'ஓலைப்பாய்.' 'என்ன ஓலை?' 'பனையோலை.' 'என்ன பனை?' 'கட்டைப் பனை.' 'என்ன கட்டை?' 'மரக்கட்டை.' 'என்ன மரம்?' 'பூமரம்' 'என்ன பூ?' 'மல்லிகைப் பூ' 'என்ன மல்லிகை?' 'கொடி மல்லிகை' 'என்ன கொடி?'

என்றவாறு கேட்டுக்கொண்டே போகலாம். விரும்பினால் 'என்ன கொடி?' என்று கேட்கையில் பழக்கொடி என்று சொல்லி மீண்டும் 'என்ன பழம்?' என்று சுற்றிச்சுற்றி வர

*தொடர்தல் 118ம் பக்கம்*

# கனடாவில் அடுத்த...

117ம் பக்கத் தொடர்ச்சி...

லாம். இல்லையேல் வேறேதாவது சொல்லி விளையாடலாம் என்று இந்த விளையாட்டுகளைச் சொல்லிக் கொடுத்தால் பிள்ளைகள் ஆர்வமுடன் விளையாடுவார்கள். கைக்கணினிகளில் நிமிடத்திற்கு நிமிடம் புதுப்புது விளையாட்டுகள் உலாவரும் இன்றைய வேகமான உலகில் பிள்ளைகள் ஒரே விளையாட்டைத் தொடர்ந்து நீண்ட நாட்களுக்கு விளையாட மாட்டார்கள். எனவே அதற்கு ஏற்றவாறு புதுப்புது தமிழ் மொழிமூல விளையாட்டுக்களை நாம் தேடியறிந்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

பிறந்தநாள் விழாக்களை மிகுந்த செலவில் கொண்டாடும் நாங்கள், பிறந்தநாள் வாழ்த்துப் பாடல்களைக்கூடத் தமிழில் பாடுவதில்லை. வாழ்த்துகளைக்கூடத் தமிமில் சொல்வதில்லை. அங்கே குழந்தைகளுக்கு வைக்கப்படும் எந்தவொரு போட்டியிலும் தமிழ்மொழி பாவிக்கப்படுவதுமில்லை. இத்தவறு முற்றுமுழுதாக பெற்றோரையே சாரும். அவர்கள் நினைத்தால் குறைந்தபட்சம் தமிழிலும் பிறந்தநாள் வாழ்த்தைக் கூறச் செய்யலாம். ஓரிரு போட்டிகளிலாவது தமிழ்மொழியை இடம் பெறச் செய்யலாம். இளையோரிடையே தமிழ்மொழியை ஊக்குவிக்க விரும்புவோர், தனித்தமிழில் இலகுவான கேள்வி-பதில் போட்டியை, சிறப்புப்போட்டியாக வைத்து வெற்றிபெறுபவர்களுக்கு அவ்விழாவில் கொடுக்கப்படும் பரிசுகள் அனைத்திலும் பெறுமதி மிக்கதான சிறந்த பரிசினைக் கொடுக்கலாம். இதன் மூலம் பிள்ளைகளிடையேயும் அவர்களின் பெற்றோர்களிடையேயும் தமிழ் மீதான ஆர்வத்தை நிச்சயமாக அதிகரிக்கச்செய்யலாம். இப்படியான போட்டிகள் ஒவ்வொரு பிறந்தநாள்க் கொண்டாட்டங்களிலும் வைக்கப்படுமெனின், பெற்றோரும் பிள்ளைகளும் மிகவும் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் தங்களை அப்போட்டிக்குத் தயார்ப்படுத்திக் கொண்டு வருவார்கள்.

தாயகத்தில் மட்டுமன்றி சங்ககால வசிப்பிடங்களில் ஒன்றெனக் கருதப்படும் கீழடி அகழாய்வு மையம், மற்றும் ஆதிச்சநல்லூர் தொல்லியல் களம் போன்றவற்றிலும், தமிழரின் வரலாறுகள் மறைக்கப்படுகின்றன, மாற்றப்படுகின்றன என்று புலம்பித் திரியாமல், எங்களுக்குத் தெரிந்த எங்கள் வரலாறுகளை, எம்மவரின் வரலாறுகளை எங்கள் குழந்தைகளுக்குச் சொல்லித்தரலாம். ஒவ்வொருவரும் அவரவர்களுடைய பிள்ளைகளுக்குத் தங்கள் தங்கள் வரலாறுகளை, தாங்கள் கடந்துவந்த பாதைகளைக் கூறலாம். தங்கள் குழந்தைகளுக்கு அவர்களின் மாமாக்களின், சித்திகளின், சித்தப்பாக்களின், பெரியப்பாக்களின் மற்றும் அத்தைகளின் கதைகளைக் கூறலாம். அதனூடாக சங்க இலக்கியங்களில் காணப்படும் புறநானூற்றுக்கதைகளை அறிவதற்கான ஆர்வத்தினைக்கூட அவர்களிடைய தூண்டலாம். அதன்மூலம், எதிர்காலத் தொழில்நுட்பங்களை அவர்கள் தங்கள் காலத்தில் பயன்படுத்தி வரலாறுகளை மீட்டெடுக்கக்கூடியதாக இருப்பதுடன் அவர்களுக்கும் தமிழினத்தின் உண்மை வரலாற்றை அறிவதில் ஆர்வத்தை ஏற்படுத்தலாம்.

இவற்றிற்கெல்லாம் பொறுமையும் நீண்டகால அர்ப்பணிப்பும் தேவை. வீட்டில் அதைச் செய்வதற்குத் தாயின் பங்கே மிகமிக அத்தியாவசியமானதாகும். தாய்மொழியென்றே நாம் அழைக்கின்றோம். தமிழரான எமக்குத் தமிழே தாய்மொழி. ஆரம்பத்திலிருந்து எம்மை மிக அணுக்கமாகப் பேணி வருபவர் அன்னையே. குழந்தையைத் தூங்க வைப்பதற்காகத் தமிழ்த் தாலாட்டுப்பாடல்களைப் பாடலாம் அல்லத தமிழ்த் தாலாட்டுப் பாடல்களை இசைக்கவிடலாம். குழந்தைகள் காரட்டுன் பார்க்க அடம் பிடிக்கையில் தமிழ்மொழி மூலமான கார்ட்டுன்களையும் பார்க்கச்சொல்லி ஊக்கப்படுத்தலாம். ஏராளமான தமிழ்மொழி மூலமான கார்ட்டுன்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட கார்ட்டுன்களும் இலவசமாக இணையத்தில் கிடைக்கின்றன.


இவ்வளவு முயற்சிகள் நாம் மேற்கொண்டாலும், எமது இன்றைய சூழ்நிலையை நாம் கருதினால், கனடாவில் இங்கிருக்கின்ற எமது இளம் தலைமுறையினருக்கு அவர்களிடையேயான தொடர்பாடல் மொழியாக ஆங்கிலமே அமையப்போகின்றது. அதையும் நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். ஏனெனில் அவர்கள் பாடசாலைகளில் பல்வேறு மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்டவர்களுடன் ஒன்றாகப் படிப்பதாலும், கற்பித்தல் மொழி ஆங்கிலமொழியாக இருப்பதாலும் பாடசாலைகளில் அவர்களின் தொடர்பாடல்கள் அனைத்துமே ஆங்கிலமொழியிலேயே அமைகின்றன. எனவே பழக்கதோசத்தில் இயல்பாகவே அவர்கள் ஏனைய தமிழ்ப் பிள்ளைகளுடனும் ஆங்கிலத்திலேயே தொடர்பாடலை மேற்கொள்வார்கள். அது மட்டுமன்றி அவர்களுக்குத் தங்களை வளர்த்துக் கொள்வதற்கு ஆங்கில மொழியறிவு மிகவும் அத்தியாவசியமானதும் கூட. ஆங்கிலமொழியறிவு இல்லாமல் இங்கு வாழ்வது கடினம். எனவே அவர்களுக்கு அவர்களின் தாய்மொழியான தமிழ்மொழி இரண்டாம் மொழியாகத்தான் இருக்கப் போகின்றது. அந்த இரண்டாம் மொழியிலும் அவர்கள் தேர்ச்சியுடையவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் நாம் பாடுபடுகின்றோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மேலும், எமது உறவுகள் உலகின் பல பாகங்களிலும் பரந்து வாழ்கின்றார்கள். அவர்களின் பிள்ளைகள் அந்தந்த நாட்டு மொழிகளையே தமது முதல்மொழியாகக் கொண்டிருக்கின்றனர். எனவே இவ்வாறு பரந்து வாழும் எங்கள் உறவுகளின் பிள்ளைகளுக்கான பொதுமொழியாகத் தமிழ்மொழியே இருப்பதால் எமது பிள்ளைகளுக்குத் தமிழ்மொழி அவசியம் என்பதையும் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அதுமட்டுமன்றி கனடாவில் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலுள்ள அரச நிறுவனங்களும் அரசுசாரா நிறுவனங்களும் தங்கள் பணியாளர்களுக்குத் தமிழ்மொழி தெரிந்திருப்பதை விரும்புவதையும் காணக்கூடியதாக உள்ளது. எனவே கனடாவில் தமிழர் செறிந்து வாழும் இடங்களில் வேலைவாய்ப்பிலும் தமிழ் மொழியறிவு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதையும் நாங்கள் உணர்ந்து எங்கள் பிள்ளைகளுக்குப் புரியவைத்தல் வேண்டும்.

முப்பது நாப்பது ஆண்டுகளுக்கு முன்னர் கனடாவில் தமிழ்ப்பாடசாலைகள் அமையும் என்று கனவில்கூட நினைத்துப்பார்த்திருக்க மாட்டோம். ஆனால் இன்றைய நிலை? இன்று கனடாவில் சில வைத்தியசாலைகளிலும், வைப்பகங்களிலும் கூட தமிழ்மொழியிலான அறிவுப்புகள் மற்றும் சேவைகள் வழங்கப்படுகின்றன. வருங்காலம் எப்படி அமையும் என்று யாருக்கும் தெரியாது. ஒரு மரத்தை நடுபவன் அந்த மரம் தனக்கு உபயோகப்படும் என்று நினைத்து நடுவதிலும் பார்க்க தன் சந்ததி, அந்த மரத்தால் அதிக பயனடையும் என்று நினைத்தே நடுகின்றான். எனவே நாமும் பலனை எதிர்பாராது எம் கடமையினைச் செய்வோம். எமது இளம் தலைமுறை விரும்பியேற்கும் வகையில் அவர்களுக்குத் தமிழ்மொழி அறிவை ஊட்டுவோம். அவர்கள் தங்களது இளம் சந்ததிக்கு ஏற்ற முறையில் தமிழ்மொழியறிவைக் கொடுப்பார்கள் என்று நம்புவோம். நம்பிக்கைதான் வாழ்க்கை. காலம் பதில் சொல்லட்டும்.



muththulingam.a@thaiveedu.com



## புதிய களம் - புதிய தெரிவு

# லோகன் கணபதியின் தடங்களும் இலக்குகளும்

மார்க்கம் மாநகரசபையின் உறுப்பினராக கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றி வரும் லோகன் கணபதி அவர்கள் தமிழ்ச் சமூகம் மட்டுமல்ல, மார்க்கம் பல்லினச் சமூகமும் நன்கறிந்த அரசியல் சார்ந்த சமூகப் பணியாளர் ஆவார்.

கடந்த 12 ஆண்டுகளாக, தன்னுடைய பொறுப்பு வாய்ந்த உறுப்பினர் பணி வாயிலாக, நிலைத்து நிற்கவல்ல பல சமூகப் பணிகளை ஆற்றி வந்துள்ளார். மக்கள் மனதிலும் அவர் நிலைத்து நிற்பதன் காரணமாகவே தொடர்ந்து மூன்று தடவை கணிசமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று வந்திருக்கின்றார்.

சமூகப் பணி என்பது அதைச் செய்வோரின் எண்ணத்தில் இயல்பாக இணைந்திருந்திருக்க வேண்டும். சிறு வயது முதலே செயற்பாடுகள் வழியாக வெளிப்பட்டிருக்க வேண்டும். இதற்குச் சிறந்த உதாரணமாக திரு லோகன் கணபதியைக் கருதலாம்.

கனடாவில் தொன்னூறுகளில் தமிழர் எதிர்கொண்ட பெரும் சவால்களில் ஒன்று, குழுநிலைப்பட்ட இளைஞர்கள் வன்முறை. இதில் ஈடுபட்ட இளைஞர்களை நெறிப்படுத்துவதில் உளவியல் சார்ந்தும் சமூகம் சார்ந்தும் முன்னெடுக்கப்பட்ட பணிகளில் இணைந்து செயற்பட்டிருக்கின்றார்.

அதேகாலகட்டத்தில் பல தமிழ்க் குடும்பப் பெண்கள் தற்கொலை செய்வதுவும் அதிகரித்திருந்தது. அவ்வாறான உளவியல் தாக்கத்துக்கு உட்பட்ட பெண்களை இனங்கண்டு ஆற்றுப்படுத்துவதில் மருத்துவரான திருமதி ராஜேஷ் லோகன் ஈடுபட்டவேளை, திரு லோகன் அப்பணிகளோடு தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டார். அக்காலப் பகுதியில் குளோபல் அன்ட் மெயில் பத்திரிகை முன்பக்கத்தில் வெளியிட்ட செய்திக்கட்டுரையில் திரு லோகன் அவர்களின் படத்தையும் வெளியிட்டிருந்தது.

இந்த சமூக ஈடுபாட்டின் வெளிப்பாடாகவே 2006 ஆண்டு, மார்க்கம் நகரசபை தேர்தல் களத்தில் குதித்தார். தமிழ் மக்களின் ஆதரவோடு வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் வாயிலாகக் கனடா அரசியல் நீரோட்டத்தில் இணைந்த முதல் தமிழராகத் திகழ்ந்தார்.

தனது பதவியையும் அதன் பொறுப்பையும் நன்கு உணர்ந்த திரு லோகன் கணபதி தான் தேர்ந்தெடுக்கப்பட்ட மார்க்கம் 7ம் வட்டாரத்தைச் சார்ந்த மக்களுக்கான சேவைகளிலும் தமிழ் மக்களுக்கான தேவைகளிலும் மார்க்கம் நகராணையின் நிர்வாகப் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

நகர. மாநகரசரபகளின் உறுப்பினர் பணி பகுதி நேர வேலையே. தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் தமது தொழிலை மேற்கொண்டவாறே இந்த உறுப்பினர் பதவியைக் கொண்டிருக்க முடியும். ஆனால் திரு லோகன் இப் பணியில் முழுநேரமாகவே செயற்பட்டார்.

இவர் மாநகரசபை உறுப்பினராகப் பொறுப்பேற்றுச் செயற்பட்ட காலப்பகுதியில் இவர் ஆற்றிய பணிகள் சிலவற்றை இங்கே குறிப்படலாம்.

75 மில்லியன் டொலர் செலவில் Aaniin Community centre and library என்று அழைக்கப்படுகின்ற பிரமாண்டமான சமூகக்கூடத்தையும் மிகப்பெரிய நூலகத்தையும் 7ம் வட்டாரத்தில் நிறுவுதற்காக இவர் மேற்கொண்ட முயற்சிகள் பெரியவை.

இந்த சமூகக்கூடத்தையொட்டி வன்னி வீதி அமைக்கப்பட்டுள்ளது. இந்த சமூகக்கூடத்துக்கு அருகே தமிழர் மரபியல் பண்பாட்டு மையம் அமைப்பதற்கான நிலப்பகுதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அனைத்து வசதிகளும் கொண்ட துடுப்பாட்ட மைதானமும் சமூகப் பூங்காவும் கழிவறை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. Eastvale/Denison வீதி சந்திப்புக்கருகிலும் Billingsley / Eastvale சந்திப்புக்கு அருகாமையிலும் விளையாட்டுத் திடலுடன் கூடிய பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

Fairtree storm நீர்த்தடாகத்துக்கு அருகே தாயகத்தில் உயிர் நீத்த தமிழர் நினைவாக ஆண்டுதோறும் மரங்கள் நடப்பட்டு வருகின்றன.

Cedarwood பாசாலைக்கு அருகே 'யாழ் சிடார்வூட் பூங்கா' தமிழ்ப் பெயரோடு பயன்படுத்தப்பட்டு

வருகின்றது. ரிங்கோ (Trinco Way) வீதி விரைவில் இப்பகுதியில் அமைக்கப்படவுள்ளது.

தான் அடையாளமான தமிழ்ச் சமூகம் சார்ந்து இவர் முன்னெடுத்த பணிகள் வரலாற்று முக்கியத்துவம் பெற்றவை.

2009இல் முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது இனப்படுகொலையே என்ற தீர்மானத்தை உலகிலேயே முதலில் நிறைவேற்றிய அரசியல் நிர்வாக அலகாக மார்க்கம் மாநகரசபை திகழ்ந்தது. இதற்காக திரு லோகன் கணபதி மேற்கொண்ட முயற்சிகள், எதிர்கொண்ட சவால்கள் மிகப் பெரியவை.

யாழ், ரிங்கோ, வன்னி என்ற தாயக வாழ்விடங்களின் பெயர்களைத் தன் வட்டாரத்துக்குள் சூட்டி, தமிழ அடையாளத்தையும் பதிவு செய்துள்ளார்.

தமிழர் மரபு மாதமாகத் தை மாதத்தை அங்கீகரித்த முதல் முதல் மாநகரசபையாகவும் மார்க்கம் திகழ்வதற்குக் காரணமாக அமைந்தார்.

தொடர்ச்சியாக 7 ஆண்டுகள் மிகப் சிறப்பான தமிழர் மரபுத் திங்கள் நிகழ்வுகளுடன், பொங்கல் விழாவையும் தமிழர் மரபியல் பண்பாட்டு மையம் வழியாக நடத்தி வருகின்றார். அடுத்த தலைமுறையைப் பண்பாடு, மொழி சார்ந்து வளர்ப்பதில் இந்த நிகழ்வு முக்கிய பங்காற்றி வருகின்றது.

கடந்த ஆண்டு கனடாவுக்கு வருகை தந்திருந்த வடமாகாண முதல்வருடன் இணைந்து மேற்கொண்ட தாயக மேம்பாட்டு உடன்பாடு மிக முக்கிய நிகழ்வாகும். அது தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மார்க்கம் மாநகரசபையோடு இணைந்து திரு லோகன் கணபதி மேற்கொண்ட பணிகள் மாநகரசபை சார்ந்த அனைத்து மக்களுக்கும் பயனளிப்பதாக இருந்தன.

மாநகரசபையின் வரவுசெலவுத் திட்டக் குழுவின் தலைமைப் பொறுப்பில் (Chair) நேர்த்தியாகச் செயற்பட்டு, சிறந்த வரவுசெலவுத் திட்டங்கள் உருவாவதற்குக் காரணமாக இருந்தார். சொத்து வரிகள் அதிகரிக்காமல், குறைவாக இருப்பதற்கும் நீர், மின்சாரக் கட்டணங்கள் மார்க்கத்தில் குறைவாக இருப்பதற்கும் இவர் காரணமாக இருந்தார். இவருடைய முயற்சியின் விளைவாக 16 புதிய பூங்காக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இரசாயனப் பாவனையற்ற இயற்கை விவசாயம் மூலம் வீட்டுத்தோட்டத்தில் மரக்கறிகள் விளைவிப்பது குறித்த இவருடைய செயற்பாடுகள் மக்கள் மத்தியிலே செல்வாக்குப் பெற்றுள்ளன.

இவ்வாறான ஒரு சமூக சேவகராக இவர் ஆற்றிய, ஆற்றி வருகின்ற பணிகளைப் பற்றி இன்னும் பலவற்றைக் கூற முடியும்.

இந்நிலையில்தான் ஒன்ராறியோவில் புதிய தலைமையை ஏற்றிருந்த புறோகிரசிவ் கன்சவேட்டிவ் கட்சி தமிழர் தரப்பில் சிறந்த வேட்பாளர்களைத் தேடியது.

தான் சார்ந்திருந்த அரசியல் கட்சியானது, தன் அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் தன்னை அணுகிய விதத்தில் பெரும் மனக்கசப்புக் கொண்டிருந்தார் திரு லோகன். அதன் பின் தன் மாநகரசபைப் பணிகளோடு மட்டுமே ஒன்றியிருந்தார். இந்நிலையில் திரு லோகன் அவர்களை ஒன்ராறியோ கன்சவேட்டிவ் கட்சி அணுகியது.

பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர், சமூகம் சார்ந்த நலத்திட்டங்கள் பலவற்றை மனதிற் கொண்டு, புரோசிறசிவ் கன்சவேட்டிவ் கட்சி சார்பில் ஒன்ராறியோ மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடத் திரு லோகன் சம்மதித்தார்.

2016ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி, மார்க்கம் - தோர்ன் கில் தொகுதிக்கான ஒன்ராறியோ கன்சவேட்டிவ் கட்சி வேட்பாளரைத் தெரிவுசெய்யும் நோக்கில் உட்கட்சித் தேர்தல் நடைபெற்றது.

அத்தேர்தலில் கணிசமான வாக்குகள் அதிகப்படியாகப் பெற்று இத்தொகுதிக்கான கன்சவேட்டிவ் கட்சி வேட்பாளராகத் திரு லோகன் கணபதி தெரிவு செய்யப்பட்டார்.

எதிர்வரும் யூன் மாதம் 7ம் திகதி மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் எனக் கூறப்பட்டுள்ளது.

இத்தேர்தலில் போட்டியிடும் திரு லோகன் கணபதி பல்லின சமூகத்தின் ஆதரவைப் பெற்றவராகத் திகழ்கின்றார். பல இன மக்களும் அவரோடு கைகோர்த்து நிற்கின்றனர்.


ஒன்ராறியோ மக்கள் மாற்றத்தை வேண்டி நிற்கின்றார்கள். கடன்சுமையிலும் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் இருக்கும் மாகாண அரசை வலிமையுள்ளதாக மீளக் கட்டமைக்க வேண்டிய பொறுப்பை புறோகிரசிவ் கன்சவேட்டிக் கட்சியிடம் கையளிக்க விரும்புகின்றார்கள்.

இந்நிலையில் மக்கள் பணியிலும் அரசியல் செயற்பாட்டிலும் சிறந்த அனுபவங்களைப் பெற்றிருக்கும் லோகன் கணபதி பல்லின சமூகம் சார்ந்தும் தமிழர் சார்ந்தும் செயற்படக்கூடிய சிறந்த தெரிவாவார்.

Markham-Thornhill தொகுதியில் மேம்பாட்டுக்கான வலிமையான குரலாகச் செயற்படவல்லவரான திரு லோகன் கணபதி அவர்களுக்கான ஆதரவை வழங்குவோம்.




HONDA
Honda
dream garage
Event
CIVIC 20
Canada's best-selling car 20 years in a row.*
2018
Civic LX Sedan
FROM $59/2.99% APR
WEEKLY LEASE FOR 60 MONTHS
$0 DOWN PAYMENT/OAC $0 SECURITY DEPOSIT
2018
CR-V LX
FROM $80/3.99% APR
WEEKLY LEASE FOR 60 MONTHS
$0 DOWN PAYMENT/OAC $0 SECURITY DEPOSIT
2018 MOTOR TREND SUV OF THE YEAR
AJAC
www.ajac.ca
AUTOMOBILE JOURNALISTS ASSOCIATION OF CANADA
CANADIAN CAR OF THE YEAR AWARD
ALL-NEW 2018
Accord LX
FROM $78/2.99% APR
WEEKLY LEASE FOR 60 MONTHS
$0 DOWN PAYMENT/OAC $0 SECURITY DEPOSIT
Formula Honda
Where You're Treated like Family.
Shan Sarvananthan
Sales Manager
Cell 416-720-1184
2240 Markham Road Scarborough, ON, M1B 2W4
Telephone: 416-754-4555
formulahonda.com
Rajah Tharmalingam
Sales & Leasing Consultant
Cell 647-833-4998


NO MEDICAL
UP TO $500,000
66
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct: 416.918.9771
Business: 416.321.2500
MDRT
Member of Million Dollar Round Table
Life100
INSURANCE & INVESTMENTS INC.
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca
La Capitale
iA Financial Group
Canada Protection Plan
Are you getting Million Dollar advice
- digi Media -


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
வீட்டுக்கடன்
வியாபாரக்கடன்
முதலீட்டுக்கடன்
வருமான உத்தரவாதம்
இல்லாமலே
பெற்றுக் கொடுக்கப்படும்
கடன் தேவையா?
என்னை அழையுங்கள்
ரம்போ தர்மலிங்கம்
KAPITAL CARE
MORTGAGE INC. Lic#12623
Rambo
Tharmalingam
Mortgage Agent Licence # M08008479
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111



VALUE, TRUST AND EXPERTISE

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Independently owned and operated

SRI NADARAJASUNDRAM
Sales Representative
416 276 6666



416-270-1111 | 416-270-7000 | 3-1286 Kennedy Road Toronto, ON M1P 2L5 | www.remaxace.com

---

## Thipan Sivarajalingam
Sales Representative
realtorthipan@gmail.com
www.matrixdreamhouse.com
Dir: 416-909-6666



RE/MAX ACE REALTY INC. BROKERAGE
Independently owned and operated
3-1286 Kennedy Road,
Toronto, ON M1P 2L5
Tel: 416-270-1111
Fax: 416-270-7000

---



Mega Financial Group
உங்கள் அனைத்து விதமான காப்புறுதித் தேவைகளுக்கும்.
Call Now
## Raj Nadarajah
President & C.E.O.
416-666-1120
PH28 - 4168 Finch ave. E. Scarborough, ONM1S 5H6

---

ஒரு நம்பிக்கையான முகவர்
## Karuna Gopalapillai
Real Estate Broker | CEO
Dir: 416.830.8520
HOMELIFE GALAXY REAL ESTATE LTD. BROKERAGE
111 Grangeway Avenue, Suite #301
Toronto ON, M1H 3E9
Tel: 416.284.5555
karuna@homelifegalaxy.ca



---



For all your
Real Estate needs....
## Ramanan Ramachandran
Broker of Record
Direct: 416-670-6467
HomeLife Today Realty Ltd., Brokerage
Independently Owned and Operated
Office: 416-298-3200
100% Proven Results visit www.agentram.com



## FOR SALE
FREE HOLD TOWN HOME
MISSISSAUGA RD/FINANCIAL DR
4 BEDROOMS
4 WASHROOMS
2 CAR GARAGE
2200 SQ APX
UPGRADED
NEVER LIVED IN



---

## Supen Subramaniam
Manager, Residential Mortgage
Real Estate Secured Lending
Your Mobile Mortgage Specialist
சகல மோட்கேஜ் தேவைகளுக்கும் அழையுங்கள்.
TD Canada Trust
C: 416.844.8692
supenthiran.subramaniam@td.com
www.tdcanadatrust.com/mst/subensubramaniam




---

## Jasica Mahalingam
State Financial
One Stop Insurance Solutions
• LIFE • NON-MEDICAL • CRITICAL ILLNESS
• DISABILITY • TRAVEL • RESP • RRSP
416-579-7767
insurancewithjasica@gmail.com
3341 Markham Rd Unit 108 Markham, ON M1X 1M8
Follow me @insurancewithjasica on



---

## Buying or Selling is easy with PERA
ROYAL LEPAGE
Pera Savuntharanathan ASA
Real Estate Broker
Royal LePage Terrequity Realty
peranathan@rogers.com
www.peranathan.com
Tel: 416-721-6563



---

## Rathiga Thillaivannan BCom
Sales Representative
Buying / Selling/ Leasing/ Investing
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com
Homelife/Future Realty Inc.,Brokerage*
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
205-7 Eastvale Dr, Markham ON. L3S 4N8
*Independently owned And Operated



---

## Kugaraj Ratnasabapathy
Sales Representative
Dir: 416-786-3332
RE/MAX ACE REALTY INC., BROKERAGE
BROKERAGE
Independently owned and operated
416-270-1111
3-1286 Kennedy Road, Toronto, ON M1P 2L5



---

## Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



---



## Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Dir:416-276-9999
Bus:416-270-1111 | Fax:416-270-7000
RE/MAX ACE REALTY INC., BROKERAGE
www.vaheesanrealtor.com.
Email:gvaheesan@hotmail.com

---

செப்ரெம்பர் 30 2018
தாய்வீடு THAIVEEDU HOME & LIVING
## அரங்கியல் விழா
Flato Markham Theatre
LIVE ARTS MATTERS.
171 Town Centre Blvd
Markham, ON L3R 8G5

---

# NOW HIRING
## JOIN OUR DYNAMIC TEAM
iNFORCE LIFe Financial Services Inc.
10 Milner Business Court, Suite 707
Scarborough, ON M1B 3C6
Dir: 416-909-0400 Bus: 416-321-6000 x400
career@inforcelife.com www.inforcelife.com
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM CHS
President & CEO



---



## Maliny Bridal
Bridal makeup, Arangretram makeup
And for all your makeup needs
for auspicious ceremonies
Maliny Bridal
H 416 497 0052 | C 416 670 6942
malinyb@hotmail.com
Specialized in saree pleating
Professional makeup expert with 25 years

---

## Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario
Cell: 416 505 8532
Office: 416 321 6969
Fax: 416 321 6963
tharma11@yahoo.com
5215 Finch Ave. E., Suite: 203, Toronto, Ontario



---

## Dr. Rajkumar Arulthasan
Forestbrook Pet Hospital
3-1105 Finch Ave, Pickering, ON L1V 1J7
Phone: 905-831-1118
Fax: 905-831-4119
info@forestbrookpethospital.com
www.forestbrookpethospital.com

